M·21838
2899
2899

ஸ்ரீ:

முதல் திருவந்தாதி

அப்பிள்ளையுரை

(விவரணத்துடன்)

T02899
R001G05

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீஸூக்திமாலா மலர்-21.

முதல் திருவந்தாதி

அப்பிள்ளையுரை

(விவரணத்துடன்)

பதிப்பாசிரியர்:—

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

விலை ரூ 3-00 தபாற்கூலி 0-38.

பொய்கையாழ்வார் திருநக்ஷத்ர தனியன்

तुलायां श्रावणे जातं काञ्च्यां काञ्चनवारिजात्।
द्वापरे पाञ्चजन्यांशं सरोयोगिनमाश्रये॥

துலாயாம் ச்ராவணே ஜாதம் காஞ்ச்யாம் காஞ்சநவாரிஜாத் ।
த்₃வாபரே பாஞ்சஜந்யாம்ஶம் ஸரோயோகி₃நமாச்ரயே ॥

[துவாபரயுகத்தில் ஓர் ஐப்பசித் திருவோணத்தில் காஞ்சியில் ஓர் பொற்றாமரைப் பொய்கையிலிருந்து தோன்றியவராய், ஸ்ரீபாஞ்சஜந்யத்தின் அம்சமானவரான பொய்கையாழ்வாரை ஆச்ரயிக்கிறேன்.]

काञ्च्यां सरसि हेमाब्जे जातं कासारयोगिनम्।
कलये यः श्रियःपत्यू रविन्दीपमकल्पयत्॥

காஞ்ச்யாம் ஸரஸி ஹேமாப்₃ஜே ஜாதம் காஸார யோகி₃நம் ।
கலயே ய: ஶ்ரிய:பத்யூ ரவிந்தீ₃பமகல்பயத் ॥

[ஸ்ரீகாஞ்சியில் பொய்கையில் பொற்றாமரையில் பிறந்தவராய், ஒண்தாமரையாள் கேள்வனுக்கு வெய்ய கதிரோனை விளக்காக்கியவரான பொய்கைமுனியைக் கருத்தில் வைக்கிறேன்.]

வாழித்திருநாமம்.

செய்ய துலா வோணத்திற் செகத்துதித்தான் வாழியே
திருக்கச்சி மாநகரம் செழிக்கவந்தான் வாழியே
வையந்தகளி நூறும் வகுத்துரைத்தான் வாழியே
வனசமலர்க்கருவதனில் வந்தமைந்தான் வாழியே
வெய்ய கதிரோன் தன்னை விளக்கிட்டான் வாழியே
வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே
பொய்கைமுனி வடிவழகும் பொற்பதமும் வாழியே
பொன்முடியும் திருமுகமும் பூதலத்தில் வாழியே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முகவுரை

காலத்தாலும், பகவத்விஷயத்திலுண்டான ஈடுபாட்டாலும் முதன்மைபெற்றிருப்பவர்கள் முதலாழ்வார்கள். "இம்மூவர்க்கும் அர்த்தம் ஒன்றே; மூன்று ரிஷிகள்கூடி ஒரு வ்யாகரணத்திற்குக் கர்த்தாக்களானாற்போலே கர்த்ருபே$_4$த$_3$முண்டேயாகிலும் அர்த்த$_2$சரீரம் ஒன்று; த்ரிமுநிவ்யாகரணம் என்னுமாப்போலே." என்பர் பெரியவாச்சான்பிள்ளை. முதலாழ்வாரான பொய்கையாழ்வார் "வையம் தகளியா" என்று தொடங்கி உபயவிபூதிகளையும் அநுஸந்தித்து ஜ்ஞாநம் பிறந்த நிலையை வெளிப்படுத்தினார். இரண்டாம் ஆழ்வாரான பூதத்தாழ்வார் "அன்பே தகளி" என்றுதொடங்கி ஜ்ஞாநம்முற்றி பக்தியாகும் நிலையை வெளிப்படுத்தினார். மூன்றாம் ஆழ்வாரான பேயாழ்வார் பக்திமுற்றி, அவனையொழியச் செல்லாதபடியான பரமபக்தி விளைந்திருக்கும் நிலையை வெளிப்படுத்தினார். செய்யகதிரோனும் விளக்கையும், சுடராழியாம் சுடர்விளக்கையும் ஏற்றினார் முதல்வர். ஞானச்சுடர்விளக்கேற்றினார் இரண்டாமவர். அவ்விளக்குகளைக்கொண்டு திருக்கண்டார் பொன்மேனிகண்டார் மூன்றாமவர். ஞானத்தைச் சொல்லுகிறது முதல்திருவந்தாதி; ஞானம்முற்றி பக்தியானபடி சொல்லுகிறது இரண்டாம் திருவந்தாதி. அந்த பக்தியாலே பரமபுருஷனை ஸாக்ஷாத்கரித்தபடியைச் சொல்லுகிறது மூன்றாம்திருவந்தாதி. ஆக மூன்றுதிருவந்தாதிகளும் ஜ்ஞானபக்திஸாக்ஷாத்காரங்களைச் சொல்லுகின்றன.

"முதலாழ்வார்கள் மூவரும் பரத்வத்திலே மண்டியிருப்பர்கள்" என்பர்கள் பூர்வாசார்யர்கள். "வையம்தகளி"யிலே உப$_4$யவிபூ$_4$தியோடு கூடியவன் ஸர்வேச்வரன் என்று காட்டினார் முதலாழ்வார். "ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு" என்று உப$_4$யவிபூ$_4$திகளையுடையவன் நாராயணனே

என்று அருளி, நாராயணசப்தத்தைக்கொண்டு பரதத்வ நிர்ணயம் செய்தார் இரண்டாமவர். "திருக்கண்டேன்" என்று தொடங்கி லக்ஷ்மீஸம்பந்தத்தைக் காட்டிப் பரதத்வ நிர்ணயம் செய்தார் மூன்றுமவர். இந்தக்கிரமத்தை அடியொற்றியே நம்மாழ்வாரும் "உயர்வற" என்னும் முதல் திருவாய்மொழியிலே உபயவிபூதிகளோடு கூடியவன் ஸர்வேச்வரன் என்றார். "வீடுமின்" என்னும் இரண்டாம் திருவாய்மொழியிலே "வண்புகழ் நாரணன்" என்று நாராயண சப்தத்தைக் காட்டிப் பரதத்வ நிஷ்கர்ஷம் செய்தார். "பத்துடையடியவர்க்கு" என்னும் மூன்றும் திருவாய் மொழியிலே "திருவுடையடிகள்" என்று லக்ஷ்மீஸம்பந்தத்தைக் காட்டிப் பரதேவதாநிர்த்தாரணத்தைச் செய்தருளினர். இவ் வண்ணமாக நம்மாழ்வாருக்கும் வழிகாட்டியாய் நின்றவர்கள் முதலாழ்வார்கள். "அரன் நாரணன்" "முதலாவார் மூவரே அம்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர்வண்ணன்" "மாமதிள் மூன்றெய்த இறையான் நின்னுகத்திறை" "திருமாலையல்லது தெய்வமென்றேத்தேன்" "ஏற்றான் புள்ளூர்ந்தான்...காப்பு" "பொன்திகழும்மேனி" [முதல்திருவ] "கண்ணுதலோனன்றே தொழுந்தகையார்" "பிறையிருந்த செஞ்சடையான்...மாலைக்குறையிரந்து" "எரியுருவத் தேறேறி பட்ட விடுசாபம்...சொல்லின் கதை" "மாகடல் நஞ்சுண்டான் தனக்கும் இறையாவான் எங்கள் பிரான்" [இர-திருவ] "மாமலரான் வார்சடையான் என்றிவர்கட்கு எண்ணத் தானுமோ இமை" [மூன்-திரு] என்று தேவதாந்தரங்களின் அபரத்துவத்தைக் காட்டிக்களையெடுப்பதிலும் உறையிலிடாதவரான திருமழிசைப் பிரானுகிற நாலாம் ஆழ்வாருக்கும் வழிகாட்டியாய் நின்றனர் இம்முதலாழ்வார்கள். இவர்கள் பரத்வத்திலே மண்டியிருக்கும்படி இதுவாகும். இவ்வண்ணமாக எல்லா ஆழ்வார்களுக்கும் வழிகாட்டியாயிருக்கும் முதன்மையைப் பெற்றிருக்கையாலும் முதலாழ்வார்கள் என்னும் பெயர் இவர்களுக்குப் பொருத்தமுடையதாகிறது.

‘‘முதலாவார் மூவரே அம்மூவருள்ளும் முதலாவான் மூரி நீர்வண்ணன்’’ என்று ஆழ்வார் மும்மூர்த்திகள் விஷயத்தில் அருளியது இவ்வாழ்வார்கள் விஷயத்திலும் பொருந்தியிருக்கின்றது. ஆழ்வார்களுக்குள் முதலாவார் மூவராகவேயிருக்கின்றனர். அம்மூவருள்ளும் மூரிநீராகிற பொய்கையைத் தனக்கு நிரூபகமாகக்(வண்ணமாகக்)கொண்ட பொய்கையாழ்வார் முதலானவராயிருக்கிறார். இவருக்குப் பலவிதங்களில் முதன்மையுண்டு. ஆழ்வார்கள் அனைவரிலும் முதலில் அவதரித்தவரிவர். திவ்யப்ரபந்தங்கள் எல்லாவற்றுக்கும் மூலமாய் முதலாவதான திருவந்தாதியை அருளிச்செய்தவரிவர். முதலாவானான மூரிநீர்வண்ணனின் முதன்மைபெற்ற நக்ஷத்திரமான திருவோணத்தில் அவதரித்த ஆழ்வார் இவர் ஒருவரே. ‘‘முத்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சி’’ என்கிறபடியே அவதரித்த நகரத்தாலும் முதன்மைபெற்றவர் இவரே. ‘‘ஶங்க$_2$சக்ரக$_3$தா$_3$த$_4$ர:’’ [ரா-யு] ‘‘ஶங்க$_2$சக்ரக$_3$தா$_3$பாணே’’ [பார-ஸபா] ‘‘சங்குசக்கரங்கள்’’ [திருவாய்7-2-1] முதலான பிரமாணங்களின்படி பஞ்சாயுதங்களில் பிரதமாயுதமான பாஞ்சஜந்யத்தின் அம்சமாய் அவதரித்த முதன்மையும் இவருக்குண்டு. இவர் அருளிய திருவந்தாதியின் முதன்மை ‘‘வருத்தும் புறவிருள் மாற்ற எம்பொய்கைப் பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத்திரித்தன்றெரித்த திருவிளக்கு’’ என்று அமுதனாரால் அருளிச்செய்யப்பட்டது.

இத்தகைய திருவந்தாதியானது பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளையருளிய பரமபோ$_4$க்யமான வியாக்கியானத்துடன் எந்தையாரால் விரோதி வருடம் மாசியில் திருவோணத்தில் வெளியிடப்பெற்றது. [இப்போதும் கிடைக்கும். விலை ரூ. 1-88.] பெரியவாச்சான்பிள்ளையின் திருவந்தாதி வ்யாக்யானங்கள் அதிகம்பீ$_4$ரமாகவும், அதிஸங்க்$_3$ரஹமாகவும், சிலவிடங்களில் பொருளுணர அரியதாகவுமிருக்கையாலே மாமுனிகளின் திருவடியாய் அஷ்டதிக்கஜங்களில்

ஒருவரான அப்பிள்ளை என்னும் ஆசார்யர் அருளிய அப்பிள்ளையுரையையும், இரண்டு வியாக்கியானத்தின் ஸாரத்தையும் உள்ளடக்கி எளியநடையிலேயானதொரு விவரணத்தையும் வெளியிட்டால் லோகோபகாரமாகும் என்று கருதி இந்நூல் ஸுதர்சனத்தில் தொடர்ந்து வெளியிடப்பெற்று சுபகிருத் ஐப்பசித்திருவோணத்தில் நிறைவுபெறுகிறது. இரண்டாவது மூன்றாவது திருவந்தாதிகள் பெரியவாச்சன் பிள்ளை வியாக்கியானத்தோடும், அப்பிள்ளையுரையோடும், நமது எளியநடை விவரணத்தோடும் இனி ஸுதர்சனத்தில் வெளியிடப்பெற்றுச் சில வருஷங்களில் நிறைவுபெறும்.

அப்பிள்ளையுரையின் பழைய தமிழ்த் தெலுங்குலிபிப் பதிப்புகளில் பல பிழைகள் உள்ளன. பொழிப்புரையாய் அமைந்த அப்பிள்ளையுரை தாறுமாறாகப் பிரிக்கப்பட்டுப் (பழைய பதிப்புகளில்) பதவுரையாகத் தரப்பெற்றுள்ளது. இக்குறைகள் ஒன்றும் இல்லாதபடி திகழ்கின்றது இப் பதிப்பு. இதிலும் குறைகளிருந்து மஹான்கள் காட்டினால் நன்றியுடன் மறுபதிப்புகளில் திருத்தி வெளியிடுவோம். இப்பதிப்பு கோல்விழுக்காட்டாலே பொய்கையாழ்வார் அவதரித்த ஐப்பசியில் திருவோண நன்னாளிலேயே நிறைவு பெற்றது பரமபுருஷனுடைய நிர்ஹேதுககிருபையை வெளிப்படுத்துகிறது.

சுபகிருத்,
ஐப்பசித் திருவோணம்,
(5—11—62)

இங்ஙனம்,
அன்பர் தாள்தூளி,
ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்.

★ பாசுரங்களின் ஸூசிகை ★

1	வையந்தகளியா	15
2	என்று கடல்	21
3	பாரளவு மோரடி	25
4	நெறிவாசல்	27
5	அரன் நாரணன்	31
6	ஒன்று மறந்தறி	36
7	திசையும் திசையுறு	39
8	மயங்க வலம்புரி	42
9	பொருகோட்டோ	46
10	மண்ணும் மலையும்	49
11	வாயவனை யல்லது	51
12	செவிவாய்கண்	53
13	இயல்வாக	58
14	அவரவர் தாந்தாம்	60
15	முதலாவார் மூவரே	63
16	பழுதே பலபகலும்	71
17	அடியும் படி	74
18	நான்ற முலைத்தலை	76
19	மாலும் கருங்கடலே	79
20	பெற்றார் தளை	81
21	நின்று நில மங்கை	84
22	அறியுமுலகெல்லாம்	86
23	தழும்பிருந்த	88
24	விரலொடு வாய்	90
25	உரைமேற்கொண்	93
26	எழுவார் விடை	95
27	மலையால் குடை	97
28	கைய வலம்புரியும்	100
29	இறையும் நிலனும்	103
30	தெளிதாக	105
31	புரியொருகை	107
32	இமையாத கண்ணால்	109
33	நகர மருள்புரிந்து	112
34	என்னொருவர்	114
35	ஆறிய வன்பிலடி	116
36	முரணை வலி	119
37	வகையறு நுண்	121
38	ஊரும் வரியரவ	123
39	இடந்தது பூமி	126
40	பெருவில் பகழி	128
41	குன்றனைய குற்றம்	131
42	திருமகளும் மண்	133
43	மனமாசு தீரும்	137
44	தமருகந்த தெவ்	139
45	ஆமே யமரர்க்	143
46	பண்புரிந்த நான்	145
47	வாரிசுருக்கி மதக்	149
48	கழலொன் றெடுத்	152
49	மகிழல கொன்றே	154
50	அரியபுலனைந்	156
51	எளிதிலிரண்டடி	158
52	எண்மர் பதினொரு	160
53	சென்றால் குடை	162
54	அரவ மடல்வேழ	164
55	அவன்தம ரெவ்	166
56	பேரே வரப்	170
57	அயனியன்ற வல்	172
58	தொழுது மலர்	174
59	அடைந்த வரு	176
60	சரண மறைபயந்த	180
61	உலகு முலகிறந்த	183
62	புணர்மருதி னூடு	187
63	தோளவனையல்	190
64	நயவேன் பிறர்	192
65	வினையா லடர்ப்	195
66	காலை யெழுந்துல	196
67	பெயருங் கருங்	198
68	உணர்வாராருன்	201
69	பாலன் றனதுரு	203
70	சொல்லுந்தனையும்	206
71	நன்று பிணிமூப்பு	208
72	அன்பாழியானை	211
73	புகழ்வாய் பழிப்	213
74	ஏற்றான் புள்ளூர்	216
75	காப்புன்னை	220
76	வழிநின்று நின்னை	224
77	வேங்கடமும்	227
78	இடரார் படுவார்	230
79	கொண்டானையல்	232
80	அடுத்த கடும்பகை	236

பாசுரங்களின் ஸூசிகை

81	ஆளமர் வென்றி	239
82	படையாரும் வாள்	241
83	வரைகுடைதோள்	242
84	பிரானுன் பெருமை	245
85	படிகண்டறிதியே	247
86	நீயும் திருமகளும்	249
87	இனியார் புகுவார்	252
88	நாடிலும்	255
89	எனக்காவார்	257
90	வரத்தால் வலி	259
91	ஊனக் குரம்பை	262
92	வாளாகித் தீயாய்	265
93	வயிறழல வாளு	267
94	செற்றெழுந்து தீ	270
95	நாவாயி லுண்டே	275
96	திறம்பாதென்	277
97	பிடிசேர் களி	280
98	பொன்திகழு	284
99	உளன்கண்டாய்	288
100	ஓரடியும் சாடு	292

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்

சிறந்த ஸ்ரீவைஷ்ணவ மாத பத்திரிகை

'ராமாயண தனிச்லோகம்' 'பகவத்கீதா வ்யாக்யானம்' முதலான பல நூல்கள் இந்த மாதப்பத்திரிகையில் வெளி வருகின்றன. இப்பத்திரிகையில், உபநிஷத்துக்கள், ப்ரஹ்ம ஸூத்ரங்கள் முதலானவற்றுக்கு விரிவுரைகளும், திவ்யப்ர பந்தங்களுக்கு எளிய வ்யாக்யானங்களும் மற்றும் பல பகவத் விஷயங்களும் வெளிவருகின்றன. வருடச்சந்தா ரூபாய் மூன்று. [3.] நீங்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்துவிட்டீர் களா? இல்லையேல் இன்றே சேருங்கள்.

[சுபகிருது மார்கழிமுதல் பதினாறும் வருஷத் தொடக்கம்.]

கிடைக்குமிடம்:-

ஆசிரியர்:-

S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பிள்ளைலோகம் ஜீயரருளிச்செய்த

முதல்திருவந்தாதி

தனியன் வ்யாக்யாநம்.

முதலியாண்டானருளிச்செய்த தனியன்.

கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு—வையத்
தடியவர்கள் வாழ வருந்தமிழ் நூற்றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து.

தனியன் பதவுரை

கைதைசேர்—*தாழைகள் நெருங்கிச் சேர்ந்திருக்கிற,* **பூம்பொழில்**-*அழகிய சோலைகளாலே சூழப்பட்ட,* **கச்சிநகர்**-*காஞ்சிநகரத்தில்,* **வந்து உதித்த**-*திருவவதரித்த,* **பொய்கைப் பிரான்**-*பொய்கையாழ்வார் என்னும்,* **கவிஞர் போர் ஏறு**—*கவி ரிஷபமானவர்,* **வையத்து**-*இவ்வுலகிலுள்ள,* **அடியவர்கள்**-*அடியார்களான ஸ்ரீவைஷ்ணவர்கள்,* **வாழ**-*வாழும்படியாக,* **அருந் தமிழ் நூற்றந்தாதி**—*(அர்த்த நிர்ணயம்பண்ண) அரிதாய், தமிழினுலான நூற்றந்தாதியை,* **பரிந்து**—*அன்புடன்கூடியவராய்,* **படி**-*பூமியிலே,* **விளங்கச் செய்தான்**—*பிரகாசிக்கும்படி செய்தருளினர்.*

அவதாரிகை:—*(கைதைசேரித்யாதி) இவ்வாழ்வார்,* **"क इति ब्रह्मणो नाम तेन तत्राऽञ्चितो हरिः। तस्मात्काञ्चीति विख्याता पुरी पुण्यविवर्धनी॥"** (**க இதி ப்$_3$ரஹ்மணோ நாம தேந தத்ராऽஞ்சிதோ ஹரி:। தஸ்மாத் காஞ்சீதி விக்$_2$யாதா புரீ புண்யவிவர்த்$_3$த$_4$நீ**) *என்னும்படியான காஞ்சீபுரியில் புஷ்கரணியில் புஷ்*

கரத்திலே விஷ்ணு நக்ஷத்ரத்திலே ஆவிர்ப்பவித்து திவ்ய ப்ரபந்த தீபமுகேந லோகத்தில் அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கி வாழ்வித்தபடியைச் சொல்லுகிறது இதில்.

வ்யாக்யாநம்:—(கைதைசேர் பூம்பொழில்சூழ் கச்சிநகர் வந்துதித்த பொய்கைப்பிரான்) இத்தால் இவர் ஜந்ம வைபவம் சொல்லுகிறது. (கைதை) கேதகை—தாழை. "கைதைவேலிமங்கை" என்றும், "கொக்கலர்தடந்தாழை வேலி" என்றும் சொல்லுமாப்போலே. அதுதான் நீர்நிலங்களிலேயாயிற்று நிற்பது. "தாழை தண்ணாம்பல் தடம் பெரும் பொய்கைவாய்" என்னும்படி, 'அம்பூந்தேனிளஞ் சோலை' சூழ்ந்த கச்சிவெஃகாவில் பொய்கையிலே எம்பெரு

முதல் திருவந்தாதி

தனியன் வ்யாக்யான விவரணம்

அவதாரிகை:—" 'க:' என்பது பிரமனின் பெயர்' அப்பிரமனாலே அவ்விடத்தில் பரமபுருஷன் பூஜிக்கப்பட்டபடியால், அந்நகரம் 'காஞ்சி' என்று பெயர்பெற்றுப் புண்ணியத்தைப் பெருக்குகிறது" [ஹஸ்திகிரிமாஹாத்மியம்] என்று புகழ்பெற்ற காஞ்சீநகரத்தில் ஒரு தாமரைக்குளத்தில் தாமரையிலே, விஷ்ணு நக்ஷத்திரமான திருவோணத்திலே இவ்வாழ்வார் அவதரித்ததையும், இம்முதல் திருவந்தாதியாம் விளக்காலே உலகில் அஞ்ஞானவிருளைப்போக்கி உய்வித்தபடியையும் சொல்லுகிறது இப்பாசுரத்தில்.

வ்யா:—(கைதை சேர் பூம்பொழில் சூழ் கச்சிநகர் வந்துதித்த பொய்கைப்பிரான்) இத்தொடரால் இவர் பிறப்பின் பெருமை சொல்லுகிறது. (கைதை) கேதகை—தாழை. "கைதை வேலி மங்கை" [?] என்றும், "கண்டல்வேலி மங்கை" [பெரியதிரு 1-3-10] [கண்டல்-தாழை] என்றும், "கொக்கலர் தடம் தாழை வேலி" [திருவாய் 4-10-8] என்றும் சொல்லப்பட்ட திருமங்கையையும், திருநகரியையும்போலே ஜலஸம்ருத்தியுடைய தேசமாகையாலே, தாழைமலிந்திருக்கிறபடி. "தாழைதண்ணாம்பல் தடம் பெரும் பொய்கைவாய்" [பெரியாழ் 2-10-8] என்கிறபடியே நீர் நிலங்களிலேயன்றோ தாழை செழிக்கும். (பூம்பொழில் சூழ்கச்சி) "அம்பூந்தேனிளஞ் சோலை" [திருவிருத்தம்-26] என்று ஜலஸம்ருத்தியையுடைய கச்சிவெஃ

மான் பொன்வயிற்றில் பூவேபோன்ற பொற்றாமரைப் பூவிலே ஐப்பசியில் திருவோணநாளாயிற்று இவரவதரித்தது. பத்மஜனை பூவனைப்போலேயாயிற்று பொய்கையாரான இவர் பிறப்பும், (வந்துதித்த) என்கையாலே, ஆதித்யோதயம்போலேயாயிற்று இவருதயமும். "வருத்தும் புறவிருள் மாற்ற வெம்பொய்கைப்பிரான்" என்னக்கடவதிறே. பொய்கையிலே அவதரிக்கையாலே அதுவே நிரூபகமாயிருக்கை. அதுதான் ஸரஸ்வதீ பயஸ்வினியாய் ப்ரவஹித்த ஸ்தலமாயிற்று. தத்தீரமான பொய்கையென்கை. (பொய்கைப்பிரான்) மருபூமியில் பொய்கைபோலே எல்லார்க்கும் உபகாரகராயிருக்கை. தீர்த்தகரராய்த் திரியுமவரிறே.

கவிஞர் போரேறுகையாவது:-கவிச்ரேஷ்டரென்றபடி. முதலாழ்வார்கள் மூவரிலும் முதலானவராகையாலே, ஆதி

காவிலன்றோ இவரும் அவதரித்தது. (கச்சி நகர் வந்துதித்த) நீர்மிக்க கச்சிநகரிலே நீர்நிறைந்ததொரு தடாகத்திலே, எம்பெருமான் பொன் வயிற்றிற் பூவேபொன்றதொரு பொற்றாமரைப்பூவிலே ஐப்பசியில் திருவோண நாளிலேயன்றோ இவர் அவதரித்தது. தாமரைப் பூவினிற்பிறந்த நான்முகனுடைய பிறப்பைப்போன்றது பொய்கையாரான இவருடைய பிறப்பும். (வந்துதித்த) என்கையாலே, சூரியனின் உதயம்போன்றது இவருடைய உதயமும் என்று உணர்த்தப்படுகிறது. "வருத்தும் புறவிருள் மாற்ற எம்பொய்கைப்பிரான்" [இராமாநுச-8] என்று அவனைப் போலே இருளைத் தொலைக்கப் பிறந்தாரன்றோ இவரும்.. (பொய்கைப் பிரான்) பொய்கையிலே அவதரிக்கையாலே அதுவே பெயராயிற்று. வெஃகணையாகிற அவ்விடம் ஸரஸ்வதீ தேவியானவள் பிரமனின்யாகத்தை அழிக்க நதியாய்ப்பெருகுகின்றபோது பகவான் அணையாய் நின்று தடுக்க, ஸரஸ்வதியானவள் அந்தர்வாஹினியான ஸ்தலமாகையாலே பொய்கைகள் நிரம்பியிருக்கும். (பொய்கைப்பிரான்) இவரும் பாலைவனத்திலே பொய்கைபோலே அனைவர்க்கும் உபகாரகராயிருப்பவர். "தீர்த்தகரராமின் திரிந்து" [இர்-திருவ-14] என்கிறபடியே தீர்த்தங்களையும் தீர்த்தமாக்கித் (பரிசுத்தமாக்கித்) திரியுமவரன்றோ இவர்.

(கவிஞர் போரேறு)கவிகுலரிஷபர்; கவிஞர்தலைவர் என்றபடி. முதலாழ்வார்கள் மூவரிலும் முதல்வராகையாலே, ஆதிகவி என்னும் பெருமையை

கவி என்னும்படியான அதிசயத்தை உடையராயிருப்பர். படைத்தான் கவியாலும், பரகால கவியாலும், "செஞ் சொற்கவிகாள்" என்றும், "செந்தமிழ் பாடுவார்" என்றும் கொண்டாடப்படுமவராய், நாட்டிற் கவிகளுக்கும் விலக்ஷண கவியாயிருப்பர். "இது பொய்கையார் வாக்கினிற் கண்டு கொள்க" என்றிறே தமிழர் கூறுவது. அந்த ஏற்றமெல்லா வற்றையும் பற்றக் கவிஞர் போரேறு என்கிறது.

ஏவம் வித வைலக்ஷண்யத்தை உடையவர், வைஷ்ண வர்கள் வாழும்படி ஸ்நேஹத்தாலே விலக்ஷண ப்ரமாண நிர்மாணம் பண்ணினபடி சொல்லுகிறது, (வையத்தடிய வர்கள் வாழ அருந் தமிழ் நூற்றந்தாதி படி விளங்கச் செய்தான் பரிந்து) என்று. வையத்தடியவர்களாகிறார்— பூஸுரரான ஸ்ரீவைஷ்ணவர்கள். அவர்கட்கேயிறே வாழ வேண்டுவது. வானத்தணியமரர்க்கு வாழ்வு நித்யமாயிறே இருக்கிறது. இத்தாலே,இவர்கள் வாழுகையாவது:-சேஷத்வ

உடையவராயிருப்பர். "உலகைப் படைத்தான் கவி" [திருவாய் 3-9-10] என்ற நம்மாழ்வாராலும், "பரகாலகவி:" [ர-ஸ்த] என்ற திருமங்கை யாழ்வாராலும், "செஞ்சொற்கவிகாள்" [திருவாய் 10-7-1] என்றும், "செந் தமிழ்பாடுவார்" [பெரியதிரு 2-8-2] என்றும் கொண்டாடப்படுமவராய், உலகிலுள்ள கவிகளுக்குள் மிகச்சிறந்தவராயிருப்பவர். "இது பொய்கையார் வாக்கினிற் கண்டுகொள்க" என்றன்றோ தமிழ் நூல்களின் உரையாசிரி யர்கள்கூறுவது. அந்தப் பெருமையனைத்தையும் உட்கொண்டு, "கவிஞர் போரேறு" என்கிறார்.

இப்படிப்பட்ட பெருமையை உடையவர் ஸ்ரீவைஷ்ணவ லோகமெல் லாம் வாழும்படி அன்பாலே மிகச்சிறந்த பிரபந்தம் அருளிச்செய்ததைச் சொல்லுகிறார்மேலே: (வையத்தடியவர்கள் வாழ அருந்தமிழ் நூற்றந் தாதி படிவிளங்கச் செய்தான் பரிந்து) (வையத்தடியவர்கள்) நிலத்தேவர், வையத்தேவர் எனப்படும் ஸ்ரீவைஷ்ணவர்கள். "வானத்தணியமரர்" [இர-திருவ-2] என்கிற வானத்தேவராகிற நித்யஸூரிகள் என்றும் வாழ்ச்சி பெற்றேயிருக்கிறார்களாகையாலே, வையத்தேவரான இவர் களுக்கே வாழ்ச்சி வேண்டியிருக்கிறது. இவர்களை இந்நூல் வாழவைப்ப தாவது, சேஷத்வச் செல்வத்தை, தன்னை அநுஸந்திப்பார்க்கு

விபவத்தை ஸ்வாநுஸந்தாநத்தாலே உண்டாக்குமதான ப்ரபந்தமென்கை. "நின்தாளிணைக் கீழ்வாழ்ச்சி" என்னக் கடவதிறே. இவ்வநுஸந்தாநமே வாழ்வாகவுமாம். அருந் தமிழ் நூற்றந்தாதியாவது:-அர்த்த நிர்ணயத்தில் வந்தால் அரிதாய், தமிழான ப்ரகாரத்தாலே ஸுலபமாய், அது தான் நூறுபாட்டாய், அந்தாதியாயிருக்கை. உடையவர் நூற்றந்தாதிக்கேற்றம் எட்டுப்பாட்டாயிருக்கும்.

(அருந்தமிழ்நூற்றந்தாதி) அதுதான் வெளிறாயிருக்கை யன்றிக்கே அரிதாய், ஸம்ஸ்க்ருதமாயிருக்கையன்றிக்கே அஸம்ஸ்க்ருதமான த்ராவிடமாய். ஆயிரம் ஐந்நூறாயிருக்கை யன்றிக்கே நூறாயிருக்கை. அன்றிக்கே (வையத்தடியவர் கள் வாழ வரும் தமிழ் நூற்றந்தாதி), என்றாகவுமாம். அப் போது வையத்தடியவர்சள் வாழவருமதான தமிழ் நூற் றந்தாதி என்று நிர்வஹிக்கக்கடவது.

நூற்றந்தாதி படிவிளங்கச் செய்கையாவது:-(வையந் தகளியா) என்றுதொடங்கி, ஓரடியுஞ்சாடுதைத்த முடி வாக அருளிச்செய்த திவ்யப்ரபந்ததீபத்தாலே பூதலமெங்

உண்டாக்குகை. "நின் தாளிணைக்கீழ் வாழ்ச்சி" [திருவாய் 3-2-4] என் கிறபடியே சேஷத்வமன்றோ வாழ்ச்சியெனத்தக்கது. அன்றிக்கே, இந் நூலைச் சொல்லுவதே வாழ்வாகவுமாம். ஸ்வயம் ப்ரயோஜனமென்கை. அரும்தமிழ் நூற்றந்தாதியாவது:— 'இதுதான்பொருள்' என்று வரம் பிட்டுப் பொருளுணர அரியதாய், தமிழாலானதாகையாலே, பாமரர்க்கும் எளியதாய், மிகச்சுருக்கமும் விரிவுமல்லாமல் நூறுபாட்டாய், மனப் பாடம் செய்யத்தக்கபடி அந்தாதியாயிருக்கை. இதனிலும் எட்டுப்பாட்டை அதிகமாக உடைத்தாயிருக்கை இராமாநுசநூற்றந்தாதிக் கேற்றம். (அரும் தமிழ் நூற்றந்தாதி) ஸாரமற்ற வெள்ளைப் பாட்டாயல்லாமல் அரியபொருள்களை அடக்கியதும் முரட்டு ஸம்ஸ்க்ருதமாயல்லாமல் எளிய தமிழாயிருப்பதும் ஆயிரம் ஐந்நூறாயிராமல் நூறு பாட்டாயிருப்பதும் இதற்கு ஏற்றம். அன்றிக்கே, (வையத்தடியவர்கள் வாழவரும் தமிழ் நூற்றந்தாதி) என்றும் பாடம் கொள்ளலாம். வையத்தடியவர்க்ள் வாழ வருகின்றதான தமிழ் நூற்றந்தாதி என்று பொருள்.

கும் நிர்மலமாம்படி நிர்மித்தாரென்கை; வருத்தும் புறவிருள் மாற்ற வெம்பொய்கைப்பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையுங்கூட்டி ஒன்றத் திரித் தன்றெரித்த திருவிளக்காகையாலே. படியிலே—பூமியிலே. ப்ரகாசிக்கும்படி செய்தருளினாரென்றாகவுமாம். அன்றிக்கே படியென்று உபமானமாய் த்ராவிடவேதத்துக்குப் படிச் சந்தமாயிருக்கும்படி செய்தருளினாரென்னவுமாம். விளக்கம்-ப்ரகாசம். படி—என்று விக்ரஹமாய், "திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன்" என்னும்படி, கண்டறியும்படி செய்தாரென்றாகவுமாம். பரிவுடனே செய்கையாவது-சேர்ந்த விஷய ஸ்நேஹத்தாலே என்னுதல்; பரவிஷய ஸ்நேஹத் தாலே என்னுதல்; "செய்யசுடராழியானடிக்கேசூட்டினேன் சொன்மாலை" என்றாரிறே. ஸ்நேஹத்தாலேயிறே விளக் கெரிவது. இத்தால், அவர் திவ்யப்ரபந்தோபகாரகத்வத் தால்வந்த உபகாரகௌரவம் சொல்லி ஈடுபட்டதாயிற்று.

இயற்பா முதல்திருவந்தாதியின் தனியன் • வ்யாக்யாநம் முற்றிற்று.

(நூற்றந்தாதி படிவிளங்கச்செய்தான்)முதற் பாட்டிலிருந்து, கடைசிப் பாசுரமீறாகவான திவ்யப்ரபந்தவிளக்காலே உலகெங்கும் அஞ்ஞானவிருள் நீங்கும்படி அருளிச்செய்தார் என்கை.

"வருத்தும் புறவிருள்மாற்ற, எம் பொய்கைப்பிரான் மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ்தன்னையும் கூட்டிஒன்றத் திரித்தன்றெரித்த திருவிளக்கு" [இராமாநுச-8]

என்று இதை விளக்காகச் சொன்னாரன்றோ அமுதனாரும். **படி**—பூமியை, **விளங்கச்செய்தான்**—பிரகாசிக்கச்செய்தான் என்றபடி. அன்றிக்கே, **படி**-பூமியிலே, **விளங்கச்செய்தான்**— (இந்நூலை) விளங்கும்படி செய்தான் என்றுமாம். அல்லது, **படியென்று உபமானமாய்**—தமிழ்வேதமாகிற திருவாய்மொழிக்கு உபமானமாம்படி பிரகாசிக்கச் செய்தருளினார் என்றுமாம். **விளக்கம்**—பிரகாசம். அல்லது 'படி'யென்று பகவானுடைய திருமேனியாய், "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" [மூன்-திருவ-1] என்று பேயார் கண்டறியும்படி திருமேனியை விளங்கச் செய்யத் திரு விளக்கேற்றினார் என்றுமாம். (செய்தான் பரிந்து) தம்முடன் சேர்ந்த

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

முதல் திருவந்தாதி

அப்பிள்ளையுரையின் அவதாரிகை

ஸ்ரிய: பதியாய், அவாப்தஸமஸ்தகாமனாய், ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸர்வேச்வரன், நித்யவிபூதியிலே நித்யாஸங்குசிதஜ்ஞாநரான நித்யஸூரிகளை நித்யகைங்கர்யங்கொண்டு நித்யாநந்தியாயிருக்கச் செய்தேயும், அவர்களைப்போலே கைங்கர்யநிரதராய் வாழுகைக்கு இட்டுப்

முதல் திருவந்தாதி

திவ்யப்ரபந்தஸார வ்யாக்யானம்

அவதாரிகை:-திருவின் நாயகனாய், வேண்டுதல் வேண்டாமை இலாதவனாய் நற்குணக்கடலான ஸர்வேச்வரன், நித்யவிபூதியான பரமபதத்தில், என்றும் சுருங்காத ஞானமுடைய நித்யஸூரிகளை என்றுமொக்கக் கைங்கரியங்கொண்டு நித்யாநந்தமுடையவனாயிருந்தபோதிலும், அவர்களைப்போலே கைங்கரியத்திலேயே ஈடுபட்டு வாழ்வதற்கு இட்டுப்பிறந்து வைத்தும், அதற்கு வேறுபட்டவர்களாய், அஞ்ஞானத்திலும், அதற்குக்

வையத்தடியவர்களாகிற பாகவதவிஷய ஸ்நேஹத்தாலே என்னுதல்; பகவத்விஷய ஸ்நேஹத்தாலே என்னுதல், பகவத்விஷயத்தில் பரிவாலே சொன்னதை ''செய்ய சுடராழியானடிக்கே சூட்டினேன் சொன்மாலை'' என்று முதற்பாசுரத்தில் காட்டினாரன்றோ. ஸ்நேஹத்தாலேயன்றோ (ஸ்நேஹம்-1. அன்பு. 2. எண்ணெய்) விளக்கு எரிவது. ஸ்நேஹத்தாலே (எண்ணெயாலே) உலகில் விளக்கு எரிகிறது; ஸ்நேஹத்தாலே (அன்பாலே) திருவந்ததாதியாம் திருவிளக்கு எரிகிறது.

தனியன் வ்யாக்யான விவரணம் முற்றிற்று.

பிறந்து வைத்து அதுக்கு அசலாய், அவித்யாகர்மவாஸநா ருசி ப்ரக்ருதி பரவஶராய்ப் பரிப்ரமிக்கிற ஸம்ஸாரிசேதநரைத் திருத்திப் பணிகொள்ளுகைக்காக, இவர்கள் அழிந்து கிடக்கிற தஶையிலே ஸ்வாஶ்ரயணோபகரணமாக கரண களேபரங்களைத் தன் கருணையாலே கொடுத்தருளி, அவற்றைக் கொண்டு வ்யபிசரியாதே நல்வழி நடக்கைக்கு உடலாக ஶ்ருத்யாதி ஶாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பிக்க, அவற்றைத்திரஸ்கரித்து ஸ்வைரம் ஸஞ்சரிக்கிற தஶையிலே ராமக்ருஷ்ணாதிரூபேண வந்து அவதரித்தருளி உபதேஶாநுஷ்டானங்களாலும், ரூபௌதார்யகுண சேஷ்டிதங்களாலும் வஶீகரித்து இவர்களைத் திருத்தப் பார்த்த விடத்தில் அவற்றுக்கும் அகப்படாதபடி இதரவிஷயங்களிலே மண்டி இவர்கள் நஷ்டகல்பராய்ப் போகக்கண்டபடியாலே, ஆழ்வார்களைக் கொண்டு இவர்களைச் சேர்த்துக் கொள்வானாக ஆமுதல்வரான முதலாழ்வார்களை அநந்தரம் அவதரிப்பித்தருளினான்.

காரணமாகவும் காரியமாகவுமிருக்கும் கருமம், வாஸனை, ருசி, ப்ரக்ருதி ஸம்பந்தம் ஆகியவற்றிலும் ஈடுபட்டு உழலும் ஸம்ஸாரிஜீவர்களைத் திருத்திப் பணிகொள்வதற்காக, இவர்கள் ஞானமற்று அழிந்துகிடக்கும் ப்ரளய தசையிலே தன்னை அறிவதற்கு உறுப்பான சரீரேந்திரியங்களை தன் தயையாலே அநுக்ரஹித்து, விளக்கிலே விழும் விட்டில்கள்போலே அவற்றைக்கொண்டு சப்தாதிவிஷயங்களிலே மண்டி அழியாமல் நல்வழி நடப்பதற்குத் துணையாக வேதம் முதலான சாஸ்திரங்களைக் காட்டிக் கொடுக்க, ஜீவர்கள் அவற்றை அலட்சியம்செய்து தம் இஷ்டப்படி நடக்கும் நிலையிலே, ராமன், கிருஷ்ணன் முதலான அவதாரங்களைச் செய்து இவ்வுலகிற்கு வந்து உபதேசத்தாலும், தன் நடத்தையாலும், தன் ரூபத்தாலும், வண்மை முதலான குணங்களாலும், செயல்களாலும் இவர்களை வசப்படுத்தித் திருத்தப் பார்த்தபோதும், இவற்றுக்கும் வசப்படாமல் சப்தாதிவிஷயங்களிலே ஈடுபட்டு இவர்கள் பெரும்பாலும் அழிந்த நிலையிலேயே நிற்கக்கண்டு, மானைக்கொண்டு மானைப் பிடிப்பாரைப்போலே, ஆழ்வார்களைக்கொண்டு இவர்களைச் சேர்த்துச் கொள்வதாகத் திருவுள்ளம் பற்றி ''ஆமுதல்வன் இவன்'' [திருவாய் 7-9-3] என்னத்தக்க முதலாழ்வார்களைத் தனக்கு அடுத்தபடியாக அவதாரம் செய்வித்தான்.

இவர்களாகிறார்,-பகவதாகஸ்மிக கடாக்ஷவிசேஷலப்$_3$த$_4$மான ஜ்ஞாந ப்ரேமங்களைக் குறைவறவுடையராய், நித்யஸூரிகளைப்போலே பிறப்பேபிடித்து பகவதநுபவத்திலே பழுத்து ஸம்ஸாரயாத்ரையிற் கண்ணற்று "இன்கவிபாடும் பரமகவிகள்" என்றும், "செந்தமிழ் பாடுவார்" என்றும் நாவீறுடைய பெருமாளும், நாலுகவிப்பெருமாளும் கொண்டாடும்படியான வேண்டப்பாடுடையராய்ப் பரத்வாதிகள் ஐந்தையும் ஒருகாலே கண்டு மண்டி அநுபவிக்கும் சதிரையுடையராயிருக்கச்செய்தே, ஆறு பெருக்கெடுத்து எங்குமொத்துப்போகா நிற்க, நீர்க்கு நோக்கு ஓரிடத்திலேயாயிருக்குமாபோலே, திருவுலகளந்தருளின விடத்திலும், திருமலையிலும் கால்தாழ்ந்து அநுபவித்துப் போருமவர்களாய், அறிவுண்டாயிருக்க பகவத்விஷயத்தைக் காற்கடைக்கொண்டு இதர விஷயங்களிலே மண்டித்திரிகிற ஸம்ஸாரிகளோட்டை ஸஹவாஸம் துஸ்ஸஹமாய், அவர்கள்

இவர்கள் பெருமையெப்படிப்பட்டதெனில்: பகவானுடைய நிர்ஹேதுக கடாக்ஷத்தாலே அருளப்பெற்ற ஜ்ஞாநபக்திகளைக் குறைவற உடையவர்களாய், நித்யஸூரிகளைப்போலே பிறந்ததிலிருந்தே பகவதநுபவத்திலே பழுத்தவர்களாய், ஸம்ஸாரப்போக்கில் கண்செலுத்தாதவர்களாய் "இன்கவிபாடும் பரமகவிகள்" [திருவாய் 7-9-6] என்று நாவீறுடைய பெருமாளான நம்மாழ்வாராலும், "செந்தமிழ்பாடுவார்" [பெரியதிரு 2-8-2] என்று நாலுகவிப்பெருமாளான திருமங்கையாழ்வாராலும் கொண்டாடப்படும் பெருமையை உடையவராய், பரம், வியூஹம், விபவம், அந்தர்யாமி அர்ச்சை என்னும் ஐந்துநிலைகளையும் ஒரே காலத்தில் ஸாக்ஷாத்கரித்து ஈடுபட்டு இன்புறும் பெருமையை உடையவரானபோதிலும், ஆறு கரையெல்லாம் பெருக்கெடுத்து எங்குமொத்துப் போனபோதிலும், நீருக்கு நோக்கு ஒருவழியிலேயாயிருப்பதுபோலே, விபவங்களிலே திருவுலகளந்தருளிய திரிவிக்கிரமனிடமும், அர்ச்சையிலே திருவேங்கடமுடையானிடமும் மிகவும் ஈடுபட்டு அநுபவித்துப்போகின்றவர்களாய், அறிவிருந்தபோதிலும் பகவத்விஷயத்தை அலட்சியம்செய்து, மற்றவிஷயங்களிலே ஈடுபட்டுத்திரிகிற ஸம்ஸாரிகளோடு உறவைப் பொறுக்கமுடியாமல், அவர்

வர்த்திக்கிற நாட்டைவிட்டு, அறிவுக்கு அடைவில்லாத ஸ்தாவரங்கள் வர்த்திக்கிற காட்டை விரும்பி, அவ்விடத்திலும் யத்ரஸாயங்க்ருஹராய் ஒருவரையொருவர் அறியாத படி மறைந்து வர்த்தித்தார் சில மஹாபுருஷர்களாயிற்று.

இப்படி வர்த்திக்கிற இவர்கள் மூவரும், யாத்ருச்சிகமாக ஒருநாள் திருக்கோவலூர் ப்ரதேசத்திலே வந்து ஸங்கதராக, அவ்வளவிலே பெருமழையும், பெருங்காற்றும் ப்ரவ்ருத்தமாக, அதைக்கண்டு மழைக்கு ஒதுங்கி, ஓரிடைகழியிலே ஒருவர் புக்குக் கிடக்க, மற்றையவர் வந்து 'திறக்கவேணும்' என்ன, 'ஒருவர் கிடக்க இடம் போருமத்தனை' என்ன, 'ஒருவர் கிடந்தவிடம் இருவர்க்கு இருக்கலாங்காணும், திறவும்' என்ன, 'ஒருவர் மூச்சு ஒருவர் பொறுத ஸம்ஸாரத்திலே இப்படிச்சொன்ன இவர் கேவலரல்லர்' என்று திறக்க, அவரும் புகுந்து இவ்விருவருமாக

கள் வாழும் நாட்டைவிட்டு, அறிவற்ற மரங்கள் வாழும் காட்டைவிரும்பி, அங்கும் ஒரு குடிசையை அமைத்துக்கொள்ளாமல், பகவதநுபவத்தோடே திரியும்போது மாலைப்போது எவ்விடத்தில் வருகிறதோ அவ்விடத்தையே அற்றையிரவுக்கு இருப்பிடமாகக் கொள்ளுமவர்களாய், ஒருவரையொருவர் அறியாதபடி மறைந்து வாழ்ந்த மஹாபுருஷர்கள் இவர்கள்.

இப்படி வாழ்கிற இம்முதலாழ்வார்கள் மூவரையும் கூட்டிவைத்து, தன்னை அநுபவிப்பித்து, அவ்வநுபவத்திற்குப் போக்குவீடான பிரபந்தங்களாலே தன்னையும் உலகையும் வாழ்விக்க நினைத்த எம்பெருமானுடைய ஆகஸ்மிகக்ருபையாலே இம்மூவரும் ஒருநாள் **திருக்கோவலூர்** என்னும் திவ்யதேசத்திலே வந்து கூட, அப்போது, அவ்விடத்தில் பெருமழையும் பெருங்காற்றும் பொழிய, அதைக்கண்டு மழைக்கு ஒதுங்கி மிருகண்டு மஹரிஷியின் ஆச்ரமத்தின் இடைகழியிலே பொய்கையாழ்வார் புகுந்து சயனித்துக்கொண்டிருக்க, பூதத்தாழ்வார் வந்து 'திறக்கவேணும்' என்று கதவைத்தட்ட, 'ஒருவர் சயனிக்கத்தான் இடமுள்ளது' என்று பொய்கையார் உரைக்க, 'ஒருவர் படுத்தவிடத்திலே இருவர் உட்காரலாம்; திறப்பீர்' என்று பூதத்தார் சொல்ல, 'ஒருவர்மூச்சு ஒருவர் பொறுக்கமாட்டாத இவ்வுலகில் இப்படிக்கூறிய இவர் ஸாமாந்யரல்லர்; விலக்ஷணராகவேயிருக்கவேண்டும்' என்று நினைத்துக் கதவைத் திறக்க, அவரும் உட்புகுந்து

இருக்கிறவளவிலே மற்றையவரும்வந்து திறக்கச் சொல்ல, 'எங்களிருவர்க்கும் இருக்க இடம் போருமத்தனை' என்ன, 'இருவர் இருந்தவிடம் மூவர்க்கு நிற்கலாம் திறவும்' என்ன, 'இவரும் கேவலரல்லர்' என்று திறக்க, இவர்கள் மூவரும் கூடி நிற்கச் செய்தே, ஈச்வரன் தானும் பிராட்டியுமாக வந்து தனித்தனியே இவர்களைப் பின்பற்றித் திரிந்த நெஞ்சாறல் தீர இவர்கள் மூவர்க்கும் நடுவே புக்கு நெருக்க, 'நம் மூவரையுமொழிய வேறு புக்கு நெருக்குகிறவர்கள் யார்? என்று விளக்கேற்றிப் பார்க்கவேணும் என்ன; அவர்களிலே ஒருவரான பொய்கையார் லீலாவிபூதியில் கார்யகாரணரூபமான ஸமஸ்தவஸ்துக்களும் ப$_4$க$_3$வத$_3$தீ$_4$நமாயிருக்கிறபடியைப் பரப$_4$க்தி ரூபாபந்நஜ்ஞானத்தாலே த$_3$ர்ஶித்து, அத்தை ஒரு விளக்காக ரூபித்துக்கொண்டு அநுப$_4$வபரீவாஹரூபமான 'வையந்தகளி' அருளிச்செய்தார். அநந்தரம் ஸ்ரீபூதத்தார் வையந்தகளிகேட்கையாலே அந்தப்

இவ்விருவருமாக இருக்கிறபோது, பேயாழ்வாரும் வந்து திறக்கச்சொல்ல, 'நாங்களிருவரும் இருக்கத்தான் இடமிருக்கிறது' என்று முதலிருவரும் சொல்ல, 'இருவர் உட்கார்ந்திருக்கும் இடம் மூவர்க்கு நிற்கலாம்; திறப்பீர்' என்று பேயார் கூற, 'இவரும் ஸத்ஸஹவாஸம் பொருத ஸாமாந்யரல்லர்; விலக்ஷணரே' என்று அறுதியிட்டுத் திறக்க, அவரும் உள்ளே புகுந்து மூவருமாகக்கூடி நிற்கும்போது, "நீயும் திருமகளும் நின்றாயால்...பூங்கோவல் இடைகழியே பற்றியினி" [முதல்திருவ 86] என்று பொய்கையாழ்வார் அருளியபடியே, இவர்களைத் தனித்தனியே பின்பற்றித் திரிந்த மனவருத்தம் தீர, ஸர்வேச்வரன் தானும் பெரியபிராட்டியாருமாக வந்து இவர்கள் மூவரையும் நடுவிற்புகுந்து நெருக்க, 'நம் மூவரைத்தவிர வேறு யார் நம்மை நெருக்குவது என்று விளக்கேற்றிப் பார்க்கவேண்டும்' என்று ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொள்ள, அவர்களிலே முதல்வரான பொய்கையாழ்வார், இவ்வுலகில் கார்யமாகவும் காரணமாகவும் இருக்கும் எல்லாப்பொருள்களும் பகவானுக்கு வசப்பட்டிருக்கிறபடியைப் பரபக்தி ரூபமாயிருக்கும் அறிவாலேகண்டு, கார்யகாரணரூபமான வஸ்து ஸமூஹத்தை ஒரு விளக்காக உருவகப்படுத்திக்கொண்டு, தம் அநுபவித்துக்குப் போக்குவீடாக "வையம்தகளி" என்று தொடங்கும் முதல் திருவந்தாதியை அருளிச்செய்தார். "வையம் தகளி" என்னும் பரபக்

பரப$_4$க்திருபாபந்நஜ்ஞாநம்முற்றி ப$_4$க$_3$வத்தத்வத்தை விஶத$_3$மாக த$_3$ர்ஶிக்கைக்கு உபகரணமான பரஜ்ஞாநமாகிற உஜ்ஜ்வலதீ$_4$பத்தை ஏற்றுகிற வழியாலே 'அன்பேதகளி' அருளிச்செய்தார். அநந்தரம் மூன்றுமாழ்வார், அவனை அநுப$_4$விக்கப்பெறில் தரித்துப் பெறுவிடில் மூச்சடங்கும்படியான பரமப$_4$க்தியுடையராய்க்கொண்டு அவன் படிகளைக் கட்டடங்கக்கண்டு மண்டி அநுப$_4$விக்கிற வழியாலே 'திருக்கண்டேன்' அருளிச்செய்தார்.

ஜ்ஞாநப$_4$க்தி ஸாக்ஷாத்காரங்கள் மூன்றும் ப்ரப$_3$ந்த$_4$த்ரயத்துக்கும் தாத்பர்யமாக ஆசார்யர்கள் அருளிச்செய்திருக்க, விருத்$_3$த$_4$மாக இங்ஙனே சொல்லலாமோ? என்னில்: அதுக்குக் குறையில்லை. அங்கு ஜ்ஞாநமென்கிறது,-பர

திக்குப் போக்குவீடான பிரபந்தத்தைக் கேட்டபடியாலே, அடுத்த படியாக பூதத்தாழ்வார், அந்தப் **பரபக்தி** தசையடைந்த ஞானம் பழுத்து, பரம்பொருளான பகவானைத் தெளிவாகக் காண்பதற்கு உறுப்பான பரஜ்ஞாநமாகிற சுடர்விளக்கை, "ஞானச்சுடர் விளக்கேற்றினேன்" என்கிறபடியே ஏற்றுகிறவராய் "அன்பே தகளி" என்று தொடங்கும் இரண்டாம் திருவந்தாதியை அருளிச்செய்தார். பரபக்தியை வெளியிடும் இதைக்கேட்டபடியாலே அதன் பக்வதசையாய், பரமபுருஷனை அநுபவித்தால் தரித்தும், அநுபவிக்கப்பெறுவிடில் உயிர்தரியாமலுமிருக்கும் படியான பரமபக்திநிலையை அடைந்தவராய், அவனுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களைப் பரிபூர்ணமாகக் கண்டு, அதிலே அழுந்தி அநுபவிக்கிறவராய் "திருக்கண்டேன்" என்று தொடங்கும் மூன்றும் திருவந்தாதியை அருளிச்செய்தார்

"முதலாழ்வார்க்கு ஜ்ஞாநம் பிறந்தபடி சொல்லிற்று; இருவராவார்க்கு, ஜ்ஞாநம் முற்றி பக்தியானபடி சொல்லிற்று மூவராவார்க்கு பக்தியுடையராய் அவனையொழியச் செல்லாதவர்களுடைய ஸாக்ஷாத்காரம் பிறந்தபடி சொல்லிற்று" என்று ஆசார்யச்ரேஷ்டரான **பெரியவாச்சான் பிள்ளை** மூன்று திருவந்தாதிகளுக்கும் முறையே **ஞானம், பக்தி, ஸாக்ஷாத்காரம்** என்னும் மூன்றையும் தாத்பர்யமாக அருளிச்செய்திருக்க, அதற்கு விருத்தமாக, **பரபக்தி, பரஜ்ஞாநம், பரமபக்தி** என்னும் மூன்றையும் அவற்றுக்கு முறையே தாத்பர்யமாக அருளிச்செய்யலாமோ? என்னில்:

ப$_4$க்திரூபாபந்நஜ்ஞாநத்தை. ப$_4$க்தியென்கிறது பரஜ்ஞாந தஶாபந்நமான ப்ரேமத்தை, ஸாக்ஷாத்காரமென்கிறது,-பரஜ்ஞாந விபாகரூபையான பரமப$_4$க்தியை. கர்மாநுஷ்ட$_2$ாநாநந்தமாக ஜ்ஞாநம் உதித்து அது த்$_4$யாநோபாஸநாத்$_3$யவஸ்தாபந்நமாய்முற்றி அநந்தரம் "द्रष्टव्यः" (த்$_3$ரஷ்டவ்ய:) என்னும்படி ஸாக்ஷாத்காரரூபமாய், அநந்தரம் விஷயவைலக்ஷண்யத்தை அவகா$_3$ஹித்து ப$_4$க்திரூபாபந்நமாய், பின்னை பரப$_4$க்த்யாதி$_3$களாகப் பரிபக்வமாம். ப்ராமாணிகர் படியில் இவர்களுக்கு முதலிலே அந்வயமில்லையிறே. "கர்மஜ்ஞாநாநுக்$_3$ருஹீதையான ப$_4$க்தியினுடைய ஸ்தாநத்திலே ப$_4$க$_3$வத்ப்ரஸாத$_3$ம்நின்று அநந்தரம் விளைந்த பரப$_4$க்தியாய்த்து இவரது" என்றிறே ப்ரத$_2$மாசார்யரான ஆழ்வாருக்கு ஆசார்யர்கள் அருளிச்செய்வது; அது அல்லாத

இவையிரண்டுக்கும் விரோதமில்லை. பெரியவாச்சான்பிள்ளை முதல் திருவந்தாதிக்குத் தாத்பரியமாகச் 'சொன்ன ஞானமாவது,— "சேமுஷீ ப$_4$க்திரூபா" [ஸ்ரீபாஷ்யமங்களம்] [பக்திரூபமான ஞானம்] என்கிறபடியே பக்திநிலையையடைந்த ஞானமேயாகும். இரண்டாம் திருவந்தாதிக்குப் பொருளாகச்சொன்ன பக்தியாவது பரஜ்ஞானமென்னும் முற்றின நிலையையடைந்த பக்தியேயாகும். மூன்றும் திருவந்தாதிக்குப் பொருளாகச் சொன்ன ஸாக்ஷாத்காரமாவது,- பரஜ்ஞானத்தின் பழுத்தநிலையாயிருக்கும் பரமபக்தியேயாகும். ப்ரமாணங்களைக்கொண்டு உபாயாநுஷ்டானங்களிலே 'இழியுமவர்களுக்கு முதலில் கர்மயோகத்தை அநுஷ்டிக்கும் நிலையாய் அதற்குமேல் ஜ்ஞாநம் உண்டாகி, அது, தியானம், உபாஸனம் எனப்படும் நிலைகளையுடையதாகி முற்றி அதற்குப்பின் "காணத்தக்கவன்" [ப்ருஹ 4-4-5] என்கிற சுருதியிலே சொன்ன ரீதியில் நேரிலே காண்பது போலிருக்கும் ஸாக்ஷாத்காரம் ஆகி, அதற்குப் பின்னர் பக்தி என்னும் நிலையை அடைந்து பின்னர் பரபக்தி, பரஜ்ஞாநம் பரமபக்தி என்னும் நிலைகளாகப்பழுக்கும். இப்படி ப்ரமாணத்தைக்கொண்டு உபாயாநுஷ்டானத்திலே இறங்கியவர்களல்லரே இவர்கள். திருவாய்மொழி 'வீடுமின் முற்றவும் [1-2] ப்ரவேசத்தில், "கர்மஜ்ஞாநங்களை அங்கமாகக்கொண்டு உண்டாகும் ஸாதன பக்தியினுடைய ஸ்தானத்தில் பரமபுருஷனுடைய அருள் நின்று, அது காரணமாக உண்டான பரபக்தியாயிற்று இவருடையது" என்னும் பொருளுள்ள ஸ்ரீஸூக்திகளை நம்பிள்ளை யீட்டில் முதலாசார்யரான நம்மாழ்வாரைக்குறித்து அருளிச்செய்திருக்

ஆழ்வார்களுக்கும் ஒக்குமிறே; அல்லாதபோது ஆழ்வார்கள் எல்லாரும் ஏகப்ரக்ருதிகள் என்னப்போகாதே; ஆகையால் விரோத$_4$மில்லை.

பரப$_4$க்த்யாதிகள் மூன்றும் ஒரொருவர்க்கே குறைவற உண்டாயிருக்கச்செய்தேயும் ஒரொருத்தர்க்கு ஒவ்வொன்றிலே ஊற்றமாயிருக்கும். ப$_4$க$_3$வத்ஸ்வரூபாதி$_3$கள் எல்லாம் எல்லார்க்கும் அநுப$_4$ாவ்யமாகாநிற்கச்செய்தே ஒரொன்றில் ஒவ்வொருத்தர்க்கு ஊற்றம் சொல்லுகிறப்போலே அநுப$_4$வாபி$_4$நிவேஶருடையான பரப$_4$க்த்யாத்$_3$யவஸ்தை$_2$களிலும் தனித்தனியே ஊற்றம் சொல்லக் குறையில்லை. கர்த்ரு பே$_4$த$_3$ம் உண்டாயிருந்ததேயாகிலும், ஒருவனுக்கே க்ரமத்தாலே பிறக்கக்கடவ பரப$_4$க்த்யாத்$_3$யவஸ்த$_2$ாத்ரயமும் தளமாக ப்ரப$_3$ந்த$_4$த்ரயமும் அவதரிக்கையாலே அர்த்த$_2$க்ரமம்

கிறார்கள் ஆசார்யர்கள். இது மற்ற ஆழ்வார்களுக்கும் பொருந்தும். இல்லாவிடில் ஆழ்வார்களனைவரும் அநந்யோபாயத்வவிஷயத்தில் ஒரே தன்மையை உடையவர்கள் என்னும் நம் கொள்கை ஒட்டாது. ஆகையால் ஜ்ஞாநபக்திஸாக்ஷாத்கார பதங்களை முற்கூறியவாறு பரபக்தி பரபஜ்ஞாந பரமபக்தி பரமாகவே கொள்ளவேண்டுமாகையாலே விரோதமில்லை.

இனி, "பரபக்தி பரஜ்ஞாந பரமப$_4$க்திகள் மூன்றும் ஒவ்வொரு ஆழ்வாருக்கும் நிறைந்திருக்கவேண்டும்; அப்படியிருக்க ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று உண்டாயிற்று என்று சொல்லலாமோ?" எனில்: ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்றிலே ஊற்றமாகையாலே சொல்லலாம். பகவானுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகள் எல்லாம் எல்லாருக்கும் அநுபவிக்கத்தக்கதாயிருந்த போதிலும், "சிலர் ஸ்வரூபத்திலே ஈடுபடுவர்; சிலர் ரூபத்திலே ஈடுபடுவர்' என்பது முதலான வ்யவஹாரங்கள் ஊற்றத்தைப்பற்ற உண்டாவதுபோலே, அநுபவத்தின் பலவிதமான அபிமானரூபமாயிருக்கும் பரபக்திமுதலான நிலைகளிலும் ஒவ்வொருவருக்கு ஊற்றம் சொல்லலாம். மூன்று திருவந்தாதிகளும் தனித்தனியே மூவராலும் அருளிச்செய்யப்பட்டிருந்தபோதிலும், ஒரு சேதநனுக்குக் கிரமமாகப் பிறக்கக்கூடிய பரபக்தி முதலான மூன்று நிலைகளையும் ஆதாரமாகக்கொண்டு மூன்று ப்ரபந்தமும் அவதரிக்கையாலே அர்த்த

பார்த்தால் ஏகப்ரப$_3$ந்தமாய்த் தலைக்கட்டக்கடவது. பூர்வோத்தரமீமாம்ஸைகளுக்குக் கர்த்ருபே$_4$த$_3$ம் உண்டாயிருக்கச்செய்தே வேத$_3$ாக்$_2$யைகப்ரப$_3$ந்த$_4$ வ்யாக்யாநரூபமாகையாலே ப்ரப$_3$ந்தைக்$_4$யம் கொள்ளுகிறப்போல் இங்கும் ப்ரப$_3$ந்தைக்$_4$யம் கொள்ளத்தட்டில்லை.

பொய்கையாழ்வார் அருளிச்செய்த

முதல் திருவந்தாதி

1. வையந் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காக—செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே யென்று.

பதவுரை:—**வையம் தகளியா**—*பூமி அகலாகவும்,* **வார் கடலே நெய்யாக**—*அதைச் சூழ்ந்திருக்கும் கடலே நெய்யாகவும்,* **வெய்ய கதிரோன் விளக்காக**—*உஷ்ணமான கிரணங்களையுடைய ஸூர்யனென்னுமவன் விளக்காகவும்,* **செய்ய சுடராழியான் அடிக்கே**—*சிவந்த ஒளியையுடைய சக்ராயுதத்தையுடைய எம்பெருமானுடைய திருவடிகளிலே,* **'இடர் ஆழி நீங்குக' என்று**—*'(இவ்வுலகிலுள்ள) இடர்க்கடல் நீங்க வேணும்' என்று,* **சொல் மாலை**-*சொற்களாலான பாமாலையை* **சூட்டினேன்**—*சாத்தினேன்.*

க்ரமத்தைப் பார்த்தால் மூன்றும் ஒரே சாஸ்திரமாக முடிகிறது. பூர்வ மீமாம்ஸையை ஜைமினியும், உத்தரமீமாம்ஸையான ப்ரஹ்மஸூத்ரத்தை வியாஸரும் அருளிச்செய்திருந்தபோதிலும், முதலது வேதத்தின் பூர்வ பாகத்துக்கு வியாக்கியானமாகவும், பிந்தியது உத்தரபாகமான உபநிஷத்துக்களுக்கு வியாக்கியானமாகவும் இருக்கிறபடியாலே இரண்டும் ஒரே சாஸ்திரமே என்று ஸ்ரீபாஷ்யாதிகளில் நிர்ணயித்திருப்பது போலவும், பாணினி, வரருசி, பதஞ்ஜலி என்னும் மூன்று ரிஷிகளும் கூடி ஸூத்ர, வ்ருத்தி பாஷ்யரூபமான மூன்று நூல்களைச் செய்திருந்தபோதிலும், அம்மூன்றையும் ஒரே சாஸ்திரமாக வையாகரணர்கள் கொள்வது போலவும் இம்மூன்று திருவந்தாதிகளும் ஒரே சாஸ்திரமாகக்கடவது.

அவதாரிகை:—விசித்ரகார்யமான ஜகத்துக்குக் காரணமாம்போது விசித்ரஜ்ஞாநசக்தியுக்தனாய், ஸங்கசக்ராதிதிவ்யாயுததரனான ஸர்வேஸ்வரனே காரணமாகவேணும் என்னும் அநுமானத்தாலே ஜகத்காரணவஸ்துவை நிர்ணயியாநின்றுகொண்டு ஸர்வசேஷியான ஸர்வேஸ்வரன் திருவடிகளிலே ஸ்வரூபாநுரூபமாக வாசிககைங்கர்யம் பண்ணப்பெற்றேன் என்று க்ருதார்த்தராகிறார்.

முதற்பாட்டு அவதாரிகை:— "விசித்திரமான காரியங்களை உடைய உலகிற்குக் ஒரு காரணமிருக்கவேண்டும்; அக்காரணமும் ஆச்சரியமான ஜ்ஞாநசக்திகளோடு கூடியவனாய், ப்ரதிபக்ஷநிரஸநம் செய்யவல்ல சங்கம் சக்கரம் முதலான திவ்யாயுதங்களை தரித்தவனாகவே இருக்க வேண்டும்" என்னும் அநுமானத்தை உள்ளடக்கி அருளிச்செய்வதன் மூலம் ஜகத்காரணவஸ்துவை நிர்ணயித்துக்கொண்டு, ஸர்வஸ்வாமியான ஸர்வேச்வரன் திருவடிகளிலே, தம் ஸ்வரூபத்துக்குத் தக்கபடி வாயாலே அடிமை செய்யப்பெற்றேன் என்று தாம் பயன்பெற்றமையை அருளிச் செய்கிறார் "வையம் தகளி" என்னும் முதற்பாசுரத்தாலே.

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான அவதாரிகையில்

ஓர் பிழைதிருத்தம்

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான அவதாரிகைத் தொடக்கத்தில் "இவர்களவதரித்தது ஒரோ தேசங்களிலேயாகிலும் **காலப் பழமையாலே** இன்னவிடமென்று நிச்சயிக்கப்போகாது" என்று பாடம் காண்கிறது. இது "கச்சிநகர் வந்துதித்த" "கடல்மல்லைப் பூதத்தார்" என்னும் திருவந்தாதித் தனியன்களுக்கும் உபதேச ரத்தினமாலைப் பாசுரங்களுக்கும் ஒட்டாது. ஆகையால் "காலப் பழமையாலே" என்றதற்கு பதிலாக "ஞானப்பெருமையாலே" என்று ஸ்ரீகாஞ்சீ ஸ்வாமி உணர்த்தும் பாடம் யுக்தமானதே. "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ வையமோ நும் நிலையிடம்" [திருவிருத்தம் 75] என்கிறபடியே எந்த விபூதியென்று நிச்சயிக்க முடியாது என்றபடி. "மூவரையும் நித்யஸூரிகளோபாதியாக நினைத்திருப்பர்கள்" என்ற முந்திய வாக்கியத்திற்கும் மிகப் பொருந்தும்.

உரை:— **"काठिन्यवान् यो बिभर्ति"** **(காடி$_2$ந்யவாந் யோ பி$_3$ப$_4$ர்த்தி)** என்கிறபடியே ப$_4$க$_3$வத்ஸங்கல்பாயத்தமான காடி$_2$ந்யத்தை உடைத்தான ப்ருதி$_2$வியானது, மேல் நெய்யும் திரியுமாக ரூபிக்கப்படுகிற வஸ்துக்களுக்கு ஆத$_4$ார மான தகளியாகவும், அந்த ப்ருதி$_2$வியைச் சுற்றும் சூழ்ந்து, த்$_3$ரவஸ்வப$_4$ாவமாய், **"तेन च कृतसीमानो जलाशयाः"** **(தேந ச க்ருதஸீமாநோ ஜலாஶயா:)** என்கிறபடியே ப$_4$க$_3$வத$_3$ாஜ் ஞையாலே கரையை அதிக்ரமியாமல் அதுக்குள்ளே அடங்கிக்கிடக்கிற கடலின் நீரான அம்ப$_4$மானது, மேல் ஏற்றப்போகிற விளக்கை உத்தரோத்தரம் ஒளிவிட்டுக் கிளரப்பண்ணும் நெய்யாகவும், கிரணமுகே$_2$ந க்$_3$ரஸிக்கப்

வ்யா:—(வையம் தகளியா) **"காடி$_2$ந்யவாந் யோ பி$_3$ப$_4$ர்த்தி ஜக$_3$தே$_3$த-த$_3$சேஷத: சப்$_3$த$_3$ாதி$_2$ ஸம்ச்ரயோ வ்யாபீ தஸ்மை பூ$_4$ம்யாத்மநே நம:"** [வி-பு 1-14-28] [இவ்வுலகம் முழுவதையும் தாங்குவதாய், கடினத் தன்மை என்னும் குணத்தையுடையதாய், எங்கும் வியாபித்திருப்பதாய், சப்தம் முதலான ஐந்துகுணங்களையுமுடையதாயிருக்கும் பூமிஸ்வரூப மாயிருக்கும் பரம்பொருளுக்கு நமஸ்காரம்] என்கிறபடியே பூமியானது கடினத்தன்மையுடையதாகையாலே, மேலே நெய்யும் எரியும் திரியுமாக உருவகப்படுத்தப்படும் பொருள்களுக்கு ஆதாரமான அகலாக உருவகப்படுத்தப்படுகிறது. இவ்வுலகமானது அகலைப்போலே அவயவங்களை உடையதாய், ஒருவனால் செய்யப்படுவதெனத்தோன்றுகை யாலே பரமபுருஷனின் உண்மையைக் காட்டிக்கொடுக்கும் விளக்குக்கு அகலாக ரூபிக்கப்படுகிறது. (வார்கடலே நெய்யாக) அந்த பூமியைச் சுற்றிலும் சூழ்ந்து, திரவத்தன்மையையுடையதாய், "கடல்கள் அப்பரம புருஷனாலே வரம்புகட்டப்பட்டிருக்கின்றன" [ ] என்கிற படியே பரமபுருஷனின் ஆணையாலே கரையைமீறாமல் அதற்குள்ளே அடங்கியிருக்கிறதாகையாலே கடல்நீரானது மேலே ஏற்றப்போகிற விளக்கை மேன்மேலும் ஒளிவிடச்செய்யும் நெய்யாக ரூபிக்கப்படுகிறது. வார்கடல்-(பூமியைச்) சூழ்ந்த கடல்; நிறைந்த கடல் என்றும் கொள்ள லாம். நதிகளிலிருந்து ஜலம் விழுவதாலே இது நிறைவதில்லை; நதிகளி லிருந்து ஜலம் விழாவிட்டாலும் குறைவதில்லை; பூமியைக்காட்டிலும் உயர்ந்திருந்தபோதிலும் பூமியை அழிப்பதில்லை. இதற்கெல்லாம் காரணமாக ஒருவனிருக்கவேணும்; நெய் விளக்கொளியை வளரச் செய்வதுபோலே, கடல்நீர் சூரியகிரணங்களால் இழுக்கப்பட்டு அதை வளரச்செய்கின்றது. இக்காரணங்களாலே பரமபுருஷனைக்காட்டிக்

பட்ட ஜலத்தாலே அபி$_4$வ்ருத்தமாய், ப்ரதாபோத்தரமான கிரணங்களையுடையனாய், **"भीषोदेति सूर्यः"** (பீ$_4$ஷோதே$_3$தி ஸூர்ய:) என்கிறபடியே ஈஶ்வராஜ்ஞைக்கு நடுங்கி, முப்பது வட்டம் உதிப்பதும் அஸ்தமிப்பதுமாய்த் திரியக்கடவ ஆதித்யன் அர்த்த ப்ரகாஶகமான விளக்காகவும், இருளன்ன மாமேனிக்கு விளக்கேற்றினாற்போலே பகைத்தொடையாகச் சிவந்த ஒளியையுடைய திருவாழியாழ்வானை நிரூபகமாக உடைய ஸர்வேஶ்வரனுடைய திருவடிகளிலே, நித்யகைங்கர்யம் பண்ணப்பெறாத என்னுடைய து:க்க$_2$ ஸாக$_3$ரமானது விட்டு நீங்கும்படியாக, தத்கு$_3$ண சேஷ்டி

கொடுக்கும் விளக்குக்கு இது நெய்யாக ரூபிக்கப்படுகிறது. (வெய்ய கதிரோன் விளக்காக) வெம்மைகொண்ட கிரணங்களையுடையவனாய், தேஜோத்ரவ்யமாகையாலும், "பீ$_4$ஷோதே$_3$தி ஸூர்ய:" [தை-ஆந 8-1] [பரமபுருஷனிடம் பயத்தாலே சூரியன் உதிக்கிறான்.] என்கிறபடியே ஸர்வேச்வரனுடைய ஆஜ்ஞைக்கு நடுங்கி முப்பதுநாழிகை உதிப்பதும் முப்பதுநாழிகை அஸ்தமிப்பதுமாகத் திரியுமவனாகையாலும் சூரியன் பரமபுருஷனைக்காட்டிக்கொடுக்கும் விளக்காக (எரியும் திரியாக) ரூபிக்கப்படுகிறது. (வையம் தகளியா) பெரிய வெள்ளத்திலே ஒரு கழல்மரம் மிதப்பது போலே மிதக்கும் இப்பூமி ஆடாமல் அசையாமல் மிதக்கிறதென்றால் இதற்கு ஓர் காரணம் வேண்டாமோ? (வார்கடலே நெய்யாக) பூமியைத் தன்னுள்ளே அமிழ்த்தாமல் வரம்போடிருக்கிறதைப் பார்த்தால் இதற்குக் காரணம் ஒருவன் வேண்டாமோ? (வெய்ய கதிரோன் விளக்காக) முப்பதுநாழிகையில் ஒன்று குறைவதோ, ஏறுவதோ செய்யாமல் உதித்தும், அஸ்தமித்தும்போகிறான் சூரியன் என்றால், இதற்குக் காரணம் ஒருவன் வேண்டாமோ? இவ்வளவையும் செய்பவன் எல்லாமறிந்தவனாகவும் எல்லாம் வல்லவனாகவுமிருக்கவேண்டாமோ?

இப்படி எல்லாம் அவனுடையது; அவன் எல்லாவற்றுக்கும் ஸ்வாமி என்று அறிந்தால் செய்யவேண்டிய காரியத்தைச் சொல்லுகிறது மேலே,- (செய்ய சுடராழியான் அடிக்கே) "இருளன்ன மாமேனி எம்மிறையார்" [பெரியதிருவ 26] என்கிறபடியே கருநிறமுடைய திருமேனிக்கு வர்ணச்சேர்த்தியழகையளிக்கும்படி சிவந்த ஒளியையுடைய திருச்சக்கரத்தாழ்வானையிட்டு நிரூபிக்கப்படும் ஸர்வேச்வரனுடைய திருவடிகளிலே. (இடராழி நீங்குக என்று) எப்போதும் கைங்கரியம் செய்யப்பெறாத என்னுடைய துன்பக்கடலானது என்னைவிட்டு நீங்கவேணும் என்று. (சொல்

தங்களை உள்ளீடாக வைத்துத் தொடுத்த நிரதிஶயபோ₄க்₃ய மான ஶப்₃த₃ஸந்த₃ர்ப்ப₄ங்களை அவற்றுக்கு அலங்காரமாம் படி ஸாத₃ரமாக ஸமர்ப்பித்தேன்.

இவ்விஷயத்தை அறியப்பெறாமல், அஸத்கல்பராய் நோவுபடுகிற ஸம்ஸாரிகளுக்குப் பரவஸ்து வாஸ்தவப்ர காஶகமான இப்ரபந்தாப்யாஸமுகத்தாலே அநந்தக்லேஶ பாஜநமான ஸம்ஸாரஸாகரம் வற்றவேணும் என்று 'சொன் மாலை சூட்டினேன்' என்றுமாம்.

இப்படி விசித்ரப்ரபஞ்ச நிர்மாணநுகுணமான ஜ்ஞாந ஶக்த்யாதிகுணவைசித்ர்யாதியுக்தனை ஶங்கசக்ராத்யாயுத தரனை ஸர்வேச்வரனே ஜகத்காரணம் என்னும் அநுமானத் தாலே காரணவஸ்துவை நிர்ணயித்தாராய்த்து. "**शास्त्रयोनि-**

மாலை சூட்டினேன்) அவனுடைய குணங்களையும் செயல்களையும் விஷய மாகவைத்து மிகவினிய மணம்மாறாத வாடாத மாலைபோன்ற சொல் தொடைகளை, அத்திருவடிகளுக்கு அலங்காரமாம்படி அன்போடு சாத்தி னேன். (இடராழி நீங்குகவே என்று சூட்டினேன்) பகவத்விஷயத்தை அறியாமல் ஸ்வரூபமழிந்து வருந்துகிற ஸம்ஸாரிசேதனர்க்குப் பரம் பொருளின் உண்மையை உணர்த்தும் இந்நூலைக் கற்பதன்மூலம் எல்லை யிலா இடர்களுக்கோர் இருப்பிடமான இப்பவக்கடல் வற்றவேண்டு மென்று சொன்மாலையைச் சூட்டினேன் என்றும் கொள்ளலாம். 'அடிக்கே' என்றதால் தம்முடைய சேஷத்வத்தைக் காட்டுகிறார். (சூட்டினேன் சொல்மாலை) "யதோ வாசோ நிவர்த்தந்தே" [தை-ஆ 9-1] [எதனிட மிருந்து வாக்குகள் திரும்புகின்றனவோ] என்னும் விஷயத்தைப் பரி பூர்ணமாகப்பேசி, அதற்குமுன்பில்லாத அழகையும் உண்டாக்கினேன்.

ஆக, இப்பாட்டிலே விசித்திரமான உலகை உண்டாக்கவல்ல அறிவு சக்தி முதலான குணப்பெருமைகளை உடையவனாய், விரோதிகளை அழிக்கவல்ல சங்கசக்கரங்களை தரித்தவனான ஸர்வேச்வரனே ஜகத் காரணமாயிருக்கவேணும் என்று, அநுமானத்தாலே காரணப்பொருளை நிர்ணயித்தாராயிற்று. "சாஸ்திரத்தையே (தன்னையறியக்) காரணமாகக் கொண்டதாகையாலே (ப்ரஹ்மம் அநுமானத்தால் அறியப்படாதது)" [ப்ரஹ்மஸூத்ரம் 1-1-3] என்று அநுமானத்தால் காரணவஸ்துவை

त्वात्'' என்று ஆநுமாநிகரை ஸூத்ரகாரர் தூஷித்திருக்கச்செய்தே இவர் அநுமாநத்தாலே காரணவஸ்துவை நிர்ணயம் பண்ணுவானேன்? என்னில்: "आर्षं धर्मोपदेशं च वेदशास्त्राविरोधिना। यस्तर्केणानुसन्धत्ते स धर्मं वेद नेतरः॥'' (ஆர்ஷம் த$_4$ர்மோபதே$_3$ஶஞ்ச வேத$_3$ஶாஸ்த்ராவிரோதி$_4$நா। யஸ்தர்க்கேணாநுஸந்த$_4$த்தே ஸ த$_4$ர்மம் வேத$_3$ நேதர:॥) என்று வேதஶாஸ்த்ரங்களோடு விருத்தமான தர்க்கத்தை அழித்து, அவிருத்தமான தர்க்கத்தை ஸ்வீகரிக்கையாலே, இங்கும் அப்படி விரோதப்ரஸங்கம் சொல்ல இடமில்லை. '' न्यायानुगृहीतस्य वाक्यस्यार्थनिश्चायकत्वात् '' (ந்யாயாநுக்$_3$ருஹீதஸ்ய வாக்யஸ்யார்த்த$_2$ நிஶ்சாயகத்வாத்) என்றிறே ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்தது. ப்ருதி$_2$வ்யாதி$_3$களாலே லீலாவிபூ$_4$தியை உபலக்ஷிக்கிறது. 'சுடராழி' என்று நித்ய

ஸாதிப்பவர்களை ஸூத்ரகாரர் தூஷித்திருக்கும்போது, இவ்வாழ்வார் அநுமானத்தாலே காரணப்பொருளை நிர்ணயிக்கலாமோ? எனில்:

"ஆர்ஷம் த$_4$ர்மோபதே$_3$ஶஞ்ச வேத$_3$ஶாஸ்த்ராऽவிரோதி$_4$நா।
யஸ்தர்க்கேணாநுஸந்த$_4$த்தே ஸ த$_4$ர்மம் வேத$_3$ நேதர:॥''
[மநு 12-106]

[ருஷிகளால் ஸாக்ஷாத்கரிக்கப்பட்ட வேதங்களையும், தர்மங்களை உபதேசிக்கும் ஸ்ம்ருதி முதலியவற்றையும் (அந்த) வேத சாஸ்திரங்களுக்கு விரோதமில்லாத தர்க்கத்தினால் எவனொருவன் விசாரிக்கிறானோ அவனே தர்மத்தை அறிகிறான்; மற்றவன் அறியமாட்டான்.] என்கிறபடியே வேதசாஸ்திரங்களுக்கு விரோதமான தர்க்கத்தை உபயோகிக்கக்கூடாதென்றும், அதற்கு விரோதமல்லாத தர்க்கத்தை உபயோகிக்கலாம் என்றும் மநு முதலான மஹரிஷிகள் உரைத்திருக்கையாலே ஸூத்ரகாரருக்கும் அதுவே கருத்தாகவேண்டுமாகையால் வேதவிரோதமற்ற அநுமானத்தை இவ்வாழ்வார் இங்கு உபயோகித்திருப்பதில் ப்ரஹ்ம ஸூத்ர விரோதமில்லை. "ந்யாயாநுக்$_3$ருஹீதஸ்ய வாக்யஸ்யார்த்த$_2$நிச்சாயகத்வாத்'' [ஸ்ரீபாஷ்யாரம்பம்] [ந்யாயத்தினால் அநுக்ரஹிக்கப்பட்ட வாக்யத்துக்கே அர்த்தத்தை நிச்சயிக்கும் தன்மை இருப்பதால்.] என்றல்லவோ ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்ரீபாஷ்யத்தொடக்கத்தில் அருளிச்செய்தது. 'வையம்' 'வார்கடல்' 'கதிரோன்' என்று லீலாவிபூதி முழுவதையும் உபலக்ஷண முறையாலே காட்டுகிறது. 'சுடராழி' என்று நித்யவிபூதி முழுவதையும்

விபூதிக்கு உபலக்ஷணம். 'அடிக்கே' என்று திவ்யமங்கள விக்ரஹத்துக்கு உபலக்ஷணம். இப்படி ஸ்வபக்ஷத்தை ஶிக்ஷிக்கவே. 'ஶூந்யமே தத்வம்' என்றும், 'நிர்விஶேஷ வஸ்துவே தத்வம்' என்றும், 'விஶேஷணாந்தர விஶிஷ்டமே தத்வம்' என்றும் சொல்லப்படுகிற பரபக்ஷங்கள் அர்த்தாத் ப்ரதிக்ஷிப்தங்கள்.

2. என்று கடல்கடைந்த தெவ்வுலகம் நீரேற்றது
ஒன்று மதனை யுணரேன்நான்—அன்ற
டைத்துடைத்துக் கண்படுத்த வாழி இதுநீ
படைத்திடந் துண்டுமிழ்ந்த பார்.

பதவுரை:— **கடல்கடைந்தது** — *பாற்கடலைக்கடைந்தது*, **என்று**—*எந்த நாள்? (இன்றன்றோ என்றபடி)*; **நீர் ஏற்றது**—*(தான) ஜலத்தை ஏற்றுக்கொண்டது*, **எவ்வுலகம்**—*எந்த உலகத்திற்காக? (இவ்வுலகத்திற்காகவேயன்றோ என்றபடி)*; **அதனை**-*அவற்றை*, **ஒன்றும்**—*சிறிதும்*, **நான் உணரேன்**—*நான் அறியமாட்டேன்*; **அது**—*அந்தக்கடலானது*, **அன்று**—*ஸ்ரீராமாவதாரகாலத்தில்*, **அடைத்து**-*அணைகட்டி அடைத்து*, **உடைத்து**—*(ராவணஸம்ஹாரத்திற்குப் பிறகு) உடைத்து*, **கண்படுத்த**—*(எப்போதும்) கண்வளர்ந்தருளுகிற*, **ஆழி**—*ஸமுத்ரம்*; **இது**-*(நீரேற்றுப்பெற்ற)இவ்வுலகம்*, **நீ படைத்து**-*நீ ஸ்ருஷ்டித்து*, **இடந்து**- *(வராஹரூபியாய்) குத்தியெடுத்து*, **உண்டு**— *(ப்ரளய காலத்தில்) புசித்து*, **உமிழ்ந்த**—*பின்பு வெளியிட்ட*, **பார்**—*பூமி*.

உபலக்ஷணமுறையாலே உணர்த்துகிறது. 'அடிக்கே' என்கையாலே திவ்யமங்களவிக்ரஹத்தைக் காட்டுகிறது. இப்படித் தம்முடைய மதத்தைக் காட்டுமவராய் விக்ரஹத்தையும், விபூதிகளையும் சொல்லுகையாலே "எல்லாம் ஶூந்யம்" என்கிற பௌத்தர்களின் மதத்தையும், "நிர்விசேஷசிந்மாத்ரம் ப்₃ரஹ்மைவ ஸத்யம் அந்யத் ஸர்வம் மித்₂யா" *[ஸ்ரீபாஷ்யம் மஹாபூர்வபக்ஷம்] [விசேஷணங்களற்ற ஞானமாத்திரமாயிருக்கும் ப்ரஹ்மமே உண்மை. மற்றவையெல்லாம் பொய்.]* என்கிற *அத்வைதிமதத்தையும்* 'சுடராழியான்' என்று ஸுதர்சனவிசிஷ்டன் *என்கையாலே*, ஶூலம் *முதலானவற்றோடு* கூடிய *மற்ற* தெய்வங்களைப் பரம்பொருளாகச் சொல்லும் சைவர் *முதலானோரின் மதங்களையும் அர்த்தாத் தள்ளினாராயிற்று.*

அவதாரிகை:— இப்படி அநுமாநப்ரமாணங்கொண்டு வருத்தத்துடனே அவனுடைய பரத்வம் அறுதியிட வேணுமோ? அவன் விபூதிவிஷயமாகப் பண்ணியருளின உமிழ்ந்தபர்யந்த திவ்யசேஷ்டிதங்கள் ஓரொன்றே அவனுடைய பரத்வத்தை அறுதியிட்டுத் தாராதோ? என்கிறார்.

உரை:— தன்னை அர்த்தித்த தேவர்கள் அபேக்ஷிதம் செய்கைக்காக "அண்ணல் செய்தலைகடல் கடைந்து" என்னும்படி தன் ஸர்வேஶ்வரத்வம் தோற்றக் கடல் கடைந்தருளிற்று எத்தனை நாளுண்டு என்றும். ஈச்வராபிமானிகளான ருத்ராதிகளும் திருவடிவிளக்குவார், விளக்கின தீர்த்தத்தை ஶிரஸா வஹித்துப் பரிசுத்தராம்படி இந்த்ரன் ப்ரார்த்தனையை ஸார்த்தமாக்கும்படி அர்த்தியாய்க்கொண்டு

இரண்டாம்பாட்டு அவதாரிகை:— அநுமான ப்ரமாணத்தைக்கொண்டு சிரமப்பட்டு அவன் ஜகத்காரணனான பரம்பொருள் என்று நிச்சயிக்க வேண்டுமோ? இவ்வுலகத்துக்காகக் கடல்கடைந்ததும், நீரேற்றளந்ததும், கடலையடைத்துடைத்துக் கடலிற் கண்வளர்ந்ததும், உலகைப் படைத்திடந்து உண்டு உமிழ்ந்ததும் அவனே பரம்பொருள் என்பதைக் காட்டித்தாராதோ என்கிறார் இரண்டாம் பாசுரத்திலே.

வ்யா:—(என்று கடல் கடைந்தது) தன்னை வேண்டிக்கொண்ட தேவர்களுடைய விருப்பத்தை நிறைவேற்ற "அண்ணல் செய்தலைகடல் கடைந்து" [பெரியதிரு 6-1-2] என்கிறபடியே தான் ஸர்வேச்வரன் என்பது தோற்றத் திருப்பாற்கடலைக் கடைந்தருளியது என்றைக்கு? இன்றுபோலேயன்றோ எனக்குக் காட்சியளிக்கிறது; கடைந்தபோதுண்டான அலையும் நுரையும்கூட மாறாமலன்றோ இப்போதும் காட்சியளிக்கிறது என்று கருத்து. 'என்று' என்றது இன்று போலேயிருக்கும் ஞானத்தெளிவைக் காட்டுகிறது. (கடைந்தது) கடையப் புகுந்து முடியாமல்நின்ற தேவர்களை ஸர்வேச்வரராகக் கொள்வதோ? பல உருக்கொண்டு கடைந்த இவனை ஸர்வேச்வரனாகக் கொள்வதோ? (எவ்வுலகம் நீரேற்றது) 'ஈச்வரன்' என்று தம்மை அபிமானித்துத் திரியும் உருத்திரனும், பிரமனும் ஒருவன் திருவடியை விளக்குவாராய், ஒருவன் அந்த ஸ்ரீபாததீர்த்தத்தைத் தலையிலே தரிப்பானாய்ப் பரிசுத்தராம்படி இந்திரன் வேண்டுகோள் ஸபலமாம்படி யாசகனாகி மஹாபலியிடம்

மஹாபலிபக்கலிலே நீரேற்றளந்துகொண்டது எந்தலோகம் என்றும், அவ்வோ செயல்களிலே குமிழ்நீருண்ணக்கடவதான அந்த திவ்யசேஷ்டிதத்தை ஏகதேசமும் யான் அநுஸந்திக்கமாட்டுகிறிலேன்; ராவணன் திருவினைப் பிரித்தவன்று, "सीतामुखकमलसमुल्लासहेतोश्च सेतोः" **(ஸீதாமுக$_2$கமல ஸமுல்லாஸஹேதோஶ்ச ஸேதோ:)** என்கிறபடியே தன்முகோல்லாஸார்த்தமாக தத்ஸஜாதீயமான லவணஸமுத்ரத்தை மலைகளாலே அடைத்து, அங்குள்ளவர்கள் இங்கு வந்து நலியாதபடி தநுஷ்கோடியாலே உடைத்து, எழுப்

நீரேற்று அளந்துகொண்டது எந்த உலகம்? இப்போது நான் கண்ணெதிரே காணும் இவ்வுலகமன்றோ? அவனடிச்சுவடுகூடவன்றோ எனக்குத் தெரிகிறது இவ்வாமனன் மண்ணில். இன்று இது மஹாபலியால் நோவுபடாமலிருப்பதே இவனே ஸர்வேச்வரனென்று காட்டித்தருமே. (ஒன்றுமதனை உணரேன் நான்) ஒவ்வொன்றே நெஞ்சையுருக்குமதான அந்தச் செயல்களை அந்தக் காலங்களிலே நான் அறியப்பெறாதிருந்தேனே! நித்யஞன நான் அன்று எங்கு போயிருந்தேன்? எந்த விஷயத்தைப்பற்றி இதை மறந்திருந்தேன்? அன்றிக்கே, இச்செயல்களெல்லாம் கிடக்க, அவற்றை மறந்து கார்யத்திலிருந்து ஜகத்காரணத்தை அநுமானம் பண்ணினேனே முதற்பாட்டிலே என்கிறாராகவுமாம். அன்றிக்கே, இவ்வதிமாநுஷசேஷ்டிதங்களை அநுஸந்தித்தவுடன் "எத்திறம்" [திருவாய் 1-3-1] என்று நம்மாழ்வாரைப்போலே மயங்குகிறாராகவுமாம்.

(அன்று...பார்) இக்கடலும், உலகமும் உன்னிடம் பட்டபாடு ஒன்றா இரண்டா? பருத்தி ஆடையாவதற்குமுன் படும் எல்லாப்பாடுகளையும் இவை உன்னிடம்பட்டனவன்றோ? (அன்று அடைத்து) "சுரிகுழல் கனிவாய்த் திருவினைப்பிரித்த கொடுமையில் கடுவிசையரக்கன்" [பெரியதிரு5-7-7] என்கிற ராவணன் பிராட்டியைப் பிரித்த அன்று, "சீதையின் முகத்தாமரை மலர்வதற்குக் காரணமான சேதுவரையில்" [ஆளவந்தார்முக்தகம்] என்கிறபடியே பிராட்டியின் முகம் மலருவதற்காகப் பாற்கடலோடு ஓரினமான உப்புக்கடலை மலைகளாலே அடைத்தவன் நீயன்றோ? (உடைத்து) அங்குள்ளார் பிறிதொருகாலத்தில் இதன்வழியாக இங்குவந்து இங்குள்ளாரைத் துன்புறுத்தக்கூடாதென்று அவ்வணையைத் திரும்பிவரும்போது வில்நுனியாலே உடைத்தவனும் நீயன்றோ? (உடைத்து) என்றது இக்கடலை ப்ரளயத்திலே ஸம்ஹரித்தவனும் நீயன்றோ என்கிறதாகவுமாம். (கண்படுத்த ஆழி அது) துன்பம் நேரும்போது தேவர்கள் எழுப்பி உன்னைக்கொண்டு தங்கள்

பிக்கார்யம் கொள்ளலாம்படி கண்வளர்ந்த கடலாகும் அந்தக்கடல்; ரக்ஷ்யவர்க்கஸம்ரக்ஷணத்திலே நித்யதீக்ஷிதனு யிருக்கிற நீ, அழிந்தவன்று ஸ்ருஷ்டித்து, அவாந்தர ப்ரளயத்திலே இடந்தெடுத்து, மேல் ப்ரளயத்தில் அழியாதபடி திருவயிற்றிலே வைத்து, வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, இப்படி உன்கையிலே பருத்திப்பட்ட பன்னிரண்டும் பட்டுக்கிடக்கிற பூமியாகும் இந்த பூமி.

'கண்டவாற்ருல் தனதே உலகென நின்ருன்' என்கிற படியே இவ்வோ திவ்யசேஷ்டிதங்கள்தானே அவனே ஸர்வாதிகன் என்னுமிடத்தைக் காட்டுகிறதில்லையோ? என்கை. 'என்று' என்கையாலே திரையும் நுரையும் இப்போதும் மாறிற்றில்லையென்கை. 'எவ்வுலகம்' என்கையாலே அளந்த அடிச்சுவடு இப்போதும் அப்படியே எடுக்கலாயிருக்கை.

காரியங்களை நடத்திக்கொள்ளலாம்படி எப்போதும் நீ யோகநித்திரை புரியும் கடலன்ருே அது. (நீ படைத்து இடந்து உண்டு உமிழ்ந்த பார் இது) உடைமைகளை ரக்ஷிப்பதற்கு எப்போதும் விரதங்கொண்டிருக்கும் நீ ப்ராக்ருதப்ரளயத்தில் இது அழிந்தபோது இதைப்படைத்து, நைமித்திகப்ரளயத்தில் கடல்கொண்டபோது அண்டச்சுவரிலிருந்து வராஹரூபியாய்க் குத்தியெடுத்து, ப்ரளயத்தில் அழியாதபடி திருவயிற்றிலே வைத்து, ப்ரளயம் நீங்கினவுடன் அனைவரும்காண வெளிவிட்டு இப்படிச் செய்ய வேண்டியதையெல்லாம் நீயே செய்யும்படியிருக்கும் பூமியன்ருே இது.

வயலையுடையவனன்ருே உழுவான்? மற்றொருவருக்கு ஈச்வரத்வமிருந்ததாகில் இச்செயல்களிலே ஒன்றையாவது அவர்கள் செய்திருக்க வேண்டாமோ? "**உண்டும் உமிழ்ந்தும் கடந்தும் இடந்தும் கிடந்தும் நின்றும் கொண்டகோலத்தொடு வீற்றிருந்தும் மணம்கூடியும் கண்டவாற்ருல் தனதே உலகென நின்ருன்**" [திருவாய் 4-5-10] என்கிறபடியே இந்த அதிமாநுஷச்செயல்கள் தாமே அவனே ஸர்வேச்வரனென்று காட்டுகிறதன்ருே என்று கருத்து. 'இது' என்ருர் பூமியைத் தாம் நிற்குமிடமாகையாலே; அது என்ருர் கடலை தூரத்திலிருப்பதாகையாலே. 'என்று' 'எவ்வுலகம்' என்று தம் அறிவுக்கு அவை இப்போதும் தோற்றுவதைச் சொல்லுகிருர்.

3. பாரளவு மோரடிவைத் தோரடியும் பாருடுத்த
நீரளவுஞ் செல்ல நிமிர்ந்ததே—சூருருவின்
பேயளவு கண்ட பெருமான்! அறிகிலேன்
நீயளவு கண்ட நெறி.

பதவுரை:—ஓர் அடி—*ஒப்பற்ற ஒருதிருவடியை,* **பார் அளவும் வைத்து**-*பூமியுள்ள வரையிலும் வைக்க,* **ஓர் அடியும்**-*மற்றொரு திருவடியும்,* **பார் உடுத்த** —*அண்டத்தைச் சூழ்ந்திருக்கும்,* **நீர் அளவும்**—*ஆவரண ஜலம் வரையில்,* **செல்ல**—*செல்லும்படி,* **நிமிர்ந்தது**—*உயர்ந்தது;* **சூர் உருவின் பேய்**—*தெய்வப் பெண்ணின் வடிவையுடைய பேயான பூதனையுடைய,* **அளவு கண்ட**—*(உயிருக்கு) எல்லையைக்கண்ட,* **பெருமான்**—*உபகாரகனே!* **நீ அளவு கண்ட நெறி**—*நீ செய்து முடித்த செயல்களை,* **அறிகிலேன்** —*அளவிட்டு அறிய மாட்டுகிறிலேன்.*

அவதாரிகை:-''*எவ்வுலகம் நீரேற்றது*'' *என்று சொன்ன திருவுலகளந்தருளின திவ்யசேஷ்டிதத்திலே திருவுள்ளம் சென்று அத்தை அநுபவிக்கப்புக்கவிடத்தில் நிலைகொள்ள மாட்டாமல் அதிலே கிடந்து அலைகிறார்.*

உரை:-*அதிலோகமான அழகையுடைய ஒரு திருவடியை ''படிக்களவாக நிமிர்த்த'' என்கிறபடியே பூமியுள்ளவளவே நிற்கும்படி குசைதாங்கிவைத்து, அத்தோடு துல்யவிகல்பம்*

அவதாரிகை:—''*எவ்வுலகம் நீரேற்றது*'' என்று சென்ற பாட்டிலே திருவுலகளந்தருளின செயலைப்பற்றிய ப்ரஸ்தாவம் வருகையாலே, அவ் வருஞ்செயலிலே திருவுள்ளமீடுபட்டு, அதை அநுபவிக்கப்பார்த்து, அநுபவிக்கமாட்டாமல் அதிலேயே கிடந்து அலைகிறார் இந்தப் பாசுரத்தில்.

வ்யா:—(ஓரடி) ஒப்பற்ற அடியை. உலகில் காணும் அடிகளைக் காட்டிலும் மிகச்சிறந்த அழகையுடைய ஒருதிருவடியை. (பாரளவும் வைத்து) பூமியுள்ள வளவில் நிற்கும்படி, கடிவாளத்தை இழுத்துப்

பண்ணலாம்படியான மேலே எடுத்த மற்றொரு திருவடியும், அண்டகடாஹத்தைச் சூழ்ந்த ஆவரணஜலத்தளவும் செல்ல வளர்ந்ததிறே. தன் வடிவை மறைத்து, *தெய்வ நங்கையான யசோதை வடிவுகொண்டுவந்து, பூதனையை, அவள் நினைவு அவளோடே போம்படி அளவிட்டு முடித்த செயலாலே, ஜகத்துக்கு ரக்ஷகனான உன்னை நோக்கித்தந்தவனே! நீ அளந்துகொண்ட வழியை, நான் இன்னபடியென்று அறியமாட்டுகிறிலேன். இச்செயலை அநுஸந்தித்தால் அதிலே ஆழங்காற்படுமதொழிய அளவிட்டு அநுபவிக்கமாட்டுகிறிலேன் என்று கருத்து.

"சூருமணங்கும் தெய்வப் பெண்பெயர்" என்கிறபடியே திவ்யாகாரையான பேய் என்றபடி. "பேயளவுகண்ட"

பிடிப்பாரைப்போலே இழுத்துப் பிடித்து வைத்து. வளர்ந்து கொண்டே போகும் திருவடியை மேலேவளராமல் பூமியளவேயாம்படி நிறுத்துவதில் உண்டான அருமையைக் காட்டுகிறது. "படிக்களவாக நிமிர்த்த நின் பாதபங்கயம்" [திருவாய் 9-2-2] என்று நம்மாழ்வாரும் இவ்வர்த்தத்தைக் காட்டினார். (ஓரடியும்) "அவ்வடிக்கு இணை இவ்வடியே; இவ்வடிக்கு இணை அவ்வடியே" என்னலாம்படியான மேலே எடுத்த மற்றொரு திருவடியும், (பார் உடுத்த நீரளவும் செல்ல நிமிர்ந்ததே) அண்டச் சுவரைச் சூழ்ந்திருக்கும் ஆவரணஜலம் வரையிலும் வளர்ந்ததன்றோ. பார்—அண்டம். அன்றிக்கே 'பார்' என்று பூமியையே சொல்லுவதாகக்கொண்டு "கண்ணார் கடலுடுக்கை" [சிறியதிருமடல்-1] என்கிற படியே கீழே பாரளவும் வைக்கப்பட்ட அத்திருவடியே பூமியைச் சூழ்ந்த கடலளவும் செல்ல வளர்ந்தது என்பதாகவும் கொள்ளலாம். (சூர் உருவின் பேய்) "சூரும் அணங்கும் தெய்வப்பெண்பெயர்" என்கிற தமிழ் நிகண்டுவின்படி 'சூர்' என்றது தெய்வப்பெண்ணைக் காட்டும்; இங்கு "தெய்வநங்கை யசோதை" [பெருமாள்திரு 7-5] என்ற யசோதையைக் காட்டுகிறது. யசோதையின் உருவோடு வந்தபேய் என்றபடி. தெய்வப்பெண்போல் அழகிய வடிவுகொண்ட பேய் என்றுமாம். "வித்$_3$யாத$_4$ராப்ஸரோயக்ஷரக்ஷோக$_3$ந்த$_4$ர்வகிந்நரா:, பிசாசோ... அமீதே$_3$வயோநய:" [அமரகோசம்-122] என்ற அமரகோசத்தின்படியே பிசாசங்களும் தேவர்களிடமிருந்து உண்டானவையாகையாலே 'சூருருவின் பேய்" என்கிறதென்று பெரியவாச்சான்பிள்ளை நிர்வஹிப்பர். (பேயளவுகண்ட)

என்ற இத்தால் ஸ்வயத்நத்தாலே அவனை அறியப்புகில் பூதனைபட்டது படுவர் என்று கருத்து. "அறிகிலேன் நீ அளவுகண்ட நெறி" என்கிறது. நீ என் திறத்தில் நினைக்கிற மார்க்கம் என்னவென்று அறிகிறிலேன் என்றுமாம்.

4. நெறிவாசல் தானேயாய் நின்றானை யைந்து
பொறிவாசல் போர்க்கதவஞ் சாத்தி—அறிவானும்
ஆலமரநீழ லறம்நால்வர்க் கன்றுரைத்த
ஆலமமர் கண்டத் தரன்.

பதவுரை:—அன்று-முன்னொரு ஸமயத்தில், **ஆலமரநீழல்**-ஆலமரத்தின் நிழலிலே, **நால்வர்க்கு**-அகஸ்த்யர், தக்ஷர், புலஸ்த்

அப்பேயின் தீயநினைவு அவளுக்கேயாம்படி, அவளுடைய ஆயுளுக்கு அளவுகண்ட (பெருமான்) இச்செயலாலே உலகிற்கு நாதனான தன்னை இவ்வுலகிற்குத் தந்து உபகரித்தவனே! "ஸ்தந்யம் தத் விஷஸம்மிச்ரம் ரஸ்யமாஸீத்" [ஹரிவம்சம்-65] [விஷங்கலந்த அம்முலைப்பால் இனிதாயிருந்தது] என்றவுடன் "ஜகத்குரோ:" [ஷை] என்று செத்துப்பிழைப்பாரைப்போலே அப்போது மறுபடியும் ஜகத்ஸ்வாமியானான் என்றானன்றோ ரிஷியும். (பெருமான்) இவனுக்கு என்வருகிறதோ என்றிருக்கும் என்னைப் பூதனையை முடித்த செயலாலே உண்டாக்கி உதவியவனே என்றுமாம். (அறிகிலேன் நீ அளவுகண்ட நெறி) நீ திருவுலகளிந்தருளின இவ்வொரு செயலை நான் 'இன்னபடியாக அளந்துகொண்டாய்' என்று அறிகிறேனல்லேன். இதை அநுஸந்திக்கும்போதேல்லாம், "காலாழும் நெஞ்சழியும்" [பெரியதிருவ-34] என்றாற்போலே ஈடுபடுமொழிய இதை அளவிட்டு அறியமுடிகிறதில்லை என்று கருத்து. அல்லது, மஹாபலியாலே அபஹரிக்கப்பட்ட பூமியை அளந்து உன்திருவடிகளின் கீழ்க்கொண்டு, பூதனையைப் போக்கினாற்போலே, என்னுடைய விரோதிகளைப்போக்கி அநாதிகாலம் ஸம்ஸாரியாய்ப்போந்த என்னை எப்படித்தான் ஆட்கொண்டாயோ என்பதை அறிகிறேனல்லேன் என்றும் கொள்ளலாம். "இவளை உன் மனத்தால் என் நினைந்திருந்தாய்" [பெரியதிரு 2-7-1] என்றாப்போலே, என் விஷயத்தில் என்ன வழியை வகுத்திருக்கிறாய் என்று அறிகிறேனல்லேன் என்றுமாம்.

இப்பாட்டின் ஸாரார்த்தமாவது,— எம்பெருமான் சிலரை அளவிட நினைத்தால் அவனுக்கு ஒரு அருமையுமில்லை; அவனைச் சிலர் தம் முயற்சியாலே அளவிட நினைத்தால் அவர்கள் பூதனையைப்போலே முடிந்துபோமித்தனை என்கிறது.

யர், மார்க்கண்டேயர் என்னும் நால்வருக்கும், **அறம் உரைத்த**-தர்மத்தை உபதேசித்தவனும், **ஆலம் அமர் கண்டத்து**—விஷத்தைக் கொண்டிருக்கும் கழுத்தையுடையவனுமாகிய, **அரன்**—சிவன், **ஐந்து பொறிவாசல்**—ஐந்து ஞானேந்திரியங்களுடைய த்வாரங்களிலுள்ள, **போர்க் கதவம்**—அடைக்க வொண்ணுத கதவுகளை, **சாத்தி**—அடைத்து, **நெறி வாசல் தானேயாய் நின்றனை**—உபாயமும், ப்ராப்யமும் தானேயாக இருக்கிற எம்பெருமானை, **அறிவான் ஆம்?** — அறிந்து விடுவனே? (அறியமாட்டான் என்றபடி).

அவதாரிகை:—அவனருளடியாக வந்த தெளிவால் குறை வற்ற நானுமுட்பட நீஞ்சிக்கரையேறமாட்டாமல் கிடந்து அலையாநிற்க, ஸ்வயத்நத்தாலே வந்த ஜ்ஞானசக்திகளைப் போரப்பொலிய நினைத்து ஒருவனை அறிய ஒருப்படுவதே! என்ன மதிகேடனே! என்று ருத்ரனை க்ஷேபிக்கிறார்.

உரை:—வடவ்ருக்ஷச்சாயையிலே பகவத்ஸமாஶ்ரயண ரூபமான தர்மத்தை அகஸ்த்ய புலஸ்த்ய தக்ஷமார்க்கண்டேயர்களாகிற நாலு சிஷ்யர்களுக்கும் பகவத்விஷயத்தில்

அவதாரிகை:—நீரறியாவிடில் போகிறது; ஸர்வஜ்ஞன் எனப்படுமவனாய், தக்ஷிணாமூர்த்தியுருவில் பிறருக்கு உபதேசிக்கும் சிவன் இவனை அறியானோ? என்ன,—"பரமனருளாலே ஏற்பட்ட ஞானத்தெளிவால் குறைவற்றிருக்கும் நானுங்கூட அவன் பெருமைக்கடலில் நீஞ்சிக் கரையேற முடியாமல் தத்தளித்துநிற்கிறேன்; தன் முயற்சியாலே தவம்செய்து பெற்ற ஜ்ஞானசக்திகளைப் பெரிதாக நினைத்து, தானறியவும், பிறருக்கு உபதேசிக்கவும் முற்படுவதே ஒருவன்! என்ன மதிகேடு" என்று உருத்திரன் ஆசார்யநிலையை ஏறிட்டுக்கொண்டதை க்ஷேபிக்கிறார்.

வ்யா:—(ஆலமரநீழல்) தான் தவம்புரிந்த ஆலமரத்தின் நிழலில், எம்பெருமானைக்குறித்துத் தவம்புரிந்து இப்போதே இவன் அறிவைப் பெற்றிருக்கிறான். அதற்குள் சிஷ்யர்களுக்கு உபதேசிக்கக் கிளம்பிவிட்ட இது என்ன அறிவுகேடு! (அறம்) பகவானை அடையும் வழியை. (நால்வர்க்கு) அகஸ்த்யர், புலஸ்த்யர், தக்ஷர், மார்க்கண்டேயர் என்னும் நாலு மஹரிஷிகளுக்கும். (ஆலமரநீழல் அறம் நால்வர்க்கு) தான் இப்போதே தவம் புரிந்து அறிவுபெற்றவன், மஹரிஷிகளுக்கு உபதேசிக்கத் தொடங்கியது,

உவ்வக்குழியிட இழிந்தவன்று பகவத்விஷயத்தை மறு பாடுருவும்படி தர்சித்துச் சொல்லவல்ல பேரளவுடையார் பண்ணக்கடவ உபதேசத்தைப்பண்ணி ஆசார்யபதம் நிர்வஹித்தோம் என்றிருக்கும் பெரிசறிவாளனுய், அம்ருத மதநதசையிற் பிறந்த ஹாலாஹலம் என்கிற விஷத்தை நாராயணன் ஆஜ்ஞையாலே கழுத்திலே அடக்கிக் காள கண்டனென்று விருதுபிடித்துத் திரியும் பெருமிடுக்கனுய், ஸம்ஹர்த்ருத்வசக்தியுக்தனுக அபிமானித்திருக்கிற ருத்ரன், ஶ்ரோத்ராதிரூபேண ஐந்துவகைப்பட்டிருப்பதாய், விஷயங்களாகிற வரைநாற்றத்தைக் காட்டித் தன்னுடன் சேர்ந்

ப்ருஹதாரண்யகத்தில் நாலாம் அத்தியாயத்திலும், கௌஷீதகி மூன்றுவது அத்தியாயத்திலும் அறிவிற்சிறந்த அஜாதசத்ருவுக்கு ப்ரஹ்மஜ்ஞான மற்ற பாலாகி உபதேசித்தான் என்று சொன்ன கதையாயிருக்கிறது என்பர் பெரியவாச்சான்பிள்ளை. (அன்று) பகவத்விஷயத்திலே அக்ஷராப்யாஸம் செய்த அன்றைக்கே ஆசார்யகம் வஹிக்கத் தொடங்கினுன் என்கை. (உரைத்த) பகவத்விஷயத்தில் நெடுநாள் பரிசீலித்துக்கண்டவர்கள் செய்யும் ஆசிரியத்தொழிலை நாமும் செய்துவிட்டோம் என்றிருந்த பேரறிவாளனுகையாலே இவனே ஸர்வஜ்ஞன்! என்று கருத்து. (ஆலம் அமர் கண்டத்து) அமுதங்கடைந்தபோது உண்டான "ஹாலாஹலம்" என்ற விஷத்தை எம்பெருமானுடைய ஆஜ்ஞையாலே "விஷஸ்ய பாத்ரேண ருத்ரேண" என ருக்வேதம் சொன்னபடியே அவனுக்குப் பாத்திரஸ்தானத்திலேயிருந்து அருந்தி, அதைக் கழுத்திலே அடக்கி, அத்தாலே 'காள கண்டன்' என்று விருதாதித்திரியும் இச்செயலைப்போலேயிராநின்றது இவன் உபதேசிக்கும் நிலையும் என்று கருத்து. (ஆலமமர் கண்டத்து) தமோகுணத்துக்குச் சேர விஷமருந்தலாமேயொழிய, "ஸத்வகுணத்தால் அறிவுண்டாகிறது" [கீதை 14-17] என்கிறபடியே ஸத்வகுணகார்யமான ஜ்ஞாநோபதேசத்தைச் செய்ய இவனு அதிகாரி என்றுகருத்து. (அரன்) பகவான் அந்தர்யாமியாயிருப்பதையுணராமல் தானே ஸம்ஹாரகனென்று அபிமானித்திருப்பவன் அறிவனே என்று அந்வயம்.

ஏன் அறியமாட்டான் எனில்: (ஐந்து பொறி வாசல்) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்துவகைப்பட்டிருப்பதாய், சப்தஸ்பர்ச ரூபரஸகந்தங்களாகிற விஷயங்களின் வாஸனையைக்காட்டி தன்னுடன் சேர்ந்தவர்களின் ஸ்வரூபநாசத்தைச் செய்யும் யந்த்ரம்போன்றதாகையாலே

தாரைமுடிக்கும் யந்த்ரகல்பமான இந்த்ரியத்வாரங்களில், அடைக்கப்புக்கவர்கள் முகத்திலே அறைந்து பொருகிற கதவை, வருத்தத்தோடே அடைத்து, உபாயமும் தத்ஸாத்யமான உபேயமும் அநந்யஸாத்யனான தானேயாய்க் கொண்டு நின்ற ஸர்வேச்வரனை ஸ்வயத்நஸித்தமான தன் ஜ்ஞாநசக்த்யாதிகளைக்கொண்டு அறிவதாக இருக்கிறானாம்! என்ன அஜ்ஞானே! என்று கர்ஹிக்கிறார். "நெறிவாசல்" என்று ஸ்வரூபாநுரூபமான உபாயம் என்னவுமாம்.

'பொறி' எனப்படுவதான இந்திரியத்வாரங்களில். (போர்க்கதவம் சாத்தி) இந்திரியங்களின் வாசலில் கதவை அடைக்கப்புகுந்தால், அடைப்பவர்களுடைய முகத்திலேயே அறைந்து அவர்களை வெற்றிகொள்வனவாயிருக்கின்றன அவை. (ஐந்து பொறிவாசல் போர்க்கதவம்) ஒரு கதவையடைத்தால் மற்றொன்று திறந்துகொள்ளும் என்கை. (சாத்தி) மிக வருந்தி அடைத்து. வருந்திச் சாத்தலாமேயொழியத் தாளிடவொண்ணாதென்று கருத்து. (நெறி) தன்னையடைய வழியாகிற உபாயமும். (வாசல்) அவ்வழியாலே அடையும் மோக்ஷவாசலாகிற உபேயமும். (தானேயாய் நின்றானை) வேறொன்றால் ஸாதிக்கவொண்ணாத தானேயாய் நின்ற ஸர்வேச்வரனை. (அறிவாரும்) முயற்சியாலுண்டான தன் ஜ்ஞாநசக்திகளைக் கொண்டு அறிய இருக்கிறாரோ? இப்படியிருந்தானாகில் எத்தனை அறிவற்றவனாயிருக்கவேணும்? என்று நிந்திக்கிறார். எம்பெருமான் தன்னையறிய உபாயமாயிருப்பவன் தானேயாகையாலே, அவனுடைய அருள்கொண்டு அறிவார்க்கு அவனை அறியலாமேயொழிய, பொறிவாசல் போர்க்கதவம் சாத்தித்தம் முயற்சிகொண்டு அறிவார்க்கு அவனை அறியமுடியாது என்று கருத்து. "நெறிவாசல் தானேயாய்" என்றதற்கு **நெறியான**:—அதாவது ஸ்வரூபத்துக்குத்தகுந்த, **வாசல்**—உபாயம் தானேயாய் நின்றவனை என்றும் பொருள் கொள்ளலாம். "ஆய் நின்றானை" என்றதால் மற்ற உபாயாபாஸங்களைப்போலே ஸாத்யமாயிராமல், இவன் ஸித்தோபாயமாயிருப்பவன் என்று காட்டுகிறது. (அறம் நால்வர்க்குரைத்த அரன் அறிவானும்) ஞானம் பெறுமுன் சிஷ்யர்களை ஸம்பாதித்துக்கொண்ட அரனோ அறிவான்? (ஆலமமர் கண்டத்து அரன் அறிவானும்) எம்பெருமானாலே வந்த விஷதர சக்தியையும், ஸம்ஹாரசக்தியையும் உடையவன் என்றமாத்திரத்தால் அவனை அறிந்துவிடமுடியுமோ? என்று கருத்து.

பரமபுருஷனோடும் எதிரம்புகோக்கும் உருத்திரனுடைய ஈச்வராபிமானத்தை நினைத்து சீராமப்பிள்ளை (பட்டருடைய தம்பி) உருத்திரனைப் பலவாறு நிந்தித்தாராம் ஒருசமயம். அதைக்கேட்ட பட்டர், "தமோகுணப்ரதாநனான ருத்ரனுக்கு ஈச்வராபிமானம் தாரகமாயிருப்பதொன்று;

5. அரன் நாரணன் நாமம் ஆன்விடை புள்ளூர்தி
உரைநூல் மறையுறையுங் கோயில்—வரைநீர்
கரும மழிப்பளிப்புக் கையதுவேல் நேமி
உருவமெரி கார் மேனி யொன்று.

பதவுரை:—நாமம்—பெயர். **அரன்**—(ஒருவனுக்கு) ஹரனென்பது; **நாரணன்**—(ஒருவனுக்கு) நாராயணனென்பது; **ஊர்தி**—வாஹனம், **ஆன் விடை**—(ஒருவனுக்கு) ஞானமற்ற எருது; **புள்**—(ஒருவனுக்கு) வேதசரீரனான கருடன்; **உரை**-ப்ரமாணம், **நூல்**—(ஒருவன் விஷயத்தில்) புருஷனால் செய்யப்பட்ட ஆகமம்; **மறை**—(ஒருவன் விஷயத்தில்) வேதம்; **உறையும் கோயில்**—வசிக்குமிடம், **வரை**—(ஒருவனுக்கு) கடினமான மலை; **நீர்**—(ஒருவனுக்கு) குளிர்ந்த கடல்; **கருமம்**—தொழில், **அழிப்பு**-(ஒருவனுக்கு) ஸம்ஹாரம்; **அளிப்பு**—(ஒருவனுக்கு) ரக்ஷணம்; **கையது**—கையிலிருக்கும் ஆயுதம், **வேல்**—(ஒருவனுக்கு) வேல்; **நேமி**-(ஒருவனுக்கு) அருளார் திருச்சக்கரம்; **உருவம்**-வடிவு, **எரி**—(ஒருவனுக்கு) நெருப்புப் போன்றது; **கார்**—(ஒருவனுக்கு) மேகம் போன்றது; **ஒன்று மேனி**—(இவ்விருவரில்) ஒருவன் மற்றவனுக்கு சரீரம்.

அவதாரிகை:-நாடடங்க ருத்ரனே ஸர்வாதிகன் என்று அறுதியிட்டு அவன் காற்கீழ்த் தலைமடுத்துப் போற்றுவது புகழ்வதாயன்றோ போருகிறது; நீர் அவனை க்ஷேபிக்கக்கட

இயற்கையில் உருத்திரன் ஸாதுவேயானாலும், தமோகுணம் அவனை இப்பாடு படுத்துகிறது. ஆகையால் அவனை வீணாக நிந்திக்காதே'' என்று சொன்னார் என்பர் பெரியவாச்சான்பிள்ளை. இப்படியே, ஆழ்வார்கள் இப்பாசுரம்போன்ற சிலவிடங்களில் உருத்திரனை நிந்திப்பதும் அவனுடைய தமோகுணத்தையும், அதன்கார்யமான ஈச்வராபிமானத்தையும் நிந்திப்பதிலே நோக்காகக் கொள்ளவேணும். ஸர்வபூதஸுஹ்ருத்துக்களான ஆழ்வார்கள் உருத்திரன்மேல் துவேஷங்கொண்டவர்களல்லரே.

அவதாரிகை:—நாட்டில் பெரும்பான்மையோர் உருத்திரனே பரம்பொருள் என்று முடிவுகட்டி அவன் காலின்கீழே தலைவணங்கிப் போற்றுவதும் புகழ்வதுமாயன்றோ இருக்கிறது; நீர் அவன் அறிவைக் குறைத்துப்

வீரோ? என்ன: ருத்ரனுடைய அநீஶ்வரத்வமும், எம்பெருமானுடைய ஈஶ்வரத்வமும் தத்தந்நாமவாஹநாதிஸ்வரூபங்கள் கொண்டே அறுதியிடலாம் என்கிறார்.

உரை:—பிணஞ்சுடுதடிபோலே கண்டதடைய அழிக்கையே தொழிலாக உடையவன் என்னுமிடத்தைத் தெரிவிக்கிற **'ஹரன்'** என்று ஒருவனுக்குப்பேர்; **ஸமஸ்த** வஸ்துக்களையும் உள்ளும்புறம்பும் ஒக்க வ்யாபித்து ஸத்தையை நோக்கும் என்று அறிவிக்கிற **'நாராயணன்'** என்று ஒருவனுக்குப்பேர். அறிவுகேட்டுக்கு நிதர்சநமாகச் சொல்லப்படும் ருஷபமே ஒருவனுக்கு வாஹநம்; **'த்ரயீமய:'** என்றுசொல்லப்படுகிறபெரியதிருவடி ஒருவனுக்கு வாஹநம்.

பேசலாமோ? என்று சிலர் கேட்க,– "உருத்திரன் பரம்பொருளல்லவென்பதும், எம்பெருமானே பரம்பொருள் என்பதும் அவ்விருவருடைய பெயர், வாஹநம் முதலியவற்றின் தன்மைகளைக்கொண்டே முடிவுகட்டலாமே" என்கிறார்.

வ்யா:—(அரன் நாரணன் நாமம்) பிணஞ்சுடும் தடிபோலே தன்னிடம் வந்ததையெல்லாம் அழிப்பதையே தொழிலாகவுடையவன் என்பதைத் தெரிவிக்கிற 'ஹரன்' என்னும் சப்தம் ஒருவனுக்குப்பெயர்; "ஹரதீதி ஹர:" [ஸம்ஹரிக்கிறானாகையாலே ஹரனாகிறான்] என்று வ்யுத்பத்தி. எல்லாப் பொருள்களையும் உள்ளும் புறமும் ஒக்க வியாபித்து ரக்ஷிப்பவன் என்று அறிவிக்கிற 'நாராயணன்' என்னும் சப்தம் மற்றவனுக்குப்பெயர். 'நரஸமூஹங்களுக்கு (எல்லாச்சேதநாசேதநங்களுக்கும்) அயநம் (இருப்பிடம்)' என்றும், 'நரஸமூஹங்களை இருப்பிடமாகக் கொண்டவன்' என்றும், 'நர(ஜீவ)ஸமூஹங்களுக்கு ப்ராப்யப்ராபகங்களாயிருப்பவன்' என்றும் பொருள்படுவது நாராயணசப்தம். ஒருவன் அழிக்கப்பிறந்தவன்; மற்றவன் அளிப்பதையே இயற்கையாகக்கொண்டவன்; அழிக்கவில்லையெனில் ஒருவனுக்கு ஈச்வரத்வமில்லை; ஒன்று அழிந்தால் மற்றவனுக்கு ஈச்வரத்வமில்லை. எல்லாவற்றையும் வியாபித்து, தரித்து ரக்ஷிப்பதைப் பரம்பொருள் நேரேதான் செய்தாகவேண்டும்; அதற்கு ஆளிட்டுமுடியாது; அழிப்பதற்குத் தமோகுணப்ரதாநனான ஓராளையிட்டுச் செய்யலாம். ஆகையால் ஸர்வவ்யாபியான நாராயணனே பரம்பொருள் என்று கருத்து. (ஆன் விடைபுள் ஊர்தி) அறிவுகெட்டவரை 'ஏ மாடே!' என்று உரைப்பர் உலகினர்; அப்படிப்பட்ட மாடு ஒருவனுக்கு வாஹனம்; வேதஸ்வரூபனாக வேதத்திலேயே "ஸுபர்ணோஸி கருத்மாந்" [தைத்-ஸம் 4-1-42] என்று தொடங்கி ஓதப்படுமவனாய், "த்ரயீமய:" [ஸ்தோ-ர-41] என்று ஸர்வ வேதமயனாக உரைக்கப்படுமவனான கருடன் மற்றவனுக்கு வாஹனம்.

ஒருவனைச்சொல்லும் ப்ரமாணம் வேத$_{3}$விருத்$_{3}$த$_{4}$ார்த்தத்தைச் சொல்லும் பௌருஷேயமான ஆகமம்; ஒருவனைச் சொல்லும் ப்ரமாணம் நித்யநிர்த்தோஷமாய் அபௌருஷேயமாய் யத$_{2}$ாபூ$_{4}$தவாதி$_{3}$யாய், ஸ்வத: ப்ரமாணமான வேதம்.

(உரை நூல் மறை) ஒருவனைச் சொல்லும் ப்ரமாணம் கள்குடத்தை ஸ்தாபித்து அதில் தேவதையை அர்ச்சனம் செய்வது, சுடுகாட்டுச் சாம்பலில் குளிப்பது முதலான் வேதவிருத்தமான ஆசாரங்களையும், நிமித்தம்வேறு உபாதானம்வேறு என்பது முதலான வேதவிருத்தமான அர்த்தங்களையும் சொல்லும் சைவாகமமாகும். (நூல்) இது சில ஜீவர்களால் நூற்கப்பட்டது; ஆகையால் இதில் இருள், துயக்கு, மயக்கு, மறப்புகளாகிற தோஷங்கள் இருக்க இடமுண்டு. இருப்பதையும் காண்கிறோம். (மறை) மற்றவனைச் சொல்லும் ப்ரமாணமோ எப்போதும் குற்றமற்றதாய், ஒருபுருஷனால் செய்யப்படாததாய், உள்ளதை உள்ளபடி சொல்லுவதாய், இயற்கையிலே ப்ரமாணமான வேதம். இதில் குற்றம் சொல்ல இடமேயில்லை. சைவ நாயன்மார்கள் ஆகமங்கள்மாத்திரமல்லாமல் வேதங்களும் சிவனைப் பரம்பொருளாகச் சொல்லுவதாகக் கூறுகின்றனரே? எனில்: சிவபக்ஷபாதிகளாகையாலே அவர்கள் அப்படிச் சொன்னார்கள். மத்யஸ்தர்களான பண்டைச் சங்ககாலத்தமிழர்கள் **"நின் ஏவலுள் பணிந்தமை கூறும் அருமறைப்பொருள்"** *[பரிபாடல் 1-13]* **"வாய்மொழிப் புலவ"** [1-65] **"சாயல் நினது வான் நிறை என்னும் அருமறைப்பொருள்"** [2-59] **"நின்வயின் பரந்தவை உரைத்தேம் மாயா வாய்மொழி உரைதர"** [3-11] **"நீ என மொழியுமால் அந்தணர் அருமறை"** [3-14] **"முதுமொழி முதல்வ"** [3-42,47] **"ஏஎ இன கிளத்தலின்"** [3-62] **"வேதத்து மறை நீ"** [3-66] **"தொல்லியல் புலவ"** *[3-86]* **"நின்னோர் அன்னோர் அந்தணர் அருமறை"** *[4-65]* **"கோடாச் செல்வனை ஏவலின் முதுமொழி கூறும்"** *[13-40]* **"நாம வாய்மொழி இதுவென உரைத்தனெம்"** *[15-63]* **"வேதம் முதல்வன் என்ப திகிரியோனே"** *[நற்றிணைக்கடவுள்வாழ்த்து]* என்று திருமாலை வேதமுதல்வனாகக்கூறினர். "ஆதிரை **விரிநூல்** அந்தணர் விழவு தொடங்க" [பரிபாடல் 11-78] என்று ஆதிரைமுதல்வனான சிவனின் பிறந்தநாள் விழாவை அவன் **விரித்தநூல்** ஆன ஆகமம்வல்ல அந்தணர் தொடங்குவதாகப் பேசினர். சிவனை எவ்விடத்திலும் மறைமுதல்வன் என மொழிந்ததில்லை. நடுநிலையாளர் இதுகொண்டு தெளியலாம். "அரன் நாரணன்" என்னும் இப்பாட்டு சிவவிஷ்ணு சமரசத்தைத் தெரிவிக்கிறது என்னும் சமரசவாதிகளும் மனஸ்ஸாக்ஷியிருந்தால் இதுகொண்டு தெளிய

ஒருவன் நித்யவாஸம் பண்ணும் ஸ்தாநம் கடிநப்ரக்ருதி யான தன் ப்ரக்ருதிக்குச் சேர்ந்த கைலாஸம்; ஒருவன் உகந்து வஸிக்கும் ஸ்தாநம் தண்ணளி பண்ணி ரக்ஷிக்கும் தன் படிக்குச்சேர்ந்த க்ஷீரார்ணவம். ஒருவன்செய்யும் தொழில் கண்டதெல்லாவற்றையும் கண்ணற்று அழிக்கை; ஒருவன் செய்யும் தொழில் ஸமஸ்த வஸ்துக்களையும் தண்ணளிபண்ணி ரக்ஷிக்கை. ஒருவன் கையிலேற்குமாயுதம் கொலைக்குப் பரிகர

லாம். (உரையும் கோயில் வரைநீர்) ஒருவன் எப்போதும் வஸிக்குமிடம் ''ருத்₃ரோ வை க்ரூர:'' என்று வேதஞ்சொன்னபடியே கடினநெஞ்சை யுடைய தன் தன்மைக்கேற்ற கடினத்தன்மையை உடைய கைலாஸமலை; மற்றவன் உகந்து வஸிக்குமிடம் கருணைபுரிந்து ரக்ஷிக்கும் தன் தன்மைக் குத்தகுந்த நீர்மையையுடைய குளிர்ந்த திருப்பாற்கடல். (கருமம் அழிப் பளிப்பு) ஒருவன் செய்யும்தொழில் கண்டது அனைத்தையும் கண்ணில் லாமல் (கருணையில்லாமல்) அழிப்பது; மற்றவன் செய்யும் தொழில் எல் லாப் பொருள்களையும் கருணைபுரிந்து ரக்ஷிப்பது.'அளிப்பு' என்றால் நல்லதே யான ரக்ஷணத்தையும்காட்டி, ரக்ஷணமாயிருக்கும் அழிப்பையும் காட்டும். ஹிரண்யராவணாதி ஸம்ஹாரம்போலே. 'அழிப்பு' என்றால் நல்லாரோடு தீயவரோடு வாசியில்லாமல் அழிப்பதைக்காட்டுமேயொழிய ரக்ஷணத்தைக் காட்டாது. (அரன் நாரணன்) என்றவிடத்திலும் இதுதானே சொல்லப் பட்டது; இங்கு மறுபடியும் சொல்லுவது புநருக்தியன்றோ? எனில்: அங்கு நாமத்தைக்கொண்டு சொல்லிற்று. இங்கு கருமத்தைக்கொண்டு சொல் லிற்று. ஆகையாலே புநருக்தியில்லை. எதைக்கொண்டு சொன்னாலும் அர்த்தத்தில் புநருக்திதானே? எனில்: (அரன் நாரணன் நாமம்) என்ற விடத்தில் ஆழ்வாருக்கு வேறொரு கருத்தும் உண்டு. அதாவது,-'ஹரதீதி ஹர:' [ஸம்ஹரிக்கிறானாகையாலே ஹரனாகிறான்] என்னும் வ்யுத்பத்தி யாலே ஸர்வஸம்ஹர்த்தாவான நாராயணனையும் குறிக்கக்கூடிய 'அரன்' என்பது ஒருவனுக்குப் பெயர்; "பூர்வபத₃ாத் ஸம்ஜ்ஞாயாமக₃:'' என்கிற பாணிநிஸூத்ரத்தின்படியே ஸம்ஜ்ஞைப்பொருளிலே 'ணகாரம்' வந்திருக் கிறதாகையாலே, வ்யுத்பத்தியாலே சிவனையோ, அல்லது வேறு எந்த தேவதையுமோ குறிக்கமாட்டாத 'நாராயணன்' என்னும் பதம் மற் றொருவனுக்குப் பெயர். பாதகமில்லாமையாலே சாஸ்திரங்களிலுள்ள 'ஹரன்' முதலான சப்தங்களை நாராயணபரமாகக் கொள்ளலாம்; பாணிநி ஸூத்ரவிரோதம் வருகையாலே நாராயணநாமத்தை ருத்ராதிபரமாகக் கொள்ளமுடியாது என்னும் நாராயணநாமப்பெருமை ஆழ்வாருக்கு விவ க்ஷிதம். ஆகையாலே புநருக்தி எவ்வகையிலும் இல்லை. (கையது வேல்

மான சூலிலேவேல்; ஒருவன் கையிலேற்குமாயுதம் ரக்ஷணத் துக்குப் பரிகரமான * அறமுயலாழி. ஒருவன் ரூபம் நெருப்புப் போலே ஏறிட்டுப் பார்க்கவொண்ணாதபடி காலாக்₃நிஸங் நிப₄மாயிருக்கும்; ஒருவன் வடிவுகண்டவர்கள் கண்குளிரும் படி காளமேகம்போலேயிருக்கும். இப்படிப் பரஸ்பரவிஸத் ருஶமான இரண்டு வஸ்துக்களில் ஒன்று சரீரமாயிருக்கும். ஒன்று சரீரியாயிருக்கும் என்னுமிடம் அர்த்தஸித்தம். "ஸர் வாத்மா" என்றால் "ஸர்வஞ்சாஸ்ய ஶரீரம்" என்று ப்ரதி கோடி வருகிறாப்போலே. அன்றிக்கே, இவர்கள் ரூபம் பார்த் தால் எரிமேனியொன்று, கார்மேனியொன்று என்னவுமாம்.

நேமி) ஒருவன் கையில் ஏந்தும் ஆயுதம் பிள்ளை என்றும், மஹர்ஷியென்றும் பாராதே கொலைசெய்ய முற்படும் சூலிலேவேல்; மற்றவன் கையில் ஏந்தும் ஆயுதம் துஷ்டர்களையே அழித்து, நல்லவர்களை ரக்ஷிக்கும் "அறமுயலாழி" [திருவாய்-1-6] எனப்படும் தர்மசக்ரம். (உருவம் எரிகார்) ஒருவனுடைய உருவம் நெருப்புப்போலே கண்கொண்டு பார்க்கமுடியாதபடியிருக்கும்; "ருத்₃ர: காலாக்₃நி ஸங்நிப₄:" [ஊழிகால நெருப்புப்போன்ற உருவை யுடையவன் உருத்திரன்.] என்று ப்ரமாணம்; மற்றவன் வடிவு கண்ட வர்கள் கண்குளிரும்படி நீர்கொண்ட காளமேகம்போலேயிருக்கும். (மேனி ஒன்று) இப்படி ஒன்றுக்கொன்று மடுவும் மலையும்போலே வேறுபட்டிருக் கும் இரண்டு தத்துவங்களில் ஒன்று மற்றொன்றுக்கு சரீரமாயிருக்கும். மற்றொன்று சரீரியாயிருக்கும் என்பது பொருள்வழியாலே தானே கிடைக் கும்; "ஸர்வாத்மா" [யஜு-ஆர 3-11-21] என்று ஒருவனைச் சொன்னால், "ஸர்வமும் இவனுக்கு சரீரம்" என்று தன்னடையே வருகிறாப்போலே. "ஸர்வபூ₄தாந்தராத்மா நாராயண:" [ஸுபால] "அந்தர்ப₃ஹிச்ச தத் ஸர் வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:" [தை-நா] "சிவச்ச நாராயண:" [நாராயண] "ஸசிவ:" [தை-நா] முதலான ச்ருதிகளிலும், "விஷ்ணு ராத்மா ப₄க₃வத: ப₄வஸ்ய" [பார-கர்ண] [பூஜ்யனான சிவனுக்கு விஷ்ணு ஆத்மா] முதலான இதிஹாஸபுராண வாக்யங்களிலும் யார் யாருக்கு சரீரம் என்பது ஸுப்ரஸித்தமாகையாலே, இன்னான் என்று விசேஷிக்காமல், 'மேனி ஒன்று' என்று சொல்லுகிறார். இப்படி அந்வயிக்காமல், (உருவம்- எரிமேனியொன்று; கார்மேனியொன்று) என்று அந்வயித்து, இவர்களுடைய உருவத்தைப்பார்த்தால், கண்ணைக்கரிக்கும் எரிமேனியொன்று; கண்ணைக் குளிரவைக்கும் கார்மேனியொன்று என்றும் பொருள்கொள்ளலாம்.

6. ஒன்று மறந்தறியே னேதநீர்வண்ணனை நான்
இன்று மறப்பனே ஏழைகாள்—அன்று
கருவரங்கத் துட்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை.

பதவுரை: — அன்று — *அப்பொழுது,* **கரு அரங்கத்துள் கிடந்து** — *கர்ப்பஸ்தானத்தினுள் கிடந்து,* **திரு அரங்கம் மேயான்** — *ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்டிருப்பவனை எம்பெருமானுடைய,* **திசை**—*ஸ்வபாவங்களையெல்லாம்,* **கண்டேன்**-*பார்த்தேன்,* **கை தொழுதேன்**—*அஞ்சலி செய்தேன்,* **ஒன்றும்**—*(அவனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளில்) சிறிதும்,* **மறந்தறியேன்**-*மறந்தறியமாட்டேன்;* **ஏழைகாள்**-*பகவத்விஷயமாகிற செல்வத்தை இழந்தவர்களே!* **நான்**-*அடியேன்,* **இன்று**-*(அவனாலே அருளப்பட்ட ஞானத்தையுடையனாயிருக்கும்) இப்போது,* **மறப்பனோ**-*எப்படி மறப்பேன்?*

அவ:-*"அரன் அறிவானும்" என்று ருத்ரனை அறிவுகேடனென்று க்ஷேபித்துச் சொன்னீர்; நீர்தாம் அவனையறிந்து பிறர்க்கு உபதேசிக்கும்படி எங்ஙனே? என்ன: ஸத்வம் தலையெடுத்தபோது ஸ்வயத்நத்தாலே சிறிது அறிந்தானாய்,*

சில அறிவாளிகள் இப்பாசுரம் சிவவிஷ்ணு சமரசத்தையும், ஐக்யத்தையும் குறிப்பதாகப் பேசவும் எழுதவும் செய்கிறார்கள். 'அறிவானும்?' என்று சென்ற பாசுரத்தில் சொன்னதும், 'ஏற்றான்' [74] முதலான மற்றும் பல பாசுரங்களும் இங்கு ரூபநாமவாஹநஸ்தாநாதி பேதங்களைக் காட்டியிருப்பதும் அவர்களுக்கு ஒட்டாது. ஒருவனைச் சொல்லுவது ஆகமம்; மற்றவனைச் சொல்லுவது வேதம் என்று கூறியிருப்பது அவர்களுக்கு எவ்வகையாலும் பொருந்தாது.

அவ:-"அரன் அறிவானும்?" என்று உருத்திரனைத் தாழ்த்திப் பேசினீர். நீர்தாம் ஸர்வேச்வரனை அறிந்து பிறர்க்கும் எப்படி உபதேசிக்கிறீர்? என்று கேட்க,-"ஸத்வகுணம் அதிகமானபோது, தன் முயற்சியாலே ஸர்வேச்வரனுடைய பெருமையிலே சிறிது அறிந்தவனாய், ரஜஸ்தமோ

ரஜஸ்தமஸ்ஸுக்கள் தலையெடுத்தபோது "ஈச்வரோஹம்" என்றிருக்கும் அவனைப்போலேயோ நான்? நிர்ஹேதுகமாக அவன்றானே காட்டக்கண்டவனாகையாலே எனக்கு ஒரு விஸ்ம்ருதிப்ரஸங்கமில்லை என்கிறார்.

உரை:—அறிவு நடையாடுகைக்கு யோக்யதையில்லாத அன்று கர்ப்பஸ்தானத்திலே கிடந்து, ஜாயமாநகாலத்திலே இத்தலையில் அப்ரதிஷேத₄மே பற்றாசாகக் குளிரக் கடாக்ஷித்துத் தன் படிகளைக் காட்டித்தருகையாலே, ஸம்ஸாரிகளைத் தண்ணளிபண்ணி ரக்ஷிக்கைக்காகத்தாமே கோயிலிலே வந்து பள்ளிகொண்டருளுகிற பெரியபெருமாளுடைய ஸ்வரூபரூபகுணாதி ஸமஸ்தஸ்வபாவங்களையும் ஸாக்ஷாத்கரித்து

குணங்கள் அதிகமானபோது 'நானே ஈச்வரன்' என்று நினைத்து எதிரம்புகோக்கும் அவனைப்போலேயோ நான்? என்னிடம் கைம்முதலில்லாமலிருப்பதுவே காரணமாக அவன்தானே தன் கருணையாலே தன்னைக் காட்டக்கண்டவனாகையாலே, எனக்கு ஒருபோதும் பகவானை மறக்க இடமில்லை" என்கிறார்.

வ்யா:-(அன்று) "அறியாக்காலத்துள்ளே" [திருவாய் 2-3-3] என்கிறபடியே அறிவு வெளிப்படுவதற்குத் தகுதியேயில்லாமல் கர்ப்பத்திலிருந்த அன்று. (கருவரங்கத்துட்கிடந்து) "ஸுகுமாரதநுர் க₃ர்ப்பே₄" [வி-பு6-5-10] என்றுதொடங்கி விஷ்ணுபுராணத்தில் ஆறு சுலோகங்களாலே விவரிக்கப்பட்ட சொல்லவொண்ணு வேதனைகளை அநுபவிக்கவேண்டிய கர்ப்பஸ்தானத்திலே கிடந்து. (திருவரங்கமேயான் திசை கண்டேன்) ஸம்ஸாரி சேதனர் விலக்காமையே காரணமாக தயைபண்ணி ரக்ஷிப்பதற்காகத் தாமே திருவரங்கம் பெரியகோயிலிலேவந்து பள்ளிகொண்டருளிய பெரிய பெருமாளுடைய ஸ்வரூபம், ரூபம், குணம் முதலிய எல்லாப் பெருமைகளையும் கண்டேன். (கருவரங்கத்துட்கிடந்து கண்டேன்.)

**"ஜாயமாநம் ஹி புருஷம் யம் பஶ்யேந் மது₄ஸூத₃ந: ।
ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேயஸ் ஸ வை மோக்ஷார்த்த₂சிந்தக: ।"**
[பார-சாந்தி 358-73]

[பிறந்துகொண்டிருக்கும்போது எந்தப் புருஷனை மதுஸூதனன் பார்க்கிறானோ அவனே ஸத்வகுணமுடையவனென்று அறியத்தக்கவன். அவனே மோக்ஷபலத்தை நினைப்பவன்.] என்கிறபடியே கர்ப்பத்திற்கிடக்

அநுபவித்தேன். காட்சிக்கு அநந்தரமான அஞ்ஜலிபந்தம் முதலான வ்ருத்தியிலேயும் அந்வயிக்கப்பெற்றேன். மறுக்க இடமறும்படி தன் பக்கலிலே இழுத்துக்கொள்ளவற்றாய், ஓதம் கிளர்ந்த ஸமுத்ரஜலம்போலே இருண்டு குளிர்ந்த வடிவழகையுடையவனை ஏகதேசமும் மறந்தறியேன். உத$_3$(இத?)ர விஷயங்களிலே மண்டித்திரிகிற அறிவுகேடர்காள்! மறக்கைக்கு ஹேதுவுள்ளவிடத்தில் மறவாத நான் நினைக்கைக்கு ஹேதுவுள்ள இன்று மறப்பனோ?

கும்போது, என் விலக்காமையே காரணமாகக் குளிரக்கடாக்ஷித்து என் நோவெல்லாம் தீரும்படி தன் தன்மைகளையெல்லாம் காட்டித்தருகையாலே கண்டேன். (திசை) திக்கிலே உள்ள அனைத்தையும். அதாவது அவனுடைய ஸ்வரூபம், ரூபம், குணம், விபூதி முதலான அனைத்தையும். (கண்டேன்) நேரேகண்டு அநுபவித்தேன். (கைதொழுதேன்) காட்சிக்குப் பிறகு உண்டாகும் 'கைகூப்புதல்' முதலான கைங்கர்யத்திலேயும் அந்வயிக்கப்பெற்றேன். மற்ற ஜீவர்களைப்போலே கர்ப்பத்திலிருந்து வெளிவந்தவுடன் மறந்துவிட்டீரோ? எனில்: (ஒன்றும் மறந்தறியேன்) அவனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளில் ஒன்றையும் ஒருகாலத்திலும் மறந்து அறியேன். இப்படி மறந்தறியாதது உம்முடைய பெருமையோ? எனில்: (ஓதநீர் வண்ணனை) என் பெருமையன்று; அவ்வடிவழகு என்னை மறக்கவொட்டிற்றில்லை என்கிறார். (ஓதநீர் வண்ணனை) மறுக்கமுடியாதபடி தன்னிடம் வருவாரை இழுத்துக்கொள்ளும் இருண்டுகுளிர்ந்த அலைகள் கிளரும் கடல்நீர்போன்று தன்னிடம் வருவாரை அகலவொண்ணாதபடி இழுத்துக்கொள்ளும் தன்மையையும், இருண்டுகுளிர்ந்த வடிவழகையும் உடையவனை. (நான்) மறக்கைக்குக் காரணமுள்ள கர்ப்பத்திலிருந்தபோதே மறக்காத நான். (இன்று மறப்பனோ) நினைக்கைக்குக் காரணமான ஞானச்சிறப்பையுடைய இன்று மறப்பேனோ? பிறருக்கும் உபதேசிக்கத்தக்க ஞானப்பெருமையை உடைய இன்று மறப்பேனோ? (ஏழைகாள்) மறக்கமுடியாத பெருஞ்செல்வத்தைவிட்டு, நினைக்கக்கூடாத மூதேவிபோன்ற விஷயங்களைப்பற்றித் திரியும் நித்யதரித்திரர்களே! பகவத்விஷயமாகிற பெருஞ்செல்வம் எப்படியிருக்கும் என்றுகூட அறியாதவர்களே! (திருவரங்கமேயான் திசை மறப்பனோ) பரமபதநாதனையோ நான் மறவாமலிருப்பது? எல்லைநிலமான (அர்ச்சாவதாரமான) பெரியபெருமாளிடமன்றோ நான் "அச்சுவை பெறினும் வேண்டேன்" என்று ஈடுபட்டிருப்பது.

7. திசையும் திசையுறு தெய்வமும் தெய்வத்
திசையும் கருமங்க ளெல்லாம்—அசைவில்சீர்க்
கண்ணன் நெடுமால் கடல்கடைந்த காரோத
வண்ணன் படைத்த மயக்கு.

பதவுரை:—திசையும்—*திக்குகளுடன்கூடிய உலகங்களும்,* **திசை உறு தெய்வமும்**—*அந்த திக்குகளிலிருக்கும் தேவதைகளும்,* **தெய்வத்து இசையும் கருமங்கள்**—*அந்தந்த தேவதைகளுக்குத் தகுந்த (ஸ்ருஷ்டி முதலிய) காரியங்களும்,* **எல்லாம்**—*ஆகிய இவையெல்லாம்,* **அசைவு இல் சீர்**—*அழிவற்ற கல்யாணகுணங்களையுடைய,* **கண்ணன்**—*க்ருஷ்ணனாய் அவதரித்தவனும்,* **நெடு மால்**—*(அடியவர்களிடம்) அளவற்ற அன்பையுடையவனும்,* **கடல் கடைந்த**—*(தேவர்கள் அபேக்ஷித்ததே ஹேதுவாக உடம்புநோவக்) கடல்கடைந்தவனும்,* **கார் ஓத வண்ணன்**—*மேகம்போன்றதும், கடல்போன்றதுமான திருநிறத்தையுடையவனுமான எம்பெருமான்,* **படைத்த**—*உண்டாக்கின,* **மயக்கு**—*அறிவை மயக்கும் பதார்த்தங்கள்.*

அவ:—*இப்படியாகில், நாட்டங்க எம்பெருமானைவிட்டுக் கண்ட கண்ட தேவதைகள் காற்கீழே தலையெ(ம?)டுத்துத் திரிகைக்கு அடியென்? என்னில்: உகவாதார் தன்னைவந்து கிட்டாமைக்கு அவன் பண்ணின மயக்குக்கள் என்கிறார்.*

உரை:—*திகுபலக்ஷிதையான பூமியும், அவ்வவ திக்குகளிலே வர்த்திக்கிற தேவதைகளும், அத்தேவதைகளுக்குச் சேர்ந்த ஸ்ருஷ்ட்யாதிவ்யாபாரங்களும் யாவும்,*

அவ:—இப்படி அவன் ஸுலபனாகில், உலகமெல்லாம் எம்பெருமானை விட்டு, கண்டகண்ட தெய்வங்களின் காலின்கீழே தலைசாய்த்துத் திரியக் காரணமென்? என்ன, தன்னிடம் அன்பற்றவர்கள் தன்னைவந்து அடையாமலிருப்பதற்காக அவன் பண்ணிவைத்த மயக்குக்களேயாகும் என்கிறார்.

வ்யா:—(திசையும்) 'திசை' என்னும் சொல்லால் உபலக்ஷணமுறையாலே உணர்த்தப்பட்ட (நாற்றிசையிலும் பரந்துள்ள) பூமியும், (திசையுறு தெய்வமும்) அந்தந்த திசைகளிலே வியாபித்து நிற்கும் தெய்வங்களும், (தெய்வத்து இசையும் கருமங்கள்) அந்தந்த தெய்வங்களிடம் பொருந்தி

நிற்கும் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்கள் முதலான தொழில்களும். (நெடுமால் படைத்த மயக்கு) ஸர்வேச்வரன் தன்னிடம் அன்பில்லாதவர்கள் தன்னை விட்டு அகல்வதற்காகப் பண்ணிவைத்த மயங்கப்பண்ணும் பொருள்கள். எல்லாரும் மோக்ஷமடைந்துவிட்டால் லீலாவிபூதி ஆள் அற்றுப்போகும்; சாஸ்திரமரியாதை குலைந்துபோகும். தன்னிடம் அன்புடையார் தன்னை அடையவும்வேணும்; அன்பற்றவர்கள் தன்னைவிட்டு அகன்று தன் லீலைக்கு விஷயமாகிப்போகவும்வேணும். இவற்றையெல்லாம் கருதிய ஸர்வேச்வரன் பல மயக்குகளைப் படைத்துவைத்தான். (திசையும் மயக்கு) பூமியைப் படைத்த பரமன், அதைப் படைத்தவனை தன்னை மறைத்தான். இதனாலே சில பாபிகள், இதற்கு ஈச்வரன் இல்லை என்றும், மற்றும் சிலர் கண்டகண்ட தெய்வங்களைப் பரமன் என்றும் கூறிக்கொண்டும் மயங்குகிறார்கள். (திசையுறு தெய்வமும் மயக்கு) திக்குகள் தோறும் மறைந்து வாழும் பல தெய்வங்களையும் படைத்துவைத்தான்; அந்த தெய்வங்களுக்கு ஸர்வேச்வரன் கொடுத்துவைத்த சில சக்திகளைக்கண்டு, இவையே பர தெய்வம் என்று பலர் மயங்குகிறார்கள். (தெய்வத்து இசையும் கருமங்கள் மயக்கு) அந்த தெய்வங்களிடத்திலே பொருந்தியிருக்கும் சில காரியங்களையும் ஏற்படுத்தினான் ஸர்வேச்வரன். ஒரு ஜீவனைப் பிரமன் என்னும் தேவனாகப் படைத்து, அவனை மேற்பார்வையாகக்கொண்டு மற்றுள்ள உலகத்தைப் படைக்கும் தொழிலைச் செய்கிறான். பார்ப்பவர்களுக்குப் படைப்புத்தொழில் பிரமனிடத்திலே பொருந்தியிருக்கிறது என்னும் மயக்கத்தை உண்டாக்குகிறான். இம்படியே மற்றொரு ஜீவனை உருத்திரன் என்னும் தேவதையாகப் படைத்து, அவனுக்குத் தான் ஆத்மாவாயிருந்து ஸம்ஹாரம், திரிபுரதஹனம், ஆலகாலவிஷபானம் முதலானவற்றைச் செய்து, பார்ப்பவர்களை இவ்வருஞ் செயல்களைச் செய்யும் இவனே பரம்பொருள் என்று மயங்கவைக்கிறான். அவ்வளவோடு நில்லாமல், அவன் மனைவியாகிற துர்க்கையே பரம்பொருள் என்றும், மகனாகிற முருகனே பரம்பொருள் என்றும், கணபதியே பரம்பொருள் என்றும் மற்றும் பலவிதமாகவும் பலரை மயங்கவைக்கிறான். (எல்லாம் மயக்கு) இவை மாத்திரமோ? மற்றும் எத்தனையோ மயக்குகளைச் செய்கிறான் மாயப்பிரான். அந்தந்த தேவதைகளையே பரம்பொருளாகச் சொல்லும் ஆகமங்களையும் புராணங்களையும் ஏற்படுத்திப் பலரை மயங்கவைக்கிறான். அந்தந்த மதத்திற்கான கோயில்களையும், மதாசாரியர்களையும், தெய்வமில்லையென்பாரையும், உலகில்லையென்பாரையும், 'தெய்வத்திற்குக் குணமில்லை ரூபமில்லை, ஒன்றுமற்ற அறிவுதான் தெய்வம்' என்பாரையும், மற்றும் எத்தனையெத்தனையோ மதவாதிகளையும் படைத்து உலகத்துச் சேதனரில் மிகப்பெரும் பகுதியினரை மயங்கவைத்துவிடுகிறான் மாயவன்.

அபக்ஷயாதிதோஷங்களின்றிக்கே நித்யமான கல்யாணகுணங்களை உடையனாய், அக்குணங்கள் ப்ரேரிக்கவந்து க்ருஷ்ணனாய் வந்து பிறந்த ஸௌலப்யத்தையுடையனாய், ஸுலபனான விடத்திலும் அளவிடவொண்ணாத பெருமையையுடையனாய், தம்பெருமை பாராதே ஶரணம்புக்க தேவர்களுக்காக உடம்பு நோவக் கடலைக்கடைந்து அபேக்ஷிதஸம்விதா₄நம்பண்ணுமவனாய், ரக்ஷியாதே அழியச்செய்யிலும் விடவொண்ணாதபடி கறுத்த கடல்போலே இருண்டு குளிர்ந்த வடிவை உடைய

இப்படிப் பல மயக்குகளைப் படைத்துவிடுகிறானாகில், ஒருசிலராவது அவனை அடைந்துய்ய வழியில்லையோ? எனில்: சில பாக்கியவான்களுக்குத் தன்னைக் காட்டியும் கொடுக்கிறான் என்கிறார்: (அசைவு இல் சீர்) "**அபக்ஷய விநாசாப்₄யாம் பரிணாமர்த்தி₄ ஜந்மபி₄: வர்ஜித:**" [வி-பு 1-2-11] [குறைவுபடுதல், அழிதல், மாறுதல், வளருதல், பிறத்தல் என்னும் (மற்ற பொருள்களுக்குள்ள) தன்மைகளற்றவன் பரமபுருஷன்] என்கிறபடியே தான் மற்ற தெய்வங்களைப்போலே பிறப்பு இறப்பு முதலான மாறுபாடுகள் அற்றவன் என்பதை வேதங்களாலும், ஸ்மிருதீதிஹாஸங்களாலும், ஸாத்விகபுராணங்களாலும் காட்டிக்கொடுத்தான். (கண்ணன்) இப்படிப்பட்டவனாயிருந்தும், இடைச்சிக்கும் கட்டவும் அடிக்கவுமாம்படி கண்ணனாயவதரித்து, அங்கிலையிலும், பாரிஜாத கோவர்த்தன விருத்தாந்தத்தின்போது இந்திரனைக்காட்டிலும் மேற்பட்டவனென்றும், பாணாஸுரயுத்தம் முதலானவிடங்களில் சிவனைக்காட்டிலும் மேலானவனென்றும், பிரமன் பசுக்களையும், ஆயர்களையும் மறைத்தபோது தானே எல்லாமாகவும் நின்று பிரமனைக்காட்டிலும் மேலானவனென்றும் காட்டிக்கொடுத்தான். (நெடுமால்) திரிவிக்கிரமாவதாரசமயத்தில் நெடியமாலாக வளர்ந்து, ஒருவன் திருவடியைக் கழுவவும், மற்றொருவன் ஸ்ரீபாததீர்த்தத்தைத் தலையாலேதாங்கவும் நின்று தானே ஸர்வாதிகன் எனக் காட்டிக்கொடுத்தான். "**நாராயணபரம் ப்₃ரஹ்ம**" முதலான வேதசாஸ்திரவசனங்களாலே தானே மிகப்பெரியவன் என்பதைக் காட்டிக்கொடுத்தான் என்றுமாம். (கடல்கடைந்த) இப்படி மிகப்பெரியவனாயிருந்தும், தம் அபிமானத்தை அகற்றி சரணமடைந்த தேவர்களுக்காக உடம்பு நோவக் கடல்கடைந்து, மற்றும் அரியன பல செய்து அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றி அதனாலும் தேவாதிதேவன் தானே என்பதைக்காட்டிக் கொடுத்தான். (காரோத வண்ணன்) இப்படி அருஞ்செயல்கள் செய்து அளிக்காமல், அழித்தாலும்விடமுடியாத நீலக் கடல்போன்று கறுத்துக் குளிர்ந்த வடிவழகினாலும் தானே பரம்பொருள்

ஞனவன், தன்பக்கல் வாராதாரை அகற்றுகைக்கு உண்டாக்கின ப்$_4$ராமகவஸ்துக்களாயிருக்கும். மயக்கு-மயங்கப் பண்ணும் வஸ்துக்கள்.

8. மயங்க வலம்புரி வாய்வைத்து வானத்
தியங்கு மெறிகதிரோன் றன்னை—முயங்கமருள்
தேராழி யால்மறைத்த தென்நீ, திருமாலே
போராழிக் கையால் பொருது.

பதவுரை:—திருமாலே—*ஸ்ரீநிவாஸனே!* **நீ**—*(ஸத்யஸங்கல்பனை) நீ,* **முயங்கு அமருள்**—*(ஸைந்யம்) நிறைந்த பாரத யுத்தகளத்தில்,* **போர் ஆழி கையால்**-*யுத்தம் செய்ய ஸாதனமான சக்கரத்தையுடைய கையால்,* **பொருது**-*(பீஷ்மருடன்) யுத்தம் செய்து,* **மயங்க**—*(அநுகூலர்களும், ப்ரதிகூலர்களும்) மோஹிக்கும்படியாக,* **வலம்புரி**-*ஸ்ரீபாஞ்சஜந்யத்தை,* **வாய்**

என்பதைக் காட்டிக்கொடுத்தான். (படைத்த மயக்கு) இவ்வளவு செய்தும், அறிவைக் கொடுத்தும், தன்னிடம் ஈடுபடாமல் துவேஷத்தையே காட்டுமவர்கள் அறிவுகெட்டு அகலும்படியாகப் படைத்த மயங்கப் பண்ணும் பொருள்கள்தான் பூமியும், தேவர்களும், அவர்களுடைய தொழில்களும்.

"தை$_3$வீ ஹ்யேஷா கு$_3$ணமயீ மம மயா து$_3$ரத்யயா|
மாமேவ யே ப்ரபத்$_3$யந்தே மாயாமேதாம் தரந்தி தே||"
[கீதை 7-14]

[தேவனுகிய என்னால் நிருமிக்கப்பட்டதும், முக்குணங்களை உடையதுமான இந்த என்னுடைய மாயை தாண்ட அரிதானது. என்னையே எவர்கள் சரணமடைகிறார்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்.] என்று தானே இதை கீதையில் அருளிச் செய்தானன்றோ. "நைவாஸுர ப்ரக்ருதய: ப்ரப$_4$வந்தி போ$_3$த்$_3$து$_4$ம்" [ஸ்தோ-ர-15] [அஸுரத்தன்மை பொருந்தியவர்கள் உன்னை ஒருபோதும் அறியமாட்டார்கள்] என்றும், "தவ பரிப்$_3$ரடி$_4$மஸ்வப$_4$ாவம் மாயாப$_3$லேந ப$_4$வதாபி நிகூ$_3$ஹ்யமாநம் பச்யந்தி கேசித$_3$நிசம்" [ஸ்தோ-ர-16] [மயக்குகளின் பலத்தாலே தேவரீராலேயே மறைக்கப்பட்ட போதிலும், உன்பரத்துவத்தைச் சில மஹான்கள் எல்லாக்காலத்திலும் அறிகிறார்கள்] என்றும் ஆளவந்தார் இப்பாசுரத்தை அடியொற்றி அருளினார்.

வைத்து—*திருப்பவளத்தில் வைத்து ஊதி,* **வானத்து இயங்கும்**—*ஆகாயத்தில் ஸஞ்சரிக்கிற,* **எறி கதிரோன் தன்னை**—*கிரணங்களை வெளிவிடும் ஸூர்யனை,* **தேராழியால்**—*சக்கரத்தால்,* **மறைத்தது**—*தோற்றாமல் செய்தது,* **என்**—*ஏதுக்காக?*

அவதாரிகை:—*இப்படி அநாஶ்ரிதரை மயங்கப்பண்ணுகிற அளவன்றிக்கே, ஆஶ்ரிதவிஷயத்தில் ஸத்யஸங்கல்பனான தன் நிலை குலைந்தும் பக்ஷபதித்து ரக்ஷிக்கும் என்கிறார்.*

உரை:—*துர்யோதநாதிகள் ப்ரீத்யதிஶயத்தாலே அறிவழியும்படியாக,-ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் திருப்பவளத்திலே மடுத்து ஊதி, மறைக்க ஒண்ணாத தன்னிலமான ஆகாஶத்திலே, குறிக்கவொண்ணாதபடி இதஸ்ததஸ் ஸஞ்சரிக்குமவனாய், ஸ்வதேஜஸ்ஸாலே ஸர்வரையும் அபிபவிக்கிற கிரணங்*

அவதாரிகை:—*இப்படித் தன்னை அடையாதவர்களையே மயங்கப் பண்ணுகிறான்; தன்னை அடைந்தவர்கள் விஷயத்திலோவெனில், ஸத்ய ஸங்கல்பன் எனப்படும் தன் நிலையைக் குலைத்துக்கொண்டும் பக்ஷபாதம் கொண்டு ரக்ஷிக்கிறான் என்கிறார்.*

வ்யா:—*(மயங்க வலம்புரி வாய்வைத்து) போரிலே, அர்ஜுனன் தொடுத்த அம்புக்கு எதிரிகள் அசையாவிட்டால், தன் திருவாயிலே ஸ்ரீபாஞ்சஜந்யத்தை வைத்து ஊத ஆரம்பிப்பான் கண்ணன்; பீஷ்மர் முதலான அன்பர்கள் உகப்பாலே அறிவழிந்து மயங்கிவிடுவார்கள்; துர்யோதனன் முதலான அன்பற்றவர்கள் பயத்தாலே அறிவுகெட்டு மயங்கிவிடுவார்கள். அர்ஜுனனுடைய அம்புகள் அடிக்கக்கூடியது ஒருசிலரை. இவ்வொலிகேட்டால் கூண்டோடு மயங்குவார்கள்.*

"யஸ்ய நாதே$_3$ந தை$_3$த்யாநாம் ப$_3$லஹாநிரஜாயத।
தே$_3$வாநாம் வவ்ருதே$_4$ தேஜ: ப்ரஸாத$_3$ஶ்சைவ யோகி$_3$நாம்॥"
[வி-பு 5-21-29]

[எந்தப் பாஞ்சஜந்யத்தின் ஒலியினால் அஸுரர்களுக்கு பலக் குறைவு ஏற்பட்டதோ, தேவர்களுடைய தேஜஸ் விருத்தியடைந்ததோ, யோகிகளுடைய ஆநந்தம் அதிகரித்ததோ......]

"ஸ கோ$_4$ஷோ தா$_3$ர்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருத$_3$யாநி வ்யதா$_3$ரயத்।
[கீதை 1-19]

களையுடையனை ஆதித்யனை, ஆஶ்ரிதவிஷயத்தில் ஓரத்துக்கு உவாத்தான பிராட்டியார் பக்கல் பெரும் பிச்சனானவனே! ஸகலப்ராணிகளும் யுத்$_3$த$_4$தி$_3$த்$_3$ருக்ஷயா வந்து நெருங்கிக் கிடக்கிற ஸமரபூமியிலே பொருகைக்குப் பரிகரமான திருவாழியோடேகூடின திருக்கையாலே பீஷ்மாதிகளைத் துரத்திப்பொருது ஸத்யஸங்கல்பனான நீ அத்தைக்குலைத்துத் திருவாழியாலே மறைத்தருளிற்று ஏதுக்காக?

[அந்தச் சங்கநாதம் த்ருதராஷ்ட்ரபுத்ரர்களுடைய ஹ்ருதயங்களைப் பிளந்தது] என்று சொல்லப்பட்டதன்றோ.

(மயங்கவலம்புரிவாய் வைத்து...என்?) துரியோதனனிடம் 'ஆயுதம் எடுக்கமாட்டேன்' என்று ஸங்கல்பம் செய்திருந்த நீ வீரர்கள் மயங்கும்படியாகப் பாஞ்சஜந்யத்தை ஏன் வாயிலே வைத்து ஊதினாய்? பாஞ்சஜந்யம் பஞ்சாயுதங்களிலே சேர்ந்ததன்றோ? அதைக்கொண்டு நீ செய்த காரியம் ஆயுதத்தின் தொழிலன்றோ? என்று கருத்து. நான் என் உகப்புக்குப் போக்குவீடாக ஊதியதில் அவர்கள் மயங்கினால் அதற்கு நான் என் செய்ய? என்று திருவுள்ளமாக, இவ்வொரு ஆயுதத்தை மாத்திரமோ எடுத்தது? மற்றொன்றையும் எடுக்கவில்லையோ? என்கிறார் மேலே,—(வானத்து) சூரியன் பூமிக்கு வந்திருந்தபோதோ அவனை மறைத்தது? மறைக்கமுடியாதபடி தன் நிலமான ஆகாயத்தில் வெகுதூரத்திலிருப்பவனையன்றோ மறைத்தது. (இயங்கும்) ஆகாயத்தில்தான் நிலையாய்க் காண்கிறானோ? கிழமேலாக ஸஞ்சரிப்பவனையன்றோ மறைத்தது! (எறி கதிரோன் தன்னை) குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரனையோ இப்படி மறைத்தது? எவ்வளவு மறைத்தாலும் தம் ஒளியாலே எல்லார் கண்ணையும் கரிக்கும் கிரணங்களை மறைக்கமுடியாதபடியான சூரியனையன்றோ மறைத்தது! பூர்ண சூரியக்ரஹணத்தின்போதும் கிரணங்களை மறைக்க முடிவதில்லையே! அவற்றையுமன்றோ மறைத்துவிட்டான்! (முயங்கமருள்) ஒருவரிருவருக்கு மறைத்துக் காண்பித்தாயோ? யுத்தத்தைக் காண்பதற்கு எல்லாப்பிராணிகளும் போர்வீரர்களும் நெருங்கின்ற யுத்தகளத்திலுள்ள அனைவர்க்குமன்றோ மறைத்தான்! (தேராழியால் மறைத்தது என் நீ) பெரும்பாலும் ஆபரணமாயிருப்பதொன்றோ? யுத்தம் செய்வதையே தொழிலாகக்கொண்ட சக்கரத்தாலன்றோ மறைத்தாய்! இதை எப்படி நீ செய்யலாம்? "ஸத்ய ஸங்கல்ப:" [சாந் 8-7-1] [உண்மையான ஸங்கல்பத்தை உடையவன்] என்ற வேதத்துக்குப் பொருந்துமோ நீ செய்த இக்காரியம்?

ஸர்வஸாதாரணமான உறவுக்குச் சேருமோ? ஸத்யஸங்கல்பனுயிருக்கிற இருப்புக்குச் சேருமோ? உன் பெருமைக்குப் போருமோ?, இவை எல்லாவற்றையும் காற்கடைக் கொண்டு இங்ஙனே செய்தருளிற்று எதுக்காக? ஆஸ்ரித

"த்₃யௌ: பதேத் ப்ருதி₂வீ ஶீர்யேத் ஹிமவாங் ஶகலீப₄வேத்।
ஶுஷ்யேத் தோயநிதி₄: க்ருஷ்ணே! ந மே மோக₄ம் வசோ ப₄வேத்॥" [பார-உத்70-48]

[க்ருஷ்ணையே! ஆகாயம் கீழே விழக்கூடும்; பூமி சுக்கலாகக்கூடும்; ஹிமாசலபர்வதம் தூளாகக்கூடும்; ஸமுத்ரம் வற்றக்கூடும்; என்னுடைய வார்த்தை வீணாகாது.] என்று நீ அருளிய வார்த்தைக்குத்தான் சேருமோ இது? "ஆயுதத்தைக் கையால் எடுக்கமாட்டேன்" என்றல்லவோ நான் பிரதிஜ்ஞை செய்தது? இங்கு கையால் எடுத்தேனே? ஸங்கல்பத்தாலன்றோ ஆழியால் சூரியனை மறைத்தேன்? என்று திருவுள்ளமாக, சண்டை செய்வதற்காகவே கையால் எடுத்துப் போரிட்டதும் இல்லையோ? என்கிறார் மேலே,–(போராழிக் கையால் பொருது) போர்புரிவதற்கென்றே ஏற்பட்ட ஸுதர்சனத்தைக் கையில் ஏந்தி பீஷ்மரையும், அவரோடுகூட நிற்பாரையும் துரத்திச் சண்டைசெய்யவில்லையோ நீ? (என் நீ) இதை எப்படிச் செய்தாய்? துரியோதநாதியரோடு, பாண்டவரோடு வாசியில்லாமல் ஸ்வாமியாயிருக்கும் உன் உறவுக்குப் பொருந்துமோ? ஸத்யஸங்கல்பனுன இருப்புக்குப் பொருந்துமோ? உன் பெருமைக்குத்தான் பொருந்துமோ இவை எல்லாவற்றையும் காலின்கீழ் மிதித்துக்கொண்டு (அலட்சியம் செய்து) இப்படிச் செய்தது எதற்காக? (திருமாலே) திருமாலாகையாலே செய்தாய் என்று கருத்து. திருவாகிற பெரியபிராட்டியாரிடம் பெரிய மால் (பித்து) கொண்டிருப்பவனுகையாலே செய்தாய். அடியார்களுக்குப் பக்ஷபாதம் காட்டவேண்டிய விஷயத்தில் அவள் உனக்கும் உவாத்தாக (உபாத்தியாயராக) இருப்பவள். அவளுடைய உபதேசத்தாலே செய்தாயித்தனை என்று கருத்து. இது இவனுடைய ஸத்யஸங்கல்பத்துக்குச் சேருமோ? எனில்: சேரும். பரமபுருஷனுடைய ஸங்கல்பம் எதுவும் வீணாகாது என்பது பொதுவிதி. 'எது செய்தாகிலும், எப்பாடுபட்டாகிலும் என் அடியார்களை ரக்ஷிப்பேன்' என்றும் ஒரு விசேஷஸங்கல்பம் செய்துவைத்திருக்கிறுன் பரமபுருஷன். இந்த விசேஷஸங்கல்பம் பழுதாகாமைக்காக, ஸாமாந்யஸங்கல்பங்களை மாற்றிக்கொள்வதால், ஸத்யஸங்கல்பனுயிருக்கும் தன்மை நிறைவுபெறுமேயொழியக் குறைவுபடாது. 'ஆயுதம் எடுக்கமாட்டேன்' என்றுன் கண்ணன்; 'ஆயுதம் எடுக்கவைப்

விஷயத்தில் ஓரமாகாதே! என்று விதூரராகிறார். தேராழி-ரதாங்கம்.

9. **பொருகோட்டோ ரேனமாய்ப் புக்கிடந்தாய்க்கு அன்றுன்
ஒருகோட்டின் மேல்கிடந்த தன்றே—விரிதோட்ட
சேவடியை நீட்டித் திசைநடுங்க விண்துளங்க
மாவடிவின் நீயளந்த மண்.**

பதவுரை:—விரி தோட்ட சே அடியை—*மலர்ந்த இதழ்களையுடைய தாமரையைப் போன்ற சிவந்த திருவடியை,* **நீட்டி**—*வளரச்செய்து,* **திசை நடுங்க**—*எத்திசையிலுள்ளவர்களும் நடுங்கும்படியும்,* **விண் துளங்க**—*மேலுலகத்திலுள்ளோரும் பயப்படும்படியாகவும்,* **மா வடிவின்**—*(திரிவிக்ரமனாக) பெரிய வடிவுடன்,* **நீ அளந்த**—*நீ அளந்துகொண்ட,* **மண்**-*பூமியானது,* **பொரு கோட்டு**—*போர் செய்யும் தந்தங்களையுடைய,* **ஓர் ஏனமாய்**-*ஒப்பற்ற வராஹமாய்,* **புக்கு இடந்தாய்க்கு**—*(பிரளய ஜலத்தில்) முழுகி எடுத்த உனக்கு,* **அன்று**-*அக்காலத்தில்,* **உன்**-*உன்னுடைய,* **ஒரு கோட்டின் மேல்**—*ஒரு தந்தத்தின் நுனியில்,* **கிடந்த தன்றே**—*அடங்கிக் கிடந்ததல்லவா?*

அவதாரிகை:—*இவ்வளவன்றிக்கே, ஆபத்து முதிர்ந்த வளவில் 'ஆஶ்ரிதர் அநாஶ்ரிதர்' என்று தரம் பாராதே,*

பேன்' என்றார் அன்பரான பீஷ்மர். அவருடைய வார்த்தையை ரக்ஷிப்பதற்காக வேறுவழியில்லாமல் தன் வார்த்தையை மாற்றிக்கொண்ட இது, ஆச்ரிதரக்ஷண ஸத்யஸங்கல்பம் நிறைவு பெறுவதிலேயே முடியும். தேர் ஆழி-தேரின் அவயவமானது சக்கரம்; அதே பெயரைக்கொண்டதாகையாலே ஸுதர்சனமும், 'ரதாங்கம்' [தேரின் அவயவம்] என்று வடமொழியிலும், 'தேராழி' என்று தமிழிலும் உரைக்கப்படுகிறது.

அவதாரிகை:-*இப்படி அடியார்களைத்தான் இவன் ரக்ஷிப்பதோ? மற்றவர்கள் அழிந்தே போகவேண்டியதுதானோ? எனில்: அப்படியன்று; அனைவர்க்கும் ஆபத்துவரும்போது 'அடியார், அல்லாதவர்' என்று பாகுபடுத்தாமல் ஸத்தையுள்ள அனைவரையும் தன் பெருமைக்குத் தகர்தவற்றைச்*

இருந்ததே குடியாகத் தன்னை அழியமாறி நோக்கும் ஸ்வபாவன் என்கிறார்.

உரை:-விகஸிதமான இதழையுடைய தாமரைபோலே, சிவந்த திருவடிகளை வளர்த்து, தி₃கு₃பலக்ஷிதையான பூமியிலுள்ளார் நடுங்கவும் உபரிதநலோகத்திலுள்ளார் நடுங்கவும் பெரிய வடிவையுடையையாய்க்கொண்டு, நீ அளந்து கால்கீழ் இட்டுக்கொண்ட பூமியானது, நிலமகள் முலையில் குங்குமத்தோடு, நிலத்தோடு வாசியற எங்கும் ஜாத்யுசிதமான செருக்காலே பொருதுகொடுவருகிற கொம்புகளை

செய்தும் ரக்ஷிக்கும் தன்மையுடையவன் என்கிறார். மஹாபலியாலும், ப்ரளயத்தாலும் இரண்டுவிதமான ஆபத்துக்கள்வந்தபோது, யாசகனாகவும், மானமிலாப்பன்றியாகவும் தன் பெருமைக்குத் தகாதபடிவந்து ரக்ஷித்தவன் இவனே என்று காட்டுகிறார்.

வ்யா:-(விரிதோட்ட சேவடியை) மலர்ந்த தோடாகிற இதழையுடைய தாமரைபோலே சிவந்த அடியை. விரிதோடு-மலர்ந்ததோட்டை உடைய தாமரை. இவ்வடியைக்கொண்டு காடுமேடையெல்லாம் அளப்பதே! என்கை. (விரிதோட்ட) ஒளிவிரியும் தோடுகளை-குண்டலங்களை-உடையவனே! என்றும் கொள்ளலாம். (சேவடியை நீட்டி) திருவடியை நீட்டிய இச்செயலைச் செய்து; இதன்பயனாக,-(திசை நடுங்க) எத்திசைகளிலேயும் பரந்திருக்கும் பூமியிலுள்ளவர்களும் நடுங்கினார்கள்; (விண் துளங்க) வானத்திலுள்ள "நானே ஈச்வரன்" என்று அபிமானித்திருக்கும் தேவர்களும் நடுங்கினார்கள். திருவடியாலே அடிபட்டு நடுங்கினார்களோ? எனில்; (மாவடிவின்) அனைக்கும் திருவடி அடிக்குமோ? இப்பெரிய வடிவைக்கண்டு பயந்து நடுங்கினார்கள். (நீ அளந்த மண்) இப்படி அளந்து சுவாதீனப்படுத்திக்கொண்ட மண்ணன்றோ இது! இதில் வேறொருவர் உரிமை கொண்டாடமுடியுமோ? என்று கருத்து.

பெரியவடிவையெல்லாம்கொண்டு அளக்கவேண்டியிருந்த இந்த பூமி, வராஹாவதாரத்தில் உன் பல்லின் நுனிக்குக்கூடக் காணவில்லையே! என்று ஆச்சரியப்படுகிறார் மேலே,-(பொருகோட்டு ஓர் ஏனமாய்) பன்றியாய் அவதரிக்கையாலே, அந்த ஜாதிக்குரிய செருக்கோடு கண்டவிடமெல்லாம் தந்தத்தாலே குத்தித் திரிந்தான்! நிலமகள் நாயகனாகையாலே, அவளுடைய ஸ்தனகுங்குமத்திலே உழுதுதிரிவதில் பொருத்தமுண்டு. அதோடு நில்லாமல் அவளுடைய திருமேனியெல்லாம் குத்தித் திரிந்தான்! அவ

யுடைத்தாய், அழகுக்கு அத்விதீயமான வராஹவேஷத்தை உடையனுய்க்கொண்டு, ப்ரளயஜலத்திலே முழுகி, அண்ட பித்தியினின்றும் இடந்தெடுத்துக்கொண்டேறின உனக்கு, அக்காலத்தில் உன் எயிற்றின் ஏகதேசத்திலே ஒரு மறுப் போலே கிடந்ததொன்றன்றோ.

ஆபத்து வந்தால் தலையாலே சுமந்து நோக்குதல், தலையிலே காலை வைத்து நோக்குதல் செய்யுமவனன்றோ நீ? ரக்ஷ்யவர்க்கத்தை நோக்குமளவில் உனக்கு ஒரு நியதி உண்டோ? என்று உகந்து அநுபவிக்கிருர். விரிதோட்ட என்று, விஸ்த்ருதமாய், ப்ரகாசிக்கிற திருத்தோடுகளை உடையவனே! என்று ஸம்போதநமாகவுமாம்.

தாரத்தில் மெய்ப்பாடு இருந்தபடி! (ஓர் ஏனமாய்) மிகத்தாழ்ந்த பன்றி யாய்ப் பிறந்தபோதிலும் அழகுக்கு ஒப்பில்லை. (புக்கு இடந்தாய்க்கு) பிரளயஜலத்திலே முழுகி அண்டச்சுவற்றினின்றும் குத்தி எடுத்துக் கொண்டேறின உனக்கு, (ஏனமாய்ப்புக்கு இடந்தாய்க்கு) நீரிலும் சேற்றி லும் அஞ்சாமல்சென்று பூமியைப் பிரித்தெடுக்கவேண்டிய காரியமாகை யாலே, அதற்கேற்பப் பன்றியுருவைக் கொண்டான் என்று கருத்து. (அன்று) அக்காலத்திலே. (உன் ஒருகோட்டின் மேல் கிடந்ததன்றே) உன்னுடைய தந்தத்தின் ஒருநுனியிலே ஒரு மறுப்போலே இருந்ததன்றோ இந்தப் பூமி. "களிறு மருப்பின் நாப்பண் புள்ளி நிலனும்" [பரிபாடல் 2-32,33,34] [களிறு-வராஹம்] என்றனர் சங்கத்தமிழரும். இப்படிப் புள்ளிபோன்ற பூமியை எடுக்கப் பெரியதான வராஹவடிவைக் கொள்ள வேணுமோ? எனில்: வண்மை மிக்கவன் ஒருவன் நாலுபேருக்குச் சோறிட நினைத்தால் நாற்பதுபேருக்கும் கண்டு மிகும்படியாகச் சோற்றைச் சமைத்து வைப்பதுபோலே, ரக்ஷ்யத்தை (காக்கப்படவேண்டியதை) விஞ்சி நிற்கும் தன் ரக்ஷணமநோரதத்தாலே மிகப்பெரிய வடிவுகொண்டான் என்பர் பரமரஸிகரான பெரியவாச்சான்பிள்ளை.

இவ்வளவால், ஆபத்துவந்த காலத்தில், இவர்களுடைய விலக் காமையையே பற்றிநின்று வராஹாவதாரத்திற்போலே தலையாலே சுமந் தும் ரக்ஷிப்பான்; திரிவிக்கிரமாவதாரத்திற்போலே தலையிலே காலைவைத் தும் ரக்ஷிப்பான் என்றும், ரக்ஷிக்கும்போது பெரியவடிவையோ, சிறிய வடிவையோ, உயர்ந்த வடிவையோ, தாழ்ந்த வடிவையோகொண்டுதான் ரக்ஷிக்கவேண்டும் என்னும் நிர்ப்பந்தம் இவனுக்கு இல்லை என்றும் காட்டி மிகவுகந்து அநுபவித்தாராயிற்று.

10. மண்ணும் மலையும் மறிகடலும் மாருதமும்
விண்ணும் விழுங்கியது மெய்யென்பர்—எண்ணில்
அலகளவு கண்டசீ ராழியாய்க்கு அன்றிவ்
வுலகளவு முண்டோவுன் வாய்.

பதவுரை:—**மண்ணும்**—*பூமியும்*, **மலையும்**—*பர்வதங்களும்*, **மறிகடலும்**—*அலையெறியும் ஸமுத்ரங்களும்*, **மாருதமும்**—*காற்றும்*, **விண்ணும்**—*ஆகாசமும் ஆகிய இவற்றையெல்லாம்*, **விழுங்கியது**—*அமுதுசெய்தது*, **மெய் என்பர்**—*உண்மையென்று (ரிஷிகள்) சொல்லுவர்;* **எண்ணில்**—*(இதை) ஆராய்ந்தால்*, **அலகு அளவுகண்ட சீர் ஆழியாய்க்கு**—*எண்ணிக்கைகளை எல்லை கண்ட (எண்ணிறந்த) கல்யாணகுணங்களையும், திருச்சக்கரத்தையும் உடைய உனக்கு*, **அன்று**—*அப்போது*, **உன் வாய்**—*உன்னுடைய திருவாய்*, **இவ்வுலகளவும் உண்டோ?**—*இவ்வுலகளவு பரப்பையுடையதாய் இருந்ததோ?*

அவ:—*இப்படி பெரியவடிவைக்கொண்டு சிறியசெயலைச் செய்து நோக்குமளவன்றிக்கே, சிறியவடிவைக்கொண்டு பெரிய செயலைச்செய்து நோக்கிலும் நோக்கும் என்கிறார்.*

உரை:—*ஸர்வாத$_4$ாரமான பூமியும், அதுக்கு தாரகமான குலபர்வதங்களும், அத்தைச் சூழ்ந்து கிடந்து அலை*

அவ:—முன் பாசுரத்தில் சொன்னபடி பெரிய வராஹவடிவைக் கொண்டு, பல்லிடுக்கிற்கும் போராத பூமியைத் தூக்கும் சிறிய செயலைச் செய்து ரக்ஷிப்பதுமாத்திரமல்லாமல், சிறியதோர் ஆலந்தளிரில் சிறு குழந்தைவடிவோடு எல்லா உலகையும் விழுங்குவதாகிய பெரிய செயலைச் செய்து இவன் ரக்ஷிப்பதும் உண்டு என்கிறார். ரக்ஷிக்கும்போது இன்ன செயலைச்செய்து ரக்ஷிப்பதெனும் நியமமில்லை. சேராத செயல்களைச் செய்தும் ரக்ஷிப்பவன் நீயன்றோ என்கிறார்.

வ்யா:—(மண்ணும்) உலகிலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமான பூமியும். (மலையும்) அதற்கும் உறுதியை அளிப்பவையாகையாலே ஆதாரமாய் பூ$_4$த$_4$ரம் எனப்படும் மலைகளும். (மறிகடலும்) அந்த பூமியைச் சூழ்ந்துநின்று அலைவீசுகிற கடல்களும். (மாருதமும்) அந்த

யெறிகிற ஸமுத்ரங்களும், ததந்தர்வர்த்திகளுக்கு உச்ச்₂வாஸாதி₃ஹேதுவான காற்றும், அதுக்கு அவகாஶப்ரத₃மான ஆகாஶமும், இவற்றையடையத் திருவயிற்றிலே ஒரு புடையிலே அடங்கும்படி அமுதுசெய்தருளின இத்தை, பரமார்த்த₂மென்று உன் ஶக்திஸமார்த்₂யத்தைத் தறை காணவல்ல வைதிகபுருஷர்கள் சொல்லாநின்றார்கள். உன் படியைப் பரிச்சே₂தி₃த்து அநுஸந்தி₄க்குமளவில் அளவிடுகைக்குப் பரிகரமான ஆயுதங்களையும் பரிச்சேதித்து எல்லைகண்டிருக்கிற அஸங்க்யாதமான கல்யாணகுணங்களை

பூமியிலிருக்கும் ஜீவராசிகளுக்கு மூச்சுவிடுதல், உயிர்தரித்தல் முதலானவற்றுக்குக் காரணமான காற்றும். (விண்ணும்) முற்கூறிய மண்ணும், மலையும், மறிகடலும், மாருதமுமான பொருள்கள் இருக்க இடமளிக்கும் ஆகாயமும். (விழுங்கியது மெய்யென்பர்) இவையெல்லாவற்றையும், வெண்ணை விழுங்குவதுபோலே, திருவயிற்றில் ஒரு மூலையிலே அடங்கும்படி அமுதுசெய்தருளின இச்செயலை உண்மையானதே என்று உண்மையே உரைக்கும் ரிஷிகளும் ஆழ்வார்களும் உரைப்பார்கள். (மெய்யென்பர்) உன் சக்தியையும், ஸாமர்த்தியத்தையும், கடலில் தரைகாண்பதுபோலே காணவல்ல மார்க்கண்டேயர் முதலான மஹான்கள், **''தத₃பச்யமஹம் ஸர்வம் தஸ்ய குக்ஷௌ மஹாத்மந:''** [பார-ஆரண்ய] [அந்த எல்லா உலகையும் அந்த மஹாபுருஷனின் வயிற்றில் நான் பார்த்தேன்.] என்று உரைப்பர்; (மெய் என்பர்) இந்திரஜாலமன்ற; உண்மைக்காட்சியே என்பர். (எண்ணில்) உன் தன்மையை அளவிட நினைத்தோமாகில். (அலகு) அளக்கும் ஆயுதம் (கருவி) 'அலகு' எனப்படும். அது லக்ஷம், கோடி, சங்கம், மஹாசங்கம், பத்மம், குமுதம் என்று பலவகைப்படும். தமிழரும் பரிபாடலிலே "நெய்தலும், குவளையும், ஆம்பலும், சங்கமும், மையில் கமலமும் வெள்ளமும்" என்று இவ்வலகுகளைக் குறிப்பிட்டனர். (அலகு அளவுகண்ட சீர்) அவ்வலகுகளையே எல்லைகண்ட எண்ணிக்கையற்ற குணங்களையுடையவன் நீ. ''பல அடுக்கல் ஆம்பல் இனைத்தென எண் வரம்பு அறியா'' [பரிபாடல் 3-45] என்றனர் தமிழரும்.

த₄ாதூநாமிவ ஶைலேந்த்₄ரோ கு₃ணாநாமாகரோ மஹாந்।

[ரா-கி 15-21 தாராவாக்யம்]

யும், திருவாழியையும் உடையையான உனக்கு இவற்றை யெடுத்துத் திருவயிற்றிலே வைத்தருளின அன்று இஜ் ஜகத்தோபாதியும் பெருமையுடைத்தோ உன்னுடைய திருப்பவளமானது?

இந்தச் சிறிய திருப்பவளத்தைக்கொண்டு பெரிய ஜகத்தை அமுதுசெய்தருளின இவ்வாச்சர்யம் என்னயிருக் கிறதோ? என்று ஈடுபடுகிறுர்.

11. **வாயவனை யல்லது வாழ்த்தாது கையுலகம்**
தாயவனை யல்லது தாந்தொழா—பேய்முலைநஞ்
சூணாக வுண்டா னுருவொடு பேரல்லால்
காணாகண் கேளா செவி.

பதவுரை:—வாய்—(என்னுடைய) வாயானது, **அவனை அல்லது**—எம்பெருமானைத் தவிர, **வாழ்த்தாது**—(மற்றொன்றை) வாழ்த்தாது; **கை தாம்**—கைகளோவெனில், **உலகம் தாயவனை அல்லது** — உலகங்களையெல்லாம் தாவியளந்து கொண்ட திரிவிக்கிரமனைத்தவிர, **தொழா**—(வேறொருவனைத்)

[ஒரு சிறந்த மலை தாதுக்களுக்கெல்லாம் இருப்பிடமாயிருப்பதுபோல், ஸ்ரீராமபிரானும் குணங்களுக்கெல்லாம் பெரியதோர் இருப்பிடமாவர்.]

தே தமூசுர் மஹாத்மாநாம் பௌரஜாநபதைஃஸ் ஸஹ।
ப$_3$ஹவோ ந்ருப கல்$_3$யாணகுணா:புத்ரஸ்ய ஸந்தி தே॥

[ரா-அ 2-26]

[நகரத்திலும், கிராமங்களிலும் உள்ள ஜனங்களுடன் கூடிய அவர்கள் மஹாத்மாவான அந்த தசரதரிடம் (பின்வருமாறு) சொன்னுர்கள்:— "அரசே! உம்முடைய புத்திரனிடம் பல கல்யாண குணங்கள் இருக்கின்றன"] என்றது ஸ்ரீராமாயணம். (ஆழியாய்க்கு) குணங்களை மாத்திரமல்லாமல் ஸுதர்சனம் முதலான ஆயுதங்களையும் உடைய உனக்கு. (அன்று) இவற்றை விழுங்கிய அன்று. (இவ்வுலகளவும் உண்டோ உன் வாய்) சிறுகுழந்தையான உன் வாய், மிகப்பரந்துகிடக்கும் இவ்வுல களவு பெரிதாயிருந்ததோ? இல்லையே! மிகச்சிறிய வாயாலே, மண்ணும் மலையும் மறிகடலும் மாருதமும் விண்ணுமான மிகப்பெரிய பொருள்களை விழுங்கி இவற்றைப் பிரளயத்தில் நோவுபடாதபடி ரக்ஷித்த ஆச்சரியத்தை என்னென்று சொல்வது? என்று ஈடுபடுகிறுர்.

தொழமாட்டா; **பேய் முலை நஞ்சு**—பேயான பூதனையின் முலையிலிருக்கும் விஷத்தை, **ஊணாக உண்டான்**—(தாரகமான) உணவாக நினைத்து அமுதுசெய்த பெருமானுடைய, **உருவொடு பேரல்லால்**—திருவுருவத்தையும், திருநாமத்தையுமல்லது (வேறெதையும்) **கண் காணா, செவி கேளா**—கண்கள் பார்க்கமாட்டா; காதுகள் கேட்கமாட்டா.

அவ:—இப்படி அவன்படிகளை அநுபவித்துக்கொண்டு போருகிற வழியாலே, தமக்கு அவன்பக்கலுண்டான அபி$_4$நிவேஶத்தைப் பேசினார் கீழ்; இப்போது கரணியான தம்மிலுங் காட்டில் தம்முடைய கரணங்களுக்கு அவன்பக்கல் உண்டான அபி$_4$நிவேஶாதிஶயத்தைப் பேசுகிறார்.

உரை:—என்னிலுங்காட்டில் 'அவனெங்குற்றான்' என்று பார்க்கிற என்னுடைய வாகி$_3$ந்த்$_3$ரியமானது அவனையொழியப் புகழாது. கைகளானவை தரதமவிப$_4$ாக$_3$ம் பாராதே, இருந்ததே குடியாக லோகத்தையடைய அநாயாஸேந

' **அவ:**—இவ்வண்ணமாகச் சென்ற பத்துப் பாசுரங்களில் அவன் பெருமைகளை அநுபவித்துக்கொண்டு போகும் வழியாலே, தமக்கு அவனிடமுள்ள பேரன்பைப் பேசினார். இப்போது கரணங்களை (இந்திரியங்களை) உடையவனான தம்மைக்காட்டிலும் தம்முடைய கரணங்களுக்கு அவனிடம் அன்பு விஞ்சியிருக்கிறபடியைக் காட்டுகிறார். "முடியானே" [திருவாய் 3-8] என்னும் திருவாய்மொழியில் நம்மாழ்வாருக்கு உண்டான நிலை இவருக்கும் உண்டானபடியைப் பேசுகிறது இப்பாசுரம்.

வ்யா:—(வாய்) என்னைக்காட்டிலும் பேராவலோடு 'அவன் எங்கேயிருக்கிறான்?' என்று தேடும் என்னுடைய வாய். (அவனையல்லது வாழ்த்தாது) அவனைத்தவிர வேறொருவனைப் புகழாது. நான் வாழ்த்த இசைந்தாலும் என் வாய் அவனைத்தவிர மற்றொருவனை வாழ்த்தாது. வாய் மாத்திரமே இப்படியோ? எனில்: (கை உலகம் தாயவனையல்லது தாம் தொழா) உயர்ந்தார் தாழ்ந்தார் என்னும் வித்தியாசம் பாராமல் உலகையெல்லாம் விளையாட்டாகத் தாவியளந்துகொண்ட நீர்மைமிக்க திரிவிக்கிரமனைத்தவிர மற்றொருவனை என் கை தொழாது. (தாம்) நான் தொழச்சொன்னாலும் என் கை மறந்தும் புறந்தொழாது. (தாயவனையல்லது தாம் தொழா) தொழாதவர் தலைகளிலும் திருவடியை

அளந்துகொண்ட ஸ்ரீபாதங்களுனவனையொழியத் தாம் தொழப்பாராது. பூதனையுடைய முலையில் விஷத்தை த்வாரக மாக விரும்பி அமுதுசெய்தவனுடைய வடிவையொழியக் கண் காணாது; குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திரு நாமங்களையொழியச் செவி கேளாது.

12. **செவிவாய்கண் மூக்குடலென் றைம்புலனும் செந்தீ**
புவிகால்நீர் விண்பூத மைந்தும்—அவியாத
ஞானமும் வேள்வியும் நல்லறமு மென்பரே
ஏனமாய் நின்றார்க் கியல்வு.

பதவுரை:—செவி வாய் கண் மூக்கு உடல் என்று ஐம்பு லனும்—காது, வாய், கண், மூக்கு, த்வக் என்னும் ஐந்து ஞானேந்திரியங்களும், **செந்தீ புவி கால் நீர் விண் பூதம் ஐந் தும்**—அக்கினி, பூமி, காற்று, ஜலம், ஆகாசம் என்னும் பஞ்ச பூதங்களாலான தேஹமும், **அவியாத ஞானமும்**—நாசமற்ற தான பக்திரூபமான ஞானமும், **வேள்வியும்**— (இந்த பக் திக்கு ஸாதனமான) அக்நிஹோத்ரம் முதலிய கர்மங்களும், **நல்லறமும்**— (பக்திக்கு வ்ருத்தியைச் செய்யும்) விவேகம்,

---

வைத்துத் தொழுவித்துக்கொள்ளுமவனை, நான் வேண்டாவென்றாலும், அவனே வேண்டாவென்றாலும் தொழாமலிருப்பதில்லை. (பேய் முலைநஞ்சு ஊணாக உண்டான் உருவொடு பேரல்லால் காணா கண் கேளா செவி) பேயான பூதனை முலையிலே நஞ்சைத்தடவிவந்து, அதைக் கொடாவிடில் தான் உயிர்தரிக்கமாட்டாதவள்போலே நஞ்சைக்கொடுக்க, அதை உண்ணா விடில் உயிர்தரிக்கமாட்டாதவன்போலே அந்நஞ்சையும் அவளுயிரையும் உடன் உண்டவனுடைய வடிவழகையொழிய மற்றொன்றைக் கண் காணாது; அவனுடைய குணங்களையும் செயல்களையும் சொல்லும் திரு நாமங்களைத்தவிர செவிகள் மற்றொன்றைக் கேட்கமாட்டா. (நஞ்சு ஊணாக உண்டான்...) அடியார்க்காகத் திருவுலகளந்தருளியதில் தான் ஓரிந் திரியம் ஈடுபட்டதென்றால், அன்பற்ற பூதனையை முடித்ததிலும் சில இந் திரியங்கள் ஈடுபட்டன. ஹ்ருஷீகேசத்வகையாலே-(ஹ்ருஷீகங்கள் எனப் படும் இந்திரியங்களுக்கு ஈசத்வகையாலே) இப்படி எல்லா இந்திரியங்களும் அவனுக்கே உரிமைப்பட்டவையாயின.

விமோகம் முதலான ஆத்மகுணங்களும், **ஏனமாய் நின்றார்க்கு**-(அபேக்ஷையை எதிர்பாராமல் தானே ரக்ஷித்தருளிய)வராஹ மூர்த்தியான எம்பெருமானை அடைவதற்கு, **இயல்வு என்பரே**-ஸாதனம் என்று சொல்லுகிறார்களே! (என்ன அறிவுகேடு!)

அவ:—கீழ் ஸமாஶ்ரயணீயனாகச் சொன்னவனை ஆச்ர யிக்குமிடத்தில் தத$_3$நுரூபமான ஸாத$_4$நம் பக்தியென்கிறார்.

உரை:—ச்ரோத்ர ஜிஹ்வா சக்ஷுர் க்$_4$ராண த்வக்குக ளாகிற ஜ்ஞாநேந்த்ரியங்களைந்தும், தேஜ: ப்ருதி$_2$வீ வாயு ஜலாகாஶங்களாகிற பூதபஞ்சகமும், தது$_3$பலக்ஷிதமான ஶரீர மும், இந்தக் கரணகளேப$_3$ரங்களால் ஸாதி$_4$க்கப்படுமதாய் அவிச்சி$_2$ந்ந ஸ்ம்ருதிஸந்தாநரூபமான ப$_4$க்திரூபாபந்நஜ்ஞாந

அவ:—கீழ்ப்பாட்டில், அடையத்தக்க ப்ராப்யமாகச் சொல்லப்பட்ட வனை அடையும்போது, அவனையடைவிக்கத் தகுந்த ஸாதனம் பக்தி என்கிறார். தம்முடைய ஸாத்யபக்தியைச் சொல்லுவதாகவுமாம். தானே உபாயமாகவும், உபேயமாகவுமிருக்க, சிலர் பக்தியை இவனையடையும் உபாயமாகக் கொள்வதே! என்று கூறுகிறாராகவுமாம். பக்திபரமான முதல் நிர்வாஹத்தை முதலிலும் ப்ரபத்திபரமான பின் நிர்வாஹங்களைப் பின்பும் காட்டுவோம்.

வ்யா:–(செவி வாய் கண் மூக்கு உடல் என்று ஐம்புலனும் இயல்வு) மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐந்து ஞானேந்திரியங்களும், ஞானவிசேஷமான (அறிவுரூபமான) பக்திக்கு உபகரணமாயிருப்பதன் மூலம் பரமபுருஷனையடைய உபாயமாகின்றன. ஐந்து ஞானேந்திரியங் களைச் சொன்னது கருமேந்திரியங்களைந்துக்கும், மனமாகிற இந்திரியத் திற்கும் உபலக்ஷணம். (செந்தீ புவி கால், நீர் விண் பூதம் ஐந்தும் இயல்வு) தீ, நிலம், காற்று, நீர், ஆகாயம் என்னும் ஐந்து பதங்களும், இவற்றாலே யான சரீரத்தை உபலக்ஷணமுறையாலே காட்டுகிறது; **"சரீரமாத்$_3$யம் க$_2$லு த$_4$ர்மஸாத$_4$நம்"** [குமாரஸம்பவம் 5-33] [சரீரமே முதல் தர்ம ஸாதனமாகும்.] என்கிறபடியே சரீரமும், இந்திரியங்களுமிருந்தால்தான் பக்திசெய்யமுடியுமாகையாலே பக்திக்கு உதவும் இவை எம்பெருமானை யடைய உபாயங்களெனப்படுகின்றன. (அவியாத ஞானமும் இயல்வு) **"தைலத$_4$ாராவத$_3$விச்சிந்ந ஸ்ம்ருதிஸந்தாநரூபம் த்$_4$யாநம்"** [எண்ணெய்த் தாரைபோலே இடைவிடாத நினைவுத்தாரையாயிருப்பது பக்தி] **என்று**

மும், ப$_4$க்த்யுத்பத்தி விவ்ருத்தி$_4$ஹேதுவாகப் ப$_2$லஸங்க$_3$கர்த்ருத்வத்யாக$_3$பூர்வகமாகப் பண்ணும் யாக$_3$ாதி$_3$கர்மங்களும், நாள்தோறும் பக்தியை வளர்க்கக்கடவ விவேக விமோகாதி$_3$களும், ஆந்ருஶம்ஸ்ய த$_3$ாநாதி$_3$களுமாகிற விலக்ஷண தர்ம

எம்பெருமானுர் ஸ்ரீபாஷ்யத்தில் ஜிஜ்ஞாஸாதிகரண லகுஸித்தாந்தத்தில் அருளியபடியே இடைவிடாத ஞானரூபமாயிருக்கும் பக்தியே எம்பெருமானையடைய உபாயமென்பர். (அவியாத ஞானமும்) கர்மயோகத்திலடங்கிய ஞானமும் என்றுமாம். (வேள்வியும் இயல்வு என்பர்)

அக்நிஹோத்ராதி$_3$ து தத்கார்யாயைவ தத்$_3$த$_3$ர்சநாத்
[ப்ர-ஸூ 4-1-16]

[அக்நிஹோத்ரம் முதலிய ஆச்ரமகர்மம், பக்தியின் உத்பத்தியாகிற கார்யத்தின் பொருட்டே அநுஷ்டிக்கப்படவேண்டும்; அப்படியே ச்ருதி காணப்படுவதால்.]

ஆப்ரயாணுத் தத்ராபி ஹி த்$_3$ருஷ்டம் *[ப்ர-ஸூ 4-1-12]*

[(வித்யை) சாகும் வரையில் அநுஷ்டிக்கப்பட வேண்டியதே; அந்த எல்லாக் காலங்களிலும் (உபாஸநவிதி) காணப்படுகிறதன்றே.]

தமேதம் வேத$_3$ாநுவசநேந ப்$_3$ராஹ்மணு விவிதி$_3$ஷந்தி
யஜ்ஞேந த$_3$ாநேந தபஸாऽநாஶகேந *[ப்ருஹ 6-4-22]*

[ப்ரஹ்மஜ்ஞானிகள், இந்தப் பரமாத்மாவை வேதாத்யயனத்தினுலும், யஜ்ஞத்தினுலும், தானத்தினுலும், (பலத்தில்) ஆசையற்ற தபஸ்ஸினுலும் அறிய விரும்புகின்ருர்கள்.] என்று சொல்லுகிறபடியே, பக்தியோகம் உண்டாவதற்காகவும், வளர்வதற்காகவும், பலத்தில் பற்றும், 'நான் செய்கிறேன்' என்னும் எண்ணமுமில்லாமல் செய்யப்படும் யாகம் முதலானவையான கர்மயோகமும் பரமபுருஷனையடைய உபாயமென்பர். (நல்லறமும் இயல்வு என்பர்) "**தல்லப்$_3$தி$_4$ர் விவேக விமோகாப்$_4$யாஸ க்ரியா கல்யாண அநவஸாத$_3$ அநுத்$_3$த$_4$ர்ஷேப்$_4$ய:**" [1. அந்நசுத்தியாலுண்டாகும் சரீரசுத்தியாகிற **விவேகம்** 2. விருப்பங்களில் பற்றற்றிருக்கையாகிற **விமோகம்** 3. பகவத்விஷயத்தில் பலகால் பழகுகையாகிற **அப்யாஸம்** 4. பஞ்சமஹாயஜ்ஞம் முதலியவற்றை இயன்ற வரையில் அநுஷ்டிக்கையாகிற **கிரியை.** 5. உண்மை, நேர்மை, இரக்கம் கொடை, கொல்லாமை, பேராசையின்மை ஆகிய **கல்யாணங்கள்** 6. மனவருத்தமின்மை 7. அதிஸந்தோஷமின்மை என்னும் ஏழு ஸாதனங்

மும், ஸர்வஸுலப$_4$னாய் ஆபத்ஸகனாய் நின்ற ஸர்வேச்வர னுக்கு ஸத்ருஶஸாத$_4$னம் என்று வேதவைதிகபுருஷர்கள் சொல்லாநின்றார்கள். "**भक्तितः**" (ப$_4$க்தித:) என்றும், "**भक्त्या त्वनन्यया शक्यः**" (ப$_4$க்த்யா த்வநந்யயா ஶக்ய:) என்றும் சொல்லக்கடவதிறே.

களாலும் பக்தியுண்டாகிறது.] என்று வாக்யகாரரால் சொல்லப்பட்ட நல்ல தர்மங்களாகிற விவேகம் விமோகம் முதலியவையும் எம்பெருமானை யடைய உபாயமென்பர். உலகில் நல்லோரனைவராலும் நல்ல தர்மங்களாக இசையப்பட்ட இரக்கம், கொடை முதலானவற்றை 'நல்லறம்' என்கிறதாகவுமாம். (ஏனமாய் நின்றார்க்கு இயல்வென்பர்) அனைவர்க்கும் எளியவனாய், ப்ரளயாபத்தில் பூமியை ரக்ஷித்தவனான வராஹமூர்த்தியை அடைய இவற்றையெல்லாம் உபாயமென்பர். இயல்வு என்பது ப்ரகாரத்தைச் சொல்லுவதாய், இங்கு அவனையடையும் ப்ரகாரமான (வழியான) உபாயத்தைச் சொல்லுகிறது. (இயல்வு என்பர்) அவனையடையத்தக்க வழி என்று வேதமும் வைதிகர்களும் சொல்லுவர்கள். "**தமேவம் வித்$_3$வாநம்ருத இஹ ப$_4$வதி**" *[பு-ஸூ]* *[அவனை இப்படி அறிபவன் இப்பிறப்பில் மோக்ஷமடைகிறான்]* "**ப$_4$க்த்யா த்வநந்யயா சக்ய:**" *[கீதை11-54]* *[அநந்ய பக்தியினாலேயே நான் அடையத்தக்கவன்]* "**ப$_4$க்திக்ரீதோ ஜநார்த்த$_3$ந:**" *[பக்தியினால் விலைக்கு வாங்கப்படுபவன் ஜநார்த்தனன்]* என்று சொல்லப்பட்டதன்றோ. "என்பரே" என்ற ஏகாரம் சாஸ்திரங்களில் பிரஸித்தியைக் காட்டுகிறது.

ஆழ்வார்கள் ப்ரபத்திநிஷ்டர்களாகையாலே, இப்பாசுரம் ஸாதந பக்தியைச் சொல்லுகிறது என்று கொள்ளாமல், ஆழ்வாருடைய அநுபவத்துக்கு உறுப்பான ஸாத்யபக்தியைச் சொல்லுகிறது என்று கொள்வதும் உண்டு. முன் பாசுரத்திற் சொன்ன செவி வாய் கண் முதலான ஐந்து இந்திரியங்களும், புவி கால் நீர் முதலான ஐந்து பூதங்களாலான சரீரமும், கர்மங்களும், ஆத்மகுணங்களும், இவற்றைத் துணைகொண்ட ஞானரூபமான பக்தியும் "மயர்வறமதிநலமருளினன்" [திருவாய்1-1-1] என்கிறபடியே ப்ரபந்நாதிகாரிகளுக்கு, ஆபத்துக்காலத்தில் நிர்ஹேதுகமாக பூமிக்கு உதவிய அவனுடைய நிர்ஹேதுககிருபையாலே உண்டாகின்றன. இவையெல்லாம் அவனையநுபவிப்பதற்கு உறுப்பாகின்றன என்று கருத்து. இயல்வு-என்றது அவனையநுபவிக்கும் ப்ரகாரம் என்றபடி. என்பரே என்றது இவ்வர்த்தமும் வேதவைதிககோஷ்டியில் பிரஸித்தம் என்றபடி.

அங்ஙனன்றிக்கே. தமக்கு போ₄கோ₃பகரணமான ப₄க்தியை உபாஸகர் உபாயமாக அநுஷ்டிக்கும் கட்டளை யைச் சொல்லி ப₄க்தியை க்ஷேபித்து ப்ரபத்தியை அருளிச் செய்கிறாராகவுமாம். அப்போதைக்கு, "ஏனமாய் நின்றார்க்கு நல்லறமான இவை இயல்வு என்பர்; தானே வந்து ஸந்நி ஹிதனாய் ரக்ஷிக்குமவனைப் பெறுகைக்கு இவற்றை ஸத்₃ரூப ஸாத₄நமென்று சொல்லாநிற்பர்கள்; என்ன அறிவிலி களோ!" என்று க்ஷேபமாகக் கடவது. "ஞானப்பிரானை யல்லால் இல்லை நான்கண்ட நல்லது" என்றிறே தம்முடைய ஸித்₃த₄ாந்தம்.

மூன்றாவதொரு விதமாகவும் இப்பாசுரத்துக்குப் பொருள் கொள்ள லாம். ஆபத்துக் காலத்தில் அபேக்ஷையை எதிர்பாராமல் தானே உதவும் உறவுடையவனைப் பெறுவதற்கு வேலைசெய்து கூலி கொள்வாரைப் போலே, நமக்கு அவனையனுபவிக்க உறுப்பான பக்தியை பக்திநிஷ்டர்கள் உபாயமாக அனுஷ்டித்துப் பலன்பெறும் முறையைச்சொல்லி, ஸாதனபக்தியை நிந்தித்து, அர்த்தாத் ப்ரபத்தியை அருளிச்செய்கிறார் என்கை.

(ஏனமாய் நின்றார்க்கு) ஆரபேக்ஷித்து ஆபத்துக் காலத்தில் மாசுடம் பில் நீர்வாரா மானமிலாப் பன்றியுருவையும் எடுத்து ரக்ஷித்தான்? ஸ்வப்ராப்தி விரோதியான ப்ரவ்ருத்தியினின்றும் நிவ்ருத்தியடைவதையே கொண்டு உதவுமவனைப்பெற, ப்ரவ்ருத்தியிலே கைவைப்பதே! (செவி வாய் கண் மூக்குடலென்றைம்புலனும்...பூதமைந்தும், அவியாத ஞானமும் வேள்வியும் நல்லறமும் இயல்வு என்பரே) அவனை அனுபவிக்க உறுப் பாக அவன் கொடுத்த இந்திரியங்கள், சரீரம் முதலானவற்றை அவனை யடையத் தகுந்த ஸாதனம் என்று சிலர் கருதி அவற்றில் கைவைக்கிறார் களே! இது என்ன அறிவுகேடு! (ஏனமாய் நின்றார்க்கு இயல்வு என்பரே) ஆபத்துக்காலத்தில் அபேக்ஷாநிரபேக்ஷமாகத்தானே தகாத செயலைச் செய் தும் ரக்ஷிப்பவனைப்பெற இவற்றை ஸாதனமென்பதே! "ஏனத்துருவா யிடந்த பிரானையல்லால் இல்லை நான்கண்ட நல்லதுவே" [திருவிருத்தம்99] என்ற நம்மாழ்வாரைப்போலே அருளுகிறார். இவருடைய ஸித்தாந்தமும் இதுவேயன்றோ.

13. இயல்வாக வீன்துழாயா னடிக்கே செல்ல
முயல்வா ரியலமரர் முன்னம்—இயல்வாக
நீதியா லோதி நியமங்களால் பரவ
ஆதியாய் நின்று ரவர்.

பதவுரை:—**முன்னம்**—*அநாதிகாலமாக,* **இயல் அமரர்**—*யோக்யதையை உடையவரான நித்யஸூரிகள்,* **ஈன் துழாயான் அடிக்கே செல்ல**—*அழகிய திருத்துழாயை அணிந்துள்ள புருஷோத்தமனுடைய திருவடிகளிலே அணுகுவதற்கு,* **இயல்வாக**—*தகுதியாக,* **முயல்வார்**—*முயற்சி செய்வார்கள்;* **இயல்வாக**—*(மற்றவர்களுக்கும்) தகுந்தபடி,* **நீதியால் ஓதி**—*முறைப்படி திருநாமங்களைச் சொல்லி,* **நியமங்களால் பரவ**—*சாஸ்த்ரநியமங்களாலே புகழும்படியாக,* **அவர்**—*அந்த எம்பெருமான்,* **ஆதி ஆய் நின்றார்**—*(சேதனனை விஷயீகரிப்பதில்) முற்பாடராயிருந்தார்.*

அவ:—*அவனை நேர்கொடு நேரே கிட்டிப் பரிமாறுகைக்கு அதிகாரிகள் நித்ய ஸூரிகளே; இப்படியிருக்கச் செய்தேயும், ஸம்ஸாரிகளான நம்போல்வார்க்கும் ஆச்ரயிக்கலாம்படி தன்னை ஸுலப₄னாக்கிவைக்கும் என்கிறார்.*

உரை:—*ஐச்வர்யஸூசகமான அழகிய திருத்துழாயை உடையனான ஸர்வேச்வரன் திருவடிகளிலே கிட்ட ஸத்₃ரு*

அவதாரிகை:—*அவனை உள்ளபடி அறிந்து அநுபவிப்பதற்கு அதிகாரிகள் நித்யஸூரிகளும், "வாயவனையல்லது வாழ்த்தாது" என்னும்படியான நீரும் ஆகக்கூடும். ஸாமாந்யரான ஸம்ஸாரிகள் மிகப்பெரியவனான அவனை எப்படி ஆச்ரயிப்பது? எனில்: அவர்களும் தன்னை அடையலாம்படி, தான் முற்படுவான் என்கிறார். அநுபவிக்க உபகரணங்களையும் கொடுத்து, ருசியையும் உண்டாக்கி, உபாயமாகவுமாகி, பலனையும் தானே அளிப்பான் அவன் என்கிறார்.*

வ்யா:—(ஈன் துழாயானடிக்கே செல்ல) *சக்ரவர்த்திகள் மாலையிட்டிருப்பார்கள். உபயவிபூதிக்கும் ஏகசக்ராதிபதி தானே என்பதை உணர்த்தும் திருத்துழாயைத் தோள்மாலையாக உடைய ஸர்வேச்வரன் திரு*

மாக உத்₃யோகி₃ப்பார் முந்துறமுன்னம் அதுக்கீடான யோக்₃யதையுடையரான நித்யஸூரிகள்; அல்லாத நம் போல்வாரும் ஸ்வரவர்ணாதிகளுக்கு நழுவுதல் வாராதபடி அழகிதாகக்கொண்டு சாஸ்த்ரோக்தமான வ்ரதநியமாதி க்ரமங்களோடே அத்₄யயநத்தைப்பண்ணி, அதீ₄தமான வேதத்தின் அர்த்தத்தை ஆசார்யன் பக்கலிலே கேட்டு மந நம்பண்ணி அர்ச்சநப்ரணாமகீர்த்தநாதிகளோடேகூட அந வரதப₄ாவனை பண்ணுகையாகிற நியமங்களாலே ப₄க்திபர வஶராய்ப் பரவும்படிக்கீடாக அப்படிப்பட்ட பெருமை யுடையரானவர், **''பூர்வஜ''** (பூர்வஜ) என்கிறபடியே ருச்யுத்

வடிகளை அடைய. (இயலமரர்) இயற்கையிலேயே அறிவையுடைய நித்யஸூரிகள். (முன்னம் இயல்வாக முயல்வார்) தாங்களே முற்பட்டு அவனுடைய பெருமைக்குத் தகுதியாகப் பெருமுயற்சிசெய்வர். சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி நன்னீர் ஆட்டி அந்தூபம் தராநிற்பர்கள். (இயல்வாக) இதுவே யாத்ரையாயிருப்பர் என்றுமாம். (முன்னம் இயல மரர்) அநாதிகாலமாக இயற்கையறிவையுடைய நித்யஸூரிகள் என்றுமாம்.

'இயலமரரான அவர்களிப்படியிருக்கக் குறையில்லை. ஸம்ஸாரிகள் அறப் பெரியவனான அவனை அடைவதெப்படி?' எனில்: அவர்கள் விஷயத்தில் இவன் முற்படுவான் என்கிறார்: (இயல்வாக) தங்கள் சக்திக்குத்தக்கபடி, **''மந்த்ரோ ஹீந: ஸ்வரதோ வர்ணதோ வா யஜமாநம் ஹிநஸ்தி''** [பாணிநிசிக்ஷா] [ஸ்வரத்திலாவது, எழுத்திலாவது நழுவின மந்திரம் சொல்லுபவனைக் கெடுக்கும்] என்கிறபடியே ஸ்வரம், வர்ணம் முதலான வற்றில் நழுவாதபடி அழகாகத் துதிக்க என்றுமாம். (நீதியால் ஓதி) சாஸ்திரத்தில் சொன்ன விரதம், நியமம் முதலான முறைகள் தப்பாதபடி அத்₄யயநம் செய்து. (நியமங்களால் பரவ) ஓதிய வேதத்தின் உட்பொருளை ஆசாரியனிடம் கேட்பது, அதை மனனம் செய்வது, அர்ச்சிப்பது, வணங்கு வது, நாமஸங்கீர்த்தனம் செய்வது, பகவத் பாகவத பாதஸேவைசெய்வது முதலானவற்றோடு அவனை எப்போதும் தியானிப்பதாகிற நியமங்களாலே பக்திபரவசர்களாகத் துதிக்கும்படியாக. (பரவ) துதிப்பதைச் சொன்னது மனோவாக்காயங்கள் மூன்றாலும் ஆச்ரயிப்பதற்கு உபலக்ஷணம். (பரவ ஆதியாய் நின்றார் அவர்) நித்யஸூரிகளும் பெருமுயற்சிசெய்து ஆச்ரயிக்க வேண்டிய மிகப்பெரியவன், ஸம்ஸாரிகளான நம்மைப்போல்வாரும் ஆச்ர யிக்கலாம்படி முற்பட்டுநின்றார். **''பூர்வோ யோ தே₃வேப்₄யோ ஜாத:''** [பு-ஸூ] [எவன் தேவர்களுக்காக முற்பட்டுப் பிறந்தானோ] **''மஹாபுருஷ**

பாதகராய்க்கொண்டு முற்பாடராய் நின்றார். ஆகையாலே நமக்கெல்லாம் ஆஶ்ரயிக்கக் குறையில்லை என்று கருத்து. இயலமரர்–இயற்றியை உடையரான, யோக்யதையை உடையரான நித்யஸூரிகள் என்றபடி.

14. **அவரவர் தாந்தா மறிந்தவா றேத்தி**
இவரிவ ரெம்பெருமா னென்று—சுவர்மிசைச்
சார்த்தியும் வைத்தும் தொழுவர், உலகளந்த
மூர்த்தி யுருவே முதல்.

பதவுரை:— **அவரவர்** — *ரஜோகுணத்தையும், தமோ குணத்தையுமுடைய சிலர்,* **தாம் தாம் அறிந்தவாறு**— *தங்களுடைய குணங்களுக்குத்தகுந்தபடி தாங்கள் அறிந்தவிதமாக,* **இவர் இவர் எம்பெருமான் என்று ஏத்தி**—*'இவர்கள் எமக்கு ஸ்வாமிகள்' என்று (சில தெய்வங்களைக் குறித்துச்) சொல்லிப் புகழ்ந்து,* **சுவர் மிசை சார்த்தியும்**—*சுவரின் மேல் எழுதியும்,* **வைத்தும்**—*(விக்ரஹமாக) ப்ரதிஷ்டைசெய்தும்,* **தொழுவர்**—*வணங்குவார்கள்: (ஆனால்),* **உலகு அளந்த**— *(தொழுமவர்களுடைய தலையிலும், தொழப்படுமவர்களுடைய தலையிலும் திருவடியைவைத்து) உலகத்தையெல்லாம் அளந்துகொண்ட,* **மூர்த்தி உருவே** — *திரிவிக்கிரம மூர்த்தியின் திருவடிவே,* **முதல்**—*ப்ரதானமானது.*

அவ:—*இப்படி ருச்யுத்பாதகனாய்க்கொண்டு முற்பாடனாய் நிற்கிறவனைவிட்டு, ஸம்ஸாரிகள் க்ஷுத்ரதேவதா*

பூர்வஜ" [*ஜிதந்தே 1-1*] [*மஹாபுருஷனே! முற்படப்பிறப்பவனே!*] என்கிறபடியே, தானே முற்பட்டு உயிரளிப்பான் எந்நின்றயோனியுமாய்ப் பிறந்து மனிசர்க்காப் படாதனபட்டு இவர்களுக்கு ப்ரதமஸுக்ருதத்தை உண்டாக்கி, தன் விஷயத்தில் ருசியை உண்டாக்கி, அநுபவிக்க உபகரணங்களையும் கொடுத்து, உபாயமாகவும் நின்று பலத்தைக் கொடுக்கவுமிருக்கிறான்; ஆகையாலே நமக்கும் ஆச்ரயிக்கக் குறையில்லை என்கிறார்.

அவதாரிகை:—இப்படி ருசி முதற்கொண்டு உண்டாக்கி, முற்பட்டு நிற்கிற ஸர்வேச்வரனைவிட்டு, ஸம்ஸாரிகள் கண்டகண்ட தேவதைகளின்

ஸமாச்ரயணம்பண்ணு நின்றார்களே? என்னில்: அவர்கள் அப்படிச் செய்தார்களேயாகிலும் அந்த ஆச்ரயணீயரான தே$_3$வதைகளுக்கும் ஆச்ரயணீயன் அவனே என்கிறார்.

உரை:—*ரஜஸ்தம:ப்ரசுரராய், பி$_4$ந்நருசிகளான அவ்வவ் வதிகாரிகள், ஶாஸ்த்ரமுகத்தாலன்றிக்கே குணாநுகுணமாகத் தாந்தாம் அறிந்த ப்ரகாரங்களாலே வாய்விட்டுப் புகழ்ந்து, தாங்களுகந்த குணங்களையுடைய ஐயன், துர்க்கை*

காலில் விழுந்து திரிகிறார்களே! என்னில்: அறிவிலிகளான அவர்கள் அப்படிச் செய்தாலும் அவர்களால் அடையப்படும் தேவர்களாலும் அடையப்படுமவன் இவனே என்கிறார்.

வ்யா:—(அவரவர்) உலகில் சிலருக்கு ரஜோகுணம் அதிகமாயிருக்கும்; சிலருக்குத் தமோகுணம் அதிகமாயிருக்கும். அவர்களால் பரமஸாத்விக தேவதையை எப்படிப்பற்றமுடியும்? **"ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேய:"** [பாரதம்] என்கிறபடியே கருவிலே திருவுடைய ஸாத்விகர்கள்தானே உண்மையான பரம்பொருளைப் பற்றமுடியும். (அவரவர்) **"லோகோ பி$_4$ந்நருசி:"** [உலகினர் வெவ்வேறு ருசிகளை உடையவர்கள்] என்கிறபடியே சிலருக்குத் தாமஸாஹாரங்களிலும் தாமஸச் செயல்களிலுமே ருசியிருப்பதையும், சிலருக்கு ராஜஸாஹாரங்களிலும் ராஜஸச்செயல்களிலுமே ருசியிருப்பதையும், ஒருசிலருக்கே ஸாத்விகாஹாரத்திலும், ஸாத்விகச் செயல்களிலும் ஈடுபாடிருப்பதையும் காண்கிறோம். தேவதாவிஷயத்திலும் இப்படித்தானேயிருக்கும். இதை உணராமல் சில மேதாவிகள் எந்த தெய்வத்தை உபாஸித்தாலும் ஒன்றுதான் என்று உரைப்பதுதான் ஆச்சரியம்! (தாம் தாம் அறிந்தவாறு ஏத்தி) மனிதர்களுடைய அறிவை எடுத்துக்கொண்டாலும், அது ஒரே தரமுடையதாயிருப்பதில்லை. (இதற்குக் காரணமும் ரஜஸ் தமோகுணங்களே.) ஆகையால் தம் தம் அறிவுக்குத்தக்கவாறு பற்பல தாழ்ந்த தேவதைகளைத் துதிப்பவர்களாகவே உள்ளனர் உலகினர். (தாம் தாம் அறிந்தவாறு) ஸத்வகுணம் விஞ்சியிருந்ததாகில் **"ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்"** [கீதை] என்கிறபடியே சாஸ்திரவிசாரம் செய்து ஞானத்தெளிவை அடைந்திருப்பார்கள். அதில்லாமையாலே 'மனமே ராஜா, மதியே மந்திரி' என்று தம்முடைய புல்லறிவுக்குத்தக்கபடி ஒரு தெய்வத்தைப் பரம்பொருளாக நிச்சயித்துக்கொண்டு அதைத் துதிக்கிறார்கள். **"புடைப்பல தானறி தெய்வம் பேணுதல் தனது புல்லறிவு ஆண்மை பொருந்தக் காட்டி"** [திருவாசிரியம்-6] என்றார் நம்மாழ்வாரும். (இவர் இவர் எம்பெருமான் என்ற) தம்மைப்போலவே ரஜோகுணத்தையும், தமோகுணத்தையும் அதிகமாக உடைய தேவதைகளில் ஒருவரை

தொடக்கமாக ருத்$_{3}$ரன் முடிவாக உண்டான இவர்கள் நமக்கு ஆச்ரயணீயரான ஸ்வாமிகள் என்று ஆதரித்துக் கொண்டு ஒவ்வொரு தேவதைகளை ஓரோர் பி$_{4}$த்திகளிலே சித்ரரூபேண எழுதியும். க்$_{3}$ருஹந்தொடக்கமான ஓரொரு இடங்களிலே ப்ரதிமாரூபேண ப்ரதிஷ்டி$_{2}$த்து வைத்தும் ஆச்ரயியாநிற்பர்கள். இவர்கள் இப்படிச் செய்தாலும்,

---

'எம்ஸ்வாமி' என்று அபிமானித்து. (இவரிவர்) "ஸகரபுத்ரர்கள் கண்டாரை 'என் குதிரை பிடித்தாய்' என்றுபிடிக்குமாபோலே, தோற்றினாரை (பற்றுகை)" என்று பெரியவாச்சான்பிள்ளை. (இவரிவர்) ஒரு கணக்கில்லை; ஒருவன் பிரமன் உஷஸ்ஸிடம் கலந்துபெற்ற உருத்திரனை எம்பிரான் என்றான். மற்றொருவன் 'அவன் மனைவியான பராசக்தியே பரம்பொருள்' என்றான். பிறிதொருவன் அவன் மூத்தபிள்ளையான பிள்ளையாரையே பர தத்துவம் என்றான். வேறொருவன் 'அவன் இளையபிள்ளையான முருகனே மெய்ப்பொருள்' என்றான். இன்னமொருவன் அவனுடைய காமாவேசத்தால் வீரியம் விழுந்து உண்டான ஐயனாரை அறுபொருள் என்றான். இன்னம் கறுப்பு, காட்டேரி, முதலானவற்றுக்கு எல்லையேயில்லை. என்னே அறிவுகேடு! ஒருவனாவது தான் சொல்லும் தேவதை தன்னைப்போலவே பிறப்பையுடையதே என்பதையும், பிரகிருதிஸம்பந்தமுள்ளதே என்பதையும் சிந்தித்துப் பார்க்கிறானல்லன். இதை அறிவாளியொருவன் எடுத்துச் சொன்னால் துவேஷியென்று அவனைத்தூற்றவும், அவன் வணங்கும் அரு மறைமுதல்வனான திருமாலைத் தாழ்த்திப்பேசவும் தயங்குவதில்லை. **"அஜாயமானோ ப$_{3}$ஹுதா$_{4}$ விஜாயதே"** [பு-ஸூ] என்று வேதமும், "பிறப்பில் பல பிறவிப் பெருமாள்" என்று ஆழ்வார்களும், "பிறவாப் பிறப்பிலை பிறப்பித்தோர் இலையே" என்று மத்யஸ்தர்களான பழந்தமிழரும் திருமாலைக்குறித்துச் சொல்லியிருப்பதைக் காண்பதுமில்லை. (சுவர்மிசைச் சார்த்தியும் வைத்தும் தொழுவர்) அந்த தேவதைகளை அபிமானத்தாலே சுவர்மீது சித்திரமாக எழுதியும், வீடு, ஆலயம், குன்று முதலானவிடங்களிலே விக்ரஹமாக வைத்தும் தொழுகின்றார்கள். (உலகளந்த மூர்த்தியுருவேமுதல்) இவர்கள் பக்ஷபாதத்தாலே கண்டகண்ட தேவதைகளைத் தொழுதாலும் உண்மை மாறிவிடாதே. ஆச்ரயிக்கின்ற இவர்களோடு, இவர்கள் ஆச்ரயிக்க விரும்புகின்ற அந்த தேவதைகளோடு வித்தியாசமில்லாதபடி எல்லாரும் தன் காலின் கீழே மிதிபடும்படி உலகனைத்தையும் அளந்துகொண்ட ஸர்வேச்வரனுடைய திருமேனியே ஜகத்காரணமானது. (உலகளந்த) இதை இன்று நான் சொல்லவில்லை; பக்ஷபாதிகளான சில சேதனர் சொல்லவில்லை. அபௌருஷேயமான வேதம் ஆயிரக்கணக்கான

ஆச்ரயிக்கிறவர்களோடு, ஆச்ரயணீயராக இவர்கள் விரும்புகிற அத்₃தேவதைகளோடு வாசியற எல்லாரும் தன் காற்கீழே துகையுண்ணும்படி ஜகத்தையடைய அளந்து கொண்ட ஸர்வேச்வரன் திருமேனியே ப்ரத₄ாநம்.

15. முதலாவார் மூவரே, அம்மூவ ருள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன்—முதலாய
நல்லா னருளல்லால் நாமநீர் வையகத்துப்
பல்லா ரருளும் பழுது.

பதவுரை:—மூவரே—*பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் இம்மூவரே,* **முதலாவார்**—*முக்கியமானவர்கள்;* **அம்மூவருள்ளும்**—*அந்த மும்மூர்த்திகளுக்குள்ளும்,* **மூரி நீர் வண்ணன்**—*பரந்த கடல்போன்ற நிறத்தையும், ஸ்வபாவத்தையுமுடையவனை எம்பெருமானே,* **முதலாவான்**—*காரணபூதனுவான்;* **முதலாய**-*ஸர்வகாரணனும்,* **நல்லான்**-*உபகாரகனுமான அவனுடைய,* **அருள் அல்லால்**—*அருளைத்தவிர,* **நாம நீர் வையகத்து**-*ப்ரஸித்தமான கடல்சூழ்ந்த மண்ணுலகில்,* **பல்லார்**-*மற்ற பலருடைய,* **அருளும்**-*கிருபையும்,* **பழுது**-*வீணனது.*

அவ:—*நீர் அவனையே ப்ரத₄ாநனுகச் சொல்லாநின்றீர். புறம்பே ஆச்ரயிப்பார் சிலரும், ஆச்ரயித்தார்க்குப் ப₂லங்*

இடங்களில் சொல்லியிருக்கின்றது என்று கருத்து. (உலகளந்த மூர்த்தி உருவே முதல்)

"ஏக: ப்ராஸீஸரத் பாத₃ம் ஏக: ப்ராசிக்ஷளந்முத₃ா ।
அபரோऽப்யத₄ரந் மூர்த்₄நா கோऽதி₄கஸ் தேஷு க₃ண்யதாம்॥"

[ஒருவன் (விஷ்ணு) திருவடியை நீட்டினுன்; வேறொருவன் (பிரமன்) உகப்புடன் அதைக்கழுவினுன்; மற்றொருவன் (உருத்திரன்) அந்நீரைத் தலையில் தரித்தான். இவர்களில் எவன் பெரியவன் என்பதை நீங்களே நடுநிலை நின்று எண்ணிப்பாருங்கள்.] என்றுற்போலே சொல்லுகிறுர்.

அவதாரிகை:— 'நீர் உலகளந்த மூர்த்தியே முதல்வன்' என்கிறீர். சிலர் காளி, கருப்பன், காட்டேறி முதலான வேறு தெய்வங்களை முதல்வ

கொடுப்பார் சிலருமாயன்றோ நாட்டில் நடந்துபோருகிறது? என்ன, 'அவையடங்கலும் வ்யர்த்தம்' என்கிருர்.

உரை:—'இவர் இவர்' என்று இருந்ததேகுடியாக ஆஶ்ர யணீயரென்று ப்₄ரமியாதே ஸ்ருஷ்ட்யாதிகார்யங்களை அதுக் கடைத்த வடிவெடுத்து நடத்திக்கொண்டுபோருகிற ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரர்களாகிறமூவருமேஜகத்துக்குப்ரத₄ாநர் ஆவர்;

ராகச் சொல்கின்றனர். சிலர் மும்மூர்த்திகளில் பிரமன், உருத்திரன் ஆகிய மற்றிருவரையும் முதல்வராகச் சொல்லுகின்றனர். இத்தெய்வங்கள் தங்களுக்குப் பலன் கொடுப்பதையும் சான்று காட்டுகின்றனர். வேறு சிலர் இம்மூன்று மூர்த்திகளிலும் மேற்பட்டதொன்றுதான் பரதெய்வம் என்கின்றனர். அவ்வொன்று எது? என்று கேட்டால், சிலர் பரமசிவன்தான் என்கின்றனர்; சிலர் பராசக்திதான் என்கின்றனர். சிலர் மஹாகணபதி என்கின்றனர். சிலர் ஸுப்ரஹ்மண்யன்தான் என்கின்றனர். 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது' என்கிற கணக்கிலே இவர்களுக்குள்ளே யுள்ள இச்சண்டையைப் பயன்படுத்திக்கொண்டு, வேறு சில மேதாவிகள் 'இவையெல்லாமும், நீயும் நானுங்கூடப் பரம்பொருள்தான்' என்று வழக்குரைக்கின்றனர். இப்படியிருக்கும்போது 'உலகளந்த மூர்த்தியுருவே முதல்' என்று நீர் உரைப்பது எப்படி? எனில்: 'இவையெல்லாம் வேத விருத்தமான பேச்சுக்கள். நானுரைப்பதே வேதசாஸ்திரங்களோடு ஒட்டியது' என்கிருர்.

வ்யா:—(முதலாவார் மூவரே) வேதசாஸ்திரங்களைக்கொண்டு பார்ப் போமாகில், ஸ்ருஷ்டியைச் செய்பவனாய் அறியப்படும் பிரமனும், ரக்ஷணத்தைச் செய்பவனாக அறியப்படும் விஷ்ணுவும், ஸம்ஹாரத்தைச் செய்பவனாக அறியப்படும் ருத்ரனும்தான் முக்கியமானவர்கள் என்று எளிதில் அறிந்து கொள்ளலாம். நீயும் நானும் பரம்பொருளாகில் இவ் வுலகில் நாம் துன்பங்களை அனுபவிப்பதும், அதற்குக் காரணமான சரீர ஸம்பந்தமும்கூடாது. ஆகையால் நீயும் நானும் பரம்பொருளாக முடியாது. கறுப்பும், காட்டேறியும், காளியும், முருகனும், கணபதியும் ஐயனாரும் வேதங்களில் எங்குமே பரம்பொருளாகச் சொல்லப்படவில்லை. பரம்பொருளின் காரியமான ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களாகிற முத் தொழில்களிலும் இவர்களுக்கு எவ்விதஸம்பந்தமும் லோகவேதங்களில் காணப்படவில்லை. ஆகையால், ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச்செய் பவரான பிரம விஷ்ணு ருத்ரர்களே தேவதைகளுள் முக்கியமானவராவர்.

முதலாவார் மூவரே என்ற இதற்கு ஆக்ஷேபமாக துரீய (நான்காவது) ப்ரஹ்மவாதிகள் சொல்லுவதாவது:— லோகவேதங்களில் பிரமன் விஷ்ணுவின் உந்தித்தாமரையில் பிறப்பதாகப் பிரஸித்தியுள்ளது. உருத்திரனும், பிரமனுக்குப் பிறந்தவன் என்று பல வேதவாக்கியங்கள் உரைக்கின்றன. "ப்ரஹ்ம விஷ்ணு ருத்₃ரேந்த்₃ரா꞉ தே ஸர்வே ஸம்ப்ரஸூயந்தே" (அதர்வசிகை) என்று சில வேதவாக்கியங்கள் இவர்களோடு கூட விஷ்ணுவுக்கும் பிறப்பை ஓதுகின்றன. ஆகையால் இம்மூன்றிலும் மேற்பட்டதான ஒன்றுதான் பரம்பொருளாகவேண்டும்—என்று துரீய ப்ரஹ்மவாதிகள் உரைக்கின்றனர். அவ்வொன்று எது என்று கேட்டால், சிவனிடம் பக்ஷபாதங்கொண்டவர்கள் அது பரமசிவன்தான் என்கின்றனர். சக்தியிடம் பக்ஷபாதம் கொண்டவர்கள் பராசக்திதான் என்கின்றனர். இப்படியேபலரும்பல விதமாகச் சொல்லுகின்றனர். இவையெல்லாம் வேதவிருத்தம். பரம்பொருளை சிவசப்தத்தால் சொல்லியிருப்பதைக்கொண்டு, கர்மபரவசனான ருத்ரனைக்காட்டிலும் மேலான ஒரு சிவனைக் கற்பிக்கப்புகுந்தால் பரம்பொருளை இந்த்ரசப்தத்தாலும், ஆகாசசப்தத்தாலும், வாயுசப்தத்தாலும் சொல்லியிருப்பதுகொண்டு பரமேந்திரன், பரமாகாசம், பரமவாயு என்னும் தத்துவங்களையும் கற்பித்து அவையே பரம்பொருள் என்றும் சொல்ல வேண்டிவரும். வேதவாக்கியங்களெல்லாம் பரஸ்பரவிருத்தமாய்முடியும். மும்மூர்த்திகளைக்காட்டிலும் மேலானதொரு தேவதை முத்தொழில்களைச் செய்வதாக வேதத்தில் எங்குமே சொல்லப்படவில்லை. "தேவர்களுக்குள் விஷ்ணுவே மேலானவன்; அக்னியே கீழானவன்" என்று ஒரு வேதவாக்கியம் கோஷிக்கிறது. "நாராயணனே பரப்ரஹ்மம்" "நாராயணனிடமிருந்து பிரமன் உருத்திரன் முதலிய எல்லாம் உண்டாகின்றன" "எல்லாவற்றினுள்ளும்புறமும் வியாபித்திருப்பவன் நாராயணன்" "பிறப்பற்றவனாயினும் பலபடியாகப் பிறக்கிறான்" [பு-ஸூ] என்று பல வேதவாக்கியங்கள் பறைசாற்றுகின்றன. இதிலிருந்து விஷ்ணுவுக்குமேல் ஒருவரில்லையெல்லையென்பதும், விஷ்ணுவின் பிறப்பு தன்னிச்சையாலேயேயொழியக் கர்மஸம்பந்தத்தாலல்ல என்பதும் ஏற்படுகிறது. ஆகையால் துரீயப்ரஹ்மவாதம் வேதவிருத்தமாகும். மேலும், உலகத்திலும் கர்மபரவசனான உருத்திரன் வேறு, பரமசிவன் வேறு என்று வழக்கில்லை; ருத்ரபத்னியான பார்வதிவேறு பராசக்திவேறு என்றும் வழக்கில்லை. முக்கண்ணனாய், சூலமேந்தியவனாய், திரிபுரஸம்ஹாராதிகார்யம் செய்தவனான உருத்திரனைத்தான் சைவர்கள் வழிபடுகிறார்கள். 'உருத்திரனுக்கு வேதங்களில் தாழ்வுசொல்லியிருக்கிறதே' என்று கேட்டால்தான் 'அவன் வேறு, எங்கள் சிவன் வேறு' என்னும் வாதத்தில் மனஸ்ஸாக்ஷிவிருத்தமாக

அம்மூவர் தம்மில் ஸமரென்றும், மூவருங்கூட ஒன்றென்றும், மூவர்க்கும் அவ்வருகே ஒருவன் ப்ரத$_4$ானனென்றும் ப்$_4$ரமியாதே, அந்த மூவரிலும் வைத்துக்கொண்டு ப்ரத$_4$ானனாவான், ப்ரஹ்மாதிகளை இடுக்கி ஸ்ருஷ்ட்யாதிகளை நிர்வஹித்

இறங்குகிறார்கள். இப்படியே பராசக்தி பக்தர்களும் செய்கிறார்கள். ஆகையால் துரீய பஞ்சமாதி ப்ரஹ்மவாதம் லோகவிருத்தமும் ஆகும். ஆகையால் மும்மூர்த்திகளே உலகிலுள்ள மற்ற அனைவரையும்விட முக்கியமானவர்கள் என்று ஸித்தித்தது. 'மூவரே' என்ற ஏகாரத்தினாலே கண்ட கண்ட தெய்வங்களைப் பரம்பொருளாகச் சொல்லுவாரையும், துரீய பஞ்சமாதி ப்ரஹ்மவாதிகளையும் தள்ளினாராயிற்று.

இனி, இம்மும்மூர்த்திகளும் ஒருவரே என்றும் இம்மும்மூர்த்திகளும் ஸமானமானவரே என்றும் கூறும் திரிமூர்த்தி ஐக்ய ஸாம்யவாதிகளைத் தள்ளி பகவத் பரத்வத்தை நிச்சயிக்கிறார்,— (அம்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர் வண்ணன்) இம்மூவரும் ஒன்றென்னலும், ஸமரென்னலும் கூடாது, ஏனெனில்: வேதங்களில் **"நாராயணாத் ப்$_3$ரஹ்மா ஜாயதே நாராயணாத்$_3$ ருத்$_2$ரோ ஜாயதே"** [நாராயணோபனிஷத்] [நாராயணனிடமிருந்து பிரமன் பிறக்கிறான்; நாராயணனிடமிருந்து உருத்திரன் உண்டாகிறான்] என்று நாராயணனிடமிருந்து மற்றிருவர்க்கும் பிறப்பும், **"ஸோரோதீ$_3$த்"** [சதபதம்] [உருத்திரன் அழுதான்] **"ஸோப்$_3$ரவீத் அநபஹதபாப்மாவாஹம்"** [சதபதம்] [நான் பாபம் நீங்கப்பெறாதவனாயிருக்கிறேன் என உருத்திரனுரைத்தான்.] **"வரம் வ்ருணே அஹமேவ பசூநாமதி$_4$பதிரஸாநீதி"** [யஜுர்வேதம்] [நானே பசுபதியாகக்கடவேனென்று வரம் வேண்டுகிறேன் என்றான் உருத்திரன்] என்றும், **"ஸோபி$_3$பே$_4$த்"** [ஸுபால] [மிருத்யுவைக்கண்டு பிரமன் பயந்தான்] **"உஷஸி ரேதோஸிஞ்சத்"** [சதபதம்] [பிரமன் உஷஸ் என்னும் தன் தேவியிடம் வீர்யத்தை விட்டான்] என்றும் பிரமருத்திரர்களுக்குப் பாபபயஸம்பந்தமும், ப்ராக்ருத சரீரஸம்பந்தமும், அபூர்ணத்வமும் வேதங்களில் ஓதப்படுகையாலும், நாராயணனெனும் விஷ்ணுவை இவர்களைப் படைத்தவனாகவும், நியமிப்பவனாகவும், எவ்விதத் தாழ்வுமற்றவனாகவும் ஓதுகையாலும் இம்மூவரும் ஸமராகவோ ஒன்றாகவோ முடியாது. **"ஸ ப்$_3$ரஹ்மா ஸ சிவ:"** [தை-நா] [அவனே பிரமனாகிறான்; அவனே சிவனாகிறான்] **"ப்$_3$ரஹ்மா நாராயண: சிவச்ச நாராயண:"** [பிரமனும் நாராயணனே; சிவனும் நாராயணனே] என்று வேதங்கள் ஓதியிருக்கிறபடியால் இம்மூவரும் ஒன்றெனத் தோற்றுகிறதே? எனில்: இவர்களை மாத்திரம் வேதங்கள் நாராயணனோடு

துப் போருமவனுய், ஸஞ்சரியாநின்றுள்ள கடல்போலே யிருக்கிற வடிவையுமுடையவனுனவன். ஜகத்காரணபூதனு

ஒன்ருகப்படிக்கவில்லை; 'ஸேந்த்$_3$ர:'' [தை-நா] [இந்திரனும் அவனே] ''சக்ரச்ச நாராயண:'' [இந்திரனும் நாராயணனே] என்று மும்மூர்த்திகளிலும் தாழ்ந்தவனும் ''அஹல்யாயை ஜார:'' என்று வேதத்திலும், ஸ்ரீராமாயணுதிகளிலும் பரதாரகமனம் செய்தவனுக ஸுப்ரஸித்தனுமான இந்திரனையும் நாராயணனென்றே படித்தது. ''சக்ஷுச்ச த்$_3$ரஷ்டவ்யஞ்ச நாராயண:'' [ஸுபால] [கண்ணும் காண்பனவும் நாராயணனே] ''தி$_3$சச்ச நாராயண: விதி$_3$சச்ச நாராயண: ஸர்வம் நாராயண:'' [நாராயண] [திக்குகளும் நாராயணனே; விதிக்குகளும் நாராயணனே; எல்லாம் நாராயணனே] 'புருஷ ஏவேத$_3$ம் ஸர்வம்'' [பு-ஸூ] [எல்லாம் பரம புருஷனே] ''விச்வமேவேத$_3$ம் புருஷ:'' [தை-நா] [இவ்வுலகெல்லாம் பரம புருஷனே] ''ஸர்வம் க$_2$ல்வித$_3$ம் ப்$_3$ரஹ்ம'' [சாந் 3-14-1] [இது எல்லாம் ப்ரஹ்மமே] என்று துன்பத்தில் உழலும் எல்லாச் சேதனரையும், அறிவற்ற அசேதனத்தையுங்கூட நாராயணன் என்றே வேதங்கள் படித்தன. இப்படி எல்லாவற்றையும் ஒன்றென ஓதுவதற்குக் காரணத்தையும், ''ஏஷ ஸர்வபூ$_4$தாந்தராத்மா தி$_3$வ்யோ தே$_3$வ ஏக ஏவ நாராயண:'' [ஸுபால] [எல்லா பூதங்களிலும் அந்தராத்மாவாயிருக்கும் அப்ராக்ருதனுன தேவன் நாராயணன் ஒருவனே] ''அந்தர்ப$_3$ஹிச்ச நாராயண:'' [நாரயண] ''அந்தர்ப$_3$ஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி$_2$த:'' [தை-நா] [எல்லாப் பொருள்களையும் உள்ளும்புறமும் வியாபித்து விளங்குகிருன் நாராயணன்] ''விச்வாத்மாநம் நாராயணம்' [தை-நா] [ஸர்வாத்மாவாயிருப்பவன் நாராயணன்] ''ஸ பூ$_4$மிம் விச்வதோ வ்ருத்வா'' [பு-ஸூ] [பரமபுருஷன் பூமியை முழுவதும் வியாபித்தான்] ''தஜ்ஜலாந்'' [சாந் 3-14-1] [ப்ரஹ்மத்திடமே எல்லாம் தோன்றி வாழ்ந்து மறைவதால் எல்லாம் ப்ரஹ்மமென்றது] என்று அருகிலேயே அந்தந்த வேதவாக்கியங்கள் படித்து வைத்தன. ''அந்யச்ச ராஜந் ஸ பர:, தத$_2$ாந்ய: பஞ்சவிம்சக: தத்ஸ்த$_2$த்வாத$_3$நுபச்யந்திஹ்யேக ஏவேதி ஸாத$_4$வ:'' [பாரத] [அரசனே! பரமாத்மா வேருனவன்; ஜீவனும் வேருனவனே. ஆயினும், பரமன் ஜீவனில் அந்தர்யாமியாய் நிற்பதால் இருவரையும் ஒருவராகவே நல்லோர்கள் காண்கிருர்கள்.] ''ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:'' [கீதை] [நீ எல்லாவற்றையும் வியாபித்திருப்பதால் எல்லாமுமாகிருய்] ''ஸர்வக$_3$த்வாத$_3$நந்தஸ்ய ஸ ஏவாஹமவஸ்தி$_2$த:'' [வி-பு] [அநந்தன் எங்கும் பரவியிருக்கையால் நானும் அவனுகவேயிருக்கிறேன்.] என்று இவ்வர்த்தம் உபப்ருஹ்மணங்களிலும் விவரிக்கப்பட்டது ஆகையால் மும்மூர்த்திகளும்

ஒன்றென்பது வேதசாஸ்திரவிருத்தமேயாகும். ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்யும் இம்மூவரும் ஒத்தவர்; மூவரும் சேர்ந்தே பரம்பொருள் என்னலாமே? எனில்: **"யதோ வா இமாநி"** முதலான வேதவாக்கியங்களில் முத்தொழில்களையும் செய்பவன் ஒருவனே என்று ஓதியிருப்பதும், **"ஏகமேவாத்₃விதீயம்"** *[சாந் 6-2-1]* **"ஏக ஏவ நாராயண:"** *[ஸுபால]* **"ஏக ஏவாக்₃ர ஆஸீத்"** *[ஐதரேயம் 1-1-1]* **"ஈசதே தே₃வ ஏக:"** *[ச்வே 1-10]* **"ஏகஸ் ஸ்வதந்த்ரோ ஐக₃தோ ப₃பூ₄வ" "ஏக: சாஸ்தா ந த்₃விதீயோஸ்தி சாஸ்தா"** *[பார-ஆச்வ 27-1]* **"ஏக ஏவ ஜனார்த்த₃ந:"** *[வி-பு]* முதலான நூற்றுக்கணக்கான ச்ருதிஸ்மிருதிவாக்கியங்களில் ஜகத்காரணப்பொருள் ஒன்றே என்று ஓதியிருப்பதும், **"நாராயண பரம் ப்₃ரஹ்ம" "நாராயணாத் ப்₃ரஹ்மா ஜாயதே, நாராயணாத் ருத்₃ரோஜாயதே"** முதலான வாக்கியங்களில் நாராயணனைப் பரம்பொருளாகவும், மற்ற இருவரையும் படைப்பவனாகவும் ஓதியிருப்பதும் ஒட்டாது. ஆகையால் நாராயணன் ஒருவனே நேரேயும், பிரமருத்திரர்களை அந்தர்யாமியாகக்கொண்டும் ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்கிறான் என்றும், விஷ்ணுவாய் அவதரித்து ரக்ஷணத்தைச் செய்கிறான் என்றும் கொண்டே தீரவேண்டும். வேறுவழியில்லை. ஆகையால் மும்மூர்த்திகளும் ஒன்றென்றும் ஒத்தவரென்றும் சொல்லும் வாதங்கள் வேதசாஸ்திரவிருத்தமேயாகும். வேதசாஸ்திரங்களை நடுநிலைநின்று ஆராய்வார்க்கு நாராயணன் ஒருவனே பரம்பொருள் என்று தெற்றென விளங்கும் என்று கருத்து. **(அம்மூவருள்ளும் முதலாவான் மூரிநீர் வண்ணன்)** ஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரங்களைச் செய்வதால் உலகிலுள்ள மற்றுள்ளாரிலும் முக்கியரான அம்மூவருக்குள்ளும் முதல்வனாயிருப்பவன் அலையெறிகின்ற கடல்போன்ற நிறத்தையும் தன்மையையுமுடைய நாராயணனே. (மூரிநீர்வண்ணன் முதலாவான்) பொன்னுருவமும், செந்தீயுருவமும் ஜகத்காரணமன்று மாகடலுருவமே ஜகத்காரணம். **"நீலதோயத₃மத்₄யஸ்த₂ா வித்₃யுல்லே₂கே₂வ"** *[தை-நா]* என்று வேதம் புகழ்ந்த வடிவே ஜகத்காரணம். (மூரிநீர் வண்ணன்) நீரானது உலகெங்கும் வியாபித்திருப்பதுபோலே பிரமன் உருத்திரன் முதலான எல்லா தேவதைகளையும் வியாபித்திருப்பவன். மேலே மற்றதேவதைகளைப் பேசும்போதும் 'நாமநீர் வையகத்துப் பல்லார்' என்று நீர்சூழ்ந்த வையகஸ்தானத்திலே அவர்களை வைத்துப் பேசினாரன்றோ.

பிரமன், உருத்திரன் முதலான மற்ற தேவதைகளும், தங்களை அடைவார்க்கு அருள்புரிந்து பலன் கொடுப்பதாக வேதசாஸ்திரங்களில் படிக்கிறோமே? என்னில் அவர்கள் கொடுக்கும் பலன்களெல்லாம் அந்தகபாகையாலும் அல்பாஸ்திரமாகையாலும் வீணானவை; நிலையானதும், மிகச்சிறந்ததுமான மோக்ஷபலத்தைத் தர அவர்களால் இயலாது என்

மாய். ஸர்வவிஷயமான வாத்ஸல்யத்தையுமுடையனானவனுடைய க்ருபையொழிய, ப்ரஸித்தமான நீரையுடைத்தான ஜகத்திலுள்ள பலருடைய ப்ரஸாதமும் வ்யர்த்தம்.

இவனையொழிந்த மற்ற இருவருடைய அருளோடு கீழ்ச்சொன்னவர்களோடு வாசியற ஸர்வமும் வ்யர்த்தம். அன்றிக்கே, 'நீர் சூழ்ந்த பூமியில் நாமமாத்ரமான பல்லா

கிறார் மேலே,—(முதலாய நல்லான் அருளல்லால்) “காரணம் து த்$_4$யேய:” [அதர்வசிகை] [காரணவஸ்துவே தியானிக்கத்தக்கது] என்கிறபடியே காரணவஸ்துவிடம் பக்தி செய்து பெறும் அருளே பயனுடையது. கார்யமானவரின் அருள் வீணானது. (நல்லான் அருளல்லால்) முக்குணமற்றவனாய், ஸத்வகுணத்தையும் ஸமஸ்த கல்யாண குணங்களையுமுடையவனான நாராயணனுடைய அருளே பயனுடையது. ரஜஸ் தமஸ்ஸுக்களுடைய பிரமருத்திரர்களுடைய அருள் வீணானதேயாகும் ராவணன் இரணியன் முதலானோர்க்கு அருள் புரிந்தான் பிரமன். அவ்வருள் அவர்களையும் அழிவிலே கொண்டுபோய்விட்டது. வரங்கொடுத்த இவனையும் வருத்திற்று. பஸ்மாஸுரன் பாணாஸுரன் முதலானோர்க்கு வரங்கொடுத்தான் உருத்திரன். அவ்வருள் அவர்களுக்கும், வரங்கொடுத்த இவனுக்கும் ஆபத்து விளைத்தது. நல்லானான நாராயணனே அவ்வாபத்திலிருந்து பிரமருத்திரர்களை ரக்ஷிக்கவேண்டி வந்தது. இவனுடைய அருள் அப்படிப் பழுதுபட்டது என்பதற்குச் சரித்திரமே கிடையாது. (நாமநீர்வையகத்துப் பல்லாரருளும் பழுது) முதலாவாரான பிரமருத்திரர்களுடைய அருளே இத்தகையதாயிருக்க, உலகிலுள்ள மற்ற தேவதைகளின் அருளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? (நாமநீர் வையகத்துப்பல்லார்) பிரஸித்தமான நீர் சூழப்பெற்றதான உலகிலுள்ள பற்பல தேவதைகள். “மூரி நீர் வண்ணன்” [வ்யாபித்திருக்கும் நீர் போன்ற தன்மையையுடையவன்] என்று அவனைச் சொல்லுகையாலே. “நாமநீர் வையகத்துப் பல்லார்” என்று நீர்சூழப்பெற்ற வையகமாக வைத்து இவர்களைப் பேசுகிறார். இப்படி இவர்களையும் வியாபித்திருப்பவனாகையாலே, இவர்களுடைய அருளும் உண்மையில் அவனுடைய தூண்டுதலாலேயே உண்டாவது என்று உணர்த்துகிறார். (பல்லார் அருளும் பழுது) ரஜஸ் தமம் கலந்த அவர்களிடமிருந்து உண்டாகும் அருளாகையாலே, அதனால் கிடைக்கும் பலன், அண்டினவர்களை மேலும் மேலும் ஸம்ஸாரத்திலேயே கட்டிவைப்பதாகவும், அல்பமாகவும் (தாழ்ந்ததாகவும்), அஸ்திரமாகவும் (நிலையற்றதாகவும்) இருக்கும். ஆகையால் அவர்களுடைய அருள்

ரருளும் பழுது' என்னவுமாம். தான் பலியாதவளவன்றிக்கே பகவத்ப்ரஸாதத்தையும் விலக்குகையாலே 'பழுது' என்கிருர்.

வீணனதே. நாராயணன் ஒருவனுடைய அருளே பயனுடையது என்கிருர்.

''யோ யோ யாம் யாம் தநும் ப$_4$க்த: ஶ்ரத்$_3$த$_4$யார்ச்சிதுமிச்ச$_2$தி|
தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்$_3$த$_4$ாம் தாமேவ வித$_3$த$_4$ாம்யஹம் ||
ஸ தயா ச்ரத்$_3$த$_4$யா யுக்தஸ் தஸ்யாராத$_4$ நமீஹதே |
லப$_4$தே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் ||
அந்தவத்து ப$_2$லம் தேஷாம் தத்$_3$ப$_4$வத்யல்யமேத$_4$ஸாம் |
தே$_3$வாந் தே$_3$வயஜோ யாந்தி மத்$_3$ப$_4$க்தா யாந்தி மாமபி ||''
[கீதை 7-21, 22, 23]

[என்னுடைய சரீரமாயிருக்கும் எந்தெந்த தேவதைகளிடம் பக்திசெய்யும் எவனெவன் சிரத்தையுடன் அவர்களை அர்ச்சிக்க விரும்புகிருனே, அவனவனுக்கு நான் அந்த சிரத்தையையே நழுவாதபடி செய்கிறேன். அந்த சிரத்தையோடு கூடிய அவன் அந்தந்த தேவதையை ஆராதிக்கிருன். என்னுலேயே கொடுக்கப்படும் (அல்பாஸ்திர) காமங்களை அந்த தேவதையிடமிருந்து பெறுகிருன். புல்லறிவாளர்களான அவர்கள் பெறும் பலன் நிலையற்றதாகிறது. மற்ற தேவதைகளைத்துதிப்பவர்கள் (நிலையற்றவரும் தாழ்ந்தவருமான) அந்த தேவதைகளையே அடைகின்றனர். என்னிடம் பக்தி செய்பவர்கள் (நிலையானவனும், மிகச்சிறந்தவனுமான) என்னை அடைகின்றனர்.] என்று கீதையில் கண்ணனும் இதை மிகத்தெளிவாக அருளிச்செய்தான். (நீர் வையகத்து நாமம் பல்லாரருளும் பழுது) என்று கூட்டி, நீர் சூழ்ந்த பூமியிலே வெறும் பெயர் மாத்திரமான மற்ற தேவதைகளின் அருள்கள் வீணனவை என்றும் கொள்ளலாம். 'அருள்' என்று பெயரேயொழிய, உண்மையில் இவை அருளல்ல என்று கருத்து. தான் அநந்த ஸ்திரபலத்தைக் கொடுக்காததோடன்றியில், அதைக் கொடுக்கவல்ல பகவானுடைய அருளையும் தடைசெய்கையாலே 'பழுது' (வீணனது) என்கிருர். நிற்க. ''அரன் நாரணன்'' என்னும் பாட்டு சிவ விஷ்ணு ஸாம்யத்தைச் சொல்லுகிறது என்று மனந்துணிந்து சொல்லும் மேதாவிகள் இப்பாசுரத்திற்கு என்ன பொருள்கொள்கிருர்கள் என்று தெரியவேண்டும். [கீதையிலும் தேவதாஸாம்யம் சொல்லியிருக்கிறது என்னுமிவர்கள் மேலே எடுத்த கீதாச்லோகங்களுக்கும் பொருளுரைக்க வேண்டும்.]

16. பழுதே பலபகலும் போயினவென்று அஞ்சி
அழுதே னரவணைமேற் கண்டு—தொழுதேன்
கடலோதம் காலலைப்பக் கண்வளரும் செங்கண்
அடலோத வண்ண ரடி.

பதவுரை:—கடல் ஓதம்—திருப்பாற்கடலில் அலைகளானவை, கால் அலைப்ப-(தன்) திருவடிகளிலே அடிக்க, கண் வளரும்—(அதனாலே) துயிலுமவனாய், செம் கண்—சிவந்த திருக்கண்களை உடையவனாய், அடல் ஓத வண்ணர்-நெருங்கிய அலைகள் போன்ற நிறத்தையுடையவனான எம்பெருமானுடைய, அடி—திருவடிகளை, அரவு அணைமேல் கண்டு—திருவநந்தாழ்வானாகிய படுக்கையின்மேல் கண்டு, தொழுதேன்—(இன்று) வணங்கினேன்; பல பகலும்-(முன்சென்ற) அநாதி காலமும், பழுதே போயின என்று—வீணாகக் கழிந்தன என்று, அஞ்சி அழுதேன்—பயந்து அழுதேன்.

அவதாரிகை:— இதரதேவதைகளைப்பற்றி இவ்விஷயத்தை இழந்த நாட்டார் இழவைப் பரத்வநிஷ்கர்ஷமுகத்தாலே பரிஹரித்தவர், அநாதி₃காலம் இதரதே₃வதைகளையும் இதரஸாத₄னங்களையும் பற்றி இவ்விஷயத்தை அகன்று திரிந்த தம்மிழவை நினைத்து ஶோகிக்கிறார்.

"மூவருள்ளும் முதலாவான் மூரிநீர்வண்ணன்" என்கையாலே, கடல் நீர் வையகத்தை வியாபித்திருப்பதுபோலே பிரமருத்திரர்களை வியாபித்திருப்பவன் என்றும், கடனீரே மேகமாகவும், நதிகளாகவும் உருவெடுப்பது போலே, தான் விஷ்ணு முதலான அவதாரங்களைச்செய்து உலகளிப்பவன் என்றும் உணர்த்தப்படுகிறது.

அவதாரிகை:-மற்ற தெய்வங்களைப்பற்றி பகவத்விஷயத்தை இழந்த உலகினர் இழப்பை, சென்ற பாசுரத்தில் பகவத்பரத்வநிர்ணயம் செய்து போக்கியவர், தாமும் அநாதிகாலமாக மற்ற தேவதைகளையும், மற்ற உபாயங்களையும்பற்றி பகவத்விஷயத்தைவிட்டு அகன்று திரிந்து துன்புற்றதை நினைத்து வருந்துகிறார்.

உரை:-ஸௌகுமார்யாநுரூபமாகக் கடலின் சிறுதிவலைக ளானவை, துடைகுத்துவாரைப்போலே அநுகூலமாகத் திரு வடிகளை ஸ்பர்சிக்க, அத்தாலே பள்ளிகொண்டருளுமவனாய், வாத்ஸல்யத்தாலும், ஐச்வர்யத்தாலும் குதறிச் சிவந்த திருக் கண்களை உடையனுமாய், அநுபவிக்கப்புக்கவர்களை அபி$_4$ப$_4$ வித்து எழ வீசுகிற ஸௌந்தர்யதரங்கங்களோடுகூடின வடி வையுடையனுமானவனுடைய திருவடிகளை, வெளுத்த நிறத் தையுடையனான திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மேலே ஜ்ஞானஸாக்ஷாத்காரமுகேந கண்டு அநுபவித்துத் தத$_3$ நந்தரப$_4$ாவியான தொழுகையிலும் அந்வயிக்கப்பெற்றேன்.

வ்யா:—(கடலோதம் காலலைப்ப) "புஷ்பஹாஸ:" [விஷ்ணுஸஹ] [மலரின் மெல்லியவன்] என்கிற திருநாமத்திற் சொல்லப்பட்ட திரு மேனியின் மென்மைக்குத் தக்கவாறு கடலின் சிறுதிவலைகள், துடைபிடித்து விடுவாரைப்போலே திருவடிகளைப்பிடித்துவிடுகின்றன, (கண்வளரும்) அதனாலே மெய்மறந்து கண்வளர்ந்தருளுகிறான் ஸர்வேச்வரன். (செங் கண்) கண்வளர்ந்தருளும்போதும் சேதனரிடம் வாத்ஸல்யத்தால் ஜகத் ரக்ஷணசிந்தையிலே ஈடுபட்டிருக்கிறான் ஸர்வேச்வரன். உலகில் வாத் ஸல்யமும், ஐச்வர்யமும் மிக்கிருப்பவர்களுக்குக் கண்கள் சிவந்திருப்பதைக் காண்கிறோம். எல்லாச் சேதனருக்கும் ஈச்வரனாகவும், எல்லாரிடமும் வாத்ஸல்யமுடையவனாகவுமிருக்கும் இவனுக்கு யோகநித்திரை செய்யும் சமயத்திலும் கண்கள் செந்தாமரைபோலே குதறிச் சிவந்திருப்பதில் வியப்பில்லையன்றோ. (அடலோத வண்ணர்) தன்னை அனுபவிக்கப்புகுந்த வர்களின்மீது மோதி அவர்களை முழுகவைத்து வெல்கின்றன இவனுடைய திருமேனியின் அழகலைகள். **அடல் ஓத வண்ணர்**-வெற்றிகொள்கின்ற அழகலைகளோடுகூடிய வடிவையுடையவர். (கடலோதம் கண்வளரும் அடலோதவண்ணர்) பாற்கடல்மேலே ஓர் கருங்கடல் பள்ளிகொண்டாற் போலேயிருக்கை. (அடி) கைக்குழந்தைக்குத் தாய்முலைபோலே சேஷ பூ$_4$தர்க்கு த$_4$ாரகமான திருவடிகளை. (அரவணைமேல் கண்டு) பொன்தகட்டில் பதித்த மாணிக்கம்போலே, வெள்ளைநிறத்தையுடைய ஆதிசேஷனாகிற படுக்கையின்மேலே இருப்பதை மயர்வற அருளிய மதிநலத்தாலே கண்டு அநுபவிக்கப்பெற்றேன். (கண்டு தொழுதேன்) கண்டால் தொழு தல்லது நிற்கவொண்ணாதே! "யதா$_2$ர்ஹம் கேசவே வ்ருத்திம் அவசா: ப்ரதிபேதி$_3$ரே" [பார-ஸபா 75] [தங்களையும்மீறிக் கேசவனிடத்தில் உசித மான மரியாதைகளைச் செய்தனர்.] என்று எதிரிகளையும் கண்டவுடன் ஈடுபடுத்தும் வடிவழகு என்னை ஈடுபடுத்தச் சொல்லவேணுமோ?

இப்படி அநுபவத்தோடே அடிக்கழஞ்சுபெற்றுச் செல்லுகைக்குறுப்பான கிழ்க்கழிந்த காலமெல்லாம் ஒன்றொழியாதபடி வ்யர்த்தமே போய்விட்டதேயென்று கண்ணநீர் வெள்ளமிடவிருந்து சோகித்தேன்.

கீழ் இழவுக்கடியான நம்முடைய கர்மம் இப்போதும் குறியழியாதே கிடக்கையாலே, மேலுள்ள காலத்திலும்

(பலபகலும் பழுதே போயினவென்று அழுதேன்) பலநாட்கள் வீணாகவே போகிவிட்டனவே என்று கண்ணீர்விட்டு அழுதேன். (பல பகலும்) ஒருநாளா? இரண்டுநாளா? அநாதியான காலமெல்லாம் போயிற்றே என்று அழுதேன். (பழுதே) ஒரு பகுதி பழுதாகவும், ஒரு பகுதி பயனுள்ளதாகவுமாகவா கழிந்தது? எல்லாக்காலமும் வீணாகத் தொலைந்தன்றோ போயிற்று! (போயின) அணைக்குக் கிழக்குப்பட்ட நீரை மீட்கமுடியாததுபோலே,போனநாள் போனதுதானே!மீட்கவொண்ணாதே! (அஞ்சி அழுதேன்) போனநாளைக்கு அழுதது நியாயமே; பயப்படுவது எதற்காக? எனில்: இத்தனை நாளையும் இழக்கவிட்டவன் நான், என் கர்மமும் குறியழியாமல் கிடக்கிறது; வருகின்ற காலத்தையும் இழக்க விட்டு விடுவேனோ? என்று வருங்காலத்தைக்குறித்து அஞ்சுகிறார்.

"காலேஷ்வபி ச ஸர்வேஷு தி₃க்ஷு ஸர்வாஸு சாச்யுத।
ஶரீரே ச க₃தௌ சாபி வர்த்ததே மே மஹத்₃ப₄யம்।" [ஜிதந்தே1-9]

[அடியவர்களை நழுவவிடாதவனே! (மோக்ஷோபாயங்களான) எல்லாப் புண்யகாலங்களிலும், எல்லா திசைகளிலுமுள்ள புண்யக்ஷேத்ரங்களிலும், (தர்மஸாதனமான) சரீரத்திலும், சரீராந்தரகதியிலும் அடியேனுக்கு மிகுந்த பயமிருக்கிறது.] என்கிறபடியே காலத்தைக்குறித்தும் அஞ்சுவதுண்டன்றோ. (அழுதேன்)

"யஶ்ச ராமம் ந பஶ்யேத்து யஞ்ச ராமோ ந பஶ்யதி।
நிந்தி₃தஸ் ஸ வஸேல்லோகே ஸ்வாத்மாப்யேநம் விக₃ர்ஹதே॥"
[ரா-அ 17-14]

[எவனொருவன் ராமனைப் பார்க்கவில்லையோ, எவனை ராமனும் கடாக்ஷிக்கவில்லையோ, அவன் உலகத்தில் நிந்திக்கப்பட்டவனாய் வாழ்வான். தன்னுடைய மனமும் இவனை நிந்திக்கும்.] என்கிறபடியே, பெருமாளுடைய

இவ்வநுபவத்துக்குக் குறைத்தல்வரில் செய்வதென்? என்று பயப்பட்டு அழுதேன்.

17. அடியும் படி கடப்பத்தோள் திசைமேற் செல்ல
முடியும் விசும்பளந்த தென்பர்—வடியுகிரா
லீர்ந்தான் இரணியனதாகம், இருஞ்சிறைப்புள்
ஊர்ந்தான் உலகளந்தநான்று.

பதவுரை:—வடி உகிரால்—*கூர்மையான நகத்தால்,* **இரணியனது ஆகம்**—*இரணியனுடைய மார்பை,* **ஈர்ந்தான்**—*பிளந்தவனும், இருசிறை புள்-பெரிய இறகுகளையுடைய பக்ஷியாகிய கருடனை,* **ஊர்ந்தான்**—*நடத்துபவனுன எம்பெருமான்,* **உலகளந்த நான்று**—*திருவுலகளந்தருளின போது,* **அடியும்**—*திருவடியும்,* **படி கடப்ப**—*பூமியை அளந்துகொள்ள,* **தோள்**—*திருத்தோள்கள்,* **திசைமேல் செல்ல**—*திக்குகளுக்கு மேலே செல்ல,* **முடியும்**—*கிரீடமும்,* **விசும்பு**—*ஆகாசத்தை,* **அளந்தது**—*வியாபித்தது,* **என்பர்**—*என்று சொல்லுவார்கள்.*

அவதாரிகை:—*திருப்பாற்கடலிலே சென்று கிட்ட வேண்டும்படி தூரமாய் நானிழந்தேனே? அவன்றானே எல்லார்தலையிலும் திருவடிகளைவைத்து ஸௌலப்யம் பண்ணி நிற்கச்செய்தேயிழந்தேன் நான் இழந்தேன் என்கிறார்.*

ஒருநாளைப் பிரிவுக்கு இப்பாடுபட்டால், காலமெல்லாம் இழந்ததற்குக் கண்ணீர்விடச் சொல்லவேண்டுமோ?

''யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே |
ஸா ஹாநிஸ்தந் மஹச்சித்ரம் ஸா ப்ராந்தி: ஸா ச விக்ரியா ||''

[ஒரு முஹூர்த்தமாவது, கணமாவது வாஸுதேவன் நினைக்கப்படாமலிருந்தானாகில் அதுவே பேரிழவு; அதுவே பெருந்துக்கம்; அதுவே பெருமயக்கம்; அதுவே மாவிகாரம்] என்று ரிஷிகள் இப்பாடுபடும்போது ஆழ்வார்கள் அழுவதற்குக் கேட்கவேணுமோ?

அவதாரிகை:—அடலோத வண்ணரடியைத் தொழாமல் பலநாளும் போயினவென்று அழுதேன் என்றார் கீழ்ப்பாட்டில். ''அத்திருப்

உரை:—கூர்மையான திருநகத்தாலே ஹிரண்யாஸுரனுடைய தே$_3$வர்கள் வரப$_3$லத்தாலே மிடியற வளர்ந்த முரட்டுடலை அநாயாஸேந கிழித்துப்போகட்டவனாய், பெரிய சிறகையுடையவனை பெரியதிருவடியை மேற்கொண்டு ஸ்வைரமாக நடத்தியருளினவன் ஆஶ்ரிதனான இந்த்$_3$ரன் கார்யம் செய்கைக்காகத் திருவுலகளந்தருளின காலத்திலே "கோலமாம் என்சென்னிக்கு" என்கிறபடியே, என் தலைக்கு அலங்காரமாக நான் ஆசைப்பட்டிருக்கும் திருவடிகள், காடும் ஓடையுமான பூ$_4$மியை அளந்துகொள்ள, பிராட்டியைப் பரிஷ்வங்கி$_3$க்கக்கடவ திருத்தோள்களானவை இடமடையும்படி திக்குகளின்மேலே வளர்ந்துசெல்ல, திருவபி$_4$ஷேகமும், அபரிச்சே$_2$த்$_3$யமான ஆகாசத்தை முசிவற நிமிர்ந்து

பாற்கடலாவது வெகு தூரத்திலிருப்பதால் இழந்தாலுமிழக்கலாம்; அவனே எல்லார் தலையிலும் திருவடிகளை வைத்து அடிப்பொடித்தானம் செய்தபோதுமன்றோ நான் இழந்துவிட்டேன் பாவியேன்" என்கிறார் இப்பாசுரத்தில்.

வ்யா:—(வடியுகிரால் இரணியனதாகம் ஈர்ந்தான்) கூர்மையான திருநகத்தாலே இரணியனுடைய மார்பைக் கிழித்தான். (வடியுகிரால் ஈர்ந்தான்) ஓர் ஆயுதம் தேவையாயிருந்ததில்லை. நகத்தைக்கொண்டு நாரைக்கிழிப்பதுபோலே கிழித்தான். எதைக்கிழித்தான்? எனில்: (இரணியனது ஆகம்) தேவர்களிடமிருந்து பெற்ற வரபலத்தாலே குறைவில்லாமல் கொழுத்து வளர்ந்திருக்கும் இரணியனுடைய முரட்டு மார்பை. (ஈர்ந்தான்) விளையாட்டாகக் கிழித்தவன். (இருஞ்சிறைப் புள் ஊர்ந்தான்) கஜேந்திராழ்வானைப் போன்ற அடியாரை ரக்ஷிப்பதற்காகப் பல கால், பெரிய சிறகையுடையவனான கருடனின் மேல் ஏறி வந்தவன். (உலகளந்த நான்று) இந்திரன் காரியம் செய்வதற்காகத் திருவுலகளந்தருளின போது. (அடியும் படிகடப்ப) "கோலமாம் என் சென்னிக்கு உன் கமல மன்ன குரை கழலே" [திருவாய் 4-3-6] என்கிறபடியே என் தலைக்கு அலங்காரமாக நான் ஆசைப்படும் திருவடிகள் காடும் ஓடையுமான பூமியையெல்லாமன்றோ அளந்து கொண்டது! (தோள் திசைமேல் செல்ல) பெரியபிராட்டியாரை அணைக்கும் தோள் திக்குகளின்மேலே வளர்ந்து செல்ல. (முடியும் விசும்பளந்தது என்பர்) திருமுடியும் அளவிட முடியாத ஆகாசமனைத்தையும் வருத்தமில்லாமல் நிமிர்ந்து அளந்து

அளவுபடுத்திக்கொண்டது என்று தத்வவித்துக்களான ருஷிகள் சொல்லாநிற்பர்கள்.

தானேவந்து தலையிலேயிருந்தவன்று இழந்து இன்று கேட்டார் வாய் கேட்பதே நான் என்று வெறுக்கிறார்.

18. நான்ற முலைத்தலை நஞ்சுண்டு, உறி வெண்ணெய்
தோன்ற வுண்டான் வென்றி சூழ் களிற்றை—யூன்றிப்
பொருதுடைவு கண்டானும் புள்ளின் வாய் கீண்டானும்
மருதிடைபோய் மண்ணளந்தமால்.

பதவுரை:—**நான்ற முலை தலை**—*தொங்குகிற ஸ்தனத்திலிருக்கிற*, **நஞ்சு உண்டு**—*விஷத்தை அருந்தி*, **உறி**—*உறியில் வைத்த*, **வெண்ணெய்**-*வெண்ணெயை*, **தோன்ற உண்டான்**—*(திருடி) எல்லாரும் அறியும்படியாக அமுதுசெய்தவனும்*, **வென்றி சூழ் களிற்றை**-*வெற்றியையும் சூழ்ச்சியையுமுடைய யானையாகிற குவலயாபீடத்தை*, **ஊன்றி பொருது**—*தரித்து நின்று சண்டைசெய்து*, **உடைவு கண்டானும்**-*அழித்தவனும்*, **புள்ளின் வாய்**—*கொக்காய் வந்த பகாஸுரனுடைய வாயை*, **கீண்டானும்**—*கிழித்தவனும்*, **மருது இடை போய்**—*இரட்டை மருதமரங்களின் நடுவே தவழ்ந்துபோய்*, **மண்ணளந்த**—*உலகங்களை அளந்துகொண்ட*, **மால்**—*ஸர்வாதிகனான எம்பெருமானேயாவான்.*

கொண்டது என்று உண்மையறிந்த ரிஷிகள் உரைப்பார்கள். தானே வந்து அனைவர் தலையிலேயும் இருந்தவன்று இழந்த பாவியேன் என்று பெறப்போகிறேன்? (என்பர்) அன்று அனுபவிக்கப்பெறாமல் இன்று கதை கேட்கவன்றோ இருந்தேன் என்று தன்னைத்தானே வெறுத்துக் கொள்ளுகிறார். (இரணியனதாகம் ஈர்ந்தான் புள் ஊர்ந்தான் உலகளந்த நான்று) ஓரிடத்திலே ஓரடியானுக்கு விரோதியையழித்து உதவின நரசிம்மாவதாரத்தின்போது இழந்ததில் வியப்பில்லை; கஜேந்திரனுக்குப் புள்ளூர்ந்து காட்சியளித்தபோது இழந்ததிலும் வியப்பில்லை, எல்லார் திருவடியிலும் திருவடியை வைத்த திரிவிக்கிரமாவதாரத்தின்போதுமன்றோ இழந்து விட்டேன் என்கிறார்.

அவதாரிகை:-கடலிற்கிடையிலும் அங்குநின்றும் வந்து ஞாலத்தூடே நடந்தவிடத்திலும் இழந்தவளவோ? இடக்கை வலக்கையறியாதாரும் வாழும்படி இடைக்குலத்திலே வந்து பிறந்தவிடத்திலும் இழந்தேனிறே! என்று சோகிக்கிறார்.

உரை:-பேய் வடிவை மறைத்துத் தாய்வடிவுகொண்டு வந்த பூதனையுடைய பாலின் கநத்தாலே சரிந்து நாலுகிற முலையிலுண்டான நஞ்சை அவள் பிணமாய் விழும்படி அமுதுசெய்து. உறிகளிலே சேமித்துவைத்த வெண்ணெய்யை ஶிஶுபாலாதிகள் கோஷ்டியிலும் ப்ரஸித்தமாம்படி அமுது செய்தருளினவனாய். வெற்றியையுடைத்தாய், எதிர்த்தவர்களைத் தப்பாமல் சூழ்ந்துக்கொள்ளவல்ல குவலயாபீடத்தை

அவதாரிகை:— கடலிற் கிடந்தபோதும், அங்கிருந்து வந்து ஞாலத்தூடே நடந்தபோதும் இழந்தது மாத்திரமோ? இடக்கை வலக்கை அறியாத இடையரும் வாழும்படி இடைக்குலத்திலே ஸர்வஸுலபனாக வந்து பிறந்தபோதும் இழந்தேனன்றோ! என்று வருந்துகிறார்.

வ்யா:—(நான்ற முலைத்தலை நஞ்சுண்டு) பேய் வடிவை மறைத்துத் தாய்வடிவைக்கொண்ட பூதனையின் தொங்கும் முலையிலுள்ள விஷத்தை அவளுடைய உயிரோடு உண்டு. (நான்றமுலை) பாலின் மிகுதியாலே சரிந்து தொங்குகிறபடி. வஞ்சகப்பாலைக் கண்ணன் உறிஞ்சியவுடன் பண்டைவடிவு பெற்ற பேய்ச்சிமுலை பைபோலே தொங்கியபடியைச் சொல்லுவதாகவுமாம். (உறி வெண்ணெய் தோன்ற உண்டான்) உறிகளிலே ஆய்ச்சியர் நன்கு ரக்ஷித்துவைத்த வெண்ணெயை பார்ப்பவர்களுக்கெல்லாம் இவனே கள்வன் என்று தோற்றும்படியாக உண்டான். களவு செய்து உண்டதுதான் உண்டான், களவு வெளிப்படாதபடி ஒளித்துண்ணத் தெரியவில்லையே! சிசுபாலன் முதலானாரும் ஏசும்படி அனைவர்க்கும் தெரியும்படியன்றோ வெண்ணெ களவு செய்துண்டது! இதென்ன சிறுபிள்ளைத்தனம்! (தோன்ற உண்டான்) எதிரிகளுக்கும் தோன்ற உண்டபோதும் தோற்றவில்லையே பாவியேனுக்கு! (வென்றி சூழ்களிற்றை) வெற்றியை உடையதாய், எதிர்த்தவர்களைத் தவறாதபடி சூழ்ந்துகொள்ளவல்ல குவலயாபீட யானையை. தன்னைச் சூழ்ந்துகொள்ள நினைத்த யானையை என்றுமாம். வெற்றிமேல் வெற்றியாகப்பெற்றதாய் தோல்வியறியாத யானையை என்றுமாம். வெற்றியையும், சூழ்ச்சியையும் உடைய யானையை என்னவுமாம். (ஊன்றிப் பொருது

கஜயுத்$_3$த$_4$த்துக்கு தே$_3$ஶிகரானவர்களைப்போலே உறைக்க நின்று பொருது தலையெடுக்கமாட்டாமல் உருவழிந்து உளுக்காம்படி பண்ணினவனும், தன்னை விழுங்கவந்த ப$_3$காஸுரன் வாயைக் கிழித்துப் பொகட்டவனும் யமளார்ஜுனங்களின் நடுவே அவை வேர்பறிந்து விழும்படி தவழ்ந்துபோய் பூமி முதலான லோகங்களை அளந்துகொண்ட ஸர்வாதி$_4$கன் இவர்!

வரையாதே தீண்டுகையும், அழகும், ஆனைத்தொழிலும் முதலான ஸ்வபா$_4$வஸாத$_4$ர்ம்யத்தாலே க்ருஷ்ணனோடே த்ரிவிக்ரமனைச் சேர்க்கிறார். இவள் முலையைப்பற்றி அமுது செய்தவாறே பழைய பேய் வடிவோடே நான்ற முலையும் தானுமாய் விழுந்தாள் என்னவுமாம். 'பொருதிடைவு கண்டானும்' என்று பாடமாய், இடைந்துளுக்காம்படி கண்டவன் என்றுமாம்.

உடைவுகண்டானும்) யானைப்போரில் வல்ல யானைப்பாகர்களைப்போலே, உறைக்கநின்று யானையோடு சண்டையிட்டுப் பச்சைப்பானையைப்போலே உடையச்செய்தவனும். "மருப்பொசித்த பாகன்" [திருச்சந்த52] என்றாரன்றோ மழிசைப்பிரானும். (உடைவு கண்டானும்) மறுபடி தலையெடுக்க முடியாதபடி உருவழிந்து, உளுத்துப்போன மூங்கில்போலே உடைந்து போகும்படி செய்வதவனும். "இடைவுகண்டான்" என்று பாடமாய், சிதைந்து உளுத்துப்போம்படி பண்ணினான் என்றுமாம். ஆயுதத்தை உருவினவுடன் உறை சுருங்கிப்போவதுபோலே, கொம்பைப்பிடுங்கியவுடன் இவ்வானை சுருங்கிப்போகும்படி பண்ணினான் என்றுமாம். (புள்ளின் வாய் கீண்டானும்) தன்னை விழுங்கவந்த பகாஸுரன் [கொக்குருவோடு வந்தவன்] வாயைக்கிழித்துப் போட்டவனும். (மருதிடைபோய்) இரட்டை மருத மரங்களினிடையே, அவை வேர் பறிந்து விழும்படித் தவழ்ந்துபோய். (மண்ணளந்தமால்) திருவிக்கிரமாவதாரத்தில் பூமி முதலான உலகங்களை அளந்து கொண்ட ஸர்வேச்வரனன்றோ. (மண்ணளந்தமால்) "உலகளந்த நான்று" என்ற நீர்மை பின்றொட்டுகிறபடி. கண்ணனைச் சொல்லிக்கொண்டே வந்தவர் "மண்ணளந்த மால்" என்று என்று திரிவிக்கிரமனைச் சேர்ப்பானேன்? எனில்: உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பாகுபாடு பாராமல் அனைவரையும் அணைப்பது, அழகு, அதிமாநுஷச்செயல்களைச் செய்வது, சிறுபிள்ளைத்தனம், அடியார் பக்கல் வாத்ஸல்யத்தாலே தன்னை அறிய மாறுவது முதலான குணங்கள் திரிவிக்கிரமனுக்கும், கண்ணனுக்கும் ஒத்திருக்கையாலே இருவரையும் சேர்த்துப்பாடுகிறார்.

19. மாலும் கருங்கடலே என்னோற்றாய் வையகமுண்
டாலினிலைத் துயின்ற வாழியான்—கோலக்
கருமேனிச் செங்கண்மால் கண்படையுள் என்றும்
திருமேனி நீ தீண்டப்பெற்று.

பதவுரை:—**வையகம் உண்டு**—*உலகத்தை உண்டு*, **ஆலினிலை**—*ஆலமரத்தின் இலையில்*, **துயின்ற**—*கண்வளர்ந்தருளியவனும்*. **ஆழியான்** — *ஸமுத்ரசாயியாயிருப்பவனும்*, **கோல கருமேனி**—*அழகிய கறுத்த மேனியையும்*, **செங்கண்**—*சிவந்த திருக்கண்களையுமுடையவனும்*, **மால்**—*(அடியார்களிடம்) அன்புடையவனுமான எம்பெருமான்*, **கண்படையுள்**—*பள்ளிகொள்ளும்போது*, **என்றும்**—*எக்காலத்திலும்*, **திருமேனி**-*(அவனுடைய) திவ்யமங்களவிக்ரஹத்தை*, **தீண்டப்பெற்று**—*ஸ்பர்சிக்கப்பெற்று*, **மாலும்**-*(அந்த ஆனந்தத்தாலே) மயங்குகிற*, **கருங்கடலே**—*கறுத்த ஸமுத்ரமே!* **நீ என்னோற்றாய்**—*நீ என்ன நோன்பை அனுஷ்டித்தாய்?*

அவதாரிகை:—*காத₃ாசித்கமான அநுப₃வமும் கிடையாமையால், நான் கண்ணீர் விழவிடாநிற்க, அவனை மடியிலே சாயவிட்டு முழுநோக்குச்செய்து நித்யாநுப₄வம் பண்ணி வாழுகிற நீ என்ன ப₄ாக்₃யம் பண்ணினாய் என்கிறார்.*

உரை:—*ஜகத்தையடைய ப்ரளயத்தில் அழியாதபடி திருவயிற்றிலே எடுத்துவைத்து, ஓராலந்தளிரிலே கண்வளர்ந்தருளினவனாய், ப்ரளயம் வரில் இருதுண்டமாக விடுகைக்குப் பரிகரமான திருவாழியை உடையனுமாய், அழகிய கறுத்த*

அவ:—"நான் ஒரு சமயத்திலாவது தீண்டப்படாமல் கண்ணீர் விடுகின்றேன். இப்பூமி மண்ணளந்த ஒரு சமயத்திலே தீண்டப்பெற்றது. அவனை மடியிலே சாயவிட்டுக்கொண்டு எப்போதும் கண்டு தீண்டிநிற்கும் நீ என்ன தவம் செய்தாயோ? என்று கடலை நோக்கிக் கூறுகிறார்.

வ்யா:—(வையகமுண்டு) உலகனைத்தையும் பிரளயஜலத்தில் அழியாதபடி சிறிய திருவயிற்றிலே எடுத்துவைத்து. (ஆலினிலைத்துயின்ற) அப்போதே தளிர்விட்ட ஓராலிலையில் கண்வளர்ந்தருளியவன். உலகெல்லாம் இவன் திருவயிற்றில்; இவன் ஓராலந்தளிரில். இதென்ன அக₄டித கடநாஸாமர்த்தியம்! (ஆழியான்) ப்ரளயம் தன்னையும் முழுகடிக்கவந்தால்

நிறத்தையுடைய திருமேனியையும் அதுக்குப் பகைத் தொடையாம்படி வாத்ஸல்யத்தாலே குதறிச் சிவந்த திருக்கண்களையும் உடையனாய் ஆஸ்ரிதவ்யாமுக்$_5$த$_4$னானவன் கண் வளர்ந்தருளுகிறவிடத்தில், ஸர்வகாலத்திலும் அவன் திருமேனியை நீ அநுப$_4$விக்கப்பெற்று, அந்த ஸ்பர்ஸஸுக$_2$த்தாலே மயங்காநிற்பதாய், அவன் வடிவின் நிழலீட்டாலே கறுத்தநிறத்தையுடைய கடலே! இப்பேறு பெறுகைக்கு என்ன ஸாத$_4$நாநுஷ்டா$_2$நம் பண்ணினாய்? அத்தைச் சொல்லமாட்டாயோ நானும் அநுஷ்டித்துப் பார்க்கைக்கு? என்று கருத்து.

'மால்' என்று பெருமையைச் சொல்லுகிறதென்னவுமாம்.

அதை ஆழியால் இரண்டு துண்டாக்குவேன் என்பவன்போலே திருவாழியிலே கைவைத்துத் துயின்றான். (கோலக் கருமேனி) அழகிய கறுத்த திருமேனியையுடையவன். (செங்கண்) அத்திருமேனிக்கு வர்ணச்சேர்த்தியழகைக் கொடுக்கும் சிவந்த கண்களையுடையவன். வாத்ஸல்யத்தாலும் ஐச்வர்யத்தாலும் குதறிச்சிவந்திருக்கை. (மால்) அடியாரிடம் மயக்கங் கொண்டவன். ஸர்வேச்வரன் என்று பெருமையைச் சொல்லுகிறதாகவுமாம். (கண்படையுள்) "கிடந்ததோர் கிடக்கை" [திருமாலை-23] என்கிறபடியே அழகு முழுவதும் காணலாமான பள்ளிகொள்ளுமிடத்திலன்றோ கண்டு அநுபவித்தது. 'பள்ளிகொள்ளுமிடத்தடி கொட்டிட" [நாச்-திரு-4] என்று நாய்ச்சியார் ஆசைப்பட்ட பேற்றையன்றோ பெற்றிருப்பது! (என்றும்) அன்புடையார் ஒருநாள் ஒருபோதுபெற ஆசைப்படும் பேற்றையன்றோ எப்போதும் பெற்றிருப்பது. (திருமேனி) பெரியபிராட்டியார் ஆசைப்படும் மேனியையன்றோ பெற்றது. (தீண்டப்பெற்று) பார்ப்பது மட்டுமல்லாமல் தீண்டவும் பெற்றாய். கண்ணோடு ஸ்பரிசேந்திரியமும் பசிதீரப்பெற்றாய். (மாலும் கருங்கடலே) அவனுடைய ஸ்பரிசஸுகத்தாலே மயங்கிநிற்கும் கருங்கடலே! என்னைப்போலே உடம்பு வெளுக்காமையிலிருந்தே நீ பேறுபெற்றமை தோற்றுகிறதே! திருப்பாற்கடலைக் கருங்கடல் என்னலாமோ? எனில்: அவன் வடிவில் கருமைநிழல்பட்டுக் கறுத்திருக்கிறபடி. "நீலக்கடல் கடந்தாய்" [திருவாய் 10-10-7] என்றாரன்றோ ஆழ்வாரும். அன்றியிலே, பிரளயஜலத்தைச் சொல்லுவதாகவுமாம். (மாலும்) மதுபானம் பண்ணினாரைப்போலே மயங்கிநிற்கை. (நீ என் நோற்றாய்) இப்பேறு பெறுவதற்கு நீ என்ன தவம் செய்தாயோ? அதைச் சொல்லமாட்டாயோ நானும் அனுஷ்டித்துப் பலன் பெறுவதற்கு? என்று கருத்து.

20. பெற்ருர் தளை கழலப் பேர்ந்தோர் குறளுருவாய்ச்
செற்ருர் படிகடந்த செங்கண்மால்—நற்ரு
மரைமலர்ச் சேவடியை வானவர்கைகூப்பி
நிரைமலர்கொண் டேத்துவரால் நின்று.

பதவுரை:—**பெற்ருர்**—தாய் தந்தையர்களாகிய தேவகி வஸுதேவர்களுடைய, **தளை கழல**—கால் விலங்கு கழலும் படியாக, **பேர்ந்து**— (திருப்பாற் கடலினின்றும்) கிளம்பி, **ஓர்**—ஒப்பற்ற. **குறள் உருவாய்**—வாமனவேஷத்தையுடைய வனுய், **செற்ருர் படி**—ஆச்ரிதனை இந்திரனுக்கு விரோதி யான மஹாபலி தன்னுடையதாக அபிமானித்திருந்த உலகத்தை, **கடந்த**—அளந்தவனும், **செம் கண் மால்**-சிவந்த கண்களையுடையவனும், ஆச்ரிதபக்ஷபாதியுமான எம்பெரு மானுடைய, **நல்தாமரை மலர் சே அடியை**—அழகிய கமலம் போலிருக்கிற சிவந்த திருவடியை. **வானவர்**—தேவர்கள். **கை கூப்பி நின்று**—அஞ்ஜலி செய்துகொண்டு நின்றவர் களாய், **நிரை மலர் கொண்டு**-தொடுத்த மலர்களைக்கொண்டு, **ஏத்துவர்**—புகழுவார்கள்; **ஆல்**—ஐயோ! (எனக்கு அப்படிப் பட்ட பேறு கிட்டவில்லையே! என்றபடி).

அவதாரிகை:— கடல் அவனைப்பெற்றுக் களித்த அளவேயோ? அப்படுக்கையை விட்டு இங்கே வந்து அவ தரித்த விடத்திலும் சில பாக்யாதிகர் கிட்டி அநுபவிக்கப் பெற்ருர்கள் கிடீர்! என்கிருர்,

உரை:—தன்னைப் பிள்ளையாகப்பெற்ற ஸ்ரீவஸுதேவர் தேவகியாருடைய காலிலிட்ட விலங்கு நீங்கும்படியாகப்

அவதாரிகை:—கடல் அவனைத் தீண்டப்பெற்றுக் களித்ததுமாத் திரமோ? அப்படுக்கையைவிட்டு அவதரித்தவிடத்திலும் சில ஸம்ஸாரி களுக்கும், தேவதாந்தரங்களுக்கும் தன்னை அநுபவிக்கும் பாக்கியத்தை அருளினனே! நான் ஒருவனை இழந்துவிட்டேன்! என்கிருர்.

பரமபதத்தினின்றும் பேர்ந்து இங்கே க்ருஷ்ணனுய் வந்து அவதரித்து அவ்வளவில் நில்லாமல் அழகுக்கு அத்விதீய மாய், கண்ணுலே முகந்து அனுபவிக்கலாம்படியான வாமந வேஷத்தை உடையனுய், ஆஶ்ரிதனை இந்த்ரனை நெருக்கு கையாலே தனக்கு ஶத்ருவான மஹாபலிபோல்வார் என்ன

வ்யா:—(பெற்ருர் தளை கழல) "தந்தை காலில் விலங்கற வந்து" [பெரியதிரு8-5-1]என்கிறபடியே தன்னைப்பிள்ளையாகப்பெற்ற தேவகிவஸு தேவர்களின் கால்விலங்கு நீங்கும்படியாக, (பேர்ந்து) பரமபதத்தினின்றும் பேர்ந்து இங்கே கண்ணனுய் அவதரித்து. திருப்பாற்கடலினின்றும் பேர்ந்து என்றுமாம். (பெற்ருர்) நிதி எடுக்கப்பெற்ருர் என்னுமாபோலே இவர்க ளன்றே பயன் பெற்றவர்கள் என்கிருர், (பெற்ருர்) 'என் பிள்ளை கண்ணன்; இவனைப் பெற்ருேம்நாம்' என்று அபிமானித்தவர் தளை கழலாநிற்க, "அடியோம்" என்னும் நம் தளை கழலாதிருக்குமோ? (பெற்ருர் தளை கழலப் பேர்ந்து) பிற்பகுதியைப்போலே வாமனனையே சொல்லவுமாம். தன்னை ஸ்பர்சிக்கப்பெற்றவர்களுடைய ஸம்ஸாரவிலங்கு கழலும்படியாக அடி யெடுத்துவைத்து என்று பொருள். (ஓர் குறளுருவாய்) அழகிலே ஒப்பற்ற வாமனவேஷத்தைக் கொண்டவனுய். பெரியவடிவழகையெல்லாம் சிறிய வடிவிலே அடக்கிவைத்திருக்கையாலே, கண்ணுலே முகந்து அநுபவிக்கலா யிருக்கை. (ஓர் குறள்) ஒப்பற்ற வாமனன். உலகில் வாமனர்களெல்லாம் இவனோடு ஒப்பிடும்போது திரிவிக்கிரமர்கள் என்னலாம்படியான வாமனன். (செற்ருர்படி கடந்த) தன் விரோதியான மஹாபலி முதலானூர் 'எம் முடையது' என்று அபிமானித்திருந்த பூமியை விளையாட்டாகத் தாவி அளந்துகொண்ட. (செற்ருர்) அடியானுன இந்திரனைத் துன்புறுத்துகை யாலே தனக்கு விரோதியாக நினைத்திருந்தான் என்று கருத்து.

"த்₃விஷத₃ந்நம் ந போ₄க்தவ்யம் த்₃விஷந்தம் நைவ போ₄ஜயேத் ।
பாண்ட₃வாந் த்₃விஷஸே ராஜந் மம ப்ராணு ஹி பாண்ட₃வா: ॥"

[பார-உத்74-27]

[த்வேஷிப்பவனின் அன்னம் புஜிக்கத்தக்கதன்று; த்வேஷிப்பவனை புஜிப் பிக்கவும்கூடாது. அரசனே! நீ பாண்டவர்களை தவேஷிக்கிருய். பாண்ட வர்கள் எனக்குப் பிராணனன்ருே.]

"யஸ்த்வாம் த்₃வேஷ்டி ஸ மாம் த்₃வேஷ்டி யஸ்த்வாமநுஸ்மாமநு।
அபே₄தே₃நாத்மநோ வேத்₃மி த்வாமஹம் பாண்டு₃நந்த₃ந ॥"

[விஷ்ணுதர்மம் 37-2]

தென்று அபிமானித்திருந்த பூமியை அநாயாஸேந அளந்து கொண்டவனாய், அத்தால் வந்த ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே சிவந்த திருக்கண்களை உடையவனாய், ஆஸ்ரிதவ்யாமுக்₃த₄னான வனுடைய அழகிய தாமரைப் பூப்போலேயிருக்கிற சிவந்த திருவடிகளை, இந்நீர்மை ஏறிப்பாயாத ஸ்வர்க்க₃த்திலே வர்த்திக்கிற இந்த்₃ராதி₃தே₃வதைகள் இச்செயலுக்குத் தோற்று அஞ்ஜலிப₃ந்த₄த்தைப் பண்ணி, தொடைவாய்த் திருந்துள்ள செவ்விப்பூக்களைப் பணிமாறிக்கொண்டு

[பாண்டுபுத்திரனே! எவன் உன்னை துவேஷிக்கிறானோ அவன் என்னை துவேஷிக்கிறான்; எவன் உன்னைப்பின்பற்றி நிற்கிறானோ, அவன் என்னைப் பின்பற்றி நிற்கிறான்; என்னைக் காட்டிலும் வேறுபடாதவனாக உன்னை நினைக்கிறேன்.] என்று சொல்லுகிறபடியே அடியார்களுடைய எதிரியைத் தன் எதிரியாகவே கருதுபவனன்றோ இவன். (செங்கண்மால்) விரும்பியது பெற்ற உகப்பின் மிகுதியாலே கண்கள் சிவக்கப்பெற்ற ஸர்வேச்வரன். (மால்) தேவர்கள் தலையிலும் காலைவைத்த ஸர்வேச்வரன், (மால்) அடியார் திறத்தில் அன்புடையவனாகையாலே தன் ஸ்வரூபத்தை அழித்துக் கொண்டு யாசகனாகித் தொழில் புரிந்தான் என்றுமாம். (நல் தாமரை மலர்ச் சேவடியை) சிவப்பு, அழகு, குளிர்த்தி, மென்மை, மணம் முதலான வற்றாலே நல்ல தாமரை மலர்போன்ற சிவந்த திருவடிகளை. உலகிலுள்ள தாமரைகள் இக்குணங்களில் திருவடியின் அருகும் செல்லமாட்டா வாகையால், லோகவிலக்ஷணமான நல் தாமரை மலரைத்தேடி ஒப்பிடுகிறார் என்றும் கொள்ளலாம். (வானவர்) இந்நீர்மை ஏறிப்பாயாத மேட்டு நிலமான சுவர்க்கத்தில் வாழும் இந்திராதி தேவர்களன்றோ பெற்றார்கள்! கீழ் நிலத்திலிருக்கும் நான் பெறப்பெற்றிலேனே! (கைகூப்பி நின்று) அபிமானிகளாயினும் அழகனைக் கண்டவுடன் கை தானே கூப்புகிறது.

"த்₃ருஷ்ட்வா க்ருஷ்ணம் தத₂ாயாந்தம் ப்ரதபந்தமிவௌஜஸா।
யதா₂ர்ஹம் கேஶவே வ்ருத்திமவஶா: ப்ரதிபேதி₃ரே ॥"
[பார-ஸபா-75]

[தன்னுடைய வீர்யத்தினால் (பிறரைக்) கொளுத்துபவன்போல் அப்படி எழுந்தருளும் கண்ணனைப் பார்த்துப் பரவசமடைந்த அவர்கள் கேசவனாகிற அவன் விஷயத்தில் நமஸ்காரம் முதலிய காரியங்களைத் தகுந்தபடி செய்தார்கள்.] என்றாற்போலே. (நிரை மலர்கொண்டு ஏத்துவரால்) தொடுத்தமாலையைக் கைக்கொண்டு துதிப்பார்கள். 'நிரை வானவர்' என்று

ஸ்தோத்ரம் பண்ணி ஆப்ரயிக்கப் பெறுவர்களாம். பாவியேன்! நாமே இழப்போம்! என்று வெறுக்கிறார்.

21. நின்று நில மங்கை நீரேற்று மூவடியால்
சென்று திசை யளந்த செங்கண்மாற்கு—என்றும்
படை யாழி புள்ளூர்தி பாம்பணையான் பாதம்
அடையாழி நெஞ்சே யறி

பதவுரை:—**நின்று**—(மாவலியினருகில்) நின்று, **நிலம்**—பூமியை, **அம் கை**—அழகிய கையினால், **நீர் ஏற்று**—தானம் வாங்கி, **மூ அடியால்**—மூன்று அடிகளாலே, **சென்று திசை அளந்த**—நடந்தபடி சென்று திக்குகளையெல்லாம் அளந்து கொண்ட, **செம் கண் மாற்கு**—சிவந்த கண்களையுடைய ஸர்வாதிகனுக்கு, **என்றும்**—எக்காலத்திலும், **படை**—ஆயுதம், **ஆழி**—சக்கரம்; **புள்**—கருடாழ்வான், **ஊர்தி**—வாஹனம்; **ஆழி நெஞ்சே**—கம்பீரமான மனமே! **அறி**—(இதைக்) கேட்பாயாக:—. **பாம்பு அணையான்**—திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய எம்பிரானுடைய, **பாதம்**—திருவடிகளை, **அடை**—அடைந்திடுவாயாக.

அவ:—அவன் பெருமையைப் பார்த்துப் பிற்காலியாதே, ஆஸ்ரிதஸம்ப்லேஷைகஸ்வபாவன் என்றறிந்து அவன் திருவடிகளைக் கிட்டப்பார்கிடாய் நெஞ்சே! என்கிறார்.

கூட்டினால், வரிசைவரிசையாக நிற்கும் தேவர்கூட்டங்கள் பூக்கொண்டு துதிப்பார்கள் என்று பொருள்படும். (நின்று) நம்மைப்போலே காலாழ்ந்து கண்சுழன்று நெஞ்சழியாமல் அழகு வெள்ளத்தை எதிர்த்து நிற்கப்பெற்றார்களே! என்ன பாக்கியம் என்று வியக்கிறார். ஆல்-வியப்பைக் காட்டுகிறது. தான் பெறவில்லையேயென்னும் வருத்தத்தைக் காட்டுவதாகவுமாம்.

அவதாரிகை:—அவனுடைய பெருமையைப் பார்த்துப் பின்வாங்காமல், அடியாருடன் கலப்பதையே இயல்பாக உடையவன் என்றறிந்து அவன் திருவடிகளைக் கிட்டப்பாராய் என்நெஞ்சே! என்கிறார்.

உரை:—மஹாப$_3$லி யஜ்ஞவாடத்தளவும் நடந்து சென்று, அவன்முன்னே 'அபி$_4$மதம் பெற்றன்றிப் போகேன்' என்று மலையாளர் வளைப்புப்போலே அர்த்தி$_2$த்வம் தோற்ற நின்று, எல்லாருக்கும் குறைவறக் கொடுத்துப்போந்த அழகிய திருக் கையிலே பூமியை நீரேற்று வாங்கிக் கொண்டு, ஓரடிக்கு அவனைச் சிறையிட்டு வைப்பதாக மூன்று திருவடிகளாலே திக்குக்களோடே கூடின ஸகலலோகங்களையும் அளந்து கொண்டவனாய், அத்தால் வந்த ஹர்ஷப்ரகர்ஷத்தாலே சிவந்த திருக்கண்களை உடையனுமான ஸர்வாதி$_4$கனுக்கு ஸர்வகாலத்திலும் ரக்ஷணபரிகரமான தி$_4$வ்யாயுத$_4$ம் திரு வாழி. மேற்கொண்டு நடத்துகிற வாஹநம் பெரியதிருவடி. திருவனந்தாழ்வானைப் படுக்கையாக உடையவனாகையாலே

வ்யா:—(சென்று) மஹாபலியின் யாகசாலைவரையில் நடந்து சென்று. அடியார்க்காகத் தன்னை அழியமாறிச் சென்றான். (நின்று) 'நான் விரும்பியது கிடைத்தாலல்லது போகமாட்டேன்' என்று அவன் முன்னே மலையாளர் வளைப்புப்போலேயும், கல்லுளிமங்கன்போலேயும் பழிகிடந்தான். (அம் கை நீரேற்று) கொடுத்து வளர்ந்த அழகிய கையிலே தானநீரேற்றான். (நிலம் நீரேற்று) தன் நிலத்தைத்தானே நீரேற்றுப் பெற்றான்! (மூவடியால் திசையளந்த) உலகளக்க இரண்டடிகளே போதுமாயிருக்க, அவனை மூன்றாமடியாலே பாதாளத்தழுத்திச் சிறை வைப்பதற்காக, மூவடி வேண்டிப்பெற்று எல்லாத்திசையையும் அளந்தானிவர். (சென்று திசையளந்த) என்றும் கூட்டலாம். திக்குகள் தோறும் சென்றளந்தன திருவடிகள் என்கை. (செங்கண் மாற்கு) தாய் சேயைத் தழுவினாற்போலே அதனால் உண்டான உகப்பாலே கண்கள் சிவந்த ஸர்வேச்வரனுக்கு. (என்றும் படை ஆழி). அடியாரை ரக்ஷிக்கக்கருவியான ஆயுதமாயிருப்பது ஸுதர்சனம். அப்படியிருந்தும் சக்கரத்தால் தலை கொள்ளாதே யாசித்துப் பெற்றான் மாவலியிடம். ஏனெனில்: அடியானான அவனையும் கைவிடக்கூடாதென்று. (புள்ளூர்தி) மேலேறிச் செலுத்துகிற வாஹனம் கருடனாவான். அப்படியிருந்தும் அடியார்க்காக நடந்து சென்றானே! (பாம்பணையான்) எப்போதும் திருவனந்தாழ்வானாகிற படுக்கையைப் பிரியாமலிருப்பவன். இப்படி ஓரடியானைக் கையிலும், ஒருவனைக் காலின்கீழும், ஒருவனைப் பிரியாமலும் கொண்டிருக்கையாலே அடியாரோடு கலப்பதையே இயல்வாகக்கொண்டவன் இவன் என்று விளங்கு

ஆஶ்ரிதஸம்ஶ்லேஷைகஸ்வபாவனானவனுடைய திருவடிகளைக் கிட்டி அநுபவிக்கப்பார். கம்பீரஸ்வபாவமான நெஞ்சே! இத்தை ஓலக்கவார்த்தையென்றிராதே நன்றாக புத்திபண்ணு.

22. அறியுமுலகெல்லாம் யானேயு மல்லேன்
பொறி கொள் சிறை யுவணமூர்ந்தாய்—வெறிகமழும்
காம்பேய் மென் தோளி கடைவெண்ணெ யுண்டாயைத்
தாம்பே கொண்டார்த்த தழும்பு.

பதவுரை:—பொறி கொள் சிறை — பல வர்ணங்களை யுடைய சிறகுகளைக் கொண்ட. **உவணம்**—கருடாழ்வானை. **ஊர்ந்தாய்**—ஏறி நடத்துமவனாய். **வெறி கமழும்** — மணம் வீசப்பெற்றவளும். **காம்பு ஏய் மென் தோளி** மூங்கிலை ஒத்த மெல்லிய தோளை உடையவளுமான யசோதைப் பிராட்டியினால். **கடை வெண்ணெய்**—கடையப்பட்ட வெண்ணெயை. **உண்டாயை**—அமுது செய்தவனான உன்னை. **தாம்பே கொண்டு**—ஒரு சிறு கயிற்றையே கொண்டு. **ஆர்த்த**—கட்டினதாலுண்டான. **தழும்பு** — தழும்பை. **யானேயும் அல்லேன்**-நான் ஒருவனே அறிபவனல்லேன்; **உலகெல்லாம் அறியும்**—உலகத்திலுள்ளவர்களெல்லாரும் அறிவார்கள்.

அவதாரிகை:—நீர் நம்மை 'ஆஶ்ரிதஸம்ஶ்லேஷைகஸ்வபாவன்' என்று அறிந்தபடி எங்ஙனே என்ன, நான் ஒருவனுமேயோ? லோகமடைய அறியாதோ? என்கிறார்.

கிறது. (பாதம் அடை) இப்படிப்பட்டவனுடைய திருவடிகளை நீ அடைவாய்; மஹாபலியைப்போலே அவன் திருவடி உன்னைத்தேடி வரஇராமல், நீ அவன் திருவடியைத் தேடிப்போ. (ஆழி நெஞ்சே) கடல் போலே கம்பீரமான நெஞ்சே! எனக்கும் உபதேசிக்கவல்ல உனக்கு நான் உபதேசிக்கவேணுமோ? (அறி) ஸபையிலே டம்பமாகச் சொல்லும் வார்த்தையாக இதை நினையாமல் நன்றாக அறிந்து நடப்பாயாக. (அடை—அறி) அடியார்க்காகத் தன்னை அழிய மாறுமவன், அடியாரோடு கலப்பதையே இயல்பாக உடையவன் என்பதை அறிந்தாயாகில் உன் தாழ்வை நினைத்துப் பின்வாங்காமல் நீ அவனை அடையலாம் என்று கருத்து.

உரை:—சித்ரபடம்போலே நாநாவர்ணமான சிறகை யுடைய பெரியதிருவடியை நடத்தும் ஸ்வபாவனை, பிள்ளை அனுங்காதபடி ஸுகந்தத்ரவ்யத்தாலே அலங்கரித்துக் கொண்டிருக்கையாலே பரிமளம் அலையெறியா நிற்பாளாய், பசுமைக்கும் சுற்றுடைமைக்கும் ஒழுகு நீட்சிக்கும் வேய்போலேயாய், அதில் வ்யாவ்ருத்தமான மார்த்தவத்தை யுடைய தோளையுடையளுமானயசோதைப்பிராட்டி உடம்பு நோவக் கடைந்து திரட்டி வைத்த வெண்ணெயை அமுது செய்தருளின உன்னை, கைக்கெட்டிற்றொரு அறுதல் தாம்பையே கொண்டு உறைக்கக் கட்டுகையால் வந்த தழும்பு நான் ஒருவனுமேயல்லேன், நாடடங்க அறியுங் காண்! 'உவணம்' என்று பருந்துக்குப்பேர்.

அவதாரிகை:—'அடியாரோடு கலப்பதையே இயல்வாக உடையவன்' என்று நீர் என்னை எப்படி அறிந்தீர்? என்று எம்பெருமான் கேட்க, "நான் ஒருவன்தானோ அறிந்தேன்! உலகமெல்லாம் அறியுமே உன் தழும்பைக்கொண்டு" என்கிறார்.

வ்யா:— (பொறிகொள் சிறை உவணம் ஊர்ந்தாய்) பல வர்ண நூல்களால் நெய்யப்பெற்ற வர்ணவஸ்திரம்போலே பல வர்ணங்களை யுடைய சிறகை உடைய கருடாழ்வானை வாகனமாக ஊர்ந்தவனே! உவணம்-பருந்து; (இங்கு) கருடன். ஊர்ந்தவனை வெண்ணெயுண்டவனை உன்னை என்று மேலோடே கூட்டவுமாம். (வெறி கமழும்) பிள்ளை முகம் வாடக்கூடாது என்பதற்காக எப்போதும் கந்தமால்யாதிகளால் அலங் கரித்தபடியே இருக்கையால் மணம் கமழா நிற்கிறாள் யசோதை. (காம்பு ஏய் தோளி) மூங்கில்போன்ற பசுத்து நீண்டு உருண்டுதிரண்ட தோளை உடையவள். (மென்தோளி) மூங்கிலைப்போலே முரடாயிராமல் மென்மை மிக்க தோளையுடையவள் யசோதைப்பிராட்டி. (கடை வெண்ணெயுண் டாயை) தன் மென்மையையும் பாராமல் அவள் உடம்புநோவக்கடைந்து வைத்த வெண்ணெயை உண்ட உன்னை. (தாம்பே கொண்டார்த்த தழும்பு) கைக்கெட்டினதொரு அறுந்த தாம்பையேகொண்டு அழுத்திக்கட்டியதா லுண்டான தழும்பை. (யானேயுமல்லேன் உலகெல்லாமறியும்) நான் மாத்திரமோ அறிவேன்? உலகனைத்தும் அறியும். அன்புடைய நான்மாத் திரமல்லேன்; வெறுப்புடைய சிசுபாலாதிகளும் அறிவர். 'தாமோதரன்' என்று பெயர் சுமக்கும்படி பிரசித்தமன்றோ இது. ஆகையால் நீ அடியா ரோடு கலப்பதையே இயல்வாக உடையவனென்பது நாடறிந்த விஷயமென்று கருத்து.

23. தழும்பிருந்த சார்ங்கநாண் தோய்ந்தவா மங்கை
தழும்பிருந்த தாள்சகடம் சாடி—தழும்பிருந்த
பூங்கோதை யாள்வெருவப் பொன்பெயரோன் மார்பிடந்த
வீங்கோத வண்ணர் விரல்.

பதவுரை:—அம் கை—*அழகிய கைகளில்,* **சார்ங்க நாண்**—*சார்ங்கவில்லின் நாணி,* **தோய்ந்த**—*படிந்ததினுலேற்பட்ட,* **தழும்பு**—*தழும்பானது,* **இருந்த ஆம்**—*இருக்கின்றனவாம்;* **தாள்**—*திருவடிகளில்,* **சகடம் சாடி**—*சகடாஸுரனை உதைத்ததினுலுண்டான,* **தழும்பு இருந்த**—*அடையாளம் இருக்கின்றது;* **பூம் கோதையாள்**—*அழகிய மயிர்முடியையுடைய பிராட்டி,* **வெருவ**—*(உலகுக்கு என் வருமோ என்று) அஞ்சும்படியாக,* **பொன் பெயரோன்**—*ஹிரண்யன் என்ற பெயரையுடைய அஸுரனுடைய,* **மார்பு இடந்த**—*மார்பைப் பிளந்த,* **வீங்கு ஓத வண்ணர்**—*பெருகும் அலைகளையுடைய கடலைப்போன்ற திருநிறத்தையுடைய எம்பெருமானுடைய,* **விரல்**—*திருவிரல்களிலே,* **தழும்பு இருந்த**—*தழும்புகள் இருக்கின்றன.*

அவதாரிகை:—''நாம் சிலருக்கு அஞ்சுகையாவதென்? கட்டுண்கையாவதென்? அத்தைப் பின் நாடறிகையாவதென்?'' என்று அத்தை மறைக்கப்புக்கான். ''ஒரு தழும்பாகிலன்றோ மறைக்கலாவது; உன் உடம்படங்கலும் ஆஶ்ரிதர்கார்யம் செய்கையால் வந்த தழும்பன்றோ?'' என்கிருர்.

அவதாரிகை:—''ஸர்வேச்வரனுன நாம் ஒருத்திக்குப் பயப்படுவதாவது? அவளிடம் கட்டுப்படுவதாவது? அதை உலகெல்லாம் அறிவதாவது?'' என்று கூறிக்கொண்டு தழும்பை வார்த்தையாலும், வஸ்திரத்தாலும் மறைக்கப் பார்த்தான் எம்பெருமான். ''ஒரு தழும்பாயிருந்தால் மறைத்துவிடலாம்; உன் உடம்பெல்லாம் அடியார்காரியம் செய்து பட்ட தழும்பாயிருக்கிறது; பிரபனே! இதில் எதை மறைப்பாய்?'' என்கிருர்.

உரை:—அழகிய திருக்கையானது ஸ்ரீஶார்ங்கத்தினுடைய நாணறைவால் வந்த தழும்பைச் சுமந்தன. அதிஸுகுமாரமான திருவடிகளானவை. அஸுராவிஷ்டமான ஶகடத்தை முறிந்து விழும்படி உதைத்து அத்தாலெழுந்த தழும்பைச் சுமந்தன. கிளர்ந்து அலையெறிகிற கடல்போலேயிருந்துள்ள வடிவையுடையவருடைய திருவிரல்களானவை அழகிய மயிர்முடியையுடைய பிராட்டி 'என்னைத் தேடுகிறதோ?' என்று நடுங்கும்படியாக, ஹிரண்யன் மார்வைப் பிளந்து பொகட்டத்தால் வந்த தழும்பைச் சுமந்தன. விரல் தழும்பு.

வ்யா:—(அம் கை சார்ங்கநாண் தோய்ந்த தழும்பிருந்தவாம்) பிராட்டிமாரும் தொடக்கூசவேண்டிய அழகிய கையிலே சார்ங்கமென்னும் வில்லின் நாண்படிந்தமையாலுண்டான தழும்புகளிருந்தன. கை தழும்பைச் சுமந்தது என்றுமாம். அடியார்க்காக அசுரராக்கர்களைக் கொல்லும்போது கையில் ஏற்பட்ட சார்ங்கநாண் தழும்பை மறைக்கமுடியுமோ? என்கை. (சகடம் சாடி தாள் தழும்பிருந்த) அறியாப்பருவத்திலே சகடமாய் ஓரசுரன் நிற்க, தாய்ப்பாலுக்காகக் காலை உதைத்துக்கொண்ட கண்ணனின் மென்மைமிக்க கால்பட்டு அவ்வசுரன் அழிந்துவிழுந்தான். இப்படி அடியார்க்குத் தன்னை நோக்கிக்கொடுத்த தாளிலேயும் சகடம் சாடியதினால் உண்டான தழும்பிருந்தது. இதைத்தான் மறைக்கக்கூடுமோ? (சகடம் சாடி) குழந்தை பாலுக்காகக் காலை உதைத்துக்கொண்டவித்தை; அரிய செயலாக இவர் கருதுகையாலே 'சகடம் **சாடி**' என்கிறார். (பூங்கோதையாள் வெருவப் பொன்பெயரோன் மார்விடந்த வீங்கோதவண்ணர் விரல் தழும்பிருந்த) 'அடியார் காரியம்' என்றால் உகக்கும் அவளும் பயப்படும்படி 'பொன்னன்' (ஹிரண்யன்) என்னும் அசுரனின் மார்வைப்பிளந்த பொங்கும் கடல்வண்ணனின் விரல்களிலும் பிரஹ்லாதனுக்குக் காரியம் செய்ததைக் காட்டும் தழும்பிருந்தன. வயிற்றில் தழும்பைத்தான் வஸ்திரத்தையிட்டு மறைத்துவிடலாம். கையில் தழும்பையும், தாளில் தழும்பையும், விரலில் தழும்பையும் எங்ஙனே மறைப்பாய் பிரானே! என்கிறார். (பூங்கோதையாள்) அழகிய மயிர்முடியையுடைய பெரியபிராட்டியார். (வெருவ) 'பிரளயகாலமே வந்ததோ?' என்று நடுங்கும்படியாக. (வீங்கோதவண்ணர்) **"அடலரியாய்ப் பெருகினானை"** [பெரியதிரு 2-5-8] என்கிறபடியே திசைகளெங்கும் வளர்ந்தானாகையாலே பொங்கும் கடலை உவமிக்கிறார். **"மஹாவிஷ்ணும்"** என்று நரஸிம்ஹ அநுஷ்டுப் மந்திரத்திலும் இவ்

கால் தழும்பு, கைத்தழும்பு இவற்றை எங்ஙனே உன்னால் மறைக்கும்படி? என்கை.

24. **விரலொடு வாய் தோய்ந்த வெண்ணெய்கண்டு ஆய்ச்சி**
உரலோ டுறப்பிணித்த நான்று—குரலோவா
தேங்கி நினைந்தயலார் காண விருந்திலையே
ஓங்கோத வண்ணா வுரை.

பதவுரை:—விரலொடு வாய் தோய்ந்த—*உன்னுடைய விரல்களிலும் வாயிலும் படிந்திருந்த*, **வெண்ணெய்**—*வெண்ணெயை*, **ஆய்ச்சி**—*யசோதைப்பிராட்டி*, **கண்டு**—*பார்த்து*, **உரலோடு**—*உரலுடன்*, **உறப் பிணித்த நான்று**—*நன்றாகக் கட்டி வைத்தபோது*, **குரல் ஓவாது**—*அழுகுரல் நீங்காமல்*, **ஏங்கி**—*ஏங்கிக்கொண்டு*, **நினைந்து**—*(அப்போதும்) வெண்ணெய் திருடுவதை நினைத்துக்கொண்டு*, **அயலார்**—*மற்றவர்களெல்லாரும்*, **காண**—*வேடிக்கை பார்க்கும்படி*, **இருந்திலையே**—*இருக்கவில்லையா?* **ஓங்கு ஓத வண்ணா**—*கிளர்ந்தெழுந்த அலைகளையுடைய கடல்போன்ற திருமேனியை உடையவனே!* **உரை**-*நீயே உண்மையைச் சொல்.*

அவதாரிகை:—*நாம் வெண்ணெய் களவு காணப்புக்குக் கட்டுண்டோமாகவேணுமோ? என்ன; களவுகண்டு கட்டுண்டிருக்கும்படி அறியாயோ? என்கிறார்.*

விக்ரஹவ்யாப்தியானது குறிக்கப்பட்டதன்றோ. வளர்த்தியிலும், குளிர்த்தியிலும், நிறத்திலும், ஆழங்காணவொண்ணாமையிலும், ஒளியலைவீசும் அழகிலும் கடலை ஒத்திருக்கையாலே 'வீங்கோதவண்ணர்' என்கிறார். நீ ஆச்ரித பக்ஷபாதியென்பதற்கு உன் திருமேனியிலேயே இத்தனை அடையாளங்களிருக்கும்போது, உன்னால் அதை எப்படி மறைக்கமுடியும்? என்று கருத்து.

அவதாரிகை:—*என் பெருமையைக்காட்டும் இத்தழும்புகளிருக்கட்டும்; "கடைவெண்ணெயுண்டாயைத் தாம்பே கொண்டார்த்த தழும்பு-உலகெல்லாம் அறியும்" என்று, நாள் வெண்ணெயைத் திருடித்தின்னும்போது கட்டுண்டதாக ஒன்று சொன்னீரே! என் எளிமையைக் காட்டும் இது உண்மையோ? என்று எம்பெருமான் திருவுள்ளமாக, "வெண்ணெய் திருடிக் கட்டுண்டிருந்ததை நீயே அறியாயோ" என்கிறார்.*

உரை:—திருக்கையாலே அள்ளித் திருப்பவளத்திலே வைத்த வெண்ணெயை அமுதுசெய்தருளுவதுக்குமுன்னே வாயதுகையதாகக்கண்டு இடைச்சியானவள் களவுக்குப் பெருநிலைநின்ற உரலோடேயெடுத்து உறைக்கக்கட்டினவன்று கூப்பிடுகிற கூப்பீடு உச்சிவீடுவிடாதபடி வாய்விட்டழமாட்டாமல் விம்மல் பொருமலாய் ஏங்கிக்கொண்டு அவ்வளவிலும் 'வெண்ணெயெங்கேயிருக்கிறது? அது களவு

வ்யா:—(விரலொடு வாய்தோய்ந்த வெண்ணெய்கண்டு) திருக்கையாலே அள்ளி, திருவாயிலே வைத்தவித்தனை; அமுதுசெய்யவும் பெறவில்லை,— அதற்குள் தடுத்துவிட்டாளே தாயாயிருந்தவள்! அமுதுசெய்தபின்பு கட்டுப்பட்டாலும் ஆறியிருக்கலாமே! வாயில்படும்போது வாயது கையதாகக்கண்டு கட்டிவிட்டாளே! "வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை வெற்பிடையிட்டு அதன் ஓசைகேட்கும் கண்ணபிரான் கற்ற கல்வி" [பெரியாழ்திரு 2-5-8] என்று வெண்ணெய் முழுவதையும் உண்டதாகவும் சொல்லுகிறது; "விரலொடு வாய்தோய்ந்த" என்று வாயில் தோய்ந்த வித்தனையேயொழிய உண்ணவில்லை என்றும் சொல்லுகிறது; இவையிரண்டும் எப்படிப் பொருந்தும்? என்று பிள்ளை திருநறையூரரையர் பட்டரைக் கேட்க, "'வைகலும் வெண்ணெய் கைகலந்துண்டான்' [திருவாய் 1-8-5] என்கிறபடியே, இவனுக்கு வெண்ணெய் களவுசெய்து உண்பதுதானே திருப்பணி; ஒருநாள் உண்டபின்பும் பிடுபடுவான்; ஒரு நாள் வாயில்வைத்தவுடனும் பிடிபடுவான்" என்று பட்டர் அருளிச்செய்தாராம். இவ்வைதிஹ்யம் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானத்திலுள்ளது. வெண்ணெயை உண்டானென்றால், திருமேனிக்குச் சேருமோ என்று பதறுவதும், வாய்தோய்ந்தவுடன் பிடிபட்டானென்றால், 'உண்ணவும் பெற்றானில்லையே' என்று வயிறெரிவதும் ஆழ்வார்களுக்குப் பணியாகையாலே இரண்டுவிதமாகவும் அநுஸந்திக்கக் குறையில்லை. (உரலோடு உறப்பிணித்த நான்று) இவன் வெண்ணெய் களவுகாண்பதைக்கண்டு உரல் பேசாமலிருந்த குற்றத்திற்காக, இருவருக்கும் தண்டனையாக, இருவருக்கும் வாசிதெரியாதபடி ஒன்றாகப் பிணைத்துவைத்தபோது. (குரலோவாது) அழும்போது த்வனி மாறுபடாமல்; ஒரே ஸ்வரத்துடன். (ஓவாது ஏங்கி) என்றுமாம். ஏங்கின ஏக்கம் கீழ்விழாதபடி என்கை. (ஏங்கி) அழப்புக்கவுடன் கோலை எடுத்துக்காட்டுவாளாகையாலே, அழவும்முடியாமல், விம்மல் பொருமலாய் ஏங்கிநின்றபடி. (நினைந்து) இந்நிலையிலும் பெரியதிருப்பணிகளையாயிற்று நினைத்திருப்பது. 'எங்கெங்கு வெண்ணெயிருக்கிறது; அதை எப்படியெப்படிக் களவுகாணலாம்?' என்றாயிற்று நினைத்திருப்பது. கள

காணும்படி எங்ஙனே?' என்று இத்தையே உருவ நினைத்துக் கொண்டு உன்னாலே புண்பட்ட இடைப்பெண்கள் எல்லாரும் 'கள்ளனுக்கு இத்தனையும் வேணும்' என்று சிரித்துக் கொண்டு வந்து காணும்படியாக, க்ருதார்த்தனாய்க்கொண்டு இருந்திலையோ? கட்டுண்ணப்பெற்ற ஹர்ஷத்தாலே ஓதங் கிளர்ந்த கடல்போன்ற வடிவையுடையவனே! நீ இத்தை உண்மையாகச் சொல்லிக் காண்!

இவர்க்கு இவன் வடிவு காணவேணுமென்றும், வார்த்தை கேட்கவேணுமென்றும்போலேசாணும் ஆசை!

விலே தழும்பேறிக்கிடக்கும்படி. தழும்பேறும்படி களவுகண்ட தாமோதரனன்றோ. (அயலார் காண இருந்திலையே?) ஆய்ப்பாடியில் பஞ்சலக்ஷம் குடியிற் பெண்களில் காணாதார் ஒருவர் உண்டோ? உன்னாலே புண்பட்ட இடைப்பெண்கள் அத்தனைபேரும் 'கள்ளனுக்கு இதுவும்வேணும்; இன்னமும் வேணும்' என்று சிரித்துக்கொண்டு காணும்படி இருக்கவில்லையோ நீ? (இருந்திலையோ?) பெரும்பயன் பெற்றவன்போலே இருக்கவில்லையோ நீ? இவ்வெளிவரவைக்கண்டு நான் உகப்பேனோ? என்ன,–(ஓங்கோதவண்ணா) இதை நான் சொல்லுவதைக் கேட்கும்போதே ஓதங்கிளர்ந்த கடல்போலே ஒளிவீசும் நீ, அக்காலத்தில் எத்தனை உகந்திருப்பாய்? அடியார் கையால் கட்டுண்கையாலே, அணைகட்டிய ஆறுபோலே அலைவீசுகிறபடியைச் சொல்லுகிறது. (உரை) **"அந்ருதம் நோக்தபூர்வம் மே ந ச வக்ஷ்யே கதாசந"** [ரா-கி7-22] [நான் முன் பொய்சொன்னதுமில்லை; ஒருபோதும் இனிச் சொல்லவும்மாட்டேன்.]

த்யௌ: பதேத் ப்ருதிவீ ஶீர்யேத் ஹிமவாந் ஶகலீபவேத் ।
ஶுஷ்யேத் தோயநிதி: க்ருஷ்ணே! ந மே மோகம் வசோ பவேத் ॥

[க்ருஷ்ணையே! ஆகாயம் கீழ் விழக்கூடும்; பூமி சுக்கலாகக்கூடும்; ஹிமாசலபர்வதம் தூளாகக்கூடும்; ஸமுத்ரம் வற்றக்கூடும்; என்னுடையவார்த்தை வீணாகாது]என்னும் ஸத்யவாக்யனான நீயே உரைப்பாயாக. (உரை) இது எப்படிப் பொருந்தும் என்பதை நீயே உரைப்பாய் என்றுமாம். அவாப்தஸமஸ்த காமனாய் (வேண்டுதல் வேண்டாமையிலாதவனாய்) இருப்பவன் ஒன்றைப் பெறாமல் அழுவதே! ஸர்வசக்தியுடையவன் ஓரபலையாலே கட்டுண்பதே! எல்லாமறிந்தவன் அவிழ்க்க வழியறியாமற்போவதே! பிரானே! இவை

25. உரைமேற் கொண்டென்னுள்ள மோவாது எப்போதும்
வரைமேல் மரதகமே போல—திரைமேல்
கிடந்தானைக் கீண்டானைக் கேழலாய்ப் பூமி
யிடந்தானை யேத்தி யெழும்.

பதவுரை:—வரைமேல்-*மலையின்மேலே*, **மரதகமே போல**-*மரதகமணி பதிந்திருப்பது போல*, **திரை மேல்**-*பாற்கடலின் மேலே*, **கிடந்தானை**—*பள்ளிகொண்டவனாய்*, **கேழலாய்**—*வராஹரூபியாய்*, **பூமி**—*உலகத்தை*, **கீண்டானை**— *(அண்ட பித்தியில் நின்றும்) ஓட்டு விடுவித்து*, **இடந்தானை**—*எடுத்த வனான எம்பிரானை*, **என் உள்ளம்**—*என்மனமானது*, **ஓவாது**-*இடைவிடாமல்*, **எப்போதும்**—*எல்லாக் காலத்திலும்*, **உரை மேற்கொண்டு**—*உரைப்பதில் ஈடுபட்டு*, **ஏத்தி**-*(அவனுடைய கலயாணகுணங்களைப்) புகழ்ந்து*, **எழும்**-*உய்ந்துபோகும்*.

அவதாரிகை:—*அவன் ஓவாதே அழுதபடியைக்கண்டு இவரும் ஓவாதே ஏத்தத் தொடங்கினர்.*

உரை:—*ஒரு மலையின்மேலே ஒரு மரதககிரி படிந்தாற் போலே ஸ்வஸங்கிதாநத்தாலே அலையெறிகிற திருப்பாற் கடலிலே கண்வளர்ந்தருளினவனாய், சிறுக்கன் ஆர்த்தி தீர்க்கைக்காக நரஸிம்ஹமாய்த் தூணிலேவந்து தோற்றி*

யெல்லாம் எங்ஙனே சேரும்படியென்பதை நீயே உரைப்பாயாக. (ஓங்கோத வண்ணா உரை) அப்போது உன்மேனியழகு எப்படியிருந்தது என்பதை ஒரு புடை கண்டேன்; அப்போது உன் சொல்லழகு எவ்வண்ணமிருந்தது என்று காணலாம்படி ஒருவார்த்தை சொல்லுவாய் என்பதாகவும் கொள்ளலாம்.

அவதாரிகை:—அவன் விடாமல் அழுதபடியைக்கண்டு ஈடுபட்டு, இவர் விடாமல் துதித்தபடியைச் சொல்லுகிறார்.

வ்யா:— (வரைமேல் மரதகமேபோலே) ஒரு மலையின்மேலே ஒரு மரதகமலை படிந்திருப்பதுபோலே. (திரைமேல் கிடந்தானை) தன் ஸ்பரிசத்தாலே அலையெறியும் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவனை. (கீண்டானை) பிரஹ்லாதனுன சிறுவனைப் பெற்ற தந்தையே தன்புறுத்த,

ஹிரண்யனைப் பிளந்து பொகட்டவனும், மஹாவராஹமாய் ப்ரளயத்திலே கரைந்து அண்டபித்தியிலே ஒட்டின பூமியை இடந்தெடுத்துக்கொண்டு ஏறினவனை என்னுடைய ஹ்ருத₃யமானது உரைக்கையிலே தத்பரமாய்க்கொண்டு உச்சிவீடுவிடாதே ஸர்வகாலத்திலும் இவ்வபதானங்களைச் சொல்லிப் புகழ்ந்து உஜ்ஜீவியாநிற்கும்.

"உரைமேற்கொண்டு" என்று மேலான உரையைக் கொண்டு. உத்க்ருஷ்டமான சப்தங்களைக்கொண்டு என்னவுமாம். "கேழலாய்க் கீண்டானைப் பூமியிடந்தானை" என்று இரண்டையும் இங்கேயாக்கி, அண்டபித்தியிலே ஒட்டின இத்தை முதல் கீண்டு, பின்னை இடந்தெடுத்துக்கொண்டு ஏறினபடியைச் சொல்லிற்றாகவுமாம்.

அவ்வருத்தம் போகைக்காக நரசிங்கமாய்த் தூணிலே தோற்றி,இரணியனைப் பிளந்துபோட்டவனை. (கேழலாய் பூமி இடந்தானை) மஹாவராஹமாய், பிரளயத்திலே துன்புற்று அண்டச்சுவற்றிலே ஒட்டின பூமியைக் குத்தி எடுத்துக்கொண்டுவந்தவனை, (கேழலாய்க் கீண்டானை பூமியிடந்தானை) என்று கூட்டி, வராஹமாய், பூமியை அண்டச்சுவற்றிலிருந்து பிளந்து, பின்னர் குத்தியெடுத்து ஸ்வஸ்தானத்திலே வைத்தவனை என்றும் கொள்ளலாம். (கிடந்தானைக் கீண்டானை) துன்புற்றவரைக் கண்டால் படுக்கை அடிக்கொதிக்கும்படி. "கீண்டானை பூமியிடந்தானை" என்கையாலே ஸர்வேச்வரன் என்றும், ஸர்வசக்தியென்றும் உணர்த்தப்படுகிறது. "கேழலாய்"என்றதால் ஸௌலப்ய ஸௌசீல்யங்கள் காட்டப்படுகின்றன. (என் உள்ளம்) இக்குணங்களிலே ஈடுபட்டுள்ள என்நெஞ்சு; அடியாருடைய என்நெஞ்சு; என்னிலும் முன்னிற்கும் என்நெஞ்சு. (உரைமேற்கொண்டு) உரைக்கப்புக்கு வேறொன்றை நினையாதே, உரைக்கையிலேயே ஈடுபட்டு. மேன்மேலே சொல்லி என்றுமாம். மேலான உரைகளான வேதம் முதலானவற்றைக்கொண்டு என்றுமாம். (ஓவாது) இடைவிடாமலும் ஸ்வரத்தில் சிறிதும் குறையாமலும். (ஏத்தி எழும்) இந்த குணங்களையும் செயல்களையும் சொல்லிப்புகழ்ந்து உயர்வடையும். என் நெஞ்சம் இதனாலேயே உய்வுபெறும் என்று கருத்து. (ஏத்திஎழும்) "முடியானே" [திருவாய் 3-8-1] என்னும் திருவாய்மொழியிற்போலே, சேதநஸ்மாதி₄யாலே என்நெஞ்சு என்னிலும் முன்னின்று உய்வடைந்தது என்கை.

26. எழுவார் விடைகொள்வா ரீன்றுழா யானை
வழுவா வகை நினைந்து வைகல்—தொழுவார்
வினைச் சுடரை நந்துவிக்கும் வேங்கடமே வானோர்
மனச் சுடரைத் தூண்டும் மலை.

பதவுரை:—எழுவார்—*(செல்வத்தைப் பெற்று) அகலு மவர்களான ஐச்வர்யார்த்திகளும்,* **விடை கொள்வார்**—*(எம் பெருமானைவிட்டு நித்யமாகப்) பிரிந்துபோகும் கைவல் யார்த்திகளும்,* **ஈன் துழாயானை**—*இனிய துழாய்மாலையை யுடைய எம்பெருமானை,* **வழுவா வகை நினைந்து**—*பிரியாம லிருக்கவேண்டுமென நினைத்து,* **வைகல்**—*தினந்தோறும்,* **தொழுவார்**—*வணங்குமவர்களான பகவத் ப்ராப்திகாமர்களு மாகிய இம்மூவருடைய,* **வினைச் சுடரை**—*(அவரவர்களுடைய ப்ராப்யத்துக்கு விரோதியான) பாபத்தீயை,* **நந்துவிக்கும்**—*அவிக்கும்,* **வேங்கடமே**—*திருவேங்கடமலையே;* **வானோர்**—*நித்ய ஸூரிகளுடைய,* **மனச் சுடரை**—*திருவுள்ளமாகிற விளக்கை,* **தூண்டும் மலை**—*தூண்டுகின்ற மலையாகும்.*

அவதாரிகை:—*அவ்வவதாரங்களுக்குப் பிற்பாடரானார் இழவைப் பரிஹரிக்கைக்காகத் திருமலையிலே வந்து ஸந்நிஹிதனானான் என்கிறார்.*

உரை:—*"போற்றியென்று ஏற்றெழுவர்" என்கிற படியே, 'எங்களுக்கு அபி₄மதமான த்₃ருஷ்டைச்வர்யத்தைத் தரலாகாதோ?' என்று ப்ரயோஜனத்துக்குக் கையேற்றுக் கிளர்ந்து, அதுகைப்பட்டவாறே விட்டகன்றுபோம் ஐச்*

அவதாரிகை:—வராஹ நரஸிம்ஹார்த்யவதாரங்களுக்குப் பிற்பட்டவர் களுடைய குறையைப் போக்குவதற்காகத் திருமலையிலேவந்து, அனை வர்க்கும் அருகில் நிற்கிறான் என்கிறார்.

வ்யா:-(எழுவார்) "பொருள்கையுண்டாய்ச் செல்லக்காணில் போற்றி என்று ஏற்றெழுவர்" [திருவாய் 9-1-3] என்கிறபடியே நாங்கள் விரும்பும் இம்மைச் செல்வத்தைத் தரக்கூடாதா? என்று இம்மைப்பயனுக்காகக் கையேற்று எழுந்து, அது கிடைத்தவுடன் கொடுத்தவனைவிட்டு எழுந்து

வர்யர்த்திகளும், 'உன் அநுப$_4$வம் வேண்டா; எங்ளாத்மாவை அநுப$_4$வித்துக்கொண்டு, ஒருநாளும் உன் முகத்திலே விழியாதிருக்கும்படி, விடைகொள்ளுகைக்குச் திருக்கைச் சிறப்பிட்டருளவேணும்' என்று விடைகொண்டுபோம் கைவல்யார்த்தி$_2$களும், நிரதிஶயபோ$_4$க்$_3$யமான திருத்துழாயாலே அலங்க்ருதனுய்ப் பரமப்ராப்யபூ$_4$தனானவனை ஒருநாளும் விட்டுநீங்காதே கிட்டிநின்று அநுப$_4$விக்கும் ப்ரகாரத்தை அநுஸந்தி$_4$த்து ஸர்வகாலமும் அநுபவிக்கக்கடவர்களாயிருக்கும் ப$_4$க$_3$வச்சரணார்த்தி$_2$களுமான இவ்வதி$_4$காரிகளுடைய தத்தத்புருஷார்த்த$_2$ ப்ரதிப$_3$ந்த$_4$கமான பாப$_3$ாக்னியை உருத்தெரியாதபடி நஶிப்பிக்கும் திருமலையேகாணும்,

---

செல்லுமவர்கள். ஐச்வர்யார்த்திகளைச் சொன்னபடி. **(விடைகொள்வார்)** நிரந்தரமாக எம்பெருமானிடம் விடைபெறும் **கைவல்யார்த்திகள்.** பரம புருஷனை நேரில்கண்டும், அவன் இனிமையில் நெஞ்சுசெலுத்தாமல், சாணிச் சாற்றைப்போலே, தங்களைப் பரிசுத்தப்படுத்தினவன் என்றே நினைத்து, "உன் அநுபவம் எங்களுக்குத் தேவையில்லை, எங்களுடைய ஆத்மாவை அனுபவித்துக்கொண்டு, ஒருநாளும் உன் முகத்தில் விழிக்காதிருக்கும்படி விடைகொள்ளுகைக்கு உன் கையாலேயே நீ அனுமதிச்சீட்டுக் கொடுக்க வேணும்" என்று பிரார்த்தித்து, ஸ்வாத்மாநுபவத்தைப்பெற்று நித்யமாக விடைகொண்டுபோமவர்களன்றோ **கைவல்யார்த்திகள். (ஈன் துழாயானை வழுவாவகை நினைந்து வைகல் தொழுவார்)** மிகவினிய திருத்துழாயாலே அலங்கரிக்கப்பட்டவனுகையாலே தானே மேலான பயனுயிருப்பவனை, தாழ்ந்தவையான ஐச்வர்ய கைவல்யங்களைப் பெற்றகலாமல், ஒருநாளும் விட்டுநீங்காமல் அருகிலிருந்து அநுபவிக்கும் முறையை நினைத்து, எல்லாக் காலமும் அநுபவிக்குமவர்களான பகவச்சரணார்த்திகளான ஜ்ஞானிகளைச் சொல்லுகிறது. **'வைகல் தொழுவார்'** என்று தைலதாரையைப்போல் இடைவிடாத பக்தியைச் **சொல்லுகிறது.** 'வழுவாவகை' என்று பரம பதத்தில் விட்டுப்பிரியாமல் அனுபவிப்பதைச் சொல்லுகிறது. ஆக, இவ்வளவால், கீதையில் **ஆர்த்தனென்றும்,** அர்த்தார்த்தியென்றும் சொல்லப்பட்ட ஐச்வர்யார்த்திகளும், 'ஜிஜ்ஞாஸு' எனப்படும் கைவல்யார்த்தியும், 'ஜ்ஞாநீ' எனப்பட்ட பகவத்பக்தனும் எடுக்கப்பட்டனர். **(வினைச்சுடரை)** முன்சொல்லப்பட்ட மூவகைப்பட்ட அதிகாரிகளுக்கும் அவரவருடையபயனை அடையத் தடையாயிருக்கும் பாபங்களாகிற நெருப்பை, **(நந்துவிக்கும் வேங்கடமே)** உருத்தெரியாதபடி கணத்திலே அவிக்கும் திருவேங்கடமேகிடீர்.

அஸ்ப்ருஷ்ட பாபகந்த₄ரான நித்யஸூரிகளுடைய திருவுள்ளமாகிற விளக்கை, அவன் ஶீலாதி₃கு₃ணநுப₄வத்தின் ப்ரத்₃தை₄யை வர்த்தி₄ப்பித்துக்கொண்டு ப்ரேரியாநிற்கும்மலை.

27. **மலையால் குடைகவித்து மாவாய் பிளந்து**
சிலையால் மராமரமேழ் செற்று—கொலையானைப்
போர்க்கோ டொசித்தனவும் பூங்குருந்தம் சாய்த்தனவும்
கார்க்கோடு பற்றியான் கை.

பதவுரை:—மலையால்— *கோவர்த்தினகிரியைக்கொண்டு,* **குடை கவித்து**—*குடையாகக் கவித்தும்,* **மா வாய் பிளந்து**—*குதிரையாய் வந்த கேசி என்னும் அஸுரனின் வாயைப் பிளந்தும்,* **சிலையால்**—*வில்லாலே,* **மராமரம் ஏழ் செற்று**—*ஏழு மராமரங்களையும் துளைத்தும்,* **கொலை யானை**—*கொல்லுவதற்காக நிறுத்தின யானையின்,* **போர் கோடு ஒசித்தனவும்**—*சண்டை செய்யும் தந்தங்களை ஒடித்தவையும்,* **பூங்குருந்தம் சாய்த்தனவும்**—*பூத்த குருந்தமரத்தைத் தள்ளினவையும்,* **கார் கோடு**—*மேகம்போல் முழங்கும் சங்கத்தை,* **பற்றியான்**—*பிடித்தவனுடைய,* **கை**—*திருக்கைகளேயாகும்.*

அவதாரிகை—*இங்கே எழுந்தருளிநிற்கிற திருவேங்கடமுடையானுடைய தோளின் துடிப்பைக் கண்டபோதே*

(வானோர் மனச்சுடரைத் தூண்டும் மலை) பாபத்தின் வாஸனையும் தொட முடியாதபடி பரமபதத்திலிருக்கும் நித்யஸூரிகளின் திருவுள்ளமாகிற விளக்கைத் தூண்டும் மலை. ஒருசுடரை அவிப்பதே ஒரு சுடரைத் தூண்டுவதாயிருப்பதே! (மனச்சுடரைத் தூண்டும்மலை) பரமபதத்திலிருக்கும்போது அவனுடைய ஸௌலப்யஸௌசீல்ய வாத்ஸல்யாதிகுணங்கள் பகல் விளக்குப்போலே பிரகாசமற்றிருக்குமாகையாலே, அவற்றை அநுபவிக்காத குறையாலே ஸூரிகளின் மனச்சுடரும் மங்கியிருக்கும். இங்கு அவை இருட்டறையில் விளக்குப்போலே பிரகாசிக்கையாலே, அக்குணங்களை விசேஷமாக அநுபவிக்கச்செய்வதன் மூலம் திருவேங்கடமலை ஸூரிகளின் மனச்சுடரையும் தூண்டுவதாகிறது.

அவதாரிகை:—*திருமலையிலே எழுந்தருளிநிற்கிற திருவேங்கடமுடையானுடைய தோளின் துடிப்பைக் காணும்போதே அவதாரங்களில்*

அவதாரங்களில் விரோதிவர்க்கத்தைப் பொடிபடுத்தின வீரப்பாடடங்களும் காணலாம் என்கிறார்.

உரை:—இந்த்ரன் ப்ரவர்த்திப்பித்த கல்வர்ஷத்தில் ரக்ஷ்யவர்க்கம் அழியாதபடி கைக்கெட்டிற்றொரு மலையாலே குடைபிடிப்பாரைப்போலே கீழதுமேலதாக மறித்து ரக்ஷித்துத் தன்னை விழுங்குவதாக வந்த கேசியாகிற குதிரையினுடைய வாயை இருபிளவாகக் கிழித்துப் போகட்டு,

---

எதிரிக்கூட்டங்களைப் பொடியாக்கின வீரச்செயல்கள் எல்லாவற்றையும் காணும்படியாயிருக்கும் என்கிறார்.

வ்யா:—(மலையால் குடை கவித்து) ஆயர்களை ரக்ஷிக்கும் விஷயத்தில் இந்திராதி தேவர்களோடு, ஒருமலையோடு வாசியில்லை என்று உணர்த்துவதற்காக, இந்திரனுக்கிட்ட சோற்றை மலைக்கிடும்படி கண்ணன் நியமிக்க, அவன் நியமனப்படி ஆயர்கள் மலைக்குப்பூசையிட, பசிப்பிணியாலே கோபங்கொண்ட இந்திரன் பொழிந்த கல்மழையாலே கன்றுகளும், பசுக்களும், கோபிகளும் இடையர்களுமான திருவாய்ப்பாடி முழுவதுமே நோவுபட, அவை அழிந்துபோகாதபடி கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து ரக்ஷித்ததைச் சொல்லுகிறது. (மலையால்) கைக்கெட்டினது அந்த கோவர்த்தனமலையேயாகையால் அதைக்கொண்டு ரக்ஷித்தான். (குடைகவித்து) குடைபிடிப்பாரைப்போலே, மலையைத் தலைகீழாக்கிக் குடையாகப்பிடித்து மழையால் ஆய்ப்பாடியிலுள்ளார் நலிவுபடாதபடி ரக்ஷித்து. மழையென்றால் குடைதானே வேண்டியது. ஒருவரிருவரல்லாமல் பஞ்சலக்ஷம் குடியாகையாலே மலையைக் குடையாகப் பிடித்தான். "இந்திரன் அசுரத்தன்மை கொண்டவனல்லன்; பசிப்பிணியாலே செய்தான் பாவம்; அவன் பராதந்த்ரகனாகும்போது இம்மலையும் ரக்ஷகமாகக்கூடும் என்று இவர்களுக்குக் காட்டுவோம்" என்னும் திருவுள்ளத்தாலே, இந்திரனை தண்டிக்காமல், மலையைக்கொண்டு ஆயர்களைக் காத்தான் கண்ணன். (மலையால் குடைகவித்து) அகடிதகடநாஸமர்த்தனானை இவன் நினைத்தால் மலையைக் குடையாகவும் ஆக்குவான் என்று கருத்து. (மாவாய் பிளந்து) நிஷ்காரணமாகக் கண்ணனையே விழுங்கவேணும் என்று குதிரையுருக்கொண்டு வந்த கேசியின் வாயை வாடிய நாரைக் கிழிப்பது போலே விளையாட்டாக இருபிளவாகக் கிழித்து. இந்திரன் பசிப்பிணியாலே நலிந்தானாகையாலே அவனை தண்டிக்காமல் தமரைத்தானே நோக்கினான். கேசி காரணமில்லாமல் கொல்லவந்தானாகையாலே, அவனை

க்ஷத்ரியத்வத்துக்கு ஏகாந்தமாகவெடுத்த திருவில்லாலே ஓராச்ரிதனை விச்வஸிப்பிக்கைக்காக மராமரங்களேழையும் இழியச்செய்து, எதிர்த்தவர்களைக் கொன்று விழவிடும் குவலயாபீடத்தினுடைய பொருகைக்குப் பரிகரமான கொம்பைப் பிடுங்கிப் பொகட்டனவும், கண்டார்க்கு ஆகர்ஷகமாம்படி முட்டாக்கிடப்பூத்துக்கிடக்கிற குருந்தை வேர்பறியும்படி தள்ளி விழவிட்டனவும், குளிர்ந்து முழங்கு

அழித்தேவிட்டான். (சிலையால் மராமரமேழ் செற்று) க்ஷத்திரியனாய் அவதரித்த ராமாவதாரத்திலே, க்ஷத்திரியர்களுக்குரிய வில்லாலே, எய்ய வொண்ணாதபடி கூட்டமாக நின்ற ஏழுமராமரங்களையும் ஓரம்பாலே, சுக்கிரீவனுக்குத் தன் பலத்திலே நம்பிக்கை பிறப்பதற்காகத் துளைத்து விழச்செய்து. இதுவும் அகடிதகடநாஸாமர்த்யத்தைக்காட்டுகிறது. (மலையால்...செற்று) இடையர் செய்யும் பால்கறப்பது, தயிர்கடைவது முதலான செயல்களெல்லாம் முன் கை உரத்தாலேயாயிருக்கும்; அந்த ஜாதியிலே பிறந்தமைக்கேற்பக் கண்ணன் தன் முன் கையுரத்தைக் காட்டும்படியாக மலையைக் குடையாகப்பிடிப்பது, மாவாய்பிளப்பது ஆகிய காரியங்களைச் செய்தான்; க்ஷத்ரியர் செய்யும் அருஞ்செயல்களெல்லாம் வில்லாலேயாயிருக்கும்; அந்த ஜாதியிலே பிறந்தமை தோற்ற இராமன் வில்லாலே ஏழு மராமரங்களையும் வீழ்த்தினன் என்னும் அவதாரத்தில் மெய்ப்பாட்டைக் காட்டுகிறது. அக₄டிதக₄டநாஸாமர்த்தியத்தோடு அவதாரத்தில் மெய்ப்பாடும் கலந்திருக்கை. முன்கையுரத்தாலே - கண்ணன் செய்த மற்றும் சில காரியங்களையும் காட்டுகிறார்,- (கொலையானைப் போர்க்கோடு ஒசித்தனவும்) எதிரிகளைக் கொல்வதையே தொழிலாகக்கொண்ட குவலயாபீடம் என்னும் யானையுடைய தந்தத்தைக் கையாலே பிடுங்கினவையும். (கொலையானை) கண்ணனைக் கொல்வதற்காகக் கம்ஸன் நிறுத்தின யானை என்றுமாம். (போர்க்கோடு) யுத்தம் செய்வதற்குக் கருவியான தந்தம், (ஒசித்தனவும்) வாழைத்தண்டை ஒடிப்பதுபோலே ஒடித்தபடி. (பூங்குருந்தம் சாய்த்தனவும்) கண்டவர்களை மயக்கும்படி மரம் நிறையப் பூத்துக்குலுங்கிய குருந்தமரத்தைப் பிடுங்கிப்போட்ட செயலைச்செய்தவையும். (பூங்குருந்தம்) பூப்பறித்தாற்போலே விளையாட்டாகச்செய்தபடி. இவற்றையெல்லாம் செய்தது எது? எனில்: (கார்க்கோடு பற்றியான் கை) குளிர்த்தி, தாபத்தை ஆற்றும் தன்மை, பெருமை, முழக்கம் முதலிய குணங்களால் மேகத்தை ஒத்திருக்கும் சங்கத்தைப் பற்றியிருப்பவனுடைய கைகளே இவ்வருஞ்செயல்களைச் செய்தன. (கார்க்கோடு) மேகத்தை

கிறஸ்வபாவத்தாலே மேகத்தோடு ஒத்திருந்துள்ள ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தை தரித்தருளினவனுடைய திருக்கைகள் கிடீர்.

28. கைய வலம்புரியும் நேமியும் கார்வண்ணத்
தைய மலர்மகள்நின் னாகத்தாள்— செய்ய
மறையான் நின்னுந்தியான் மாமதிள் மூன்றெய்த
இறையான் நின்னாகத் திறை.

பதவுரை:—கார்—மேகம் போன்ற, **வண்ணத்து—**திரு நிறத்தையும் ஸ்வபாவத்தையுமுடைய, **ஐய**—எம்பிரானே! **வலம்புரியும்**—ஸ்ரீபாஞ்சஜந்யமும், **நேமியும்**—திருவாழியாழ் வானும், **கைய**—கையிலிருக்கின்றன; **மலர் மகள்**—பூவில் அவதரித்த பெரிய பிராட்டியார், **நின்**—உன்னுடைய, **ஆகத்தாள்**—திருமார்பில் இருக்கிறாள்; **செய்ய மறையான்**—உன்னைக் காட்டுகையாகிற செம்மையையுடைய வேதத்தை ஓதும் நான்முகன், **நின்**—உன்னுடைய, **உந்தியான்**—திரு நாபியிலே பிறந்தவன்; **மா மதிள்**-பெரிய மதிள்களை உடைய, **மூன்று**—முப்புரங்களையும், **எய்த**—அம்பெய்து அழித்தவனாய், **இறையான்**—தன்னை ஈச்வரனாக அபிமானித்திருக்கும் ருத்ரன், **நின் ஆகத்து**—உன்னுடைய திருமேனியில், **இறை**—ஒரு மூலையைப் பற்றிக் கிடக்கிறவன்.

அவதாரிகை:—திருமலையிலே எழுந்தருளிநிற்கிற திரு வேங்கடமுடையான் திருமேனியில் அழகும் ஐச்வர்யமும் ஶீலாதிகுணங்களும் நிழலிட்டுத் தோற்றாநின்றது கிடீர் என்கிறார்.

ஒத்திருக்கும் சங்கர், கார்மேகவண்ணனின் திருமேனியைப் பற்றியிருக்கிற தாகையாலே, மேகத்திலே புள்ள சங்கு என்கிறதாகவுமாம். (பற்றியான்கை) ஸ்ரீபாஞ்சஜந்யத்தைப்பிடித்தாலும் கன்றிப்போகும் கையைக்கொண்டு கிடீர் இவ்வருஞ்செயல்களைச் செய்தது!

அவதாரிகை:—திருமலையிலே எழுந்தருளிநிற்கிற திருவேங்கட முடையான் திருமேனியிலே அழகும், ஐச்வர்யமும், சீலம் முதலான குணங் களும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன என்கிறார்.

உரை:—மேகம்போலே ஶ்ரமஹரமான வடிவையுடைய நிருபாதி$_4$கப$_3$ந்து$_4$வானவனே! ஸ்ரீபாஞ்சஜந்யமும் திருவாழியும் திருக்கைகளிலே உளவாயிராநின்றன. அலர்மேல் மங்கையானவள் உன்னுடைய திருமார்விலே "இறையும்

வ்யா:—(கார் வண்ணத்தைய) மேகம்போலே தாபங்களை ஆற்றும் வடிவையுடைய ஸ்வாமியே! (கார் வண்ணம்) கைம்மாறு வேண்டாத வண்மை முதலான குணங்களாலும் மேகத்தை ஒத்திருப்பவன். வடிவிலேயே குணங்கள் பிரகாசிக்கிறபடி. (ஐய) கைம்மாறுகருதாமல் உதவுமவனாயிருப்பதிலிருந்தே நீ இயற்கையிலேயே அனைவர்க்கும் ஸ்வாமியாயிருப்பவன் என்று வெளியாகிறது. (கைய வலம்புரியும் நேமியும்) ஸ்ரீபாஞ்சஜந்யமும், திருவாழியும் தேவரீருடைய திருக்கையிலேயுள்ளன. ஐச்வர்யத்தையும், அழகையும் காட்டுமவையிவை. வலம்புரிச்சங்கு அரசர்க்கேயுரியது; சக்கரமும் ஏகசக்ராதிபதிகளுக்குரியது. இப்படி ஸர்வலோகைகசக்ரவர்த்தியிவன் என்பதைக் காட்டுகையாலே ஐச்வர்யத்தையும் காட்டுகின்றன. பரப$_4$ாக$_3$ரலம் எனப்படும் வர்ணச்சேர்த்தியழகாலே அழகையும் காட்டுமவையிவை. (மலர்மகள் நின் ஆகத்தாள்) அலர்மேல் மங்கையான ஸ்ரீதேவி உன் திருமார்பிலே, "அகலகில்லேனிறையும்" [திருவாய் 6-10-10] என்று கணநேரமும் பிரியகில்லாதவளாய் உறைகின்றாள். திருவுடையதேவன் இவனேயென்கையாலே ஐச்வர்யமும், அழகின் செல்வியைத் திருமார்பில் கொண்டவன் என்கையாலே அழகும் உணர்த்தப்படுகிறது. (செய்ய மறையான் நின் உந்தியான்) உன்னை உள்ளபடி அறிவிக்கையாகிற செவ்வையை உடைய வேதத்தை முதலில் எம்பெருமானிடம் ஓதிப்பிறர்க்கு ஓதுவித்தவனாகையாலே 'மறையான்' என்று அவ்வேதத்தையிட்டே நிரூபிக்கப்படும் பிரமன் உன் உந்தியிலே தோன்றியவன். (மாமதிள் மூன்றெய்த இறையான் நின் ஆகத்து இறை) பெரிய மதிள்களையுடைய திரிபுரங்களை எரிந்துவிழும்படி ஓரம்பாலே எய்தவனாய், 'நான் ஈச்வரன்' என்னும் அபிமானமுடைய உருத்திரன் உன் திருமேனியில் ஒரு மூலையிலே வாழ்ந்து ஸத்தைபெறுகிறான். (மா மதிள் மூன்றெய்த இறையான்) "ஊரைச் சுட்டுப் பேரைப் படைத்தான், கோட்சொல்லி ப்ரஸித்தராமாப்போலே" என்பர் பெரியவாச்சான் பிள்ளை. (இறையான்) தமோகுணம் விஞ்சியபோது தன்னையே ஈச்வரனாக அபிமானித்து எதிரம்புகோக்கவும் வல்லவன். (நின்னாகத்து இறை) "வலத்தனன் திரிபுரம் எரித்தவன்" [திருவாய் 1-3-9] "ஒருவிடமும் எந்தை பெருமாற்கரனேயோ" [திருவாய் 2-5-2] என்கிறபடியே உன் திருமேனியின் வலப்புறத்திலே ஒரு மூலையைப்பற்றிநின்று ஸத்தை பெற்றான்.

அகலகில்லேன்'' என்று உறையாநின்றாள். உன்னை உள்ளபடி காட்டும் செவ்வையையுடைய வேதத்தைத் தனக்கு நிரூபகமாகவுடைய ப்ரஹ்மாவானவன் உன்னுடைய திருமேனியைப் பற்றி லப்₃த₄ ஸத்தாகனாயிராநின்றான். பெரிய மதிளையுடைய த்ரிபுரத்தை த₃க்₃த₄மாம்படி எய்துவிழவிட்ட ஈச்வராபி₄மானியான ருத்₃ரன் உன் திருமேனியில் ஏகதேஶத்தைப் பற்றி லப்₃த₄ஸ்வரூபனாகாநின்றான்.

''பஶ்யைகாத₃ஶ மே ருத்₃ராந் த₃க்ஷிணம் பார்ஶ்வமாஶ்ரிதாந்''

[பார-மோக்ஷதர்மம் 166-58]

[என் வலப்புறத்திலுள்ள பதினொரு உருத்திரர்களையும் காண்பாய்]என்றும்

''தபஸா தோஷிதஸ்தேந விஷ்ணுநா ப்ரப₄விஷ்ணுநா ।
ஸ்வபார்ஶ்வே த₃க்ஷிணே ஶம்போ₄ர் நிவாஸ: பரிகல்பித: ॥''

[சிவனுடைய தவத்தால் உகந்த ஸர்வேச்வரனான விஷ்ணுவாலே தன் திருமேனியின் வலப்புறத்தில் வஸிக்குமிடம் ஏற்படுத்தப்பட்டது.] என்று இதிஹாஸ புராணங்களில் சொல்லப்பட்டதை நினைக்கிறார். (மலர்மகள் நின் ஆகத்தாள் செய்ய மறையான் நின் உந்தியான் மாமதிள் மூன்றெய்த இறையான் நின் ஆகத்திறை) ''ஏறாளும் இறையோனும் திசைமுகனும் திருமகளும் கூறாளும் தனியுடம்பன்'' [திருவாய் 4–8–1] ''ஏறனைப் பூவனைப் பூமகள் தன்னை வேறின்றி விண் தொழத் தன்னுள் வைத்து'' [திருவாய் 2–2–3] என்ற நம்மாழ்வாரைப்போலே அந்யபரரான பிரமருத்திரர்களுக்கும், அநந்யையான பெரியபிராட்டியாருக்கும் ஒக்கத் திருமேனியிலே இடங்கொடுத்த சீலகுணத்தை நினைத்து வியக்கிறார். ''ப்ரஹ்மாதிகள் எப்போதும் திருமேனியைப் பற்றியிருப்பார்களோ?'' என்று நஞ்சீயர் பட்டரைக் கேட்க, ''ஓரோ ஆபத்துக்களிலே திருமேனியிலே இடங்கொடுக்க ஆழ்வார்கள் அத்தையே வாய்புலற்றுகிறார்களித்தனையிறே'' என்று பட்டர் அருளிச்செய்தாராம். திருவாய்மொழியீட்டில் (2–2–3) எடுக்கப்பட்டது இவ்வைதிஹ்யம். (இறையான் நின் ஆகத்து இறை) ஈச்வரனென்று பெயர் பெற்ற சிவன் உன் திருமேனியை உபாஸித்து ஈச்வரனானான் என்றும் கொள்ளலாம். ப்ரஹ்மருத்ராதிகளும் தன்னைப்பற்றி நின்று ஸத்தை பெறுவார்கள் என்றதாலே இவனுடைய ஐச்வர்யமும், ''தாளதாமரையான், உனதுந்தியான் வாள்கொள் நீள் மழுவாளியுன் ஆகத்தான் நாளும் என்புகழ்கோ உன சீலமே?'' [திருவாய் 9-3-10] என்கிறபடியே சீலகுணமும் உணர்த்தப்படுகின்றன.

29. இறையும் நிலனு மிருவிசும்பும் காற்றும்
அறைபுனலும் செந்தீயு மாவான்—பிறைமருப்பில்
பைங்கண்மால் யானை படுதுயரம் காத்தளித்த
செங்கண்மால் கண்டாய் தெளி.

பதவுரை:—**இறையும்**—*பரமபதநாதனுகவும்,* **நிலனும்**—*பூமியும்,* **இரு விசும்பும்**—*பரந்த ஆகாசமும்,* **காற்றும்**—*வாயுவும்,* **அறைபுனலும்**-*சப்தியாநிற்கும் ஜலமும்,* **செந்தீயும்**-*சிவந்த அக்னியுமாகவும்,* **ஆவான்**—*ஆகின்றவன்,* **பிறை மருப்பில்**—*இளஞ்சந்திரன் போன்ற தந்தத்தையும்,* **பைம் கண்**—*அழகிய கண்களையுமுடையதான,* **மால் யானை**—*பெருத்த யானையுடைய,* **படு துயரம்**—*பெரும் துயரத்தை,* **காத்து**—*போக்கி,* **அளித்த**—*ரக்ஷித்த,* **செம் கண் மால் கண்டாய்**—*செந்தாமரைக்கண்ணனை பரமபுருஷன்கிடாய்;* **தெளி**—(*மனமே!*) *இதை நன்ருக அறி.*

அவதாரிகை:—*''நெஞ்சே! உப$_4$யவிபூ$_4$திநாத$_2$னுயிருக்கிற அவன் பெருமையை நினைத்துப் பிற்காலியாதே! அவன் ஆஶ்ரித பரதந்த்ரன் கிடாய்! இத்தை நன்ருக பு$_3$த்$_3$தி$_4$ பண்ணு'' என்கிருர்.*

உரை:—*பரமபதத்திலே ஸர்வஸ்வாமித்வம் தோற்ற எழுந்தருளியிருக்கிற ஸ்ரீவைகுண்ட$_2$நாத$_2$னுமாய், பூ$_4$மியும், பரப்பையுடைத்தான ஆகாஶமும், வாயுவும், அலையெறிகிற*

அவதாரிகை :— முற்பாட்டில் ஐச்வர்யத்தை அனுஸந்தித்தவுடன் நெஞ்சம் பின்வாங்க, "நெஞ்சே! உபயவிபூதிநாதனுயிருக்கும் அவன் பெருமையை நினைத்துப் பின்வாங்காதே! அவன் அடியார்க்கு அடிமைப் பட்டிருப்பவனன்றோ! இதை நன்ருக அறிவாயாக" என்கிருர்.

வ்யா:—(இறையும்) பரமபதத்திலே அனைவருக்கும் ஸ்வாமியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவைகுண்டநாதனுமாய். இத்தால் நித்யவிபூதி யோகம் சொல்லிற்று. (நிலனும் இருவிசும்பும் காற்றும் அறை புனலும் செந்தீயும் ஆவான்) பஞ்சபூதங்களாலான லீலாவிபூதியாகவிருப்பவனும் இவனே. இத்தால் லீலாவிபூ$_4$தியோக$_3$ம் சொல்லுகிறது. (நிலனும்) உயிர் களுக்குஇருப்பிடமான பூமியும்,(இருவிசும்பும்) நாலுபூதங்களும் இருக்க இடமளிப்பதாகையாலே அவற்றைக் காட்டிலும் விஸ்தாரமான ஆகாசமும்,

ஜலமும், சிவந்த நிறத்தையுடைய தேஜஸ்தத்வமுமாகிற பஞ்சபூ₄தாரப்₃த₄மான லீலாவிபூ₄தியை ப்ரகாரதயா ஶேஷமாக உடையனுமாயிருக்கிற பெருமையையுடையவன், பிறைபோலேயிருக்கிற கொம்பையும் ஜாத்யுசிதமான பசுமையையுடைய கண்ணையுமுடையனாய், அடிமை செய்கையிலே பெரும்பிச்சனுமாயிருக்கிற ஸ்ரீக₃ஜேந்த்₃ராழ்வானுடைய, முதலையின்கையிலே அகப்பட்டுப் பட்ட துக்கத்தைப் பரிஹரித்து, கையில் பறித்த பூச்செவ்வியழிவதற்கு முன்னே திருவடிகளிலே பணிமாறுவித்துக் கொண்டு

(காற்றும்) ஸர்வப்ராணிகளும் உயிர்வாழக் காரணமான வாயுவும். (அறை புனலும்) அலையெறிகிற ஜலமும். ஸர்வர்க்கும் தாரகமாயிருப்பதொன்று. (செந்தீயும்) காண்பது சமைப்பது முதலானவற்றுக்கு உதவும் சிவந்த தேஜஸ்தத்வமும். (ஆவான்) இவையெல்லாம் அவனுக்கு ப்ரகாரமாகையாலே இவை யெல்லாமாகுமவன் அவனே யென்கிறது.

இப்படி உபயவிபூதியுக்தனாகில், அவனை அணுகமுடியுமோ? என்ன, நெஞ்சை நோக்கிக் கூறுகிறார் :- (பிறைமருப்பில் பைங்கண் மால்யானை) பிறைச்சந்திரன் போல் வெளுத்து வளைந்திருக்கும் கொம்பையும், ஆனைச் சாதிக்குரிய பசுமையான கண்ணையும் உடையனாய், அடிமை செய்வதில் பெரும் பித்தையுடையவனான ஸ்ரீகஜேந்திராழ்வானுடைய, (மால் யானை)

"நாஹம் களேப₃ரஸ்யாஸ்ய த்ராணார்த்த₂ம் மது₄ஸூத₃ந।
கரஸ்த₂கமலாந்யேவ பாத₃யோரர்ப்பிதும் தவ॥"

[மதுசூதனனே! இந்த சரீரத்தை ரக்ஷித்துக்கொள்வதற்காக நான் கரைகின்றேனல்லேன்; உன் ஆராதனத்துக்காக எடுக்கப்பெற்று என் கையிலிருக்கும் தாமரைகளை உன் திருவடிகளில் ஸமர்ப்பிக்கவே ஓலமிட்டேன்.] என்கிறபடியே அடிமையிலே பெருங்காதல் பூண்ட யானையன்றோ. பெருத்த யானை என்றுமாம். உடம்பில் பெருமையாலே பாடாற்ற முடியாது என்று கருத்து. (படுதுயரம்) விரலுக்குத் தகுந்த வீக்கம் என்பதுபோலே பெருத்த யானைக்குத் தகுந்ததாயிருக்குமன்றோ துயரம். (படுதுயரம் காத்து) முதலைவாயிலே அகப்பட்டுப் பட்ட துன்பத்தைப் போக்கி. (அளித்து) அதுவிரும்பியதை அளித்து ரக்ஷித்த. அதாவது:-யானை கையால் பறித்த பூவானது வாடுவதற்குள் அதைத் திருவடிகளிலே ஸமர்ப்பிக்கச் செய்து ரக்ஷித்தான் என்று கருத்து. புண்பட்ட இடத்தை தடவிக்கொடுத்து ரக்ஷித்ததைச் சொல்லுவதாகவுமாம். ஸர்வேச்வரன் ஓர் விலங்கின் காலைப்பிடிப்பதே! என்கை.

ரக்ஷித்தருளின வாத்ஸல்யஸூசகமான சிவந்த திருக்கண்களை யுடைய வ்யாமுக்$_3$த$_4$ன் கிடாய்! இத்தை அழகிதாக புத்$_3$தி$_4$ பண்ணு. "மால்" என்று அரைகுலையத் தலைகுலைய வந்து தோற்றினபடி.

30. தெளிதாக வுள்ளத்தைச் செந்நிறீஇ ஞானத்
தெளிதாக நன்குணர்வார் சிந்தை—எளிதாகத்
தாய் நாடு கன்றேபோல் தண்டுழா யானக்கே
போய் நாடிக் கொள்ளும் புரிந்து.

பதவுரை :— தெளிதாக–கலக்கம் நீங்கும்படியாக, உள்ளத்தை–மனஸ்ஸை, செம் நிறீ இ–நன்கு நிறுத்தி, ஞானத்து–ஞானத்தாலே, எளிதாக–ஸுலபமாக, நன்கு உணர்வார்—நன்றாக அறிபவர்களுடைய, சிந்தை–மநஸ்ஸானது, எளிதாக ஸுலபமாக, தாய்நாடு—(பசுக்கூட்டத்தின் இடையே உள்ள தன்) தாயை அடைகிற, கன்றே போல்—கன்றுக்குட்டியைப் போல், தண் துழாயான் அடிக்கே–குளிர்ந்த திருத்துழாய் மாலையையுடைய ஸர்வேச்வரனுடைய திருவடிகளையே, புரிந்து—விரும்பி, போய்— அடைந்து, நாடிக் கொள்ளும்—சேர்ந்து கொள்ளும்.

அவதாரிகை:–வ்யதிரிக்தங்களில் போகாதபடி மநஸ்ஸை நியமித்துத் திருவடிகளின் உறவை அறிந்திருப்பார்க்கு,

---

இப்படிச் செய்யக் காரமென்ன? எனில்: (செங்கண்மால் கண்டாய்) வாத்ஸல்யத்தாலே சிவந்த கண்களையுடைய பெரும் பித்தன் கிடாய்! (மால்) "அதந்த்$_3$ரித சமூபதி" [ர-ஸ்த] என்று தொடங்கும் ச்லோகத்திலே பட்டர் அருளியபடியே அரையிற்சாத்திய பீதாம்பரமும், தலையில் தரித்த முடியும் குலையும்படியாக அதிவேகமாக வந்த பெரும்பித்தன் என்கை. (தெளி) இவ்வாச்ரிதபாரதந்திரியத்தை அழகாக அறிவாயாக. அவனுடைய ஐச்வர்யத்தை நினைத்துப் பின்வாங்காதே என்று கருத்து.

அவதாரிகை:—கீழ்ப்பாட்டில் பரத்வத்தை நினைத்துப் பின்வாங்கிய மனத்தை உபதேசித்துத் திருத்தினார். இப்பாட்டிலே, மற்ற விஷயங்களில்

அம்மநஸ்ஸு தானேவர ப்ராப்தி பற்றாதபடி பற்றிக்கொண்டு அத்யபி$_4$நிவிஷ்டமாய் அவனைக்கிட்டும் என்கிறார்.

உரை:—விஷயராக$_3$ங்களாலுள்ள காலுஷ்யம் போய், தெளிவையுடைத்தாம்படிக்கீடாக, ஹ்ருத$_3$யத்தை ப$_4$க$_3$வத்ப்ரணவமாம்படி செவ்வே நிறுத்தி, தத்$_3$விஷயப$_4$க்திரூபாபந்நஜ்ஞாநத்தாலே, 'அவன் ஶேஷி, நாம் ஶேஷம்' என்கிற தெளிவுண்டாம்படியாக ஸாக்ஷாத்காரபர்யந்தம் நன்றாக உணர்ந்திருக்குமவர்களுடைய மநஸ்ஸானது, வருத்தமற,

---

காடுபாயாதபடி மனத்தைத் திருத்தித் திருவடிகளின் உறவை அறிந்திருப்பவர்களுடைய மனமானது, எம்பெருமான் தானே வருவான் என்று பார்த்திராமல், தானே மேல்விழுந்து பெருங்காதலோடு அவனைக் கிட்டும் என்கிறார்.

வ்யா:—(தெளிதாக உள்ளத்தைச் செந்நிறீஇ) கலங்கி நிற்கும் மனம் தெளிவுடையதாகைக்காக, அதை நல்வழிப்படுத்தி; விஷயங்களிலே மண்டிக் கலங்கிக்கிடக்கும் உள்ளம் தெளிவதற்காக, பகவத்விஷயத்திலே அதை ஈடுபடுத்தி. சென்ற பாசுரத்திற்போலே, பரத்வத்தை நினைத்துக் கலங்கியிருக்கும் மனத்தை, அவனுடைய ஸௌலப்யத்தைக் காட்டித் திருத்தி என்கிறதாகவுமாம், (செந்நிறீஇ) நின்றவா நில்லா நெஞ்சை இருடீகேசனிடத்திலே நிலைநிறுத்தி. (செந்நிறீஇ) மனத்தைத்தான் அடக்கி வெல்ல நினையாமல், எம்பெருமானிடம் செலுத்தி ஜயிக்கப்பார்க்கை. (ஞானத்துத் தெளிதாக உள்ளத்தைச் செந்நிறீஇ) ஞானத்தாலே தெளிந்த பக்தியாலே மனத்தை நேர்வழிப்படுத்தி என்றுமாம். (ஞானத்து எளிதாக நன்குணர்வார்) என்றுமாம். அவன் விஷயத்தில் அன்பாகிற அறிவாலே, ஸுலபமாக நன்கு அவன் ஸ்வாமியாயிருப்பதையும், நாம் தா$_3$ஸராயிருப்பதையும் அறிபவர். (எளிதாக) அநாதிகாலமாக மற்ற விஷயங்களிற்போலே, தானே மூளும்படியிருக்கை. (ஞானத்தெளிதாக நன்குணர்வார்) ஞானம்—தெளிதாக என்றும் கொள்ளலாம். அவன் விஷயத்தில் 'பக்தி' என்று சொல்லப்படும் அறிவாலே, 'அவன் சேஷி, நாம் சேஷம்' என்னும் தெளிவுண்டாம்படியாக, நேரே காண்பதுவரையில் நன்கு அறிந்திருக்குமவர்கள் என்கை. (உணர்வார் சிந்தை) இப்படி ஸம்பந்தஜ்ஞானமுடையவர்களுடைய மனம். (ஞானத்து எளிதாக நன்குணர்வார் சிந்தை) அவனளித்த அறிவாலே, பத்துடையடியவர்க்கெளியவன் என்று அவனுடைய நீர்மையை உணருமவர்களுடைய மனம் என்றுமாம். (எளிதாகத் தாய்

கூடநிற்கிற பசுக்களையும் கணிசியாதே தன் தாயைத்தேடிக் கொண்டு கிட்டும் கன்றுபோலே, ப்ரமஹரமான திருத் துழாயாலே அலங்க்ருதனாகையாலே வகுத்த ஶேஷியுமாய், நிரதிஶயபோ₄க்யனுமான எம்பெருமானுடைய திருவடி களையே வ்யக்த்யந்தரங்களைக் கணிசியாதே அங்கே அபி₄முக₂ மாய்க் கொண்டுபோய், தேடிக்கொள்ளாநிற்கும். இதுநிஶ்சயம்.

31. புரியொருகை பற்றியோர் பொன்னாழி யேந்தி
அரியுருவு மாளுருவு மாகி—எரியுருவ
வண்ணத்தான் மார்பிடந்த மாலடியை யல்லால் மற்
றெண்ணத்தா னாமோ விமை.

பதவுரை:—புரி—வலம்புரிச் சங்கத்தை, **ஒரு கை பற்றி**— ஒரு கையாலே பிடித்து, **ஓர் பொன் ஆழி ஏந்தி**— (மற்றொரு திருக்கையிலே) ஒப்பற்றதும், அழகியதுமான சக்கரத்தைத் தாங்கி, **அரி உருவும் ஆள் உருவும் ஆகி**—ஸிம்மத்தின் உரு வத்தையும், மனித உருவையும் கொண்ட நரஸிம்ஹரூபியாகி, **எரி உருவ வண்ணத்தான்**—நெருப்பின் உருவம் போன்ற

நாடு கன்றே போல்) ஒரு சிரமமில்லாமல் பசுக்கூட்டத்திலே மற்ற பசுக் களை அநாதரித்துத் தன் தாயைக்கண்டு அடையும் கன்றுபோலே. (தண் துழாயானடிக்கே போய் நாடிக்கொள்ளும் புரிந்து) குளிர்ந்து நின்று அடியார் களைப்பை ஆற்றும் துழாய்மாலையை உடையவனுடைய திரு வடிக்கே, ஆதரத்துடன் சென்று தேடிப்பற்றிக்கொள்ளும். (தண்துழா யான்) ஸர்வலோகத்திற்கும் தாயாயிருப்பவன். (அடிக்கே) மற்ற பசுக் களைக் காணாத கன்றுபோலே இதுவும் மற்ற தெய்வங்களைக் காணாது. மற்ற அவயவங்களெல்லாமிருக்க, தாயின் முலையையே பற்றும் கன்றைப் போலே, மனமும் எல்லா அவயவங்களுமிருக்கத் திருவடிகளையே பற்றும். (போய் நாடிக்கொள்ளும்) கஜேந்திராழ்வானுக்கு அவன் வந்தாற்போலே வரப் பார்த்திருக்காது. தானே சென்று தேடிக்கொள்ளும். (புரிந்து) தாயைக்கன்று நாடுவதுபோலே பெருங்காதலோடு அடையும் தடுத்தாலும் நில்லாது. (நாடிக்கொள்ளும்) தானே சென்றடையும் என்னுமிது நிச்சயம். இதில் ஐயமில்லை.

உருவையுடைய இரணியனுடைய, **மார்பு இடந்த**-மார்பைக் கிழித்த, **மால்**—ஆச்ரிதபக்ஷபாதியுடைய, **அடியை அல்லால்**—திருவடிகளைத் தவிர, **மற்று**—வேறொரு பொருளை, **இமை**—கணப்பொழுதேனும், **எண்ணத்தான் ஆமோ**—நினைக்கத்தான் முடியுமோ?

அவதாரிகை:-ஆஶ்ரிதவிஷயத்தில் அவனுக்குண்டான பாரதந்திரிய வாத்ஸல்யங்களை அநுஸந்தி$_4$த்தால், வேறேயொரு விஷயத்தை க்ஷணகாலமும் நினைக்கப்போமோ? என்கிறார்.

உரை:—ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஒரு திருக்கையாலே தரித்து மற்றைத் திருக்கையாலே அத்விதீயமாய், ஸ்ப்ருஹணீயமான திருவாழியை ப$_4$ரித்து, இவற்றுக்கு விஷயமில்லாதபடி நரத்வஸிம்ஹத்வங்களிரண்டுக்கும் ஆஶ்ரயமான வடிவை

அவதாரிகை:-'அடிக்கே' என்ற ஏகாரத்தாலே, மனம் மற்றவற்றை நினையாதென்றார் சென்றபாட்டில். அடியார் திறத்தில் அவனுக்குண்டான பாரதந்திரிய வாத்ஸல்யங்களை நினைத்தால், மற்றொரு விஷயத்தைக் கண நேரமேனும் நினைக்கமுடியுமோ? என்று அதை விவரிக்கிறார் இப்பாட்டில்.

வ்யா:—(புரி ஒரு கை பற்றி) ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஒரு கையாலே பிடித்துக்கொண்டு. "எரியுருவவண்ணத்தான் மார்விடந்த" என்று மேலே ஹிரண்யஸம்ஹாரம் சொல்லப்படுகிறதாகையாலே, ஹிரண்யன் மேலே விழுந்து அவனைத் தானே ஸம்ஹரித்துவிடத் துடிக்கும் ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானை, 'ஆயுதத்தாலே சாவில்லை' என்ற வரத்துக்கு விரோதம் வாராமைக்காக, ஹிரண்யன் மேலே விழாமல் அழுத்திப்பிடித்துத் தடுத்துக்கொண்டிருக்கையை உணர்த்துகிறது **'பற்றி'** என்னும் பதம். (ஓர் பொன்னாழி ஏந்தி) மற்ற திருக்கையிலே ஒப்பற்றதாய், பொன்போல் ஆசைப்படத் தக்கதான ஸுதர்சனத்தை ஏந்தி. இரணியன் திருநகத்துக்கே இரைபோதவில்லையாகையால், திருவாழியானது அழகுக்குப் பிடிக்கப்பட்டதேயொழிய, ஆயுதமாகப் பயன்படவில்லை என்று காட்டுகிறது **'ஏந்தி'** என்னும் பதம். (அரியுருவும் ஆளுருவுமாகி) சங்கசக்கரங்களாகிற ஆயுதங்களுக்கு ஒரு வேலையுமில்லாதபடி மனிதனும், சிங்கமும் கலந்த வடிவையுடையவனாய்க் கொண்டு. இவனுடைய அகடிதகடநாஸாமர்த்தியமிருந்தபடி. 'மனிதனாலும் சாவில்லை; மிருகத்தாலும் சாவில்லை' என்று வரங்கொண்டானாகையாலே உலகத்தில் நடையாடாததான நரசிங்கவுருவையெடுத்தான். அடி

யுடையனாய்க்கொண்டு, அக்நியினுடைய வடிவுபோலே ஏறிட்டுப்பார்க்கவொண்ணாத வடிவையுடையனை ஹிரண்யனுடைய மார்வைப் பிளந்துபோகட்ட ஆஹ்லாதத்தாலே ப்ரஹ்லாதன்பக்கல் வ்யாமுக்$_{3}$த$_{4}$னானவனுடைய திருவடிகளையேயொழிய ஒரு க்ஷணகாலமும் வேறு விஷயத்தை நினைக்கத்தான்போமோ? அன்றிக்கே, நெஞ்சை அத்$_{4}$யாஹரித்து, வேறொன்றை எண்ணப்போமோ? இத்தை அநுஸந்தி$_{4}$க்துப்பார் என்றுமாம்.

32. இமையாத கண்ணா லிருளகல நோக்கி
அமையாப் பொறிபுலன்க ளைந்தும்—நமையாமல்
ஆகத் தணைப்பா ரணைவரே ஆயிரவாய்
நாகத் தணையான் நகர்.

பதவுரை:—**இமையாத கண்ணால்**—ஜ்ஞானஸங்கோசமற்ற உட்கண்ணாகிய நெஞ்சால், **இருள் அகல**-(அறியாமையாகிற) இருட்டு நீங்கும்படியாக, **நோக்கி**-(ஸ்வஸ்வரூபபரஸ்வரூபங்களைக்) கண்டு, **அமையா**—அடக்கவொண்ணாத, **பொறி**

யானுக்கு ஆபத்துவந்த காலத்தில் ஆராய்ந்துகொண்டிராமல் கணநேரத்தில் அரியுருவும் ஆளுருவுமானான். (எரியுருவவண்ணத்தான் மார்விடந்த) நெருப்பைப்போன்று பார்க்கவொண்ணாத நிறத்தையும், எவரையுமழிக்கும் தன்மை முதலான குணங்களையுமுடையவனாய்நின்ற இரணியனின் மார்வைக் கிழித்த. (மால்) அன்புடையவன். இவ்வளவையும் செய்தது பிரஹ்லாதனிடம் வாத்ஸல்யத்தாலே என்று கருத்து. (மார்விடந்த மால்) அடியானுடைய ஆபத்தைப்போக்கின ஆநந்தத்தையுடையவன், (மால்) இவ்வருஞ்செயலைச்செய்த இவனே ஸர்வாதிகன் என்றுமாம். (பாலடியையல்லால் மற்று எண்ணத்தானுமோ இமை) ஆளிட்டு அந்திதொழாதே, அடியார் ஆபத்தைத் தானே தவிர்த்த பெருமானுடைய திருவடியையல்லால் வேறொரு விஷயத்தைக் கணப்பொழுதும் எண்ணமுடியுமோ? இமை-கண் இமைக்கும் நேரம். இப்படிக்கொள்ளாமல், 'நெஞ்சே' என்னும் பதத்தை வருவித்துக்கொண்டு, "நெஞ்சே! இப்படி அடியார்திறத்துப் பாரதந்திரிய வாத்ஸல்யங்களையுடையவனை அனுஸந்தித்தால், வேறொன்றை எண்ணமுடியுமோ? இதை எண்ணிப்பார்" என்பதாகவும் கொள்ளலாம். இமை-பார்.

புலன்கள் ஐந்தும்—(கண் முதலிய) ஐந்து இந்திரியங்களையும், (சப்தம் முதலிய) ஐந்து விஷயங்களையும், **நமையாமல்**—அடக்காமலிருந்தாலும், **ஆகத்து அணைப்பார்**— (அவன் நிர்ஹேதுகக்ருபையாலே மேல்விழும்போது) அவனை நெஞ்சிலே நினைப்பவர்கள், **ஆயிர வாய் நாகத்து அணையான்**—ஆயிரம் வாய் படைத்த ஆதிசேஷனைப் படுக்கையாகக்கொண்ட எம்பெருமானுடைய, **நகர்**—நகரமாகிய ஸ்ரீவைகுண்டத்தை, **அணைவரே**—அடைவார்கள்.

அவதாரிகை:— சாஸ்த்ரங்களிற் சொல்லுகிற ஸாத₄நாநுஷ்டானங்களில் அந்வயமில்லையேயாகிலும், சேஷ சேஷித்வரூபமான உறவை அறிந்தவர்களுக்கும் பரமபதத்தை ப்ராபிக்கலாகுங்கிடீர் என்கிறார்.

உரை:— ஜ்ஞாநஸங்கோசரஹிதமான நெஞ்சென்னும் உட்கண்ணாலே அஜ்ஞானமாகிற வல்லிருள் விட்டு நீங்கும்படியாக, ஸ்வஸ்வரூபபரஸ்வரூபங்களை உள்ளபடி த₃ர்ஶித்துப் பெற்ற விஷயங்களால் பர்யாப்தி பிறக்கக் கடவ

அவதாரிகை:—சாஸ்திரங்களிற் சொல்லுகிற கர்மஜ்ஞாநபக்திகளாகிற ஸாத₄நாநுஷ்டானங்களில் தொடர்பில்லையாகிலும், சேஷசேஷிப₄ாவமாகிற உறவைமாத்திரம் அறிந்தவர்களுக்கும் பரமபதத்தை அடையலாம் என்கிறார்.

வ்யா:—(இமையாத கண்ணால்) கண்களில் இரண்டுண்டு; மனிதவுடலின் வெளியே காணும்கண் இமைக்கும் கண். *நெஞ்சென்னும் உட்கண் இமையாத கண். அந்த உள்ளமாகிற இமைக்காத கண்ணாலே. "**ந சக்ஷுஷா க்₃ருஹ்யதே**" [முண்ட-3-1-8] [புறக்கண்ணால் காணப்படாதவன் பரம்பொருள்] "**மநஸா து விசுத்₃தே₄ந**" [விஷ்-தர்275-2] [பரிசுத்தமான மனத்தாலேயே காணத்தக்கவன்] "என்றேனும் கட்கண்ணால் காணாத அவ்வுருவை நெஞ்சென்னும் உட்கண்ணேல் காணும் உணர்ந்து"[பெரியதிரு 28] என்கிறபடியே கட்கண்ணால் காணப்படாதவனாகவும், உட்கண்ணாலேயே காணவுரியவனாகவுமிருப்பவனன்றோ இவன். (இருளகல நோக்கி) அஞ்ஞானமாகிற காரிருள் போகும்படியாக ஞானவிளக்காலே தன் ஸ்வரூபத்தையும், ஸர்வேச்வரனுடைய ஸ்வரூபத்தையும் கண்டு. (அமையாப் பொறி

தன்றிக்கேயிருக்கிற யந்த்ரகல்பமான ஶ்ரோத்ராதிகள் ஐந்தையும், தத்3விஷயமான ஶப்3தா3தி3கள் ஐந்தையும் நியமியாமல், ஸம்ப3ந்த4ஜ்ஞாந மாத்ரயுக்தராய்க்கொண்டு, ஹ்ருத3யத்திலே அவனை வைத்து அநுஸந்திக்குமவர்கள் அவனைப் புகழுகைக்கு ஆயிரம் வாயையுடைய திருவனந்

புலன்கள் ஐந்தும் நமையாமல்) எத்தனை விரகிட்டாலும், மேன்மேலும் கேட்கும் அனலத்தைப்போலே, எத்தனை விஷயங்களை அனுபவித்தாலும் மேலும்மேலும் விஷயாநுபவத்தையே விரும்பும் மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிற ஐந்து இந்திரியங்களையும், அவற்றுக்கு இரையான சப்த ஸ்பர்ச ரூப ரஸ கந்தங்களாகிற விஷயங்கள் ஐந்தையும் அடக்காமலேயே. (பொறி) எலிப்பொறிபோலே நம்மைச் சிறைப்படுத்தும் யந்திரமாயிருப்பது. (அமையாப்பொறி)

"ந ஜாது காம: காமாநாமுபபோ4கே3ந ஶாம்யதி।
ஹவிஷா க்ருஷ்ணவர்த்மேவ பூ4ய ஏவாபி4வர்த்த4தே।"

[காமுகர்களின் காமம் விஷயத்தை அனுபவிப்பதால் ஒருபோதும் அடங்குவதில்லை; ஆஹுதியினால் நெருப்பு மேன்மேலும் கொழுந்துவிட்டெரிவது போலே, மேன்மேலே அபிவிருத்தியடைகிறது.] என்று கூறப்பட்டதன்றோ. 'அமையா' என்றதை 'பொறி' 'புலன்' என்னும் இரண்டுக்கும் விசேஷணமாக்கி, அடக்கமுடியாத விஷயங்களையும், இந்திரியங்களையும் என்றும் கொள்ளலாம். (புலனைந்தும் நமையாமல்) "காவல் இல் புலனை வைத்து" [திருமாலை-1] என்றார் தொண்டரடிப்பொடிகளும். (ஆகத்தணைப்பார் அணைவரே ஆயிரவாய் நாகத்தணையான் நகர்) இந்திரியங்களை ஜயிக்காமலிருந்தபோதிலும், 'அவன் ஸ்வாமி, நாம் அடிமை' என்று அவனுக்கும் நமக்குள்ள உறவைமாத்திரம் அநுஸந்தித்துத் தம் உள்ளத்திலே அவனை அணைப்பவர்கள் ஆயிரவாயுடைய திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேச்வரனுடைய கலங்காப் பெருநகரை அடையப்பெறுவர். (ஆகத்து) ஆகம்-நெஞ்சம். (அணைப்பார்) ஸர்வேச்வரன் மேல்விழும்போது விலக்காமையே வேண்டுவது. (அணைவரே) உறுதியாக அலைவர்கள். தேற்றேகாரம். (ஆயிரவாய் நாகத்தணையான்) தன்னைப் புகழ்வதற்கு ஆயிரம் வாய்களையுடைய திருவனந்தாழ்வானை எல்லா அடிமைகளும் கொள்ளுமவன். (நகர்) இத்தால் மோக்ஷம் என்பது ஒரு

தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேச்வரனுடைய கலங்காப் பெருநகரைச் சென்று கிட்டப்பெறுவர்.

அந்த ஸாத₄நாநுஷ்டா₂நம் பண்ணுதார்க்குப் பரம பதத்தை ப்ராபிக்கப்போமோ? என்றுமாம். 'அமையாப் பொறிபுலன்கள்' என்று, நியமிக்கவரிதான விஷயேந்த்₃ரி யங்கள் என்றுமாம்.

33, நகர மருள்புரிந்து நான்முகற்குப் பூமேல்
பகர மறைபயந்த பண்பன்—பெயரினையே
புந்தியால் சிந்தியா தோதியுரு வெண்ணும்
அந்தியாலாம் பயனங் கென்.

பதவுரை:—**பூ மேல்**—உந்தித் தாமரையின்மேல், **நான் முகற்கு**—பிரமனுக்கு, **நகரம் அருள் புரிந்து** — வாஸஸ்தா னத்தைக் கொடுத்தருளி, **பகர**—(பிறர்க்கு) ஓதுவிக்கும்படி, **மறை பயந்த**–வேதத்தை உபதேசித்த, **பண்பன்**–நீர்மையை யுடைய எம்பிரானின், **பெயரினையே** — திருநாமங்களையே, **புந்தியால் சிந்தியாது**—மனத்தால் எண்ணாது, **ஓதி உரு எண் ணும்**—ஜபித்துக்கணக்கெண்ணும், **அந்தியால்**—ஸந்த்யாவந் தனத்தால், **அங்கு ஆம் பயன் என்** — உண்டாகப்போகிற பிரயோஜனம்என்ன.

அவதாரிகை:-எப்பெருமானை உள்ளீடாகக் கொள்ளாதே பண்ணும் ஸந்த்யாவந்தநாதி கர்மாநுஷ்டாநம் நிஷ்ப்ரயோ ஜநம் என்கிறார்.

தேசவிசேஷத்தில் அடையப்படுவதென்றும் கைங்கர்யமே பரமபுருஷார்த்த மென்பதும் உணர்த்தப்படுகிறது.

'ஆகம்' என்றது உருவத்தையும் குறிக்குமாகையாலே, "தெரிவை மார் உருவமே மருவி" [பெரியதிரு.1-1-3] என்கிறபடியே காமினிகளின் உருவத்தை அணைப்பவர்கள் பரமபதத்தை அடையமுடியுமோ? என்ப தாகவும் கொள்ளலாம். இப்படிக் கொள்ளும்போது பிரிநிலையேகாரமாகிறது. இந்திரியங்களை ஜயிக்காமல் மூலையடியே திரியுமவர்கள் பரமபதத்தை அடையமாட்டார்கள் என்று கருத்து.

உரை:—அந்தரங்கர்க்குக் கிட்ட மாளிகை கட்டுமாப் போலே ஜந்மபூ₄மியான திருநாபீ₄கமலத்திலே சதுர்முக₂ னுக்கு இருப்பிடத்தை க்ருபாபுரஸ்ஸரமாகப் பண்ணிக் கொடுத்து, இவ்வருகுள்ளார்க்கும் ஓதுவிக்கத்தக்கதாகத் தத்வஜ்ஞாபனமான வேதத்தை உபகரித்த ஸௌசீல்யாதி குணங்களை உடையவனானவனுடைய அந்த குணங்களுக்கு வாசகமான திருநாமங்களை மாநஸ்ஸால் அநுஸந்தி₄யாதே வாங்மாத்ரத்தாலே ஜபித்து, இடக்கைபற்றிக்கொண்டு அநுஷ்டிக்கிற ஸந்த்₄யாவந்த₃நாதி கர்மாநுஷ்டானங்களால் அவ்விடத்திலுண்டான ப்ரயோஜநமேது?

அவதாரிகை:—எம்பெருமானை இவற்றால் ஆராதிக்கப்படுமவனாக அநுஸந்தியாமல் செய்யப்படும் ஸந்தியாவந்தனம் முதலான கர்மங்கள் பயனற்றவை என்கிறார்.

வ்யா:—(நகரமருள் புரிந்து நான்முகற்குப் பூமேல்) நெருங்கியவர் களுக்கு அருகிலேயே வீடுகட்டிக் கொடுப்பதுபோலே மகனான நான்முக னுக்குப் பிறப்பிடமான திருநாபீகமலத்திலேயே இருப்பிடத்தைக் கருணை யோடு அருளினான். (பூமேல் மறைபயந்த பண்பன்) செல்வப் பிள்ளை களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் உபாத்தியாயர்கள் அவர்களைப் பஞ்சணையிலே உட்காரவைத்துத் தாம் தாழநின்று பாடம் சொல்லுவர்கள். அதுபோலே தன் செல்லப்பிள்ளையான பிரமனைத் தாமரைப் பூவிலே இருத் தித் தான் அவனுக்கு வேதத்தை உபதேசித்த குணசீலன். (பண்பன்) ஸௌசீல்யம், வாத்ஸல்யம் முதலான குணங்களையுடையவன். (பகர மறை பயந்த) தான் ஓதியதோடல்லாமல், பிறருக்கும் ஓதுவிக்கலாம்படி நான் முகனுக்கு வேதத்தை ஓதுவித்தான். (பெயரினையே புந்தியால் சிந்தியாது ஓதி உருவெண்ணும் அந்தியால் ஆம்பயன் அங்கென்) அவனுடைய குணங் களுக்கு வாசகமான கேசவன் முதலான திருநாமங்களை மனத்தால் நினை யாமல், காயத்திரி முதலான மந்திரங்களை வாயாலே ஓதி, கையாலே உருவெண்ணி அநுஷ்டிக்கிற ஸந்தியாவந்தனம் முதலான கர்மங்களால் மறுமையில் உண்டாகும் பயன் என்ன? ஒன்றுமில்லையென்கை. இத்தால் பகவதாராதனமாக நினையாமல் அனுஷ்டிக்கப்படும் கர்மாநுஷ்டானம் வீணானது என்றதாகிறது.

34. என்னொருவர் மெய்யென்ப ரேழுலகுண்டு ஆலிலையில்
முன்னொருவ னாய முகில்வண்ணா!—நின்னுருகிப்
பேய்த்தாய் முலைதந்தாள் பேர்ந்திலளால் பேரமர்க்கண்
ஆய்த்தாய் முலைதந்த வாறு.

பதவுரை:—**ஏழுலகு உண்டு**—*ஏழு உலகங்களையும் திரு வயிற்றிலே வைத்து,* **ஆல் இலையில்**—*ஒரு ஆலந்தளிரிலே,* **முன்**—*முன்னொரு காலத்தில்,* **ஒருவனாய**—*துணையற்றவனாய்த் தூங்கிய,* **முகில் வண்ணா**—*மேகவண்ணா!,* **முலை தந்தாள்**—*முலைகொடுத்த,* **பேய் தாய்**—*தாயாய் வந்த பேயாகிய பூதனை,* **பேர்ந்திலளால்**—*அசையமுடியாமல் இறந்து கிடந்தாள்;* **பேர் அமர் கண்**—*ஒன்றோடொன்று யுத்தம் செய்வன போன்றிருக்கும் பெரிய கண்களையுடைய,* **ஆய்த்தாய்**—*இடைத் தாயாகிய யசோதை,* **முலை தந்த ஆறு** — *முலைகொடுத்த விதத்தை,* **ஒருவர்**—*ஒப்பற்ற ஞானிகளான ரிஷிகள்,* **மெய் என்பர்**—*உண்மை என்று உரைப்பர்;* *என்*-(*இது*) **எங்ஙனே** *கூடும்?*

அவதாரிகை:—*இவ்விஷயத்தில் தலையான பக்தியை யுடையளாய்க்கொண்டு அவனை அநுஸந்திக்கப்பெற்றவள் யசோதைப் பிராட்டியொருத்தியுமேயன்றோ* **என்கிறார்.**

உரை:—*ப்ரளயத்திலழியாதபடி ஸப்தலோகங்களையும் அமுதுசெய்து முகிழ்விரியாததோராலந்தளிரிலே ஒரு பரி*

அவதாரிகை :—பரமபுருஷனிடத்தில் இயற்கையான தலைசிறந்த பக்தியையுடையவளாய்க் கொண்டு அநுபவிக்கப்பெற்றவள் யசோதைப் பிராட்டி யொருத்தியேயன்றோ என்கிறார்.

வ்யா:—(ஏழுலகுண்டு) பிரளயகாலத்திலே பூர்புவஸ்ஸுவர்மஹர் ஜநஸ்தபஸ்ஸத்யமெனப்படும் ஏழு உலகங்களாலும் உபலக்ஷிக்கப்பட்ட எல்லாவுலகங்களையும் ப்ரளயத்திலழியாதபடி வயிற்றிலே வைத்து ரக்ஷித்து. ஒரு சில வஸ்துக்களையோ உண்டது? (ஆலிலையில்) அப்போதே யுண்டானதாகையாலே முகிழ்விரியாததோர் ஆலந்தளிரிலே. ஏழுலகங்

வருமில்லாத ப்ரளயஸமயத்திலே அஸஹாயனுய்க்கொண்டு கண்வளர்ந்தருளின காளமேகநிப$_4$ச்யாமமான வடிவையுடையவனே! அற்றையிழவுதீர உனக்கு ஸ்நேஹித்துப் பரிவுடனே முலைதந்து உகப்பித்தாளாயிருந்து பேய்த்தாயான பூதனையானவள் அவ்விடத்தினின்றும் பேரமாட்டாமல் பிணமாய் விழுந்தாள். அத்தை, பெரிய ஸ்மரபூ$_4$மியிலே இடைத்தாயான யசோதைப்பிராட்டி அஞ்சாமல் அந்த விஷத்துக்கு அம்ருதமாக முலைதந்த ப்ரகாரத்தை, அறிவுக்கு அத்$_3$

களையுமுண்ட தன்னை தரித்து நின்ற ஆதாரம்தான் உறுதியானதொரு பொருளோ? (முன்) பிரளயகாலத்திலே. இந்நிலைக்குப் பரிவதற்கும் ஓர் ஆளில்லாத காலமன்றோ (ஒருவனுய) குழந்தையின் இந்த ஸாஹஸச் செயலைத் தடுக்கத் தாய்தந்தையர் கூட இல்லையே! "**ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்$_3$ரஹ்மா நேசாந:**" [மஹோபனிஷத்] [நாராயணன் ஒருவனே யிருந்தான்; பிரமனுமில்லை; சிவனுமில்லை] எனப்படும் தத்துவமன்றோ. (ஒருவனுய முகில்வண்ணு) "படியாது மில்குழவிப்படி எந்தை" [திருவாய் 3-7-10] என்றுரனன்றே நம்வாழ்வாரும். (முகில்வண்ணு) கார்மேக வண்ணு! எக்கேடும் கெடட்டும் என்று இருக்க விடுகிறதோ வடிவழகு? அன்று நேர்ந்த ஸாஹஸத்திற்கு இன்றிருந்து வயிறெரியவன்றே செய்கிறது.

இப்படிப் பரிவரில்லாத அவ்வாபத்தைப் போலல்லாமல், அண்மையில் நடந்த மற்றோராபத்திலே பரிவருண்டாகியிருந்ததை அநுஸந்தித்து இழவு தீருகிறார்,-(நின் உருகிப் பேய்த்தாய் முலைதந்தாள்) உன்னிடம் பொய்யன்பும், பொய்ப்பரிவும் பாவித்துவந்த பேயான பூதனை உன் வடிவழகைக் கண்டவுடன் மெய்யன்பும் மெய்ப்பரிவுமுடையளாகி விஷமூட்டப்பெற்றிருந்த முலையைக் கொடுத்தாள். (பேர்ந்திலளால்) தீயநினைவோடு வந்த அவளுடைய நினைவு அவளோடே போம்படி, விஷத்தோடே அவளுயிரையும் சேர்த்து அமுதுசெய்கையாலே அவள் அசையமாட்டாத பிணமானுள். 'நின்னுருகி' என்பதை மேலோடு கூட்டவுமாம். (பேரமர்க்கண் நின்னுருகி ஆய்த்தாய் முலைந்ததவாறு என்?) பூதனையோடு குழந்தையான நீ போரிட்டு அவளைக்கொன்ற அந்த யுத்தபூமியிலே, விஷமூட்டப்பெற்ற உனக்காகப் பரிந்து, அப்பிணம் கிடக்கையிலேயே ஆய்த்தாயான யசோதை அஞ்சாமல் அந்த விஷத்தைமுறிக்கும் அமுதமாகத் தான் முலை தந்தபடி எத்திறம்! ஒருத்தி முலைகொடுத்து இறந்துகிடக்கிறபடியைக் கண்டும், பரிவாலே மற்றொருத்தி முலைகொடுத்தா

விதீயரான வ்யாஸபராசராதி$_3$களான ரிஷிகள் பரமார்த்த$_2$மென்று சொல்லாநிற்பர்கள். எங்ஙனே? நாட்டில் கண்டறிவதொரு ஸ்நேஹமாகிலன்றோ மெய்யென்னலாவது. அக$_4$டிதக$_4$டநாஸமர்த்த$_2$னானவனுக்கு அஞ்சுகிற யசோதைப் பிராட்டி ஸ்நேஹமும் ஒருஸ்நேஹமே! என்று வித்$_3$த$_4$ராகிறார்.

35. **ஆறிய வன்பி லடியார்த மார்வத்தால்**
கூறிய குற்றமாக் கொள்ளல்நீ—தேறி
நெடியோய்! அடியடைதற் கன்றே ஈரைந்து
முடியான் படைத்த முரண்.

பதவுரை:—ஆறிய அன்பு இல்—*பொங்கித் தணிந்த பக்தி இல்லாத,* **அடியார்**—*அடியவர்கள்,* **தம் ஆர்வத்தால்**—*தங்களுடைய ஸ்நேஹத்தால்,* **கூறிய**—*சொன்னசொற்களை,* **நீ குற்றமாக்கொள்ளல்**—*நீ தவறாகக் கொள்ளலாகாது;* **ஈர் ஐந்து முடியான்**—*பத்துத் தலைகளை உடையவனான ராவணன்,* **படைத்த**—*செய்த,* **முரண்** — *வைரம்,* **தேறி** — *(க்ரமமாக) தெளிந்து,* **நெடியோய் அடி**—*நெடுமாலான உன்னுடைய திருவடிகளை,* **அடைதற்கு அன்றே** — *அடைவதற்குக் காரணமாயிற்றல்லவோ?*

னென்றால், அப்பரிவை வார்த்தைகளால் அளக்கமுடியுமோ? (பேரமர்க்கண் ஆய்த்தாய்) பரிவாலே ஒன்றோடொன்று பெரும்போர்புரியும் திருக்கண்களையுடைய யசோதைப்பிராட்டி என்றும் கொள்ளலாம். (ஒருவர் மெய் என்பர்) இதைப் பொய்யென்னவொண்ணாதபடி அறிவிலே ஒப்பற்றவர்களான வியாஸபராசராதிகளான ரிஷிகள் இதை உண்மையென்பர்கள். (என்னொருவர் மெய்யென்பர்) இதை ஒருவர் உண்மையென்பது எப்படி? என்றுமாம். உலகத்தில் நடையாடுவதொரு அன்பாகில் உண்மையென்னலாம்; பொய்யன்பே நிறைந்த இவ்வுலகிலுள்ள பொய்யர்களான நமக்கு இவ்வன்பு மெய்யாகத் தோற்றவில்லை என்று கருத்து. ஏழுலகுண்டு ஆலிலையில் துயின்று, குழந்தையாயிருக்கும்போதே பேயைக்கொன்ற அக$_4$டிதக$_4$டநா (நடக்கமுடியாதவற்றையும் நடத்தவல்ல) ஸாமர்த்தியமுடைய உனக்கு என்வருகிறதோ? என்று அஞ்சி முலைதந்த யசோதைப் பிராட்டியின் அன்பும் ஓர் அன்பே என்று ஈடுபடுகிறார்.

அவதாரிகை:—இவளுடைய ஸ்நேஹத்தைக் கண்ட வாறே அல்லாத தம் போல்வார் ஸ்நேஹம் ப்ராதிகூல்ய ஸமமாய்த்தோற்றி அத்தைப்பொறுத்தருளவேணும் என்று அவனை க்ஷமை கொள்ளுகிறார்.

உரை:—'உனக்கு என் புகுருகிறதோ?' என்று பரிந்து வயிறெரியும்படி ஏறிமறிந்த பக்தியின்றிக்கே, ஶேஷத்வ ஜ்ஞாநமாத்ரயுக்தராயிருக்குமவர்கள் தந்தாமுடைய ஸ்நேஹத்தாலே அநுபவிக்கவேணும், அடிமைசெய்யவேணும் என்றாப்போலே ஸ்வப்ரயோஜநகர்ப்பமாகச் சொன்ன வார்த்தைகளை குற்றத்தை நற்றமாகக்கொள்ளும் அதிமாத்ர வத்ஸலனான நீ குற்றமாகக் கொள்ளாதொழியவேணும்.

அவதாரிகை:—யசோதையினுடைய அன்பை அநுஸந்தித்தவுடன் தம்மைப்போல்வாருடைய அன்பு விரோதத்தோடு ஒக்கத் தோற்றுகை யாலே, இப்பொய்யன்பைப் பொறுத்தருளவேணும் என்று எம்பெருமானைப் பிரார்த்திக்கிறார்.

வ்யா:—(ஆறிய அன்பில் அடியார்) ஏறவேண்டிய உயரமெல்லாம் ஏறி அடங்கிநிற்கும் அதிகம்பீரமான கடல்போலே, பொங்கியடங்கிய பக்தியை உடைய யசோதைப்பிராட்டியைப்போன்ற அன்பில்லாத அடியார். (அடியார்) 'அவன் ஸ்வாமி; நாம் தாஸபூதர்' என்னும் அறிவைமாத்திர முடையவர்கள். (அன்பில் அடியார்) அவ்வறிவின் பலனாய் வருவதாய், தன்னைப்பேணாதே அவனையே நோக்கும் அன்பில்லாத அடியார். (தம் ஆர்வத்தால் கூறிய) தம்மளவான தம் அன்பாலே 'எம்பெருமானை அனுப விக்கவேணும்; அவனுக்கு அடிமைசெய்யவேணும்' என்றாற்போலே கூறியவைகளை. ஆறியவன்பில்லாதவர்களாகையாலே அவனுக்குப் பரி யாமல், தம் நன்மையைத் தேடிச்சொல்லும் வார்த்தைகளை. யசோதைப் பிராட்டியினளவு அன்பில்லாமலிருக்கும்போது, "ஆய்த்தாய் முலைதந்த வாறு என்" என்று அவளைப்போலே அன்புடையவனைப்போலே சொன்ன வார்த்தைகளை என்றுமாம். (குற்றமாக் கொள்ளல் நீ) பிரானே! என்னைப் போன்ற பொய்யன்புடையவர்களுடைய புன்மொழிகளை நீ குற்றமாகக் கொள்ளாதொழியவேணும். (குற்றமாக் கொள்ளல் நீ) "செய்தகுற்றம் நற்றமாகவே கொள் ஞாலநாதனே!" [திருச்சந்த-111] என்கிறபடியே குற்றத்தை குணமாகக் கொள்ளும் பேரன்பூண்ட நீ எங்கள் குற்றத் தைக் குற்றமாகக் கொள்ளமுடியுமோ? 'குற்றத்தை குணமாகக் கொள்ள

அதெங்ஙனே கூடும்படி என்று திருவுள்ளமாகில், ப்ரதிகூலனான ராவணன் புத்திபூர்வகமாகப்பண்ணின திருவினைப் பிரித்த மிகைச்செயலானது ஆநுகூல்யலேசயுக்தர் திறத்தில் பண்ணும் ஸ்நேஹபக்ஷபாதங்களுக்கு எல்லைகாண வொண்ணாத பெருமையையுடைய உன் திருவடிகளை காலக்ரமத்திலே தெளிந்து சிசுபாலனாய்க் கிட்டுகைக்குடலாய் விட்டதில்லையோ?

அன்றிக்கே, நீ தேறி ப்ரஸந்நனாய்ச் செய்த குற்றத்தைக் குற்றமாகக் கொள்ளாதொழியவேணும் என்னவுமாம்; ப்ராதிகூல்யம் ஆநுகூல்யமாய்ப் பலித்தால் ஆநுகூல்யாபாஸம் ஆநுகூல்யமாகத் தட்டுண்டோ? என்றபடி.

எப்படி முடியும்' என்று திருவுள்ளமாக குற்றத்தையே குணமாகக் கொண்டு திருத்திக் கைக்கொண்டமைக்கு உதாஹரணங்காட்டுகிறார்,— (ஈரைந்து முடியான் படைத்தமுரண் தேறி அடியடைதற்கன்றே) பத்துத் தலையாலும் விரோதத்தையே செய்துபோந்த ராவணனுடைய விரோதம் சிசுபாலனாய்ப் பிறந்தபோது காலக்ரமத்திலே தெளிந்து திருவடிகளைக் கிட்டுவதற்குக் காரணமாய் விட்டதன்றோ. (ஈரைந்து முடியான்) பத்துத் தலையாலும் பிராட்டி திறத்தில் அபசாரப்பட்டவன். (படைத்த) அஜ்ஞானத்தாலே அபசாரப்படவில்லை. புத்திபூர்வகமாக அபசாரப்பட்டபடி. (முரண்) "சுரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த கொடுமையில் கடுவிசையரக்கன்" [பெரியதிரு 5-7-7] என்கிறபடியே அபசாரத்தின் எல்லைநிலம். (தேறி நொடியோயடி அடைதற்கன்றே) கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வைதுபோந்தவன், தன்னைக் கொல்லக் கையும் திருவாழியுமாய் நிற்கும் நிலையைக்கண்டு, 'இதொரு நிலையிருந்தபடியென்!' என்று ஈடுபட, அதுவே அந்திமஸ்மிருதியாகிக் கண்ணனுடைய அடியை அடைவதற்குக் காரணமாகிவிட்டதல்லவா.(நெடியோய் அடி) சிறிது அன்புடையார் திறத்திலும் வைக்கும் அன்புக்கும் பக்ஷபாதத்திற்கும் எல்லைகாணவொண்ணாதபடி வாத்ஸல்யத்தாலே நெடியமாலாயிருப்பவன் திருவடி. 'நெடியோய்' என்று ஸம்போதநம் (விளி) ஆகவுமாம். (முரண் தேறி அடியடைதற்கன்றே—ஆர்வத்தால் கூறிய குற்றமாக் கொள்ளல்) வைரமே திருவடியைக் கிட்டக் காரணமானபோது பொய்யன்பை மெய்யன்பாகக் கொள்ளத்தடையென்ன? என்று கருத்து. (தேறி குற்றமாக் கொள்ளல்) என்று கூட்டியும் பொருள்கொள்ளலாம். நீ எங்களுடைய

36. முரணை வலிதொலைதற் காமென்றே முன்னம்
தரணி தனதாகத் தானே—இரணியனைப்
புண்ணிரந்த வள்ளுகிராற் பொன்னாழிக் கையால் நீ
மண்ணிரந்து கொண்ட வகை.

பதவுரை:—**முன்னம்**—*முன்னமேயே*, **தரணி தனது ஆக தானே** —*பூமியைத் தன்னுடையதாகவே அபிமானித்திருந்த*, **இரணியனை**—*ஹிரண்யகசிபுவை*, **புண் நிரந்த**—*புண்படும்படி பிளந்த*, **வள் உகிரால்**—*கூர்மையான நகங்களால்*. **பொன்**—*அழகியதாக விளங்குவதும்*, **ஆழி கையால்**—*சக்கரத்தை உடையதுமான திருக்கையால்*. **நீ**—*நீ*, **மண் இரந்து கொண்ட வகை**—*பூமியை யாசித்துப்பெற்ற வகையானது*, **முரணை வலி தொலைதற்கு ஆம் என்றே**—*(எங்களைப்போன்ற ஸம்ஸாரிகளின்) அஹங்காரமமகாரங்களைப் போக்கடிப்பதற்காகவேயல்லவா?*

அவதாரிகை:—*இப்படிக் 'கூறிய குற்றமாக்கொள்ளல்' என்று பொறைகொள்ள வேண்டாதபடி நீதானே உன்னையழிய மாறிவந்து கார்யஞ்செய்தது ஸம்ஸாரிகளின் கோணையைப் போக்கி உனக்காக்கிக் கோள்ளலாமென்று பார்த்தே? என்கிறார்.*

உரை:—*முன்பே உன்னதான பூமியைத் தன்னதாகத் தானே அபிமானித்திருந்த ஹிரண்யனைப் புண்படுத்திப்*

தன்மையையும், உன் பெருமையையும் ஆராய்ந்து தெளிந்து எங்களுடைய புன்மொழிகளைக் குற்றமாகக் கொள்ளாதொழியவேணும் என்று கருத்து.

அவதாரிகை:—'கூறிய குற்றமாக் கொள்ளல்' என்று பிரார்த்திக்கவும் வேணுமோ? நீயே உன் பெருமைக்குத் தகாதபடி இரப்பாளனாய்வந்து காரியம் செய்தது எங்களுடைய வைரத்தைப்போக்கி உனக்கு ஆளாக்கிக் கொள்ள நினைத்ததன்றோ என்கிறார்.

வ்யா:—(முன்னம்) வாமனாவதாரத்துக்கும் முற்பட்டதான நரஸிம்ஹாவதார காலத்திலேயே. (தரணிதனதாகத் தானே இரணியனை) உன்னதாயிருக்

பிளந்தகூரிய திருவுகிரோடே கூடியிருப்பதாய் ஸ்ப்ருஹணீய மான திருவாழியை யுடைத்தான திருக்கையாலே ஸ்ரிய:பதி யான நீ பூமியை அர்த்தித்து அளந்துகொண்ட ப்ரகாரம் "ந நமேயம்" என்கிறபடியே தலைவணக்கமற்றுத்திரியும் கழுங்க ரான ஸம்ஸாரிகள் கோணை மிறுக்கு அறுக்கலாமென்றே.

இரப்புத் தோற்றநின்ற ஸௌலப்₄யத்தையும் வடி வழகையுங்காட்டி 'நான் எனக்கு' என்றிருக்கும் மிறுகுதலை மீட்டு உனக்கேயாளாம்படி சேர்த்துக் கொள்ளுகைக்காக வன்றோ என்றபடி.

கும் பூமிமுழுவதையும் தன்னுடையதாகவே அபிமானித்திருந்த இரணியனை. (புண் நிரந்த வள் உகிரால் பொன் ஆழிக்கையால்) புண் படுத்திப் பிளந்த கூர்மையான நகங்களாலே அழகியதாய் விளங்கும் சக்கரக்கையால். (நீ மண் இரந்து கொண்ட வகை) லக்ஷ்மீநாதனான நீ உன்னை இரப்பாளனாக்கி உன்னுடையதான பூமியை யாசித்துப்பெற்ற வழி. (முரணை வலி தொலைதற்காமென்றே) "இரண்டாகப் பிளக்கப்பட் டாலும் படுவேனேயொழிய வணங்கேன்"[ரா-யு 36-11] என்னும் எங்களைப் போன்ற ஸம்ஸாரிகளின் அஹங்காரமமகாரங்களை வலியழிப்பதற்காக வன்றோ."ஸர்வேச்வரனான நாம் இரப்பாளனாய்நின்று தேவர்காரியம் செய்த மையைக்கண்டால் நம் குணங்களிலும் வடிவழகிலுமீடுபட்டு ஸம்ஸாரிக ளுடையஅஹங்காரமமகாரங்களும் பலமழிந்து ஒடுங்கும்; அவர்களையும் ஆளாக்கிகொள்ளலாம்' என்று கருதியன்றோ நீ இச்செயலைச் செய்தது. பலத் தாலே மஹாபலியை வெற்றிகொண்டிருந்தால் உனக்கு இவ்வரும்பயன் சித்திக்காதென்பதாலேயேயன்றோ உன்னை அழியமாறி இச்செயலைச் செய்தாய். (முன்னம் தரணி தனதாக பொன்னாழிக்கையால் தானே மாவலியை மண்ணிரந்து கொண்டவகை) என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம். முற்காலத்திலேயே மாவலியானவன் பூமியைத் தன்னுடைய தாகஅபிமானிக்க, ஆநுகூல்யலேசம் அவனிடமிருக்கையாலே, இரணியனைப் போலே அவனை அழிக்காமல் உன்னை அழியமாறிக் காரியம் செய்தா யன்றோ என்று கருத்து. (தரணிதனதாகத் தானே—இரணியனைப் புண்ணிரந்த பொன்னாழிக்கையால் மண்ணிரந்து கொண்ட) பூமியைத் தன்னுடையதாக அபிமானித்தமையிலே இரணியனுக்கும், மாவலிக்கும் வாசியில்லை. ஆயினும் மாவலியானவன் இரணியனைப்போலே த்வேஷமில் லாதவனாகையாலும், பாகவதாபசாரமில்லாதவனாகையாலும், வண்மை முத லான குணமுடையவனாகையாலும் அவனைப்பிளந்த கையாலே இவனிடம் யாசித்தான்; இதொரு குணபக்ஷபாதமிருந்தபடியென் என்று ஈடுபடுகிறார்.

37. வகையறு நுண்கேள்வி வாய்வார்கள் நாளும்
புகைவிளக்கும் பூம்புனலு மேந்தி—திசைதிசையின்
வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமேவெண்சங்கம்
ஊதியவாய் மாலுகந்த வூர்.

பதவுரை:—**வகை அறு**-*மற்ற தெய்வங்களும், மற்ற பலன்களுமாகிற வகைகளை அறுக்கும்படியான,* **நுண் கேள்வி வாய்வார்கள்**—*ஸூக்ஷ்மமான கேள்வி ஞானத்தை உடையவர்களான,* **வேதியர்கள்**—*விப்ரர்கள்,* **நாளும்**-*தினந்தோறும்,* **புகை விளக்கும்**—*தூபதீபங்களையும்,* **பூம் புனலும்**-*பூவுடன் கூடிய ஜலத்தையும்,* **ஏந்தி**—*தரித்துக்கொண்டு,* **திசைத் திசையும்**-*எல்லா திக்குகளிலிருந்தும்,* **சென்று**-*(திருமலைக்குச்) சென்று,* **இறைஞ்சும்**—*தொழும்படியான,* **வேங்கடமே**—*திருவேங்கடமலையே,* **வெண் சங்கம் ஊதிய வாய்**-*வெளுத்த சங்கத்தை ஊதிய திருப்பவளத்தையுடைய,* **மால்**-*எம்பிரான்* **உகந்த**-*விரும்பி எழுந்தருளியிருக்கும்,* **ஊர்**-*தேசமாகும்.*

அவதாரிகை:—*அங்ஙனே தன் அர்த்தித்வம் தோற்ற வந்து என்னளவன்றிக்கே என்றும் தன்னை அர்த்தியாக்கித் கொண்டு ஸர்வர்க்கும் ஸர்வகாலத்திலும் ஆச்ரயிக்கலாம்படி திருமலையிலே வந்து நித்யஸந்நிஹிதனுனன் என்கிருர்.*

உரை: – *ஆயு:புத்ரக்₃ருஹ க்ஷேத்ரவித்த பஶ்வந்நஸ்வர்க் க₃ாதி₃ரூபேண பலவகைப்பட்டிருக்கிற க்ஷுத்ரபுருஷார்த்*

அவதாரிகை:—*மாவலியிடம் யாசகனுய் வந்தமையைக் கூறினுர் சென்ற பாசுரத்தில்; அப்படியே தன்னிடமும், தன்னோடல்லாமல் எல்லாக்காலத்திலுமுள்ள எல்லாச்சேதனரிடமும் 'என்னைக் கொள்ளலாகாதோ?' என்னும் இரப்புத்தோற்றவந்து அனைவரும் தன்னை அடைந்து விநியோகம் கொள்ளலாம்படி அருகிலேயே திருமலையிலே வந்து நிற்கிறுன் என்கிருர் இப்பாசுரத்தில்.*

வ்யா:—(*வகையறு*) உலகில் *ப்ரயோஜநாந்தரங்களையும்,* தேவதாந்தரங்களையும் *பற்றி நிற்கும் அறிவு பலவகைப்பட்டிருக்கும். அந்தவகைகளை அறுத்தவர்கள் என்றபடி.*

தங்களையும் பரமபுருஷார்த்த2லக்ஷண மோக்ஷத்தையும் அலகலகாக வகையறுக்கைக்கு உறுப்பாய், ஸூக்ஷ்மார்த்த2 விஷயமான ச்ரவணம் வாய்த்திருக்கும் வேத3தாத்பர்ய 'வித்துக்களடங்கலும் ஸர்வகாலமும் ஆராத4நோபகரணமான தூ4பதீ3பங்களையும் பூவோடே கூடின ஜலத்தையும் த4ரித்

"வ்யவஸாயாத்மிகா பு3த்3தி4ரேகேஹ குருநந்த3ந।
ப3ஹுஶாகா2 ஹ்யநந்தாச்ச பு3த்3த4யோऽவ்யவஸாயிநாம்"
[கீதை 2-41]

[குருகுலத்துதித்தவனே! (ஆத்மஸ்வரூபத்தின் உண்மையைப்பற்றிய) நிச்சயத்துடன்கூடிய புத்தி (மோக்ஷபலம் ஒன்றையே குறிக்கொண்டிருப்பதால்) ஒன்றுயிருக்கும்; அந்த நிச்சயமற்றவர்களுடைய புத்திகள் (பல பலன்களைக்குறிக்கொண்டிருப்பதால்) பல கிளைகளுடன் கூடியதாகவும், கணக்கற்றவையாகவுமிருக்கும்.] என்று இவை பலவகைப்பட்டிருப்பவை என்னுமர்த்தம் சொல்லப்பட்டதன்றே. அப்படியல்லாமல், ஆயுள், மக்கள், மனை, நிலம், பணம், மாடு, உணவு, சுவர்க்கம் முதலான பலவகைப்பட்ட தாழ்ந்த பயன்களையும், மேலான பலமான மோக்ஷத்தையும் வகைவகையாக அறுத்து ஆராய்ந்து-பார்த்தவர்கள் என்றுமாம். இப்படி ஆராய்வதற்கும், ப்ரயோஜநாந்தரதேவதாந்தரங்களைத் தள்ளுவதற்கும் ஸாமாந்ய ஜனங்களால் முடியுமோ? எனில்: (நுண்கேள்வி வாய்வார்கள்) இப்படிச் செய்வதற்குக் கருவியான ஸூக்ஷ்மமான கேள்விஞானத்தை உடையவர்கள். எதிலும் ஸ்தூலபுத்தியுடையவர்களால் இவ்வருஞ்செயலைச் செய்யமுடியாது; ஸூக்ஷ்மபுத்தியுடையவர்களே ப்ரயோஜநாந்தரதேவதாந்தரங்களை வகையறுத்துத் தள்ளமுடியும் என்று கருத்து. "உணர்ந்துணர்ந்து—உரைத்துரைத்து இறைஞ்சுமின் மனப்பட்ட தொன்றே" [திருவாய் 1-3-6] என்று நம்மாழ்வாரும், "ஆலோட்3ய ஸர்வசாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: இத3மேகம் ஸுநிஷ்பந்நம் த்4யேயோ நாராயண: ஸதா3" [பார-ஆநு 186-11] எல்லா சாஸ்திரங்களையும் ஆராய்ந்து மறுபடியும் மறுபடியும் விசாரித்தால்தான் நாராயணன் ஒருவனே தியானிக்கத்தக்கவன் என்னுமிது தேறிநிற்கும்.] என்று ரிஷிகளும் இதை அருளினார்களன்றே. இப்படி ஸூக்ஷ்மபுத்தியும் ஆராய்ச்சியறிவும் இருந்துவிட்டால் மாத்திரம் போதுமோ? எனில், (வேதியர்கள்) வேதத்தின் உட்பொருள் அறிந்தவர்களாகவும் இருக்கவேணும் என்கிறது. (நாளும் புகைவிளக்கும் பூம்புனலும் ஏந்தி) நாள்தோறும் முற்கூறிய வேதியர்கள் தங்கள் ஸ்வரூபாநுகுணமாக ஆராதநோபகரணமான தூ4பதீ3பங்களையும், பூவையும் நீரையும் ஏந்தி

துக்கொண்டு பெரியதிருநாளுக்குப் போமாப்போலே ஸர்வ தோதிக்கமாக எடுத்துவிட்டுச்சென்று ஆஶ்ரயிக்கும் திருமலையே பாரதஸமரத்திலே ப்ரதிபக்ஷம் நசிக்கும்படியாக வெளுத்தநிறத்தையுடைய ஸ்ரீபாஞ்சஜந்யத்தை மடுத்தூதின திருப்பவளத்தையுடையவனாய் ஆஶ்ரிதவ்யாமுக்தனான க்ருஷ்ணன், ஆஶ்ரிதரக்ஷணத்துக்கு ஏகாந்தமான தேஶமென்று உகப்புடனே வர்த்திக்கிற ஊர்.

38. ஊரும் வரியரவ மொண்குறவர் மால்யானை
பேர வெறிந்த பெருமணியை—காருடைய
மின்னென்று புற்றடையும் வேங்கடமே மேலசுரர்
எம்மென்னு மால திடம்.

பதவுரை:—**ஊரும்**-ஊர்ந்து செல்கின்றதும், **வரி அரவம்**-(உடம்பில்) கோடுகளை உடையதுமான பாம்பானது, **ஒண் குறவர்**—மேலான குறவர்கள், **மால் யானை பேர**—(பட்டி மேய்கிற) பெரிய யானைகள் (புனத்தை விட்டு) வெளிச் செல்லும்படியாக, **எறிந்த** (அந்த யானைகளின்மீது) வீசி எறிந்த, **பெரு மணியை**-பெரிய மாணிக்கத்தை, **கார் உடைய**

நின்று வழிபடுகிறார்கள். (திசைதிசையின் சென்று இறைஞ்சும்) ப்ரஹ்மோத்ஸவம் எனப்படும் பெரியதிருநாளுக்குப்போவதுபோலே, எல்லா திக்குகளிலுமுள்ள தேசங்களிலிருந்தும் தினந்தோறும் திருமலைக்குச் சென்று வழிபடுகிறார்கள். ஆழ்வாருடைய மங்களாசாஸநபலத்தாலே இன்றளவும் திருமலையிலே நித்யப்ரஹ்மோத்ஸவமாயிருப்பதைக் காண்கிறோமன்றோ. (வேங்கடமே வெண்சங்கம் ஊதியவாய் மாலுகந்த ஊர்) இப்படிப்பட்ட திருவேங்கடமலையே, பாரதயுத்தத்திலே எதிரிகள் அழியும்படியாகவெளுத்த நிறத்தையுடைய ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் திருப்பவளத்திலே மடுத்து ஊதின திருமால் உகப்புடன் வாழும் திவ்யதேசம். (வெண்சங்கம் ஊதிய வாய் மால்) ''ஸ கோ⁴ஷோ தா⁴ர்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருத³யாநி வ்யதா³ரயத்'' [கீதை 1-19] [அப்பாஞ்சஜந்யகோ⁴ஷம் திருதராஷ்டிரபுத்திரர்களின் நெஞ்சைப்பிளந்தது] என்கிறபடியே அர்ஜுனனின் அம்புக்கும் எட்டாத்தவர்களை நின்றநிலையிலிருந்தே அழித்த ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஊதிய திருப்பவளத்தை உடைய கண்ணன். (மால்) அடியார்பக்கல் அன்புடையவன். (உகந்த ஊர்) அடியாரைக்காக்க உரியதலம் என்று உகப்புடன் வாழும் ஊர்.

மின் என்று—மேகத்தில் இருக்கும் மின்னல் என்று நினைத்து **புற்று அடையும் வேங்கடம்**—(இடிக்கு பயந்து) புற்றினுள் நுழையுமிடமான திருவேங்கடமலையே, **மேலசூரர்**—மேலான தேவர்களான நித்யஸூரிகள், **எம் என்னும்**-எங்களுடையது என்று அபிமானிக்கும், **மாலது இடம்**—எம்பெருமானுடைய திவ்யதேசமாகும்.

அவதாரிகை:—இப்படி அவன் திருமலையிலே உகந்து நித்யவாஸம் பண்ணுகையாலே, இவரும் தத்ஸம்பந்தத்தாலே அங்குண்டான ஸர்ப்பம், குறவர், ஆனை, அத்தையெறிகைக்குக் கருவியான மணி, புற்று முதலான பதார்த்தங்களையெல்லாம் அவனோபாதி ப்ராப்யமாக நினைத்து மண்டி அநுபவிக்கிறார்.

உரை:—ஒரு கார்யப்பாடற ஸ்வைரஸஞ்சாரம் பண்ணா நிற்பதாய் தர்சநீயமான வரியையுடைத்தான ஸர்ப்பமானது, திருமலையில் நின்றும் கீழிழியுமது குடிப்பழியாக நினைத்திருக்கும் விலக்ஷணரான குறவர் புனத்தில் வந்து

அவதாரிகை:—இப்படிப் பரமபதநிலயனானவன் திருமலையிலே உகந்து என்றும் வாழ்கையாலே, இவரும் அவனோடு தொடர்புபெற்ற அந்தமலையிலிருக்கும் பாம்பு, குறவர், பட்டிமேயும் யானை, அதைத் துரத்தும் கருவியான மணி, பாம்புபுகும் புற்று முதலான பொருள்களையெல்லாம் அவனைப்போலும், பரமபதத்திலுள்ளாரைப்போலும் உத்தேச்யமாகநினைத்து ஈடுபட்டு அநுபவிக்கிறார் இப்பாசுரத்தில்.

வ்யா:— (ஊரும் வரியரவம்—புற்றடையும்) ஒரு காரியமில்லாவிடினும் ஊர்வதையே இயற்கையாகக்கொண்ட பாம்பு புற்றையடைகிறது. (ஊரும்) "புத்ர ப்ராதரி கச்சதி ப்ரமாதம் மாகார்ஷீ:" [ரா-அ 40-5] [குழந்தாய்! ராமன் நடந்துசெல்லுகையில் (அந்த நடையழகில் ஈடுபட்டு—அவனை ரக்ஷிப்பதில்) கவனமில்லாமல் இருந்துவிடாதே] என்று இளையபெருமாள் பெருமாளின் நடையழகில் ஈடுபடுவதுபோலே இவர் திருமலையில் ஸர்ப்பத்தின் நடையழகில் ஈடுபடுகிறார். (ஊரும்) ஒரு பலனையும் எதிர்பாராமல் திருமலையில் ஊர்வதே ஒரு திர்யக்குக்குப் பயனாவதே! என்று ஈடுபடுகிறார். (வரியரவம்) வரிகளையுடைய பாம்பு. திருவேங்கடமுடையானின்

பட்டிமேய்கிற பர்வதோபமமான ஆனையானது மணிகளின் ஒலியைக்கண்டு சலித்து மலைபேர்ந்தாப்போலே பேர்ந்து போம்படியாக எறிந்த ஒருமலையிலே ஒருமலை தாக்கினாப் போலேயிருக்கும் பெருமையையுடைய மாணிக்கத்தை, யானையின் கறுப்பும், மணியின் புகரும் தன்னில் வாசி தோற்றுகையாலே, மேக$_4$த்தோடே கூடினதொரு மின்னு கக்கருதி, தத$_3$நந்தரப$_4$ாவியான இடிக்கு பயப்பட்டு, நிர்ப$_4$ யஸ்த$_2$ாநமான புற்றிலே சென்று ப்ரவேஶிக்கும் சிறப்பை யுடைய திருமலையே, ஆக்கரான தே$_3$வர்களன்றியே ஸர்வோத்க்ருஷ்டரான நித்யஸூரிகள் எங்களதென்று மேல் விழுந்து அத்யபி$_4$நிவிஷ்டராய் அநுப$_4$விக்கும் தேசம்.

திவ்யாயுதங்களைப்போலே பாம்பின் வரிகளும் இவர்க்கு உத்தேச்யமா யிருக்கிறபடி. ஊரும் வரியரவம் புற்றடைவதற்குக் காரணத்தைச் சொல்லுகிறது மேலே,–(ஒண்குறவர்) சிறந்த குறவர். இவர்களுக்குச் சிறப்பாவது,–"இவர்களுடைய பாட்டன் முப்பாட்டன்களிலே ஒருவன் திருமலையைவிட்டுக் கீழேயிறங்கினான்" என்னும் பழியில்லாமலிருக்கை. (மால் யானை பேர எறிந்த பெருமணியை) குறவர்களுடைய புனங்களில் வந்து பட்டிமேய்கிற மலைபோன்ற யானையானது பேர்ந்துபோம்படியாகக் குறவர் எறிந்த பெரிய மணியை. (மால் யானை) மலைபோல் பெரிய யானை. (பேர எறிந்த) மலைபேர்ந்தாற்போலே பேர்ந்துபோம்படி எறிந்த. (பெரு மணியை) கருமலைமேல் வெள்ளிமலையை எறிந்தாற்போலே பெருத்திருக் கும் மணியை எறிந்தபடி. (பெருமணியை) பெருவிலையுள்ள மணியை என்றுமாம். குறவர்கள் யானையை விரட்டக் கற்களைவிட (விலையுயர்ந்த) மணியே எளிதில் அகப்படும் என்று தோற்றுகையாலே, திருமலையின் செல்வச்சிறப்பு உணர்த்தப்படுகிறது. (காருடைய மின்னென்று புற்றடை யும்) யானையின் கறுப்பையும், மணியின் ஒளியையும்கண்டு மேகத்தோடு கூடிய மின்னலென நினைக்கிறது பாம்பு. மின்னல் தோன்றினால் சில கணங்களில் இடியிடிக்கும். இடிக்கு பயப்படுவது பாம்பு. ஆகையாலே 'இடி இடிக்கப்போகிறது' என்று பயந்து தன்னிலமாகையாலே பயமற்ற விடமான புற்றை அடைகிறது ஊரும் வரியரவம். (வேங்கடமே மேலசுரர் என்னென்ற மாலதிடம்) இப்படிப்பட்ட சிறப்பையுடைய திரு மலையே மிகச்சிறந்த நித்யஸூரிகள் 'எங்களுடையது' என்று அபிமானிக் கும் இடம். (மேலசுரர்) மேலான சுரர்; அழியக்கூடிய இந்திராதி தேவரைப்போலன்றியே, அழியாதவராய், "யத்ர பூர்வே ஸாத்$_3$யா: ஸந்தி

''என்னென்ற மாலதிடம்'' என்று எங்களது, எங்களது என்று அபி$_4$நிவேசிக்கைக்கு விஷயமான ஸ்த$_2$ாநம் என்றபடி. 'என்' என்கிறவித்தை மாலோடே கூட்டி எங்களுக்கு ப்ராப்யமென்னப்பட்ட ஸர்வேச்வரனதான இடம் என்றுமாம். முற்பட்ட யோஜனைக்கு 'மால்' என்று அபி$_4$நிவேசத்தைச் சொல்லுகிறது.

39. **இடந்தது பூமி யெடுத்தது குன்றம்**
கடந்தது கஞ்சனை முன்னஞ்ச—கிடந்ததுவும்
நீரோத மாகடலே நின்றதுவும் வேங்கடமே
பேரோத வண்ணர் பெரிது.

பதவுரை:—பேர் ஓதம் வண்ணர்-பெரிய கடல் போன்ற திருநிறத்தை உடைய எம்பெருமான், **முன்**—முற்காலங்களில், **இடந்தது** — (வராஹரூபியாகக்) குத்தியெடுத்தது, **பூமி**—உலகமாகும், **எடுத்தது**—குடையாக எடுத்தது. **குன்றம்**—கோவர்த்தனமலையாகும், **அஞ்ச கடந்தது**—பயந்து அழிந்து போகும்படி செய்தது, **கஞ்சனை** — கம்ஸனையாகும்;

தே$_3$வா:'' [பு-ஸூ] [யாதொரு பரமபதத்தில் ஸநாதனரான (பரமப்ராப்யராகையாலே) ஸாத்$_4$யரெனப்படும் தே$_3$வர்கள் உள்ளனரோ] என்று அநாதிஸித்தராயுள்ள அநந்தகருடாதிகளான நித்யஸூரிகளைச் சொல்லுகிறார். (என்னென்ற மாலதிடம்) நித்யஸூரிகள் 'எங்களுடைய இடம். எங்களுடைய இடம்' என்று மேல்விழுந்து அபிமானத்தை வைக்குமிடம். மால்-அன்பு; அபிமானம். ''க்ண்ணாவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு-வேங்கட விண்ணோர்வெற்பனே'' [திருவாய் 1-8-3] ''வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்யநின்றான்'' [அமலனாதி-3] என்று மற்றையாழ்வார்களும் நித்யஸூரிகள் திருமலையிலே மண்டியிருப்பதைச் சொன்னார்களன்றோ. (மேலசுரர் என்னென்ற மாலது இடம்) நித்யஸூரிகளால் 'எங்களுக்கு ப்ராப்யன்' எனப்பட்ட திருமாலுக்கு ப்ராப்யமாயிருக்கும் இடம் என்றும் பொருள் கொள்ளலாம், முதற்பொருளில் மால் என்றது அபிமானத்தையும், இரண்டாவதான இப்பொருளில் 'மால்' என்று மிகப்பெரியவனான ஸர்வேச்வரனையும் சொல்லுகிறது. ''எம்மென்னும் மாலதிடம்'' என்றும் பாடம். பொருள் வேறுபாடில்லை.

கிடந்ததுவும்—திருக்கண்வளர்ந்தருளினதும், **நீர் ஓதம் மா கடல்**–நீர் நிரம்பியதும்,அலையெறிவதுமான பெருங்கடலிலே; **பெரிது நின்றதுவும்**—எப்போதும் நின்றதுவும், **வேங்கடமே**–திருமலையிலேயாகும்.

அவதாரிகை:—மற்றுமுள்ள தி$_3$வ்யதே$_3$ஶங்களிற்காட்டில் திருமலைக்கு இத்தனை யேற்றமென்? என்ன: 'அவையெல்லாம் ஒருதட்டு இதுவொரு தட்டு' என்னும்படி அவன்விரும்பின தேசமன்றோ திருமலை என்கிறார்.

உரை:— பெரிய திரைக்கிளர்த்தியையுடைய கடல் போன்ற வடிவையுடையவர். வராஹவேஷங்கொண்டு ப்ரளயத்திலே முழுகி இடந்தெடுத்துக்கொண்டேறினது பூ$_4$மி; க்ருஷ்ணவேஷங்கொண்டு வர்ஷாபத்தைப் பரிஹரிக்கைக்காக எடுத்து த$_4$ரித்துக்கொண்டுநின்றது கோ$_3$வர்த்த$_4$ந பர்வதம்; உறவிலேயழைத்து நலியநினைத்த முற்காலத்திலே கண்டகாட்சியிலே நடுங்கும்படியாகக் கம்ஸனை ஆக்ரமித்து முடித்து விட்டது; இவ்வவதாரங்களுக்கு அடியாக மிக்க

அவதாரிகை:–மற்றுமுள்ள திவ்யதேசங்களிற்காட்டிலும் திருமலைக்கு நித்யஸூரிகளும் விரும்பும்படியான இத்தனை ஏற்றமென்ன? எனில்: அவையெல்லாம் ஒருதட்டு, இத்திருமலை ஒருதட்டு என்னும்படி அவன் விரும்பிய திவ்யதேசமன்றோ இது என்கிறார்.

வ்யா:—(பேரோதவண்ணர்) பெரிய அலைகள் எறியாநிற்கும் கடல் போலே காண்பார் கண்களைக் குளிரவைக்கும் திருநிறத்தையுடையவர். (இடந்தது பூமி) பிரளயத்தாலே உலகம் மறைந்தபோது வராஹவேஷங்கொண்டு பிரளயத்திலேமுழுகி, குத்தியெடுத்துக்கொண்டு ஏறினது பூமியையாகும். (எடுத்தது குன்றம்) இந்திரனாலே கல்மழையாகிற ஆபத்து வந்தபோது, கண்ணனாகிற உருவத்தோடு கல்மழையினின்று ஆயர்பாடியைக் காப்பதற்காக எடுத்துத் தாங்கிநின்றது கோவர்த்தனகிரியை. (அஞ்சமுன் கடந்தது கஞ்சனை) அவ்வவதாரத்திலேயே, மாமன் என்னும் உறவைச் சொல்லியழைத்து அழிக்கநினைத்த முற்காலத்திலே, "கஞ்சன் வயிற்றில் நெருப்பென்ன நின்ற" [திருப்பாவை-26] என்கிறபடியே கண்ட காட்சியிலே நடுங்கும்படியாக மேலேறி அழித்தது கம்ஸனையாகும்.

நீரையுடைத்தாய் அலையெறிகிற பெரிய திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளிற்று. இங்கு அப்படியன்று. ஸமஸ்தாவதாரங்களிலுமுள்ள குணசேஷ்டிதங்களடங்கலும் ப்ரகாசிக்கும்படி உகப்புடனே என்றுமொக்க மிகவும் நின்றருளிற்று திருமலையிலே கிடீர்.

40. பெருவில் பகழிக் குறவர்கைச் செந்தீ
வெருவிப் புனந்துறந்த வேழம்—இருவிசும்பில்
மீன்வீழக் கண்டஞ்சும் வேங்கடமே மேலசுரர்
கோன்வீழக் கண்டுகந்தான் குன்று.

(கிடந்ததுவும் நீரோத மாகடலே) இவ்வவதாரங்களுக்கெல்லாம் மூலமாகக் கண்வளர்ந்தருளியதும், மிகுந்த நீரையுடையதாய்; அலையெறிகிற பெரிய திருப்பாற்கடலிலேயாகும். இவையெல்லாம் ஒவ்வொரு சமயத்திலே பாக்கியசாலிகளான ஒரு சிலரே கண்டு அநுபவிக்கக்கூடியவை; எல்லார்க்கும் எல்லாக்காலத்திலும் கண்டு அநுபவிக்கக்கூடிய நிலை வேங்கடத்திலேயே என்கிறார் கடைசியாக,–(பெரிது நின்றதுவும் வேங்கடமே) எல்லா அவதாரங்களிலும் உள்ள குணங்களையும் செயல்களையும் எல்லாக் காலத்திலும் எல்லோரும் கண்டு அநுபவிக்கும்படியாக மிகவும் நின்றருளியது திருமலையிலேயேகிடீர்.

"ரக்ஷகனான அவன் நமக்கு ப்ரளயத்தால்வந்த நலிவுதீர பூமியிடந்தான்; இந்திரனால்வந்த நலிவுதீரக் குன்றமெடுத்தான்; கம்ஸனால்வந்த நலிவுதீர அவனைக் கடந்தான். கூப்பீடுகேட்கவும் அவதாரமெடுக்கவும், நீரோதமாகடல் கிடந்தான்; என்றும் அனைவர்க்கும் முகங்கொடுக்கத் திருமலையில்நின்றான். இப்படி ரக்ஷ்யவஸ்துவான நம்மிடம் ஸ்நேஹத்தாலே அவன் செய்யாத செயலில்லை. நாமோவெனில், பெருமானை உகக்கிறோம் என்று கூறிக்கொண்டே சோற்றை உகக்கிறோம். சோற்றையாவது நெஞ்சார உகக்கிறோமா என்று பார்த்தால் அதுவுமில்லை, சோறு பிடிக்காமல் சிலநாள் பட்டினி கிடக்கிறோம். ஸ்திரீகளை உகக்கிறோம் என்று எண்ணிக்கொண்டே சதுரங்கமாடுகிறோம்; உறங்குகிறோம். எந்தவிஷயத்திலும் நமக்கு உண்மையான அன்பில்லை. இதுவே நமக்கும் ஸர்வேச்வரனுக்குமுள்ள வாசி" என்னும் இப்பாசுரத்தின் ஸாரார்த்தத்தைப் பெரியவாச்சான்பிள்ளையின் பரமபோக்யமான வ்யாக்யான ஸ்ரீஸூக்திகள் தெரிவிக்கின்றன.

பதவுரை:—**பெரு வில்**—*பெரிய வில்லையும்*, **பகழி**—*அம்புகளையும் உடைய*, **குறவர்**-*வேடர்களுடைய*, **கை**-*கையிலே பிடித்த*, **செம் தீ**—*சிவந்த நெருப்புக்கு*, **வெருவி**—*அஞ்சி*, **புனம் துறந்த**—*வயலை விட்டு நீங்கின*, **வேழம்**—*யானை*, **இரு விசும்பில்**—*பரந்த ஆகாயத்திலிருந்து*, **மீன் வீழ**—*நக்ஷத்திரம் விழ*, **கண்டு**—*அதைப்பார்த்து*, **அஞ்சும்**—(*குறவர்கள் வீசி எறிந்த கொள்ளிக்கட்டையென்று*)*பயப்படுமிடமான*, **வேங்கடமே**—*திருமலையே*, **மேல்**—*முற்காலத்தில்*, **அசுரர் கோன் வீழ**—*அரக்கர்களுக்கு அரசனான ஹிரண்யன் முடிந்து விழ*, **கண்டு**—(*அதைப்*)*பார்த்து*, **உகந்தான்**—*மகிழ்ந்தவனுடைய*, **குன்று**—*திருமலையாகும்*.

அவதாரிகை:—*ஆஶ்ரிதவிரோதி$_4$நிரஸநம்பண்ணி உகக்குமிதுவேகிடீர் அவன் இங்குத்தை நித்யவாஸத்துக்கு ப்ரயோஜநமாக நினைத்திருப்பது என்கிறார்.*

உரை:—**"अवष्टभ्य महद्धनुः"** (*அவஷ்டப்$_4$ய மஹத்$_3$த$_4$நு:*) *என்கிறபடியே ஒருகையிலே எடுத்துப்பிடித்த பெரியவில்லையும் வாயம்புகளையும் உடையரான திருக்குறவர், மற்றக் கையிலே வழியில் வெளிச்செறிப்புக்காகப் பிடித்த சிவந்த நிறத்தையுடைத்தான சூள்நெருப்பின் ஒளிவழியே, இவர்கள் கையும் வில்லும் பிடித்த சூளுமாய்க்கொண்டு ஆயத்தப்*

அவதாரிகை:—*அடியாருடைய விரோதிகளை அழித்து உகக்கும் இதுவேயன்றோ இத்திருமலையில் நித்யவாஸத்துக்கு அவன் பயனாக நினைத்திருப்பது என்கிறார்.*

வ்யா:—(*பெருவில் பகழிக்குறவர்*) "ஆலிக$_2$ந்தமிவாகாசமவஷ்டப்$_4$ய மஹத்$_3$த$_4$நு:" [*ரா-யு 100-12*] [*ஆகாயத்தை அளாவிநிற்கும் பெருவில்லை அழுத்திப்பிடித்துக்கொண்டு நிற்கும் ராமனை*] *என்கிறபடியே ஸ்ரீராமபிரானைப்போலே ஒரு கையாலே அழுக்கிப் பிடிக்கவேண்டும்படியான பெருமையையுடைய வில்லையும், அதற்கேற்ற பெருவாயையுடைய அம்புகளையும் உடைய குறவர்கள்.* (*கைச் செந்தீ*) *மற்ற கையினாலே இருண்ட திருமலைப்புனங்களிலே வழிதெரிவதற்காகப் பிடித்த கைப்பந்தத்தின் சிவந்த தீ.* (*செந்தீ வெருவிப் புனம் துறந்த வேழம்*) *அந்த நெருப்புக்கு பயந்து புனத்தைவிட்டோடும் யானை.* (*குறவர்கைச் செந்தீ வெருவி*)

பட்டு வருகிறபடியைக்கண்டு, நம்மை நலியவருகிறார்கள் என்று பயப்பட்டு, ஒருகாலும் இங்கு வரக்கடவோமல்லோம் என்று புனத்தை ஸங்கல்பித்துப்போன ஆனையானது, போமிடந்தன்னிலும், பரப்பையுடைத்தான ஆகாசத்தி னின்றும் நக்ஷத்ரங்கள் வீழ, அத்தைக்கண்டு, நமக்கு அவ்வருகு ஓரடியிடவொண்ணாதபடி பூ$_4$மியிலே நெருப்பை விழவிட்டார்கள் என்று அவ்வருகு போகமாட்டாமல் புனத்திலே புகமாட்டாமல் நடுவேநின்று நடுங்கும்படியான திருமலையே, முன்பொருகாலத்திலே அஸுரராஜனென்று

இருட்டில் வழிதெரிவதற்காகவே குறவர்கள் பந்தம்பிடித்திருத்திருக்கிறார் கள்; யானையை விரட்டுவதற்காகவல்ல; "வைப்பன் மணிவிளக்கா மாமதியை மாலுக்கென்று எப்போதும் கைநீட்டும் யானையை எப்பாடும் வேடுவளைக்கக் குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே" [நான்-திருவ 46] என்கிறபடியே திருமலைக்குப் புறம்புள்ள வேடர் யானையை வளைத்தாலும் அவர்களை எதிர்க்கவே வில்லெடுப்பவர்களன்றோ திருமலைக்குறவர்கள். (பெருவில்புகழிக்குறவர் கைச் செந்தீ வெருவி) யானைக்கு நெருப்பென் றாலே பயம்; அதோடு தீயின் ஒளியில் பெருவில் பகழிகளையும் கண்டு விடுகிறது. பெரும்பயம் ஏற்பட்டுவிடுகிறது. 'இனி எக்காரணத்தைக் கொண்டும் இப்புனத்தினுள் நுழையக்கூடாது' என்னும் உறுதியான ஸங் கல்பத்தோடு புனத்தைத் துறந்தேவிடுகிறது யானை. (இருவிசும்பில் மீன் வீழக் கண்டஞ்சும்) பயத்தாலே புனந்துறந்து சென்ற யானைக்கு வெளியிலேயும் பெரும்பயம் ஒன்று காத்துநிற்கிறது. மிகப்பரந்த ஆகா சத்திலிருந்து எரிநட்சத்திரங்கள் விழுகின்றன. 'புனத்தைக் காக்கும் குறவர்கள், கொள்ளிக்கட்டையைக்காட்டி நம்மைத் துரத்தியதோடு நில் லாமல், வெளியிலும் செல்லமுடியாதபடி பரண்களிலேயிருந்து நம்மீது கொள்ளிக்கட்டையை வீசுகிறார்கள்' என்று கருதிய யானை வெளியிலும் செல்லமாட்டாமல், உள்ளேயும் புகமாட்டாமல் அந்தரத்திலே அஞ்சி நிற்கிறது. (அஞ்சும் வேங்கடமே) "வேங்கடங்கள்" [திருவாய் 3-3-6] என்று பயம் முதலானவற்றைப் போக்கடிக்குமிடம் வேங்கடம். ஆனையானது அஸ்தாநே பயசங்கைபண்ணி அஞ்சிற்றேயொழிய, உண்மையில் யானைக்கு ஒருபயமுமில்லை. "ப$_4$யம் ப$_4$யாநாமபஹாரிணிஸ்தி$_2$தே" [வி-பு 1-17-36] என்கிறபடி பயத்தையெல்லாம்போக்கும் பரமபுருஷன் நிற்குமிடமன்றோ இது. அஸ்தாநே பயசங்கைபண்ணிப் பரமபுருஷனுக்கு மங்களாசாஸநம் செய்வார் நிறைந்த இடமாகையாலே, இதுவும் அஸ்த$_2$ாநே பயசங்கை நிறைந்ததாயுள்ளதுபோலும்!

விருத்தித்திரிந்த ஹிரண்யன் பிணமாய் விழுந்து போகக் கண்டு, 'சிறுக்கன் விரோதி போகப்பெற்றோம்' என்று உகந்த ஸர்வேச்வரன், பின்புள்ள ஆச்ரிதவிரோதி₄களையும் தீர்க்கவேணும் என்று வர்த்திக்கிற மலை.

41. குன்றனைய குற்றஞ் செயினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக வென்னெஞ்சே—என்றும்
புறனுரையே யாயினும் பொன்னாழிக் கையான்
திறனுரையே சிந்தித் திரு.

பதவுரை:—என்—என்னுடைய, **நெஞ்சே**—மனமே! **இன்று முதலாக**—இப்பொழுது துடங்கி, **என்றும்**—எப்பொழுது, **புறன் உரையே ஆயினும்**—வெளிக்குச் சொல்லும் வார்த்தையாயிருந்தாலும், **பொன் ஆழி கையான் திறன் உரையே**—அழகிய சக்கரத்தைக் கையிலேகொண்ட எம்பெருமான் விஷயமான பேச்சையே, **சிந்தித்து இரு**—நினைத்திருப்பாயாக; (அப்படியிருந்தால்) **குன்று அனைய**—மலையைப் போல் பெருத்த, **குற்றம் செய்யினும்**—பாபங்களைச் செய்தாலும், **குணம் கொள்ளும்**—(அவைகளைக் காணாமல் எம்பெருமான்) குணங்களையே திருவுள்ளம் பற்றுவான்.

அவதாரிகை:—இப்படி அவன் ஆச்ரிதவிரோதி₄நிரஸந ஶீலனாகிலும் தோ₃ஷமே வேஷமான நமக்கு அவனைச் சென்று

இது பயங்கொள்வதற்கே இடமில்லை, அவனுடைய தன்மையை நோக்கினால் என்கிறார் மேலே,-(மேல் அசுரர்கோன் வீழக் கண்டுகந்தான் குன்று) முற்காலத்தில் அசுரர்தலைவன் என்று விருத்தித்திரிந்த பாதக வதாபசாரிகளில் தலைவனான இரணியன், செத்துவிழக்கண்டு, 'பரமபாக வதனான சிறுவன் பிரகலாதனின் விரோதி போகப்பெற்றோம்' என்று உகந்த ஸர்வேச்வரனுடைய மலையாகும் இத்திருவேங்கடம். (உகந்தான் குன்று) ஆச்ரிதவிரோதி அழிந்ததைக்கண்டு உகந்தவன் பின்புள்ள ஆஸ்ரித விரோதிகளையும் அழிக்கவேண்டுமென்று நித்யவாஸம் செய்கிற மலை. ஆகையால் அஸ்தா₂நே பயசங்கையொழிய யானைக்கு பயமொன்றும் வர இடமில்லை என்று கருத்து.

அவதாரிகை:—"இப்படி அவன் அடியார்களின் விரோதிகளை அழிப்பதையே இயற்கையாகக் கொண்டவனாயினும், தோஷத்தையே வேஷமாகக்

அணுகப்போமோ? என்று திருவுள்ளம் பயப்பட, "உனக்கு ஆபி$_4$முக்$_2$யமாத்ரமுண்டாகவே, அவன் நம் குற்றத்தையடைய நற்றமாகக்கொள்ளும்; அஞ்சவேண்டா" என்கிருர்.

உரை:—என் வழியே ஒழுகும்படி எனக்குப்பாங்கான நெஞ்சே! ஸர்வகாலத்திலும் ஸஹ்ருத$_3$யமாகவன்றிக்கே, கேவலம் வாங்மாத்ரஸித்$_3$த$_4$மான புறப்பேச்சேயாகிலும், அஹ்ருத$_3$யோக்தியை ஸஹ்ருத$_3$யமாம்படி பண்ணவற்ருன அழகிய திருவாழியும் கையுமான சேர்த்தியழகையுடைய ஸர்வேச்வரனிடையாட்டமாய், மித்ரப$_4$ாவமடியாக, **"नत्यजेयं"** **(ந த்யஜேயம்)** என்னும்படியான சொல்லேயே அநுஸந்தித்துக்கொண்டு, **"स्थितोऽस्मि" (ஸ்தி$_2$தோऽஸ்மி)** என்னும்படி நிர்ப்ப$_4$ரஞய்க்கொண்டு இரு. இவ்வாநுகூல்யலேசமுண்

கொண்ட நமக்கு அவனைச் சென்று அணுகமுடியுமோ?" என்று ஆழ்வாருடைய திருவுள்ளம் பயப்பட, "உனக்கு அவனிடம் ஈடுபாடுமாத்திரமே உண்டாஞலும் அவன் நம் குற்றங்களையெல்லாம் நன்மையாகக் கொள்ளுவன்; அஞ்சவேண்டியதில்லை" என்கிருர்.

வ்யா:—(என் நெஞ்சே) நான் ஒன்று சொன்ஞல் நீயொன்று சொல்லாமல், எனக்கு பவ்யமாயிருக்கும் நெஞ்சே! (என்றும் புறஞுரையேயாயினும்) நீ சொல்லும் வார்த்தைகள் என்றும் நெஞ்சாறச் சொல்லுமவையாயல்லாமல், "பொய்யே கைம்மை சொல்லிப்புறமே புறமேயாடி" [திருவாய் 5-1-1] என்கிறபடியே பொய்ப்பேச்சேயாஞலும், அவன் விஷயமான வார்த்தைகளையே நினைப்பாய். (பொன்ஞழிக் கையான்) நீ பொய்ப்பேச்சாகப் பேசிஞலும், அதை மெய்ப்பேச்சாக்கவல்ல பொன்ஞழியன்ரோ அவனோடு கூடியிருக்கிறது. (பொன்ஞழிக்கையான் திறஞுரையே) அழகிய சக்கரத்தையுடையவன் விஷயத்திலேயான வார்த்தைகளையே. அன்றிக்கே பொன்ஞழிக்கையாஞல் அருளிச்செய்யப்பட்டதான, **"மித்ரப$_4$ாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கத$_2$ஞ்சந தோ$_3$ஷோ யத்$_3$யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத$_3$க$_3$ர்ஹிதம்"** [ரா-யு 18-3] [நண்பன் என்னும் வேஷத்தோடு வந்தடைந்தவனையும் நான் ஒருபோதும் விடமாட்டேன். அவனுக்குக் குற்றமிருந்தாலும் இருக்கட்டுமே. நல்லோர்களுக்கு இது இகழத்தக்கதன்று] என்னும் திறஞுள்ள உரையையே சிந்தித்திருப்பாயாக என்றுமாம். (சிந்தித்து இரு) இவ்வார்த்தையையே அநுஸந்தித்துக்கொண்டு, **"ஸ்தி$_2$தோஸ்மி க$_3$தஸந்தே$_3$ஹ:"** [கீதை18-73] [ஐயம் நீங்கப்பெற்றவஞய் நிலைநிற்கிறேன்]

டான இன்று முதலாக, மலைபோலே ஸ்வயத்நத்தால் சலிப்பிக்கவொண்ணுதபடி பெருத்து உறைத்திருக்கிற குற்றங்களைப் பத்தும் பத்தாகச் செய்தாலும், அதிமாத்ர வத்ஸலனானவன், "செய்தாரேல் நன்று செய்தார்" என்னும் படி குணமாகக் கொள்ளும்.

42. திருமகளும் மண்மகளு மாய்மகளும் சேர்ந்தால்
திருமகட்கே தீர்ந்தவா றென்கொல் — திருமகள்மேல்
பாலோதம் சிந்தப் படநா கணைக்கிடந்த
மாலோத வண்ணர் மனம்.

பதவுரை:—**பால் ஓதம் சிந்த**—பாற்கடலில் சிறு துளிகள் சிதறி விழும்படியாக, **படம் நாகணை கிடந்த**—படத்துடன் கூடிய திருவநந்தாழ்வானாகிற படுக்கையிலே பள்ளிகொண்ட **மால் ஓதம் வண்ணர்**—பெரிய கடல்போன்ற திருமேனியை யுடைய எம்பெருமானுடைய, **திரு மகள் மேல் மனம்**—பெரிய பிராட்டியார் மேல் (அன்புபூண்ட) திருவுள்ளம், **திருமகளும் மண் மகளும் ஆய் மகளும் சேர்ந்தால்**—ஸ்ரீதேவியும், பூதேவி யும், நீளாதேவியும் (எம்பெருமானோடு) கலந்து பரிமாறும் போது, **திருமகட்கே தீர்ந்த ஆறு என்கொல்**—பெரியபிராட்டி யாரிடத்திலேயே அற்றுத் தீர்ந்திருப்பது என்ன ஆச்சரியம்!

என்கிறபடியே கவலையற்றவனாய் நிலைநிற்பாயாக. (இன்று முதலாக) இப்படி அவனிடத்திலே உனக்குச் சிறிது ஈடுபாடு உண்டான இன்றுமுத லாக அவன் "மித்ரபாவேந" என்னும் சுலோகத்திற்படியே உன்னிடத் திலே நடந்துகொள்ளும். அதாவது ஏதென்னில்: (குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும்) தன் முயற்சியாலே அசைக்கமுடியாததாகை யால் மலைபோலேயிருக்கும் பெரிய குற்றங்களைச் செய்தாலும் அவற்றைக் குணமாகக் கொள்ளுவன். "தோஷம் இருந்தாலும் இருக்கட்டுமே; நல்லோர் களுக்கு இது இகழத்தக்கதன்று" என்றவனுகையாலே. (குற்றம் செயினும்) அறியாமல் அறைகுறையாய்ச் செய்ததன்று; மனப்பூர்வமாகப் பரிபூர்ண மாகக் குற்றம்புரிந்தாலும், (குணங்கொள்ளும்) "செய்தாரேல் நன்று செய்தார்" [பெரியாழ்திரு 4-9-2] என்று கூறும் மஹாவாத்ஸல்யத்தை உடையவனுகையாலே செய்தகுற்றத்தை நற்றமாகவே கொள்வான். (குற்றம் செயினும் குணங்கொள்ளும்) குன்றுபோன்ற குற்றம்செய்தாலும் அதைக் கணிசியாமல் கடுகளவுள்ள குணத்தையே திருவுள்ளம் பற்றுவான் என்றும் கொள்ளலாம்.

அவதாரிகை:—இப்படி குற்றத்தை ஸ்வதந்த்ரனானவன் குணமாகக் கொள்ளக்கூடுமோ? என்னில்: "**न कश्चिन्नापराध्यति**" **(ந கஶ்சிந்நாபராத்$_4$யதி)** என்னும் பிராட்டிமார் மூவருமே அங்கே கூடியிருக்கையாலே கூடும் என்கிறார்.

உரை:—(பாலோதம்) திருப்பாற்கடலில் சிறு திவலைகளானவை ஶ்ரமஹரமாம்படி துடைகுத்துவாரைப்போலே நாலுபாடும் சிதறிவிழ, ஸ்வஸ்பர்ஶத்தாலே விகஸிதமான ப$_4$ணங்களையுடைய திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே பள்ளிகொண்டருளுகிற பெரியகடல்போலே ஶ்ரமஹரமான

அவதாரிகை:—ஸ்வதந்திரனான ஸர்வேச்வரன் இப்படியாகக் குற்றத்தை குணமாகக் கொள்ளக்கூடுமோ? என்னில்: "**பாபாநாம் வா சுப$_4$ாநாம் வா வத$_4$ார்ஹாணாம் ப்லவங்க$_3$ம கார்யம் கருணமார்யேண ந கச்சிந்நாபராத்$_4$யதி**" [ரா-யு 116-44] [வானரனே! பாபிகளாயினும், புண்ணியசாலிகளாயினும், கொல்லத்தக்கவராயினும் அவர்கள் திறத்து நல்லோனாயிருப்பவனால் கருணை காட்டப்படவேண்டும். குற்றம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.] என்று கூறும் பிராட்டிமார் மூவரும் அவனோடு கூடியிருக்கையாலே அவன் குற்றத்தை குணமாகக்கொள்வது கூடும் என்கிறார்.

வ்யா:—இப்பாசுரத்துக்கு எம்பெருமானாருடைய சிஷ்யரான திருமலை அநந்தாழ்வான் ஒருவிதமாகவும், கூரத்தாழ்வான் திருக்குமாரரான பட்டர் மற்றொரு விதமாகவும் பொருள் உரைத்தனர். அனந்தாழ்வான் அருளிய பொருளாவது:— "திருமகட்கே தீர்ந்தவாறு என்கொல்? மண்மகட்கே தீர்ந்தவாறு என்கொல்? ஆய்மகட்கே தீர்ந்தவாறு என்கொல்" என்று மூன்று பிராட்டிமாரிடத்திலும் 'தீர்ந்தவாறு என்கொல்" என்பதைக் கூட்டி, ஒவ்வொரு பிராட்டியிடத்திலும் எம்பெருமான் ஸம்ச்லேஷிக்கும்போது, 'இப்பிராட்டியிடமே எம்பெருமான் தன்முழுமனத்தோடு ஈடுபட்டிருக்கிறான்' என்று காண்பார் நினைக்கும்படியிருப்பது என்ன ஆச்சரியம் என்று கருத்து. ஸம்ஸாரியான ஸௌபரியென்னும் முனிவன் பல கன்னியரை மணம் புரிந்துகொண்டு, பல சரீரமெடுத்து ஒவ்வொருவரையும் உகப்பித்து, ஒருமனைவியோடு அவன் இன்புறுவதைக் காண்பார்க்கு "இவன் இவளையன்றி வேறொருத்தியை அறியான்" என்று கூறும்படியிருந்தான் என்று இதிஹாஸங்களிலே கேளாநின்றோம். பரமபுருஷனுக்கு இது கூடாமையில்லையே. இனி, பட்டர் நிர்வஹித்தபொருளைக் காண்போம்.

வடிவையுடையனுன ஸர்வேச்வரனுடைய பெரியபிராட்டியார்மேலே அத்யபி₄நிவிஷ்டமாய்ச் செல்லுகிற திருவுள்ளமானது குற்றத்தைப் பொறுப்பிக்கும் பெரியபிராட்டியாரும் பொறை விளையும் தறையான ஸ்ரீபூமிப்பிராட்டியாரும், குற்றம் கிளராதபடி திருவுள்ளத்தைத் திரைகொள்ளும் கோ₃பகுலே2வதீர்ணையான நப்பின்னைப்பிராட்டியும் ஸாதரமாக ஸம்ஶ்லேஷித்தால், * புஷ்பாங்க₃ராக₃ாதிகளோபாதி

(பாலோதம் சிந்த) திருப்பாற்கடலில் சிறு திவலைகளானவை துடைபிடித்து விடுவாரைப்போலே எம்பெருமானுடைய திருமேனியிலே நாற்புறமும் சிதறிவிழ. அநந்தாழ்வான் நிர்வாகத்திலே, "திருமகள்மேல் பாலோதம் சிந்த" என்று கூட்டி, "திருவடியைப் பிடிக்கும் திருமகள் மேல் திருப்பாற்கடல் திவலைகள் சிதற" என்று பொருள் கொள்ளவேணும். பட்டர் நிர்வாஹத்திலே "திருமகள்மேல் மனம்" என்று மேலோடே கூட்டிப் பொருள்கொள்ளவேணும். (படநாகணைக்கிடந்த) எம்பெருமானுடைய திருமேனிஸ்பரிசத்தாலே விரித்த படத்தையுடைய திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே பள்ளிகொண்டருளும். (மாலோதவண்ணர்) பெரிய கடல்போலே கறுத்துக்குளிர்ந்த வடிவையுடைய பரமபுருஷனுடைய. (திருமகள்மேல் மனம்) பெரியபிராட்டியார்மேலே பெருங்காதல் கொண்ட திருவுள்ளம். (திருமகளும்) "குற்றம் செய்யாதவன் ஒருவனுமில்லையே" என்றுகூறிக் குற்றத்தைப் பொறுப்பிக்கும் பெரியபிராட்டியும். (மண்மகளும்) 'குற்றத்தைக்கண்டுவிட்டுப் பொறுக்கவேணுமோ?' என்று குற்றத்தையே காணுமல் பொறுமையே வடிவெடுத்த பூமிப்பிராட்டியும். (ஆய்மகளும்) காணுதிருப்பதோடன்றியில், குற்றத்தையே நற்றமாகக் கொள்ளுமவளாய், குற்றம் பரமபுருஷனின் நெஞ்சில் படாதபடி அவனுடைய திருவுள்ளத்துக்குத் தன் இன்பப்பெருக்காகிற திரையிடும் ஆய்க்குலத்திலவதரித்த நப்பின்னைப்பிராட்டியும். (சேர்ந்தால் திருமகட்கே தீர்ந்தவாறு என்கொல்) இப்படி மூன்றுபிராட்டிமாரும் எம்பெருமானோடு ஸம்ச்லேஷிக்கின்றபோதிலும், எம்பெருமானுடைய திருவுள்ளம் பெரியபிராட்டியாருக்கே அற்றுத்தீர்ந்திருக்கிறது என்று சொல்லும்படியிருப்பது என்ன ஆச்சரியம்! மூவரிடத்திலும் கலந்தாலும், ஒருத்திக்கே அற்றுத்தீர்ந்தவன் என்பது எப்படியெனில்: முதலில் இங்கு கலவி என்பது தாழ்ந்தவர்களான நம்போல்வாருடைய சிற்றின்பமாகிற ஆண்பெண் உறவன்று. பரமபுருஷனுன பரமாத்மா ஸ்த்ரீப்ராயரான ஜீவர்களுடன் அணைந்து மகிழ்ந்து மகிழ்விக்கும் பேரின்பமேயாகும். அதிலே பரமபுருஷன் பரமநாரியான பெரியபிராட்டியாரோடு அணைந்து இன்புறும்போது பூமிநீளா

பே₄ாகே₃ாபகரண கோடியிலே நின்று பிராட்டியோடே கலக்குமிடத்தில் ஸாபத்ந்யக₃ந்த₄மற அல்லாத பிராட்டிமார் எடுத்துக் கைநீட்டுகையாலும், அவர்களோடே கலக்குமிடத்தில் தன்முலையிலும் இடையிலும் கலந்தாப்போலே பிராட்டி நினைத்திருக்கையாலும் பெரியபிராட்டியார்க்கே அற்றுத்தீர்ந்ததாயிருக்கிறபடி எங்ஙனேதான்! இத்தால் மூவர்க்கும் உண்டான ஐகரஸ்யம் சொன்னபடி.

தேவிகள் புஷ்பம், சந்தனம் முதலானவற்றைப்போலே அவர்களுடைய போகத்துக்கு உபகரணமாய் நிற்பர்கள். அவர்களுடைய ப்ரணயரஸம் (காதற்பெருக்கு) கட்டுக்கடங்காமற் செல்லும்போது வ்ருத்தகீர்த்தனம் (நடந்ததைப்பேசுவது) முதலானவற்றைச் செய்வதன்மூலம் அதற்கு வடிகாலாயிருப்பார்கள். பூமிநீளைகளோடு பரமபுருஷன் அணைந்து இன்புறும்போது பெரியபிராட்டியார் தம் இடையிலும் முலையிலும் அவன் அணைந்ததுபோலே உகந்துநிற்பர். ஆக இப்படி தேவிகளிலே யாரிடத்தில் கலந்தாலும், அது பெரியபிராட்டியாரிடத்திலே கலந்ததாகவேயாகும். இக்காரணத்தாலேயே இங்கு ஸாபத்ந்யம் (சக்களத்திபோராட்டம்) இல்லை. ப்ராக்ருதர்கள் பல மனைவியரோடு இன்புறும்போது அவர்கள் அனுபவிக்கும் இன்பம் இருவர்க்கே போராமையாலே ஒருவரோடொருவர் போராடவேண்டியிருக்கிறது. இங்கு பேரின்பமாகையாலே மஹாதடாகங்களிலே குடைந்தாடுவாரைப்போலே பலர்கூடி அனுபவித்தாலும் இன்பம் விஞ்சியிருக்கையாலே போட்டியும் பொறாமையுமில்லை என்றதாயிற்று. இப்பாசுரத்தின் ஸாரார்த்தத்தை ஸ்ரீபராசரபட்டர்,

"பே₄ாக்₃யா வாமபி நாந்தரீயகதயா புஷ்பாங்க₃ராகை₃ஸ் ஸமம்
நிர்வ்ருத்த ப்ரணயாதிவாஹநவிதெ₄ள நீதா: பரீவாஹதாம்।
தே₃வி த்வாமநு நீளயா ஸஹ மஹீதே₃வ்ய: ஸஹஸ்ரம் தத₂ா
யாபி₄ஸ்த்வம் ஸ்தநபா₃ஹு த்₃ருஷ்டிபி₄ரிவ ஸ்வாபி₄: ப்ரியம்
ச்லாக₄ஸே॥" [ஸ்ரீகுண-26]

[ஹே ஸ்ரீதேவி! உம்முடைய ஸ்தனம், திருக்கை, திருக்கண்ணுக்கு இவைகளைக்கொண்டு உம்முடைய காந்தனை உகப்பிப்பதுபோல், எந்த பூமிநீளா தேவிகளைக்கொண்டும் உகப்பிக்கிறீரோ, உம்முடன் கூடியவளும், நீளா ஸஹிதையுமான அந்த பூமிப்பிராட்டியும், மற்றும் கணக்கற்ற தேவிகளும், உமக்கும் எம்பெருமானுக்கும் புஷ்பம் சந்தனம் முதலியவைகளைப்போல் விட்டுப்பிரியாத உபகரணமாயிருக்கையால் போக்யர்களாயிருப்பார்கள், ப்ரணயரஸம் கட்டுக்கடங்காமல் அதிகரிக்கும்போது (அந்த தேவிகள் அந்த ரஸத்திற்கு) வடிகாலாயிருக்கும் தன்மையை அடைவிக்கப்படுகிறார்கள்] என்று ஸ்ரீகுணரத்நகோசத்திலே மிகத்தெளிவாக அருளிச்செய்தார்.

43. மனமாசு தீரு மருவினையுஞ் சாரா
தனமாய தானே கைகூடும்—புனமேய
பூந்துழா யானடிக்கே போதொடு நீரேந்தி
தாந்தொழா நிற்பார் தமர்.

பதவுரை:—**புனம் மேய பூம் துழாயான்**—*தன் நிலத்தி லிருப்பது போலவே பூத்து விளங்கும் திருத்துழாயை அணிந்திருக்கும் எம்பெருமானுடைய,* **அடிக்கே**—*திருவடிகளுக்கே,* **போதொடு நீர் ஏந்தி**—*புஷ்பத்துடன் தீர்த்தத்தையும் எடுத்துக்கொண்டு,* **தமர்**—*அடியார்கள்,* **தாம்**—*தாங்களாகவே,* **தொழாநிற்பர்**—*தொழுவார்கள்; (தொழுதவுடன்)* **மனம் மாசு தீரும்**—*மனத்திலுள்ள அஞ்ஞானம் முதலிய அழுக்குகள் விலகும்;* **அரு வினைகள் சாரா**—*தீராத பாபங்களும் கிட்டமாட்டா;* **தனமாய**—*செல்வமாகிய பக்தியும்,* **தானே கைகூடும்**—*தானாகவே வந்துசேரும்.*

அவதாரிகை— *பிராட்டிமார் நித்யஸந்நிஹிதராயிருக்கையாலே தங்கள் குற்றத்தை நினைத்துப் பிற்காலிக்க வேண்டுவதில்லை. இனி, ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியிலே அந்வயிக்கவே விரோதி$_4$வர்க்க$_3$ம் தன்னடையே விட்டு நீங்கும் என்கிறார்.*

உரை:-*திருமேனியின் ஸ்பர்ஶத்தாலே தன்நிலத்தில் நின்றாப்போலே செவ்விபெற்றுப் பூத்த திருத்துழாயாலே அலங்*

அவதாரிகை:—** பொன்னுழிக்கையான் திறனுரையே சிந்தித்திருக்கும்படி விடுமோ ஸம்ஸாரியினுடைய அஜ்ஞானம், கர்மம், ருசி, வாஸனை முதலானவை? என்னும் கேள்வியெழ, சென்றபாட்டிற்படியே பிராட்டிமார் பெருமானோடு சேர்ந்திருக்கையாலே இவன் அக்குற்றங்களை நினைத்துத் தயங்கவேண்டியதில்லை. தன் ஸ்வரூபத்துக்குத் தக்கவாறு இவன் பகவத் கைங்கரியத்திலே அந்வயித்தானாகில், அக்குற்றங்கள் இவனைத் தடைசெய்யமாட்டாததோடன்றியில், தாமே இவனைவிட்டு நீங்கும் என்கிறார்.*

வ்யா:—*(புனம் மேய பூந்துழாயான்) திருமேனியின் ஸ்பர்சத்தாலே தன் நிலத்தில் நிற்பதுபோலே பூத்துக்குலுங்கும் திருத்துழாயை உடை*

க்ருதஞன ஸர்வேச்வரனுடைய திருவடிகளுக்கே அடிமைக்குக் கைதொடுமானமான சூட்டுநன்மாலைகளோடே நீராட்டுகைக்கு உபகரணமான நன்னீரையும் ஸாதரமாக த$_4$ரித்துக்கொண்டுநின்று, தங்களபி$_4$நிவேசாநுரூபமாக ஆச்ரிதரான தாங்கள் அடிமைசெய்யாநிற்பர்கள். இவர்களிப்படி வகுத்த அடிமைசெய்யவே அநுஸந்த$_4$ாநபரிகரமான மநஸ்ஸைப் பற்றிக்கிடக்கிற அஜ்ஞாநம் விஷயராக$_3$ம்முதலான தோ$_3$ஷங்களடங்கலும் தன்னடையேவிட்டுக் கழலும். அவற்றுக்கடியாய், ஸ்வயத்நத்தால் போக்கவரிய துஷ்கர்மங்களும் கிட்டவாராது. கைங்கர்யோபகரணமாய், ஸ்வரூபாநுரூப

யவன். பாலே மருந்தாமாப்போலேயிருக்கை. "குடிக்கிற வேப்பங்குடிநீர்" என்பர் பெரியவாச்சான்பிள்ளை. (அடிக்கே) இவனைத்தவிர வேறொருவனை எண்ணுவதுமில்லை, இவனுடைய திருமேனியிலும் மற்ற அவயவங்களைக் காண்பதுமில்லை. (போதொடு) மாலைகட்டிச் சாத்துதல், அர்ச்சனை செய்தல் முதலான பலவிதங்களில் அடிமைசெய்வதற்குக் கருவியாயிருக்கும் புஷ்பங்களோடு. (நீர் ஏந்தி) நீராட்டுவதற்குக் கருவியான நறுமணம் மிக்க நீரையும் அன்போடு தரித்துநின்று. இவை தூபதீபம் முதலானவற்றுக்கும் உபலக்ஷணம். "சூட்டுநன் மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீராட்டி அந்தூபம் தராநிற்கவே" [திருவிருத்தம்-2] என்கிறபடியே நித்யஸூரிகள் செய்யும் உபசாரங்களைச் செய்கை. (தமர் தாம் தொழாநிற்பர்) "சிதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே" [திருவிருத்தப்79] என்கிறபடியே நித்யஸூரிகளிலும் இவனுக்கினிய அடியார்கள் தங்கள் அன்புக்குத்தக்கவாறு அடிமைசெய்து நிற்பர்கள். (தொழாநிற்பர்) இவர்கள் இதை ஒரு பயனைக் கருதிச் செய்வதில்லை. ஸ்வயம் ப்ரயோஜனமாகச் செய்வார்கள்.

இப்படியொரு பயனைக் கருதாமல் தங்களுக்கு வகுத்த அடிமையை இவர்கள் செய்தபோதிலும், இவர்களுக்கு ஏற்படும் பலன்களைச் சொல்லுகின்றன முன்னடிகள்,-(மனமாசுதீரும்) இவர்கள் அவனுடைய திறனுரையே சிந்தித்திருப்பதற்குக் கருவியான மனத்திலுள்ள அறியாமை, சப்தாதிவிஷயங்களில் பற்று முதலான குற்றங்களெல்லாம் தானே அகலும். (அரு வினையும் சாரா) முற்கூறிய அஜ்ஞானம் முதலானவற்றுக்குக் காரணமாகவும், காரியமாகவும் சுழன்று வருபவையாய், தன் முயற்சியால் அறுக்கமுடியாதவையான புண்யபாபரூபமான கர்மங்களும் அருகில் வர

மானத₄நமாயிருக்கிற பரப₄க்த்யாதி₃களும் தனக்குத்தானே வந்துகைபுகுரும்.

44. தமருகந்த தெவ்வுருவ மவ்வுருவம் தானே
தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்—தமருகந்து
எவ்வண்ணம் சிந்தித் திமையா திருப்பரே
அவ்வண்ண மாழியானும்.

பதவுரை:—ஆழியான்—*சக்ரபாணியான எம்பெருமான்.* **தமர்**—*பக்தர்கள்,* **உகந்தது எவ்வுருவம்**-*எந்த உருவத்தை விரும்புகிறார்களோ,* **அவ்வுருவம் தானே ஆம்**—*அந்த உருவத்தை தானே அடைவன்,* **மற்று**—*மேலும்,* **தமர் உகந்தது எப்பேர்**—*அடியார்கள் விரும்பியது எந்தப்பெயரோ,* **அப் பேர் ஆம்**—*அப்பெயரை அடைவான்,* **தமர்**—*அடியவர்கள்,* **உகந்து**—*விரும்பி,* **எவ்வண்ணம் சிந்தித்து**—*எவ்விதமாக நினைத்து,* **இமையாது இருப்பரே**—*இடைவிடாமல் தியானம் செய்து கொண்டிருப்பரோ,* **அவ்வண்ணம் ஆம்**-*அவ்விதமாகவே ஆவான்.*

அவதாரிகை:—*ஆச்ரிதர் இப்படி அடிமைசெய்யுமளவில், இவர்கள் உகந்த ரூபநாமாதிகளை உடையனாய்க்கொண்டு*

மாட்டார். (தனமாய தானே கைகூடும்) இப்படிப்பட்ட அதிகாரிக்குப் பெருஞ்செல்வமாயிருப்பதாய், கைங்கர்யத்துக்குமுன் ஏற்படுவதான பக்தி முதலானவை தானேவந்து கைகூடும். (தனம்) ஸ்வரூபத்துக்குத் தகாததான இவ்வுலகச் செல்வமன்று; ஸ்வரூபத்திற்குத் தகுந்ததான பரபக்தி, பரஜ்ஞானம், பரமபக்தி முதலானவையே 'தனம்' எனப்படுகின்றன. "அந்தரிக்ஷக₃த: ஸ்ரீமாந்" *[ரா-யு 16-17] [ஆகாயத்தில் கிளம்பியவனாய், செல்வம் நிரம்பியவனான விபீஷணன்]* "ஸ து நாகக₃வர: ஸ்ரீமாந்" *[செல்வம் நிரம்பிய கஜேந்திராழ்வான்]* "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" *[ரா-பா 18-29] [செல்வம் நிரம்பிய லக்ஷ்மணன்] என்று லங்கைச்வர்யத்தையும், தன் முயற்சியாகிற செல்வத்தையும், அயோத்திச் செல்வத்தையும் கைவிட்டு பக்தி முதலானவற்றைக் கைக்கொண்டவர்களைச் செல்வர்களாகச் சொன்னார்களன்றோ ரிஷிகளும்.*

அவதாரிகை:—*''தாம் தொழாநிற்பர்'' என்றது கீழ்ப்பாட்டில். இவனைக்கண்ட பின்பன்றோ தொழுவது; எங்கே காண்பது?*

தன்னையமைத்து அர்ச்சாவதாரரூபேண இங்கே அடிமை கொள்ளும் என்கிறார்.

உரை:—தன் கருத்தறிந்து எடுத்துக்கைநீட்டும் திருவாழி முதலான திவ்யபரிகரங்களை உடையனான ஸர்வேச்வரன், அவர்களைக் காற்கடைக்கொண்டு இன்று ஸம்ஸாரத்திலே தன்னைப்பற்றியிருக்கும் ஆச்ரிதரானவர்கள், ஸ்வர்ணரஜ தாதிகளான த்ரவ்யங்களாலே உகந்து ஏறியருளப்பண்ணி

என்னும் கேள்வியெழ, அடியார் இப்படி அடிமை செய்ய நினைத்தால், இவர்கள் உகந்த உருவங்களையும் பெயர்களையும் உடையவனாய்க்கொண்டு தன்னை அமைத்துக்கொண்டு அர்ச்சாவதாரரூபத்தோடு இவ்வுலகிலேயே அடிமை கொள்ளுவான் என்கிறார்.

வ்யா:—(ஆழியான்) ஸுதர்சனத்தை உடையவன். இங்கே ஸுதர்சனத்தைச் சொன்னது நித்யஸூரிகள் அனைவர்க்கும் உபலக்ஷணம். "கருதுமிடம் பொருது கைநின்ற சக்கரத்தான்" [திருவாய் 10-6-8] என்கிற படியே தன் கருத்தறிந்து கைங்கர்யம் செய்யும் திருவாழியாழ்வான் முதலான திவ்யஸூரிகளைக் கிங்கரர்களாக உடைய ஸர்வேச்வரன் அவர்களையும் பொருட்படுத்தாமல் செய்யும் காரியத்தை மேலேசொல்லுகிறது. (தமர் உகந்தது எவ்வுருவம் அவ்வுருவம் தானே ஆம்) நித்யஸம்ஸாரியாயிருந்து இன்றே தன்னைப்பற்றிய அடியார்

ஸுரூபாம் ப்ரதிமாம் விஷ்ணோ: ப்ரஸந்நவதநேக்ஷணாம் |
க்ருத்வாऽऽத்மந: ப்ரீதிகரீம் ஸுவர்ணரஜதாதிபி: ||
தாமர்ச்சயேத் தாம் ப்ரணமேத் தாம் யஜேத் தாம் விசிந்தயேத்|
விசத்யபாஸ்ததோஷஸ்து தாமேவ ப்ரஹ்மரூபிணீம் ||

[விஷ்ணுதர்மம் 103-16]

[அழகிய உருவமுள்ளதும், மலர்ந்த திருமுகமண்டலத்தையும் திருக்கண்களையும் உடையதும், தனக்குப் பிரியத்தைத் தருவதுமான விஷ்ணுவின் ஒரு பிம்பத்தை, தங்கம், வெள்ளி, முதலிய திரவியங்களாலே செய்து அதைப் பூஜிக்கக்கடவன்; அதை வணங்கக்கடவன்; அதை ஆராதிக்கக்கடவன்; அதை தியானிக்கக்கடவன். (இதைச்செய்தானாகில்) தோஷங்கள் நீங்கப்பெற்றவனாய், பரரூபத்துடன் கூடிய அந்த எம்பெருமானையே அடைகிறான்.] என்று சொல்லப்பட்டபடியே தங்கம் வெள்ளி முதலான திரவியங்களாலே உகந்து செய்த விக்ரஹம் யாதொன்றுண்டோ அதை தன்

னது யாதொரு விக்ரஹம், அந்த விக்ரஹத்தை அஸாதா₄ ரணவிக்ரஹத்தோபாதி தானே ஆதரித்துப் பரிக்ரஹியா நிற்கும். இப்படி அவர்களுகந்த திருமேனியை விரும்புகிற வளவன்றிக்கே, ஆஶ்ரிதர் உகந்து சாத்தின திருநாமம் யாதொன்று அந்தத்திருநாமத்தை நாராயணாதிநாமங்களோ பாதி தனக்கு நாமமாக விரும்பாநிற்கும். ஆஶ்ரிதரானவர்கள்

னுடைய அப்ராக்ருததிவ்யமங்களவிக்ரஹத்தைப்போலே தானே ஆதரித்து திருமேனியாக எற்றுக்கொள்வான். 'தமர்' 'உகந்தது' என்று ஸாமாந்ய மாகச் சொல்லுகையாலே, இன்னார் இனையார் என்னும் நியதியில்லை; இன்னபடி அவனை பஜிக்கவேணுமென்னும் நியதியுமில்லை அவர்கள் நின்ற நிலையிலே அவர்கள் பஜித்தபடியே அவர்களையடைவான் என்று காட்டு கிறார். இவ்வர்த்தத்தை

யே யதா₂ மாம் ப்ரபத்₃யந்தே தாம்ஸ்ததை₂வ ப₄ஜாம்யஹம்।
[கீதை 4-11]

[எந்த பக்தர்கள் எவ்விதமாக நினைத்துக்கொண்டு என்னை ஆச்ரயிக் கிறார்களோ, அவ்விதமாகவே ஆனவனாய் (அர்ச்சாரூபியான) நான் அவர் களை அடைகிறேன்.] என்று கீதையில் கண்ணனே அருளினானன்றோ. "நெஞ்சினால் நினைப்பான் யவன் அவனாகும் நீள்கடல் வண்ணனே" என்றார் ஆழ்வாரும். இவ்விடத்தில் பெரியவாச்சான்பிள்ளை பின்வரும் ஐதிஹ்யங்களைக் காட்டியருளினார்:—

"எம்பெருமானார் மாதுகரத்துக்கு எழுந்தருளாநிற்க, சிலபிள்ளைகள் காலாலே கீறி, "உம்முடைய எம்பெருமான் திருமேனி" என்று காட்ட, பாத்ரத்தைவைத்து தண்டனிட்டருளினார். இவ்வர்த்தத்திலே, "கோயிலிலே சிலபிள்ளைகள் விளையாடுகிறவர்கள் திருவீதியிலேயிருந்து பெருமாளும் நாய்ச்சிமாரும் பெரியதிருமண்டபமும் கற்பித்துப்பெரும் திருப்பாவாடை யும் அமுதுசெய்வித்து, 'எம்பெருமானார்! ப்ரஸாதப்படும்' என்று மணலைக் கையாலே முகந்தெடுக்க, தத்காலத்திலே மாதுகரத்துக்கு எழுந்தருளுகிற உடையவர், அவ்விடத்திலே அதுகேட்டருளி தண்டனிட்டு அவர்களெடுத்த ப்ரஸாதத்தைப் பாத்ரத்திலே ஏற்றார்" என்று ஜீயர் அருளிச்செய்தார்."

(மற்று) இப்படி அவர்கள் உகந்த திருமேனியை விரும்புகிறவளவோ டல்லாமல், (தமர் உகந்தது எப்பேர் அப்பேர் ஆம்) அவ்வடியார் உகப் புடன் எந்தத்திருநாமத்தைச் சாத்துகிறார்களோ அந்தப்பெயரையே உடையவனாம். "சதங்கையழகியார்" என்று அடியார்கள் திருநாமஞ்சாத்தி னாலும் நாராயணாதிநாமங்களைக்காட்டிலும் அத்திருநாமத்தை விரும்பும்

உகந்துகொண்டு குணசேஷ்டிதாதி$_3$களான யாதொரு ப்ரகாரத்தை அநுஸந்தி$_4$த்து அநவரதப$_4$ாவனை பண்ணி யிருப்பர்கள், அந்த ப்ரகாரத்தை உடையனாகாநிற்கும்.

இப்படி தன் பெருமைபாராதே ஆஸ்ரிதருகந்த ரூபநாம குணசேஷ்டிதாதி$_3$களைத் தானுடையனாய்க்கொண்டு ஆஸ்ரிதரை அடிமைகொள்ளும் அர்ச்சாவதாரத்தின் நீர்மையின் ஏற்றத்தை அநுஸந்தித்து வித்$_3$த$_4$ராகிறார்.

என்பர் பெரியவாச்சான்பிள்ளை. நஞ்சீயருடைய திருவாராதனப் பெருமாளுக்குப் பெயர் 'ஆயர்தேவு' என்பது. இப்பெயரைத்தான் மிகவுகந்திருப்பதைக்காட்ட, அப்பெருமான் ஒரு ஆச்சரியமான செயலைச் செய்தாரும். விஷ்ணுபுராணவ்யாக்யாதாவான விஷ்ணு சித்தரென்னும் எங்களாழ்வானுடைய ஸ்வப்னத்திலே இப்பெருமான் தோன்றி நாவற்பழம் வேண்டினாரும். "நீ யார்" என்று அவர்கேட்க, "ஜீயர் மகனான ஆயர் தேவு" என்று அருளிச்செய்தாரும். அவருகந்த பெயரைத்தான் உகந்ததோடன்றியில் அப்பெயருக்கேற்ப நாவற்பழமும் இரந்துசென்ற நீர்மையைக்கண்ட எங்களாழ்வான் நஞ்சீயரைக் கண்டபோது, "உம்முடைய பிள்ளை எங்களைக் குடியிருக்க விடமாட்டேனென்கிறான்; நாவற்பழத்தை கொடு; வெண்ணெயைக்கொடு; அதைக்கொடு; இதைக்கொடு என்று துன்புறுத்திக்கொண்டேயிருக்கிறான்" என்று கூறி வியந்தாராம். இவ்வைதிஹ்யமும் பெரியவாச்சான்பிள்ளையெடுத்தது. (தமருகந்து எவ்வண்ணம் சிந்தித்து இமையாது இருப்பரே அவ்வண்ணம் ஆழியானும்) அடியார்கள் உகப்புடன் தன்னுடைய குணம் செயல்கள் முதலானவற்றில் எந்த குணசேஷ்டிதங்களை அநுஸந்தித்து இடைவிடாமல் தியானித்திருப்பார்களோ, அந்த குணசேஷ்டிதங்களையுடையவனாகவே அவர்களுக்குக் காட்சியளிப்பான் ஸர்வேச்வரன். காளிங்கநர்த்தனக்கண்ணனாகச் சிந்தித்துத் திருமேனியை அமைத்தால் அப்படியே ஆவான். பட்டாபிஷேக ராமனாகச்சிந்தித்து அமைத்தால் அப்படியேயாவான். (ஆழியான் ஆய்) ஜகத்தை ஸ்ருஷ்டிப்பவனாய், அனைவரையும் நியமிப்பவனாயிருப்பவன், ஒருவனால் ஸ்ருஷ்டிக்கப்படுபவனாய், நியமிக்கப்படுபவனாக ஆவான்.

இப்படி தன் பெருமைபாராதே அடியார் உகந்த உருவம், பெயர், குணம், செயல்கள் முதலானவற்றைத்தான் உடையவனாய்க்கொண்டு அடியாரை அடிமைகொள்ளும் அர்ச்சாவதாரத்தின் நீர்மையின் ஏற்றத்தை அநுஸந்தித்து ஈடுபடுகிறார்.

45. ஆமே யமரர்க் கறிய வதுநிற்க
நாமே யறிகிற்போம் நன்னெஞ்சே—பூமேய
மாதவத்தோன் தாள்பணிந்த வாளரக்கன் நீண்முடியை
பாதமத்தா லெண்ணினன் பண்பு.

பதவுரை:—**நல் நெஞ்சே**—*நல்ல மனமே!*, **பூ மேய மாதவத்தோன்**—*திரு நாபீ கமலத்தில் வஸிக்கும் பெருந்தவத்தோனாகிய பிரமனுடைய*, **தாள் பணிந்த**—*பாதத்திலே வந்து வணங்கின*, **வாள் அரக்கன்**—*தீய ராக்ஷஸனான இராவணனுடைய*, **நீள் முடியை**—*நீண்ட (பத்து) தலைகளையும்*, **பாதம் அத்தால் எண்ணினன்**—*அந்தத் திருவடிகளால் எண்ணிக் காட்டிய பெருமானுடைய*, **பண்பு**—*குணங்கள்*, **அமரர்க்கு அறிய ஆமே**—*தேவர்களுக்கு அறியத்தக்கவையோ?* **அது நிற்க**—*அது கிடக்கட்டும்;* **நாமே அறிகிற்போம்**—*(அவனுடைய நிர்ஹேதுககிருபைக்கு இலக்காகிய) நாமே அறிவோம்.*

அவதாரிகை:—*இப்படியிருக்கிற அவன் நீர்மை ப்ரஹ்மாதிகளுக்கும் நிலமல்லகிடீர்! என்கிறார்.*

உரை:—*என் நினைவிலே நடக்கும் நல்ல நெஞ்சே! திருநாபீ₄கமலத்தைத் தனக்கு வாஸஸ்த₂ாநமாக உடைய*

அவதாரிகை:—*ஸர்வேச்வரன் இப்படியும் ஒரு நீர்மையுடையவனுவானோ? என்னில்; இப்படி இருக்கிற அவனுடைய நீர்மை அவன்தானே காட்டக்கண்ட எமக்கல்லது பிரமன் முதலான தேவர்களுக்கும் அறிய அரிதானது என்கிறார்.*

வ்யா:—(நல்நெஞ்சே) *என் நினைவின்படி நடக்கும் நல்லநெஞ்சே!* (*பூமேய மாதவத்தோன் தாள்பணிந்த வாளரக்கன் நீண்முடியை பாதம் அத்தால் எண்ணினன் பண்பு*) *இங்கு சொல்லப்படும் விருத்தாந்தமாவது; ராவணன் பிரமனிடம் சாவாவரம் வேண்டினபோது அப்பிரமன் வரத்தைக் கொடுக்க முற்பட்டவுடன் அப்பிரமனுடைய மடியில் ஒரு குழந்தையாக பகவான் தோன்றி அவ்விராவணனுடைய பத்துத்தலைகளையும் தன்திருவடியாலே கீறிக்காட்டி இவை அறுப்புண்ணும் தலைகள் என்று பிரமனுக்கு உணர்த்தி அவனை அப்படி வரம் கொடுக்காமல் தடுத்தான் என்பது. மூன்றும் திருவந்தாதியில் "ஆய்ந்த வருமறையோன்"* [77]

ளுய், ஜகத்ஸ்ருஷ்டிக்கு உபகரணமான தபஃஸப்தவாச்ய மான ஜ்ஞாநத்தையுடையனுன ப்ரஹ்மாவினுடைய காற் கீழே தலைமடுத்து 'எனக்கு வரம் தரவேணும்' என்று ஆஶ்ரயித்த ஸாயுத₄னை ராவணனுடைய ஓக்கத்தை யுடைத்தான தலைகளை, புகுக்கும்பீடுகண்டு இறுமாந்து மேல் விளைவதறியாமல் அந்த ப்ரஹ்மா அவனுக்கு வேண்டின வரங்களைக் கொடுப்பதாக ஒருப்படுகிற வளவிலே, ஒரு பாலனுய்க்கொண்டு அவன் மடியிலே வந்து ஆவிர்ப₄வித்து அவைகள் அறுப்புண்ணும் தலைகள் என்னுமிடத்தை எனக்கு நிரதிஶயபோ₄க்₃யமான அந்தத்திருவடிகளாலே கீறி

என்னும் பாட்டிலும், நான்முகன் திருவந்தாதியில் "கொண்டு குடங்கால் மேல்"[44]என்னும் பாட்டிலும் இவ்விருத்தாந்தம் அநுஸந்திக்கப்பட்டது (பூமேய மாதவத்தோன்) திருநாபீகமலத்தைத் தன்இருப்பிடமாக உடைய வனுய், உலகத்தைப் படைப்பதற்குறுப்பான பெரிய ஞானத்தையுடைய பிரமன். 'தப ஆலோசநே" என்று தாதுவாகையாலும், "யஸ்ய ஜ்ஞாந மயம் தப:" [முண்ட-1-1-10] [எவனுடைய 'தபஸ்ஸு' ஸங்கல்பரூபமான ஜ்ஞாநமயமாயிருக்கிறதோ] என்று சுருதியில் சொல்லுகையாலும், இங்கும் 'தவம்' என்று அறிவைக் குறிக்கிறது. (தாள் பணிந்த வாளரக்கன்) பிரம னுடையகாற்கீழே தலையை வைத்து 'எனக்குச் சாவாவரம் தரவேணும்' என்று வேண்டியவனுய், சிவன் கொடுத்த வாளையுடைய ராக்ஷஸ னுன ராவணனுடைய. (நீள் முடியை எண்ணினுன்) நீண்டுயர்ந் திருக்கும் பத்துத்தலைகளையும் கீறி எண்ணிக்காட்டுவதன்மூலம், 'இவை என்றுல் ஒரு சமயத்தில் கீறி எறியப்படவேண்டியவை' என்று உணர்த்தினுன். "குடங்கால் மேல்வைத்த குழவியாய்" [நான்-திருவ-44] "நன்குறங்கில் வாய்ந்த குழவியாய்" [மூன்-திருவ-77] என்று மற்றையாழ்வார்கள் அருளுகையாலே பிரமனின் மடியில் ஒரு குழந்தையாய்த் தோன்றி இச்செயலைச் செய்தான் ஸர்வேச்வரன் என்று விளங்குகிறது. (பாதம் அத்தால் எண்ணினுன்) "அடிச்சியோம் தலைமிசை நீயணியாய் ஆழியங்கண்ணு உன் கோலப்பாதம்" [திருவாய் 10-3-6] என்று என்னைப்போன்ற அடியார் ஆசைப்படும் அமுதிலுமினிய அத் திருவடியை ஓரரக்கன் தலையிலே வைப்பதே! என்று வியக்கிருர்.

எண்ணிக்காட்டி அந்த ப்3ரஹ்மாவின் அநர்த்தத்தைப் பரி ஹரித்த ஸர்வேச்வரனுடைய குணங்களை, தங்கள் ஹித மறியாமல் அநர்த்தத்தைச் சூழ்த்துக்கொள்ளக்கடவ ப்ரஹ் மாதிதேவர்களுக்கு அறியப்போமோ? அது கிடக்கிடாய்! அவ னருளாலே தெளியக்காணவல்ல நாமே அறிகைக்கு ஶக்தராகா நின்றோம்.

பேரளவுடைய ப்ரஹ்மாதிகள் மதிகெட்டு நிலம் துழாவா நிற்க, நாமே அவனை அறியப்புகாநின்றோம் என்றுமாம்.

46. பண்புரிந்த நான்மறையோன் சென்னிப் பலியேற்ற
வெண்புரிநூல் மார்பன் வினைதீர—புண்புரிந்த
வாகத்தான் தாள்பணிவார் கண்டீர் அமரர்தம்
போகத்தால பூமியாள் வார்.

பதவுரை:— பண் புரிந்த நான்மறையோன் — ஸ்வரங்க ளோடு கூடிய நாலு வேதங்களையும் ஓதுவிக்கப்பட்டவனான பிரமனுடைய, **சென்னி**—தலையில், **பலி ஏற்ற**—பிச்சையை வாங்கினவனும், **வெண்புரிநூல் மார்பன்** — வெளுத்த யஜ் ஞோபவீதத்தை மார்பிலே தரித்தவனுமான ருத்ரனுடைய,

---

(எண்ணிலுன் பண்பு) தன்னால் படைக்கப்பட்ட பிரயோஜநாந்தரபரனான பிரமனின் மடியிலே அவனுடைய பிள்ளையைப்போலே தோன்றி அவ னுடைய அநர்த்தத்தைப்போக்கிய குணசாலியானவன் தன்னடியாருக்கு வசப்பட்டிருப்பான் என்பதுவியப்போ? என்று கருத்து. (ஆமோ அமரர்க்கு அறிய) தங்களுக்கு எது நன்மை, எதுதீமையென்றறியாமல் புதுக்கும்பீடு கண்டு வரங்கொடுத்துவிட்டுத் திண்டாடும் பிரமன் முதலான தேவர்களுக்கு இவனுடைய நீர்மையை அறியமுடியுமோ? (அது நிற்க) அது கிடக்கட்டும். (நாமே அறிகிற்போம்) அவன் அருளாலே தெளியக்காணவல்ல நாமே அறியவல்லோம் (அது நிற்க நாமே அறிகிற்போம்) மாதவத்தோனான பிரமன் முதலான தேவராலும் அறியமுடியாமலிருக்க அல்பஜ்ஞானத்தை யுடைய நாமோ அவனை அறியப்போகிறோம் என்று நைச்சியாநுஸந் தானம் செய்வதாகவும் கொள்ளலாம்.

வினை தீர—ப்ரஹ்மஹத்திபாபம் அகலும் படியாக, **புண் புரிந்த ஆகத்தான்**—திருவுள்ளத்தைப் புண்படுத்திக்கொண்ட எம்பெருமானுடைய, **தாள்**-திருவடிகளை, **பணிவார் கண்டீர்**—வணங்குமவர்கள் கிடீர், **அமரர் தம் போகத்தால்**—நித்ய ஸூரிகளுடைய போகத்தோடு கூட, **பூமி ஆள்வார்**—இவ்வுலகத்தையும் ஆட்சி செய்வார்கள்.

அவதாரிகை:— ப்ரஹ்மாவுக்கு வந்த அநர்த்தத்தைப் பரிஹரித்து ரக்ஷித்தவளவன்றிக்கே, லோககு₃ருவுமாய், பிதாவுமான அந்த ப்₃ரஹ்மாவின் தலையை அறுத்து, ஶாபோபஹதனாய் கையும் கபாலமுமாய் இரந்து உண்டுதிரிந்த ருத்₃ரன் அநர்த்தத்தைப் பரிஹரித்து ரக்ஷித்தபடியை அருளிச்செய்கிறார்.

உரை:—ஸ்வரத்திலே நோக்காய், ருக₃ாதி₃பே₄த₃த்தாலே நாலுவகைப்பட்டிருக்கிற வேத₃த்தை த₄ரித்திருந்துள்ள ப்₃ரமாவினுடைய தலையை, **“छिन्नं तस्य शिरो मया”** (சி₂ந்நம்

அவதாரிகை:—பிரமனுக்கு ஏற்பட்ட துன்பத்தைப்போக்கி ரக்ஷித்தது மாத்திரமல்ல, உலகைப் படைத்தவனாய், தனக்குத் தந்தையான அந்தப் பிரமனின் தலையை அறுத்து, அவனிட்ட சாபத்தாலே பீடிக்கப்பட்டு, கையிலே ப்ரஹ்மகபாலத்தையுடையவனாய் யாசித்து உண்டுதிரிந்த உருத்திரனின் துன்பத்தையும்போக்கி ரக்ஷித்தவன் இவனே என்கிறார். [“அரன் நாரணன்” முதலான சில பாட்டுக்களிலே ஹரிஹரஸாம்யத்தைக் கூறுவதாகச் சொல்லும் மேதாவிகள் இப்பாசுரத்திற்கு என்ன பொருளுரைக்கிறார்கள் என்பது தெரியவேண்டும்.]

வ்யா:—(பண்புரிந்த நான்மறையோன் சென்னிப்பலி ஏற்ற) “யோ வை வேத₃ாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை” [எவன் பிரமனுக்கு வேதம் ஓதுவிக்கிறானோ] என்கிறபடியே, ஸர்வேச்வரனாலே ஓதுவிக்கப்பட்ட நாலுவேதங்களையும் ஸ்வரத்தோடு ஓதாநிற்கும் பிரமனின் தலையைக்கிள்ளி, பிரமனின் சாபத்தாலே தலை கையில் ஒட்டிக்கொள்ள, அதை பிக்ஷாபாத்திரமாகக் கொண்டு உலகெல்லாம் திரிந்து பிச்சை ஏற்று, கபாலியென்றும், பிக்ஷாடனன் என்றும் தன்னடியார்களாலும் அழைக்கப்படகின்ற விருத்தாந்தத்தைக் கூறுகிறார்.

தஸ்ய சிரோ மயா) என்கிறபடியே அறுக்க, அவன், **"कपाली त्वं भविष्यसि"** (கபாலீ த்வம் ப4விஷ்யஸி) என்று அநந்தரம் ஶபிக்க, தச்சா2போபஹதனைக்கொண்டு அவன் தலையோட்டிலே நெடுங்காலம் இரந்து திரிந்தவனாய், ப்ராயச்சித்தியென்னு மிடம்தோற்ற வெளுத்த பூணூலையும் மார்பிலேயிட்டு விநீதவேஷனுமாயிருக்கிற ருத்3ரனுடைய ப்3ரஹ்மஹத்யா ரூபமான பாபம் விட்டுநீங்கும்படியாக **"नखाग्रेण विदारितं"** (நகா2க்3ரேண விதா3ரிதம்) என்கிறபடியே திருவுகிராலே

"தே3வீம் ப்ரதி ருத்3ர:-தத: க்ரோத4பரீதேந ஸம்ரக்தநயநேந ச।
வாமாங்கு3ஷ்ட2நகா2க்3ரேண சி2ந்நம் தஸ்ய ஶிரோ மயா ॥
ப்3ரஹ்மா-யஸ்மாத3நபராத4ஸ்ய ஶிரஶ்சி2ந்நம் த்வயா மம।
தஸ்மாச்சா2பஸமாவிஷ்ட: கபாலீ த்வம் ப4விஷ்யஸி ॥
ருத்3ர:-ப்3ரஹ்மஹாऽऽகுலிதோ பூ4த்வாசரந்தீர்த்தா2நி பூ4தலே।
ததோऽஹம் க3தவாந் தேவி! ஹிமவந்தம் ஶிலோச்சயம்।
தத்ர நாராயணச் ஸ்ரீமாந் மயா பி4க்ஷாம் ப்ரயாசித:।
ததஸ்தேந ஸ்வகம் பார்ச்வம் நகா2க்3ரேண விதா3ரிதம் ॥
மஹதீ ஸ்ரவதீ தா4ரா தஸ்ய ரக்தஸ்ய நிஸ்ஸ்ருதா।
விஷ்ணுப்ரஸாதா3த் ஸுச்ரோணி! கபாலம் தத்ஸஹஸ்ரதா4 ॥
ஸ்பு2டிதம் ப3ஹுதா4 யாதம் ஸ்வப்நலப்3த4ம் த3நம் யதா2 ॥
[மாத்ஸ்யபுராணம்-182]

[தேவியைக் குறித்து ருத்ரன்:—'பிறகு கோபத்தையுடையவனும், சிவந்த கண்களை உடையவனுமான என்னால், அப்பிரமனுடைய தலை இடதுகைக் கட்டைவிரல் நகத்தின் நுனியால் வெட்டப்பட்டது'. பிரமன்:—அபராத மற்ற என்னுடைய தலை, உன்னால் அறுக்கப்பட்டபடியால் நீ சாபத்தை அடைந்து கபாலியாக (கபாலத்துடன் கூடியவனாக) ஆவாய்.' ருத்ரன்:— தேவி! ப்ரஹ்மஹத்தி செய்தவனாயும் கலங்கினவனாகவும் பூமியில் தீர்த் தங்களைச் சுற்றிக்கொண்டிருந்த நான் அதற்குப்பின் ஹிமாசலமலைக்குச் சென்றேன். அங்கு ஸ்ரீமந்நாராயணன் என்னால் பிச்சைக்காக யாசிக்கப் பட்டான். அதன்பின் அவனால் தன் (தேஹத்தில்) ஒரு பாகம் நகத்தின் நுனியால் கிறப்பட்டது. அதிலிருந்து பெரிதாக வெள்ளமிடும் ரத்ததாரை பெருகிற்று. ......அழகிற் சிறந்தவளே! விஷ்ணுவினுடைய அருளினால் அக்கபாலம் ஆயிரக்கணக்கான பல துண்டுகளாக வெடித்து, கனவில் கிடைத்த பணம்போல் சென்றது.] என்று மாத்ஸ்யபுராணத்தில் கூறப்

கீறி, மாம்ஸளமான ரக்தஜலத்தை உபகரித்த திருமேனியை உடைய ஸர்வேச்வரன் திருவடிகளை ஆச்ரயிக்குமவர்கள் கிடீர் நித்யஸூரிபோ$_4$க$_3$மான பரமபதைச்வர்யத்தோடே கூட பூ$_4$ம்யுபலக்ஷிதையான லீலாவிபூ$_4$தியையும் ஸ்வாதீ$_4$னமாக நிர்வஹிக்குமவர்கள்.

பட்டதன்றோ. ஒரு மனிதனைத் தலையறுப்பதே மஹாபாபம்; அதிலும் அந்தணனைத் தலையறுப்பது ப்ரஹ்மஹத்தியெனும் பெரும்பாபம். அதிலும் வேதமோதிய அந்தணனைத் தலையறுப்பது ஒப்பற்ற பாபம். அப்படிப் பட்ட மறையவனாய், நாலுமுகங்களாலும் நாலுவேதங்களையும் ஓதிக் கொண்டேயிருப்பவனாய், எல்லாவற்றுக்கும்மேலே தனக்குத் தந்தையான பிரமனின் தலையைக் கிள்ளினான் என்று பாபத்தின் பெருமையை உணர்த்துகிறார். உருத்திரன் தமோகுணம் நிறைந்தவன் என்பதை இவ்வொரு செயலே காட்டும். உருத்திரனைப்பற்றி நிற்பவர்களும் இப்படித் தாமஸச்செயலையே செய்கின்றனர் என்பது அவர்கள் கூறிக்கொள்ளும் கதைகளே காட்டுகின்றன. உருத்திரனின் மனைவி தகப்பனைக் கொல்லச் செய்தாள். உருத்திரனின் மகன் தகப்பனுக்கே உபதேசம் செய்தான். உருத்திரனின் பக்தனொருவன் தந்தையின் காலைவெட்டினான் முதலானவைகள் சைவர்களே இசையும் கதைகளன்றோ. இவ்வளவையும் இசைந்து கொண்டே உருத்திரனுக்குப் பரத்துவமும் ஸாம்யமும் கூற முன்வருவது தான் நாரணன் மாயையாகும். (வெண்புரிநூல் மார்பன்) தந்தையின் தலையைக் கிள்ளின பாபம் தீருவதற்காக பிராயச்சித்தம் செய்துகொண்டிருப்பவன் என்பது தோற்றக் குளித்து முழுகிச் சாம்பலைப் பூசியிருப்பவனாகையாலே வெளுத்திருக்கும் பூணூலை தரித்திருக்கிறான் உருத்திரன். (வினைதீர) அவனுடைய ப்ரஹ்மஹத்திபாபம் தீரும்படியாக. (புண்புரிந்த ஆகத்தான்) ஆகம்—மார்பு. முன் எடுக்கப்பட்ட மாத்ஸ்ய புராணவசனத்திற் சொன்னபடியே, தன் மார்பைக் கீறிப்புண்ணாக்கிக்கொண்டு அதிலிருந்து பெருகிய நறுமணமுள்ள ரத்தஜலத்தாலே மண்டையோட்டை நிறைத்ததைக் கூறுகிறார். **"அலங்கல் மார்வில் வாசநீர் கொடுத்தவன்"** [திருச்சந்த-113] என்றாரன்றோ மழிசைக்கிறைவனும். (புண்புரிந்த ஆகத்தான்) 'தானே ஈச்வரன்' என்று கூறிக்கொண்டு திரிந்தவன் திறந்துகிடக்கும் வாசல்தோறும் யாசித்துத் திரிவதே! என்று புண்பட்ட திருவுள்ளத்தையுடையவன் என்றும் கொள்ளலாம். ஆகம்—நெஞ்சு. (தாள்பணிவார் கண்டீர்...) அந்த ஸர்வேச்வரனுடைய திருவடிகளைப் பணியுமவர்களே கிடீர் பரமப்ராப்யத்தைப் பெறுவது என்கிறார். (அமரர் தம் போகத்தால் பூமி ஆள்வார்) நித்யஸூரிகளுடைய போகமாகிற பரமபதச்செல்வத்தோடு

47. வாரிசுருக்கி மதக்களி றைந்தினையும்
சேரி திரியாமல் செந்நிறீஇ—கூரிய
மெய்ஞ்ஞானத் தாலுணர்வார் காண்பரே மேலொருநாள்
கைந்நாகங் காத்தான் கழல்.

பதவுரை:—**மதம் களிறு ஐந்தினையும்**—*மதம் பிடித்த யானைகள் போன்ற ஐந்து இந்திரியங்களையும்.* **வாரி சுருக்கி**-*போகமாகிற மதஜலத்தைக்குறைத்து,* **சேரி திரியாமல் செம் நிறீஇ**—*சப்தம் முதலிய விஷயங்களாகிற தெருக்களில் அலையாமல் நன்றாக நிறுத்தி.* **கூரிய**—*ஸூக்ஷ்மமான.* **மெய் ஞானத்தால்**—*உண்மையான பக்திரூபமான அறிவால்,* **உணர் வார்**—*(அவனை) அறியவல்லவர்கள்,* **மேல் ஒரு நாள்** —*முன்னொரு காலத்தில்.* **கை நாகம் காத்தான்**—*தும்பிக்கையுடன் கூடிய யானையாகிய கஜேந்த்ராழ்வானை ரக்ஷித்தவனுடைய,* **கழல்**—*திருவடிகளை,* **காண்பர்** —*கண்டு அநுபவிப்பார்கள்.*

அவதாரிகை:—*இந்த்₃ரியங்களை ஜயித்து ஸம்யக்₃ஜ்ஞானத்தை உடையவர்களாய், அவனை ஆச்ரயிப்பார்க்கல்லது, அவன் திருவடிகளைக் கிட்டவொண்ணாது என்கிறார்.*

கூட, பூமி என்று உபலக்ஷணமுறையாலே காட்டப்படும் லீலாவிபூதிச் செல்வத்தையும் தாமிட்ட வழக்காகப்பெறுவார்கள். இம்மையின்பத்தையும், மறுமையின்பத்தையும் பெறுவர் என்றபடி. அன்றிக்கே, இவ்வுலகிலிருக்கும்போதே பரமபதத்தில் அநுபவிக்கும் போகமெல்லாம் அனுபவிப்பார்கள் என்றுமாம். ''அத்ரப்₃ரஹ்ம ஸமச்நுதே'' ''அம்ருத இஹபப₄வதி'' என்று சாஸ்திரங்களில் இவ்வுலகிலேயே மோக்ஷமடைகிறான் என்றும், ப்ரஹ்மத்தையடைகிறான் என்றும் கூறுவதும் இக்கருத்திலேயன்றோ. விஷ்ணுவின் பரமபதமென்று ஒருலோகம் உண்டென்றும், அங்கு சென்றாலேயே மோக்ஷமென்றும், அர்ச்சிராதிகதியாலே முக்தன் அங்கு செல்கிறான் என்றும், அங்கிருந்து திரும்பிவருவதில்லையென்றும் பல வாக்கியங்கள் ஓதாநிற்க, அத்வைதிகளைப்போலே ஜீவன் முக்தியை ஒப்புக்கொள்வது வேதவிருத்தமேயாகும்.

அவதாரிகை:—இந்திரியங்களை ஜயித்து, நல்லறிவுடையவர்களாய் அவனை அடையமுயலுமவர்களே அவனை அடையமுடியும். மற்றையோர் அவன் திருவடிகளையடையமுடியாது என்கிறார்.

உரை:-பே₄ாக்₃யங்களான ஶப்₃த₃ாதி₃களான ஜலத்தைக் கண்டு கடுகமாற்றுதல், நெடுகவிடுதல் செய்யாதே நடுத்தரமான க்ரமத்திலே ஸங்கோசிப்பித்து, களித்துக் கண்ட கண்ட விஷயங்களிலே காடுபாய்ந்துதிரிகிற ச்ரோத்ராதி₃களான மத்தக₃ஜங்கள் ஐந்தையும் விஷயங்களாகிற குடியிருப்புகளில் பண்டுபோலே கயிறுருவிவிட்டு ஸஞ்சரியாதபடியாக, ப்ரத்யக்₃விஷயப்ரவணமாம்படி செவ்வே நிறுத்தி.

வ்யா:-(வாரிசுருக்கி) மதங்கொண்ட யானைகளை அடக்குவதற்கு அவை குடிக்கும் தண்ணீரைச் சுருக்கவேண்டும். தண்ணீரை அதிகமாக நெடு நாள் கொடுத்தால் மதம் அதிகரிக்கும்; ஒரேயடியாக நிறுத்திவிட்டாலும் மாண்டுபோம். ஆகையால் நீரைச் சிறுகச்சிறுகச் சுருக்குவதுதான் அவற்றின் மதத்தை அடக்கும்வழி. அதுபோலே இந்திரியங்களாகிற யானைகளையும், அவற்றின் போகமாகிற நீரைச் சிறிதுசிறிதாகச் சுருக்கியே அடக்கவேண்டும். (மதக்களிறு ஐந்தினையும்) இவன் அடக்கவேண்டிய மதயானைகள் ஒன்றல்ல; இரண்டல்ல; மெய்வாய்கண்மூக்குச்செவிகளாகிற ஐந்துமதயானைகளையும் ஒன்றாக அடக்கவேண்டியுள்ளது. சிறிது சோம்பினால் அவை இவனை அழித்துவிடும். (சேரிதிரியாமல்) யானைகள் மதங்கொள்ளும்போது, முன்போல் அவற்றைக் கயிறுருவி அவிழ்த்துவிட்டு விட்டால் மனிதர்வாழும் இடங்களெல்லாம் சென்று அதம்செய்துவிடும். ஆகையால் அவற்றை ஆளில்லாதவிடத்திலே கட்டிவைக்கவேணும். அதுபோலவே களித்துக்கண்ட விஷயங்களிலே காடுபாய்ந்து திரியும் பஞ்சேந்திரியங்களாகிற இம்மதயானைகளையும் சப்தஸ்பர்சரூபரஸகந்தங்களாகிற விஷயவீதிகளிலே அலையாதபடிகட்டிவைக்கவேணும். (செந்நிறீஇ)யானையை அரணுக்குள்ளே கட்டிவைப்பதுபோலே, இவ்விந்திரியங்களையும் உள்ளேயுள்ள ஆத்ம பரமாத்மவிஷயத்திலே செல்லும்படி கட்டிவைக்கவேணும்.

''விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தே₃ஹிந:।
ரஸவர்ஜம் ரஸோऽப்யஸ்ய பரம் த்₃ருஷ்ட்வா நிவர்த்ததே॥''
[கீதை 2-59]

[(இந்திரியங்களுக்கு) ஆஹாரமாகிய விஷயங்களற்றவனான மனிதனுக்கு விஷயங்கள் மட்டும் விட்டுப்போகின்றன; விஷயங்களில் ஆசைநீங்குவதில்லை. ஆசையும் (விஷயங்களுக்கு) மேலான ஆத்மஸ்வரூபத்தைக் கண்டவுடன் நீங்குகின்றது.] என்கிறபடியே, ''விஷயங்களைச் சுருக்கினால்மாத்திரம் போதாது; ஆத்மதர்சனமுண்டானால்தான் ஆசையகலும்'' என்று

அநபி$_4$ஸம்ஹிதப$_2$லமாக அநுஷ்டித்த ஸத்கர்மத்தாலே தெளிந்த மநஸ்ஸுக்குத் தளமாக முளைத்து ஸ்வரூபயாத$_2$ாத்ம்யத்தை யத$_2$ாவாக தர்சிக்கும்படி அதிஸூக்ஷ்மமாய், த்$_4$யேய விஷயத்தை ப்ரத்யக்ஷமாக க்$_3$ரஹிக்கையாலே பரமார்த்தமாயிருக்கிற ப$_4$க்திரூபாபந்நஜ்ஞாநத்தாலே அவனை உள்ளபடி உணர க்ஷமரானவர்கள் பண்டொருநாளிலே 'அடிமை செய்யவேணும்' என்னும் அபி$_4$நிவேஶத்தாலே, புஷ்பாபசயார்த்த$_2$மாக ஒரு பொய்கையிலே புக்குத் துதிக்கை முழுத்தும்படி முதலையாலே இடர்பட்ட ஸ்ரீகஜேந்த்ராழ்வானை விரோதி$_4$யைப்போக்கி அடிமைகொண்டு ரக்ஷித்த ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக்கண்டு அநுப$_4$விக்கப்பெறுவர்கள்.

னன்றோ கீதாசார்யன். (கூரிய மெய்ஞ்ஞானத்தால் உணர்வார்) முதலில் பலன்களில் பற்றுவைக்காமல் கர்மங்களை அனுஷ்டிக்கவேணும்; இதனால் மனம் தெளியும்; அதிலே பக்தியுண்டாகும். அந்த பக்தியானது ஆத்ம பரமாத்மஸ்வரூபங்களை உள்ளபடி உணரவைக்கும் கூர்மையை உடையதாயிருக்கும். தியானிக்கத்தக்கதான பரமாத்மஸ்வரூபத்தை நேரே காணவைக்கையாலும், மிகச்சிறந்த ஞானமாயிருக்கையாலும் 'மெய்ஞ்ஞானம்' என்றும் 'உபாஸநம் த்$_4$ருவாஸ்மிருதி:' ['நிலையான நினைவே' உபாஸனம் எனப்படுகிறது] என்றும் கூறப்படுகிறது. (மெய்ஞ்ஞானத்தால் உணர்வார் காண்பரே) இப்படிப்பட்ட பக்திரூபமான அறிவாலே அவனை உள்ளபடி அறிபவர்கள் அவன் திருவடிகளை நேரேகண்டு அனுபவிக்கப்பெறுவர்கள்.

"ப$_4$க்த்யா மாமபி$_4$ஜாநாதி யாவாந் யச்சாऽஸ்மி தத்த்வத:|
ததோ மாம் தத்த்வதோ ஜ்ஞாத்வா விஶதே தத$_3$நந்தரம் ||"

[கீதை 18-55]

[(ஸ்வரூபத்தினாலும், ஸ்வபாவத்தினாலும்) நான் எப்படியிருக்கிறேனோ, (குணத்தினாலும், விபூதியினாலும்) நான் எம்மாதிரியிருக்கிறேனோ, அப்படிப்பட்ட என்னை பக்தியினால் உள்ளபடி அறிகிறான். என்னை உள்ளபடி அறிந்து, அதன்பிறகு, அந்த பக்தியினாலேயே என்னை அடைகிறான்.] என்று கீதையில் சொல்லப்பட்டதன்றோ. எதைக் காண்பார்கள் எனில்: (மேலொருநாள் கைந்நாகம் காத்தான் கழல்) பண்டு ஒருநாளிலே 'பரமபுருஷனுக்குக் கைங்கரியம் செய்யவேணும்' என்னும் ஆசையாலே பூப்பறிக்க ஒரு பொய்கையிலேபுக்கு, துதிக்கையளவும் முழுகும்படி முதலையாலே இழுக்கப்பட்டுத் துன்புற்ற ஸ்ரீகஜேந்திராழ்வானின் விரோதியான

48. கழலொன் றெடுத்தொருகை சுற்றி ஓயோர் கைமேல்
சுழலும் சுராசுரர்க ளஞ்ச - அழலும்
செருவாழி யேந்தினன் சேவடிக்கே செல்ல
மருவாழி நெஞ்சே மகிழ்ந்து.

பதவுரை:—ஆழி நெஞ்சே!—கடல் போன்று ஆழ்ந்த மனமே! **கழல் ஒன்று**—(நமுசியினுடைய) ஒரு காலை, **எடுத்து**—பிடித்து, **ஒரு கை**—ஒரு திருக்கையாலே, **சுற்றி**—சுழற்றி, **சுழலும்**—(என்ன தீங்கு நேரிடுமோ என்று) கலங்குகிற, **சுராசுரர்கள்**—தேவர்களும் அசுரர்களும், **அஞ்ச**—பயப்படும்படியாக, **அழலும்**—எரிகிறதும், **செரு ஆழி ஏந்தினன்**—சண்டை செய்வதுமான திருச்சக்கரத்தை ஏந்துகின்ற பெருமானுடைய, **சே அடிக்கே செல்ல** சிவந்த திருவடிகளை அடையும்படி, **மகிழ்ந்து மருவு**—உகந்து அனுபவிப்பாயாக.

அவதாரிகை:—நமக்கு இவ்வருந்தொழில்களில் இழிய வேண்டா; தானே வந்து தன்னைத்தரும் ஸ்வபா₄வனன்றோ என்று, அவன்படியை அநுஸந்தி₄த்து, நெஞ்சே! நீ அவனை ப்ரீதிபூர்வகமாக அநுப₄விக்கப்பார் என்கிறார்.

முதலையை அழித்து, அவனை அடிமைகொண்டு ரக்ஷித்த ஸர்வேச்வரனுடைய திருவடிகளைக் காணப்பெறுவர்கள்.

"பரமாபத₃மாபந்நோ மநஸாऽசிந்தயத் ஹரிம் |
ஸ து நாக₃வர: ஸ்ரீமாந் நாராயணபராயண: ||"
[விஷ்ணுதர்மம் 69-47]

[மேலான ஆபத்தை அடைந்தவனும், கைங்கர்யஸ்ரீயை உடையவனும், நாராயணனையே மேலான கதியாகக்கொண்டவனுமான அந்த கஜேந்திராழ்வான் மனத்தினாலே ஹரியை நினைத்தான்.] என்கிறபடியே **மனத்தாலே நினைத்த** அவனுடைய விரோதியைப்போக்கி ரக்ஷித்ததுபோலே, **மெய்ஞ்ஞானத்தாலுணர்ந்த** இவர்களுடைய விரோதிகளான இந்திரியம் முதலானவற்றை அழித்து இவர்களையும் ரக்ஷிக்கும் என்று கருத்து.

அவதாரிகை:—"வாரிசுருக்கி மதக்களிறைந்தினையும் சேரிதிரியாமல் நிறுத்துவது முதலான அருந்தொழில்களை அவனாலே அவனைப்பெறவிருக்கும் நாம் செய்யவேண்டியதில்லை; தானே தன்னைத்தரும் தன்மையையுடையவனவன் என்று அறிந்து நீ அவனை உகப்புடன் அநுபவிக்கப்பார்" என்று நெஞ்சைநோக்கி அருளுகிறார்.

உரை:-ஒரு திருவடியை ஊர்த்₄வலோகங்களிலே செல்ல வளர்த்து, ஒரு திருக்கையாலே ப்ரதிகூலரான நமுசிப்ரப்₄ருதிகளைச் சுற்றியெறிந்து மற்றையொரு திருக்கையின்மேலே, வயிறுமறுகிப் பரிப்₄ரமிக்கிற அநுகூலரான தேவர்களும் ப்ரதிகூலரான அஸுரர்களும் நடுங்கும்படிக்கீடாக ப்ரதி பக்ஷத்தின்மேலே அழலையுமிழுகிற யுத்தஸாதனமான திரு வாழியை த₄ரித்த ஸர்வேச்வரனுடைய ஆச்ரிதர் இருந்த விடமே எல்லையாக வளரும் திருவடிகளிலே கிட்டும்படி, அளவுடைய நெஞ்சே! நிரந்தரமாகப் பொருந்தப்பார்; அது

வ்யா:—(கழல் ஒன்று எடுத்து) ஒரு திருவடியை மேலுலகங்கள் எல்லாவற்றையும் வியாபிக்கும்படி உயர வளர்த்துவிட்டு. (ஒரு கை சுற்றி) ஒரு திருக்கையாலே எதிரிகளான நமுசி முதலானவரைச் சுழற்றி எறிந்து. "என்னிது மாயம்! என் அப்பன் அறிந்திலன் முன்னைய வண்ணமே கொண்டளவாய் என்ன, மன்னு நமுசியை வானிற் சுழற்றிய மின்னு முடியனே" [பெரியாழ்திரு 1-8-8] என்று பெரியாழ்வார் அனுஸந்தித்த விருத்தாந்தத்தை உணர்த்துகிறார். (கழல் ஒன்று எடுத்து ஒரு கை சுற்றி) நமுசியுடைய ஒரு காலை எடுத்து ஒரு திருக்கையாலே சுழற்றியெறிந்து என்றும் பொருள் கொள்ளலாம். (சுழலும் சுராசுரர்கள் அஞ்ச) 'என்ன நேரிடுமோ?' என்று வயிறெரிந்து நிலைதடுமாறிச் சுழல்கின்ற அநுகூல ரான தேவர்களும், எதிரிகளான அசுரர்களும் பயந்து நடுங்கும்படியாக. (ஒருகைமேல் அழலும் செரு ஆழி ஏந்தினான்) மற்றொரு திருக்கையின் மேல், அல்தானே பயசங்கையாலே அனுகூலரா, பிரதிகூலரா என்று ஆராயாமல் தேவாசுரர்கள்மேலே நெருப்பை உமிழும் போர்க்கருவியான ஸுதர்சனாழ்வானை தரித்த ஸர்வேச்வரன். செரு ஆழி—போர்க்கருவியான சக்கரம். சண்டையை உடைய சக்கரம் என்றுமாம். (சேவடிக்கே செல்ல) அடியார் தன்னைத் தேடிவரவிராமல், தானே அவர்களிருக்குமிடம் செல்லும் திருவடிகளைக் கிட்ட. சேவடி—செல்லும் அடி. இருக்குமிடம் தேடிச் செல்லும் அடிக்குச் செல்லுவதாவது என்? என்னில்: அவ்வடிகளை விலக்காமையே சேவடிக்குச் செல்லுகையாகிறது. சேவடி-சிவந்த அடி யென்றுமாம். மலரினும் மெல்லியதாகையாலே, காடுமேடெல்லாமளந்து கன்றிச் சிவந்திருக்கிறபடி. (ஆழிநெஞ்சே) கடல்போலே பேரளவுடைய நெஞ்சே! உனக்கு உபதேசிக்க வேண்டாவன்றே. (மருவு) அச்சேவடி யானது உன்னைத் தேடிவரும்போது அதை விலக்காமல், அதோடு இடை

தேவையாகாதபடி மகிழ்வதும்செய். ப்ரீதிபூர்வமாகவாஸனை பண்ணு என்றபடி. சேவடி—சிவந்தவடியென்றுமாம்.

49. மகிழலகு கொன்றேபோல் மாறும் பல்யாக்கை
நெகிழ முயல்கிற்பார்க் கல்லால்—முகிழ்விரிந்த
சோதிபோல் தோன்றும் சுடர்பொன் நெடுமுடி எம்
ஆதிகாண் பார்க்கு மரிது.

பதவுரை:—மகிழ் அலகு ஒன்றே போல்:—மகிழ மரத்தின் விதை ஒன்றே காணி ஸ்தானத்திலும், கோடி ஸ்தானத்திலும் வைக்கப்படுவது போல், **மாறும் பல் யாக்கை**—மாறி மாறி வருகிற பல சரீரங்களை, **நெகிழ**—நீங்கிப்போகும் படியாக, **முயல்கிற்பார்க்கல்லால்**—முயற்சி செய்கின்றவர்களுக்குத் தவிர, **காண்பார்க்கும்** — காணவேணுமென்னும் விருப்பத்தையுடைய மற்றவர்களுக்கு, **முகிழ் விரிந்த சோதி போல் தோன்றும்**—மலர்ந்த தேஜஸ்ஸைப்போல் காணப்படுவதும், **சுடர் பொன் நெடு முடி**—ஒளிவிடுவதும், அழகியதும், பெரிதுமான கிரீடத்தையுடையவனும், **எம் ஆதி**—எனக்குக் காரணபூதனுயிருக்கிறவனுமான ஸர்வேச்வரன், **அரிது**—கிடைத்தற்கரியவன்.

அவதாரிகை;—எல்லாம் செய்தாலும் ப்ரக்ருதிப்ராக்ருதங்களில் விரக்தி பிறந்து அவனை ஆச்ரயிப்பார்க்கல்லது அவனைக் காணமுடியாது என்கிறார்.

உரை:— கணிதத்தில் நிபுணனாலே வைக்கப்பட்டதொரு மகிழலகு காணிஸ்தானத்திலும் கோடிஸ்தானத்திலும் மாறி

விடாமல் **அணையப்பார்**. (மகிழ்) வருத்தத்தோடு இதைச்செய்யாமல் மகிழ்வதும் செய்வாயாக. அன்போடு பகவத்விஷயத்தில் பழகு என்றபடி. (மகிழ்ந்து மருவு)என்றும் பாடம். உகந்துகந்து அநுபவிப்பாயாக என்றபடி.

அவதாரிகை:—எவ்வளவு ஸாதனங்களை அநுஷ்டித்தாலும், இதர **விஷயங்களில்** வைராக்யம் பிறந்து அவனை ஆச்ரயிப்பவர்களுக்கல்லது, **அவனைக்** காணமுடியாது என்கிறார்.

மாறி நிற்குமாப்போலே, ப₄க₃வத்ஸங்கல்பத்தாலே கர்மாநுகு₃ணமாக உச்சாவசரூபேண மாறிமாறிவரக்கடவ ப்₃ரஹ்மாதி பிபீலிகாந்தமாகப் பலவகைப்பட்ட சரீரங்கள் தன்னடையே விட்டு நீங்கும்படியாக, ஜ்ஞாநபக்தி வைராக்₃ய ஸம்பாத₃நமுகே₂ந யத்நம்பண்ணுமவர்களுக்கல்லது விகஸித ஸ்வரூபமான தேஜஸ்ஸைப்போலே தோற்றுகிற தேஜஸ்ஸை யுடைத்தாய், ஸ்ப்ருஹணீயமாய், ஆதி₄ராஜ்யஸூசகமான திருவபி₄ஷேகத்தையுடையனாய், எல்லார்க்கும் என்னுடை

வ்யா:—(மகிழலகொன்றேபோல் மாறும் பல்யாக்கை) பலகறை, மகிழம்விதை முதலியவற்றைக்கொண்டு கணிதம் பார்க்கிற முறைகள் சிலவுண்டு. அவற்றிலே, கணிதத்தில் வல்லவனாயிருப்பவன் ஓரே மகிழம் விரையை ஒருசமயத்தில் காணிஸ்தானம் எனப்படும் மிகத்தாழ்ந்த ஸ்தானத்திலும் வைத்துக்கணக்குப்பார்ப்பான் மற்றொரு சமயத்தில் அதையே கோடிஸ்தானம் எனப்படும் மிகவுயர்ந்த ஸ்தானத்தில் வைத்துக் கணக்குப்பார்ப்பான். [நவீன மேனாட்டு கணிதநிபுணர்கள் அல்ஜீப்ரா எனும் கணிதமுறையில் x என்னும் எழுத்துக்கு ஒரு கணக்கில் மிகக்குறைந்த மதிப்பும், மற்றொரு கணக்கில் மிகவுயர்ந்த மதிப்பும் கொடுத்துக் கணக்கிடுவது போன்றது இதுவென்று கொள்க.] இது போலவே பகவானுடைய ஸங்கல்பத்தாலே இந்த ஸம்ஸாரிசேதனனுடைய சரீரமும் கர்மாநுகுணமாக ஒருசமயத்தில் மிகச்சிறிய எறும்புருவாயிருக்கிறது. மற்றொருசமயம் மிகவுயர்ந்த பிரமனாகவும் ஆகிறது. இதனிடையே தேவர், மநுஷ்யர், திர்யக், ஸ்தாவரம் என்று எத்தனையோ ஏற்றத்தாழ்வுகளையும் அடைகிறது. இந்த விசித்திரத்தைக் குறிக்கிறார் 'மகிழலகொன்றேபோல் மாறும் பல் யாக்கை' என்று. (மகிழலகொன்றே போல் மாறும்) இத்தொடரை அடியொற்றியே பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் **"படுநைகவராடிகேவ க்லுப்தா ஸ்த₂லயோ: காகணிகாஸுவர்ண கோட்யோ:"** *[ர-ஸ்த 2-88]* [ஸமர்த்தனான ஒரு அரசனால் ஒரு பைஸாவின் ஸ்தானத்திலும், ஒரு ஸவரன் ஸ்தானத்திலும் கல்பிக்கப்பட்ட ஒரு பலகறைபோலே] என்று அருளினார். (யாக்கை நெகிழ முயல்வற்பார்க்கல்லால்) இப்படிப்பட்ட இந்த சரீரம் தானேவிட்டு நீங்கும்படியாக ஞானம், பக்தி, வைராக்யம் முதலான நற்குணங்களைப்பெற முயற்சி செய்பவர்களுக்கல்லது, (முகில் விரிந்த சோதிபோல் தோன்றும் சுடர் பொன் நெடுமுடி எம் ஆதி) மலர்ச்சிபெற்ற மஹாதேஜஸ்ஸைப்போலே தோன்றும் ஒளியையுடையதாய், பொன்போலே விரும்பத்தக்கதாய், **"ஆதி₄ராஜ்யமதி₄கம் பு₄வநாநாம் ஈசதே பிசுநயந்கில மௌளி:"** *[வரத-ஸ்த-25]*

யவனென்று முறைசொல்லிப் பற்றலாம்படி ஸர்வகாரண பூ₄தனான ஸர்வேச்வரன், கேவலம் காணவேணுமென்றிருப்பார்க்கும் அரியனாயிருக்கும்.

50. அரியபுல னைந்தடக்கி யாய்மலர்கொண்டு ஆர்வம்
புரிய பரிசினால் புல்கில்—பெரியனாய்
மாற்றாது வீற்றிருந்த மாவலிபால் வண்கைநீர்
ஏற்றானைக் காண்ப தெளிது.

பதவுரை:—**அரிய**–அடக்க முடியாததான, **புலன் ஐந்து**–ஐந்து இந்திரியங்களையும், **அடக்கி**–வசப்படுத்தி, **ஆய் மலர் கொண்டு**—ஆராய்ந்து எடுத்த புஷ்பங்களைக் கையில் கொண்டு, **ஆர்வம் புரிய பரிசினால்**—அன்பு மிக்க வழியாலே, **புல்கில்**—தொழுதால், **பெரியனாய்**–(செல்வத்திலும், கொடையிலும்) பெருத்தவனாய், **மாற்றாது வீற்றிருந்த**–(கொடுப்பதில்) மாறுபடாமலிருந்த, **மாவலிபால்**–மஹாபலியிடம், **வண்கை**–உதாரமான திருக்கையிலே, **நீர் ஏற்றானை**—தானஜலத்தை வாங்கின எம்பிரானை, **காண்பது**—ஸேவிப்பது, **எளிது**—ஸுலபமாயிருக்கும்.

அவதாரிகை:–இதரவிஷயஸங்கமற்று ஸ்நேஹபுரஸ்ஸரமாக ஆஶ்ரயிக்குமவர்களுக்கு அவனைக்காணச் சால எளிது என்கிறார்.

[ஸர்வேச்வரனே! உன் கிரீடமே நீ எல்லாவுலகுக்கும் சக்கரவர்த்தியென்பதைக் கோட்சொல்லித்தருகிறது.] என்கிறபடியே இவனுடைய ஸர்வாதிபத்யத்தைக் கோட்சொல்லித்தருவதான நீண்ட முடியையுடையவனும் எல்லாச் சேதனர்க்கும் 'என்னுடையவன்' என்று உறவுசொல்லிப் பற்றலாம்படி அனைவர்க்கும் காரணனாயிருப்பவனுமான ஸர்வேச்வரன், (ஆதி காண்பார்க்கும் அரிது) ஸர்வேச்வரனான இவன், தகுந்த யோக்யதையைப் பெறாமல் தன்னைக் காணவேணும் என்னும் நினைவைமாத்திரம் உடையவர்க்கு அரியனாகவேயிருப்பன். 'காண்பார்க்கும்' என்ற உம்மையாலே கேட்பார்க்குமரிது என்று உணர்த்தப்படுகிறது. ப்ராக்ருதவிஷயங்களை விரும்பிக்கொண்டே அவனைக் காணவேணும், கேட்கவேணும் என்னும் விருப்பத்தை மாத்திரமுடையவர்களுக்கு முகங்காட்டமாட்டானிவன் என்று கருத்து. 'ஆதி காண்பு ஆர்க்கும் அரிது' என்று பிரித்தும் பொருள்கொள்ளலாம்.

அவதாரிகை:—மற்ற விஷயங்களில் பற்றற்று அன்போடு கூட அவனை அடைபவர்களுக்கு அவனைக்காண்பது மிகஎளிது என்கிறார்.

உரை:—நியமிக்கவரிதான ச்ரோத்ராதி$_3$ஜ்ஞாநேந்த்$_3$ரியங்களைந்தையும் இதரவிஷயங்களில் போகாதபடி நியமித்து, அங்குத்தைக்கு யோக்$_3$யமாம்படி மயிர்புழுவறச்சோதித்த செவ்விப்பூக்களை ஸம்பாதித்துக்கொண்டு ஸ்நேஹோத்தரமான ப்ரகாரத்தாலே, அபி$_4$மதவிஷயத்தை அணைக்குமாப் போலே போ$_4$கரூபமாக ஆச்ரயிக்கில், ஈச்வரனிலுங்காட்டில் தன்னைப்பெருக்க நினைத்திருக்குமவனாய், அர்த்திகளுக்குக் கொடுக்கும் கொடையில் ஒன்றும் மாறாமல், 'ஸர்வஸ்வதானம் பண்ணக்கடவன்' என்று தன்வேறுபாடு தோற்ற வீற்றிருந்த மஹாபலிபக்கலிலே கொடுக்கக்கொடுக்கப் பூரிக்

வ்யா:—(*அரிய புலன் ஐந்து அடக்கி*)

சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி$_4$ ப$_3$லவத் த்$_3$ருட$_2$ம்
தஸ்யாऽஹம் நிக்$_3$ரஹம் மந்யே வாயோரிவ ஸுது$_3$ஷ்கரம்॥
[கீதை 6-34]

[கிருஷ்ணா! மனம் நிலையற்றதாகவும், நிலைகலங்கச் செய்வதாயும், பலமுள்ளதாகவும், (கீழான விஷயங்களில்) நிலையானதாகவுமிருக்கிறதன்றோ. வாயுவைப்போல், அதை அடக்குவதையும் மிகவும் செய்தற்கரியதாகவே நான் நினைக்கிறேன்.] என்கிறபடியே அடக்க அரிதான மெய்வாய் கண் மூக்குச்செவி என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தையும், சப்தஸ்பர்சரூபரஸ கந்தங்களாகிற இதரவிஷயங்களில் போகாதபடி அடக்கி. இப்படி அடக்க வேண்டிய அவசியம் என்ன? எனில்: "ஒரு செய்யிலே (வயலிலே) பாயும் நீர் இரண்டு செய்யிலே பாய்ந்தால் இரண்டு செய்க்கும் போராதொழியுமிறே. (ஆகையாலே) ஸர்வேச்வரனை இச்சிக்கக்கடவவான இந்த்ரியங்களை விஷயங்களிற்போகாதபடி அடக்கி" என்பர் பெரியவாச்சான்பிள்ளை. (ஆய் மலர் கொண்டு) பகவத் விஷயத்துக்குத் தகுந்ததாயிருக்கும்படி மயிர், புழு முதலான அசுத்தங்களில்லாதபடி ஆய்ந்தெடுத்த மலர்ந்த பூக்களைத் தேடியெடுத்துக்கொண்டு. (ஆர்வம்புரியபரிசினால்) அன்புமிக்கவழியாலே. (புல்கில்) காதலன் காதலியை அணைப்பதுபோலே ஸர்வேச்வரனைப் பெருங்காதலோடு அணைத்தால். (பெரியனாய் மாற்றாது வீற்றிருந்த மாவலி) "ஈச்வரோஹம்" [கீதை 16-15] என்கிறபடியே ஸர்வேச்வரனைக்காட்டிலும் தன்னைப் பெரியவனாக நினைத்திருப்பவனாய், கேட்பார் கேட்டதையெல்லாம் கொடுக்கும் கொடைக்குணத்தில் சிறிதும் மாறாமல் 'எல்லாவற்றையும் கொடுப்பேன்' என்றுபறைசாற்றிக்கொண்டு தன் பெருமைதோற்ற வீற்றிருந்த மஹாபலி. (பெரியனாய்) செல்வத்திலும் வண்மையிலும் பெரியவனாய் என்றுமாம்.

கிற அழகியதிருக்கையிலே தான் அர்த்தியாய்ச் சென்று நீரையேற்று மண்கொண்டவனைக் கண்டு அநுப$_4$விக்கை சால எளிதாயிருக்கும்.

51. எளிதி லிரண்டடியுங் காண்பதற்கு என்னுள்ளம்
தெளியத் தெளிந்தொழியும் செவ்வே—களியில்
பொருந்தா தவனைப் பொரலுற்று அரியா
யிருந்தான் திருநாம மெண்.

பதவுரை:—என் உள்ளம்-*என்னுடைய நெஞ்சமே!* **எளிதில்**-*ஸுலபமாக,* **இரண்டு அடியும்**-*இரண்டு திருவடிகளையும்,* **காண்பதற்கு**-*ஸேவிப்பதற்குத் தகுந்தபடி,* **தெளிய**—*(நீ) தெளிவு பெற்றால்,* **செவ்வே தெளிந்தொழியும்**- *(அவனும்) நன்றாக உகந்து விடுவான்;* **களியில்**—*கர்வத்தினால்,* **பொருந்தாதவனை**-*தன்னைச் சேராதவனுடன்,* **பொரல் உற்று**—*போர் செய்கைக்கு ஒருப்பட்டு,* **அரியாய்**-*நரஸிம்ஹமாய்,* **இருந்தான்**-*அவதரித்தவனுடைய,* **திருநாமம்**-*அழகிய பெயர்களை,* **எண்**-*எண்ணுவாயாக.*

அவதாரிகை:— *இனிதாகத் திருநாமத்தை வாயாலே சொல்லவே ப்ரஹ்லாதனுக்கு விரோதியைப்போக்கித் தன்னைக் கொடுத்தாப்போலே நமக்குத் விரோதி$_4$யைபோக்கித் தன்னை நமக்குத் தந்தருளும் என்கிறார்.*

(மாவலிபால் வண்கைநீர் ஏற்றானைக்காண்பது எளிது) அந்த மஹாபலியின் பக்கலிலே, "அலம்புரிந்த நெடுந்தடக்கை" [திருநெடு-6] என்கிறபடியே யாசிப்பார் 'போதும் போதும்' என்று கூறும்படியாகக் கொடுத்துக் கொடுத்துப் பூரித்துவளரும் திருக்கையாலே தானநீர் ஏற்று மண்கொண்டவனைக்கண்டு அநுபவிப்பது எளிது. (புல்கில் எளிது) அபேக்ஷாநிரபேக்ஷமாகத் திருவுலகை அளந்தாற்போலே ஆசாலேசமுடையாரையும் அணையவருவான் அவன். அப்போது அவனை விலக்காமல் அன்போடு அணைப்பவர்களுக்கு மிக எளியனாயிருப்பானவன். (மாவலிபால்...எளிது) எத்தனையோ தோஷங்களிருந்தும் விலக்காமையையே பற்றாசாகக்கொண்டு மஹாபலியிடம் யாசகனாய் வந்தான். அப்படிப்பட்டவன் அரிய புலன் ஐந்தடக்கி ஆய்மலர் கொண்டு ஆர்வம் புரிய பரிசினால் புல்கில் எளியவனாவான் என்பது சொல்லவும்வேணுமோ?

உரை:—எனக்கு விதேயமான நெஞ்சே! காணவேணும் என்னும் அபிஸந்தியுடையார்க்கு அதிஸௌலபமான திருவடிகளிரண்டையும்கண்டு அநுபவிக்கைக்கு நீ அழகிதாக விஷய காலுஷ்யமற்று நிர்மலமாக, அவன் மேலெழவன்றிக்கே திருவுள்ளத்தோடே செவ்விதாக நான் முன்பு பண்ணின ப்ராதிகூல்யபரம்பரைகளிலே அதிப்ரஸந்நனாய்விடும். **“न नमेयं” (ந நமேயம்)** என்று தன்னைக் கிட்டோம் என்றிருந்த ஹிரண்யனைப் பொருதுமுடிக்கையிலே ஒருப்பட்டு அவன் வரத்துக்குள்ளடங்காத நரஸிம்ஹவேஷத்தையுடையனாய்க்கொண்டு

அவதாரிகை:—இனிய பாலைக்குடிக்கவே பித்தம் தீருமாப்போலே, இனிதாகத் திருநாமத்தை வாயாலே சொல்லவே, ப்ரஹ்லாதனுக்கு விரோதியைப்போக்கித் தன்னைக் கொடுத்தாப்போலே நம் விரோதிகளைப் போக்கித் தன்னை நமக்குக் கொடுத்தருளுவான் என்று தம் திருவுள்ளத்தை நோக்கி அருளிச்செய்கிறார்.

வ்யா:—(என் உள்ளம்) உள்ளம்! என்றது விளி. எனக்கு வசப்பட்டிருக்கும் நெஞ்சமே! என்றபடி (எளிதில் இரண்டடியும் காண்பதற்கு) காணவேணும் என்னும் உறுதியுள்ளவர்களாய் சென்ற பாசுரத்திற்படியே அரியபுலனைந்தடக்கி ஆய்மலர்கொண்டு ஆர்வம்புரிய பரிசினால் புல்குமவர்களுக்கு எளிதாயிக்கும் இரண்டுதிருவடிகளையும் காணத்தக்கபடி. எளிதில்—எளிதாயிருக்கும். அன்றிக்கே எளிதில் காண்பதற்கு—எளிதாகக் காண்பதற்கு என்றுமாம். அப்படியுமன்றியே எளிது இல்—நாற்பத்தொன்பதாம் பாசுரத்தில் சொல்லியபடியே காணவேணும் என்னும் ஆசையை மாத்திரம் உடைய விஷயப்ரவணர்க்கு ஸௌலபமல்லாத திருவடிகள் என்றுமாம். (காண்பதற்குத் தெளிய) அத்திருவடிகளைக்கண்டு அனுபவிக்கலாம்படி நீ தெளிவு பெற்றாயாகில், விஷயங்களிலே ஈடுபட்டுக் கலங்கிநிற்கும் நீ அவற்றிலே பற்றைவிட்டு அழகாகத் தெளிவுபெற்றாயாகில். (செவ்வே தெளிந்தொழியும்)அவனும் மேலெழுந்தவாரியாகவல்லாமல் மனப்பூர்வமாக நன்கு தெளிந்துவிடுவான். அதாவது:-நான் முன்செய்த துஷ்கர்மஸமூஹங்களாலே கலங்கியிருந்தவன் என் மனமாகிற நீ தெளிந்தவுடன் தானும் மனப்பூர்வமாக மிகத்தெளிந்துவிடுவான். இவ்விஷயத்தில் ப்ரமாணமென்னவெனில்: சிறுவனான பிரஹ்லாதன் தெளிந்துநிற்க, அவன் விஷயத்தில் தெளிந்து நின்று காரியம் செய்தபடி கண்டிலையோ? என்கிறார் மேலே: (களியில் பொருந்தாவனை) வரபலம், அத்தால் வந்த தேஹபலம் முத

ப்ரஹ்லாத விரோதியைக் கைதொட்டழித்த ஆஹ்லாதத்தாலே ஸுப்ரதிஷ்டிதனாயிருந்த ஸர்வேச்வரனுடைய ஆச்ரித வாத்ஸல்யாதிகுணங்களுக்கு வாசகமான திருநாமங்களை ரஸ்யதையாலே நெஞ்சிலே ஊற்றிருக்கும்படி அநுஸந்தி$_4$. பின்னை நம் கையிலும் பிறர்கையிலும் விட்டுக்கொடான் என்று கருத்து.

எளிதில்—எளிதல்லாத—ஸுலப$_4$மல்லாத இரண்டு திருவடிகள் என்னுதல். என்னுள்ளம்—என் உள்ளமே! என்று ஸம்பு$_3$த்$_3$தி$_4$.

52. **எண்மர் பதினொருவ ரீராறுவ ரோரிருவர்**
வண்ண மலரேந்தி வைகலும்—நண்ணி
ஒருமாலை யால்பரவி யோவாது எப்போதும்
திருமாலைக் தொழுவர் சென்று.

பதவுரை:—**எண்மர்**—அஷ்டவஸுக்களும், **பதினொருவர்**—ஏகாதசருத்ரர்களும், **ஈராறுவர்**—த்வாதசாதித்யர்களும், **ஓர் இருவர்**—இரட்டையரான அச்விநீதேவர்களும், **வண்ணம் மலர் ஏந்தி**—பல நிறங்களையுடைய பூக்களை ஏந்திக்கொண்டு, **வைகலும் நண்ணி**—தினந்தோறும் அணுகி, **ஒரு மாலையால்**—ஒப்பற்ற புருஷஸூக்தமாகிற சொல்மாலையாலே, **ஓவாது எப்போதும்**—இடைவெளியின்றியிலே எல்லாக்காலமும், **பரவி**—துதித்து, **திருமாலை**—லக்ஷ்மீநாதனை, **சென்று கைதொழுவர்**—அணுகி வணங்குவார்கள்.

லானவற்றாலே கர்வங்கொண்டு "எவருக்கும் வணங்கமாட்டேன் என்று ராவணனைப்போலே கூறிக்கொண்டு தன்னிடம் பொருந்தாமலிருந்த இரணியனை. (பொரலுற்று) சண்டைசெய்து அழிக்கமுற்பட்டு. (அரியாய்) அவன் வரத்துக்குள் அடங்காத நரசிங்கவேஷத்தையுடையவனாய் (இருந்தான்) அடியானான ப்ரஹ்லாதனின் விரோதியைப்போக்கிய உகப்பாலே நிலையாக இருந்தான். "சீற்றத்துக்கு இறைபோராமல் சோம்பியிருந்தான்" என்பர் பெரியவாச்சான்பிள்ளை. (திருநாமமெண்) அந்த ஸர்வேச்வரனுடைய ஆச்ரிதவாத்ஸல்யம், ஸௌசீல்யம் முதலான குணங்களைச் சொல்லும் திருநாமங்களை இனிமையாலே நெஞ்சிலே ஊன்றியிருக்கும்படி எண்ணுவாயாக. அப்படி எண்ணினால் நம்மை நாமே ரக்ஷித்துக் கொள்ளும்படியாகவும், பிறர் ரக்ஷிக்கும்படியாகவும் கைவிட்டுவிடமாட்டான். ப்ரஹ்லாதனைத் தானே ரக்ஷித்ததுபோலே வந்து ரக்ஷிப்பான் என்கிறார்.

அவதாரிகை:—நமக்கு அவன் பேர் சொல்லாவிடில் ஜீவிக்க அரிதோ? என்ன, து$_3$ர்மானிகளான அதி$_4$காரி புருஷர்களடங்கலும் அவனை ஆஶ்ரயித்தன்றோ தங்கள் அதி$_4$காரங்களைப் பூண்கட்டிக்கொள்ளுகிறது. நமக்குப் பின்னைச் சொல்லவேணுமோ? என்கிறார்.

உரை:— அஷ்டவஸுக்களும், ஏகாத$_3$ஶருத்$_3$ரர்களும், த்$_3$வாத$_3$ஶாதி$_3$த்யர்களும், அத்$_3$விதீயரான அச்விநிகளிருவரும், நாநாவர்ணமான புஷ்பங்களை த$_4$ரித்துக்கொண்டு ஸர்வகாலங்களிலும் வந்துகிட்டி, அத்$_3$விதீயமான ஸ்ரீபுருஷஸூக்தாதி$_3$ ஸந்த$_3$ர்ப்ப$_4$ங்களைக்கொண்டு அடைவுகெடப்

அவதாரிகை:—"திருநாமம் எண்" என்று திருவுள்ளத்தைநோக்கி அருளிச்செய்தார் கீழ்ப்பாசுரத்தில். 'நமக்கு அவன்பேர் சொல்லாவிடில் உயிர்வாழ முடியாதோ?' என்று திருவுள்ளம் கேட்க, 'துரஹங்காரமுடைய அதி$_4$காரிபுருஷர்களானதே$_3$வர்களும் அவனைத் தொழுதேதங்களுடையஅதி$_4$காரங்களை உறுதிசெய்துகொள்ளும்போது, நாம் அவனுடைய திருநாமத்தாலேயே உயிர்வாழவேணும் என்பதைச் சொல்லவேணுமோ?' என்கிறார்.

வ்யா:—(எண்மர்) அஷ்டவஸுக்களும், (பதினொருவர்) பதினொரு உருத்திரர்களும், (ஈராறுவர்) பன்னிரு ஆதித்யர்களும், (ஓர் இருவர்) அழகிலே ஒப்பற்றவர்களான அச்விநீதேவதைகள் இருவரும், இப்படி முப்பத்துமூன்று தேவதைகளைச் சொன்னது முப்பத்துமுக்கோடி தேவதைகளுக்கும் உபலக்ஷணம். ருக்வேதம் பத்தாம்மண்டலம் 125-வது ஸூக்தம் முதல்மந்திரத்திலே **"ருத்$_3$ரேபி$_4$: வஸுபி: ஆதி$_3$த்யை: அச்விநோப$_4$ா"** என்று இம்முப்பத்துமூன்று தேவர்தலைவர்களும் எடுக்கப்பட்டது இங்கு அறியத்தக்கது. (வண்ணமலரேந்தி) நாநாவர்ணங்களையும் காட்டும் திருமேனிக்குப் பொருத்தமாகப் பலவர்ணங்களையுடைய மலர்களை ஏந்தி, (வைகலும் நண்ணி) ஒருநாள் இரண்டுநாளல்ல; தினந்தோறும் ஸர்வேச்வரனைச் சென்று அடைகிறார்கள். அடைந்து செய்வதென்? என்னில்: (ஒருமாலையால் பரவி) ஒப்பற்றதான புருஷஸூக்தத்தாலே துதித்து. **"வேதே$_3$ஷு பௌருஷம் ஸூக்தம்"** [வேதங்களுள் சிறந்தது புருஷஸூக்தம்] என்று சொல்லப்படுகிறதன்றோ. (பரவி) அன்பின்மிகுதியாலே முறை தவறித் துதித்து. (ஓவாது எப்போதும்) துதித்து முடித்தார்கள் என்பதில்லாமல் எல்லாக்காலத்திலும் இடைவிடாமல் துதித்துக்கொண்டேயிருக்கிறார்கள். (திருமாலைக் கைதொழுவர்) லக்ஷ்மீநாதனைக் கைகளால்

புகழ்ந்து, எல்லாக்காலத்திலும் உச்சிவீடுவிடாதே அபி$_4$மதங்களை க$_4$டிப்பிக்கும் க$_4$டகையான பெரியபிராட்டியாரோடே கூடியிருக்கிற ஸர்வேச்வரனை து$_3$ர்மானத்தைத் துறந்து சென்று கிட்டி ஆச்ரயிப்பர்கள்.

53. **சென்றால் குடையா மிருந்தால் சிங்காசனமாம்**
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு
மணையாம் திருமாற் கரவு.

பதவுரை:—திருமாற்கு—*பிராட்டியுடன் கூடியிருக்கும் எம்பெருமானுக்கு,* **அரவு**—*திருவநந்தாழ்வான்,* **சென்றால் குடை ஆம்**—*(எம்பெருமான்) உலாவப்புக்கால் குடையாயிருப்பன்;* **இருந்தால் சிங்காசனமாம்**—*எழுந்தருளியிருந்தால் ஸிம்ஹாஸனமாயிருப்பன்;* **நின்றால்**—*நின்றுகொண்டிருந்தால்,* **மரவடியாம்**—*திருப்பாதுகையாயிருப்பன்;* **நீள் கடலுள்**—*பரந்த கடலிலே,* **என்றும்**—*கண்வளர்ந்தருளும்போதெல்லாம்,* **புணை யாம்**—*தெப்பமாயிருப்பன்;* **மணி விளக்காம்**—*மங்களதீபமாயிருப்பன்;* **பூம் பட்டாம்**—*அழகிய திருப்பரியட்டமாயிருப்பன்;* **புல்கும் அணையாம்**—*தழுவிக்கொள்ளும் தலையணையாயிருப்பன்.*

தொழுவார்கள். தாங்கள் விரும்பும் தர்மார்த்தகாமமோக்ஷங்களாகிற பயன்களை ஸாதித்துக்கொள்வதற்கு புருஷகாரபூதையான பெரியபிராட்டியாரோடே கூடியிருக்கிற ஸர்வேச்வரனை ஆச்ரயிப்பார்கள். (ஒருமாலையால் பரவி-திருமாலைக் கைதொழுவர்) "ஹ்ரீச்சதே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ" என்னும் புருஷஸூக்தமந்திரத்தைச் சொல்லி லக்ஷ்மீநாதனைச் சரண் புகுவர். "தது$_3$பர்யபி ப$_3$ாத$_3$ராயண: ஸம்ப$_4$வாத்" [ப்ரஹ்மஸூத்ரம்1-3-25] ['ப்ரஹ்மோபாஸனம், (மநுஷ்யர்களைக்காட்டிலும்) மேலான தேவர்களுக்கும் (கூடும்)' என்று ப$_3$ாத$_3$ராயணர் (நினைக்கிறார்); (அவர்களுக்கும் மோக்ஷத்தில் விருப்பமுடைத்தாயிருக்கையாகிற அர்த்தி$_2$த்வமும், மோக்ஷஸாதனத்தை அநுஷ்டிக்கத்தக்க ஸாமர்த்தியமும்) இருக்கக்கூடுமாகையால்.] என்கிறபடியே மோக்ஷத்திற்காகவும் தேவர்கள் பரமாத்மாவை உபாஸிக்கக்கூடும் என்று ப்ரஹ்மஸூத்ரத்தில் நிர்ணயிக்கப்பட்டது. (சென்று) "ஈச்வரோஹம்" என்றிருக்கும் தங்களுடைய துரபிமானத்தைவிட்டு, அவனிருக்குமிடம் சென்று அவனை ஆச்ரயிப்பார்கள்.

அவதாரிகை:–ஸ்வப்ரயோஜநத்துக்கு மடியேற்கும் து₃ர்மாநிகள் ஆச்ரயிக்கும்படியை அநுஸந்தி₄த்த உள்வெதுப்படங்கும்படி அநந்யப்ரயோஜனராய், அபி₄மாநக₃ந்த₄ரஹிதராய், தத்தத₃வஸ்தோ₂சிதமான வடிவெடுத்துக்கொண்டு அடிமைசெய்யக்கடவ நித்யஸூரிகளுக்குத் தலைவனான திருவநந்தாழ்வான் அங்குத்தைக்கு அடிமைசெய்யும்படியை அநுப₄விக்கிறார்.

உரை:-பெரியபிராட்டியாரோடே நித்யஸம்யுக்தனாயிருக்கிற ஸர்வேச்வரனுக்கு, அவனும் அவளுங்கூடக் கண்ணற்றுத் துகைத்துப்பரிமாறுகைக்கு யோக்₃யமான வடிவையுடைய திருவநந்தாழ்வான், உகப்புக்குப் போக்குவீடாக அவன் உலாவியருளப்புக்கால் மழை வெய்யில் படாதபடி

அவதாரிகை:—சுயநலத்தை விரும்பி யாசிக்கும் துரபிமானிகளான தேவர்கள் அவனையடையும்படியைச் சென்ற பாசுரத்தில் பேசியதாலே உண்டான மனவருத்தம் நீங்கும்படியாக, ஒருபயனையும் கருதாதவராய், துரபிமானத்தின் நாற்றமும் அற்றவர்களாய், பரமபுருஷனுடைய அந்தந்த நிலைகளுக்குரிய வடிவையெடுத்துக்கொண்டு அடிமைசெய்பவரான நித்ய ஸூரிகளுக்குத் தலைவனான திருவனந்தாழ்வான் பரமபுருஷனுக்கு அடிமை செய்யும்படியை அநுபவிக்கிறார்.

வ்யா:—(திருமாற்கு) பெரியபிராட்டியாருடன் எப்போதும் சேர்ந்தேயிருக்கும் ஸர்வேச்வரனுக்கு. **"தயா ஸஹாஸீநமநந்தபோ₄கி₃நி"** [ஸ்தோ-ர 39] [திருவநந்தாழ்வான்மேலே, பெரியபிராட்டியாரோடு எழுந்தருளியிருப்பவனை] என்றார் ஆளவந்தார். (அரவு) திருவனந்தாழ்வான். பரமபுருஷன் பிராட்டியோடு தனியேயிருக்கும்போதும் ஒரு சேதனன் என்று கூசவேண்டாமல், அவனும் அவளுங்கூட இஷ்டப்படித் துகைத்து விளையாடலாம்படியான பஞ்சணைபோலேயிருக்கிறபடி. ராஜாக்களின் அந்த:புரங்களிலே கூனர், குறளர், அலிகள் முதலானோர் வேலைக்காரர்களாயிருப்பதுபோலே இவனுமிருக்கிறபடி. (அரவு) கட்டிப்பொன் பலவிதமான ஆபரணங்களாக்கவல்லதாயிருப்பதுபோலே இவ்வடிவமும், குடை, சிங்காசனம், மரவடி, புணை, மணிவிளக்கு, பூம்பட்டு, அணை முதலான பல கைங்கர்யோபகரணங்களாகஆக்கிக்கொள்ளலாம்படியிருக்கிறது. (சென்றால் குடையாம்) தன் உகப்புக்குப் போக்குவீடாக ஸர்வேச்வரன் உலாவியருளப் புக்கால், மழை வெய்யில்படாதபடி குடையாக ஆவான் திருவனந்தாழ்வான். க்ருஷ்ணாவதாரத்திலே குழந்தையாகிற கண்ணனை வஸுதேவர் தூக்கிச்

குடையாம். தன் இச்சையாலே எழுந்தருளியிருந்தால் திவ்ய ஸிம்ஹாஸனமாம். ஸ்வேச்சை₂யாலே எழுந்தருளிநின்றால் திருவடிநிலைகளாம். பரப்பையுடைத்தான கடலிலே கண் வளர்ந்தருளும்போதைக்கு ஸர்வகாலத்திலும் திருப்பள்ளி மெத்தையாம். ஏதேனுமொன்றை விளக்கிட்டுக்காண அபே க்ஷிதமானபோது மங்க₃ளதீ₃பமாம். சாத்தியருளத் திருப் பரியட்டம் அபேக்ஷிதமான ஸமயத்தில், பும்ஸ்த்வாவஹமான அழகிய திருப்பரியட்டமாம். சாய்ந்தருளின போதைக்குப் பிராட்டிமார் 'சீறுபாறு' என்னும்படி தழுவணையாம்.

54. அரவ மடல்வேழ மான்குருந்தம் புள்வாய்
குரவை குடமுலைமற் குன்றம்—கரவின்றி
விட்டிறுத்து மேய்த்தொசித்துக்கீண்டு கோத்தாடி உண்
டட்டெடுத்த செங்கணவன்.

சென்றபோது இவன் குடையாகப் பின்தொடர்ந்ததைக் கண்டோமன்றோ' **"வர்ஷாதபவாரணதி₃பி₄:"** [ஸ்தோ-ர 40]என்றார் ஆளவந்தார். (சென்றால்) "நான் குடையாய் நின்றேன்; நீ உலாவுவாயாக" என்று கூறுவதில்லை. அவன் உலாவினால் குடைவேண்டியபோது தான் குடையாகிறான். சேஷி யுகந்த அடிமைசெய்பவன் என்றுகருத்து. இதனாலன்றோ 'சேஷன்' எனப் படுகிறான். (இருந்தால் சிங்காசனமாம்) ஸர்வேச்வரன் தானே விரும்பி எழுந்தருளியிருக்க நினைத்தபோது அழகிய ஸிம்ஹாஸனமாகத் தன்னை ஆக்கிக்கொள்வன். (நின்றால் மரவடியாம்) அவன் தான் விரும்பி எழுந் தருளிநின்றால் இவன் திருப்பாதுகைகளாவான். (நீள் கடலுள் என்றும் புணையாம்) பெரும் பரப்பையுடையதான திருப்பாற்கடலிலே கண்வளர்ந் தருளும்போது இவன் எல்லாக்காலத்திலும் திருப்பள்ளிமெத்தையாயிருப் பான். (மணிவிளக்காம்) ஏதேனும் ஒரு பொருளை விளக்கிட்டுக் காண வேண்டியிருக்கும்போதும், மங்களகாலங்களிலே மங்களதீபம் வேண்டி யிருக்கும்போதும் சோதிமயமான இரத்தினங்களைத் தலையிலே தாங்கி நிற்கும் இவன் மங்களதீபமாகவும் ஆவான். (பூம்பட்டாம்) ஸர் வேச்வரன் சாத்திக்கொள்ளத் திருப்பீதாம்பரம் வேண்டியிருக்கும்போது இவன்தானே பரமபுருஷனெனக் காட்டித்தரும் திருப்பீதாம்பரமாவான் (புல்கும் அணையாம்) சாய்ந்தருளும்போது,பிராட்டிமாரும்பொறாமைகொள் ளும்படி பரமபுருஷன் தழுவிக்கொள்ளும் அணையாக ஆவான் திருவநந்தாழ் வான். பிராட்டிமாரோடு ஊடல் நடையாடும்போது அத்துன்பம் தீரத்தழு விக்கொள்ளும் அணையாயிருப்பான் என்றுமாம். **"நிவாஸசய்யா"** [ஸ்தோ-ர 40] என்னும் ச்லோகத்திலே ஆளவந்தார் இப்பாசுரத்தை மொழிபெயர்த்தருளினார்.

பதவுரை:—**செம் கண் அவன்** — செந்தாமரைக்கண்ணனாகிய எம்பெருமான், **கரவு இன்றி**-மறைவில்லாமல், **அரவம் விட்டு**—காளியநாகத்தை விரட்டிவிட்டும், **அடல் வேழம் இறுத்து**-சண்டைசெய்யவந்தகுவலயாபீடமென்ற யானையின் கொம்பை முறித்தும், **ஆன் மேய்த்து**-பசுக்களை மேய்த்தும், **குருந்தம் ஒசித்து**—(அஸுராவேசமுடைய) குருந்தமரத்தை ஒடித்தும், **புள் வாய் கீண்டு**—கொக்குருவங்கொண்டு வந்த அஸுரனுடைய வாயைக்கிழித்தும், **குரவை கோத்து**-(ஆய்ச்சிகளுடன்) ராஸக்ரீடைசெய்தும், **குடம் ஆடி**—குடக்கூத்து ஆடியும், **முலை உண்டு**-(பூதனையின்) முலைப்பாலை (உயிருடன்) உறிஞ்சியும், **மல் அட்டு** — (சாணூரமுஷ்டிகர்களென்னும்) மல்லர்களைக் கொன்றும், **குன்றம் எடுத்த** — கோவர்த்தன கிரியை எடுத்தும் (செய்த செயல்களிருந்தபடியென்!)

அவதாரிகை:—இப்படி தன் நினைவுக்கீடாக அடிமை செய்யும் திருவநந்தாழ்வானுகிற படுக்கையைவிட்டு, இங்கே வந்து அவதரித்துக் களைபிடுங்கித் தன் விபூ$_4$தியை நோக்கும்படியை அநுப$_4$விக்கிறுர்.

உரை:—புண்ட$_3$ரீகாக்ஷனை அந்த ஸர்வேச்வரன், மறைக்கையின்றிக்கே ஸர்வலோகப்ரஸித்தமாம்படி காளியனுகிற ஸர்ப்பத்தை விட்டடித்து, யுத்$_3$தே$_4$ாந்முக$_2$மான குவ

அவதாரிகை:—இப்படி தான் விரும்பியபடியெல்லாம் அடிமை செய்யும் திருவனந்தாழ்வானுகிற படுக்கையைவிட்டு இங்கே வந்து கண்ணனுய் அவதரித்துத்தன் விபூதிக்குக்களையாயிருக்கும் அஸுரராக்கர்களை அழித்துத் தன் லீலாவிபூ$_4$தியை ரக்ஷிக்கும்படியை அநுப$_4$விக்கிறுர்.

வ்யா:—(செங்கண் அவன்) அடியார்பக்கல் வாத்ஸல்யத்தைக் கோட் சொல்லித்தரும் தாமரைக்கண்ணனான அந்த ஸர்வேச்வரன். (கரவின்றி) மறைவில்லாமல் எல்லாவுலகும் அறியும்படி செய்தசெயல்களை அநுபவிக்கிறுர். முதலிரண்டடிகளிலுள்ள 'அரவம்' முதலான பத்துப்பதங்களையும் கடையிரண்டடிகளிலுள்ள 'விட்டு' முதலான பத்துப்பதங்களோடு முறையே சேர்த்துப்பொருள் கொள்ளவேணும். இதை 'நிரனிறையணி' என்பர். (அரவம் விட்டு) காளியனுகிற பாம்பை, அவன் மனைவி

லயாபீடத்தை முறித்து விழவிட்டு, பசுக்களைக் குறைவற மேய்த்து, குருந்தத்தை இறுங்கிப் பொகட்டு, ப$_3$காஸுர னுடைய வாயைக்கிழித்து, இடைப்பெண்களோடே திருக் குரவைகோத்து, ஐச்வர்யச்செருக்குக்குப் போக்குவிட்டுக் குடமெடுத்தாடி, நலிய வந்த பூதனை முலையை ப்ராணஸஹித மாக உண்டு, கம்ஸன் ஏவிற்றுச் செய்வான் என்று எதிர்ந்து வந்த மல்லரை முடித்து, வர்ஷாபத்தைப் பரிஹரிக்கைக்காக கோ$_3$வர்த்த$_4$னபர்வதத்தை எடுத்தது முதலான இச்செயல்க ளானவை இருந்தபடியென்! என்று வித்$_3$த$_4$ராய் அநுப$_4$விக் கிறார். இது நிரனிறையென்று தமிழர் சொல்லும் லக்ஷணம்.

55. அவன்தம ரெவ்வினைய ராகிலும் எங்கோ
னவன்தமரே யென்றொழிவ தல்லால்—நமன்தமரா
லாராயப் பட்டறியார் கண்டீர் அரவணைமேல்
பேராயர்க் காட்பட்டார் பேர்.

யர் சரணம் புகுகையாலே உயிரை வாங்காமல் பொய்கையிலிருந்து விரட்டிவிட்டு. (அடல் வேழம் இறுத்து) தன்னைக்கொல்லவந்த குவலயா பீடயானையைக் கொம்பைமுறித்து அழித்து. (ஆன்மேய்த்து) தன் மேன்மைபாராமல் இடையனாய்வதரித்தபோது பசுக்களை ஒரு குறையு மில்லாமல் மேய்த்து. (குருந்தம் ஒசித்து) அஸுராவேசமுடைய குருந்த மரத்தை ஒடித்து. (புள்வாய் கீண்டு) கொக்குருவங்கொண்டுவந்த அஸுர னுடைய வாயைக்கிழித்து. (குரவை கோத்து) ஆய்ச்சிகளுடன் ராஸக்ரீடை எனப்படும் குரவைக்கூத்து ஆடி. (குடம் ஆடி) நாற்சந்தியிலே அனை வரும் காணும்படி ஈச்வரனாயிருக்கையால் உண்டான மதிப்புக்குப் போக்கு வீடாகக் குடமெடுத்து ஆடி. (முலை உண்டு) கொல்லவந்த பேயான பூதனையின் முலைப்பாலை உயிரோடு உண்டு. (மல் அட்டு) கம்ஸன் ஏவினபடியே தன்னைக்கொல்லவந்த சாணூரமுஷ்டிகர்களென்னும் மல்லர் களை அழித்து. (குன்றம் எடுத்த) இந்திரன் கல்மழை பொழிந்தபோது ஆயர்களையும் பசுக்களையும் காக்க கோவர்த்தனமலையை எடுத்து ஆக விப்படிச்செய்த செயல்கள் என்ன ஆச்சரியமானவை என்று அநுப$_4$விக் கிறார். எடுத்த—எடுத்தன. "செங்கண் அவன் விட்டிறுத்து மேய்த் தொசித்துக்கீண்டு கோத்து ஆடி உண்டு அட்டு எடுத்தவை—அரவம் முத லானவை" என்று கூட்டிப்பொருள் கொள்வது. இவ்வுலகிலுள்ளாரையும்

பதவுரை:—அவன் தமர்-அந்தப் பரமபுருஷனுடைய பக்தர்கள், எவ்வினையர் ஆகிலும்-எப்படிப்பட்ட கர்மத்தை உடையராயிருந்த போதினும், 'எம் கோன் அவன் தமரே' என்று—'எமக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய பக்தர்களல்லவா' என்று புகழ்ந்து, ஒழிவதல்லால்-நீங்கிப்போவதைத் தவிர, அரவணை மேல் பேர் ஆயர்க்கு ஆட்பட்டார் பேர்-திருவநந்தாழ்வானாகிய படுக்கையின்மேல் இருந்து (அடியவர்களை அளிப்பதற்காக) ஆயனாய் வந்து அவதரித்த எம்பெருமானுக்கு அடிமைசெய்பவர்களுடைய பெயரை தரித்தவர்களும், நமன் தமரால்—யமனுடைய தூதரால், ஆராயப்பட்டு அறியார் கண்டீர்-தேடப்பட்டறியார்கள் கிடீர்.

அவதாரிகை:—அவன் இப்படி ஆச்ரிதரைக் கண்ணிலே வெண்ணெயிட்டு நோக்கித் தத்$_3$விரோதி$_4$களையும் போக்கும் ஸ்வப$_4$ாவனாயிருக்க, ஆர்தான் இவர்களைக் கண்கொண்டு சிவக்கப்பார்க்கவல்லார்? என்கிறார்.

திருவனந்தாழ்வானைப்போலே அடிமைகொள்வதற்காக அவன் கண்ணனாயவதரித்து இப்படியெல்லாம் தாழநின்று பரிமாறினான் என்று கருத்து.

அவதாரிகை:-அவன் இப்படிக் கண்ணிலே வெண்ணெயிட்டுக்கொண்டு தன் அடியார்களை நோக்கி, அவர்களுடைய விரோதிகளையும் நீக்கியருளுகையில் எவர்தான் இவர்களைக் கண்சிவக்க நோக்கமுடியும்? என்கிறார்.

ஸ்வபுருஷமபி$_4$வீக்ஷ்ய பாசஹஸ்தம்
வத$_3$தி யம: கில தஸ்ய கர்ணமூலே |
பரிஹர மது$_4$ஸூத$_3$நப்ரபந்நாந்
ப்ரபு$_4$ரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் ||
[வி-பு 3-7-14]

[பாசத்தைக் கையில்கொண்ட தன்னுடைய கிங்கரனைக் கண்ணாலேநோக்கி, அவனுடைய காதினுள் யமன் (பின்வருமாறு) சொல்லுகிறான்:—"மதுஸூதனனை சரணமடைந்தவர்களை அணுகாதே; நான் மற்ற மனிதர்களுக்கே ப்ரபு; வைஷ்ணவர்களுக்கு ப்ரபுவல்ல".]

"அஹமமரவரார்ச்சிதேந தா$_4$த்ரா
ஸம இதி லோகஹிதாஹிதே நியுக்த: |

உரை:-அந்த ஸர்வேச்வரனுக்கு அநுகூலராய்ப்போரும் ஆஶ்ரிதரானவர்கள். அக்ருத்யகரணக்ருத்யாகரண ரூபமான எந்தத்தொழிலையுடையரானாலும், 'எங்களுக்கு ஸ்வாமியான அந்த ஸர்வேச்வரனை ஆஶ்ரயித்த மஹா புருஷர்களிறே' என்று அவர்களைக் கொண்டாடித் தங்களைக்கொண்டு கடக்கப்போமித்தனையொழிய. திருவரவணை

ஹரிகுருவஶகோऽஸ்மி ந ஸ்வதந்த்ர:
ப்ரபவதி ஸம்யமநே மமாபி விஷ்ணு: ||''
[வி-பு 3-7-15]

[தேவர்களுள் சிறந்தவர்களாலும் பூஜிக்கப்படும் ஸர்வேச்வரனால் '(எல்லாரிடமும்) ஸமமாயிருப்பவன்' என்னும் காரணத்தினால் உலகத்திற்கு ஹிதத்தைக் கொடுப்பதிலும், அஹிதத்தைப் போக்குவதிலும் நியமிக்கப் பட்டிருக்கிறேன்; (நான்) ஸ்வதந்திரனல்லேன்; விஷ்ணு என்னையும் நியமிப்பதில் சக்தியுள்ளவன்.]

''கமலநயந! வாஸுதேவ! விஷ்ணோ!
தரணிதராச்யுத! ஶங்கசக்ரபாணே! |
பவ ஶரணமிதீரயந்தி யே வை
த்யஜ பட! தூரதரணே தாநபாபாந் ||''
[வி-பு 3-7-33]

[தூத! ''செந்தாமரைக்கண்ணா! வாஸுதேவா! விஷ்ணுவே! பூமியை தரிப்பவனே! அடியாரை நழுவவிடா அச்சுதனே! சங்கசக்கரங்களைத் திருக்கையில் தரித்தவனே! (எனக்கு) நீயே கதியாகவேணும்'' என்று எவர்கள் சொல்லுகிறார்களோ, பாபமற்றவர்களான அவர்களை வெகுதூரத்தில் விட்டுப்போ.] என்னும் ச்லோகங்களின் ஸாரார்த்தமிது.

வ்யா:—(அவன் தமர் எவ்வினையராகிலும்) ஸர்வேச்வரனுடைய பக்தர்கள் செய்யத்தகாதவற்றைச் செய்தாலும் சரி; செய்யவேண்டியவற்றைச் செய்யாமற் போனாலும் சரி; புண்ணியத்தைச் செய்தாலும் சரி; பாபத்தைச் செய்தாலும் சரி. (எங்கோன் அவன் தமரே என்று ஒழிவ் தல்லால்) 'எம்முடைய ஸ்வாமியான ஸர்வேச்வரனை அண்டிய மஹான்களன்றோ' என்று கொண்டாடி, விலகிச்செல்வதல்லாமல். (எங்கோனவன்...) ராஜமஹிஷியின் குற்றத்தை ராஜஸேவகன் ஆராயலாமோ? என்கை.

யிலே வர்த்திக்கக்கடவனாய், இடைத்தனத்தில் தனக்கொத்தாரில்லை என்னும்படி அதில் ப்ரதாநனான க்ருஷ்ணனுக்கு அடிமைபுக்கிருக்கும்ஸ்ரீவைஷ்ணவர்களை தங்களளவன்றிக்கே தங்கள் பேருங்கூட நாட்டார் கார்யம் ஆராய்கைக்கு அவனுடைய ஆளாயிருக்கிற யமனுக்கு அந்தரங்கபடராயிருக்கிறவர்களால் ஆராயப்பட்டறியார்கிடீர்.

(நமன் தமரால் ஆராயப்பட்டறியார் கண்டீர்) நமனாலேயே ஆராயப்படமாட்டாதபோது, அவன் தமராலே ஆராயப்பட முடியுமோ? (நமன்) நாட்டார் செய்யும் நன்மைதீமைகளை ஆராய்வதற்கென்றே அவனால் நியமிக்கப்பட்டவன். (தமரால்) அவனுக்கு அந்தரங்க வேலைக்காரர்களாலும் ஆராயப்படமாட்டார். (பேர் ஆராயப்பட்டறியார்) தங்களுடைய புண்ணியபாபங்கள் ஆராயப்படுவதில்லையென்பது மாத்திரமல்லாமல் தங்களுடைய பெயருங்கூட நமன்தமரால் ஆராயப்பெற்றறியார்கள். இப்படிப்பட்ட பெருமையுடையவர்கள் தான் ஆர்? என்னில்: (அரவணைமேல் பேராயற்கு ஆட்பட்டார்) திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளி, வருந்துவார் கூக்குரல்கேட்டுப் படுக்கையில் பொருந்தப்பெறாமல், இடக்கையும் வலக்கையுமறியாத இடைத்தனத்தில் இவனையொத்தாரில்லை என்னும்படி இடையர்களில் பெரியவனான கண்ணனை அவதரித்தவனுக்கு ஆட்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள். (அரவணைமேல்... ஆட்பட்டார்) படுக்கைப்பற்றில் ஆராயமுடியுமோ? (அரவணைமேல் பேராயற்கு ஆட்பட்டார் பேர்) 'அரவணைமேல் பேராயனுக்கு ஆட்பட்டவர்களுடைய பெயரை தரித்தவர்கள்' என்றும் கொள்ளலாம். ஒரு பாகவதனுடைய பேரை ஒரு அபாகவதன் தரித்தாலும், அவனுடைய பெயரையும் யமன் சபையில் வாசிக்கமாட்டார்கள் என்று கருத்து. இது பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானப்ரக்ரியை. (அரவணைமேல் பேராயற்கு) அவனே அவர்களுக்காகப் படுக்கையும் அடிக்கொதித்து நாட்டிற்பிறந்து படாதனபடும்போது இவர்கள் அவர்களை ஆராயமுடியுமோ? "தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அதுசெய்யார், செய்தாரேல் நன்று செய்தார் என்பர் போலும்" [பெரியாழ் திரு 4-9-2] என்கிறபடியே பிராட்டியாலும் குற்றஞ்சொல்லமுடியாத விடத்திலே யமனோ ஆராயப்போகிறான்?

56. பேரே வரப்பிதற்ற லல்லாலெம் பெம்மானை
ஆரே யறிவா ரதுநிற்க—நேரே
கடிக்கமலத் துள்ளிருந்தும் காண்கிலான் கண்ண
னடிக்கமலந் தன்னை யயன்.

பதவுரை:—**பேரே**—(*எம்பெருமானுடைய*) *திருநாமத்தாலே*, **வர**—*அவன் வரும்படியாக*, **பிதற்றல் அல்லால்**—*முறையில்லாமல் சொல்லுவதைத்தவிர*, **எம் பெம்மானை**—*எம்பெருமானை*, **ஆரே அறிவார்**—*யார்தான் அறியமுடியும்?* **அது நிற்க**-*அது கிடக்கட்டும்;* **கடி கமலத்து உள்** — *வாஸனை மிகுந்த உந்தித்தாமரையினுள்*, **நேரே இருந்தும்**-(*எம்பெருமானுக்கு*) *ஸமீபத்திலேயே இருந்தும்*, **அயன்**—*அகாரவாச்யனை ஸர்வேச்வரனிடமிருந்து பிறந்த பிரமன்*, **கண்ணன்**-*அப்பிரானுடைய*, **அடி கமலம் தன்னை**—*திருவடித்தாமரைகளை*, **காண்கிலான்**—*அறியமாட்டான்*.

அவதாரிகை:—*அவன் திருநாமங்களை அடைவுகெடச் சொல்லிப்போமத்தனையல்லது ஸர்வேச்வரன் ப்ரபாவம் ஆர்க்கும் பரிச்சேதிக்க அரிதென்கிறார்*.

உரை:—*ஏதேனும் ஒன்றைச் சொல்லினும் திருநாமம் வாயிலே வரும்படி அக்ரமமாகச் சொல்லிக்கூப்பிடுமித்தனை*

அவதாரிகை:—*அறிவுடைமைக்குச்சேர அவனுடைய திருநாமங்களை முறைதப்பிச் சொல்லலாமேயொழிய ஸர்வேச்வரனுடைய பெருமையை ஒருவரால் அளவிடமுடியுமோ? என்கிருர்*.

வ்யா:-(*பேரே வர*) ஏதேனுமொன்றைச் சொன்னாலும் எம்பெருமானுடைய திருநாமம் வாயிலே வரும்படி. "**ஸாங்கேத்யம் பாரிஹாஸ்யம் வா ஸ்தோபம் ஹேளநமேவ வா வைகுண்டநாம க்ரஹணம் அசேஷாகஹரம் விது:**" என்கிறபடியே ஒரு ஸங்கேதத்தின் பொருட்டோ, பரிஹாஸத்திற்காகவோ, பொருளற்றதாகவோ, அவமதிப்பதற்காகவோ, பகவந்நாமங்களைச் சொல்லுவதும் ஸமஸ்த பாபங்களையும் போக்கும் என்றதன்றே. (*வர-பேரே பிதற்றலல்லால்*) அவன் தானே வரும்படி திருநாமங்களை முறைகெடச் சொல்லு

யல்லது, தன் படிகளை எனக்குத் தானே காட்டித்தந்த என் நாயகனனவனை ஆர்தான் அறியவல்லார்? அவ்விடையாட்டம்கிடக்கிடீர்! பரிமளப்ரசுரமான திருநாபீகமலத்திலே அவ்யவதாநேந பிறந்து அங்கே நிரந்தரவாஸம் பண்ணுநிற்கச் செய்தேயும், அவன்பக்கலில் ஓதி இவ்வருகுள்ளார்க்கும் அறிவு கொடுக்கும்படி அறிவில்தலைநின்ற சதுர்முகனனவன் ஸர்வ நிர்வாஹகனன ஸர்வேச்வரன் திருவடித்தாமரைகளை இவ்வளவென்று அளவிட்டு தர்சிக்கைக்கு ஶக்தனல்லன். பேரே

வதல்லாமல் என்றும் கொள்ளலாம். (பிதற்றலல்லால்) "அத்யந்த ப₄க்தியுக்தஸ்ய ந சாஸ்த்ரம் நைவ ச க்ரம:" [அதிகமான அன்புடையார் சாஸ்திரமும் முறையும் பார்க்கமாட்டார்கள்] என்கிற ரீதியிலே முறைகெடப் பேசலாமேயொழிய. (எம்பெருமானை ஆரே அறிவார்) எனக்குத் தன் தன்மைகளைத் தானே காட்டித்தந்த என் ஸ்வாமியை யார்தான் அளவிட்டு அறியமுடியும்?

(அது நிற்க) யார் அறியமுடியும் என்னும் ஆராய்ச்சி ஒருபுறமிருக்கட்டும். அறியாதார் யாரென்பதைக் கேட்கலாகாதோ? (கடிக் கமலத்துள்ளிருந்தும்) மணம்மிக்க உந்தித்தாமரையிலேயே பிறந்து அங்கேயேயிருந்துவைத்தும். (நேரே இருந்தும்) ஓரிடைவெளி யின்றிக்கே ஸர்வேச்வரனுடைய உந்தித்தாமரையிலேயே இருந்து வைத்தும். "யோ ப்₃ரஹ்மாணம் வித₃த₄ாதிபூர்வம் யோ வை வேத₃ாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை" [எவன் பிரமனை முன் படைக்கிறனே, எவன் வேதங்களை அவனுக்கு ஓதுவிக்கிறனே...] என்கிறபடியே அவனிடமே பிறந்து, அவனுலேயே வேதம் ஓதுவிக்கப்பட்டவனுயிருந்தும். (அயன்) அகாரவாச்யனை ஸர்வேச்வரனிடமிருந்து உண்டானவனுகையாலே பிரமன் 'அஜன்' எனப்படுகிறன். "ஆத் ஜாயதே இதி அஜ:" என்று வ்யுத்பத்தி. அன்றிக்கே, "ந ஜாயதே இத்யஜ:" என்றே கொண்டு, உலகிலுள்ளாரைப்போலே ஸ்த்ரீபுருஷ ஸம்யோகத்தாலே பிறவாதவனுகையாலே 'அஜன்' என்பதாகவுமாம். தமிழில் அயன் என்று திரிந்தது. (காண்கிலான் கண்ணன் அடிக்கமலந்தன்னை அயன்) இப்படி லோகவிலக்ஷணமாக அவனிடம் பிறந்து, அவனிடமே ஓதி உலகிலுள்ளார் அனைவர்க்கும் அறிவளிக்கலாம்படி மிகச்சிறந்த அறிவாளியான பிரமன் ஸர்வவ்யாபியாய், ஸர்வநிர்வாஹகனன ஸர்வேச்வரனுடைய திருவடித்தாமரைகளை இவ்வளவென்று அளவிட்டு அறியவல்லனல்லன். கண்-இடம்.

வரப்பிதற்றுகையாவது-அவன் தானே வரும்படி திருநாமங்களை அக்ரமமாகச் சொல்லுமத்தனை போக்கி என்றுமாம்.

57. அயனின்ற வல்வினையை யஞ்சினே னஞ்சி
உயநின் திருவடியே சேர்வான்—நயநின்ற
நன்மாலை கொண்டு நமோநாரணா வென்னும்
சொன்மாலை கற்றேன் தொழுது.

பதவுரை:—**அயல் நின்ற**—*அருகில் நின்ற,* **வல் வினையை**—*மிகுந்த வலிமையுள்ள பாபங்களைக்கண்டு.* **அஞ்சினேன்**—*பயந்தேன்;* **அஞ்சி**—*(இம்மாதிரி) பயந்து,* **உய**—*(பாபங்கள் நீங்கப்பெற்று) உய்ந்துபோவதற்காக,* **நின்** — *உன்னுடைய,* **திருவடியே சேர்வான்** — *திருவடிகளை அடையும்பொருட்டு,* **நயம் நின்ற**—*சாஸ்திரரூபமாய் இருக்கிற,* **நல் மாலை கொண்டு**—*அழகியதான மாலையைக்கொண்டு,* **தொழுது**—*வணங்கி,* **நமோ நாரணா என்னும்**—*அஷ்டாக்ஷரமந்திரமாகிய,* **சொல் மாலை**—*சொல்லாலான மாலையை,* **கற்றேன்**—*அப்யஸித்தேன்.*

அவதாரிகை:—*ப்ரஹ்மாவுக்கு அறியவொண்ணாத விஷயத்தை நீர் அறிந்தபடி எங்ஙனே? என்ன; திருநாமம் ஆச்ரயித்து அவன் தானே தன்னைக் கொண்டுவந்து காட்டக் கண்டேன் என்கிறார்.*

கண்ணன்-இடமுடையவன். ஸர்வவ்யாபியாய், ஸர்வநிர்வாஹகனாயிருப்பவன். இப்படி ஸர்வலோகஸ்ரஷ்டாவான நான்முகனே அவனை அறியவல்லனல்லனானால், வேறு எவர்தான் அவனை அளவிட்டு அறியமுடியும்? என்று கருத்து. (உள்ளிருந்தும் காண்கிலான்) "கடற்கரையில் குடில்கட்டிக்கொண்டிருக்குங்காட்டில், கடலைப் பரிச்சேதிக்க(அளவிட)வொண்ணுமோ? அபரிச்சே₂த்₃யம் (அளவிடவொண்ணாதது) என்று அறியில் அறியலாம். (அயன்) "ப்₃ரஹ்மா ப்₃ரஹ்மவித₃ாம் வர:" [ரா-யு 120-3] [ப்ரஹ்மஜ்ஞானிகளுள் தலைசிறந்தவனான பிரமன்] என்று சொல்லப்பட்டவன் பாடு இப்பாடானால் மற்றுள்ளாரைப்பற்றிச் சொல்லவேண்டுமோ?

அவ:—பிரமனுக்கும் அறியவொண்ணாத விஷயத்தை நீர் எப்படி அறிந்தீர்? என்ன; திருமந்திரத்தைப்பற்றிநின்று, அத்தாலே அவன் தானே தன்னைக் கொண்டுவந்து காட்டக்கண்டேன் என்கிறார்.

உரை:-அருகுவிட்டுப்பேராதே இடைவிடாமல் நலிந்த படியே நிற்கிற அதிப்ரபலமான பாபத்தைக் குறித்து முன்பு போலே இன்னமும்வந்து மேலிடில் செய்வதென்னென்று பயப்பட்டேன். இப்படி பயப்பட்டு, இந்தப் பாபஸம்பந்த மற்று உஜ்ஜீவிக்கைக்கு நிர்ப்பயஸ்தாநமான உன் திருவடி களிலே வந்து கிட்டுகைக்காக நயப்புடைத்தாய், அதிவில க்ஷணமான ஶப்தங்களாலே தொடுக்கப்பட்ட இப்ரபந்தரூப மான மாலையைக்கொண்டு உன்னை ஆச்ரயித்து, உனக்கு வாசகமாய், திருமந்த்ரமென்று ப்ரஸித்தமான சொல் தொடையை அப்யஸித்தேன்.

அன்றிக்கே, திருமந்த்ரார்த்தத்தை நயிப்பிக்கையிலே தத் பரமாய்க்கொண்டு நின்ற விலக்ஷணஸந்தர்ப்பரூபமான இப்ர

வ்யா:—(அயல் நின்ற) அருகிலே நின்ற. என்னருகு விட்டுப் பெயராமல் இடைவிடாமல் துன்புறுத்திநிற்கிற. நானிட்ட அடியிலே அடியிட்டு என்னைப்பின்தொடர்ந்து வருகிற. பகவத்ஸம்பந்தம் ஏற்பட்டதும் பாபஸம்பந்தம் விட்டது. ஆயினும் 'இவன் அவ் வழியினின்று மீண்டு நம்வழியில் வாரானோ' என்னும் சாபல் யத்தாலே அருகிலேயே நின்றது வல்வினை. "மாடே வரப்பெறுவரா மென்றே வல்வினையார் காடானும் ஆதானும் கைக்கொள்ளார்" [பெரியதிருவ-59] என்றாற்போலே. (வல்வினையை அஞ்சினேன்) இதன் ஸம்பந்தம் விட்டபோதிலும் இது முன்பு நலிந்தபடியை நினைத்தால், 'முன்புபோலே இன்னமும் வந்து துன்புறுத்தினால் என்செய்வது?' என்று அஞ்சும்படியாயிருக்கிறது. (அஞ்சி உய) இப்படி பயப்பட்டபின், இந்தப்பாபஸம்பந்தம் அடியோடு அற்று உஜ்ஜீவிப்பதற்காக. (நின் திருவடியே சேர்வான்) இப்படிப் பாபஸம்பந்தமற்று உஜ்ஜீவிக்கக் காரணம் உன் திருவடியை அடைவது; அப்பயனைப் பெறுகைக்காக. (நயம் நின்ற) நன் மாலை கொண்டு) நயம்—அன்பும் மகிழ்ச்சியும். அன்பும் மகிழ்ச்சியுமுடைய சொல்தொடைகளாலே தொகுக்கப்பட்ட மிகச்சிறந்த இந்நூலாகிற மாலையைக்கொண்டு (நயம் நின்ற நன்மாலை) திருமந்திரார்த்தத்தை நயிப்பிக்கையிலீடுபட்ட இந்நூல்' என்றுமாம். அன்றிக்கே, 'நயம் நின்ற' என்றது திருமந்திரார்த்தந்தை நயிப்பிக்கையில் ஈடுபட்ட சாஸ்திரமாய், சாஸ்திரரூபமாய் நிற்கும் விலக்ஷணமான மாலை

பந்தத்தைக்கொண்டு என்னவுமாம். அயல்நின்ற என்றது ஜ்ஞானம் பிறந்தபின் பாபங்கள் தம்மைவிட்டுக் கடக்கநின்ற படியைச் சொல்லிற்றாகவுமாம். அயல்நின்ற வல்வினையென்று திருநாமஞ் சொல்லாதபோது தமக்குள்ள வ்யஸநமாகவுமாம்.

58. தொழுது மலர்கொண்டு தூபம் கையேந்தி
எழுது மெழுவாழி நெஞ்சே—பழுதின்றி
மந்திரங்கள் கற்பனவும் மாலடியே கைதொழுவான்
அந்தரமொன் றில்லை யடை.

பதவுரை: **நெஞ்சே**—*மனமே!* **வாழி**—*(உனக்கு) நன்மையுண்டாகட்டும்;* **மலர் கொண்டு**—*பூவைக் கையில்கொண்டு,* **தூபம் கை ஏந்தி**—*புகையைக் கையிலே தரித்துக்கொண்டு,* **தொழுது**—*வணங்கி,* **எழுதும்**—*உய்ந்துபோவோம்;* **எழு**—*எழுந்திருப்பாயாக;* **பழுதின்றி**—*இடைவெளியின்றி,* **மந்திரங்கள்**—*பகவானைப்பற்றிய மந்திரங்களைக்,* **கற்பனவும்**—*கற்றுக்கொள்வதும்,* **மால் அடியே கை தொழுவான்**—*எம்பிரானுடைய திருவடிகளைக் கையாலே வணங்குவதற்காகவே,* (ஆகையால்) **அந்தரம் ஒன்று இல்லை**—*காலதாமதம்செய்ய ஹேது எதுவும் இல்லை;* **அடை**—*(அவனை) அணுகு.*

அவதாரிகை:—''*ஆனபின்பு, நெஞ்சே! இவ்விஷயத்தை விட்டு நமக்கு ஒரு க்ஷணம் ஆறியிருக்க விரகில்லை; அவன் திருவடிகளை ஆச்ரயி'' என்கிறார்.*

யைக்கொண்டு என்றுமாம். (தொழுது) இந்நூல், அல்லது சாஸ்திரமாகிற மாலையைக்கொண்டு உன்னை ஆச்ரயித்து. (நமோ நாரணா என்னும் சொல்மாலை கற்றேன்) உன் ஸ்வரூபஸ்வபாவங்களை ஸங்கோசவிஸ்தாரமறத் தெரிவிக்கும் திருமந்திரமாகிற சொல்மாலையைக்கற்றேன். (அயல் நின்ற வல்வினையை அஞ்சினேன்) திருநாமஞ் சொல்லாமல் பகவானைவிட்டுக் கடக்கநின்ற மஹாபாபத்தை நினைத்து வருந்தினேன் என்றும் கொள்ளலாம்.

அவதாரிகை:—நெஞ்சே! 'இப்படியிருக்கும்போது, இவ்விஷயத்தைவிட்டு நமக்கு ஒருகணம் ஆறியிருக்கக் காரணமில்லை. அவன் திருவடிகளை அடைவாயாக என்கிறார்.

உரை:—நெஞ்சே! செவ்விப்பூக்களை ஸம்பாதித்துக் கொண்டு தூபத்தைக் கையிலே தரித்து, ஸ்வரூபாநுரூபமாக அவனைத் தொழுது உஜ்ஜீவிப்போம்; கடுக எழுந்திரு. உனக்கு இந்த ஸம்ருத்தி நித்யமாய்ச்செல்ல! கிடந்தானை கண்டேறுதே ஆசார்யனைப் பழுக்க ஸேவித்து, திருவஷ்டாக்ஷரம் முதலான மந்த்ரங்களைப் பழுதற நாம் அப்யஸிக்கிறவையும், ஸர்வேச்வரன் திருவடிகளிலே இடைவிடாமல் அஞ்ஜலிபந்தம் முதலான வ்ருத்திவிசேஷங்களைப் பண்ணுகைக்காக. ஆனபின்பு நமக்கு ஆறியிருக்கைக்கு அவகாசம் ஏகதேசமுமில்லை. கடுகச் சென்று கிட்டு.

வ்யா:—(நெஞ்சே!) எனக்கு அனுகூலமாயிருக்கும் நெஞ்சே! (மலர்கொண்டு) அவனுடைய மென்மைக்குத்தக்க அன்றலர்ந்த மலர்களைக்கொண்டு. (தூபம் கை ஏந்தி) தூபத்தைக் கையிலே தரித்து. இது தீபாதிகளுக்கும் உபலக்ஷணம். (தொழுது) நம் ஸ்வரூபத்துக்குத் தக்கவாறு அவனைத்தொழுது. (எழுதும்) உய்வோமாக. (எழு) உறங்காதே விரைவில் எழுந்திருப்பாயாக. (வாழி) சொன்னபடியே எழுந்திருக்கக்கண்டு, 'வாழி நெஞ்சே! உனக்கு இப்பெருமை நித்யமாய்ச்சொல்லவேணும்' என்று மங்களாசாஸனம் செய்கிறுர். (பழுதின்றி மந்திரங்கள் கற்பனவும்) பழக்கமில்லாதவன் கிடந்த ஆனையைக்கண்டவுடன் அதில் ஏறினுல், அது தூக்கியெறிந்து மிதித்துவிடும். யானைப்பாகன் கைகொடுகக அதில் ஏறினுல் அது அடங்கி நின்று இடங்கொடுக்கும். அது போலே, "தென்னுனாய் வடவானுய்" முதலான விடங்களிலே யானையாக நிரூபிக்கப்படும் பகவானும் நேரே பற்றினுல் ஸ்வதந்திரனுகையாலே இவன் பாபங்களைக்கண்டு உதறிவிடுவான். ஆசாரியனை முன்னிட்டுப் பற்றினுல் ஏற்றுக்கொள்வன். ஆகையால் ஆசார்யனிடம் பகவந் மந்திரங்களைக் கற்கையே பழுதின்றிக் கற்கையாகிறது. (பழுதின்றி மந்திரங்கள் கற்பனவும்) ஆசார்யனிடமும் கண்டவுடன் 'மந்திரத்தைச் சொல்' என்னுமல், அவனுக்கு சுச்ரூஷை செய்து, தானே பழுத்துவிழும் கனிபோலே அவனுகவே மனமிரங்கி உபதேசிப்பதே பழுதின்றிக் கற்பதாகிறது. இப்படி ஆசார்யசுச்ரூஷைசெய்து திருமந்திரம் முதலான மந்திரங்களை நாம் பழுதில்லாமல் கற்பவையும். (மாலடியே கைதொழுவான்) ஸர்வேச்வரன்திருவடிகளிலே இடைவிடாமல் அஞ்சலிசெய்வது முதலான கைங்கரி

59. அடைந்த வருவினையோ டல்லல்நோய் பாவம்
மிடைந்தவை மீண்டொழிய வேண்டில்—நுடங்கிடையை
முன்னிலங்கை வைத்தான் முரணழிய முன்னொருநாள்
தன்விலங்கை வைத்தான் சரண்.

பதவுரை:—**அடைந்த**—*வந்தேறியான*. **அரு வினையோடு**-*கொடுமையான அஜ்ஞானம் முதலியவைகளோடு*, **அல்லல்**—*மனோவியாதி*, **நோய்**—*சரீர வியாதி*, **பாவம்**—*துஷ்கர்மானுஷ்டானம்*. **மிடைந்தவை**—*(சரீரத்திற்கு ஹேதுவான) நெருங்கிய பாபங்கள் ஆகிய இவைகளை*, **மீண்டுஒழிய வேண்டில்**-*திரும்பிப் போகும்படி செய்யவேண்டுமானால்*, **நுடங்கு இடையை**—*துவளாநின்ற இடையையுடைய ஸீதாபிராட்டியை*, **முன்**—*முன்னொருகாலத்தில்*, **இலங்கை வைத்தான்**—*இலங்கையிலே இருத்திய ராவணனுடைய*, **முரண் அழிய**—*பலம் நசிக்கும்படியாக*, **முன் ஒரு நாள்**—*முன்பு ராமனாக அவதரித்திருந்த காலத்தில்*, **தன் வில் அம் கை வைத்தான்** — *தன்னுடைய தனுஸ்ஸை அழகிய கையிலே தரித்தவனே*, **சரண்**—*உபாயம் ஆவான்*.

அவதாரிகை:—*போகத்துக்கு வேணுமாகில் இத்தைச் செய்கிறோம். இதுக்கு இடைச்சுவரான விரோதி$_4$யை இரு துண்டமாக விடுகைக்கு ஸாத$_4$னம் ஏதென்ன; அதுக்கு வேணுமாகில், தஶரதா$_2$த்மஜனை ஶரணம்புகு என்கிறார்.*

யங்களைச் செய்வதற்காகத்தான். (அந்தரம் ஒன்றில்லை அடை) ஆகையால், நாம் காலதாமதம் செய்வதற்கு நேரமில்லை; விரைவிலே சென்று அவனை அடையப்பார்.

அவ:—"அனுபவத்துக்கு வேணுமாகில் சென்ற பாசுரத்தில் சொன்னபடியே செய்கிறேன்; இவ்வனுபவத்துக்குத் தடைசெய்யும் பாபம் முதலானவற்றை அழிக்க வழி என்ன?" என்று திருவுள்ளம் கேட்க, 'அதற்கு ஸாதனம் சக்கரவர்த்தித் திருமகனைச் சரணம் புகுவதேயாகும்' என்கிறார்.

உரை:—ஜ்ஞாநாநந்தங்களோபாதி ஆத்மாவுக்கு நிரூபகமென்றபடி அடியே பிடித்துப் பற்றிக்கிடக்கிற போக்கவரிதான ப்ராசீநபாபம், அதடியாக வருகிற மாநஸமான து:க்கங்கள், ஶாரீரமான வ்யாதி$_4$, வர்த்தமான ஶரீரங்கொண்டு பண்ணுகிற நிஷித்$_3$த$_4$ாசாரம் என்றுப்போலே பஹுவித$_4$மாய்க்கொண்டு பரணிக்கூடுவரிந்தாப்போலே

வ்யா:—(அடைந்த அருவினை) பாபமானது சேதனனோடு கூடப் பிறந்ததன்று. அசேதனத்தோடு நெடுங்காலமாக நெருங்கிக்கிடந்தமையாலே இவனுக்கு வந்தேறியாயிருக்கிறது. வந்தேறியாயிருந்த போதிலும், அநாதிகாலமாக இவன்மேலே ஏறிக்கிடக்கையாலே, இவனுடைய ஸ்வரூபநிரூபக தர்மங்களான ஜ்ஞாநாநந்தங்களைப் போலே, இவனுக்கு இதுவும் ஒரு நிரூபகம் என்று சொல்லலாம்படி வலிமையுடன் இவனைப்பற்றிக்கிடக்கிறது. (அருவினை) இதனுலேயே இவனால் அழிக்க அரிதானதாயிருக்கிறது. (அருவினை) அநாதிகாலமாக இவனால் ஸம்பாதிக்கப்பெற்றதாய், மலைமலையாயிருப்பதாய், புண்யபாபரூபமான கர்மங்களைக் குறிக்கிறது. (அல்லல்நோய்) அல்லல் என்று முன்னும்பின்னும் சொல்லப்படும் பாபங்கள் காரணமாகவரும் மனத்துன்பங்களையும், ‘நோய்’ என்று அவற்றாலேயே நேரும் சரீரத்துன்பங்களையும் சொல்லுகிறது. இவையே முறையே ஆதி$_4$ என்னும் வ்யாதி$_4$ என்றும் வடமொழியில் சொல்லப்பெறும். (பாவம்) ‘அருவினை’ என்று முன்செய்த வினைகளைக் குறித்தது. இங்கு இந்த சரீரங்கொண்டு செய்கிற புண்யபாபங்களைக்குறிக்கிறது. புண்ணியத்தோடு பாபத்தோடு வாசியற இவனை ஸம்ஸாரத்தில் கட்டும் விலங்குகளாயிருக்கையாலே இரண்டும் இவனுக்கு அநிஷ்டமாகையாலே இரண்டையுமே ‘பாவம்’ என்கிறார். ‘அருவினை’ ‘பாவம்’ என்பவை இவன் செய்யும் நற்கருமங்களையும், தீயகருமங்களையும் அதுகாரணமாகப் பரமபுருஷனுக்கு இவன்பால் ஏற்படும் பிரீதிகோபங்களையும் குறிக்கின்றன. (மிடைந்தவை) இவையெல்லாம் இச்சேதனன்தானே தன்னால் வெளியேறமுடியாதபடி சூழ்த்துக்கொண்டவை. பட்டுப்பூச்சியைப்போன்ற சில பூச்சிகள் தம்மைச் சுற்றித்தாமே கூடுகட்டித் தம்மை மூடிக்கொண்டுவிடும். பிறகு அவற்றாலும் அக்கூட்டைவிட்டு வெளியேற முடியாமல் அங்கேயே கிடந்து அழியும். அதுபோலவே இச்சேதன

ஆத்மாவைத் தெரியாதபடி மூடிக்கிடக்கிற இவைவாஸனை யோடே விட்டுப்போகவேண்டில், க்ஷணகாலமும் விச்லேஷிக் கத்தகாதபடி நேரிய இடையழகையுடைய பிராட்டியை முன்பொருகாலத்திலே லங்கையிலே கொண்டுபோய் சிறை வைத்த ராவணனுடைய மிடுக்கு அழியும்படிக்கீடாகப் பண்டொரு நாளிலே தன்னுடைய ஸ்ரீசார்ங்கத்திருவில்லை அழகிய திருக்கையிலே வைத்த தசரதாத்மஜனே உபாயம்.

இத்தால் பிராட்டி விஷயத்திற்போலே ஆச்ரிதவிஷயத் தில் ஈச்வரன் உகந்து கார்யஞ்செய்யுமென்னுமிடமும்,

---

னும் தன்னையே அறியமுடியாதபடி தன்னைச்சுற்றிப்பாபங்களாகிற கூட்டைக் கட்டிக்கொண்டு வெளியேறமுடியாமல் தவிக்கிறான் என்று கருத்து. (மீண்டு ஒழியவேண்டில்) இத்தனைகாலமாக இவன் பயப்பட்டுவந்த பாவங்கள் இவனைக்கண்டு பயப்பட்டு 'சும்மெனாதே கைவிட்டோடி' [பெரியாழ்திரு 5-4-3] என்கிறபடியே ஓடவேண்டு மானால். தொடர்கிற பாம்பைத் திரும்பியோடச் செய்யவேண்டு மானால். (ஒழியவேண்டில்) வாஸனையோடே விட்டுப்போகவேண்டு மானால். "**மாமேகம் சரணம் வ்ரஜ—ஸர்வபாபேப்₄யோ மோக்ஷ யிஷ்யாமி**" [கீதைசரமச்லோகம்] [என்னையொருவனையே சரண மடை; எல்லாப்பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்] என்ற ஸர்வ சக்தியை சரணமடைவதே வழி என்கிறார் மேலே,—(நுடங்கிடையை) துவளாநிற்கும் நுண்ணிய இடையையுடைய சீதாபிராட்டியை. ஒருகணம் பிரிந்தாலும் தாளமாட்டாள் என்று துணுக்குறவேண் டிய தேவியை. (முன் இலங்கை வைத்தான்) முன்னொரு காலத்தில் பிரித்து இலங்கையிலே சிறைவைத்த பாவியான இராவணனுடைய. (நுடங்கிடையை இலங்கை வைத்தான்) தாயையும் தகப்பனையும் பிரித் தான். ஏகத்ரவ்யத்தை பின்னமாக்கினான்! (முன்) அதுவும் ஒரு நாளே! எனத்துன்புறுகிறார். (முரண் அழிய) அவனுடைய பலம் அழியும்படியாக (முன் ஒருநாள்) இதுவும் ஒருநாளே! என இன்புறு கிறார். (தன் வில் அங்கைவைத்தான் சரண்) தன் சார்ங்கவில்லை அழ கிய கையிலே வைத்தவனே ஸர்வபாபங்களும் போவதற்கு உபாயமா வான். (தன்வில் அங்கை வைத்தான்) தன் வில்லிலே அழகிய கையை வைத்தவன் என்றுமாம். தோளில் மாட்டியிருக்கும் வில்லிலே கையை வைத்தவுடனேயே ராவணனின் மிடுக்கு அழிந்தது என்று கருத்து.

இப்பாசுரம் இந்நூலாகிற ரத்னஹாரத்திற்கு நடுநாயகக் கல் போலே அமைந்துள்ளது. இதிலிருந்து தெளிவாகும் ஸாரார்த்

அவன் ஸ்வரக்ஷணத்திலே இரங்குமன்று இவனுக்கு க்ருத்யாம்ஶமுள்ளதென்னுமிடமும், அவன் அபேக்ஷிதம் செய்யுமென்னுமிடத்தில் இவள் புருஷகாரமென்னுமிடமும், அவன் வஸ்துவை எனக்கென்பார் ராவணாதிகள் பட்டதுபடுவர் என்னுமிடமும் சொல்லிற்றாய்த்து. இந்த்ரியஜயத்தைப் பண்ணு, அவனைத்தொழு, அவன் திருநாமத்தைச் சொல்லு, அவனை நினை என்றாப்போலே கீழ் பலபடியாகச் சொல்லிற்

தங்களாவன,-வினைமுதலியவற்றால் சூழ்ப்பெற்று இந்த ஸம்ஸாரத்தில்ஜீவன் இருப்பது ராக்ஷஸிகளால் சூழப்பட்டு அசோகவனிகையிலேபிராட்டியிருந்த இருப்பை ஒக்கும். பிராட்டியானவள் தன்னை விடுவித்துக்கொள்ளத்தான் முயற்சி செய்யாமல், "தத் தஸ்ய ஸத்₃ருசம் ப₄வேத்" [ரா-ஸு 39-30] [என்னை அழைத்துச்செல்வது ராமபிரானுக்கே தக்கது] என்று இருந்தாற்போலே, இவனும் மற்ற உபாயங்களில் கைவைக்காமல் அவனையே கதியாகப் பற்றிநிற்க வேணும், இதுவே இவன் செய்யவேண்டியது என்பதையும் இப்படி இவன் இருந்தானாகில் அவன் பிராட்டியின் காரியத்தை மார்பிலே அம்பேற்று உகந்து செய்ததுபோலே இவனுடைய பாபவிமோசனத்தையும் உகந்து செய்வான் என்பதையும், அவளோடு கூடியவன் உபாயமென்கையாலே அவனைச் சரண்புகும்போது பிராட்டியைப் புருஷகாரமாக முன்னிட்டுச் சரண்புகவேண்டும் என்பதையும், ஸர்வேச்வரனுக்கு இனியதான ஆத்மவஸ்துவை 'என்னுடையது' என்று நினைப்பவர்கள் பிராட்டியைத் தனக்கென நினைத்த இராவணன் பட்டது படுவார்கள் என்பதையும் இப்பாசுரம் உணர்த்துகிறது.

மற்ற உபாயங்களை விட்டு, அவனையே பற்றவேணும் என்று இப்பாசுரம் சொல்லுகிறதாகில், முன் பாசுரங்களில், "சிந்திதிரு" [41] "வாரிசுருக்கி...உணர்வார் காண்பரே" [47] "மருவாழி நெஞ்சே" [48] "முயல்கிற்பார்க்கல்லால்... ஆதிகாண்பார்க்குமரிது" [49] "அரிய புலனைந்தடக்கி...புல்கில்...எளிது" [50] "திருநாமம் எண்" [51] "தொழுது எழுதும் எழு" [58] என்று மற்ற உபாயங்களைப் பற்றச்சொல்லுவதுபோலே அருளிச் செய்வானேன்? எனில்: இப்பாசுரத்துக்கு விரோதமில்லாமல் காணும்போது, தேஹயாத்ரை நடப்பதற்காகத் திருநாமஸங்கீர்த்தனம் முதலானவற்றைச் செய்யும்படி அருளுகிறாரேயொழிய உபாயபுத்தியோடு அவற்றைச் செய்யச்

றெல்லாம் ஷட்கத்ரயத்தில் வார்த்தைபோலே. ஸ்வரூபம் விஶதமாகச் சொன்னவை; இது சரமச்லோகத்தில் நிலை போலே, உணர்ந்தவன்று அவனல்லது உபாயமில்லையென்கை.

60. சரணா மறைபயந்த தாமரை யாளோடு
மரணாய மன்னுயிர்கட் கெல்லாம்—அரணாய
பேராழி கொண்டபிரா னன்றி மற்றறியாது
ஓராழி சூழ்ந்த வுலகு

பதவுரை:—சரணா-(நாலுவகை புருஷார்த்தங்களுக்கும்) உபாயமாக, **மறை**—வேதத்தை, **பயந்த**—உபதேசிக்கப்பெற்ற, **தாமரையாளோடு**—உந்தித்தாமரையில் பிறந்த பிரமனுடன் கூட, **மரணாய**—மரணத்தை இயற்கையாகக்கொண்ட, **மண் உயிர்கட்கு எல்லாம்**-நித்யமான ஜீவர்களுக்கெல்லாம், **அரண் ஆய**—ரக்ஷகமாயிருப்பவர்களை, **பேராழி கொண்ட பிரான் அன்றி**—பெரிய சக்கரத்தைக் கையில் கொண்ட எம்பிரானைத் தவிர, **மற்று**—(அவனைக் காட்டிலும்) வேறாயிருப்பதும், **ஓர் ஆழிசூழ்ந்த**—ஒப்பற்ற கடலினால் சூழப்பட்டிருப்பதுமான, **உலகு**—உலகிலுள்ளோர். **அறியாது**-அறியமாட்டார்கள்.

சொல்லி விதிக்கவில்லை என்று கொள்ளலாம். அப்படியல்லாமல், கீதையில் கண்ணன் மூன்று ஷட்கமாயிருக்கும் பதினெட்டு அத்தியாயங்களாலும் கர்மம் ஜ்ஞாநம் பக்தி முதலான பல உபாயங்களையும் விதித்து, 'எலியெலும்பனை நம்மால் இவை செய்யப் போமோ? இவற்றைச்செய்து கடைத்தேறுவதுதான் எப்படி?' என்னும் சோகத்தை அர்ஜுனனுக்கு விளைத்து, அதற்குப்பின் சரமச்லோகத்தை உபதேசித்தாற்போலே, இவரும், அநுஷ்டிக்க அரிதாய், தம் அத்யந்தபரதந்திர ஸ்வரூபத்திற்கு ஒவ்வாததான மற்ற உபாயங்களை முன் பாசுரங்களில் திருவுள்ளத்தைநோக்கி உபதேசிக்க, அதனால் ஸ்வரூபம் தெளிவடைந்து திருவுள்ளத்திற்கு சோகம் பிறக்க, இந்தப்பாசுரத்தில் ஸ்வரூபத்திற்கு அநுகுணமான சரணாகதியை வெளியிடுவதாகவும் கொள்ளலாம். இச்சேதனன். தன் ஸ்வரூபத்தை உணர்ந்தவன்று அவனல்லது உபாயமில்லை என்பது இப்பாசுரத்தின் ஸாரார்த்தம். இந்நூலின் ஸாரார்த்தமும் இதுவே.

அவதாரிகை:-இவன் ப₂லபோ₄க்தாவாயிருக்க. அவன் ஸாத₄னமாகவேண்டுகிறதென்? என்ன; ஸர்வஜ்ஞனுய், ஸர்வ ஶக்தனுயிருப்பாெனுருவன் உபாயமாமித்தனைபோக்கி, அஜ்ஞனுய், அஶக்தனுன இவனுல் செய்யலாவதுண்டோ? என்கிறுர்.

உரை;-'அபி₄மதஸித்₃தி₄க்கு அநுரூபமான உபாயங்களை அறிகைக்கு ஸாத₄னமான வேதத்தை நாட்டுக்கு உபதே₃ஶ

அவதாரிகை:—முன் பாசுரத்தில் அவனே உபாயம் என்றுர்; 'மோக்ஷமாகிற பயன் இச்சேதனனுடையது; ஆகையால் உபாயமும் இவனுலேயாகவேண்டியிருக்க, அவன் உபாயம் என்பானேன்?' என்னும் கேள்வியெழ, 'இவனுடைய தன்மையைப் பார்த்தால் தனக்குக்கீழ் நடந்தவற்றையும் அறியான்; இப்போது இப்பாடுபடுகிறது எதனுலே என்பதையும் அறியான். இனி வரப்போவதையும் அறியான். ஸர்வேச்வரனுன அவனேவெனில், இவற்றையெல்லாம் அறியும் ஸர்வஜ்ஞனுயிருப்பதோடன்றியில் இவனுடைய தாழ்வுகளைத்தவிர்த்து வாழ்வளிக்கவல்ல ஸர்வசக்தியுடையவனுயிருக்கிறுன். அப்படியிருக்கும்போது அவன் உபாயமாகமுடியுமேயொழிய இவன் உபாயமாகமுடிமோ?' என்கிறுர்.

இப்பாசுரத்தை மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, ''உயிர்களுக்கெல்லாம் ரக்ஷகனுன ஸர்வேச்வரனைத்தவிர வேறென்றையும் உலகம் அறியாது'' என்னும் பொருள் தோன்றும். ஆப்பான் என்பவர் இப்பொருளைச்சொல்லி, 'இவ்வுலகம் எம்பெருமானையன்றி அறியாமலிருந்ததோ?' என்று ஜீயரைப் பரிக்ஷிப்பதற்காகக் கேட்க, அவரும்'நீரே பொருளை உரைப்பீர்' என்று கேட்க, ''உலகம் என்பது உயர்ந்தோரைக் குறிக்குமாகையால், உயர்ந்தோர் எம்பெருமானையன்றி அறியார்'' என்று ஆப்பான் உரைக்க, இதுபற்றி பட்டரைக் கேட்க, ''உலகு என்னும் பதம் உயர்ந்தோரைக் குறிப்பதாகில் 'ஓராழிசூழ்ந்த உலகு' என்று விசேஷித்திருப்பது பொருந்தாது. இப்படி விசேஷித்திருப்பதாலேயே உயர்ந்தாரோடு, தாழ்ந்தாரோடு வாசியற எல்லா உலகினரையும் இது குறிக்கிறதென்பது தெளிவு. ஆகையால்,மன்னுயிர்களுக்கெல்லாம் அரணுய-ரக்ஷகமாயிருப்பவைகளை ஸர்வேச்வரன் அறிவானேயொழிய உலகம் அறியாது'' என்று பட்டர் உணர்த்திஞர் என்னும் ஐதிஹ்யம் பெரியவாச்சான்பிள்ளையுரையில் காணத்தக்கது.

முகேௗந உண்டாக்கின ஜ்ஞாநமாஹாத்ம்யத்தை உடையோம்' என்று அபி₄மானித்திருக்கிற ப்₃ரஹ்மாவோடேகூட மரணத₄ர்மாக்களாகையாலே அறிவுகேடராய், நித்யமான ஸ்வரூபத்தை உடையரான ஆத்மாக்களுக்கெல்லாம், ரக்ஷையானவற்றை, ரக்ஷணபரிகரமான பெரியதிருவாழியை உடை

வ்யா:—(சரண மறைபயந்த) தாங்கள் விரும்பிய பலன்களைப் பெறலாம்படியான உபாயங்களை அறிவிக்கையாலே வேதம் 'சரண்' [உபாயம்] எனப்படுகிறது. இப்படிப்பட்ட வேதத்தை உலகினர்க்கு உபதேசிக்கையாலே பிரமனை மறைபயந்தவன் என்கிறது. இல்லாவிடில் வேதத்தை அபௌருஷேயம் என்பது ஒட்டாதே. 'பயந்த' என்றது 'பயக்கப்பெற்ற' என்றபடியாய், தனக்கும் பிறர்க்கும் நன்மைக்காக வேதங்களை எம்பெருமானாலே ஓதுவிக்கப்பட்ட பிரமன் என்கிறதாகவுமாம். ஆப்பான் நிர்வாஹத்தில் "மறைபயந்த... மன்னுயிர்கட்கெல்லாம் அரணாய...பிரான்" என்று ஸர்வேச்வரனுக்கு விசேஷணமாகவுமாம். (மறைபயந்த தாமரையானோடு) 'இப்படிப்பட்ட வேதத்தையும் உபதேசிக்கவல்லஞானப்பெருமையை உடையேன்' என்னும் அபிமானத்தையுடையபிரமன். (தாமரையான்) 'எம்பெருமானிடமிருந்து நேரே தாமரையில் பிறந்தோம்' என்று அபிமானித்திருப்பவன். (தாமரையானோடு மரணாய உயிர்கட்கெல்லாம்) கல்பத்தின் தொடக்கத்தில் உண்டாகி, கல்பத்தின் முடிவில் அழியும் பிரமனோடு, "ஜாயஸ்வ ம்ரியஸ்வ" என்று முதல் கணத்தில் தோன்றி மறுகணத்தில் அழியும் கிரிமிகளோடு வாசியற எல்லா உயிர்களுக்கும். (மரணாய உயிர்கள்) மரணத்தையே இயற்கையாக உடைய உயிர்கள் என்று சரீரத்தின் தன்மையைச் சொல்லுகிறது. (மன்னுயிர்) நிலைநிற்கும் உயிர்கள் என்ற ஆத்மாவின் தன்மையைச்சொல்லுகிறது. "ந ஜாயதே ம்ரியதே வா கதா₃சித்" [கீதை2-20] [(ஆத்மா) ஒருபோதும் பிறக்கிறதுமில்லை; இறப்பதுமில்லை] என்று சொல்லப்பட்டதன்றோ. (மரணாய மன்னுயிர்கட்கெல்லாம்) மரணத்தையே இயற்கையாக உடைவர்கள் என்றது மற்றுள்ள தாழ்வுகளுக்கெல்லாம் உபலக்ஷணமாய், இவர்களுடைய அறிவுகேடுஅசக்தி முதலானவற்றைக் காட்டுகிறது. (அரணாய) இவர்களுக்கு ரக்ஷகமானவற்றை. ஆப்பான் நிர்வாஹத்தில் "அரணாய பிரான்"என்று கூட்டுவது. (பேராழிகொண்ட பிரானன்றி) ரக்ஷணத்துக்குறுப்பாக மிகப்பெரியவனை ஸுதர்சனாழ்வானை தரித்த பெருமானே இவற்றுக்கு ரக்ஷையானவற்றை அறிவான். (பிரான்) உப

யனுன உபகாரகனையல்லது, வேறு அத்₃விதீயமான கடலாலே சூழப்பட்ட பூ₄லோகத்திலுள்ள ப்ராணியானது அறியாது.

இத்தால் சிறியாரோடு பெரியாரோடு வாசியறத் தந்தாமுடைய ரக்ஷணம் தாங்களறியமாட்டார்கள்; இவனே ஸர்வக்கும் ரக்ஷணப்ரகாரம் அறியுமவன் என்றதாய்த்து.

61. **உலகு முலகிறந்த வூழியும் ஒண்கேழ்**
விலகு கருங்கடலும் வெற்பும்—உலகினில்
செந்தீயும் மாருதமும் வானும் திருமால்தன்
புந்தியி லாய புணர்ப்பு.

பதவுரை:—உலகும்—எல்லா லோகங்களும், **உலகிறந்த ஊழியும்**—உலகம் அழிந்தபோதும் இருக்கும் காலமும், **ஒண் கேழ் விலகு கரும் கடலும்**—அழகிய நிறத்தையுடையதாய், அலையெறியா நிற்பதாய், கறுத்திருப்பதான கடலும், **வெற்பும்**—(உலகிற்கு ஆதாரமான) மலைகளும், **உலகினில்**—லோகத்தில் காணப்படுகிற, **செம்தீயும்**—சிவந்த அக்நியும், **மாருதமும்**—காற்றும், **வானும்**—ஆகாசமும், **திரு மால் தன்**—பிராட்டியுடன் கூடிய எம்பெருமானுடைய, **புந்தியில் ஆய**—ஸங்கல்பத்தினல் உண்டாகிய, **புணர்ப்பு**—ஸ்ருஷ்டி.

காரம்செய்தவன். (பேராழி கொண்ட பிரான்) முன் பாசுரத்தில் ராம பிரானைச் சொல்லுகையாலே, இங்கேயும், 'பெரிய கடலை வெதுப்பித் தன்வசப்படுத்திக்கொண்ட பிரான்' என்று அப்பிரானையே சொல்லு கிறதாகவுமாம். (மரணுய மன்னுயிர்—பேராழிகொண்ட பிரான்) இவற்றின் அஜ்ஞான அசக்திகளையும், அவனுடைய ஜ்ஞானசக்தி களையும் சொல்லுகிறது. (மற்று ஓராழி சூழ்ந்த உலகு அறியாது) அவனுக்கு எதிர்த்தட்டாயிருக்கும் உலகம் தனக்கு நன்மைகளைத் தான் அறியாது, (ஓராழி சூழ்ந்த உலகு) ஒப்பற்ற கடலாலே சூழப் பட்ட உலகம். 'உலகம்' என்றது உலகிலுள்ளாரைக் குறிக்கிறது.

ஆக, இப்பாசுரத்தால் சிறியாரோடு பெரியாரோடு வித்தி யாசமில்லாமல் இவ்வுலகிலுள்ளாரனைவரும் தங்களுக்கு நன்மை யெது என்பதைத் தாங்களறியார்கள். ஸர்வேச்வரனே இவர்க ளனைவர்க்கும் நன்மையைத்தானே அறியவல்லவன் என்கிறது.

அவதாரிகை:—அவனையொழிய இவை தந்தாமுக்கு ஹிதமறியாதென்றீர்; அவன்றான் இவைதன்னை நோக்கவேண்டுமென்கிற ஹேதுவென்? என்னில்: பெற்றவனையொழிய வளர்ப்பாருண்டோ? என்கிறார்.

உரை:—பூ₄ம்யாதிகளான லோகங்களும், லோகங்களெல்லாம் காலக்ஷேபமாம்படி அழிந்துகிடக்கிற ஸம்ஹாரகாலமும் அழகிய நிறத்தையுடைத்தாய், அலையெறியாநின்றுள்ள ச்ரமஹரமான கடலும், பூமிக்கு ஆணியடித்தாப்போலிருக்கிற குலபர்வதங்களும், பின்னையும் லோகத்திலுண்டான சிவந்த நிறத்தையுடைய தேஜ:பதா₃ர்த்த₂ங்களும், வாயுவும், ஆகாசமும் இவையெல்லாம், பிராட்டிக்குகப்பாக ஜகத்ஸ்ருஷ்டியிலே ஒருப்பட்ட ஸ்ரிய:பதியுடைய ஸங்கல்பகல்பிதமான வகுப்பையுடையன.

அவதாரிகை:—அவனைத்தவிர மற்ற உயிர்கள் தங்களுக்கு நன்மையைத் தாங்களறியார்கள் என்றீர். அவன்தான் இவைகளை ரக்ஷிக்கவேண்டுமென்று நிர்ப்பந்தமென்ன? எனில்: இவற்றைப் பெற்றவன் அவனுகையாலே அவன் நோக்காதொழியான் என்கிறார்.

வ்யா:—(உலகும்) பூமிமுதலான உலகங்களும். (உலகிறந்த ஊழியும்) உலகங்களெல்லாம் காலவசப்பட்டு அழிந்தபோதுமிருக்கும் ஸம்ஹாரகாலமும். இத்தால் இந்த லீலாவிபூதியில் காலம் அநித்யம் என்னும் பக்ஷம் ஆழ்வார் உகந்ததன்று என்று தெளிவாகிறது. (ஒண்கேழ் விலகு கருங்கடலும்) அழகிய நிறத்தையுடைத்தாய், அலையெறிவதாய், கண்குளிரக் கறுத்திருப்பதான கடலும். (வெற்பும்) பூமிக்கு ஆணியடித்தாற்போலே ஆதாரமாயிருக்கும் குலமலைகளும். (உலகினில் செந்தீயும்) உலகிலேயுள்ள சிவந்த ஒளிப்பொருள்களும். (மாருதமும்) உலகினர் உயிர்வாழ உதவும் காற்றும். (வானும்) மற்ற அனைத்துக்கும் இடமளிக்கும் ஆகாயமும். இங்கு இவற்றைச் சொன்னது ப்ரக்ருதிகார்யமான மஹான், அஹங்காரம், தந்மாத்ரைகள், இந்த்ரியங்கள் முதலான மற்ற பொருள்களுக்கும் உபலக்ஷணம். (திருமால் தன் புந்தியிலாய புணர்ப்பு) பிராட்டியை உகப்பிப்பதற்காக உலகைப் படைப்பதில் ஈடுபட்ட லக்ஷ்மீநாதனின் ஸங்கல்பத்தாலுண்டான பிரிவுகளையுடைய ஸ்ருஷ்டிகளாகும்.

(திருமால் தன் புந்தியிலாய புணர்ப்பு) 'திருமால் தன்' என்று பிராட்டியோடுகூடிய பகவானின் ஸ்ருஷ்டிகள் என்கையாலே ஜகத் ஸ்ருஷ்டி முதலானவற்றிலே பிராட்டிக்கும் ஒருவகையான அந்வயம் உண்டென்று உணர்த்தப்படுகிறது. 'திருமால்' என்று பிராட்டியை விசேஷணமாகவும் எம்பெருமானை விசேஷ்யமாகவும் நிர்த்தேசிக்கையாலே இவளுடைய அந்வயம் அப்ரதா₄நமானது என்பதும், அவனுடையதே ப்ரதா₄நமானது என்றும் காட்டப்படுகிறது. எல்லாவுலகையும்தனக்குசரீரமாகவுடையவன் அவனேயாகையாலே, அவனுக்கே 'ப₃ஹுஸ்யாம்' [நான் பலவாகக்கடவேன்] என்கிற ஸங்கல்பமும், உலகிற்கு நிமித்தோபாதான காரணமாயிருக்கும் தன்மையும் கூடும். இவளுக்கு அவை கூடா. ஜகத்ஸ்ருஷ்டியில் அவனைத் தூண்டுவதும், ஸ்ருஷ்டிலீலாரஸத்தில் அவனோடு பங்குபெறுவதும் இவளுக்குள்ள அப்ரதாநமான அந்வயங்கள். "யதா₂ முக்தஸ்ய ப₄க₃வதா பரமஸாம்யே ச்ருதிஸ்ம்ருத்யாதி₃ஸித்₃தே₄பி ஜக₃த்₃வ்யாபாரவர்ஜமிதி லக்ஷணபூ₄தைராகாரைர் வைஷம்யம் ஸ்த₂ாப்யதே ததே₂ஹாபி ப₄வதி" [முக்தன் பரமபுருஷனோடு பரமஸாம்யமுடையவனென்பது ச்ருதிஸ்மிருதி ஸித்தமாயினும், ஜகத்வ்யாபாரம் தவிரவே பரமஸாம்யம் என்று பரப்ரஹ்மலக்ஷண பூதமான ஆகாரங்களால் எப்படி வேறுபாடு ஸ்தாபிக்கப்படுகிறதோ, அப்படியே பிராட்டிவிஷயத்திலும் கொள்ளவேண்டும்.] என்று சதுːச்லோகீ இரண்டாம் ச்லோகபாஷ்யத்தில் அருளிச்செய்கையாலே தேசிகக்கும்ரு இவ்விஷயத்தில் கருத்து வேற்றுமையில்லை. ஸகல பூர்வாசார்யர்களின் கருத்தும் இதுவேயாகும். இவ்வந்வயத்தை இல்லைசெய்வாரும் யாருமில்லை.

"ஈஷத் த்வத்கருணா நிரீக்ஷணஸுதா₄ ஸந்து₄க்ஷணாத்₃ ரக்ஷ்யதே
நஷ்டம் ப்ராக் தத₃லாப₄தஸ் த்ரிபு₄வநம் ஸம்ப்ரத்யநந்தோத₃யம்।
ச்ரேயோ ந ஹ்யரவிந்த₃லோசந மநːகாந்தாப்ரஸாத₃ாத்₃ருதே
ஸம்ஸ்ருத்யக்ஷரவைஷ்ணவாத்₄வஸு நருணாம் ஸம்பா₄வ்யதே
கர்ஹிசித் ॥"

[அந்தக் கடாக்ஷம் இல்லாமையாலே, முன் நசித்துக்கிடந்ததான மூவுலகமும், இப்போது சிறிதுபோது உன்னுடைய கருணைகடாக்ஷமாகிற அம்ருதவர்ஷத்தினால் அளவற்ற பெருமையை உடையதாகும்படி ரக்ஷிக்கப்படுகிறது. மனிதர்களுக்கு ஐச்வர்யம், கைவல்யம், பரமபதம் இவைகளில் மேன்மையானது தாமரைக்கண்ணனின்

மனத்துக் கினியவளான ஸ்ரீதேவியின் அருளில்லாமல் ஏற்படா தன்றே.] என்று ஆளவந்தாரும்,

ஸ்வஸ்தி ஸ்ரீர் தி₃ஶதாத₃ஶேஷஜக₃தாம் ஸர்க்கோ₃பஸர்க்க₃ ஸ்தி₂தீ:
ஸ்வர்க்க₃ம் துர்க்க₃திமாபவர்க்கி₃கபத₃ம் ஸர்வம் ச குர்வந் ஹரி:|
யஸ்யா வீக்ஷ்ய முக₂ம் ததி₃ங்கி₃தபராதீ₄நோ வித₄த்தே$கி₂லம்
க்ரீடே₃யம் க₂லு நாந்யதா₂$ஸ்ய ரஸதா₃ ஸ்யாதை₃கரஸ்யாத் தயா ||

[எல்லாவுலகையும் படைத்தளித்து அழிப்பதையும், ஸ்வர்க்கநரக மோக்ஷங்களைக் கொடுப்பதையும் செய்யும்போது பகவான் எவளு டைய திருமுகமண்டலத்தைப் பார்த்துக்கொண்டு அதனுடைய இங்கிதத்திற்கு வசப்பட்டவனாய் எல்லாக்காரியங்களையும் செய்கி றானோ, அந்தப்பிராட்டி (நமக்கு) மங்களத்தை அளிக்கட்டும்; பக வான் அவளுடன் ஒரே அபிப்ராயத்தை உடையவனாயிருக்கிறபடி யால், அவளுடைய இங்கிதபராதீனனாகக் காரியங்களைச் செய்யா விடில் அக்காரியங்கள் ரஸத்தை அளிக்கமாட்டா.] என்று ஆழ்வானும்

"யத்₃ப்₄ரூப₄ங்க₃ா: ப்ரமாணம் ஸ்தி₂ரசரரசநா தாரதம்யே முராரே:"

[எவளுடைய புருவநெறிப்புகள் பகவானுடைய ஸ்தாவரஜங்கம ஸ்ருஷ்டியிலுள்ள ஏற்றத்தாழ்வுக்குக் காரணமோ...] என்றும்,

"நம: ஸ்ரீரங்க₃நாயக்யை யத்₃ப்₄ரூவிப்₄ரமபே₄த₃த: |
ஈஶேஶிதவ்ய வைஷம்ய நிம்நோந்நதமித₃ம் ஜக₃த் ||"

[எவளுடைய புருவநெறிப்புகளின் வித்தியாசத்தாலே இவ்வுலகம் நியமிப்பவர்களும், நியமிக்கப்படுபவர்களுமாகிற பேதத்தினால் ஏற்றத்தாழ்வுகளை உடையதாயிருக்கின்றதோ, அப்படிப்பட்ட ஸ்ரீரங்கநாயகிக்கு நமஸ்காரம்.] என்றும்,

ஶ்ரியை ஸமஸ்தசித₃சித்₃ விதா₄நவ்யஸநம் ஹரே: |
அங்கீ₃காரிபி₄ராலோகைஸ் ஸார்த்த₂யந்த்யை க்ருதோஞ்ஜலி: ||

[ஸகல சேதநாசேதனங்களையும் படைப்பதால் பகவானுக்குண்டாகும் சிரமத்தைத் தன் அங்கீகாரத்தைக் காட்டும் கடாக்ஷங்களாலே ஸபல மாகச் செய்கின்ற பிராட்டியின் பொருட்டு அஞ்ஜலியானது (அடியே னால்) செய்யப்பட்டது.] என்றும்,

62. புணர்மருதி னூடுபோய்ப் பூங்குருந்தம் சாய்த்து
மணமருவ மால்விடையேழ் செற்று—கணம்வெருவ
ஏழுலகந் தாயனவு மெண்டிசையும் போயினவும்
சூழரவப் பொங்கணையான் தோள்.

பதவுரை:—**புணர் மருதின்**—(ஒன்றோடொன்று) இடைவெளியின்றிச் சேர்ந்திருக்கிற இரு மருதமரங்களின், **ஊடு போய்**—நடுவே தவழ்ந்து சென்றும், **பூம் குருந்தம் சாய்ந்து**—அழகிய குருந்தமரத்தைத் தள்ளியும், **மணம் மருவ**-(நப்பின்னைப் பிராட்டியை) மணம் புரிவதற்காக, **மால் விடை ஏழ் செற்று**—பெரிய எருதுகள் ஏழையும் கொன்றும், **கணம் வெருவ**—தேவாஸுரர்களெல்லாம் 'என்வருகிறதோ' என்று அஞ்சும்படியாக, **ஏழு உலகம் தாயனவும்**—ஏழுலோகங்களை

உல்லாஸபல்லவிதபாலிதஸப்தலோகீ-
நிர்வாஹகோரகிதநேமகடாக்ஷலீலாம் |
ஸ்ரீரங்க$_{3}$ஹர்ம்யதலமங்க$_{3}$ளதீ$_{3}$பரேக$_{2}$ாம்
ஸ்ரீரங்க$_{3}$ராஜமஹிஷீம் ச்ரியமாச்ரயாம: ||

[ஏழுலகங்களையும் (பகவான்) படைத்தவுடன் தளிர்விடுவதாகவும், (அவனாலே) ரக்ஷிக்கப்பட்ட ஏழு உலகங்களின் நிர்வாஹத்தினால் மொட்டுவிடுவதாகவுமிருக்கிற அர்த்தகடாக்ஷலீலையை உடையவளும் திருவரங்க மாளிகைக்கு (ஒரு) மங்கள தீபக்கொழுந்து போலிருப்பவளும், ஸ்ரீரங்கநாதனுடைய திவ்ய மஹிஷியானவளுமான ஸ்ரீதேவியை ஆச்ரயிக்கிறோம்.] என்றும் பட்டரும் பகவானுடைய ஜகத்வ்யாபாராதி ஸர்வகார்யங்களிலும் இவளுக்கு ப்ரேரகத்வ ரூபமான அந்வயம் உண்டென்று அருளிச்செய்தார்களன்றோ. இவ்விடத்தில் "'இப்படி ஜகத்காரணத்வத்தில் இவளுக்கு அந்வயமுண்டோ?' என்று ப்ரச்னம் பண்ணின நடாதூரம்மாளைக் குறித்துப் பிள்ளான் 'இவ்வர்த்தத்தில் ஸந்தேஹமுண்டோ?'ஆவாப்$_{4}$யாம் கர்மாணி கர்த்தவ்யாநி ப்ரஜாச்ச உத்பாத$_{3}$யிதவ்யா:' [நம்மிருவராலும் கர்மங்கள் செய்யப்படவேண்டும். குழந்தைகளும் பிறப்பிக்கப்பட வேண்டும்.] என்று ப்ரமாணம் சொல்லுகையாலே ஸஹதர்மசாரிணியான இவளுக்கு அந்வயமுண்டு' என்று அருளிச்செய்தார்" என்னும் ஐதிஹ்யம் அநுஸந்திக்கத்தக்கது.

யும் கடந்தவையும், **எண் திசையும் போயினவும்** — எட்டு திக்குகளிலும் வியாபித்தவையும். **சூழ் அரவ**-பரந்த திருவநந் தாழ்வானுகிற, **பொங்கு அணையான்**—கிளர்ந்த படுக்கையை யுடையவனுடைய, **தோள்**—திருத்தோள்களாகும்.

அவதாரிகை:—இவற்றை உண்டாக்கித் தான் கடக்க விருக்கையன்றிக்கே, இவற்றைக் களைபிடுங்கி நோக்குவானும் அவனேயென்கிறார்.

உரை:—இடைவெளியறப் பொருந்திநின்ற யமளார் ஜுனங்களின் நடுவே ஊடறுத்துக்கொண்டு தவழ்ந்துபோய் இலையும் கொம்பும் தெரியாதபடி பூத்துக்கிடந்த குருந் தத்தைத் தள்ளிப்பொகட்டு, பிராட்டியைக் கைப்பிடிக்கை யாகிற கல்யாணம் தலைக்கட்டுகைக்காகப் பெரிய வடிவை

அவதாரிகை:—இப்படி இவற்றை உண்டாக்கிவிட்டுத் தான் தூரத்திலிருக்கிறானே? இவைகளுடைய விரோதிகளை நீக்கி ரக்ஷிப்ப வனும் இவனே என்கிறார்.

உரை:—(புணர்மருதின் ஊடுபோய்) இடைவெளியில்லாமல் ஒன்றோடொன்று ஒட்டிக்கிடக்கும் இரட்டை மருதமரங்களினிடையே இடைவெளிகண்டு அவற்றினிடையேபோய் அவற்றை முறித்து நள கூபரர்களுக்கு சாபவிமோசனமும், அவற்றிலே ஆவேசித்திருந்த அசுரர்களுக்கு அழிவையும் உண்டாக்கின விருத்தாந்தத்தைக் கூறுகிறார். "பொய்ம்மாயமருதான அசுரரைப் பொன்றுவித்து" [பெரியாழ்திரு 3-1-3] என்று பெரியாழ்வார் அருளிச்செய்கையாலே இவற்றில் அஸுராவேசமும் உண்டு. களையறுத்ததைக் காட்டும் பிரகரணமாகையாலே இவருக்கும் விவக்ஷிதமாயிருக்கத்தகும். (பூங் குருந்தம் சாய்த்து) இலையும் கொம்பும் தெரியாதபடி பூத்துக்கிடக் கும் குருந்தமரமாய் நின்றான் ஓரசுரன், 'பூக்களைக்கண்டு கண்ணன் மயங்கி நிற்கும்போது அவன்மேலே விழுந்து அவனை அழிப்போம்' என்னும் நினைவுடன். அம்மரத்தைச் சாய்த்து அவனை அழித்து அவனுடைய நினைவை அவனோடேபோம்படி பண்ணிய செயலைச் சொல்லுகிறார். (மணம் மருவ மால் விடை ஏழ் செற்று) நப்பின்னைப் பிராட்டியை மணம் செய்வதற்காக, அவளுடைய தந்தையாலே வளர்க்கப்பட்டிருந்த அஸுராவேசமுள்ள பெரிய எருதுகள்

யுடைய ருஷபங்களேழையும் முடித்து, "सङ्घैः सुराणां" (ஸங்கை$_4$: ஸுராணும்) என்கிறபடியே அனுகூலப்ரதிகூல விபா$_4$க$_3$மற ஸர்வப்ராணிக$_3$ணமும் 'என்ணுகத் தேடுகிறதோ?' என்று நடுங்கும்படி ஸப்தலோகங்களையும் வருத்தமற அளந்துகொண்டனவும், எட்டுதிக்குகளிலும்போய் வியாபித்தனவும், விஸ்த்ருதனுய் மென்மை, குளிர்த்தி, நாற்றங்களை யுடைய திருவனந்தாழ்வானுகிற ஓங்கிய திருப்படுக்கையிலே கண்வளர்ந்தருளின ஸர்வேச்வரனுடைய திருத்தோள்கள்

ஏழையும் அழித்த காரியத்தைக் கூறுகிருர். (கணம் வெருவ ஏழுலகும் தாயனவும்)

ஸங்கை$_4$ஸ் ஸுராணும் தி$_3$வி பூ$_4$தலஸ்தை$_2$ஸ்
தத$_2$ா மநுஷ்யைர் க$_3$க$_3$னே ச கே$_2$சரை:।
ஸ்துத: க்ரமாந் ய: ப்ரசகார ஸர்வத$_3$ா
மமாஸ்து மாங்க$_3$ள்யவிவ்ருத்$_3$த$_4$யே ஹரி: ॥ [விஷ்ணுதர்மம்]

[ஸ்வர்க்கத்தில் தேவஸமூஹங்களாலும், அப்படியே பூமி ப்ரதேசத்திலிருக்கும் மனுஷ்யர்களாலும், ஆகாசத்தில் ஆகாச ஸஞ்சாரிகளாலும் துதிக்கப்பட்டவனுய் எந்த பகவான் திருவடிகளை வைத்தருளினுனே, (திரிவிக்கிரமாவதாரம் செய்த) அந்த ஹரி எனக்கு எப்போதும் மங்களங்களின் விருத்தியின் பொருட்டு ஆகட்டும்.] என்கிறபடியே தேவர்முதலான அநுகூலகணங்களும், அஸுரர் முதலான பிரதிகூலகணங்களும், மற்றும் உதா$_3$ஸீநகணங்களும் 'என் வருகிறதோ?' என்று நடுங்கும்படியாக ஏழுலகங்களையும் சிரமமில்லாமல் கடந்தனவும். (எண்டிசையும் போயினவும்) எட்டு திக்குகளிலும் வியாபித்தனவும். அணைக்கும் பிராட்டிக்காக ஏறடர்த்துக் காரியம் செய்ததுபோலே, அந்யப்ரயோஜனனை இந்திரனுக்கும் மாவலியையடக்கிக் காரியம் செய்ததைக் குறிப்பிடுகிருர். (எண்டிசையும் போயின) என்று விச்வரூபப்ரதர்சன ஸமயங்களில் திக்குகளில் வியாபித்ததைச் சொல்லுவதாகவுமாம். இவற்றையெல்லாம் செய்தது எதுவென்னில்: (சூழரவப் பொங்கணையான் தோள்) பரந்திருப்பவனுய், மென்மை, குளிர்த்தி, நறுமணம் முதலான படுக்கையின் லக்ஷணங்களைப் பூர்ணமாகப்பெற்றவனுய், பகவத் ஸ்பர்சத்தாலே ஓங்கிநிற்பவனுன திருவனந்தாழ்வானுகிற திருப்படுக்கையிலே கண்வளர்ந்தருளின ஸர்வேச்வரனுடைய திருத்தோள்களன்றே

கிடீர்! 'அந்தப் படுக்கையும் பொருத ஸௌகுமார்யத்தை யுடையவன்கிடீர் இச்செயல்களைச் செய்தான்! அப்படுக்கையில் கண்வளரப்பெருமல் இப்படி அலமந்து திரிவதே!' என்று வயிறு பிடிக்கிருர்.

63. தோளவனை யல்லால் தொழா என்செவி யிரண்டும்
கேளவன தின்மொழியே கேட்டிருக்கும்—நாநாளும்
கோணு கணையான் குரைகழலே கூறுவதே
நாணுமை நள்ளேன் நயம்.

பதவுரை:—**தோள்**—(என்னுடைய) கைகள், **அவனையல்லால் தொழா**—அப்பெருமானைத் தவிர வேறொருவரையும் தொழமாட்டா; **என் செவி இரண்டும்**-என்னுடைய இரண்டு காதுகளும், **கேள் அவனது**-(எனக்கு எல்லாவிதமான) உறவுமாயிருக்கும் அவனுடைய, **இன் மொழியே**—இனிய சொற்களையே, **கேட்டு இருக்கும்**-கேட்டு உயிர் தரித்திருக்கும்; **நா**—என்னுடைய நாக்கு, **நாளும்**—தினந்தோறும், **கோள் நாகணையான்**—ஒளிமிக்க ஆதிசேஷனைப் படுக்கையாக உடையவனுடைய, **குரை கழலே**-(ஆபரணவொலியினுல்) சப்தியாநிற்கும் திருவடிகளையே, **கூறுவதே**-சொல்லுவதாயிருக்கும்; **நயம்**-(ஸம்ஸாரிகள்) விரும்புமவையான விஷயங்களை, **நாணுமை நள்ளேன்**—(நான்) வெட்கமில்லாமல் அணுகமாட்டேன்.

அவதாரிகை:—இப்படியிருக்கிற அவன் பக்கலிலே என்னுடைய ஸர்வேந்த்ரியகளும் ப்ரவணமாய்த்து; நானும் ப்ரவணனுனேன் என்கிருர்.

இக்காரியங்கள் அனைத்தையும் செய்தன. அந்தப் படுக்கையும் உறுத்தும்படியான மென்மையை உடையவனன்றே இம்முரட்டுச் செயல்களைச் செய்தான்! மென்மைக்குச்சேர அப்படுக்கையிலேயே கண்வளரப்பெருமல் அடியார்க்காக இப்படிப் பாடுபட்டுத் திரிவதே! என்று வயிறெரிகிருர்.

அவதாரிகை:—இப்படியிருக்கிற அவனிடம் என்னுடைய எல்லா இந்திரியங்களும் ஈடுபட்டன; அதனுலே நானும் ஈடுபட்டேன்

உரை:—என்னுடைய தோள்களானவை நான் வேறு சிலரைத் தொழு என்னிலும் அந்த ஸர்வேச்வரனையல்லது தொழுகிறனவில்லை; என்னுடைய செவிகளிரண்டும் நிரு பாதி₄க ப₃ந்து₄வான அவனுடைய **"संश्रवे मधुरं" (ஸம்ச்ரவே மது₄ரம்)** ஆன பேச்சைக்கேட்டு அத்தாலே தரித்திருக்கும். நாவானது ஸர்வகாலமும் மிடுக்கையுடைய திருவனந்தாழ் வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேச்வரனுடைய ஆபரண த்₄வனியை உடைத்தான திருவடிகளையே சொல்லாநிற்கும். நாட்டார் விரும்பி மேல்விழுகிற விஷயங்களை அவர்களில்

என்கிறார். "முடியானே" [திருவாய் 3-8] என்னும் திருவாய்மொழியில் நம்மாழ்வார்க்கு ஏற்பட்ட அநுபவம் இதுவேயாகும்.

வ்யா:—(தோள் அவனையல்லால் தொழா) என்னுடைய தோள் களானவை நான் வேறுசிலரைத் தொழு என்றாலும் அந்த ஸர்வேச் வரனையல்லது தொழமறுக்கின்றன. (என் செவி இரண்டும்...)என் இரண்டு காதுகளும் இயற்கையுறவினனான அவனுடைய செவிக் கினிய செஞ்சொல்லைக் கேட்டு அதனாலே உயிர்தரிக்கும். (கேள் அவனது) "மாதா பிதா ப்₄ராதா—நாராயண:" என்று ஸுபாலோப னிஷத்திற் சொல்லியபடியே இயற்கையிலேயே எல்லா உறவாகவு மிருக்கும் அவனுடைய. கேள்—உறவினன். இன்ன உறவு என்று விசேஷியாமையாலே எல்லா உறவுமிவனேஎன்கை.(இன்மொழியே) "ஸம்ச்ரவே மது₄ரம் வாக்யம்" [ரா·ஸு 31-1] [கேட்பதற்கு இனிய வாக்கியம்]என்னும்படியிருக்கை. (மொழியே கேட்டு)நான் கேளாதே என்றாலும் அதையே கேட்கும். (கேட்டு இருக்கும்) கேளாவிடில் இராது என்று கருத்து. (நா நாளும்...) என் நாவானது, பல முடையவனான திருவனந்தாழ்வானைப்படுக்கையாகவுடைய ஸர்வேச் வரனுடைய வீரக்கழலொலியையுடைய திருவடிகளையே எப்போதும் பேசிக்கொண்டிருக்கும். (கோள் நாகணை) கோள்-பலம். "அமி தௌஜா: பர்யங்க:" [கௌஷீதகீ] [அளவற்ற பலத்தையுடையவன் படுக்கை] என்று உபனிஷத்திலும், "ப்ரக்ருஷ்டவிஜ்ஞாநப₃லைகதா₄மநி அநந்தபோ₄கி₃நி" [ஸ்தோ·ர·39] [மிகச்சிறந்த அறிவுக்கும் பலத்திற் கும் ஒரே இருப்பிடமான திருவனந்தாழ்வானிடத்தில்] என்று ஆளவந்தாராலும் அருளிச்செய்யப்பட்டபடியே, பிராட்டியும் பெரு மாளும் ஏறித்துகைக்கலாம்படியான அளவற்ற பலத்தையுடைய ஆதிசேஷன். (குரை கழல்) ஒலிக்கும் வீரக்கழல் முதலான ஆப

வ்யாவ்ருத்தனை நான் நிர்லஜ்ஜனாய்க்கொண்டு செறியேன். ஜ்ஞானம் பிறந்த பின்பு லஜ்ஜித்து மீளவேண்டும்படி காணும் விஷயப்ராவண்யத்தின் பொல்லாங்கிருப்பது.

64. **நயவேன் பிறர்பொருளை நள்ளேன் கீழாரோடு**
உயவே னுயர்ந்தவரோ டல்லால்—வியவேன்
திருமாலையல்லது தெய்வமென் றேத்தேன்
வருமாறென் னென்மேல் வினை.

பதவுரை:—பிறர் பொருளை—விலக்ஷணனான எம்பெருமானுடைய உடைமையான ஆத்மவஸ்துவை, **நயவேன்**—(எனக்கென்று) ஆசைப்படமாட்டேன்; **கீழாரோடு**—(ஆத்மாவைத் தம்முடையதாக நினைத்திருக்கும்) ஸம்ஸாரிகளோடு **நள்ளேன்**—நெருங்கமாட்டேன்; **உயர்ந்தவரோடல்லால் உயவேன்**—(எம்பிரானுக்கு அடிமைப்பட்டிருக்கையாலே) உயர்ந்திருப்பவர்களான ஸ்ரீவைஷ்ணவர்களைத்தவிர வேறு மனிதரிடம் பேசமாட்டேன்; **திருமாலை அல்லது**—லக்ஷ்மீநாதனைத் தவிர வேறு சிலரை, **தெய்வம் என்று ஏத்தேன்**—தேவதை என்று துதிக்கமாட்டேன்; **வியவேன்**—(அவர்களைக் கண்டு) வியக்கவும்மாட்டேன்; **என் மேல்**—(இப்படிப்பட்ட) என் மேல், **வினை வரும் ஆறு என்**—பாபம் வரும் வழி எப்படி?

ரணங்களை அணிந்ததிருவடி. நாட்டிலுள்ள மற்றவர்கள் ஈடுபடும் இதரவிஷயங்களை விட்டு, இப்படி நீர் ஸர்வேந்திரியங்களாலும் பகவத்விஷயத்தையே பற்றியிருப்பதே! என்று ஸம்ஸாரிகளுக்குக் கருத்தாகக்கொண்டு கூறுகிறார்; (நயம் நாணுமை நள்ளேன்) நயம் (பிறரால்) விரும்பப்படுவது. ஸம்ஸாரிகளால் விரும்பப்படும் சப்த ஸ்பர்சரூபரஸகந்தங்களாகிற ப்ராகிருதவிஷயங்களை நான் லஜ்ஜையில்லாமல் அணுகமாட்டேன். (நாணுமை) ஸ்வரூபஜ்ஞானம் பிறந்த பின்பு வெட்கத்தோடு மீளவேண்டும்படியன்றோ ப்ராகிருதவிஷயங்களின் தீமை உள்ளது. "ஆண்பிள்ளைச் சொற்ருழ்வியை (பெண்வேடம் பூண்ட ஆண்பிள்ளையை) ஆசைப்பட்டவனைப் போலே, உணர்ந்தவனுக்கு லஜ்ஜிக்கவேணும்" என்பர் பெரிய வாச்சான்பிள்ளை.

அவதாரிகை:—உமக்கும் உம்முடைய கரணங்களுக்கும் பகவத்விஷயத்திலே இதரவிஷயங்களைச் கடைக்கணியாத படி ப்ராவண்யம் உறைத்தாலும் துர்வாஸனையாலே அவை வந்து மேலிடில் செய்வதென்? என்ன,- நான் நின்ற நிலை இது வானபின்பு எங்ஙனே அவை வந்து மேலிடும்படி? என்கிறார்.

உரை:—**"उत्तमः पुरुषस्त्वन्यः"** (உத்தம: புருஷஸ்த்வந்ய:) என்கிறபடியே ஸர்வவிஸஜாதீயனான ஸர்வேச்வரனுடைய ஆத்மத்₃ரவ்யத்தை என்னதென்று விரும்பேன். பிறரதான

அவதாரிகை:—'உமக்கும் உம்முடைய இந்திரியங்களுக்கும் மற்ற விஷயங்களில் பற்று சிறிதுமில்லாதபடி பகவத்விஷயத்திலே ஈடு பாடு மிக்கிருந்தாலும், அநாதிவாஸனையாலே மற்ற விஷயங்கள் உம்மையும் உம்முடைய இந்திரியங்களையும் வெற்றிகொண்டு விட்டால் என் செய்வீர்' என்று ஸம்ஸாரிகள் கேட்க, 'நான் நின்ற நிலை இதுவானபின்பு எப்படி அவை வந்து மேலிடும்? என்கிறார்.

வ்யா:—(நயவேன் பிறர்பொருளை) பிறர்பொருளை விரும்பமாட்டேன். சாஸ்திரங்களில் நிஷேதிக்கப்படும் சாதாரணமான திருட்டு தன்னிடமில்லை என்று ஆழ்வார் பெருமையாகக் கூறிக்கொள்ள ப்ரஸக்தியேயில்லை. திருட்டுகளில் மிகக்கொடிய திருட்டு தன்னிடமில்லை என்பதே ஆழ்வாருடைய கருத்து. திருடப்படும் பொருளையிட்டும், திருடப்படுகிறவனையிட்டும் திருட்டில் ஏற்றதாழ்வுண்டு. அழியக்கூடிய அசேதனப்பொருள்களைக் காட்டிலும், அழியாததான ஆத்மவஸ்து மிகவுயர்ந்தது. ஸர்வேச்வரன் அனைவரிலும் உயர்ந்தவன். அவனுக்கு ஸ்ரீகௌஸ்துபம்போலே இனியதான ஆத்மவஸ்துவைத் திருடுவதே மிகக்கொடிய திருட்டாகும். அதாவது–அவனுடையதான ஆத்மாவைத் தன்னுடையதென நினைக்கை.

யோऽந்யதா₂ ஸந்தமாத்மாநமந்யதா₂ ப்ரதிபத்₃யதே।
கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா ॥

[பகவானுடைய உடைமையாயிருக்கும் ஆத்மாவை, எவனொருவன் தனக்குச் சொந்தமாக நினைக்கிறானோ, ஆத்மாவை அபஹரிப்பவனான அந்தத் திருடனால் செய்யப்படாத பாபம் எது?] என்கிற படியே இதையே மிகக்கொடிய பாபமாக சாஸ்திரமும் சொல்லிற்று ராவணன் செய்ததையொத்த இத்திருட்டு தன்னிடமில்லை என்கிறார். (பிறர்) "உத்தம: புருஷஸ் த்வந்ய:"[கீதை 15-17] [பரமபுருஷன் மற்ற

ஆத்மாவை என்னது என்றிருக்கும் தாழ்ந்த ஸம்ஸாரிகளோடு செறியேன். உத்துங்க$_3$மான ஆத்மவஸ்து ஸர்வோத்தமனுன ஸர்வேச்வரனுடையது என்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களையொழிய ஏதேனுமொன்றை உசாவேன். ஸர்வாதி$_4$கனுன ஸ்ரிய:பதியையொழியப் புறம்பே சிலரை ஆச்ரயணீய தே$_3$வதைகளென்று பு$_3$த்$_3$தி$_4$பண்ணி வாய்விட்டுப் புகழேன். இவ்வாகாரங்கள் நமக்கு உண்டாய்த்தே என்று ஆச்சர்யப்படேன். இப்படியானபின்பு ப$_4$க$_3$வத$_3$நுக்$_3$ரஹபாத்ரரான நம்முடைய மேலே நிக்$_3$ரஹரூபமான பாபம் வந்து மேலிடும்படி எங்ஙனே? திருமாலையல்லது வியவேன்; அவனையல்லது தை$_3$வமென்றேத்தேன் என்னவுமாம்.

புருஷர்களிலும் வேறுபட்டவன்] என்றதை அடியொற்றிப் பரம புருஷனைப் 'பிறர்' என்கிறுர். (நள்ளேன் கீழாரோடு) பரமபுருஷனுடைய ஆத்மவஸ்துவைத் தம்முடையதாக நினைத்திருக்கும் தாழ்ந்தவர்களோடு சேரமாட்டேன். (உயவேன் உயர்ந்தவரோடல்லால்) பரமபுருஷனுக்கு ஸ்ரீகௌஸ்துபம்போலே இனிய ஆத்மவஸ்துவைத் தம்மதாகநினையாமல் ஸர்வோத்தமனுன அவனுடையதாக நினைத்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களைத் தவிர வேறெவரிடம் பேச்சுவார்த்தைகள் வைத்துக்கொள்வதில்லை. (திருமாலையல்லது தெய்வமென்றேத்தேன்) திருவுடையதேவனுகையாலே புருஷோத்தமனுன அவனைத்தவிர மற்றெரு திருவில்லாத் தெய்வத்தை அடையத்தக்க தெய்வமென்றெண்ணி. வாய்விட்டுத் துதிக்கமாட்டேன். (இவ்வாழ்வாரை சமரசவாதியென்று சிலர் கூறுகிறுர்களே, அவர்கள் அறிவிலிகளாகவாவது வஞ்சகர்களாகவாவது இருக்கவேண்டும்.) (வியவேன்) அவனைப் பற்றியவர்க்கு இவை தாமே வருமாகையாலே, இப்பெருமைகள் நமக்கு எப்படி வந்தன என்று ஆச்சரியப்படமாட்டேன். (வியவேன் திருமாலையல்லது...) திருமாலைத்தவிர வேறெருவரின் ஸ்வரூபரூபகுணவிபூதி சேஷ்டிதங்களைக்கண்டுஆச்சரியப்படமாட்டேன்; அவனைத்தவிர வேறெருவரை தெய்வமாகத் துதிக்கமாட்டேன் என்றும் கொள்ளலாம். (வருமாறென் நம்மேல்வினை) இப்படியிருக்கும்போது பகவானுடைய அனுக்ரஹத்திற்கு இலக்கான என்மேல், அவனுடைய நிக்ரஹரூபமான பாபங்களும், அது காரணமாக வரும் விஷயாநுபவமும் எப்படி வந்து வெற்றிகொள்ளமுடியும்?

65. வினையா லடர்ப்படார் வெந்நரகில் சேரார்
தினையேனும் தீக்கதிக்கண் செல்லார்—நினைதற்
கரியானைச் சேயானை ஆயிரம்பேர் செங்கட்
கரியானைக் கைதொழுதக் கால்.

பதவுரை:—நினைதற்கு அரியானை—(தம் முயற்சியாலே) அறியமுடியாதவனும், சேயானை-வெகுதூரத்திலிருப்பவனும், ஆயிரம் பேர் செம் கண் கரியானை-ஆயிரம் திருநாமங்களையும், சிவந்த திருக்கண்களையும், கறுத்த திருமேனியையும் கொண்டவனுமான எம்பிரானை, கை தொழுதக்கால் — கையாலே வணங்கினால், வினையால் அடர்ப்படார்-கர்மங்களால் துன்புறுத்தப்படார்கள்; வெம் நரகில் சேரார்—கொடிய நரகத்தில் சேரார், தினையேனும்—சிறிதாவது, தீ கதிக்கண் செல்லார்-கெட்ட கதிகளுக்கும் போகமாட்டார்கள்.

அவதாரிகை:—இது எனக்கு ஒருவனுக்குமேயன்று; அவனை ஆச்ரயித்தார்க்கெல்லாம் ஒக்குங்கிடீர் என்கிறார்.

உரை:—ஸ்வயத்நத்தால் அளவிட்டு நினைக்கைக்கு மிகவும் அரியனாய், மனோரத₂பத₃த்துக்கு எட்டாதபடி அதிதூ₃ரஸ்த₂னாய், தன்னருளாலே அறிந்து அநுப₄விக்க இழிந்தார்க்கு இழிந்தவிடமெங்கும் துறையாம்படி கு₃ண சேஷ்டிதங்களுக்கு வாசகமான ஆயிரம் திருநாமங்களை

அவதாரிகை:— முன் பாசுரத்திற்சொன்ன பெருமை எனக்கு ஒருவனுக்கு மாத்திரமன்று. அவனை அடைந்தார் அனைவர்க்கும் உள்ளதொன்று கிடீர் என்கிறார்.

வ்யா:—(நினைதற்கு அரியானை) "யாரும் ஓர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமான்" [திருவாய் 1-3-4] என்கிறபடியே எத்தனையேனும் விஞ்சிய அறிவையுடையவர்களுக்கும் தம் முயற்சியாலே அறிய அரியவனை. இதற்குக் காரணம் சொல்லுகிறது மேலே,—(சேயானை) மனக்குதிரைக்கும் சென்றுகிட்ட முடியாதபடி மிகவும் தூரத்திலிருப்பவனை. (ஆயிரம்பேர்) "மயர்வற மதிநலமருளினன்" என்கிறபடியே அவனுடைய அருளாலே அவனை அநுபவிக்க இழிந்தவர்களுக்கு, இறங்கினவிடமெல்லாம் அனுபவிக்கும் துறை

யுடையனும், வாத்ஸல்யஸூசகமாய்ச் சிவந்த திருக்கண்களையும், அதுக்குப் பகைத்தொடையான கறுத்த வடிவையுமுடையனுன ஸர்வேச்வரனை அஞ்ஜலிப்ரணுமாத்யநுவர்த்தனங்களைப் பண்ணி ஆச்ரயித்தால் புண்யபாபரூபகர்மங்களாலே நெருக்குப்படார்; அதுக்குப் பலமாக வரக்கடவதாய், அதிக்ரூரமான ஸம்ஸாரமாகிற நரகத்திலே சென்றுகிட்டார். ஏகதேசமும் துர்மார்க்கங்களில் போகார்.

66. காலை யெழுந்துலகம் கற்பனவும் கற்றுணர்ந்த
மேலைத் தலைமறையோர் வேட்பனவும்—வேலைக்கண்
ஓராழி யானடியே யோதுவது மோர்ப்பனவும்
பேராழி கொண்டான் பெயர்.

பதவுரை:— காலை எழுந்து— (ஸத்வகுணத்தை வளரச் செய்வதான) காலை வேளையில் கண் விழித்து எழுந்து, **உலகம்**—உயர்ந்தோரான முமுக்ஷுக்கள், **கற்பனவும்**—அப்யாஸம்

யாம்படி குணச்செயல்களைச் சொல்லும் ஆயிரம் பெயர்களை உடையவனை. (ஆயிரம் பேர்) வாய்க்கினியவிருந்து. (செங்கட் கரியானை) கண்ணுக்கினிய விருந்து. வாத்ஸல்யத்தைக் கோட் சொல்லித்தரும் சிவந்த திருக்கண்களையும், அதுக்கு நிறச்சேர்த்தியழகைத்தரும் கரியதிருமேனியையும் உடைய ஸர்வேச்வரனை. (கைதொழுதக்கால்) கைகூப்புவது, வணங்குவது முதலான சேஷவ்ருத்திகளைப்பண்ணி ஆச்ரயித்தால். (வினையால் அடர்ப்படார்) புண்யபாபரூபமான பாபங்களாலே துன்பப்படமாட்டார்கள். (வெந்நரகில் சேரார்) அந்தப் புண்யபாபங்களுக்குப் பலமான ஸம்ஸாரமாகிற கொடிய நரகிலும் சேரார். (வினையால் அடர்ப்படார் வெந்நரகில் சேரார்) பாபபலன்களை இவ்வுலகில் அனுபவியார்; கொடியநரகில் சென்றும் பாபபலன்களை அனுபவியார் "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" [கீதை 18-66] என்னுமவன் 'பொறுத்தேன்' என்னப்பாபங்கள் தீருகையாலே. (தினையேனும் தீக்கதிக்கண் செல்லார்) புண்யபாபங்களுக்குக்காரணமான தீயவழிகளில் சிறிதும் செல்லமாட்டார்கள். தர்மபுத்ரன் நரகத்தைப்பார்த்தது போலும் இவர்களுக்குச் சிறிதேனும் நரகாதி துர்மார்க்க ஸம்பந்தம் கூடாது என்றுமாம்.

செய்பவையும். **கற்று உணர்ந்த மேலை தலைமறையோர்**-படித்து அறிந்தவர்களான வைதிகச்ரேஷ்டர்கள், **வேட்பனவும்**— காண ஆசைப்படுபவையும், **வேலைக்கண்**— திருப்பாற்கடலினுள், **ஓர் ஆழியான் அடியே**—ஒப்பற்ற திருவாழியைக் கைக்கொண்டு கண்வளாந்தருளும் எம்பிரானது அடிகளே; **ஓதுவதும்**— (இப்பெரியோர்கள்) கேட்பவையும், **ஓர்ப்பனவும்**— நினைப்பவையும். **பேர் ஆழி கொண்டான் பெயர்**— பெரிய சக்கரத்தைக் கொண்டவனுடைய திருநாமங்களே.

அவதாரிகை:—அறிவுடையராயிருப்பார்களாகில் ப₄ஜநீயன் அவனே கிடீர்! என்கிறுர்.

உரை:—''கிளரொளியிளமை'' என்கிறபடியே ப₄ஜநாநுரூபமான கரணபாடவமுள்ள பால்யாவஸ்தையிலே ஆச்ரயணோந்முகராய்க்கொண்டு கிளர்ந்து லோகமடங்க அ₄ப்யஸிக்குமவையும். ஜ்ஞாதவ்யார்த்தங்களை ஓராசார்யன் பக்கலிலே கேட்டு அவற்றை அலகலகாக அறிந்திருப்பார்களாய் அத்தால் வந்த மிக்க உயர்த்தியை உடையரான பரமவைதிக

அவதாரிகை:— அவனை அடைந்தவர் இடர்ப்படார் என்றுர் சென்றபாட்டில்; அறிவுடையவர்களாயிருந்தால் அவனை அடையாதிருக்கமுடியுமோ? என்கிறுர்.

வ்யா:—(காலை எழுந்து உலகம் கற்பனவும்)அனைவர்க்கும் ஸத்வ குணம் விஞ்சியிருக்கும் காலைவேளையில் எழுந்திருந்து உயர்ந்தோர் கற்கின்றனவும், ''உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே'' என்கிறபடியே 'உலகம்' என்னும் சொல் உயர்ந்தோரான முமுக்ஷுக்களைக் குறிக்கிறது. 'காலை' என்று ஆயுளுக்கு ஆரம்பநிலையாகிற இளமையைக் குறிப்பதாய், ''கிளரொளியிளமை கெடுவதன் முன்னம்'' [திருவாய் 2-10-1] என்கிறபடியே அவனை நினைக்கத்தக்கபடி ஐம்புலன்களும் வலிமையோடிருக்கும் இளமையிலே அவனை அடைய விரும்பிக்கிளர்ந்து உலகமெல்லாம் (உயர்ந்தோரனைவரும்) கற்கின்றவையும். (கற்றுணர்ந்த மேலைத்தலைமறையோர் வேட்பனவும்) அறியவேண்டிய விஷயங்களையெல்லாம் ஓராசார்யனிடம் கேட்டு அவற்றை அலசி அலசி ஆராய்ந்து அறிந்திருப்பவர்களாய்,

ரடங்கலும் அறிவின் பலமாக ஸாக்ஷாத்கரிக்க ஆசைப்படு வனவும், கரையோடேகூடி இடமுடைத்தாய் அத்விதீயமான கடலிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரன் திருவடிகளே. அதுக்கு ஸாதநமாக ச்ரவணம் பண்ணுவதும் மனனம் பண்ணுவதும் ரக்ஷணபரிகரமான பெரிய திருவாழியையுடையனை ஸர்வேச்வரனுடைய குணசேஷ்டிதாதி₃களுக்கு வாசகமான திருநாமங்கள். பேராழிகொண்டான்—பெரியகடல் போலே ச்ரமஹரமான வடிவை எடுத்துக்கொண்டிருக்கிறவன் என்னவுமாம். அப்போது 'ஓராழியான்' என்றது அத்விதீயமான திருவாழியை உடையவனென்று கொள்வது.

67. பெயருங் கருங்கடலே நோக்குமாறு ஒண்பூ
உயருங் கதிரவனே நோக்கும்—உயிரும்
தருமனையே நோக்குமொண் தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கு முணர்வு.

பதவுரை:—ஆறு—நதியானது, **பெயரும் கரும் கடலே நோக்கும்**-அலையெறிகின்ற கறுத்த கடலையே நோக்கிச் செல்லும்; **ஒண்பூ**—ஒளிபொருந்திய தாமரைப்பூ, **உயரும்**

அதனால் உண்டான மிகுந்த சிறப்பையுடையவர்களான பரம வைதிகர்களனைவரும் அறிவின் பலனாகக்காண விரும்புகின்றவையும். (வேலைக்கண் ஓராழியானடியே) கரையோடே கூடியதாய், பெரிதான இடமுடையதாய், ஒப்பற்றதாயிருக்கும் திருப்பாற்கடலிலே கண் வளர்ந்தருளுகிற ஸர்வேச்வரனுடைய திருவடிகளே இப்பெருமைகளை உடையவை. வேலை-கரை. கண்-இடமுடைமை. அன்றிக்கே, வேலை என்று திருப்பாற்கடலைக்குறிப்பதாய், திருப்பாற்கடலிலே ஒப்பற்ற திருவாழியை ஏந்திநிற்பவனுடைய திருவடிகளே என்றுமாம். (ஓதுவதும் ஓர்ப்பனவும் பேராழிகொண்டான் பெயர்) அவ்வடியை அடைவதற்கு ஸாதநமாகக் கேட்பதும் மனனம் செய்வதும், அடியார்களை ரக்ஷிப்பதற்குறுப்பாகப் பெரிய திருச்சக்கரத்தை ஏந்திநிற்பவனுடைய பெயர்களேயாகும். (பெயர்) அவனுடைய குணங்களையும் செயல்களையும் காட்டும் பெயர்கள். 'ஓராழியான்' என்றதை சக்ரதாரி என்று கொள்ளும்போது, 'பேராழி கொண்டான்' என்றதை, பெரிய கடல்போலே, கண்டார்களைப்பையாற்றும் வடிவை எடுத்துக்கொண்டிருக்கிறவன்' என்று பொருள்கொள்வது.

கதிரவனே நோக்கும்—*மிக உயர்ந்த இடத்திலேயிருக்கும் ஸூர்யனைக்கண்டே மலரும்;* **உயிரும்**—*(அவைஷ்ணவர்களுடைய)ஆத்மாக்கள்,* **தருமனையே நோக்கும்**–*(ஆயுள் முடிவில்) யமதர்மராஜனையே அடையும்; (அப்படியே),* **உணர்வு**–*ஞானமானது,* **ஒண் தாமரையாள் கேள்வன் ஒருவனையே** — *ஒளி பொருந்திய தாமரையில் வஸிக்கும் லக்ஷ்மியின் நாதனாகிய நாராயணனை மட்டுமே,* **நோக்கும்**—*அறியும்.*

அவதாரிகை:–*இப்படி அறிவில் தலைநின்றவர்கள் அவனை ஆசைப்படுகைக்கடி அறிவுக்கு கந்தவ்யபூமி ஸ்ரிய:பதியல்லதில்லாமையாலே என்கிறார்.*

உரை:–*காற்றுவளத்திலே கொந்தளித்துக் கிளரக்கடவதாய், பரப்பையுடைத்தான கடலை ஆறானது நோக்காநிற்கும். அழகிய தாமரைப்பூவானது உச்சஸ்தலவர்த்தியான ஆதித்யனையே நோக்காநிற்கும். பகவத்பரரல்லாத நாட்டில் ப்ராணிகளடங்கலும் ஶரீரவிச்லேஷாநந்தரத்தில் தர்மராஜா*

அவதாரிகை:— இப்படி அறிவிற்சிறந்தவர்களனைவரும் அவனை ஆசைப்படுவதற்குக் காரணம், அறிவுக்குப்போக்கிடம் திருமாலையல்லது வேறொரு தத்துவமில்லாமையாலே என்கிறார்.

வ்யா:— (பெயரும் கருங்கடலே நோக்கும் ஆறு) காற்றடிக்கும் திசையிலே அலையெறிவதாய், கறுத்திருப்பதாய், பரப்பையுடையதான கடலைநோக்கியே செல்லாநிற்கும் ஆறு. ஆறு கடலை நிறைப்பதற்காகப் புகவில்லை; புகுந்தல்லது நிற்கமாட்டாமையாலே கடலுடன் கலக்கிறது. இவ்வாறே அறிவும் கடல்வண்ணனான திருமாலையடைந்தல்லது நிற்கமாட்டாது என்கை. (ஒண் பூ உயரும் கதிரவனே நோக்கும்) அழகிய தாமரைப் பூவானது உயரவிருக்கும் சூரியனின் வரவையே பார்த்திருந்து அவனுக்கே மலருமேயொழிய, அருகிலிருக்கும் நெருப்பு முதலானவற்றுக்கும் மலராது. ''செந்தழலே வந்தழலைச் செய்திடினும் செங்கமலம் அந்தரஞ்சேர் வெங்கதிரோற்கல்லால் அலராவால்'' [பெருமாள் திரு 5-6] என்கிறபடியே. அதுபோலவே உண்மையறிவாகிற கமலம் ஆதித்யவர்ணனை திருமாலையே விஷயமாகக்கொள்ளுமேயொழிய சந்திரமௌளி முதலாய மற்ற தெய்வங்களை நோக்காது என்கை. (உயிரும் தருமனையே நோக்கும்) பகவானையடையாத ஜீவர்களுடைய உயிர் உடம்பை விட்டுப் பிரியும்போது தர்மராஜாவான யமனையே

வான யமனையே சென்று கிட்டாநிற்கும். இவையிவை நியதமானாப்போலே, ஜ்ஞாநமானது அழகிய தாமரைப் பூவை இருப்பிடமாகவுடைய பெரியபிராட்டியார்க்கு வல்லபனை ஸர்வேச்வரன் ஒருவனையுமே சென்று பற்றாநிற்கும். ஜ்ஞாநமாகில் ஸ்ரிய:பதியைப் பற்றியல்லது நில்லாது என்கை. பகவத்வ்யதிரிக்த விஷயங்களைப்பற்றிப் பிறக்கும் ஜ்ஞாநமெல்லாம் அஜ்ஞாநகல்பம். "तत् ज्ञानमज्ञानमतोऽन्यदुक्तं" (தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோந்யது₃க்தம்) "विद्यान्या शिल्पनैपुणं" (வித்₃யாந்யா ஶில்பநைபுணம்) என்னக்கடவதிறே.

சென்றடையும். அப்படியே அறிவும் தர்மஸ்வரூபியான தாமரையாள் கேள்வனையே சென்றடையும். (தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு)கருங்கடலை ஆறு நோக்குவதும், தாமரை கதிரவனை நோக்குவதும், உயிர் தருமனை நோக்குவதும் இயற்கை நியதியானாற்போலே, அறிவென்று ஒன்று உள்ளதாகில் அது தாமரையாளான லக்ஷ்மியின் நாதனை நாராயணன் ஒருவனையே நோக்கும். திருவில்லாத்தேவரான வேறெவரையும் நோக்காது என்று கருத்து. சிலருடைய அறிவு மற்ற தெய்வங்களையும் விஷயங்களையும் நோக்குகிறதே எனில்; அவ்வறிவுகள் அறிவேயல்ல; அறியாமையை ஒத்தவையே என்பதைப் பின்வரும் பிரமாணங்கள் பேசின.

"ஸம்ஜ்ஞாயதே யேந தத₃ஸ்தத₃தோ₃ஷம்
ஶுத்₃த₄ம் பரம் நிர்மலமேகரூபம்।
ஸந்த்₃ருச்யதே வாऽப்யதி₄க₃ம்யதே வா
தத் ஜ்ஞாநமஜ்ஞாநமதோऽந்யது₂க்தம் ||" [வி-பு 6-5-87]

[எந்த அறிவினால் தோஷமற்றதும், சுத்தமானதும், மிகவும் மலமற்றதும் ஒப்புயர்வற்றதுமான அந்தப் பரவஸ்து அறியப்படுகிறதோ, பார்க்கப்படுகிறதோ, அதுவே ஜ்ஞானம்; அதைக்காட்டிலும் வேறானது அஜ்ஞானமெனப்படுகிறது.]

தத் கர்ம யந்ந ப₃ந்த₄ாய ஸா வித்₃யா யா விமுக்தயே।
ஆயாஸாயாபரம் கர்ம வித்₃யாந்யா ஶில்பநைபுணம் ||"
[வி-பு 1-19-41]

[எந்தக் கர்மம் பந்தத்திற்குக் காரணமல்லவோ அதுவே கர்மம்; எது முக்திக்குக் காரணமோ அதுவே வித்யை; மற்ற கர்மம் ச்ரமத்திற்கே. மற்ற வித்யை சில்பசாஸ்த்ர பாண்டித்யம் போன்றதே.]

68. உணர்வாரா ருன்பெருமை யூழிதோ றூழி
உணர்வாரா ருன்னுருவந் தன்னை—உணர்வாரார்
விண்ணகத்தாய் மண்ணகத்தாய் வேங்கடத்தாய்நால்வேதப்
பண்ணகத்தாய் நீ கிடந்த பால்.

பதவுரை:—**விண் அகத்தாய்**—*ஸ்ரீவைகுண்டத்தில் எழுந்தருளியிருப்பவனே!*, **மண் அகத்தாய்**—*இவ்வுலகிலும் அவதரித்தவனே!* **வேங்கடத்தாய்**—*திருவேங்கடமலையிலும் நிற்பவனே!* **பண்**—*ஸ்வரத்தை ப்ரதானமாக உடைய,* **நால் வேத அகத்தாய்**—*நாலு வேதங்களிலும் விளங்குபவனே!,* **உன் பெருமை**—*உன்னுடைய மேன்மையை,* **உணர்வார் ஆர்**—*அறியவல்லவர் யார்?* **ஊழி தோறு ஊழி**—*கல்பங்கள் தோறும் (ஆராய்ந்தாலும்),* **உன் உருவம் தன்னை**—*உன்னுடைய ஸ்வரூபத்தையும் ரூபத்தையும்,* **உணர்வார் ஆர்**—*யார் அறிய முடியும்?* **நீ கிடந்த பால்**—*நீ பள்ளி கொண்ட பாற்கடலை,* **உணர்வார் ஆர்**—*யார் (அளவிட்டு) அறியமுடியும்?*

அவதாரிகை:—*இப்படி அறிவுக்குப் பர்யவஸாநபூ$_4$மி அவனல்லது இல்லையாயிருக்க, அவன் தன்மை அறிவார்தான் இல்லை என்கிறார்.*

உரை:—*பரமபதத்திலே மேன்மை தோற்ற எழுந்தருளியிருக்குமவனாய், பூ$_4$ம்யுபலக்ஷிதையான லீலாவிபூ$_4$தியிலே*

அவதாரிகை:—*சென்றபாசுரத்தில், "நாராயணம் மஹாஜ்ஞேயம்" என்கிறபடியே அறிவென்று பேர் பெற்றதெல்லாம் அவனையே அறியும் என்றார். இப்பாசுரத்தில், அவனை அளவிட்டு அறிவார் எவருமில்லை என்கிறார்.*

வ்யா:—*(விண்ணகத்தாய்) பரமபதத்திலே மேன்மைதோற்ற எழுந்தருளியிருக்கிறவனே! (விண்ணகத்தாய் உணர்வார் ஆர் உன் பெருமை)* "யோ அஸ்யாத்$_4$யக்ஷ: பரமே வ்யோமந்—ஸோ அங்க$_3$ வேத$_3$ யதி$_3$ வா ந வேத$_3$" *[எவனொருவன் இவ்வுலகிற்கெல்லாம் தலைவனாய் பரமபதத்திலிருக்கிறானோ, அவனே தன் பெருமையை அறி*

நீர்மைதோற்றவந்து அவதரிக்கும் ஸ்வப$_4$ாவனாய். இரண்டிடத்துக்கும் பொதுவாய்க்கொண்டு மேன்மை நீர்மைகளிரண்டும் கரைபுரளும்படி திருமலையிலே வந்து நின்றருளினவனாய்.ஸ்வரப்ரத$_4$ாநமான நாலுவேதத்தாலும் உக்தவைப$_4$வயுக்தனாக ப்ரதிபாதி$_3$க்கப்படும் ஸ்வப$_4$ாவனானவனே! இப்படி

வாஞே மாட்டாஞே] என்று பரமபதத்திலிருக்கும் உனக்கே உன் பெருமையை அறியமுடியுமோ என்று வேதம் ஐயமுறும்போது, உன் பரத்வத்தை வேறொருவரால் அறியமுடியுமோ? என்கை. (மண்ணகத்தாய் உணர்வாரார் உன் பெருமை) பரமபதத்திலிருந்து கீழே யிறங்கி பூமி முதலான கீழுலகங்களிலே நீர்மை தெரியும்படியாக அவதரித்த பின்புதான் உன்பெருமையை ஒருவரால் அறியமுடியுமோ? கடல் கிட்டவந்தாலும் அதை அளவிடமுடியுமோ? ''தஸ்யதீ$_4$ரா: பரிஜாநந்தியோநிம்'' /பு-ஸூ/ [உயர்வறவுயர்ந்த அவனுடைய அவதாரத்தை மயர்வறமதிநலமுடையவர்கள் அறிகின்ருர்கள்] என்று வேதம் அவதாரத்தைச் சில அறிவாளிகள் அறிவதாகச் சொல்லிற்றே எனில்: அங்கு ''பரிஜாநந்தி'' [அறிகிருர்கள்] என்றதும் க்ஷணந்தோறும் 'எத்திறம்' என்னும்படியேயாகும் என்பர் பெரியவாச்சான்பிள்ளை. (மண்ணகத்தாய்) 'மண்' என்றது பிராக்ருதலோகங்கள் அனைத்துக்கும் உபலக்ஷணம். (வேங்கடத்தாய் உணர்வாரார் உன்பெருமை) எல்லாருக்கும் உய்யலாம்படி ஸர்வஸஹிஷ்ணுவாய், அர்ச்சகபராதீனமான ஸ்வரூபரூபகுணவிபூதிகளையுடையவனாய் வானேர்க்கும் மண்ணேர்க்கும் பொதுவானவனாய், மேன்மை நீர்மைகளிரண்டும் வெள்ளமிட வேங்கடத்திலே நீ நிற்கும் பெருமையைத்தான் ஒருவரால் அறியமுடியுமோ? ''ஹ்ருத$_3$யாலுபி$_4$: சீலாத் ஜுகு$_4$ப்$_4$யதே'' [ர-ஸ்த] என்கிறபடியே நெஞ்சுடையார் இந்த ஸௌசீல்யத்தைக்கண்டு மோஹத்தையடைகின்ருர்களன்ரே.(நால் வேதப்பண்ணகத்தாய் உணர்வாரார் உன் பெருமை) ''வேத$_3$ாஹமேதம் புருஷம்''[நான் இப்புருஷனை அறிந்தேன்] என்ற வேத$_3$புருஷனும் எப்படியறிந்தது என்னும் கேள்வியெழ ''மஹாந்தம்'' என்று அளவிட்டு அறியமுடியாதபடி அறப்பெரியவன் என்று அறிந்தேன் என்ருனன்ரே. பிறர் இவனை அறிவதைப்பற்றிப் பேசும்போதும், ''யஸ்யாமதம் தஸ்யமதம்'' [எவன் பரம்பொருளை அளவிட்டு அறியவில்லையோ, அவனுக்கே அது அறியப்பட்டதாகிறது.]என்றல்லவோ கோஷித்தான் வேதபுருஷன். (நால்வேதப்பண்ணகத்தாய்) உதாத்தம் அநுதாத்தம் முதலான ஸ்வரங்களை ப்ரத$_4$ானமாகக்கொண்ட நாலுவேதங்களாலும் இப்படி

யிருக்கிற உன்னுடைய குணவைலக்ஷண்யத்தால் வந்த பெருமையைக்காலதத்வமெல்லாம் கூடினாலும் அறியவல்லார் ஆர்? அந்த குணங்களுக்கு ஆச்ரயமாயிருக்கிற உன்னுடைய திவ்யாத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தைத்தான் அறியவல்லார் ஆர்? நீ ஆர்த்தரக்ஷணத்துக்காகப் பள்ளிகொண்டருளுகிற திருப்பாற்கடலை அறியவல்லார் ஆர்?

69. **பாலன் றனதுருவா யேழுலகுண்டு ஆலிலையின்**
மேலன்று நீவளர்ந்த மெய்யென்பர்—ஆலன்று
வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு.

பதவுரை:—பாலன் தனது உருவாய்—சிறு குழந்தையின் ரூபத்தை உடையவனாய், ஏழுலகு உண்டு—ஸப்தலோகங்

அளவிட்டு அறியமுடியாதவனாக ஓதப்படுபவனே என்றபடி. (உணர்வாரார் உன் பெருமை) இப்படியிருக்கிற உன்னுடைய மேன்மை நீர்மை முதலான குணங்களால் வந்த பெருமையை யார்தான் அளவிட்டு அறியமுடியும்? (உணர்வாரார் உன் உருவந் தன்னை) அந்த குணங்களுக்கு இருப்பிடமான உன் ஸ்வரூபத்தின் பெருமையைத்தான் யார் அறிவார்? அன்றிக்கே, அந்த குணங்களை வெளிக்காட்டும் உன் திவ்யமங்களவிக்ரஹத்தின் பெருமையைத் தான் யாரறிவார்? என்றுமாம். (ஊழிதோறூழி உணர்வாரார்) ஒருகாலத்திலன்றிக்கே காலமுள்ளபொழுதெல்லாம் எப்போதும் நின்று எல்லாரும் அறியப்பார்த்தாலும் உன் ஸ்வரூபரூபகுணப் பெருமைகளை அறியமுடியுமோ? "யானுமேத்தி ஏழுலகும் முற்றும் ஏத்திப்பின்னையும் தானும் ஏத்திலும் தன்னை ஏத்த ஏத்த எங்கெய்தும்" [திருவாய் 4-3-10] என்றாரன்றோ நம்மாழ்வாரும். (நீ கிடந்த பால் உணர்வார் ஆர்) உன் ஸ்வரூபரூபகுணங்களை உணர்வது ஒருபுறமிருக்கட்டும். உன் விபூதிக்கடலிலே ஒருதுளியாய், வருந்தினார் கூப்பீடு கேட்பதற்காக நீ கண்வளர்ந்தருளுமிடமான திருப்பாற்கடல்ஒன்றையேனும் அளவிட்டுஅறியவல்லார்உண்டோ?

இத்தால், இவனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளில் ஒரு சிறிதும் ஒருவராலும் அளவிட்டு அறியமுடியாது என்றதாயிற்று.

களையும் அமுதுசெய்து, **ஆல் இலையின் மேல்**—ஆலமரத்தின் தளிரின் மேல், **அன்று**—ப்ரளயகாலத்தில், **நீ வளர்ந்த**—நீ கண்வளர்ந்தருளினதை. **மெய் என்பர்**-உண்மை என்று(வைதிகர்கள்) சொல்லுவார்கள்; **அன்று**—அப்போது, **ஆல்**—அந்த ஆலந்தளிர், **வேலை நீர்**—(நீ கண்வளர்ந்த) ஸமுத்ரஜலத்திலே, **உள்ளதோ**-இருந்ததோ? **விண்ணதோ**-(ஆதாரமற்றதான) ஆகாசத்திலிருந்ததோ? **மண்ணதோ**-(கரைந்துபோன) பூமியிலிருந்ததோ? **சோலை சூழ் குன்றுஎடுத்தாய்**-தோட்டங்களால் சூழப்பட்ட கோவர்த்தனமலையை (குடையாக) எடுத்தவனே! **சொல்லு**—(நீதான்) சொல்லவேணும்.

அவதாரிகை:—வேறொருவரால் அறியவொண்ணாமை கிடக்கிடீர்! ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனான உன்னாலேதான் உன்னை அறியப்போமோ? என்கிறார்.

உரை:—ஒரு குறட்டைத் தெறித்தால் ஒரு குறட்டிலே பால்பெருகும்படி முக்$_3$த$_4$சுவான விக்$_3$ரஹத்தையுடையனாய், ஸப்தலோகங்களையும் திருவயிற்றிலே வைத்து ஒரு

அவதாரிகை:-வேறொருவரால் உன் ஸ்வரூபரூபகுணவிபூதிகளை அறியமுடியாது என்பது இருக்கட்டும்; இயற்கையிலேயே எல்லாமறிந்தவனான நீயே உன்னுடைய சேஷ்டிதமொன்றை அறியவல்லவனோ? என்கிறார்.

வ்யா:—(பாலன் தனதுருவாய்) பாலன் என்றால் எப்படிப்பட்ட பாலன்? அன்றுபிறந்த குழந்தையைப்போன்ற பாலன். தாயானவள் குழந்தை உள்ளே குறட்டை (மூச்சை) இழுக்கும்போது பாலைத் தெறித்தால் (பீச்சினால்) வெளியே குறட்டை (மூச்சை) விடும்போது வயிறுநிரம்பி வாய்வழியாகவும் மூக்குவழியாகவும் பால் பெருகி வரும்படியான அத்தனை சிறிய இளங்குழந்தையின் உருவத்தையுடையவன் என்கை. ஸர்வலோகரக்ஷகனானவன் தனக்கொரு ரக்ஷகர் வேண்டும்படியான வடிவைக்கொண்டு செய்த செயல் என்னவெனில்: (ஏழுலகுண்டு) ஏழுலகங்களையும் பிரளயம் அழிக்காதபடி தான் விழுங்கித்தாயிருக்கும்வண்ணமே திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்தான் என்கிறார். (ஏழுலகுண்டு) ஏழுலகம் என்றது

பவனுன ஆலந்தளிரிலே அந்த ப்ரளயஸமயத்திலே ஸர்வ சக்தியான நீ கண்வளர்ந்தருளின இத்தைப் பரமார்த்த₂மென்றுகொண்டு பரமாப்தரான ருஷிகளடங்கலும் சொல்லாநின்ருர்கள். அந்த ஆலானது ஸர்வமும் அழிந்தவன்று வெள்ளங்கோத்துக்கிடக்கிற ஸமுத்₃ரஜலத்திலே உள்ளதோ? அன்றிக்கே நிராலம்ப₃நமான ஆகாசத்திலே உள்ளதோ? இல்லையாகில், ப்ரளயஜலத்திலே கரைந்துபோன பூ₄மியிலே

ஸர்வேச்வரனுல் ரக்ஷிக்கப்படும் எல்லாப் பொருள்களேயும் உபலக்ஷணமுறையாலே காட்டுகிறது. (ஆலிலையின்மேல்) அன்று துளிர்த்த ஓராலந்தளிரின்மேலே கண்வளர்ந்தானே! அனைத்துக்கும் ஆதாரமான ஸர்வேச்வரன் ஓராலந்தளிரிலே கண்வளருவதே! (அன்று) மஹாப்ரளயகாலத்தில். (நீ வளர்ந்த) நீ கண்வளர்ந்ததை. (மெய் என்பர்) உண்மை என்று ரிஷிகள் சொல்லுவர். அப்ராக்ருதமான மிகப்பெரிய திருமேனியை, ப்ராக்ருதமான மிகச்சிறிய குழந்தையின் வடிவாக்குவது; அவ்வடிவினுள்ளே மிகப்பெரிய எல்லா உலகங்களேயும் அடக்குவது; அவ்வடிவைக்கொண்டு மிகச்சிறியதொரு ஆலந்தளிரிலே கண்வளருவது; இவை எல்லாவற்றையும் உண்மையென்று பரமாப்தரான ரிஷிகளனைவரும் சொல்லுகிருர்கள். மெய்யல்லதறியாத அவர்கள் இச்செயலிலே 'எத்திறம்' என்று ஈடுபடுகையாலே இதைப் பொய்யென்னவொண்ணுது. (மெய்) உன் திருமேனி அப்ராக்ருதமென்பதும் மெய்; அதை ப்ராக்ருத ஸஜாதீயமாக்கினுய் என்பதும் மெய். அது மிகப்பெரியதென்பதும் மெய்; அதை மிகச்சிறியதாக்கினுய் என்பதும் மெய். அது ஸர்வாதாரமென்பதும் மெய்; அதற்கு ஓராலந்தளிரை ஆதாரமாக்கினுய் என்பதும் மெய்; இவை சில அகடிதகடநாஸாமர்த்தியங்களிருந்தபடியென்?

இவ்வளவேயோ? (ஆலன்று வேலைநீர் உள்ளதோ) ஏழுலகுண்ட உன்னைத் தாங்கிநிற்கும் ஆலிலை எல்லாம் அழிந்த அன்று, வெள்ளமிட்டுக்கிடக்கிற ப்ரளயஜலத்திலே உள்ளதோ? (விண்ணதோ) அப்படியில்லாவிடில், ஒரு வஸ்துவும் பற்றிநிற்கமுடியாத ஆகாயத்திலே உள்ளதோ? (மண்ணதோ) அப்படியுமல்லாவிடில் ப்ரளயஜலத்திலே கரைந்துபோன பூமியிலேயுள்ளதோ? (சொல்லு) எல்லாமழிந்தவன்று வேலைநீர், விண், மண் முதலிய ஒன்றுமில்லையாகையாலே இவற்றிலெல்லாம் அவ்வாலந்தளிர் இருந்திருக்க

யுள்ளதோ? ஏழுதிருநக்ஷத்ரத்திலே ஏழுநாள் ஒருபடிப்பட சோலைகளாலே சூழப்பட்ட கோவர்த்த₄நபர்வதத்தை எடுத்து த₄ரித்துக்கொண்டு நின்றவனே! இத்தை அருளிச் செய்யவேணும். உன்னாலும் உன்படி சொல்லமுடியாது என்று கருத்து.

70. **சொல்லுந் தனையும் தொழுமின் விழுமுடம்பு**
செல்லுந் தனையும் திருமாலை—நல்லிதழ்த்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தா லேத்துதிரேல் நன்று.

பதவுரை:—**திருமாலை**-லக்ஷ்மீநாதனை, **சொல்லுந்தனையும்**-சொல்லுவதற்கு சக்தியுள்ளபோதெல்லாம் (சொல்லி), **தொழுமின்**-வணங்குங்கள்; **விழும் உடம்பு**-நசிப்பதை இயற்கையாகக்கொண்ட சரீரமானது, **செல்லுந்தனையும்**—இருக்கும் வரையிலும், **நல் இதழ் தாமத்தால்**—அழகிய பூவிதழ்களைக் கொண்ட மாலையாலாவது, **வேள்வியால்** — யாகத்தாலாவது, **தந்திரத்தால்**-(மந்திரமில்லாத) கிரியைகளாலாவது **மந்திரத்தால்**—(கிரியையற்ற) மந்திரத்தினாலாவது, **நாமத்தால்** — திருநாமஸங்கீர்த்தனத்தினாலாவது, **ஏத்துதிரேல்**—(ஆச்ரயித்துத்) துதிப்பீர்களாகில், **நன்று**-நன்மை தருவது.

அவதாரிகை:-இப்படியானபின்பு ஜகத்திலுள்ளாரடங்கலும் அநந்யபரராய்க்கொண்டு அவனை ஆச்ரயியுங்கோள் என்கிறார்.

முடியாது. அது எங்கேயிருந்தது என்பதை நீயே சொல்லவேணும். (சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு) ஏழுபிராயத்திலே ஏழுநாள் ஆடாமல் அசையாமல், சோலைகளாலே சூழப்பட்ட கோவர்த்தன பர்வதத்தைத் தாங்கிநின்றவனே! இச்செயலும் எப்படி முடிந்தது என்பதைச் சொல்லவேணும். இச்செயலும் முன்சொன்ன செயலுக்கு ஒப்பாகாது என்றுமாம். (சொல்லு) இவ்வொரு செயலின் பெருமையை உன்னாலும் சொல்லமுடியாது.

அவதாரிகை:-இப்படி ஒரு செயலின் பெருமையையும் அவனாலேயும் சொல்லமுடியாதபடி அத்தனை பெரிய ஸ்வரூபரூபகுணவிபூதி

உரை:—புருஷகாரபூ$_4$தையான பிராட்டியோடே நித்ய ஸம்யுக்தனை ஸர்வேச்வரனை, 'இப்போது விழும், இப்போது விழும்' என்னும்படி அஸ்தி$_2$ரமான ஶரீரமானது விழுமளவும் அழகிய பூக்களாலேயுண்டான திருமாலையாலும் யாகாதி$_3$ ஸத்கர்மங்களாலும், மந்த்ரவிது$_4$ரமான கேவலக்ரியைகளாலும், க்ரியாவிது$_4$ரமான மந்த்ரங்களாலும் ஆச்ரயியுங்கோள். இதுக்கே ஶக்தியின்றிக்கேயிருக்கில், உங்கள் வாக்கு உக்தி ஸாமர்த்யத்தை உடைத்தாய்க்கொண்டு சொல்லுமளவும், கு$_3$ணாதி$_3$களுக்கு வாசகமான திருநாமங்களாலே ஶ்ரிய: பதியைப் புகழ்வுதிகோளாகில், அது மிகவும் நல்லது.

சேஷ்டிதங்களை உடையவனைபின்பு, உலகிலுள்ளாரனைவரும் வேறொன்றிலும் ஈடுபடாமல் அவனை அடையுங்கள் என்கிறார்.

வ்யா:-(திருமாலைத் தொழுமின்) புருஷகாரமாயிருக்கும் பெரிய பிராட்டியாரோடே எப்போதும் சேர்ந்திருக்கும் ஸர்வேச்வரனைத் தொழுங்கள். (திருமாலை) உங்கள் குற்றங்கண்டு அஞ்சவேண்டாத படி, அவனுடைய சீற்றத்தை ஆற்றிச் சேரவிடுமவள் எப்போதும் அருகிலிருக்கிறாள். (விழுமுடம்பு செல்லுந்தனையும் தொழுமின்) 'இப்போது விழும், இப்போது விழும்' என்னும்படி மின்னின் நிலையிலதான சரீரமானது விழும்வரையிலும் தொழுங்கள். பாங்காயிருக்கும் வரையில் தொழுங்கள் என்றுமாம். தொழுவதற்கு உபகரணங்கள் எவையென்னில்: (நல்லிதழ்த் தாமத்தால் தொழுமின்) சாத்துவதற்காக அழகிய பூவிதழ்களைக்கொண்ட மாலையைக் கைக்கொண்டு தொழுங்கள். (வேள்வியால்) அழகிய பூமாலை கிடைக்கவில்லையென்றால், மந்திரங்களும் கிரியைகளுமடங்கிய யாகம் முதலான நல்ல நித்தியநைமித்திகாதி கர்மங்களாலே ஆச்ரயியுங்கள். (தந்திரத்தால்) அதுவும் முடியவில்லையானால் மந்திரமில்லாத வெறும் அஞ்ஜலி நமஸ்காராதி க்ரியைகளாலே தொழுங்கள். (மந்திரத்தால்) தேஹத்தில் அசக்தியாலே அதுவும் முடியவில்லையாகில், கிரியையற்ற வெறும் அஷ்டாக்ஷராதி மந்திரங்களாலே அவனை மனனம் செய்யுங்கள். மந்திரங்களைச் சொல்லுவதற்கும் தேசகாலநியதியும் அதிகாரி நியதியும் வேணுமே என்னில்: (சொல்லுந்தனையும் நாமத்தால் ஏத்துதிரேல் நன்று) முற்கூறிய ஒன்றும் முடியாவிடில், உங்கள் வாக்கானது பேசுவதற்கு வல்லமைபெற்றிருக்கும்வரையில் ஒரு நியதியையும் அபேக்ஷியாத அவனுடைய குணசேஷ்டிதாதிகளைச்

71. நன்று பிணிமூப்புக் கையகற்றி நான்கூழி
நின்று நிலமுழுது மாண்டாலும்—என்றும்
விடலாழி நெஞ்சமே வேண்டினேன் கண்டாய்
அடலாழி கொண்டான்மாட் டன்பு.

பதவுரை:—ஆழி நெஞ்சே—*கடல் போன்று ஆழ்ந்த மனமே!* **பிணி மூப்பு நன்று கையகற்றி**—*நோயையும், கிழத்தனத்தையும் நன்ருகப் போக்கடித்து* (கைவல்யத்தைப் *பெற்று*), **நான்கு ஊழி நின்று**—*நாலு யுகங்களிலும் நிலையாயிருந்து,* **நிலம் முழுதும் ஆண்டாலும்**—*அண்டம் முழுவதையும் ஆளும் சிறந்த செல்வத்தைப் பெற்ருலும்,* **அடல் ஆழி கொண்டான் மாட்டு**—*சண்டை செய்யும் திருவாழியாழ்வானைக் கைக்கொண்டவனிடம்,* **அன்பு**-*ஸ்நேஹத்தை,* **விடல்** *விடாதே;* **வேண்டினேன் கண்டாய்**—*யாசிக்கிறேன் கிடாய்.*

அவதாரிகை:—*நாட்டாரைக்கொண்டு கார்யமென்? நெஞ்சே! நீ இவ்விஷயத்தை விடாதே கிடாய்! என்கிருர்.*

சொல்லும் திருநாமங்களைக்கொண்டு துதித்தீர்களாஞல் அதுவே மிகநல்லது. (திருமாலை நாமத்தால் ஏத்துதிரேல்) தாய்பேர் சொல்லக் குளித்து வரவேண்டாமே! ஆபத்துக்காலத்திலே 'அம்மா' என்பது போலே சொன்ஞலும் போதுமே. 'திருநாமஞ்சொல்ல ஒருநியதி வேண்டியதில்லையோ?' என்று பட்டரை நஞ்சீயர் கேட்க, 'கங்கையிலே நீராடப்போகிறவன் சுத்திக்காக மற்ருெரு உவர்க்குழியிலே நீராடவேண்டுமோ?' என்று பட்டர் அருளிஞர் என்னும் ஐதிஹ்யத்தை இங்கு அநுஸந்திப்பது. பதவுரையிலுள்ளதுபோலே, 'சொல்லுந்தனையும் தொழுமின் விழுமுடம்பு செல்லுந்தனையும்... நன்று' என்று கூட்டியும் பொருள்கொள்ளலாம்.

அவதாரிகை:—மற்றுள்ளார் எவ்வளவு உபதேசித்தாலும் திருந்தாமலிருப்பதைக்கண்டு, ''ஆராஞுமாதாஞும் செய்ய அகலிடத்தை ஆராய்ந்து அதுதிருத்தலாவதே'' [பெரியதிருவ-25] என்ற நம்மாழ்வாரைப்போலே, 'உலகிலுள்ளார் எக்கேடு கெட்டால் நமக்கென்ன? நெஞ்சே! நீ இவ்விஷயத்தைக் விடாதே கிடாய்!' என்கிருர்.

உரை:— கேவலாத்மாநுப₄வத்துக்கு விலக்கான வ்யாதி₄ ஜரை தொடக்கமானவற்றை நன்றாகக் கைகழலவிட்டு இப்படி ப்ரக்ருதிவிநிர்முக்தனான ஆத்மாவை அநுப₄விக்கையாகிற கைவல்யபுருஷார்த்தத்தோடே காலதத்வமுள்ளதனையும் நெடுகிநின்று பூ₄மிதொடக்கமாக ப்ரஹ்மலோக

வ்யா:—(நன்று பிணி மூப்புக் கையகற்றி) பிணி-வியாதி; மூப்பு-கிழத்தனம். இவையிரண்டும் மரணம் முதலான மற்ற சரீரதர்மங்களுக்கும் உபலக்ஷணம். இவையே இந்த ஜீவன் தன் ஆத்மாவை அனுபவிப்பதற்கு விலக்காயிருக்கின்றன. இவையும் இவற்றுக்குக் காரணமான சரீரமும் கழிந்தால் ஆத்மாநுபவம் தானே ஏற்படும். இதுவே கைவல்யமோக்ஷம் எனப்படுவது. இதைப் பெறுவதற்காகச் சிலர் பரமபுருஷனை அடைவதுண்டு என்பதை "ஜராமரண **மோக்ஷாய** மாமாச்ரித்ய யதந்தி யே" [கீதை7-29] [மூப்பும் மரணமும் விடுவதற்காக எவர்கள் என்னையடைந்து முயலுகின்றனரோ...] முதலானவிடங்களில் கண்ணன் காட்டினன். கைவல்யமெனப்படும் அந்தப் புருஷார்த்ததை எடுக்கிறார் இங்கு (நன்று...) இவ்வுலகில் சரீரத்தோடு இருக்கும் வரையில் பிணிமூப்புக்களை அடியோடு களைவதென்பது ஆகாது. பிணி மூப்புக்களுக்குக் காரணமான சரீரம் நீங்கப்பெற்று கைவல்யத்தைப் பெற்றால்தான் அவை அடியோடு களையப்படுகின்றன. (கையகற்றி) பிணி மூப்புக்களைவதே இவனுக்கு முக்கிய புருஷார்த்தம். ஞானிக்கோவெனில் பகவத் கைங்கர்யமே முக்கிய புருஷார்த்தம். இக்காரணங்களால் 'நன்று பிணிமூப்புக் கையகற்றி' என்று கைவல்யமோக்ஷமே கூறப்படுகிறதென்று விளங்குகிறது. (நான் கூழி நின்று) ஊழி என்று கற்பகாலம். "ஸஹஸ்ரசீர்ஷா" என்றவிடத்தில் ஸஹஸ்ரசப்தம்போலே 'நான்கூழி' என்றவிடத்தில் 'நான்கு' என்பதும் 'அநந்தம்' என்னும் பொருளையுடையது. இத்தால் பிரகிருதியினின்றும் நீங்கிய ஆத்மாவை அனுபவிக்கையாகிற இக்கைவல்யமோக்ஷமானது காலதத்வமுள்ளவரையிலும் நித்யமாயிருப்பது என்று உணர்த்தப்படுகிறது. "குறுகாநீளா இறுதிகூடா எனையூழி சிறுகா பெருகா அளவில் இன்பம்"[திருவாய் 6-9-10] என்று இதைப் பேசினாரன்றோ நம்மாழ்வாரும். "நான்கூழி நின்று" என்பதைப் பின்னே கூட்டியும் பொருள் கொள்ளலாம். (நான்கு ஊழி நின்று நிலம் முழுதும் ஆண்டாலும்) பல கற்பகாலங்கள் நிலையாயிருந்து, பூமி முதலாக ப்ரஹ்ம

பர்யந்தமாக உண்டான இவ்வண்டை$_3$ச்வர்யமெல்லாவற்றை யும் ஸ்வாதீ$_4$நமாக நிர்வஹிக்கப்பெற்ருலும், அளவுடைய நெஞ்சே! யுத்$_3$தே$_4$ங்முக$_2$மான திருவாழியைத் திருக்கை

லோகம் வரையிலிருக்கும் இந்த அண்டம் முழுவதையும் தன் வச மாக்கிப் பிரமனுயிருந்து ஆண்டாலும். ஐச்வர்யமெனப்படும் புரு ஷார்த்தத்தின் மேலெல்லையைச் சொல்லுகிறது. (நான்கு ஊழி நின்று) ''புநஸ் த்ரைலோக்யத$_4$ாத்ருத்வம் ப்ராப்தவாந்'' என்கிற ரீதியிலே ஒருகல்பத்தில் பிரமனுயிருப்பவனே, பரமபுருஷனை ஆராதித்து மறுகல்பத்திலும் பிரமனுவதுண்டாகையாலே, இப்படிப் பல கற்பங் களில் பிரமனுயிருந்து உலகாண்டாலும். 'ஊழி' என்று யுகத்தைக் குறிப்பதாகக்கொண்டு, 'நான்கூழி' என்று பிரமனுக்கு ஒரு பகலான சதுர்யுகத்தைச் சொல்லி, பிரமனின் ஆயுட்காலத்தை உபலக்ஷிப்ப தாகவும் கொள்ளலாம். இங்கேயும் 'நான்கூழி' என்று அநந்த காலத்தைக் குறிப்பதாகக்கொண்டு, பிரமனின் ஐச்வர்யமும் நிலை யற்றது என்னும் குறையும் நீங்கி, நித்யமான ப்ரஹ்மைச்வர் யத்தைப் பெற்ருலும் என்றுமாம். (நன்று–நின்று) கைவல்யத்திற்கு பகவதனுபவத்தைக்காட்டிலும் அல்பமானது என்னுமொரு குறை யுண்டு. ப்ரஹ்மாவின் ஐச்வர்யத்திற்கும் அஸ்திரமானது என்னும் குறையுண்டு. இவ்விரண்டு குறைகளும் நீங்கி 'அளவில் இன்பம்' என்கிறபடியே கைவல்யமே நன்ருன–மிகச்சிறந்த–இன்பமாளுலும் ப்ரஹ்மாவின் செல்வம் நிலை நிற்கும் நித்யைச்வர்யமாளுலும். (கையகற்றி...ஆண்டாலும்) இவ்விரண்டு புருஷார்த்தங்களையும் ஒரேஅதிகாரி ஒரேகாலத்தில் பெறுவதென்பது இயலாதகாரியம். அதுவும் கூடி, நன்ருன கைவல்யபுருஷார்த்தமும், நிலைநிற்கும் ஐச்வர்யமும் ஒரேகாலத்தில் எனக்குக் கிடைப்பதாயிருந்தாலும். (ஆழி நெஞ்சே) கடல்போலே பேரளவுடைய கம்பீரமான நெஞ்சே! குறைகள் நீங்கப்பெற்ற ஐச்வர்ய கைவல்யபுருஷார்த்தங்களைப் பெற்ருலும் அது அவனுக்கே ஆளாகும் சிறுகாலத்தையும் ஒவ்வாது என்பதை அறிந்திருப்பாயன்ருே நீ என்று கருத்து. (ஆழி நெஞ்சே) என்னிலும் முற்பட்டுநிற்கும் உன்னையன்ருே யாசிக்கிறேன் நான். (அடலாழி கொண்டான் மாட்டு அன்பு விடல்) எத்தனையேனும் சிறந்த புருஷார்த்தங்களைப் பெறுவதாயிருந்தாலும் ஸுதர்சனதாரி யான பரமபுருஷனிடம் அன்பை விடாதே. (அடல் ஆழி கொண் டான்) அடியார்களின் விரோதிகளிடம் போர்புரிவதையே தொழி லாகக்கொண்ட ஸுதர்சனத்தைத் தரித்தவன். (அன்பு என்றும்

யிலே த்ரித்துக்கொண்டிருக்கிற ஸர்வேச்வரன் விஷயத்தி லுண்டான ஸ்நேஹத்தை ஸர்வகாலத்திலும் விடாதே கொள்; இவ்வேப்பங்குடி நீரைக்குடிக்கைக்கு உன் காலைப் பிடித்து வேண்டிக்கொள்கிறேன் கிடாய் என்கிறார்.

72. அன்பாழி யானை யணுகென்னும் நாவவன்றன்
பண்பாழித் தோள்பரவி யேத்தென்னும்—முன்பூழி
காணானைக் காணென்னும் கண்செவி கேளென்னும்
பூணாரம் பூண்டான் புகழ்.

பதவுரை:—**அன்பு**—*அன்பு நிரம்பியதான மனம்.* **ஆழி யானை அணுகு என்னும்**—*'சக்கரபாணியைக் கிட்டுவாயாக' என்று சொல்லும்.* **நா**—*நாக்கு,* **அவன் தன் பண்பு ஆழி தோள் பரவி ஏத்து என்னும்**—*'அப்பெருமானுடைய அழகுக்கடலான திருத்தோள்களை முறைகெடத் துதிப்பாயாக' என்று சொல் லும்.* **முன்பு ஊழி காணானைக் காண என்னும் கண்**—*கண்ணானது '(நாம் அபராதம் பண்ணிப்போந்த) அநாதியான காலத்தைக் காணாதவனை எம்பிரானைக் காண்பாயாக' என்று கூறும்;* **செவி**—*காதோவெனில்,* **பூண் ஆரம் பூண்டான் புகழ் கேள் என்னும்**—*'ஆபரணமாயிருக்கும் முத்துமாலையைத் தரித்தவ னுடைய கீர்த்தியைக் கேட்பாயாக' என்று கூறும்.*

விடல்) அவன் விஷயத்தில் அன்பை விடாதே. இதர புருஷார்த்தங் கள் அல்பாஸ்திரங்களாகையாலே அவனைப்பற்று என்று சொல்லு கிறேனல்லேன். அவை அநந்தஸ்திரபலமானாலும், இவனையனுப விப்பது அல்பாஸ்திரமானாலும் இவனிடம் அன்பை விடாதே கிடாய். குணக்ருததாஸ்யத்தைக்காட்டிலும ஸ்வரூபக்ருததாஸ்யத்தின் ஏற் றத்தைக் காட்டுகிறார். (வேண்டினேன் கண்டாய்) உண்மையில் அவை அநந்தஸ்திரபலங்களுமன்று; இவனையடைவது அல்பாஸ்திர முமன்று. இப்படிப்பட்ட விலக்ஷணவிஷயத்தைப் பற்றுகைக்கன்றோ நான் உன்னை யாசிக்கிறேன். பால்குடிக்கக் கால்பிடிக்கவேண்டுமோ? இவ்வேப்பங்குடிநீரைக் குடிக்கவன்றோ உன் காலைப்பிடித்து வேண் டிக் கொள்ளுகிறேன். [மிகவிலக்ஷணமான விஷயத்திற்கு நம் ஆசார் யர்கள் வேப்பங்குடிநீரை திருஷ்டாந்தமாக எடுப்பது வழக்கம்.]

அவதாரிகை:—இவர் கரணங்கள் இவர்க்கு முன்னே அங்கே ப்ரவணமாய், கு₃ருஶிஷ்யக்ரமம் மாறுடி எதிரே நின்று, "ஆழ்வீர்! நீர் இவ்விஷயத்தை விடாதே கிடீர்" என்று அவைதான் தமக்கு முன்னே உபதேசிக்கிறபடியை அருளிச்செய்கிறுர்.

உரை:—அன்பென்றும், அன்புக்கு ஆச்ரயமென்றும் தெரியாதபடி அன்புதானே ஒரு வடிவுகொண்டாப்போலே யிருக்கிற நெஞ்சானது 'திருவாழியை உடையனுனவனைக் கிட்டி அனுப₄வி' என்று உபதேஶியாநிற்கும்; வாகிந்த்₃ரிய மானது 'நீர்மையையும், மிடுக்கையுமுடைத்தான அவ

அவதாரிகை:— 'அவனிடம் அன்பை விடாதே' என்று நெஞ்சை வேண்டினுர் சென்ற பாசுரத்தில். இவருடைய நெஞ்சு முதலான இந்திரியங்கள் இவர்க்கு முன்னே பகவானிடத்தில் ஈடுபட்டிருப்பவையாகையாலே, தாங்களே இவர்க்கு ஆசார்யர்களாகி, "ஆழ்வீர்! நீர் இவ்விஷயத்தை விடாமலிரும்' என்று இவருக்கு உபதேசிக்கிறபடியை அருளிச்செய்கிறுர் இப்பாசுரத்தில்.

வ்யா:—(அன்பு) அன்புக்கு இருப்பிடமான நெஞ்சைச் சொல்லுகிறது. இது அன்பு; இது அன்புக்கு இருப்பிடமான மனம் என்று பிரித்துக் காணமுடியாதபடி அன்பே வடிவெடுத்ததாயிருக்கையாலே மனத்தை 'அன்பு' என்கிறுர். "விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே" என்று உபநிஷத்தில் அறிவையுடைய ஆத்மாவை அறிவென்றே கூறியிருப்பதும், "தத்கு₃ணஸாரத்வாத்து தத்₃வ்யபதே₃ச: ப்ராஜ்ஞவத்" [ப்ரஹ்மஸூத்ரம் 2-3-29] என்னும் ப்ரஹ்மஸூத்ரந்யாயமும் அனுஸந்திக்கத்தக்கவை. (அன்பு ஆழியானை அணுகென்னும்) "அடலாழி கொண்டான் மாட்டு அன்பு விடல்" என்று நான் நெஞ்சை யாசித்தேன்; "ஆழ்வீர்! என்னைப்பற்றி ஐயம் வேண்டா; நீர் ஆழியானை விடாமல் அணுகுவீராக" என்று அது என்னை யாசிக்கிறது. (என்னும்)அதற்கும் எஜமானனுகையாலே நான் அதற்கு உபதேசித்தேன்; என்னிலும் முற்பட்டுவிட்டதாகையாலே அது எனக்கு உபதேசிக்கிறது. எனக்கு வேலைக்காரனுன அந்நெஞ்சுமட்டுமோ எனக்கு உபதேசித்தது? அந்நெஞ்சுக்கு வேலைக்காரர்களான மற்ற இந்திரியங்களுமன்ருே எனக்கு உபதேசிக்க முற்பட்டன என்கிருர் மேலே. (நா அவன்தன் பண்பாழித் தோள் பரவி ஏத்து என்னும்) என்

னுடைய தோளை அடைவுகெடப் பேசிக்கொண்டு ஸ்தோத்ரம் பண்ணு' என்னாநிற்கும்; கண்களானவை 'நம் அபராதம் காணுதவளவன்றிக்கே அபராத$_4$ம் பண்ணின முன்புள்ள காலத்தையும் காணுதவனைக்கண்டு அநுப$_4$வி'என்னும்; செவிகளானவை 'ஆப$_4$ரணமான திருமேனிக்கு ஆ$_4$பரணமாகப் பூணப்படும் ஹாரம் முதலான தி$_3$வ்யாப$_4$ரணங்களை அழகுபெறப் பூண்டிருக்குமவனுடைய கல்யாணகுணங்களைக் கேளாய்' என்று தூண்டாநிற்கும் 'பண்பாழித்தோள்'என்று 'ஸௌந்த$_3$ர்யஸாக$_3$ரமான திருத்தோள்' என்னவுமாம்.

73. **புகழ்வாய் பழிப்பாய்நீ பூந்துழா யானை**
இகழ்வாய் கருதுவாய் என்னெஞ்சே—திகழ்நீர்க்
கடலு மலையு மிருவிசும்புங் காற்றும்
உடலு முயிரு மேற்ருன்.

நாவானது அவனுடைய அழகையும் பலத்தையும் உடைய தோளை (அன்பின் மிகுதியாலே) முறைகெடப்பேசித் துதிப்பீராக என்று கூறும். பண்—அழகு. பாழி-மிடுக்கு. (பண்பு ஆழித்தோள்) அழகுக்கு ஓர் கடலாயிருக்கும் தோள் என்றுமாம். 'குற்றமே வடிவான நம் மால் அவனைக் கிட்டமுடியுமோ' எனில்: (முன்பூழி காணுனைக் காண் என்னும் கண்) என் கண்களானவை, "நம் குற்றங்களைக் காணுதது தோடன்றியில், நாம் குற்றம்செய்த அநாதியான காலத்தையுங்கூடக் காணுதவனைக் காண்பீராக" என்று கூறும். (செவி கேள் என்னும்) காதானது இன்னும் ஒருபடி மேலேபோய், "அவன் குற்றம் பார்ப்பவனேயாளுலும் அவன் குணங்களைக் கேட்பாயாக" என்னும். இதற்குக் காரணம் என்னவெனில்: (பூணுரம் பூண்டான் புகழ்) ஆபரணத்துக்கு அழகுசெய்யும் திருமேனிக்கும் ஆபரணமான ஆரம் முதலிய திவ்யாபரணங்களை அழகுபெற அணிந்திருக்குமவனுடைய குணங்களன்றோ. அவன் குற்றம் பார்த்தாலும் இதை விடமுடியுமோ? என்கிருர். (பூணுரம்) மற்றைய ஆபரணங்களுக்கு ஆபரணமாயிருக்கும் ஆரம் என்றுமாம். முந்திய பொருளில் 'பூண்' என்று "ஆப$_4$ரணஸ்யாப$_4$ரணம்" என்கிறபடியே ஆபரணத்துக்கும் அழகு கொடுக்கும் திருமேனியைச் சொல்லுகிறது. "ஸர்வபூ$_4$ஷண பூ$_4$ஷார்ஹா:" [ரா-கி 3-15] [எல்லா பூஷணங்களையும் அலங்கரிக்கத் தக்க திருத்தோள்கள்] என்றுனன்றே திருவடி.

பதவுரை:—**என் நெஞ்சே**—*என்னுடைய மனமே!,* **நீ**-*நீ.* **பூம் துழாயானை**-*அழகிய திருத்துழாய் மாலையாலே அலங்கரிக்கப்பட்டவனை,* **புகழ்வாய்**—*புகழ்ந்தாலும் புகழ்;* **பழிப்பாய்**-*பழித்தாலும் பழி;* **இகழ்வாய்**—*இகழ்ந்தாலும் இகழ்;* **கருதுவாய்**-*எண்ணினாலும் எண்ணு; (நீ எதைச் செய்தாலும் அவன்)* **திகழ் நீர் கடலும்**—*விளங்காநின்ற ஜலத்தையுடைய ஸமுத்திரமும்,* **மலையும்**-*மலையும் முதலிய கார்யவஸ்துக்களையும்,* **இரு விசும்பும் காற்றும்**—*பரந்த ஆகாசம், வாயு முதலிய காரணப்பொருள்களையும்.* **உடலும் உயிரும்** — *சரீரத்தையும் ஆத்மாவையும்.* **ஏற்றான்**—*தரித்தவனாகவேயிருப்பான்.*

அவதாரிகை:—*அந்தக் காரணங்கள் தானும் கீழ்ப்படும்படி தாம் அவ்விஷயத்திலே ப்ரவணரானபடியை அருளிச்செய்கிறார்.*

உரை:—*நல்லது இன்னதென்று வகையிட்டறியவல்ல நெஞ்சே! இப்படி நல்லது காணவல்ல நீ புகழ்ந்தல்லது நிற்கவொண்ணாதபடி அழகிய திருத்துழாயாலே அலங்க்ருதனானவனை வாய்விட்டுப் புகழ்வாய், அன்றிக்கே பழிப்பாய் செய்தபடிசெய். இப்புகடுசரக்கான விஷயத்தை அநாதரிப்*

அவதாரிகை:—முன் பாசுரங்களில் சொன்ன இந்திரியங்களும் கீழ்ப்படும்படி தாம் பகவத்விஷயத்திலே ஈடுபட்டு நெஞ்சைப் பார்த்து, 'அவனுடைய பெருமையைக் கண்டுவிட்டு, நீ அவனைப் பற்றினாலும் பற்று; விட்டாலும் விடு' என்கிறார்.

வ்யா:—(என் நெஞ்சே) நாட்டுக்குச் சொல்லுகிறேனோ? என்னுடைமையான உனக்கன்றோ சொல்லுகிறேன். (நெஞ்சே) 'இது நன்று; இது தீது' என்று பிரித்தறியவல்ல நெஞ்சே! (நீ) இப்படி நல்லது காணவல்ல நீ; பந்தமோக்ஷங்களுக்குக் காரணமான நீ என்றுமாம். (பூந்துழாயானைப் புகழ்வாய் பழிப்பாய்) வாய்விட்டுப் புகழ்ந்தல்லது நிற்கவொண்ணாதபடி அழகிய திருத்துழாயாலே அலங்கரிக்கப்பட்டவனை நீ புகழ்ந்தாலும் புகழ்; பழித்தாலும் பழி; தோளும் துழாய்மாலையுமாய் நிற்கிற நிலையைப் பார்த்துவிட்டு நீ எதைவேண்டுமானாலும் செய். (இகழ்வாய் கருதுவாய்) விலக்ஷண

பாய் அன்றிக்கே ஆதரிப்பாய் செய்தபடிசெய்; விளங்கா நின்றுள்ள ஜலஸம்ருத்தியையுடைத்தான கடலும். பர்வதமும், பரப்பையுடைத்தான ஆகாஶமும் வாயுவும் தேவாதி ஶரீரங்களும் தத்தச்சரீரஸ்தங்களான ஆத்மவர்க்கமுமாகிற இவ்வஸ்துக்களெல்லாம் தான் என்கிற சொல்லுக்குள்ளே ப்ரகாரமாய் அந்வயிக்கும்படி ஸர்வப்ரகாரியாயிருப்பானொருத்தன்; இப்படி ஸர்வப்ரகாரியாய் நிற்கிறவனைப் பற்றிலும் பற்று. அன்றிக்கே ப்ரகாரத்திலே ஒன்றைப்

விஷயமான இவனை ஆதரித்தாலும் ஆதரி; அநாதரித்தாலும் அநாதரித்திரு. (புகழ்வாய் பழிப்பாய்) என்று வாயைத்தூண்டிச் செய்யும் காரியம்; (இகழ்வாய் கருதுவாய்) என்று நெஞ்சு தானே செய்யும் காரியம். அப்படியானல், இவனை நான் விட்டுவிடலாமோ? என்ன, இவனுடைய பெருமையை முதன்முதலில் கேட்டுவிட்டுப் பிறகு எதை வேண்டுமானலும் செய் என்கிருர் மேலே. (திகழ் நீர்க் கடலும்) விளங்காநிற்கும் நீர்ப்பெருக்கையுடைய கடலும். (மலையும்) பர்வதங்களும். கார்யங்களான இவையிரண்டும் கார்யங்களான எல்லாப் பொருள்களுக்கும் உபலக்ஷணம். (இரு விசும்பும் காற்றும்) பரந்திருக்கும் ஆகாயமும் காற்றும். நீர் பூமி முதலானவற்றுக்குக் காரணமான இவையிரண்டும் எல்லாக் காரணப்பொருள்களுக்கும் உபலக்ஷணம். (உடலும் உயிரும்) உடல் என்றது தர்மஸாதனமான இந்திரியாதிகளுக்கும் உபலக்ஷணம். தர்மஸாதனமாயிருக்கும் பெருமையை நினைத்துத் தனியே எடுக்கிருர். 'உயிர்' என்றது தர்ம பூதஜ்ஞானம், நித்யவிபூதி முதலான மற்ற * அஜடப்பொருள்களுக்கும் உபலக்ஷணம். (ஏற்றுன்) இப்படிக் கார்யமாகவும், காரணமாகவும் தர்மஸாதனமாகவுமிருக்கும் * ஜடப்பொருள்களையும், * அஜடப் பொருள்களையும் 'தான்' என்னும் அபிமானத்திலே அடங்கும்படி தனக்கு ப்ரகாரமாக வைத்துக்கொண்டிருப்பவனன்றே அவன். இப்படிப்பட்டவன் அவன் என்று தெரிந்துகொண்டபின்பு, அவனைப்பற்றிலும் பற்று; விட்டாலும் விடு என்கிருர். வைலக்ஷண்யத்தை அறிந்துகொண்டால் பின்பு விட இயலாது என்கை. அன்றிக்கே, அவனை எப்படிப்பற்றுவது என்று நெஞ்சம் கேட்க, ஸகலவஸ்துக்களையும் ப்ரகாரமாக உடையவன் அவன்; ஆகையால்

* தானே பிரகாசியாதபொருள் 'ஜடம்' எனப்படும். தானே பிரகாசிக்கும் பொருள் 'அஜடம்' எனப்படும்.

பற்றிலும் பற்று என்றபடி. அன்றிக்கே உடலும் உயிருமான இப்பதார்த்தங்களை ஏற்றான்-தரித்தான் என்னவுமாம்.

74. **ஏற்றான் புள்ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்விடந்தான்**
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான் — கூற்றொருபால்
மங்கையான் பூமகளான் வார்சடையான் நீண்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு.

பதவுரை:—ஏற்றான்-(அப்ரஸித்தமான) எருதை வாஹனமாக உடையவனாய், **எயில் எரித்தான்** (தன்னுடைய அடியார்களின்) முப்புரங்களையும் எரித்தவனாய், **நீற்றான்**-(பாபம் அகலுவதற்காக) சாம்பலைப் பூசிக்கொண்டிருப்பவனாய், **கூற்றொருபால் மங்கையான்**-(சரீரத்தின்) ஒருபாகத்தில் பத்னியாகிய பார்வதியை தரித்தவனாய், **வார் சடையான்**—தொங்கின சடையுடன்கூடிய ஸாத$_4$கனாய், **கங்கையான்**—(பாபம் நீங்குவதற்காக) கங்கையைத் தலையிலே ஏந்தினவனாயிருக்கும் சிவன். **புள் ஊர்ந்தான்**-வேதத்தைச் சரீரமாகக்கொண்ட கருடனை வாஹனமாகக்கொண்டவனாய், **மார்பு இடந்தான்**—(பக்தனாகிற ப்ரஹ்லாதனுக்காக) இரணியனின் மார்பைக் கிழித்தவனாய், **நிழல் மணி வண்ணத்தான்**—குளிர்ந்த நீலமணி போன்ற உருவையுடையவனாய், **பூ மகளான்**-(கமலாஸனியை திருமார்பிலே) உடையவனாய், **நீள் முடியான்**-(மேன்மையைக் காட்டும்) நீண்ட கிரீடத்தையுடையவனாய், **நீள் கழலான்**—(கங்கைக்குப் பிறப்பிடமான) நீண்ட திருவடியை உடையவனான விஷ்ணுவினுடைய, **காப்பு**-ரக்ஷையாயிருப்பன்.

ப்ரகாரியான அவனை நேரே பற்றினாலும் பற்று; இயலாவிடில் நிற்கின்றதெல்லாம் நெடுமாலெனும் நினைவோடு அவனுடைய ப்ரகாரங்களில் ஒன்றைப் பற்றினாலும் அவனையே பற்றியதாகுமாகையாலே· ப்ரகாரங்களான கடலும் மலையுமானவற்றில் ஒன்றைப் பற்று என்கிறாராகவுமாம்; ப்ரஹ்மஸூத்ரங்களில் பகவானுடைய ப்ரகாரங்களான இந்த்ராதிகளுக்கு அந்தர்யாமியாக அவனை உபாஸிக்கும் முறைகள் விதிக்கப்பட்டனவன்றோ. அன்றிக்கே, நீ பற்றினாலும் விட்டாலும் கடல்மலை உடல்உயிர் முதலானவற்றை தரித்திருப்பவனாகவே அவனிருப்பான் என்று அவனுடைய பெருமையைச் சொல்லுகிறதாகவுமாம்.

அவதாரிகை:—அவனே ஆச்ரயணீயன் என்பானேன்? ருத்₃ரனை ஆச்ரயணீயனாகக் கொண்டாலோ? என்ன; அவனும் அவனுக்கு ஶரீரபூ₄தனாகையாலே அவனே ரக்ஷகன் என்கிறார்.

உரை:–தம:ப்ரக்ருதியான தனக்குச் சேரும்படி அஜ்ஞனான ருஷபத்தை வாஹநமாக உடையனாய், தன்னை ஆச்ரயித்தவர்கள் குடியிருப்பான த்ரிபுரத்தை மஞ்சாட்டமாகச்

அவதாரிகை:–பகவானையே அடையவேண்டும் என்றுசொல்லுவானேன்? சிலர் உருத்திரனையும் அடையத்தகுந்த பரம்பொருள் என்று கூறுகிறார்களே; அவனையே ப்ரகாரியாகவும் நினைத்துப் பற்றலாகாதோ? எனில்: அந்த உருத்திரனும் பரமபுருஷனுக்கு ப்ரகாரமாய், சரீரமாய், சேஷமாய், ரக்ஷ்யனாயிருக்கையாலே பரமபுருஷன் ஒருவனே ப்ரகாரியாய், சரீரியாய், சேஷியாய், ரக்ஷகனாயிருப்பவன் என்கிறார். உருத்திரனுக்கும் ஸர்வேச்வரனுக்குமுள்ள வாசிகளை அடுக்கடுக்காக அருளிச்செய்து முன்னவன் பின்னவனுக்கு அடைக்கலப்பொருள் என்று அருளும் இப்பாசுரம் ஆழ்வார் சிவவிஷ்ணுசாம்யவாதி என்று கூறும் அறிவிலிகளின் வாயை அடைக்கும்.

வ்யா:–(ஏற்றான் புள்ளூர்ந்தான் காப்பு) அறிவுகேட்டை விளைவிக்கும் தமோகுணம் விஞ்சிநிற்கும் தனக்குப் பொருந்தியிருக்கும்படி தான் அறிவற்றிருப்பதாய், அறிவில்லார்க்கு உபலக்ஷணமாயிருப்பதான மாட்டை வாஹனமாயுடையவன், “ஸுபர்ணோஸி க₃ருத்மாந்” என்று வேதத்திலேயே வேதஸ்வரூபனாகச் சொல்லப்படுகையாலே அறிவே வடிவெடுத்தவனாயிருக்கும் கருடாழ்வானை வாஹனமாயுடையவனுக்கு அடைக்கலப் பொருளாயிருப்பான். வாஹனமும் அறிவுகேட்டுக்கு உபமானமாயிருப்பவனுக்கு வாஹனமும் அறிவுவடிவாயிருப்பவனேயன்றோ அடைக்கலமளிக்கக்கூடியவன். தமோமயனை ரக்ஷிக்கக்கூடியவன் சுத்தஸத்வமயனன்றோ என்கிறார். (எயிலெரித்தான் மார்விடந்தான் காப்பு) தன்னை அண்டியிருந்தவர்களான திரிபுராஸுரர்களின் குடியிருப்பான திரிபுரங்களை “ருத்₃ரோவைக்ரூர:” என்கிறபடியே தயையில்லாமல் எரித்தவன், தன்னை அண்டிய பிரஹ்லாதனுக்காகத் தன் வடிவையும் நரசிங்கமாக்கிக்கொண்டு ஆச்ரிதவிரோதியான இரணியனின் மார்வைப் பிளந்தவனுக்கு அடைக்கலப் பொருளாயிருப்பவன். தன்னடியார்

சுட்டுப் பொகட்டவனும்,ப்ராயச்சித்தி என்று தோற்றும்படி ப$_4$ஸ்மோத்$_3$தூ$_4$ளித ஸர்வாங்க$_3$னும், ஶரீரத்தில் ஒரு பார்ச்வ ப்ரதேஶத்திலே பார்வதியை தரிக்குமவனும், ஸாத$_4$கத்வ ஸூசகமான தாழ்ந்த ஜடையையுடையவனும், பாவநார்த்த$_2$

களுக்கும் விரோதியாயிருப்பவனுக்கு அனைவருமே விரோதிகளா யிருப்பார்கள் என்பது தெளிவு. அப்படிப்பட்டவனுக்கு அடியார் களைத் தன்னை அழியமாறியும் ரக்ஷிக்குமவனே ரக்ஷகனுயிருக்க முடியும் என்று கருத்து. (எயிலெரித்தான்...காப்பு) ''வரம் வ்ருணே'' என்று வேதத்திற் சொல்லியபடியே தேவர்களிடமிருந்து வரம் பெற்றுத் திரிபுரங்களை எரித்தவனுக்கு, ''விஷ்ணும் தேஜநம்'' என்று வேதத்திலும், ''விஷ்ணுராத்மா ப$_4$க$_3$வத: ப$_4$வஸ்யாமிததேஜஸ: தஸ்மாத் த$_3$நுர்ஜ்யாஸம்ஸர்க்க$_3$ம் ஸ விஷேஹே மஹேச்வர:'' [அதிகமான தேஜஸ்ஸையுடைய உருத்திரனுக்கு விஷ்ணு ஆத்மாவாயிருந்ததனு லேயே (திரிபுராஸுரர்களையழிக்க) மஹேச்வரனுல் (மஹாமேரு ஸாரமான) வில்லில் நாணேற்ற முடிந்தது] என்று பாரதத்திலும் சொல்லியபடியே ஆத்மாவாகவும் அம்பாகவுமிருந்து உதவியவனே ரக்ஷகனுகமுடியும் என்று கருத்து. (எயிலெரித்தான் மார்விடந்தான் காப்பு) திரிபுராஸுரர்களையே உதவிபெற்று அழித்தவன், ஒருதவியு மில்லாமல் அவர்களிலும் விஞ்சிய இரணியனை அழித்தவனுடைய அடைக்கலப்பொருளாகவேயிருக்கமுடியும். (நீற்றன் நிழல்மணி வண்ணத்தான் காப்பு)

மத்$_3$யம் பீத்வா கு$_3$ருத$_3$ாராம்ச்ச க$_3$த்வா
ஸ்தேயம் க்ருத்வா ப்$_3$ரஹ்மஹத்யாச்ச க்ருத்வா ।
ப$_4$ஸ்மச்ச$_2$ந்நோ ப$_4$ஸ்மசய்யாசயாநோ
ருத்$_3$ரத்$_4$யாயீ முச்யதே ஸர்வபாபை:॥ *[சாதாதபஸ்ம்ருதி]*

[கள்ளைக் குடித்தாலும், குருதாரகமனம் பண்ணினுலும், திருடினுலும் ப்ரஹ்மஹத்தி செய்தாலும், சாம்பலைப் பூசிக்கொண்டு, சாம்பலாலான படுக்கையில் படுத்துக்கொண்டு, ருத்ரனை நினைத்துக்கொண்டிருப் பானுகில் (முன் சொல்லப்பட்ட) எல்லா பாபங்களினின்றும் நீங்கப் பெறுகிறுன்.] என்கிறபடியே தகப்பனின் தலையைக்கிள்ளினது முதலான பாபங்களுக்குப் பிராயச்சித்தம் பண்ணுகிறவன் என்பது தோற்ற உடல் முழுவதும் நீற்றைப் (சாம்பலைப்) பூசியிருப்ப வனுகையாலே ப்ராக்ருதசரீரத்தையுடையவன், **''நீலதோயத$_3$மத்$_4$ யஸ்த$_2$ா''** **''புருஷம் க்ருஷ்ணபிங்க$_3$ளம்''** முதலான வேதவாக்கியங்

மாக ஜடாமத்$_4$யத்திலே த$_4$ரிக்கப்பட்ட க$_3$ங்கை$_3$யை உடைய ஞை ருத்$_3$ரன் த்ரயீமயனை பெரியதிருவடியை வாஹநமாக உடையனுய், ஆச்ரிதவிரோதியான ஹிரண்யன் மார்வைப் பிளந்து பொகட்டவனுய், ச்ரமஹரமான நீலரத்நம்போன்ற வடிவையுடையனுய், புஷ்பநிவாஸினியான பெரியபிராட்டியாரை தி$_3$வ்யமஹிஷியாக உடையனுய், ஆதி$_4$ராஜ்யஸூசக

களாலும் புகழப்படுவதாய், கண்டார் கண்ப்பையாற்றும் நிழல் போலே குனிர்ந்திருண்டமணிபோன்ற அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவனுக்கு அடைக்கலப்பொருளாயிருப்பவன். (கூற்ஞெருபால் மங்கையான் பூமகளான் காப்பு) தன் சரீரத்தின் ஒரு பகுதியிலே தக்ஷனின் பெண் என்றும், மலைமகள் என்றுமே பிரஸித்திபெற்றிருக்கையாலே ஒரு பிராக்ருத ஸ்திரீயையுடையவன் **"அஸ்யேசாநா ஜக$_3$தோவிஷ்ணு பத்நீ"** [தைத்-ஸம் 4-4-12] [விஷ்ணு பத்னியாய், இவ்வுலகிற்கு ஈச்வரியாயிருப்பவள்] "ஈச்வரீம் ஸர்வ பூ$_4$தாநாம்" [ஸ்ரீஸூக்தம்] [எல்லா பூதங்களுக்கும் ஈச்வரியாயிருப் பவள்] என்று வேதத்திலும் பிரஸித்திபெற்ற அகிலஜகந்மாதாவான தாமரையாளை திவ்யமஹிஷியாயுடையவனுக்கு அடைக்கலப் பொருளாயிருப்பன். (பூமகளான்) இரட்டுற மொழிதலாய், ஸ்ரீபூமி நாதன் என்கிறதாகவுமாம். 'பூமகள்' என்று பூவில் வாழும் திரு மகளையும், 'பூ$_4$:' எனப்படும் நிலமகளையும் குறிக்கும். (வார்சடை யான் நீண்முடியான் காப்பு) தான் ஒருவனைக்குறித்துத் தவம் செய் பவன் என்பது தோற்றத் தொங்கும் சடையையுடைய சிவன், **"ஆதி$_4$ராஜ்யமதி$_4$கம் பு$_4$வநாநாம் ஈசதே பிசுநயங்கில மௌளி:"**[ஈசனே! உன் கிரீடம் நீயே ஸர்வலோக சக்ரவர்த்தியென்பதைக் காட்டித் தருகிறது] என்கிறபடியே தானே ஸர்வலோகசக்ரவர்த்தியென்பது தோற்ற நீண்ட கிரீடத்தை தரித்தவனுக்கு அடைக்கலப்பொருளா யிருப்பன். (கங்கையான் நீள்கழலான் காப்பு) **"பாவநார்த்த$_2$ம் ஜடா மத்$_4$யே த$_3$த$_4$ரசிரஸா ஹர:"** [தன்னைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ள பரமபுருஷனின் ஸ்ரீபாததீர்த்தமான கங்கையைத் தலையில் தரித்தான் சிவன்] **"யச்சௌசநிஸ்ஸ்ருதஸரித் ப்ரவரோத$_3$கேந தீர்த்தே$_2$ந மூர்த்$_1$நி வித்$_4$ருதேந சிவ: சிவோபூ$_4$த்"** [பாகவதம்] [எவனுடைய திருவடி கழுவிய நீரைத்தலையில் தரித்ததனுல் சிவன் சிவனுக (பரிசுத்தியுள்ள வனுக) ஆனுனே] என்கிறபடியே பரமபுருஷனின் ஸ்ரீபாததீர்த்தமான கங்கையைத் தன்னைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ளத் தரித்தவன் அந்த கங்கைக்கு உத்பத்தி ஸ்தானமாக நீண்டுவளர்ந்த திருவடி

மான திருவபி₄ஷேகத்தை உடையனும், கௌ₃ஸ்துப₄த்தி ஸ்தா₂நமான நீண்ட திருவடிகளை உடையனுன ஸர்வேச்வரனுடைய ரக்ஷையாயிருக்கும்.

75\. **காப்புன்னை யுன்னக் கழியு மருவினைகள்**
ஆப்புன்னை யுன்ன வவிழ்ந்தொழியும்—மூப்புன்னைச்
சிந்திப்பார்க் கில்லை திருமாலே நின்னடியை
வந்திப்பார் காண்பர் வழி.

பதவுரை:—உன்னை உன்ன—*உன்னை நினைத்தால்,* **காப்பு**—*காவல் தேவதைகள்,* **கழியும்** — *நீங்கும்;* **அருவினைகள்**—*கொடிய வினைகள்,* **உன்னை உன்ன**—*உன்னை நினைத்தவுடன்,* **ஆப்பு அவிழ்ந்து ஒழியும்**-*கட்டவிழ்ந்து நசிக்கும்;* **உன்னை சிந்திப்பார்க்கு**-*உன்னை தியானிப்பவர்களுக்கு,* **மூப்பு இல்லை**—*கிழத்தனம் முதலிய ஆறு விகாரங்களும் கிடையாது;* **திருமாலே**-*லக்ஷ்மீநாதனுன எம்பிரானே!* **நின் அடியை**—*உன் திருவடிகளை,* **வந்திப்பார்**—*வணங்குமவர்கள்,* **வழி காண்பர்**—*அர்ச்சிராதி மார்க்கத்தைக் காண்பார்கள்.*

அவதாரிகை:—*இப்படி ஈச்வராபி₄மானிக்கு ரக்ஷகனுன உன்னை ஆச்ரயித்தவர்களுக்கு விரோத₄ம் விட்டு நீங்கும். நல்வழியே போகலுமாம் என்கிறூர்.*

புடைய திரிவிக்கிரமனின் அடைக்கலப் பொருளாயிருப்பன். இக்காரணங்களால் 'பரமபுருஷனே ஸர்வலோகரக்ஷகன்' என்பதும், சிவன் அவனுல் ரக்ஷிக்கப்படுபவனே என்பதும் தெளிவாகிறது என்று கருத்து. "ஏற்றூன் எயிலெரித்தான் நீற்றூன் கூற்றெருபால் மங்கையான் வார்சடையான் கங்கையானுனவன், புள்ளூர்ந்தான் மார்விடந்தான் நிழல்மணிவண்ணத்தான், பூமகளான், நீண்முடியான், நீள்கழலான் காப்பு" என்று அந்வயம்.

அவதாரிகை:—தன்னை ஈச்வரன் என்று அபிமானித்திருப்பவனும், பிறரையும் அபிமானிக்கச்செய்பவனுன உருத்திரனுக்கும் ரக்ஷகனுன உன்னை அடைந்தவர்களுக்குத் தடைகளெல்லாம் நீங்கி விடும்; நல்லவழியில் நடப்பதும் நேரும் என்கிறூர்.

வ்யா:—ஸர்வாதி₄கனுன உன்னே அநுஸந்தி₄க்க, பாபங்களுக்கு ஸாக்ஷியாகக் காத்துக்கொண்டிருக்கும்படி நீ கற்பித்துவைத்த ய(த₄ர்)மாதிகளான பதினுலு வஸ்துக்களும் நமக்கு இவ்விடம் அடைவில்லேயென்று விட்டு நீங்கும். அந்தக் காப்புக்கு அடியாய், அவித்₃யாஸஞ்சிதமான கர்ம பந்த₄ங்கள் உன்னே அநுஸந்தி₄க்கக் கழன்றுபோம். ஆச்ரிதர்

வ்யா:— (காப்புன்னே உன்னக் கழியும்) உன்னே அறிந்தால் காவல் கழியும். காவலாவது என்னவெனில்:

''ஆதி₃த்யசந்த்₃ராவநிலோऽநலச்ச
த்₃யௌர் பூ₄மிராபோ ஹ்ருத₃யம் யமச்ச।
அஹச்ச ராத்ரிச்ச உபே₄ச ஸந்த்₄யே
த₄ர்மச்ச ஜாநாதி நரஸ்ய வ்ருத்தம்॥''

[(1) சூரியன் (2) சந்திரன் (3) காற்று (4) அக்னி (5) ஆகாயம் (6) பூமி (7) ஜலம் (8) மநஸ்(ஸாக்ஷி) (9) யமன் (10) பகல் (11) இரவு (12) ப்ராதஸ்ஸந்த்₄யை (காலேவேளே) (13) ஸாயம் ஸந்த்₄யை (மாலேவேளே) (14) தர்மம் ஆகிய (பதினுலு) பொருள்களுக்கு அபிமானிதேவதைகளும் மனிதனுடைய நடத்தையை எப்போதும் அறிகின்றன.] என்கிறபடியே பாபங்களுக்கு ஸாக்ஷியாக எப்போதும் காவல்புரியும்படி எம்பெருமானுல் ஏற்படுத்திவைக்கப்பட்ட பதினுலு தேவதைகள். (உன்னேயுன்னக் கழியும்) உன்னே அனுஸந்தித்தவுடன் இக்காவல் தேவதைகளெல்லாம், 'நமக்குத் தலேவனுன ஸர்வேச்வரனின் அந்தரங்கர்களாகிவிட்ட இவர்கள் குற்றத்தைக்காண நமக்கு அதி₄காரமில்லே' என்று தானுகவே இவர்களே விட்டு ஒதுங்கிநிற்கும். இப்படியுமுண்டோவெனில்: இவர்களிலே ஒருவனுன யமன்,

ஸ்வபுருஷமபி₄வீக்ஷ்ய பாமஹஸ்தம்
வத₃தி யம: கில தஸ்ய கர்ணமூலே।
பரிஹர மது₄ஸூத₃நப்ரபந்நாந்
ப்ரபு₄ரஹமந்யந்ருணும் ந வைஷ்ணவாநாம்॥[வி-பு3-7-4]

[பாசத்தைக் கையில்கொண்ட தன்னுடைய கிங்கரனேக் கண்ணுலே நோக்கி, அவனுடைய காதினுள் யமன் (பின்வருமாறு) சொல்லுகிருன்:- ''மதுஸூதனனே சரணமடைந்தவர்களே அணுகாதே; நான் மற்ற மனிதர்களுக்கே ப்ரபு; வைஷ்ணவர்களுக்கு ப்ரபுவல்ல''.]

குற்றத்தை நற்றமாக(க்கொண்டு) ஏற்றும் பிராட்டிபக்கல் பெரும்பிச்சனுனவனே! உன்னை அநுஸந்தி₄ப்பார்க்கு ஜராதி₄களான ஷட்₃ப₄ாவவிகாரங்களும் முதலிலேயில்லை. தே₄வரீர்

கமலநயந! வாஸுதே₃வ! விஷ்ணோ!
த₄ரணித₄ராச்யுத! ஶங்க₂சக்ரபாணே!।
ப₄வ ஶரணமிதீரயந்தி யே வை
த்யஜ ப₄ட! தூ₄ரதரேண தாநபாபாந் ॥ [வி-பு 3-7-33]

[தூத! "செந்தாமரைக் கண்ணு! வாஸுதேவா! விஷ்ணோ! பூமியை தரிப்பவனே! அடியாரை நழுவவிடா அச்சுதனே! சங்கசக்கரங்களை திருக்கையில் தரித்தவனே! (எனக்கு) நீயே கதியாகவேணும்" என்று எவர்கள் சொல்லுகிருர்களோ, பாபமற்றவர்களான அவர்களை வெகுதூரத்தில் விட்டுப்போ.] என்று கூறினுன்ருே. ஸ்ரீபாகவதத்திலும்,

தே₃வர்ஷிபூ₄தாப்தந்ருணும் பித்ருணும்
ந கிங்கரோ நாயம் ருணீ ச ராஜந்।
ஸர்வாத்மநா ய: ஶரணம் ஶரண்யம்
நாராயணம் லோககு₃ரும் ப்ரபந்ந: ॥ [பாக 11-5-41]

[அரசனே! எவனொருவன் சரணமடையத்தகுந்தவனும், லோககுருவுமான நாராயணனை எல்லா விதத்திலும் சரணமடைந்தானே அவன் தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும், பூதங்களுக்கும், பந்துக்களுக்கும், பித்ருக்களுக்கும் அடிமைப்பட்டவனல்லன்; கடன் பட்டவனுமல்லன்.] என்று கூறப்பட்டது. ஆகையாலே இவனுக்கு எத்தேவர் வாலாட்டும் ஒழியும். இந்தக் காவலுக்கும் காரணமான கர்ம பந்தம் கழிவதைக் கூறுகிருர் மேலே: (உன்னையுன்ன அருவினைகள் ஆப்பவிழ்ந்து ஒழியும்) உன்னை நினைத்தவுடன் கடத்தற்கரிய புண்யபாபங்கள் கட்டவிழ்ந்து தாமே விட்டு நீங்கும். (உன்னை உன்ன அருவினைகள் ஒழியும்) அவித்யை (அஜ்ஞாநம்), அந்யதாஜ்ஞாநம், விபரீதஜ்ஞாநம் என்னுமிவ்வறிவுகேடுகளால் பிறந்த பாபங்கள் உன்னைப்பற்றிய அறிவுண்டானவுடன், சூரியனைக்கண்ட இருள் தன்னடையே நீங்குவதுபோலே நீங்கும். அருவினைகளுக்குக் காரணமான அவித்யை (அஜ்ஞானம்) முதலானவற்றுக்குக் காரணமான சரீரஸம்பந்தமும் நீங்குகிறபடியை அருளுகிருர்மேலே:(மூப்புன்னைச் சிந்திப்பார்க்கு இல்லை) மூப்பாவது–கிழத்தனம். இது

திருவடிகளை ஆச்ரயித்திருக்குமவர்கள் போம்வழி என்னும் படி நிரதிசயபோக்யமான அர்ச்சிராதிமார்க்கத்தைக் கண்டு அநுபவிக்கப்பெறுவர்கள். நல்லவழியே போகப்பெறுவர்கள் என்றுமாம். "மூப்புன்னைச் சிந்திப்பார்க்கில்லை"

ப்ராக்ருத சரீரங்களுக்கெல்லாம் இயல்பான ஆறு விகாரங்களுக்கும் உபலக்ஷணம். அவையாவன:-அஸ்தி (உளதாகிறான்), ஜாயதே (பிறக்கிறான்), பரிணமதே (மாறுதலடைகிறான்), விவர்த்ததே (வளர்ச்சியடைகிறான்), அபக்ஷீயதே (கிழவனாகிக் குறைகிறான்), விநச்யதி (மரணமடைந்து அழிகிறான்) என்னும் வழக்குகளுக்குக் காரணமான ஆறு நிலைகள். இவ்வாறு விகாரங்களும் உன்னை நினைப்பவர்களுக்கு இல்லையென்கிறது. அன்றிக்கே, அவனை ப்ராப்யமாகவும் நினையாமல், ஆத்ம்ப்ராப்திக்கு ஸாதனமாகமாத்திரம் நினைக்கும் கைவல்ய நிஷ்டர்களுக்கும் காப்பும் அருவினைகளும் கழியும்; ஆயினும் என்றுமே பகவதனுபவமில்லாமையாலே நித்யநரகம் போன்றிருக்கையாலே 'மூப்பு' எனத்தக்க கைவல்யமோக்ஷம் உண்டாகிவிடும். நித்யஜரையாகிற இக்கைவல்யமோக்ஷமும், உன்னை ஸாதனமாகமாத்திரம் உன்றுமல் (நினையமால்) ப்ராப்யமாகவும் சிந்திப்பவர்களுக்கு இல்லை என்கிறாராகவுமாம். (திருமாலே) ஸர்வேச்வரன் தன் ஸ்வாதந்திரியத்தாலே பாபங்களை ஆராயப்புக்காலும், 'இவ்வுலகில் பாபம் செய்யாதவன் யார்?' என்று கூறி உசிதமான உபாயங்களாலே அவனைப் பாபங்களை மறக்கச்செய்யும் தாயும் அருகிலிருக்கிறாளாகையாலே இவ்வர்த்தத்தில் ஐயமில்லை என்கிறார். (மூப்பில்லை திருமாலே) "யுவாகுமார:" [ருக்விஷ்ணு ஸூக்தம்] [யௌவன வயதையுடையவன்; சிறிது குமாரனாகவுமிருப்பவன்] "யுவதிச்ச குமாரிணீ" [(முக்கியமாகக்) குமாரியாயிருப்பவள்; சிறிது யௌவன வயதையுமுடையவள்] என்று கூறப்படுகிற உங்களை ஆச்ரயிப்பார்க்கு நீங்கள் தம்மையேயொக்க அருள் செய்கிறவர்களாகையாலே யௌவனமும் கௌமாரமும் ஏற்படக்கூடுமேயொழியக் கிழத்தனம் ஏற்பட வழியில்லை என்று கருத்து. நித்யமுக்தர்கள் என்றுமே இருபத்தைந்து வயதுள்ள திருமேனியோடு விளங்குவர் என்று கூறப்படுகிறதன்றோ. இப்படித் தடைகள் நீங்குமளவேயோ? என்னில்: (நின்னடியை வந்திப்பார் வழிகாண்பர்) உன் காலிலே விழுகின்றவர்கள் "போம் வழி" என்று கூறுகிற படியே பரமபதம்போலே தானே மிகவினியதாயிருக்கும் அர்ச்சிராதி மார்க்கத்தைக் காண்பர். (வந்திப்பார் காண்பர் வழி) "வந்தியா

என்றது காப்பும் அருவினைகளும் கழிந்த அதி₄காரிகளுக்கு வரும் மூப்பாவது கைவல்யமாய், அது முதலிலே உன்னை அநுஸந்தி₄ப்பார்க்கு இல்லை என்றபடி.

76. **வழிநின்று நின்னைத் தொழுவார் வழுவா**
மொழிநின்ற மூர்த்தியரே யாவர்—பழுதொன்றும்
வாராத வண்ணமே விண்கொடுக்கும் மண்ணளந்த
சீரான் திருவேங்கடம்.

பதவுரை:—வழிநின்று—*பக்திமார்க்கத்தில் நிலையாயிருந்து,* **நின்னை**—*உன்னை,* **தொழுவார்**—*ஆச்ரயிப்பவர்கள்,* **வழுவா மொழி நின்ற**—*பொய்யா மொழியாகிய வேதத்தில் சொல்லப் பட்ட,* **மூர்த்தியரே ஆவர்**—*ஸ்வரூபத்தை உடையவர்களாக நிச்சயமாக ஆவர்கள்;* **மண் அளந்த சீரான்**—*(தன்னுடைய மேன்மை பாராதே) உலகையெல்லாம் அளந்தருளிய நீர்மையை உடையவனுடைய,* **திரு வேங்கடம்**-*திருவேங்கட மாமலையானது,* **பழுது ஒன்றும்** — *ஒருவிதமான குறையும்,* **வாராத வண்ணமே**-*ஏற்படாதபடி,* **விண் கொடுக்கும்**-*பரம பதத்தைத் தருமன்றே.*

அவதாரிகை:-*உன்னைத் தொழுவார் பிழைப்பார் என்று சொல்லவேணுமோ, உன்னோடு ஸம்ப₃ந்த₄முடைய திருமலை யாழ்வார் தம்மைப் பற்றினார்க்குத் தப்பாமல் ப்ராப்யத்தைக் கொடாநின்றபின்பு? என்கிறார்.*

தார்க்கு முள்ளும் முடுக்குமான வழி; பரமபதம்போலே பரமபதத் துக்குப் போம் வழி; நரகம்போலே பொல்லாதாயிருக்கும் நரகத் துக்குப் போம் வழி'' என்பர் பெரியவாச்சான்பிள்ளை. (வழிகாண்பர்) இவ்வுலகிலேயே நல்லவழியில் போகப்பெறுவர் என்கிறதாகவுமாம்.

அவதாரிகை:—நீ வாழும் திருமலையே தன்னிடம் சிலகாலம் வாழ்ந்தார்க்கும் தவறாமல் மோக்ஷமளிக்கவல்லதானபின்பு உன்னைத் தொழுவார் மோக்ஷமடைவர் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

உரை:— ச்ருதிஸ்ம்ருதிஸித்$_3$த$_4$மாய் ச்ரவணமநநத்$_4$யாநோபாஸந த$_3$ர்சநாத்$_3$யவஸ்த$_2$ாயுக்தமான ப$_4$க்திமார்க்கத்திலே சலியாமல் உறைக்கநின்று ஸர்வாதி$_4$கனுன உன்னை ஆச்ரயிக்குமவர்கள் யதா$_2$பூ$_4$தவாதி$_4$யாகையாலே ஒருநழுவுத

வ்யா:—(வழிநின்று நின்னைத் தொழுவார்)

ஆத்மா வாऽரே த்$_3$ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ
மந்தவ்யோ நிதி$_3$த்$_4$யாஸிதவ்ய:। *[ப்ருஹ 6-5-6]*

[கேட்கத்தக்கதும், நினைக்கத்தக்கதுமான ஆத்மா தியானிக்கத் தக்கது; பார்க்கத்தக்கது.]

தமேவ தீ$_4$ரோ விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத ப்$_3$ராஹ்மண:।
[ப்ருஹ 6-4-21]

[ஞானமுடையவர்களுள் சிறந்தவனான ப்ராஹ்மணன் அந்தப் பரமாத்மாவையே (ச்ரவணமனனங்களால்) அறிந்து த்யானம் செய்யக்கடவன்.]

உபாஸநம் த்$_4$ருவா ஸ்ம்ருதி:
த$_3$ர்சநஸமாநாகாரதா ப்ரத்யக்ஷதாபத்தி:

[உபாஸனம், நிலையான நினைவு, பார்ப்பதற்கு ஸமானமான ஆகாரத்தை உடைத்தாயிருக்கை. ப்ரத்யக்ஷமாயிருக்கும் தன்மையை அடைதல்(ஆகிய இப்பதங்களெல்லாம் ஓரே பொருளையுடையவை).]

"ப$_4$க்த்யா மாமபி$_4$ஜாநாதி யாவாந் யச்சாऽஸ்மி தத்த்வத:।
ததோ மாம் தத்த்வதோ ஜ்ஞாத்வா விசதே தத$_3$நந்தரம்॥"
[கீதை 18-55]

[(ஸ்வரூபத்திலும். ஸ்வபாவத்திலும்) நான் எப்படியிருக்கிறேனே, (குணத்திலும். விபூதியிலும்) நான் எம்மாதிரியிருக்கிறேனே, அப்படிப்பட்ட என்னை பக்தியினால் உள்ளபடி அறிகிறான். என்னை உள்ளபடி அறிந்து. அதன்பிறகு, அந்த பக்தியினாலேயே என்னை அடைகிறான்.] என்று ச்ருதியிலும் ஸ்மிருதிகளிலும் சொல்லியபடியே ச்ரவணம் (சாஸ்திரங்களிலிருந்து பரமாத்மாவைக் கேட்பது) மனனம் (அவனைச் சிந்திப்பது), தியானம் (பரமாத்மாவை தியானிப்பது), உபாஸனம் (அவனை உபாஸிப்பது), த$_3$ர்சனம் (அவனை நேரே காண்பது) முதலான நிலைகளை உடையதாய், தினந்தோறும் வளர்ந்துவருவதான ஸாத$_4$நப$_4$க்திமார்க்கத்திலே சஞ்சலமில்லாமல் ஊன்றிநின்று ஸர்வேச்வரனை உன்னைத்தொழுகின்றவர்கள். (வழி

வற்றிருக்கிற உபநிஷத்3பா4கங்களிலே **"स्वेन रूपेणाभिनिष्पद्यते"** **(ஸ்வேந ரூபேணாபி4நிஷ்பத்3யதே)** என்று ப்ராப்யதயா ப்ரதி பாதிக்கப்படாநின்றுள்ள ஸ்வரூபாவிர்ப4ாவத்தை உடைய ராகப் பெறுவர்கள். பூமியை அளந்துகொண்ட ஶீல

நின்று) கிடைக்கும் பலனுக்கு இதனை உபாயமாக இவர்கள் நினைக்கையாலே, இத்தனை அருமைப்படவேண்டும்படி ஸங்கல்பித்து வைத்திருக்கிறான் எம்பெருமான். ஆகையால், பலப்ரதன் அவனை போதிலும், இந்த ஸாத4நப4க்தியும் ப2லகரணமான (பலத்திற்குத் தனிக்காரணமான) வழியாகிறது. அவனையே உபாயமாக நினைத் திருக்கும் ப்ரபன்னர்களுக்கு ஒரு முயற்சியுமில்லாமலிருக்கச்செய்தே யும் பலனையளிக்கிறான் எம்பெருமான். ஆகையால் இவனுக்குப் ப2லப்ரத3னும் ப2லகரணமும் எம்பெருமானேயாகிறான். முயற்சியின் பெருமை உபாஸகனுக்கு. அத்4யவஸாயத்தின் (அவனேயுபாய மென்னும் மனவுறுதியின்) பெருமை ப்ரபந்நனுக்கு. உபாஸகன் வழிநின்று எம்பெருமானைத் தொழுகிறவன். ப்ரபன்னன் எம்பெரு மானையே வழியாக நினைத்துத் தொழுகிறவன். (வழுவா மொழிநின்ற மூர்த்தியரேயாவர்) உள்ளதை உள்ளபடி சொல்லும் மொழியாகை யாலே எக்காலத்திலும் நழுவுதலற்ற மறைமுடிகளிலே

ஏஷ ஸம்ப்ரஸாதே3ாऽஸ்மாச்ச2ரீராத் ஸமுத்த2ாய
பரம் ஜ்யோதிருபஸம்பத்3ய ஸ்வேந ரூபேணாபி4நிஷ்பத்3யதே।
[சாந் 8-12-2]

[இந்த ஜீவன் இந்த சரீரத்தினின்றும் கிளம்பிப் பரஞ்சோதியான நாராயணனை அணுகி, ஸ்வரூபப்ராப்தியடைகிறான்.] என்று பரம ப்ராப்யமாகச் சொல்லப்படும் தன் ஸ்வரூபத்தின் ஆவிர்ப4ாவத்தை உடையவராகப் பெறுவர்கள். 'மூர்த்தி' என்று ஸ்வரூபத்தைச் சொல்லுகிறது. (மூர்த்தியரேயாவர்) மோக்ஷம் என்பது புதிதாக உண்டாகும் ஒருநிலையன்று; பிரகிருதி ஸம்பந்தத்தாலே மறைந்து கிடந்த தன் ஸ்வரூபத்தை மறைவின்றி அடையப்பெறுகையேயாகும் என்று உணர்த்துகிறார்.

அவனை வழிநின்று தொழுவார்க்கு ஸ்வரூபாவிர்ப4ாவமேற் படும் என்பது ஒருபுறமிருக்கட்டும். அந்த ஸர்வேச்வரன் உகந்து வாழுமிடமான திருவேங்கடமலையே பரமபதத்தைக் கொடுக்குமே தன்னையடைந்தவர்களுக்கு என்கிறார் மேலே. (மண்ணளந்த சீரான் திருவேங்கடம்) வஸிஷ்டசண்டாளாதி விபாகம் பாராமல்

ஸௌலப்$_4$யாதி$_3$ கல்யாணகு$_3$ணங்களை உடையவன் எழுந்தருளி நிற்கிற திருமலை, தன்னை ஆச்ரயித்தார்க்கு ப்ராப்ய ப்ராபகங்களில் ருசிவிச்வாஸங்களுக்கு ஒரு குறையும் வாராத படியாகப் பரமாகாஶஶப்தவாச்யமான பரமபதத்தைக் கொடாநிற்கும்.

77. வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும் அஃகாத
பூங்கிடங்கின்நீள்கோவல்பொன்னகரும்—நான் கிடத்தும்
நின்று னிருந்தான் கிடந்தான் நடந்தானே
என்றல் கெடுமா மிடர்.

பதவுரை:—வேங்கடமும்—*திருமலையும்,* **விண் நகரும்**—*ஸ்ரீவைகுண்டமும்,* **வெஃகாவும்**—*திருவெஃகாவும்,* **அஃகாத பூம் கிடங்கின்**—*மாறாத புஷ்பங்களுடன்கூடிய அகழிகளை யுடையதாயும்,* **நீள் கோவல் பொன் நகரும்**—*இனிதாயும்,*

அனைவருடைய தலையிலும் திருவடிகளை வைக்கையாலே ஸௌலப்$_4$யம் (எளியனாயிருக்கை) ஸௌசீல்யம் (தாழ்ந்தாரோடு புரையறப் பரிமாறுகை) முதலான குணங்கள் விளங்கநின்ற ஸர்வேச்வரன் எழுந்தருளிநிற்கிற திருமலை. (பழுதொன்றும் வாராதவண்ணமே விண் கொடுக்கும்) தன்னிடம் சிலகாலம் அண்டினர்க்கும் ப்ராப்யமாகிற பரமபுருஷனிடமும், ப்ராபகமாகிற தன்னிடமும் ருசிக்கும், நம்பிக்கைக்கும் ஒருகுறையும் வாராமல் தானே ரக்ஷித்துப் பரமபதத்தையும் தானே கொடாநிற்கும். அசேதனமான திருமலை தானே கொடுக்கும் என்பது எப்படி? எனில்: இந்த திவ்யதேசவாஸமே ப$_2$லஸாத$_4$னமாய் நின்று பக்திப்ரபத்திகளில் மூட்டியோ, நேரேயோ எம்பெருமானை உகப்பித்துப் பரமபதத்தை எம்பெருமானைக்கொண்டு கொடுப்பிக்கிறதாகையாலே 'விண் கொடுக்கும்' என்கிறார். முற்பகுதியால் பக்தியோகம் மோக்ஷஸாத$_4$னமாவதை அருளிச்செய்தார். பிற்பகுதியால் திவ்யதேசவாஸம் மோக்ஷஸாதனமாகிற படியை அருளிச்செய்கிறார். ''தே$_3$சோயம் ஸர்வகாமது$_4$க்'' [இந்த தேசமானது அறம்பொருள் இன்பம் வீடு ஆகிய எல்லாப் பயன்களையும் கொடுக்கும்] என்று சொல்லப்பட்டதன்றோ. தினந்தோறும் இப்பாசுரத்தை எம்பார் விடியற்காலையில் அனுஸந்திப்பர் என்பர் பெரியவாச்சான்பிள்ளை.

அழகியதாயுமிருக்கும் திருக்கோவலூரும் நான்கு இடத்தும்- (ஆகிய) நான்கு திவ்யதேசங்களிலும், **நின்றான் இருந்தான் கிடந்தான் நடந்தானே என்றால்** — (எம்பிரான்) நிற்பதும், இருப்பதும், பள்ளிகொண்டிருப்பதும் நடப்பதுமாயிருக்கிறான் என்று சொன்னால், **இடர்**—(நிற்கும்போதும், இருக்கும்போதும், கிடக்கும்போதும், நடக்கும்போதும் நாம் செய்யும்) பாபங்கள், **கெடுமாம்**–நசித்துப்போய்விடும்.

அவதாரிகை:— திருமலையொன்றுமேயல்லகிடீர்! உகந்தருளின தேசங்களடங்க இப்படியேகிடிகோள் என்கிறார்.

— **ஈரை:**— திருமலையிலே நின்றருளினான்; வைகுந்தமாநகரிலே எழுந்தருளியிருந்தான்; திருவெஃகாவிலே கண்வளர்ந்தருளினான்; ஒன்றோடொன்று விச்சேதியாதே செறிந்து அழகிதாய் ஜலபரிபூர்ணமான அகன்றவுடைத்தாய். பே$_4$ாக்$_3$

அவதாரிகை:— திருமலையொன்றுக்கே மோக்ஷஸாதநத்வமுண்டு என்று எண்ணவேண்டாம்; திவ்யதேசங்கள் எல்லாவற்றுக்குமே தம்மையனுஸந்திப்பார்க்கும் மோக்ஷமளிக்கும் பெருமையுண்டு என்கிறார். அன்றிக்கே, திருமலையை அடைந்தவுடன் அநிஷ்டநிவ்ருத்தியும் இஷ்டப்ராப்தியும் உண்டாகிவிடுமோ? என்னில்; இவ்வாத்மாவைப் பெறுகைக்காக அவன் திவ்யதேசங்களில் நின்றுமிருந்தும் கிடந்தும் நடந்தும் பட்டபாடுகளைக் கண்டால் இந்த திவ்யதேசங்கள் சேதனனோடு பரமசேதனனோடு வாசியற இருவர்க்கும் அநிஷ்டநிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் செய்விக்கும் என்பது தன்னடையே ஸித்திக்குமன்றோ என்கிறார் என்றுமாம்.

வ்யா:—(வேங்கடம் நின்றான் என்றால் கெடுமாம் இடர்) பாபங்களைப் போக்கடிக்கும் வேங்கடத்திலே நின்றான் என்றால் பாபங்கள் பறந்தோடிப்போம். (விண்ணகர் இருந்தான்...) பரமபதத்திலே வீற்றிருந்தான் என்று அனுஸந்தித்தாலும் இடர் கெடும். (விண்ணகர் இருந்தான்) திருவிண்ணகரிலே நின்ற திருக்கோலமாகையாலே, இங்கு விண்ணகர் என்று பரமபதத்தைச் சொல்லுகிறார். (வெஃகா கிடந்தான்) திருவெஃகா என்னும் திவ்யதேசத்தில் பள்ளிகொண்டருளினன் என்று அனுஸந்தித்தாலும் இடர்கெடும். (நீள்

யத்தை அளவிறந்துள்ள திருக்கோவலூராகிற ஸப்ருஹணீயமான திவ்யநகரத்திலே நடந்தருளினன்" என்று இந்த நாலு திருப்பதிகளிலும் ஆச்ரிதார்த்தமாக அவன் நிற்பது இருப்பது கிடப்பது நடப்பதான வ்யாபாரங்களை அனுஸந்

கோவல் பொன்னகர் நடந்தான்...) இனிமையில் பெருமைபெற்ற திருக்கோவலூராகிய அழகிய நகரிலே நடந்த திருக்கோலத்திலேயிருக்கிறன் என்று அனுஸந்தித்தாலும் இடர்கெடும். (அஃகாத பூங்கிடங்கின் நீள் கோவல் பொன்னகர்) அவன் தம்மை நெருக்கிவிடுமாகையாலே, அதன் இனிமையிலே மண்டுகிறர். (அஃகாத கிடங்கு) எம்பெருமானும் அடியாரும் ஒருவரோடொருவர் நெருக்கியவிடத்திற்கு ரக்ஷகமாயிருக்கும் அகழிகளும் ஒன்றுக்கொன்று இடைவெளியில்லாமல் நெருங்கியிருக்கிறபடி. (பூங்கிடங்கு) அழகிய கிடங்கு. கிடங்கின் அழகிலேஈடுபட்டால் எம்பெருமானிடமும் செல்லவொண்ணாது. (அஃகாத பூங்கிடங்கு) பூக்கள் இடைவெளியில்லாமல் பூத்துக்கிடக்கும் அகழிகள் என்றுமாம். எக்காலத்திலும் பூத்துக்கிடக்கும் அகழிகள் என்றுமாம். (பூங்கிடங்கின் நீள் கோவல் பொன்னகர்) ஒருவன் கிடங்கைத் தாண்டிக் கண் செலுத்திறல் இந்நகரின் இனிமையும் அழகும் காண்பார் கண்ணேயும் நெஞ்சையும் ஈர்க்கும். (பொன்னகர்) தானே வந்து நெருக்கிக் கடாக்ஷித்தவிடமாகையாலே 'பொன்னகர்' என்கிறர். (வேங்கடமும் விண்ணகரும் வெஃகாவும்...கோவல் பொன்னகரும்) பகவத்ஸம்பந்தம் மாருத இடங்களாகையாலே, நெடுந்தூரம் இடைவெளியுள்ள இவ்விடங்கள் எல்லாம் ஆழ்வாருக்கு ஒரு போகியாயிருக்கிறபடி. (நான்கிடத்தும் நின்றுன் இருந்தான் கிடந்தான் நடந்தானே என்றல்...) இந்த நான்கு இடங்களிலும் முறையே நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் ஆச்ரிதரைப் பெறுகைக்காகப் பட்டபாடு பட்டான் என்று அனுஸந்தித்தால் இடர்கெடும். (என்றல் கெடும்) இந்நான்கு இடங்களிலும் வாஸம் செய்யவும் வேண்டா; இந்நான்கிடங்களிலும் அவனிருக்கும்படியை அனுஸந்தித்தாலும் இடர்கெடும். (என்றல் கெடும்) இவ்வனுஸந்தானத்தை உபாயபுத்தியுடன் செய்யவும் வேண்டா; ஸ்வயம் ப்ரயோஜனமாகச் சொன்னலும் இடர்கெடும். "தாய் பேர் சொல்ல க்லேசம் போமாப்போலே" என்பர் பெரியவாச்சான்பிள்ளை. (நின்றுன் இருந்தான் கிடந்தான் நடந்தானே என்றல் கெடும்) அவன் நிற்பது, இருப்பது, கிடப்பது, நடப்பது ஆகிய செயல்களை நினைத்தால்

த்தால் தாங்களே சூழ்த்துக்கொண்ட ஸாம்ஸாரிகது:க்கங்கள் போனவழிதெரியாதபடி தந்தாமே விட்டோடிப்போம்.

78. இடராா் படுவா ரெழுநெஞ்சே வேழம்
தொடர்வான் கொடுமுதலை சூழ்ந்த—படமுடைய
பைந்நாகப் பள்ளியான் பாதமே கைதொழுதும்
கொய்ந்நாகப் பூம்போது கொண்டு.

பதவுரை:—**வேழம்**–*கஜேந்திராழ்வானை,* **தொடர்**-*(விழுங்குவதற்காகத்) தொடர்ந்து வந்த,* **வான்**–*பலமுள்ள,* **கொடு முதலை**–*கொடிய முதலையை,* **சூழ்ந்த**—*கொன்றவனும்,* **படம் உடைய**–*படத்தை உடையவனுய்,* **பை நாகம் பள்ளியான்**–*பரந்திருக்கும் திருவனந்தாழ்வானைத் திருப்படுக்கையாக உடையவனுமான எம்பிரானுடைய,* **பாதமே**–*திருவடிகளையே,* **நாகம் கொய் பூம் போது கொண்டு**–*புன்னைமரத்திலிருந்து கொய்யப்பட்ட அழகிய புஷ்பங்களைக்கொண்டு,* **கை தொழுதும்**—*வணங்குவோம்;* **நெஞ்சே**—*மனமே,* **எழு**–*(இப்படித் தொழுவதற்காக) எழுந்திருப்பாயாக; (இப்படித் தொழுதால்)* **ஆர் இடர் படுவார்**–*துன்பத்தை யார்தான் அநுபவிப்பார்கள்?*

அவதாரிகை:—*அவன் நமக்காகச் செய்த செயல்களை அனுஸந்தித்தால், அவன் திருவடிகளில் அடிமையிலே அந்வயித்தல்லது நிற்கவொண்ணுதுகிடீர் என்கிறர்.*

இச்தேதனன் நின்றும், இருந்தும், கிடந்தும், நடந்தும் செய்த பாபங்களின் பயன் அழியும். (இடர்கெடுமாம்) இச்சேதனன் தானே வரவழைத்துக்கொண்ட இவ்வுலகத் துன்பங்கள் "சும்மெனுதே கை விட்டோடித்தூறுகள் பாய்ந்தனவே" "வாஞே மறிகடலோ" என்கிற படியே போனவழி தெரியாதபடி தாமே கைவிட்டுப்போம். (இடர் கெடுமாம்) அநிஷ்டநிவ்ருத்தியைச் சொன்னஇது பகவத்ப்ராப்தி முதலான இஷ்டப்ராப்திக்கும் உபலக்ஷணம்

அவதாரிகை:—இப்படி நின்றுமிருந்தும் கிடந்தும் நடந்தும் செய்த செயல்கள் மாத்திரமோ? அடியார்க்காக அவன் செய்த கஜேந்திரரக்ஷணம் முதலான செயல்களை நாம் அனுஸந்தித்தால் அவன் திருவடிகளிலே அடிமை செய்தல்லது நம்மால் நிற்கவொண்ணுதுகிடீர் என்கிறர்.

உரை:—ஸ்ரீகஜேந்திராழ்வானை வடிம்பிட்டு நலியக்கடவதாய், அதிப்ரபலமாய், நெஞ்சிரக்கமில்லாதபடி அதிக்ரூரமான முதலையைத் தப்பாதபடி சூழ்ந்து அழித்துப்போகட்டவனாய், ஸ்வஸ்பர்சத்தாலே விகஸிதபணனாய் இடம்வலங்கொண்டு பரிமாறுகைக்குந் தக்க பரப்பையுடையவனான திருவனந்தாழ்வானைப் படுக்கையாக உடையனான ஸர்வேச்வரன் திருவடிகளை, கொய்துகொள்ளவேண்டும்படி ஸம்ருத்$_3$த$_4$மாய், போ$_4$க்$_3$யமான நாக$_3$புஷ்பங்களைக்கொண்டு ஆச்ர

வ்யா:— (வேழம் தொடர்வான் கொடுமுதலை) ஸ்ரீகஜேந்திராழ்வானை விடாமல் தொடர்ந்து துன்புறுத்துவதாய், மிகவலியதாய், நெஞ்சிரக்கமில்லாததாயிருக்கையாலே மிகக்கொடியதான முதலை. (முதலை சூழ்ந்த) முதலையைத் தப்பமுடியாதபடி கொன்ற. "சூழ்ச்சி" என்று வஞ்சித்தலாய், இங்கு கொல்வதைச் சொல்லுகிறது. இக்காரியம் செய்தவன் யாரெனில், ஆதிமூலமான தேவனே என்கிறார் மேலே,–(படமுடைய பைந்நாகப் பள்ளியான்) எம்பெருமானுடைய ஸ்பரிசத்தாலே பணைத்து விளங்கும் படங்களையுடையவனாய், எம்பெருமான் இடப்புறமும், வலப்புறமும், சாய்ந்து படுக்கலாம்படி பரப்பையுடையவனான திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேச்வரன். (படமுடைய பைந்நாகப்பள்ளி) "ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழும்" என்கிறபடியே விரோதிகள் குரலா, அடியார் குரலா என்றும் ஆராயாமல், அஸ்த$_2$ாநே ப$_1$யசங்கையாலே படமெடுத்தாடும் திருவனந்தாழ்வானாகிற ரக்ஷையுண்டு என்று பயம் தீருகிறார் இவர். (பாதமே கைதொழுதும்) அவனுடைய திருவடிகளையே கையால் வணங்குவோம். (கொய்ந்நாகப் பூம்போது கொண்டு) கொய்து கொள்ளவேண்டும்படி நிறைந்து விளங்கும் திருப்புன்னைப் பூக்களைக் கையிற்கொண்டு தொழுவோம். (நாகப்பூ) அப்ராக்ருத புஷ்பம் தேடிப்போகவேண்டாம். அவனுகந்த துளஸியும் வேண்டாம். காட்டிலேயிருக்கும் ஒரு பூ அமையும் என்கிறார். முதலாழ்வார்கள் காட்டிலேயே திரிந்தவர்களன்றோ. (நாகப்பூ) நாகப்பள்ளியானுக்கு நாகப்பூவே பொருத்தம் என்றுமாம். (இடரார் படுவார்) அவனுக்கு இப்படி அடிமைசெய்யாமல் கிடந்து துன்பப்படுவார் ஆர்? (எழுநெஞ்சே) எனக்கு பவ்யமான நெஞ்சே! அவனுக்கு அடிமைசெய்ய எழுந்திரு. (இடரார் படுவார் எழுநெஞ்சே) நெஞ்சே! இப்படி அவன் திருவடிகளிலே பூம்போதுகொண்டு

யிப்போம். அவனுக்கு அடிமைசெய்யாமல் கிடந்து துக்கப் படவல்லார் ஆர்? நெஞ்சே! சடக்கென எழுந்திரு.

79. கொண்டானை யல்லால் கொடுத்தாரை யார்பழிப்பார்
மண்தா வெனவிரந்து மாவலியை—ஒண்டாரை
நீரங்கை தோய நிமிர்ந்திலையே நீள்விசும்பி
லாரங்கை தோய வடுத்து.

பதவுரை:—'மண் தா என—'(மூன்று அடி) மண்ணைக் கொடு' என்று, மாவலியை இரந்து-மஹாபலியிடம் யாசித்து, ஒண் தாரை நீர்—(அவனால் வார்க்கப்பட்ட) ஒளிபொருந்திய நீர்த்தாரை, அம் கை தோய-(உன்னுடைய) அழகிய திருக் கையிலே விழுந்தவுடன், நீள் விசும்பிலார்-பரந்த ஆகாசத்தி லிருக்கும் தேவர்கள், அம் கை-(உன்னுடைய) திருத்தோள் களிலே, தோய—அணையும்படியாக அடுத்து நிமிர்ந்திலையே-விரைவாக வளரவில்லையா? கொண்டானை—(தன் னுடைமையைத்) தனதாக்கிக்கொண்ட எம்பிரானை, (பழிப் பார்) அல்லால்-பழிக்கிறார்களே தவிர, கொடுத்தாரை-(தன் னுடைமையல்லாததைத் தனதாக அபிமானித்துக்) கொடுத்த மாவலியை, யார் பழிப்பார்-பழிப்பவர்கள் யார் உளர்?

அவதாரிகை:—ஆஶ்ரிதர்க்காகத் தன்னை அழியமாறிக் கார்யம்செய்ய எங்கே கண்டோம்? என்னில்: ஆஶ்ரிதனான இந்த்ரனுக்காகத் தன்னை இரப்பாளனாக்கிக் கார்யம் செய்திலனோ? என்கிறார்.

தொழுதால் நீ துன்பப்பட இடமேயில்லை; இனி, நம்மிடம் இடர் வந்ததாகில் முதலைபட்டது படும்த்தனை; ஆகையால், இடர்ப் படுவோமோ என்று கலங்காமல் அவனைத் தொழ எழுவாயாக என்கிறாராகவுமாம்.

அவதாரிகை:—அடியார்க்காகக் கார்யம் செய்வதை வேறெங் காவது கண்டோமோ? எனில்: அடியானான இந்திரனுக்காகத் தன்னை இரப்பாளனாக்கிப் பழிசுமந்து, கொடுப்பவனேயொழியக் கொள்பவ னல்லன் என்னும் தன் தன்மையையும் மாற்றிக்கொண்டு காரியம் செய்ததைக் கண்டிலையோ? என்கிறார்.

உரை:—'உன் விபூ$_4$தியில் ஏகதே$_3$ஶமான பூ$_4$மியை எனக்குத் தரவேணும்' என்று மஹாபலியைச் சென்று அர்த்தித்து, அவன் மறுக்கமாட்டாமல் 'உனக்குத் தந்தேன்' என்று த$_4$ாரை சாய்க்க, அழகிய அந்த உத$_3$கத$_4$ாரையின் நீரானது, கொடுத்து வளர்ந்த அழகிய திருக்கையிலே வந்து விழுங்காட்டில், 'அவன் மறுமனஸ்ஸுப்படில் செய்வதென்?'

வ்யா:—(மண் தா என இரந்து) பிரானே! உன் செல்வத்தில் ஒரு பகுதியாய், 'வாமனன் மண்' எனப்படுவதான இந்த பூமியை எனக்குத் தரவேணும் என்று ஒருவனிடம் யாசித்தாயே! (மாவலியை) யாசித்ததுதான் யாசித்தாய், ஒரு குணவானிடம் யாசித்திருந்தால், "யாச்ஞா மோக$_4$ாவரமதி$_4$கு$_3$ணே" [குணசாலியிடம் யாசித்துக் கிடைக்காமற்போனாலும் சிறந்தது] என்கிறபடியே நன்றாயிருக்குமே! ஓர் அஸுரனிடமன்றோ யாசித்தாய்! "நாத$_4$மே லப்$_3$த$_4$காமா" [கீழானவனிடம் யாசித்து விரும்பியது கிடைத்தாலும் சிறப்பில்லை] என்கிறபடியன்றோ ஆயிற்று. (ஓண் தாரை நீர்) இரப்பிலே தழும்பேறிய இவ்வாமனன் பெரும்பேறு பெற்றதாக நினைத்திருக்கையாலே 'ஓண் தாரை நீர்' [ஒளிபொருந்திய தாரை நீர்] ஆகக் காட்சியளித்தது இவனுக்கு. (தாரை நீர் அங்கை தோய) மாவலியானவன் 'தனக்கு இயலாவகை தாழ்வது தாழ்வில் கனக்கரியானது கைத்தலம் என்னில் எனக்கு இதன்மேல் நலம் யாது கொல்' [கம்பராமாயணம்] என்று வாமனனின் வடிவழகிலும் பேச்சிலும் மயங்கி மறுக்கமாட்டாமல் 'வேண்டியபடியே மூவடிமண் தந்தேன்' என்று தாரை சாய்க்க, அது அழகிய கையிலே விழுந்தவளவிலே. (அங்கை) "அலம் புரிந்த நெடுந்தடக்கை" [திருநெடு 6] என்கிறபடியே யாசிப்பவர் 'போதும் போதும்' என்னக் கொடுத்து நீண்டகை, இன்று கூனிக் குறுகி ஒருவனிடம் கொள்ளுவதே! என்கை. (தோய நிமிர்ந்திலையே) 'கணம் தப்பினால் மாவலி மனம் மாறிவிட்டால் என்ன செய்வது?' என்று நீர்த்தாரை கையில் விழுந்ததும் நிமிர்ந்தாயல்லையோ? (தோய நிமிர்ந்திலையே) "வாதாதபக்லாந்தமிவ ப்ரணஷ்டம் வர்ஷேண பீ$_3$ஜம் ப்ரதிஸஞ்ஜஹர்ஷ" [ரா-ஸு 29-6] [மழையினாலும் வெயிலாலும் வாடி நசித்துப்போன விதை மழையினால் (ஸந்தோஷிப்பது) போல் (பிராட்டி) ஸந்தோஷித்தாள்.] என்று நீர் விழுந்ததும் வாடிய விதை வளருமாப்போலே வாமனனாய் குறுகி

என்று நினைத்துப் பரப்பையுடைத்தான அந்தரிக்ஷாதி லோகங்களில் வர்த்திக்கிற ப்ரஹ்மாதிகளுடைய அழகிய கையானது ஸ்பர்சித்துத் திருவடிகள் விளக்கும்படிக்கீடாகக் கடுகச்சென்று கிட்டி, உத$_3$கஜலமும் திருவடிவிளக்கின ஜலமும் ஏகோத$_3$கமாம்படி வளர்ந்திலையோ? தன்னை அழியமாறி ஔதா$_3$ர்யகுணம் பற்றாசாகத் தன் விபூ$_4$தியை 'என்னது'' என்று அபி$_4$மானித்திருந்த அவன் குற்றம் பாராதே தானே

நின்ற நீ திரிவிக்கிரமனாய் வளரவில்லையோ? (நீள் விசும்பிலார் அங்கை தோய நிமிர்ந்திலையே) பரப்பையுடைய அந்தரிக்ஷம் சுவர்க்கம் முதலான உலகங்களிலுள்ள பிரமன் முதலான தேவர்களுடைய அழகிய கையானது திருவடிகளிலே தோய்ந்து அவற்றை விளக்கலாம்படி நிமிர்ந்திலையோ? நீள் விசும்பில் தேவர்கள் அனைவரும் ஒதுங்க நிழல்தரும் உன் திருத்தோள்களிலே அணையும்படியாக வளரவில்லையோ என்றுமாம். (நீள் விசும்பிலார் அங்கை தோய நிமிர்ந்திலையே) நீண்ட சுவர்க்கத்திலிருக்கும் தேவர்கள் அனைவரும் தங்கள் கைகளைக் கூப்பி வணங்கும்படியாக வளரவில்லையோ? என்றுமாம். (நீள் விசும்பில் ஆரம் கைதோய நிமிர்ந்திலையே) நீர்த்தாரையேந்துவதற்காகக் கையை மார்பளவும் உயர்த்தி நின்ற திருக்கோலத்தோடு திரிவிக்கிரமனாக வளருகையாலே, மார்பிலிருக்கும் திருவாரமானது ஏந்தி நிற்கும் கையிலே தோயும்படியாக வளரவில்லையோ என்கிறதாகவுமாம். (அடுத்து நிமிர்ந்திலையே) அடியவனான இந்திரன் காரியத்தைச் செய்வதில் த்வரையாலே அதிவேகமாக வளரவில்லையோ? (அடுத்து நிமிர்ந்திலையே) மாவலி கையில் வார்த்த நீரும், பிரமன் திருவடிவிளக்கியஜலமும் ஒன்று சேரும்படி அதிவேகமாக வளரவில்லையோ? (கொண்டானை... பழிப்பார்) பிரானே! இப்படிப்பட்ட அருஞ்செயலைச்செய்த உன்னைப் பழிப்பார் இப்புவியில் நிறைந்திருக்கிறார்களேயொழிய, தன்னதல்லாததைத் தன்னதாக்கிக் கொடுத்த மாவலியைப் பழிப்பாரில்லையே! என்கிறார். இந்த ஸம்ஸாரத்தில் குணத்தைக் குற்றமாகவும் குற்றத்தை குணமாகவும் கருதுமவர்களே நிறைந்திருக்கிறார்களே! என்று வெறுக்கிறார். (கொண்டானைப் பழிப்பாரல்லால்) வாமனன் மண்ணைத் தன்னதாக அபிமானித்திருந்தான் மாவலி. பிராட்டியைத் தனக்கென அபிமானித்த ராவணனைக் கொன்றாற்போலே அவனையும் கொன்றிருக்கவேண்டும்; ஆனால் நீ அப்படிச் செய்ய

சென்று இரந்து நீரேற்று வாங்கிக்கொண்ட கு$_3$ணதி$_4$கனை வனை, 'வஞ்சகன், ஸர்வஸ்வாபஹாரி, தனக்கு அபேக்ஷிதம் செய்தவனைப் பாதாளத்திலே தள்ளினவன்' என்றுப்போலே பழிசொல்லுமித்தனையொழிய, கொடுத்த மஹாபலியை, 'ப$_4$க$_3$வத்$_3$விபூ$_4$த்யபஹாரி, அஹங்காரக்$_3$ரஸ்தன், ஆஸுர ப்ரக்ருதி' என்றுப்போலேயுண்டான அவன் குற்றங்களை ஆர்தான் சொல்லுவார்? ஸம்ஸாரிகள்ஸ்வப$_4$ாவம் குணத்தைக் குற்றமாக்கியும், குற்றத்தை குணமாக்கியும், செய்யும்படி யன்றோ இருப்பது என்று வெறுக்கிறார். நீள்விசும்பிலே ஆரமும் கையும் சென்று ஸ்பர்சிக்கும்படிகிட்டி என்னுதல். அன்றிக்கே, நீள்விசும்பிலாரடையக் கையெடுத்து ஆச்ரயிக் கும்படியாக என்னவுமாம்.

வில்லை. அவனிடமுள்ள வண்மைக்குணம் ஒன்றையே நோக்கி, அவன் குற்றத்தையும், உன் ஸ்வரூபத்தையும் பாராமல், உன்னை இரப்பாளனுக்கிக்கொண்டு நீயே அவனிடம் சென்று நீரேற்று உன் பூமியை வாங்கிக்கொண்டாய். குணத்திற்சிறந்த உன்னுடைய இச் செயலைக் கேட்பார் அனைவரும் இந்நீர்மைக்குணத்திலே நீராயுருக வேண்டியிருக்க, உன்னை 'சிறியவடிவைக் காட்டிப் பெற்றுப் பெரிய வடிவாலே அளந்துகொண்ட வஞ்சகன்' 'தனக்கு தானம் கொடுத்த வனிடம் உள்ளதையெல்லாம் அபஹரித்த கள்வன்' 'தான் விரும் பியதைக் கொடுத்தவனைப் படுகுழியில் (பாதாளத்தில்) தள்ளியவன்' என்றெல்லாம் இவ்வுலகிற் பிறந்த பலபாவிகள் ஏசுகிறார்களே! (கொடுத்தானை யார் பழிப்பார்) தன்னுடையதல்லாத பூமியைத் தன் னுடையதாக நினைத்ததல்லாமல், அதற்குடைய நீ வந்து கேட்கும் போது, உன்னை இன்னாரென்று அறிந்திருந்தும் உன்னுடைய பூமியை உனக்கெதிரிலேயே தன்னதாக அபிமானித்து, உனக்கே நீர் வார்த்துக் கொடுக்கவல்ல துணிவுடைய மாவலியை 'பகவா னுடைய செல்வத்தை அபஹரித்தவன்' 'அஹங்காரம் நிறைந்தவன்' 'அஸுரத்தன்மையுள்ளவன்' என்று தூற்றவேண்டியிருக்க, அப்படி யொருவரும் அவனைப் பழிப்பாரில்லையே! பழியாததோடன்றியில் 'கொடையாளி'என்று அவனைப் புகழவுமன்றோ செய்கிறார்கள். குணம் மிக்கவர்களைப் பழிப்பதும், குணமற்றவர்களைப் புகழ்வதும் இவ் வுலகினரின் இயற்கையாயன்றோ இருக்கிறது என்று வெறுக்கிறார்.

80. அடுத்த கடும்பகைஞற் காற்றேனென் றேடி
படுத்த பெரும்பாழி சூழ்ந்த—விடத்தரவை
வல்லாளன் கைகொடுத்த மாமேனி மாயவனுக்கு
அல்லாது மாவரோ ஆள்.

பதவுரை:—அடுத்த கடும் பகைஞற்கு—*இயற்கையாகவே கொடிய சத்துருவான கருடனுக்கு,* **ஆற்றேன் என்று**—*(நேர் நின்று) பிழைக்க வல்லேனல்லேன் என்று சொல்லி,* **ஓடி**—*விரைந்து சென்று,* **படுத்த பெரும் பாழி**—*(எம்பெருமான்) பள்ளிகொண்ட பெரிய திருப்பள்ளிக்கட்டிலை,* **சூழ்ந்த**-*சுற்றிக்கொண்ட,* **விடத்து அரவை**—*விஷமுடைய (ஸுமுகனென்னும்) பாம்பை,* **வல்லாளன்**—*வலிமையுடையவனை கருடனின்,* **கை கொடுத்த**—*கையிலேயே (அடைக்கலமாகக்) கொடுத்தருளியவனும்,* **மா மேனி மாயவனுக்கு அல்லாதும்**—*சிறந்த திருமேனியையுடையவனும், ஆச்சர்யபூதனுமான எம்பிரானைத் தவிர மற்றவர்களுக்கும்,* **ஆள் ஆவரோ**—*அடிமையாவர்களோ?*

அவ:-*மஹாபலிபக்கல் நின்றும் பூ₄மியைமீட்டு நோக்கின வளவன்றிக்கே, அஸாத₄ாரணபரிகரத்தோடே விரோதித்து வந்து ஒருவன் சரணம் புக்கால்,* **"न क्षमामि" (ந க்ஷமாமி)**

அவதாரிகை:—மஹாபலியிடமிருந்து பூமியை மீட்டு ரக்ஷித்த வளவேயோ? 'ந க்ஷமாமி' [என்னடியார்க்கு விரோதிகளானவர்களை ஒருகாலும் பொறுக்கமாட்டேன்] என்கிறபடியே தனக்கு அந்தரங்கரான அடியாரோடு விரோதித்து வந்து ஒருவன் சரணம் புகுந்தாலும், 'ந க்ஷமாமி' என்னும் வசனத்துக்கும், 'ந த்யஜேயம்' [சரணம் புகுந்தவனைக் கைவிடமாட்டேன்] என்ற வாக்கியத்திற்கும் விரோதம் வாராதபடி தன்னைச் சரணமடைந்தவனை அவனுக்கு விரோதியாயிருந்த தன் அடியானிடமே காட்டிக்கொடுத்து அவனைக்கொண்டே ரக்ஷிக்கவல்ல அதிஸமர்த்தனன்றோ என்கிறார். எம்பெருமான் தேவலோகத்தில் இந்திரனுக்குத் தம்பியான உபேந்திரனாயவதரித்திருக்கும்போது, பெரியதிருவடியும் வினதை சிறுவனாக அவதரித்திருக்க, பாதாளத்தில் ஸுமுகன் என்றொரு பாம்பை அத்திருவடி

என்றதுக்கும் **“न त्यजेयं”** (ந த்யஜேயம்) என்றதுக்கும் விரோதமும் வாராதபடி அவன் கையிலே காட்டிக்கொடுத்து அவனைக்கொண்டே நோக்குவான் ஒருவன் என்கிறார்.

உரை:–பிறப்பே பிடித்து உண்டானதொன்றாகையாலே ப்ரத்யாஸந்நமாய், பேர் சொல்லவேமுடியும்படி கொடிதான ஶாத்ரவத்தை உடையனான பெரியதிருவடிக்கு நேர்நின்று பொறுக்கமாட்டேனென்று பெரிய வேகத்தோடே ஓடிச் சென்று, அங்குத்தைக்கு அநுரூபமாம்படி விரித்த திவ்ய ஸிம்ஹாஸனத்தைச் சுற்றிக்கொண்டு கிடந்த பயத்தாலே உமிழுகிற விஷத்தையுடைய ஸுமுகனாகிற ஸர்ப்பத்தை

அமுது செய்ய நினைக்க, அதையறிந்த ஸுமுகன் உபேந்திரனின் திருப்பள்ளிக்கட்டிலைக் கட்டிக்கொண்டு சரணடைய, அதைக்கண்ட திருவடி ‘தேவதேவனான உம்மையும் தாங்கும் என் இரையை நீரே பறிக்கலாமோ?’ என்று கூற, ‘உன்னையுள்ளிட்ட எல்லாவுலகையும் நான் தாங்கிநிற்க, நீ என்னைத் தாங்குவதாவது! என்வலக்கை யொன்றை மாத்திரமாவது தாங்குவாயா’ என்று எம்பிரான் தன் வலக்கையைத் திருவடியின்மேல் வைக்க, வலக்கையாழியின் பாரத்தையும் தாங்கமுடியாமல் திருவடி வலியழிந்து துதித்துநிற்க, அந்த ஸுமுகன் என்னும் நாகத்தைத் திருவடியின் கையிலேயே அடைக்கலமாகக் கொடுத்து அவனைக்கொண்டே இவனை ரக்ஷித்த உபாக்கியானத்தை அனுஸந்தித்து அருளிச்செய்கிறார்.

வ்யா:—(அடுத்த பகைஞன்) பிறவியிலேயே உண்டான பகையை உடையவன். (கடும்பகைஞன்) கருடன் பெயரைச் சொன்னாலும் பாம்புகள் முடியவேண்டும்படியான அத்தனை கொடிய விரோதத்தை உடையவன். இவனை விரோதித்துக் கொண்டவர் தப்ப முடியாது என்கை. (பகைஞற்கு ஆற்றேன் என்று ஓடி) ‘இத்தகைய விரோதியோடு நேர் நின்று என்னால் வாழமுடியாது’ என்றெண்ணிப் பெரிய வேகத்தோடே ஓடிச்சென்று. (படுத்த பெரும்பாழி சூழ்ந்த) தேவலோகத்தில் உபேந்திரனாயிருக்கும் இருப்பிற்குத் தக்கவாறு தன்னை அமைத்துக்கிடக்கும் ஆதிசேஷனாகிற திவ்ய ஸிம்ஹாஸனத்தைச் சுற்றிக்கொண்டு கிடந்த. ஸுமுகனும் ஸர்ப்பமாகையாலே, ஆதிசேஷனாகிற நாகத்தை முன்னிட்டுப் பற்றுகிறபடி. இரண்டிடத்திலும் உறவுடையாரிடமன்றோ புருஷகாரத்வபூர்த்தி

“**न क्षमामि**” (ந க்ஷமாமி) என்றதையும் “**न त्यजेयं**” (ந த்யஜேயம்) என்றதையும் ஒக்கநோக்குகைக்காக ஶரணாகதபரித்ராணத்துக்கு அனுகுணமான மிடுக்கையுடைய பெரியதிருவடி கையிலே கடித்த வாயாலே தீரும்படி காட்டிக்கொடுத்து ரக்ஷித்தவனாய், ஆச்ரிதஸம்ரக்ஷணம் பண்ணப்பெற்ற ஹர்ஷப்ரகர்ஷமடங்கலும் நிழலிட்டுத் தோற்றுகிற ச்லாக்$_4$யமான திருமேனியையுடையனாய், ஆஶ்ரிதவிஷயத்தில் ஓரத்துக்கு எல்லைகாணவொண்ணாத ஆச்சர்யபூ$_4$தனுக்கொழியவும் ஸ்வ

யிருப்பது. (விடத்தரவை) பயத்தாலே உமிழுகிற விஷத்தையுடைய ஸுமுகனாகிற பாம்பை. (விடத்தரவை) தோஷமுள்ளவிடமே கிருபைக்கு விஷயம் என்று காட்டுகிறார். ஸம்ஸாரியானவன் தன் பாபத்தையே பச்சையாகக் (காணிக்கையாகக்) கொண்டு சரணம் புகுவதுபோலே, இவன் தன் விஷத்தையே உபஹாரமாகக்கொண்டு சரணம் புகுந்தபடி. (அரவை) ஸுமுகனாகிற ஸர்ப்பத்தை. (வல்லாளன் கைக்கொடுத்த) இவனைத்தானே ரக்ஷித்தால், ‘ந க்ஷமாமி’ [பாகவதவிரோதிகளை நான் ஒருபோதும் பொறுக்கமாட்டேன்] என்னும் வசனத்தோடு விரோதம் வரும்; இவனைக் கைவிட்டால் ‘ந த்யஜேயம்’ [சரணமடைந்தவனைக் கைவிடமாட்டேன்] என்னும் வாக்கியத்தோடு விரோதம் வரும். இரண்டுக்கும் விரோதம் வாராதபடி இவனை ரக்ஷிக்கவல்ல பெருமிடுக்கையுடைய திருவடியிடமே இந்த ஸுமுகனை அடைக்கலமாகக் காட்டிக்கொடுத்தான். திருவடியானவன் இவனைக் கடித்தவாயாலேயே முத்தமிடும்படி செய்தான். (மாமேனி) இப்படி அடியானைக் காப்பாற்றியதாலுண்டான ஆனந்தவெள்ளமெல்லாம் திருமேனியிலே நிழலிட்டுத் தோற்றும்படி பசுகுபசுகென்றிருந்தான். (மாயவனுக்கு) பிராயச்சித்தமில்லாத பாகவதவிரோதத்திற்கும் பரிஹாரம் காணவல்ல ஆச்சர்யபூதனுக்கு. அன்றீன்ற கன்றின் பக்கல் வாத்ஸல்யத்தாலே முன்னணைக் கன்றைக் கொம்பாலும் குளம்பாலும் தள்ளும் தாய்ப்பசுவைப்போலே அப்போதே சரணமடைந்த ஸுமுகனுக்காக, பழவடியானான திருவடியையும் சிக்ஷித்த ஆச்சர்யபூதன் என்றுமாம். இது இவனுடைய ஆச்ரிதபக்ஷபாதத்தைக் காட்டுகிறது. “வத்$_4$யதாம்” [ரா-யு 17-29] [இவன் கொல்லப்படட்டும்] என்ற வானரமுதலிகளையே இசைவித்து “அஸ்மாபி$_4$ஸ்துல்யோ ப$_4$வது” [ரா-யு 18-38] [இவன் நம்மோடொருவனாகட்டும்] என்று கூறவைத்தாற்போலே,

பர ஸம்ரக்ஷணக்ஷமரல்லாத வேறு க்ஷுத்ரதேவதைக்கு அடிமையாவர்களோ?

81. ஆளமர் வென்றி யடுகளத்து ளஞ்ஞான்று
வாளமர் வேண்டி வரைநட்டு—நீளரவைச்
சுற்றிக் கடைந்தான் பெயரன்றே தொல்நரகைப்
பற்றிக் கடத்தும் படை.

பதவுரை:—ஆள் அமர் வென்றி அடுகளத்துள்—யுத்தம் செய்பவர்கள் நிறைந்ததும், வெற்றியை உடையதுமான யுத்த களத்திலே, **அஞ்ஞான்று**—(அஸுரர்கள் தேவர்களை ஹிம்ஸித்த) அக்காலத்தில், **வாள் அமர் வேண்டி**—மதிப்பை உடைத்தான சண்டையை விரும்பி, **வரை நட்டு**—மந்தர கிரியை (மத்தாக) நாட்டி, **நீள் அரவை சுற்றி**—நீண்டதான (வாஸுகியென்னும்)பாம்பைக் கயிறாகச் சுற்றி, **கடைந்தான்**-(திருப்பாற்கடலைக்) கடைந்தவனுடைய, **பெயர்**-திருநாமங்கள், **பற்றி**—(சேதனர்களை) அள்ளியெடுத்து, **தொல் நரகை**-பழமையாயிருக்கும் நரகங்களை, **கடத்தும்**-தாண்டுவிக்கும், **படை அன்றே**—உபாயம் அன்றோ.

அவ:-ப்ரயோஜநாந்தரபரர்க்குமுட்பட உடம்பு நோவக் கடல்கடைந்து அபேக்ஷிதஸம்விதாநம் பண்ணுமவன் திருநாமமே கிடிகோள் ஸம்ஸாரத்தைக் கடக்கைக்கு உபாயம் என்கிறார்.

கொல்ல வந்த கருடனையே ரக்ஷகனுக்கிய ஆச்சரியத்தை நினைக்கிறார். (மாயவனுக்கல்லாதும் ஆவரோ ஆள்) இப்படிப்பட்ட ஆச்சர்யமான ஸ்வபாவத்தையுடையவனுக்கு அடிமைப்படலாமே யொழிய, தம்மையும் பிறரையும் ரக்ஷித்துக்கொள்ளவல்லமையற்ற வேறொரு க்ஷுத்ரதேவதைக்கு அடிமைப்படலாமோ?

அவதாரிகை:—கற்பகவிருக்ஷத்திடம் கௌபீநத்தைக் கேட்பாரைப்போலே தன்னையே தரும் கற்பகமான எம்பெருமானிடம் ஒரு பிரயோஜனத்தை விரும்பிய தேவர்களுக்கும் உடம்பு நோவக் கடல் கடைந்து விரும்பியது கொடுத்தவன் திருநாமமேயன்றோ ஸம்ஸாரத்தைக் கடக்கைக்கு உபாயம் என்கிறார்.

உரை:—ஆளோடாள் மிடைந்து கிடப்பதாய் வென்றியையுடைத்தாய், எதிர்த்தவர்களை முடித்துவிழவிடுகிற யுத்$_3$த$_4$பூ$_4$மியிலே அஸுரர்கள் தேவர்களை மேலிட்டு நலிகிற வன்று அநுகூலரான தேவர்களுக்கு ஜயமுண்டாம்படி ஒளியையுடைத்தாயிருப்பதொரு யுத்$_3$த$_4$ம் வேணும் என்று அபேக்ஷித்து, நீரைக்கண்டால் ஆழக்கடவ மந்தரபர்வதத்தைக் கடலுக்குள்ளே மத்தாக நாட்டி, ம்ருது$_3$ஸ்வப$_4$ாவமாய், ஒழுகு நீட்சியை உடைத்தான வாஸுகியாகிற பாம்பைக் கடைகயிறுகச் சுற்றி, மஹத்தத்வமான கடலைக் கடைந்தருளினவனுடைய திருநாமமன்றோ பழையதாய் வருகிற ஸம்ஸாரமாகிற நரகத்தை அள்ளியெடுத்துக்கொடுபோய்க் கடத்திவிடும் ஸாத$_4$நம்.

வ்யா:–(ஆளமர் களத்துள்) ஆளோடு ஆள் நெருங்கிக்கிடக்கும் போர்க்களத்தில். (வென்றிக்களத்துள்) அசுரர்க்கே வெற்றியைத் தந்த அப்போர்க்களத்தில். (அடுகளத்துள்) எதிர்க்கும் தேவர்களை முடிந்து விழச்செய்துவந்த அப்போர்க்களத்தில். (அஞ்ஞான்று) அஸுரர்கள் தேவர்களை மேல்விழுந்து துன்புறுத்திய அன்று. (வாளமர் வேண்டி) ஒளிபொருந்திய போரை விரும்பி. முன் நடந்த யுத்தத்தில் நல்லோரான தேவர்க்குத் தோல்வியும், துஷ்டரான அசுரர்க்கு வெற்றியும் ஏற்பட்டு வந்ததாகையாலே அது வாளமராயில்லை. அப்படிப்பட்ட வாளமரை விரும்பி அதற்காக எம்பெருமான் செய்தசெயலைச் சொல்லுகிறது மேலே (வரை நட்டு) நீரில் போட்டால் அமிழ்ந்து போகக்கூடிய மந்தரமலையைக் கடலினுள் மத்தாக நாட்டினன். உலகிலுள்ளார் கடைவதற்கு மத்தாக மிதக்கக்கூடிய மரத்தையுபயோகித்தால், இவன் அமிழக்கூடிய மலையை உபயோகித்தான் அகடிதகடநாஸமர்த்தனைகையாலே. (நீளரவைச்சுற்றி) உலகிலுள்ளார் உறுதியானதாய் சொரசொரப்புள்ள கயிற்றைக் கடைவதற்கு உபயோகிப்பர். இவன் வழவழப்பாயிருக்கும் மிருதுவான நீண்ட அரவைக் கடைகயிறாகக் கொண்டான். (கடைந்தான்) உலகில் அல்பமான தயிரைக்கடைந்தால், இவன் மஹத்தான கடலைக் கடைந்தான். (பெயரன்றே) இப்படிப்பட்ட அகடிதகடநாஸாமர்த்தியமுடையவனுடைய திருநாமமன்றோ. (பெயரன்றே...படை) அவன் ஸாத$_4$னமாய் நின்று உதவாத தசையிலும் சிலர்க்கு இதுவேயன்றோ ஸாத$_4$னமாய் நின்று உதவுகிறது.

82. படையாரும் வாள்கண்ணார் பாரசிநாள் பைம்பூம்
தொடையலோ டேந்திய தூபம்—இடையிடையில்
மீன்மாய மாசூணும் வேங்கடமே மேலொருநாள்
மானமாய வெய்தான் வரை.

பதவுரை:—**படை ஆரும்**—*வாள் போன்று,* **வாள் கண்ணார்**—*ஒளிபொருந்திய கண்ணையுடைய பெண்கள்,* **பாரசி நாள்**—*த்வாதசியன்று,* **பை**-*அழகிய,* **பூ தொடையலோடு**-*பூ மாலைகளோடு,* **ஏந்திய**—*தரித்த,* **தூபம்**-*புகையானது,* **இடையிடையில் மீன்**—*நடுவில் நடுவில் தோன்றும் நக்ஷத்திரங்கள்,* **மாய**—*மறையும்படியாக,* **மாசூணும்**—*அழுக்கடையும்படி செய்யும்,* **வேங்கடமே**—*திருமலையே,* **மேல் ஒரு நாள்**—*முன்னொரு காலத்தில்,* **மான்**—*மாய மானாகிய, மாரீசன்,* **மாய**—*இறக்கும்படியாக,* **எய்தான்**—*அம்பு விட்டவனுடைய,* **வரை**—*மலையாகும்.*

அவ:—*தேவர்கள் ஆச்ரயிக்கும்படி கடலிலே கிடந்த வளவன்றிக்கே, பெண்பிறந்தாரும் ஆச்ரயிக்கலாம்படி திருமலையிலே வந்து ஸந்நிஹிதனானான் என்கிறார்.*

(தொல்நரகைப் பற்றிக்கடத்தும் படை) அநாதியான ஸம்ஸாரமாகிற நரகத்திலிருந்து இச்சேதனனை அள்ளியெடுத்துக் கொண்டுபோய்க் கடத்திவிடும் ஸாத$_4$னம். அவனையே உபாயமாக நினைத்திருக்கையாகிற மஹாவிச்வாஸமற்றவர்களுக்கும், இதுதானே ப$_2$லஸாத$_4$னமாய் நின்று எம்பெருமானைக்கொண்டு மோக்ஷத்தைக் கொடுப்பிக்கும். “வாச்யப்ரபாவம் போலன்று வாசகப்ரபாவம்; அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்று உதவும்; த்ரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாமமிறே” என்னும் முமுக்ஷுப்படி ஸூத்ரங்களை அனுஸந்திப்பது.

அவ:—கடல் கடைவதற்காக தேவர்கள் சரணடையும்படி கடலிலே கிடந்தது மாத்திரமல்லாமல், பெண்களும் சரணடையலாம்படி திருமலையிலே வந்து நிற்கிறான் என்கிறார். இத்தால், அனைவரும் ஆச்ரயிக்கலாம்படியிருக்கும் தன்மையும், ‘மான்மாய’ என்கையாலே ஆச்ரிதபாரதந்திரியமும் இப்பாசுரத்தில் சொல்லுகிறது.

உரை:—வேலாகிற ஆயுதத்தோடு ஒத்திருப்பதாய், ஒளியையுடைத்தான கண்களையுடைய பெண்களானவர்கள் த்வாதசி நாளிலே அழகிய பூக்களாலே தொடுத்த மாலைகளோடே கூட த₄ரித்த தூ₄பமானது நடுநடுவே ஒரோ நக்ஷத்ரங்களையுடைத்தான ஆகாசமானது மறையும்படி அத்தைச்சென்று மாசேறும்படி பண்ணாநிற்கும் திருமலையே முன்பொரு நாளிலே பிராட்டி வசநபரதந்த்ரனாய்க்கொண்டு மாயாம்ருக₃ம் முடியும்படி எய்துவிழவிட்ட சக்ரவர்த்தித் திருமகன் வர்த்திக்கிற மலை.

83. **வரைகுடைதோள் காம்பாக ஆநிரைகாத்து ஆயர்**
நிரைவிடையேழ் செற்றவா றென்னே—உரவுடைய
நீராழி யுள்கிடந்து நேரா நிசாசரர்மேல்
பேராழி கொண்ட பிரான்.

வ்யா:—(படையாரும் வாள்கண்ணார்) வேலாகிற ஆயுதத்தோடு ஒத்திருப்பதாய், ஒளியை உடையதான கண்ணையுடையவர்கள். ஸ்வாபதேசத்தில் நுண்ணிய ஒளிபொருந்திய அறிவையுடைய ஸ்ரீவைஷ்ணவர்களைக் குறிக்கிறது. (வாள்கண்ணார்) பெண்களும் ஆச்ரயிக்கலாம்படியான ஸௌலப்யம். (பாரசிநாள்) துவாதசிநாள். பகவத்ஸம்பந்தமுள்ளகாலம். (நாள்) விடியற்காலைவேளையாகையாலே ஸத்வோத்தரமான காலம். (பைம்பூந் தொடையலோடு) அழகிய பூக்களாலே தொடுத்த மாலைகளோடேகூட. (ஏந்திய தூபம்) கையிலே ஏந்திய தூபமானது. (இடையிடையே மீன் மாய மாசூணும்) விடியற்காலைவேளையாகையாலே இடையிடையில் அங்கொன்று இங்கொன்றாகத் தோன்றும் நக்ஷத்திரங்கள் மறையும்படியாக மாசுபடுத்துகிறது தூபம். மீன்-நக்ஷத்திரங்கள். அந்த நக்ஷத்திரங்களையுடைய ஆகாசத்தைச் சொல்லுகிறதாகவுமாம். ஆகாசமே மறையும்படியாக தூபப்புகை கிளம்புகிறது என்றபடி. (மாசூணும் வேங்கடமே) இப்படி ஆகாயத்தையே மாசுபடுத்தும்படி பெண்கள் தூபம் கையேந்தி ஆச்ரயிக்கும் திருவேங்கடமே. (மேலொருநாள் மான்மாய எய்தான் வரை) முன் ராமாவதாரகாலத்தில் சீதாபிராட்டியின் வாக்கியத்திற்கு வசப்பட்டவனாய் மாயமான் மாய்ந்த மாளும்படி அம்பெய்து அதை விழச்செய்த சக்கரவர்த்தித்திருமகன் வாழ்கிற மலையாகும். பிராட்டிக்கு வசப்பட்டவனாய் தன் அநர்த்தத்தையும் காணாமல் அவள்

பதவுரை:—உரவு உடைய-பலத்தையுடைய, **நீர் ஆழியுள் கிடந்து**—நீரைக்கொண்ட திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளி, **நேர் ஆம்**-விரோதிகளாக வந்த, **நிசாசரர் மேல்**—(மது கைடபர்களாகிய) அஸுரர்கள் மேல், **போர் ஆழி கொண்ட**-பெரிய சக்கரத்தை எடுத்துவிட்ட, **பிரான்**—உபகாரகனே! **வரை குடை(ஆக)**-கோவர்த்தனகிரியைக் குடையாகவும், **தோள் காம்பு ஆக**-தன் திருத்தோள்களைக் குடைக் காம்பாகவும் (ஆக்கி), **ஆ நிரை காத்து**—பசுக்கூட்டங்களை ரக்ஷித்து, **ஆயர்**—இடையர்களுடையதான, **நிரை விடை ஏழ்**-ஏழு பருத்த எருதுகளையும், **செற்ற ஆறு**-அழித்த விதம், **என்னே**-எப்படி?

அவ:-'நாம் ஆஸ்ரிதபரதந்த்ரராய் அவர்கள் கார்யம் செய்வோம் என்னுமிடம் நீர் என்கொண்டு அறிந்தீர்' என்ன, மது₄கைடபர்களைப் பொடிபடுத்தும் பரிகரமுடைய நீ அத்தைவிட்டு மலையையெடுப்பது ஏறடர்ப்பதாய்த்து வெறுமனேயோ? என்கிறார்.

உரை:—மிடுக்குடைத்தான நீரையுடைய திருப்பாற்கடலிலே கண்வளர்ந்து எதிரிட்ட ராக்ஷஸப்ரக்ருதிகளான

கார்யம்செய்ய முற்பட்டாப்போலே அடியார்க்கும் வசப்பட்டு அவர்கள் காரியம் செய்ய முற்படுவான் என்று கருத்து.

அவதாரிகை:-''எனக்கு உயிரிலுமினிய பிராட்டியின் காரியம் செய்ததாலே எல்லா அடியார்க்கும் வசப்பட்டு அவர்கள் காரியம் செய்வோம் என்னும் நிர்ப்பந்தமுண்டோ?'' என்று எம்பெருமான் திருவுள்ளமாக, ''மதுகைடபர்களைப் பொடியாக்கிய சக்கரத்தை தரித்த நீ, அப்படிக் காரியம் செய்யாமல் மலையெடுப்பது, ஏறடர்ப்பது ஆகிய காரியங்களைச் செய்தது யாருக்காக?'' என்கிறார்.

வ்யா:—(உரவுடைய நீராழியுட் கிடந்து) பலத்தையுடைய நீரைக்கொண்ட திருப்பாற்கடலிலே கண்வளர்ந்து. 'உரகம்' என்பது 'உரவு' என்று கிடக்கிறதாய், ஆதிசேஷனையுடைய திருப்பாற்கடலிலே என்கிறதாகவுமாம். (நேராம் நிசாசரர்மேல்) போர்

மது₄கைட₂ப₄ர்கள்மேலே அவர்கள் பொடிபடும்படி மிடுக்கால் பெரிய திருவாழியை எடுத்துக்கொண்ட உபகாரகனே! இப்படிக் கருதுமிடம் பொருது கைநிற்கவல்ல சக்ரமுண்டாயிருக்க, அத்தைவிட்டு ஒருவரால் சலிப்பிக்கவொண்ணாத மலை குடையாகவும் திருத்தோள் அதற்குக் காம்பாகவும் பசுத்திரள்களை ரக்ஷித்து, நப்பின்னைப்பிராட்டியோட்டை ஸம்ச்லேஷத்துக்கு ப்ரதிப₃ந்த₄கமாக இடையர் முன்னிட்ட திரண்ட ருஷப₄ங்கள் ஏழையும் முடித்த ப்ரகாரம் எங்ஙனே?

புரிய நேர்பட்ட ராக்ஷஸத்தன்மையுடைய மதுகைடபர்கள் மேல். (பேராழிகொண்ட பிரான்) அவர்கள் பொடியாகும்படி வலிமிக்க ஸுதர்சனத்தை எடுத்துக்கொண்ட உபகாரகனே! (பிரான்) தனக்கும் தன் விபூதிக்கும் வந்த ஆபத்தைப்போக்கி ரக்ஷித்த உபகாரகனே! (வரை குடை தோள் காம்பாக ஆநிரை காத்தவாறு என்னே) ''கருதுமிடம் பொருது கைந்நின்ற சக்கரத்தன்'' [திருவாய் 10-6-8] என்கிறபடியே எம்பெருமான் நினைத்த விடத்திற்சென்று போரிட்டுத் திரும்பவும் திருக்கைத்தலத்தில் சேரவல்ல திருவாழியை உடையவனுயிருந்துவைத்தும், அத்திருவாழியாலே இந்திரனை அழித்துக் காரியங்கொள்ளாமல், இந்திரன் பொழிந்த கல்மழையைத் தடுக்க ஒருவராலும் அசைக்கமுடியாத ஒரு மலையைக் குடையாகவும், தன் திருக்கைகளை அக்குடைக்குக் காம்பாகவும் கொண்டு தன் உடம்புநோவக் காரியம்செய்து பசுக்கூட்டங்களை ரக்ஷித்தது எதற்காக? (ஆயர் ஆநிரை காத்தவாறு என்னே) ரக்ஷகர்களான ஆயர்களோடு, அவர்களாலே ரக்ஷிக்கப் படவேண்டிய ஆநிரைகளோடு வாசியறத் தானே காத்தது எதற்காக? தன் அடியார்களைத் தானே ரக்ஷிக்கவேணும் என்னும் உன் அபிமானமன்றோ காரணம். (நிரை விடை ஏழ் செற்றவாறு என்னே) நப்பின்னைப்பிராட்டியை அணைப்பதற்குத் தடையாயிருந்த ஒன்று திரண்ட ஏழு எருதுகளையும் அடக்கியழித்தபடிதான் எதற்காக. தன் அடிச்சியான அப்பிராட்டியை ரக்ஷிக்கைக்கன்றோ? (ஆயர் நிரை விடை ஏழு) என்றும் கூட்டலாம். நப்பின்னைப்பிராட்டியை அடைவதற்குத் தடையாக ஆயர்களால் வைக்கப்பட்டிருந்த ஏழு எருதுக்கூட்டம் என்றபடி. நிரை விடை–திரண்டுவந்த எருதுகள்; பருத்திருந்த எருதுகள் என்றுமாம். (ஆநிரைகாத்து விடையேழ் செற்றவாறு என்னே) நப்பின்னைப்பிராட்டிக்குச் செய்த செயலோடு

இத்தால் ஆஶ்ரிதவிரோதி₄யுண்டானாலும் உன் ஸங்கல்பத்தாலன்றிக்கே உடம்புநோவக் கார்யம்செய்யும் ஸ்வபா₄வனன்றோ நீ என்றபடி.

84. பிரானுன் பெருமை பிறரா ரறிவார்
உரா யுலகளந்த நான்று—வராகத்
தெயிற்றளவு போதாவா றென்கொலோ எந்தை
அடிக்களவு போந்த படி.

பதவுரை:—**பிரான்**—*எம்பெருமானே!* **உராய்**—*ஆயாஸமில்லாமல்,* **உலகு அளந்த நான்று**—*(நீ) திருவுலகளந்தருளிய போது,* **எந்தை**—*என் ஸ்வாமியான உன்னுடைய,* **அடிக்கு**—*திருவடிக்கு,* **அளவு போந்த**—*அளப்பதற்குச் சரியாயிருந்த,* **படி**—*பூமியானது.* **வராகத்து**—*வராஹரூபியான உன்னுடைய,* **எயிறு அளவு**—*தந்தத்தின் ஒரு பாகத்தளவும்,* **போதா ஆறு**—*போதாமல் இருந்த விதம்,* **என் கொல்**—*எப்படி?* **உன் பெருமை**—*உன்னுடைய மேன்மையை,* **பிறர் ஆர் அறிவர்**—*(உன்னைத் தவிர) வேறு யாரால் அறியமுடியும்?*

அவ:—*உன்னுடைய ரக்ஷ்யத்தளவல்லாத ரக்ஷகத்வப் பாரிப்பு ஒருவரால் பரிச்சேதிக்கலாயிருந்ததோ? என்கிறார்.*

உரை:—*உபகாரகனே! எங்குமொக்க ஸஞ்சரித்துக் கொண்டு நீலோகத்தை அளந்துகொண்டவன்று என் ஸ்வாமி*

ஆயர்களுக்குச் செய்த செயலோடு வாசியற எல்லாம் அடியார்க்கு விரோதம் வந்தபோது ஸங்கல்பத்தாலோ, ஆயுதத்தாலோ, காரியம் செய்யாமல் நீ உடம்புநோவக் காரியம் செய்வாய் என்பதை விளக்குகின்றனவன்றோ.

அவதாரிகை:—ரக்ஷிக்கப்படும் பொருள்களைக்காட்டிலும், 'ரக்ஷிக்கவேணும்' என்னும் உன் மநோரதம் மிகவிஞ்சியுள்ளது. இந்த ரக்ஷணமநோரதத்தை ஒருவரால் அளவிடமுடியுமோ? என்கிறார்.

வ்யா:—(பிரான்) உபகாரகனே! நீ செய்த உபகாரங்களை யாரால் அளவிடமுடியும்? அவற்றில் ஒன்றிரண்டை சொல்லிக்காட்டலாகாதோ? என்ன,-(உராய் உலகளந்த நான்று) எல்லாவிடத்தி

யான உன்னுடைய திருவடிகளுக்கு அளவுபோந்த பூ₄மி யானது வராஹரூபியான உன்னுடைய திருவெயிற்றில் ஏக தேசத்தளவும்போதாததாயிருக்கிற ப்ரகாரம் எங்ஙனேயோ?

லும் உலாவிக்கொண்டு உலகையளந்தவன்று. "ரலயோரபே₄த₃:" ['ர' 'ல' என்னும் எழுத்துக்களுள் பேதமில்லை] என்கிற நியாயத்தின்படி 'உராய்' என்றது 'உலாய்' என்றாகி உலாவிக்கொண்டு என்று பொருளாகிறது; கீழும் மேலும் ஸஞ்சரித்துக்கொண்டு என்றபடி. 'அநாயாஸமாக உலாவிக்கொண்டு' என்று பட்டர் நிர்வஹிப்பராம். அன்றிக்கே, 'உராய்' என்று உரசிக்கொள்வதைச் சொல்லுகிறதாய், வஸிஷ்டசண்டாள விபாகமற அனைவரையும் தீண்டிக்கொண்டு என்கிறதாகவுமாம். நீர்மை, வாத்ஸல்யம் முதலான குணங்கள் இச்செயலில் பிரகாசிக்கின்றன. (எந்தை உலகளந்த நான்று) உலகைத் திருவடியாலே தடவிக்கொடுத்தது தன்னைத் திருத்துவதற்காக என்றிருக்கிறார். (எந்தை அடிக்களவு போந்த படி) என் ஸ்வாமியான உன்னுடைய திருவடிகளால் அளக்கத்தக்கதாயிருந்த இவ்வுலகம். (வராகத்து எயிற்றளவு போதாவாறு என்கொலோ) திரிவிக்கிரமாவதாரகாலத்தில் உன் அடியளவு இருந்த பூமியை ரக்ஷிக்க நீ வராஹாவதாரம் எடுத்தபோது அது உன் தந்தத்தின் நுனியளவும் இல்லாமலிருந்தது எப்படி? "கு₂ரமத்₄யக₃தோ யஸ்ய மேரு: கணகணாயதே" [எந்த வராஹத்தின் குளம்பின் நடுவிலிருந்த மேருமலை ஒரு சிறு துகளாயிற்றோ] என்று ரிஷிகளும், "புள்ளி நிலனும்" [பரிபாடல் 2-34] என்று பண்டைத் தமிழரும் வராஹத்திருவுருவில் பூமியானது ஒரு புள்ளியாய் ஒட்டிக்கொண்டிருந்தது என்றனரன்றோ. (என்கொலோ) இதற்குக் காரணம் என்ன? என்று எம்பெருமானையே கேட்கிறார். ஆராயப்புக்கால், காரணம் பின்வருமாறு தேறும். திரிவிக்கிரமாவதார காலத்தில் பூமிக்கு ஆபத்து ஏற்படவில்லை; இந்திரனிடமிருந்து மஹாபலி அதை அபஹரித்துக்கொண்ட இத்தனையே ஏற்பட்டிருந்தது. வராஹாவதாரகாலத்தில் இரணியாட்சன் பூமியைக் கடலிலேயே ஒளித்துவிட்டானாகையாலே, அதன் ஸ்வரூபத்திற்கே ஆபத்துவரவிருந்தது. அதனால் திரிவிக்கிரமாவதார காலத்திற்காட்டிலும், வராஹாவதாரகாலத்தில் ரக்ஷணமநோரதம் விஞ்சி நின்று ரக்ஷ்யப்பொருளான பூமியின் அளவல்லாததாயிற்று. அதனால் மிகப் பெரிய வடிவையெடுத்துக்கொண்ட வராஹப்பெருமானின் எயிற்றளவுக்கும் போதவில்லை இந்த பூமி. இத்தால், ரக்ஷ்யத்தினளவல்ல

ஆனபின்பு, ஏவம்வித₄னான உன்னுடைய பெருமையை ஸர்வஜ்ஞனான நீ அறிவுதியோ அறியாயோ என்று ஸந்தேஹிக்குமத்தனைபோக்கி வேறு சிலர் ஆர்தான் அறிவார்? ஊராய் உலகளந்த—உலாவிக்கொண்டு உலகளந்தவென்றபடி. **"रलयोरभेदः"** *(ரலயோரபே₄த₃:) என்னக்கடவதிறே. அன்றிக்கே, "உரோசிக்கொண்டு உலகளந்த" என்றாக்கி, "எல்லாரோடும் தீண்டிக்கொண்டு" என்றுமாம்.*

85. படிகண் டறிதியே பாம்பணையினான் புட்
கொடிகண் டறிதியே கூறாய்—வடிவில்
பொறியைந்து முள்ளடக்கிப் போதொடு நீரேந்தி
நெறிநின்ற நெஞ்சமே நீ.

பதவுரை:—**வடிவில்**-*உருவற்றவையான*, **பொறி ஐந்தும்**-*பஞ்சேந்திரியங்களையும்*, **உள் அடக்கி**-*சரீரத்தினுள் அடக்கி*, **போதொடு நீர் ஏந்தி**—*புஷ்பங்களுடன் தீர்த்தத்தையும் கொண்டு*, **நெறி நின்ற**—*(எம்பெருமானை அடைகையாகிற) நல்வழியிலே நிலையாய் நின்ற*, **நெஞ்சமே**-*மனமே!* **நீ**—*நீ*. **பாம்பு அணையான்** — *திருவநந்தாழ்வானைப் படுக்கையாகக் கொண்ட பெருமானுடைய*, **படி**—*திருமேனியை*, **கண்டு அறிதியே**—*பார்த்து அநுபவித்திருக்கிறாயோ?* **புள்கொடி**—*(அவனுடைய) கருடத்வஜத்தைத்தான்*, **கண்டு அறிதியே**—*ஸேவித்து அறிவாயோ?* **கூறாய்**-*(நீயே) சொல்லு*.

ரக்ஷகனின் பாரிப்பு என்னும் சாஸ்த்ரார்த்தம் உணர்த்தப்படுகிறது. (உன் பெருமை பிறர் ஆர் அறிவார்) "ஸோ அங்க₃ வேத₃ யதி₃ வா ந வேத₃" [அந்தப் பரமபுருஷன் தன் பெருமையைத் தானே அறிவானோ மாட்டானோ] என்று வேதமும் உன் பெருமையை ஸர்வஜ்ஞனான நீயே அறிவாயோ மாட்டாயோ என்று ஸந்தேஹித்தது. இப்படி ஸந்தேஹிப்பதற்கும் உன் விஷயத்தில் இடமுண்டேயொழிய, பிறரொருவர் விஷயத்தில் இப்படி ஐயமுறவும் இடமில்லையே. உன்னைத்தவிர்ந்த எவரும் உன் பெருமையை அறியமாட்டார்கள் என்று அறுதியிட்டுச் சொல்லலாமே. (பிரான்! உன் பெருமை பிறர் ஆர் அறிவார்) ரக்ஷகனே! ரக்ஷ்யத்தின் அளவல்லாத உன் ரக்ஷணப் பாரிப்பை உன்னைத்தவிர வேறு யாரால் அறியமுடியும்?

அவ:-இந்த்ரியஜயம் பண்ணி அவனை ஆச்ரயிக்கிற நீதான் அவன் படிகளிலே ஒன்றைக்கண்டு அனுபவிக்கப் பெற்ருயோ? பெற்ருயாகில், நெஞ்சே! சொல்லிக்காண்! என்கிருர்.

உரை:—நெஞ்சே! யந்த்ரகல்பமான இந்த்ரியங்கள் ஐந்தையும் பாஹ்யவிஷயங்களில் போகாதபடி ஶரீரத்துக்குள்ளே நியமித்து ஆச்ரயணோபகரணங்களான புஷ்பங்களோடேகூட ஜலத்தை த$_4$ரித்துக்கொண்டு ஸமாச்ரயணமார்க்க$_3$த்திலே நிலைநின்று ஆச்ரயித்தாயாயிருக்கிற நீ

அவதாரிகை:-"பிறர் ஆரறிவார்?" என்பானேன்? நானறிந்தேனே! என்று ஆழ்வாருடைய நெஞ்சு சொல்ல, "நெஞ்சே! இந்திரியஜயம்பண்ணி அவனை அறிய முயலும் நிலையிலிருக்கிருயே யொழிய நீயும் அவனை அறிந்தாயல்லை; அறிந்தாயானுல் அவன் படிகளிலே ஒன்றைக்கண்டு அனுபவித்தாயோ? அனுபவித்தாயானுல் அதைச் சொல்லு" என்கிருர்.

வ்யா:—(நெஞ்சமே) எம்பெருமானுடைய பெருமையை அறிந்துவிட்டோம் என்று இறுமாந்திருக்கும் நெஞ்சே! (பொறி ஐந்தும்) எலிப்பொறிபோலே நம்மை ஸம்ஸாரத்தில் சிறைப்படுத்துவதற்காக ஏற்பட்ட மெய்வாய் கண் மூக்கு செவி என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தையும். (வடிவில் உள்ளடக்கி) வெளிவிஷயங்களில் திரியாமல் சரீரத்தினுள் ஆத்மபரமாத்மவிஷயமாகச் செல்லும்படி அடக்கி. 'வடிவில் பொறியைந்தும்' என்றும் கூட்டலாம். உருவமில்லாத ஐந்து இந்திரியங்களும் என்றபடி. இத்தால், வெளியில்காணும், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தினுள் இந்திரியங்களுக்குப் புலப்படாமல் (அதீந்திரியமாய்) இருப்பவை இந்திரியங்கள் என்று காட்டுகிருர். பொறிவைப்பார் கண்ணுக்குத்தெரியாமல் வைப்பதுபோல் இப்பொறிகளையும் கண்ணுக்குப் புலப்படாதபடி வைத்திருக்கிருன் ஸர்வேச்வரன் என்கை. அன்றிக்கே, 'வடிவு' என்று ஸ்வபாவத்தைச் சொல்லுவதாய், ஒரு ஸ்வபாவத்திலும் நிலை நில்லாத இந்திரியங்கள் என்றுமாம். "சஞ்சலம் ஹி மந:" [கீதை] "நின்றவா நில்லா நெஞ்சு" [பெரியதிரு-1] "கண்டவா திரிந்த தொண்டனேன்" [பெரியதிரு 1-6-3] என்கிறபடியே நிலைநில்லாத மனம்போனபடி செல்லும் இந்திரியங்கள் என்கை. (போதொடு நீர் ஏந்தி நெறி நின்ற நீ) ஆச்ரயிப்பதற்குறுப்பாகப் புஷ்பங்களையும் நீரையும் ஏந்தி ஆச்ரயணமார்க்கத்திலே நிலைநின்றிருக்கும் நீ. (நெறிநின்ற நீ) நீயும் அவனை அறிய முற்பட்டிருக்கிருயேயொழிய அறிந்துவிடவில்லையே என்கை.

திருவனந்தாழ்வானைப் படுக்கையாக உடையனான ஸர்வேச்வரனுடைய தூரத்திலே ஆச்ரிதர்கண்டு வாழும்படி எடுத்துக் கொண்டு வருகிற பெரியதிருவடியாகிற த்வஜத்தைக்கண்டு அநுப₄வித்தறிவுதியோ? அவன் திருமேனியைக்கண்டு அநுப₄வித்து அறிவுதியோ? அவன் திருவனந்தாழ்வானுக்கு உடம்புகொடுக்கும்படிதான் கண்டறிவுதியோ? இவற்றிலே இன்னது கண்டேன் என்று ஒன்றைச் சொல்லிக்காணாய். வடிவில்லாத பொறியைந்தும் என்றுமாம்; ஒருவழிப்பட்டிருக்கையன்றிக்கே பல அபி₄ஸந்தி₄களை உடைத்தாயிருக்கும் என்கை. வடிவில்லாமையாவது தெரியாதபடியிருக்கை என்றுமாம். கண்டு அநுப₄விக்கப்பெறுவதற்கு முன்னே ஜ்ஞாநலாப₄மாத்ரங்கொண்டு த்ருப்தி பிறந்திருக்கவொண்ணாதுகாண் என்றபடி.

86. நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்
பாயும் பனிமறை(று)த்த பண்பாளா—வாசல்
கடைகழியா வுள்புகாக் காமர்பூங் கோவல்
இடைகழியே பற்றி யினி.

(பாம்பணையினான் புட்கொடிகண்டு அறிதியே) திருவனந்தாழ்வானைப் படுக்கையாக உடையனான ஸர்வேச்வரனுடைய கருடக் கொடியைப் பார்த்து அறிந்திருக்கிறாயோ? (புட்கொடி கண்டு) வெகு தூரத்திலேயே அடியார் கண்டு வாழும்படி ரதத்தின்மீது உயர்த்திக்கொண்டு வருகிற கருடக்கொடியைப்பார்த்து அநுபவித்து அறிந்திருக்கிறாயோ? (படிகண்டு அறிதியே) அநந்தமான அவன் திருமேனிகளிலே ஒன்றைக்கண்டு அறிந்திருக்கிறாயோ? (பாம்பணையினான் படிகண்டு அறிதியே) அவன் திருவனந்தாழ்வான்மேலே சாய்ந்திருக்கும் அத்திருமேனியைப் பார்த்து அனுபவித்திருக்கிறாயோ? (கூறாய்) இவற்றில் ஒன்றையேனும் அனுபவித்திருக்கிறாயா என்பதை நீயே கூறாய். (கண்டு அறிதியே கூறாய்) "சாஸ்த்ராத்₃வேத்₃மி" என்கிறபடியே சாஸ்திரஜ்ஞானத்தாலே அறிந்திருக்கிறாயேயொழிய, நேரே இவற்றில் ஒன்றைக்கண்டு அறிந்தாயல்லையே! அப்படியிருக்கும்போது, 'நான் கண்டு அறிந்தேன்' என்று நீ எப்படி அறியிருக்கமுடியும்? என்கிறார்.

பதவுரை:—**குன்று எடுத்து**-கோவர்த்தனகிரியைக்(குடையாகத்)தூக்கி, **பாயும் பனி மறைத்த**—பொழிகின்ற மழையைத் தடுத்த, **பண்பாளா**—நீர்மையை உடையவனே! **வாசல் கடை**—திருவாசலுக்கு வெளிப்புறம், **கழியா**—போகாமலும், **உள் புகா**-உள்ளே நுழையாமலும், **காமர் பூம் கோவல்**-செயற்கை யழகும், இயற்கையழகும் நிரம்பிய திருக்கோவலூரில், **இடை கழியே**- (வாசலுக்கும் உட்புறத்திற்கும் நடுவிலுள்ள ப்ரதேசமாகிற)இடைகழியையே, **பற்றி**-இடமாகக்கொண்டு, **நீயும் திருமகளும்**—நீயும் பெரியபிராட்டியுமாய், **இனி**—இப்போது, **நின்றாயால்**—நின்றருளினாயன்றோ.

அவ:—இப்படி இவர் தம் திருவுள்ளத்தைக் குறித்து அவனை ஸாக்ஷாத்கரித்து அநுபவிக்கப்பெற்றிலேயிறே என்று சொன்னது பொறுக்கமாட்டாமல் இவர் இருந்தவிடத்திலே பிராட்டியும் தானுமாக வந்து நெருக்க, அத்தைக் கண்டு அநுபவிக்கிறார்.

உரை:-கண்டதொரு மலையைப் பிடுங்கியெடுத்து மேலே வந்து சொரிகிற மழையைப் பரிஹரித்த நீர்மையையுடை

அவதாரிகை:-இப்படி இவர் தம் நெஞ்சைக்குறித்து, 'அவனை நேரேகண்டு அநுபவிக்கப் பெற்றிலேயே' என்று கூறியதைப் பொறுக்கமாட்டாமல், இவர் இருந்தவிடத்திலே பிராட்டியும் தானுமாய் வந்து நெருக்க, அதை நேரே கண்டு அனுபவிக்கிறார். முதலாழ்வார்கள் மூவரும், திருக்கோவலூரிலே ஒருநாளிரவு ஒரு ரிஷியின் வீட்டில் ஓரிடைகழியிலே சேர்ந்திருக்க, இவர்களுடைய திருமேனி ஸம்பந்தம் பெற ஆசைப்பட்டு எம்பெருமான் வந்து நெருக்கினான் என்று ஓரைதிஹ்யம் உண்டு. அதை இப்பாசுரத்தில் அநுவதிக்கிறாராகவுமாம்.

வ்யா:-(குன்றெடுத்து)இந்திரன் கல்மழையைப் பெய்கையாலே கைக்கெட்டியதொரு கல்லையெடுத்துக் குடையாகப்பிடித்து ரக்ஷித்தான். "கல்லெடுத்துக் கல்மாரிகாத்தாய்" [திருநெடு-13] என்றாற் போலே. (பாயும் பனிமறுத்த பண்பாளா) ஆயர்மேலே சொரிகின்ற பனிக்கட்டி மழையைத்தடுத்த குணமுடையவனே! (பண்பாளா) அன்று தன்னை அண்டியவர்களுடைய உடம்பு நோவாதபடி மலையை

யவனே! திருவாசலுக்குப் புறம்புபோகமாட்டாதே, உள்ளுப் புகமாட்டாதே ஸ்ப்ருஹணீயமாய், அழகியதான திருக்கோவலூர் இடைகழியைப்பற்றி ஆஸ்ரிதரக்ஷணத்தில் முற்பாடனை நீயும், உன்னிலும் முற்பட்ட திருமகளாருமாக எங்க

யெடுத்துக் கல்மழையினின்றும் காப்பாற்றிய அந்த நீர்மைபோலே யிராநின்றது, இப்போது எங்களோடு நெருக்குண்ணவேண்டும் என்று விரும்பி எங்களைநெருக்கிநிற்கும் இவ்விருப்பு. அன்று அங்கு அவர்கள் ஆபத்தைத்தீர்த்தான்; இன்று இங்கு எங்களோடு நெருக்குண்ணுவிடில் உயிர்தரிக்கமுடியாமையாலே தன் ஆபத்துத் தீர்ந்தான் என்றுமாம். (வாசல்கடை கழியா உள்புகா) இடைகழியிலிருந்து வெளியே செல்லும் வாசல் வழியாகவும் செல்லமாட்டாமல், வீட்டினுள்ளும் புகமாட்டாமல் நிற்கிறுன். ஏனெனில்: வெளியில் வஸிப்பவர்கள் மற்றபயன்களைப் பற்றிநிற்கும் ஸம்ஸாரிகள்; உள்ளிருப்பவனே உபாயாந்தரங்களைப் பற்றிநிற்கும் ரிஷி. ஆகையால் இவ்விரண்டிடங்களிலும் நுழைவது எம்பெருமானுக்குக் காட்டுத் தீயினுள் நுழைவதுபோலேயிருந்தது. ஆகையால் தன்னையே பயனாகவும், உபாயமாகவும் பற்றிநிற்கும் ஆழ்வார்களுடைய திருமேனி ஸம்பந்தத்தையே விரும்பிநின்றுன். (காமர் பூங்கோவல் இடைகழியே பற்றி இனி நின்றுயால்) காமவிஷயமான–விரும்பத்தக்க அழகிய திருக்கோவலூரில் இடைகழியையே பற்றி 'தேஹளீசன்' [இடைகழிப்பெருமான்]என்று அனைவரும் அழைக்கும்படி வருங்காலமெல்லாம் நிற்கப்போகிறுய். (ஆல்)இது என்ன ஆச்சரியம்! (வாசல் கடை கழியா உட்புகா) "காமுகரானவர்கள் உகந்த விஷயத்தினுடைய கண்வட்டம் விட்டுப் போகமாட்டாதாப்போலே" என்பர் பெரியவாச்சான்பிள்ளை. (நீயும் திருமகளும் நின்றுயால்) அடியாரை ரக்ஷிப்பதில் முற்பட்ட நீயும், உன்னிலும் முற்பட்ட பெரியபிராட்டியாருமன்றே நின்றீர்கள். இரண்டிடத்திலும் உம்மை (சகாரம்) ஆச்ரிதரக்ஷணப்ராதா₄ன்யத்தைக் காட்டுகிறது. (நீயும் திருமகளும்) "தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" [பெரியாழ் திரு 4-9-2] என்னும் நீயும், அவனே அவனடியார்களோ குற்றமுடையாரிடத்தில் கோபங் கொண்டால், "கிமேதந்நிர்த்தே₃ாஷ: க இஹ ஜக₃தி" [ஸ்ரீகுண] "ந கச்சிந் நாபராத்₄யதி" [ரா-யு 116-44] என்று இவ்வுலகில் குற்றம் செய்யாதவன் ஒருவனுமில்லையே என்று கூறிக்கோபத்தை ஆற்றும் திருமகளும். (நீயும் திருமகளும்) "ப₄க₃வதஸ் த்வராயை நம:',

ளோடே கலக்கப்பெற்ற உகப்பின் க$_4$னத்தாலே பரந்த கால் பாவி இப்போது த$_4$ரித்துநின்றுயே! என்று அநுப$_4$விக்கிருர்.

87. இனியார் புகுவா ரெழுநரக வாசல்
முனியாது மூரித்தாள் கோமின்—கனிசாயக்
கன்றெறிந்த தோளான் கனைகழலே காண்பதற்கு
நன்கறிந்த நாவலஞ்சூழ் நாடு.

பதவுரை—**கனி**—விளாம்பழவுருவுடனிருந்த அஸுரன், **சாய**—விழுந்து அழியும்படி, **கன்று**—கன்றின் உருவுடன் வந்த அஸுரனை, **எறிந்த**-வீசின, **தோளான்**—திருத்தோள்களை உடையவனுன எம்பெருமானுடைய, **கனை கழலே**—ஆபரண ஒலியுடன் கூடிய திருவடிகளையே, **காண்பதற்கு** — கண்டு கொண்டிருப்பதற்கு (வழியை). **அம் நாவல் சூழ் நாடு**— அழகியதும் ஜம்பூத்வீபமென்று பெயர் பெற்றதுமான பரந்த நாட்டிலுள்ள பிராணிகள், **நன்கு அறிந்த**-நன்ருக அறிந்தன; **இனி**—இனிமேல், **எழு நரக வாசல்**—ஏழுவிதமான நரகங்

[ர-ஸ்த 2-57] பகவானுடைய வேகத்துக்கு நமஸ்காரம்] என்னும்படி அடியாரை ரக்ஷிக்க த்வரிக்கும் நீயும், "அக்$_3$ரதஸ் தே க$_3$மிஷ்யாமி" [ரா-அ 27-6] [உமக்குமுன்னுல் நான் காட்டுக்குச் செல்லுவேன்] என்று உமக்கு முற்பட்டுநிற்கும் அவளும். (நீயும் திருமகளும்) "ந ஜீவேயம் க்ஷணமபி" [ரா-ஸு 66-10] [பிராட்டியைப் பிரிந்து கண நேரமும் வாழமாட்டேன்] என்னும் நீயும், "அகலகில்லேன் இறையும்" [திருவாய் 6-10-10] என்னும் அவளும். (நீயும் திருமகளும்) "அஹமர்த்த$_3$ம் விநாஹந்தா நிராத$_4$ாரா ந ஸித்$_3$த்$_4$யதி அஹந்தயா விநாஹம் ஹி நிருபாக்$_2$யோ ந ஸித்$_3$த்$_4$யதி" [ல-த 2-18] [த$_4$ர்மியை விட்டுப் பிரிந்து ஆத$_4$ாரமற்ற த$_4$ர்மம் ஸித்திக்காது; (ஸ்வரூபநிரூபக) த$_4$ர்மத்தை விட்டுப்பிரிந்த நிரூபகமற்ற த$_4$ர்மியும் ஸித்திக்காது] என்கிறபடியே அவளுக்கு ஆதாரமான நீயும், உனக்கு ஸ்வரூபநிரூபக பூதையான அவளும். (நின்ருயால்) எங்களோடே கலக்கப்பெற்ற உகப்பின் மிகுதியாலே எவராலும் கிளப்பமுடியாதபடி ஸ்த$_4$ாவரப்ரதிஷ்டையாக ஊன்றிநின்ருயன்றே! (இனி நின்ருயால்) எங்களடிச்சுவட்டை மோந்துகொண்டு இனிவரும் காலமெல்லாம் நிற்கப் போகிருயன்றே. இப்போது நின்ருயன்றே என்கிறதாகவுமாம்.

களின் வாயில்களிலும், **யார் புகுவார்**—நுழைவாரார்? (யம கிங்கரர்களே!) **முனியாது**— (என்னைக்) கோபிக்காமல், **மூரி தாள் கோமின்**—(நரகவாசல்களுக்கு) வலிமையுள்ள தாழ்ப் பாளைப் போட்டு சாத்துங்கள்.

அவ:-இப்படி ஸர்வேச்வரன் வந்து ஸந்நிஹிதனானபின்பு நரகத்துக்கு ஆள் கிடையாது; அவ்வவ்விடங்களுக்குக்கடவார் வாசல்களை அடைத்து ஓடிப்போக அமையும் என்கிறார்.

உரை:-கன்றும் விளவாயும் இரண்டு அஸுரர் தன்னை நலிகைக்கு இடம் பார்த்து நிற்க, அத்தையறிந்து முள்ளிட்டு முள்ளைக் களைவாரைப்போலே, அஸுராவிஷ்டமான விளவின் பழங்கள் உதிர்ந்து விழும்படியாக அஸுராவிஷ்டமான கன்றை எறிதடியாக எடுத்தெறிந்து இரண்டையும் முடித்துப் பொகட்ட திருத்தோள்களை உடையனான ஸர்வேச்வரனுடைய ஆபரணத்வநியை உடைத்தான திருவடிகளைக்கண்டு அநுப$_4$விக்கைக்கு ஸாத$_4$னம் நாவலோடே கூடிப் பரந்து

அவதாரிகை:—இப்படி ஸர்வேச்வரன் இவ்வுலகில் நித்ய வாஸம் செய்ய வந்தபின்பு, நரகம் செல்ல ஆளில்லை; நரகங்களை நிர்வஹிப்பவர்கள் நரகவாசல்களை அடைத்துவிட்டு ஓடிப்போவது நன்று என்கிறார்.

வ்யா:—(கனிசாயக் கன்றெறிந்த தோளான்) கன்றாய் ஓர் அசுரனும், விளவின்கனியாய் ஓரசுரனும் கண்ணனைக் கொல்ல வெண்ணி நிற்க, அவ்வெண்ணத்தையறிந்து, முள்ளைக்கொண்டு முள்ளைக் களைவாரைப்போலே, அசுரன் புகுந்துநிற்கும் விளாவின் பழங்கள் உதிர்ந்து விழும்படியாக அசுரன் புகுந்துநின்ற கன்றை எறிதடியாக எடுத்தெறிந்து இரண்டு அசுரர்களையும் அழித்தருளிய திருத்தோள்களையுடைய ஸர்வேச்வரனுடைய. (கனை கழலே) விளவாகிற இலக்கைக்குறித்து நடக்கிறபோது ஒலிக்கும் வீரக்கழலையுடைய திருவடிகளையே. (காண்பதற்கு) என்னைப்போலே நேரே கண்டு அனுபவிப்பதற்கு ஸாதனம். (நாவல் அம் சூழ் நாடு) அம் நாவல் சூழ் நாடு. அழகிய நாவல் மரத்தையுடையதாகையாலே ஜம்பூத்வீபம் எனப்படுவதாய் பரந்து நிற்கிற இந்நாட்டிலுள்ள

நிற்கிற நாட்டிலுள்ள ப்ராணிகளானவை அவன் உகந்து வர்த்திக்கிற திருக்கோவலூருக்குத் தோள்தீண்டியான ஸ்தலத்தில் வாஸமேயென்று நன்றாக அறிந்தன. இப்படியானபின்பு, ஸப்தவித₄மான நரகத்வாரங்களில் இனிப்போய் ப்ரவேசிக்கக்கடவார் ஆர்? 'எங்கள் பதத்துக்கு அழிவாம்படி இப்படி வார்த்தை சொல்லுவதே!' என்று பொடியாதே, இனியொருகாலும் திறக்கவொண்ணாதபடி பெரியதாளைப் பூட்டுங்கோள். ஆழ்வார்களும், அருளிச்செயலும் நடையாடுமிடமே நாடு, அல்லாதவிடம் காடு என்று கருத்து. எழு நரகம்—எழுகிற ஸம்ஸாரிகளடங்கலும் சென்று புகுகிற— நரகத்வாரம் என்றுமாம்; கிளர்த்தியை உடைத்தான நரகம் என்னவுமாம்.

எல்லா உயிர்களும். (நாடு) ஆழ்வார்களும், அருளிச்செயல்களும் உகந்தருளிய நிலங்களும் நடையாடுமிடமே நாடு; மற்றவிடங்கள் காடு என்று கருத்து. (காண்பதற்கு நன்கு அறிந்த) அவன் உகந்து வாழும் திருக்கோவலூரை ஒட்டியிருக்கும் தேசங்களில் வஸிப்பதே அவனைக்காண உபாயம் என்று நன்கு அறிந்தன. (காண்பதற்கு நன்கறிந்த) அவனைக் காண்பதற்கு நன்றாக அறிந்துவிட்டன என்றுமாம். (நன்கு அறிந்த) கொடுநரகமான ஸம்ஸாரமேயானாலும், அவன் வஸிக்கும் தேசமாகையாலே, இதினின்றும் போகோம், அச்சுவை பெறினும் வேண்டோம் என்னும்படியாக அறிந்தன. (நன்கு அறிந்த) "உகந்தருளின தேசம் இங்கு உண்டாயிற்றே என்று அஸூயை பண்ணாதே பொறுத்திருக்கை" என்பர் பெரியவாச்சான்பிள்ளை. (இனி யார் புகுவார் எழுநரகவாசல்) இப்படியான பின்பு ஏழுவிதமான நரகவாசல்களிலே இனி யார் புகுவார்? (எழு நரகவாசல்) உடலினின்று எழுகிற ஸம்ஸாரிகள் அனைவரும் சென்று புகுகிற நரகவாசல் என்றுமாம். எப்போதும் ஜனங்கள் நிறைந்தேயிருக்கையாலே எழுச்சியை உடைய நரகவாசல் என்றுமாம். (முனியாது) 'எங்கள் பதத்துக்கு அழிவு ஏற்படும்படி இப்படி வார்த்தை சொல்லுவதே!' என்று எங்களைக் கோபிக்காமல். (மூரித்தாள் கோமின்) இனி ஒருபோதும் திறக்கமுடியாதபடி பெரிய தாளைப் போட்டு நரகவாசல்களைப் பூட்டுங்கள். இவ்வாழ்வாருடைய "பொலிக பொலிக" [திருவாய் 5-2] இருக்கிறபடி.

88. நாடிலும் நின்னடியே நாடுவன் நாடோறும்
பாடிலும் நின்புகழே பாடுவன்—சூடிலும்
பொன்னாழி யேந்தினான் பொன்னடியே சூடுவேற்கு
என்னாகி லென்னே யெனக்கு.

பதவுரை:—**நாடிலும்**— *(மனத்தாலே) நினைக்கும்போது,* **நின் அடியே**—*உன்னுடைய திருவடிகளையே,* **நாடுவன்**—*நினைப்பேன்;* **நாள் தோறும்**—*தினந்தோறும்,* **பாடிலும்**—*(வாயாலே) பாடும்போதும்,* **நின் புகழே பாடுவன்**—*உன்னுடைய கீர்த்தியையே பாடுவேன்;* **சூடிலும்**-*(எதையாவது) தலையில் அணிய நினைத்தாலும்,* **பொன் ஆழி ஏந்தினான்**—*அழகிய சக்கரத்தாழ்வானை தரித்தவனான உன்னுடைய,* **பொன் அடியே**—*அழகிய திருப்பாதங்களையே,* **சூடுவேற்கு**-*(தலையில்) தரிப்பவனான,* **எனக்கு**-*எனக்கு,* **என் ஆகில் என்**-*(எவருக்கு) என்ன ஆனால்தான் என்ன?*

அவ:-*இப்படி திருக்கோவலூரோடு தோள்தீண்டியான நாட்டைப் பற்றியிருந்து இவ்விஷயத்தைவிட்டுப் புறம்பே அந்யபரராய்த் திரியக் கண்டபடியாலே, வழிபறிக்கும் நிலத்திலே தம் கைப்பொருள்கொண்டு தப்பினார் உகக்குமாப் போலே, என்னுடைய கரணத்ரயத்தையும் கொண்டு நான் முன்னம் அங்கே ப்ரவணனாகப்பெற்றேன் என்று ஸ்வலாப$_4$த்தைப் பேசி இனியராகிறார்.*

உரை:—*நெஞ்சைக்கொண்டு தேடுமிடத்திலும், தேவரீருடைய திருவடிகளையே தேடாநிற்பன்; ஸர்வகாலத்திலும் ப்ரீதிபரவசனாய் ஸ்தோத்ரம் பண்ணுமிடத்திலும் தேவரீ*

அவ:—இப்படி திருக்கோவலூரோடு ஸம்பந்தமுள்ள தேசங்களிலே வாழ்ந்தும், பகவத்விஷயத்தை விட்டு வேறு விஷயங்களில் மண்டித்திரியும் ஸம்ஸாரிகளைக்கண்டு, வழிப்பறிசெய்யுமிடத்தில் தம் கைப்பொருள் களவுண்ணாமல் தப்பப்பெற்றார் உகப்பதுபோலே, 'என்னுடைய முக்கரணங்களாலும், நான் பகவத்விஷயத்திலே ஈடுபட்டேன்' என்று தன் பேற்றைப்பேசி உகக்கிறார்.

வ்யா:-(நாடிலும் நின்னடியே நாடுவன்) நெஞ்சைக்கொண்டு ஏதாவதொன்றைத் தேட எண்ணினாலும், உன் திருவடிகளையே தேடுவன். இத்தால் இவருடைய மனம் அவனையல்லதறியாதபடி சொல்

ருடைய கல்யாணகுணங்களையே வாய்விட்டுப்பாடாநிற்பன்; நான் என் தலையாலே ஸாதரமாக த₄ரிக்குமிடத்திலும் ஸ்ப்ருஹணீயமான திருவாழியை அழகுபெற த₄ரித்த ஸர்வாதி₄கனுன உன்னுடைய அழகிய திருவடிகளையே சிரோபூ₄ஷணமாக த₄ரிக்கக்கடவேனுய். இப்படி கரணத்ரயத்தாலுமுள்ள ப்ரயோஜனம் கைவள்ளப்பெற்ற எனக்கு ஏதானுல் நல்லது? நாட்டார் அறிந்து இந்த லாப₄த்தைப்பெறிலென்? இழக்கிலென்? எனக்கு ஏதாகில் நல்லது என்றபடி. அன்றிக்கே, இங்கேயிருக்கிலென்? அங்கே போகிலென்? ஏதாகுல் எனக்கு நல்லது என்றுமாம்

விற்று. (நாடோறும் பாடிலும் நின் புகழே பாடுவன்) எல்லாக் காலத்திலும் பாடினுலும் உன் கல்யாணகுணங்களையே வாய்விட்டுப் பாடுவேன். (நாடோறும் பாடிலும்) எல்லாக்காலத்திலும் பாடினுலும் ஓரல்பகாலத்திலும் க்ஷுத்ரவிஷயத்தைப் பாடமாட்டேன். இத்தால் இவருடைய வாக்கு அவனையல்லதறியாதபடி சொல்லிற்று. (சூடிலும்) என் தலையாலே ஏதேனுமொன்றைத் தரிக்க எண்ணினுலும். (பொன் ஆழி ஏந்தினுன் பொன் அடியே சூடுவேற்கு) பொன்போலே அனைவராலும் ஆசைப்படத்தக்க ஸுதர்சனத்தை பூவேந்தினுப்போலே அழகாக தரித்த ஸர்வேச்வரனுன உன்னுடைய அழகிய திருவடிகளையே தலைக்கலங்காரமாக தரிக்கின்றவனுன எனக்கு. இத்தால் இவருடைய காயம் அவனையல்லதறியாதபடி சொல்லிற்று. (எனக்கு) இப்படி மனோவாக்காயமாகிற முக்கரணங்களாலும் அவனையே பயனுகக்கொண்ட எனக்கு. (என்னுகில் என்) எது எப்படியானுல் என்ன? உலகத்திலுள்ளார் இதன் பெருமையை அறிந்து பகவத்விஷயத்தைப் பற்றினுல் எனக்கென்ன? பற்ருவிட்டால் எனக்கென்ன?

> **"ஆரானுமாதானும் செய்ய அகலிடத்தை**
> **ஆராய்ந்து அது திருத்தலாவதே—சீரார்**
> **மனத்தலைவன் துன்பத்தை மாற்றினேன் வானோர்**
> **இனத்தலைவன் கண்ணனுல் யான்"** *[பெரியதிருவ-25]*

என்ற நம்மாழ்வாரைப்போலே ஸம்ஸாரிகளை வெறுத்து ஸ்வலாபத்தைப் பேசித்தலைக்கட்டுகிருர். (என்னுகில் என்னே எனக்கு) முக்கரணமும் அவனையே அனுபவிக்கப்பெற்ற எனக்கு இவ்வுலகில் இருந்தால் என்ன? பரமபதம் போனுல் என்ன? இரண்டும் ஒன்றே என்கிருராகவுமாம்.

89. எனக்காவா ராரொருவரே எம்பெருமான்
தனக்காவான் தானே மற்றல்லால்—புனக்காயாம்
பூமேனி காணப் பொதியவிழும் பூவைப்பூ
மாமேனி காட்டும் வரம்.

பதவுரை— **புனம்** — *தனக்கு ஏற்ற நிலத்திலிருக்கும்,* **காயாம்பூ மேனி**-*காயாம்பூவின் நிறமும்,* **காண**-*காணக்காண,* **பொதி அவிழும்**—*மலராநிற்கும்,* **பூவைப் பூ (மேனி)**—*பூவைப் பூவின் நிறமும்,* **மா மேனி**—*(எம்பிரானுடைய) சிறந்த திரு மேனியை,* **வரம் காட்டும்**-*நன்றாகக் காட்டும்;* **எனக்கு**— *(இப்படிப்பட்ட பாக்யசாலியான) எனக்கு,* **ஆர் ஒருவரே ஆவார்**—*ஒப்பாயிருப்பவர் ஒருவராவது உளரோ?* **எம்பெருமான்**—*ஸர்வேச்வரனும்,* **தானே தனக்கு ஆவன் அல்லால்**— *தானே தனக்கு உபமானமாவானேயொழிய,* **மற்று**-*எனக்கு ஸமானமாவானோ?*

அவ:—*கீழ்ப்பிறந்த லாபம் திரியட்டும் பின்னுட்டுகிற படியைச் சொல்லுகிறார்.*

உரை:—*நிர்ஹேதுகமாக இப்பேற்றைப்பெற்று ஶேஷத்வமே வடிவாயிருக்கிற எனக்கு ஒப்பாகவல்லார் வேறொருவர்*

அவ:—கீழ்ப்பாட்டுக்களில் பிறந்த பகவதனுபவம் மறுபடியும் மேலிட்டுத் தன்பெருமையைப் பேசுகிறார். தற்பெருமை பேசலாமோ? எனில், பகவத்பாகவதஸம்பந்தமடியாக உண்டான பெருமையைப் பேசிக்கொள்வதில் தவறில்லை.

வ்யா:—(எனக்காவார் ஆரொருவரே)எனக்கு ஒப்பாவார் ஒருவர் உளரோ? ஒருவருமில்லை என்றபடி. கிம் க்ஷேபே. எனக்கு ஒப்பான ஒருவர் எவர்? என்று கேட்கிறாராகவுமாம். இதர சேஷத்வமே வடிவான ஸம்ஸாரிகள் பகவத்விஷயத்தில் பழக்கமேயில்லாதவர் களாகையாலே அவர்கள் பகவச்சேஷத்வமே வடிவான எனக்கு ஒப்பாகார் என்பதைச் சொல்லவும் வேண்டா. வருத்தப்பட்டு பகவதநுபவத்தைப்பெற்ற வியாஸாதிமஹர்ஷிகளும் "வரவாறென் றில்லையால்" என்றாற்போலே என்னிடம் ஒரு கைம்முதலுமில்லாம லிருக்க அவனுடைய நிர்ஹேதுககிருபையாலே அவனை அநுப

உண்டோ? நாட்டில் ஓரொப்பில்லாதவளவன்றிக்கே தான் தோன்றியான பேற்றையுடையனாய், ஶேஷத்வரஸத்துக்கு இட்டுப்பிறவாத ஸர்வேச்வரன் தானே தனக்கு ஒப்பாமித் தனையொழிய எனக்கு ஒப்பாகவல்லனோ? இந்த ஜ்ஞானலாப மாத்ரமேயாய் ஸாக்ஷாத்கரிக்கப்பெறாத குறை கிடக்கிறதே யென்று ஶங்கிக்க இடமறும்படி தன்னிலத்திலேநின்று செவ்விபெற்ற காயாம்பூவினுடைய நிறமும், காணக்காணக் கட்டு நெகிழ்ந்து வருகிற பூவைப்பூவினுடைய நிறமும் அவ

விக்கப்பெற்ற எனக்கு ஒப்பாகார்கள். மயர்வுக்கிடமில்லாத ஒளி மயமான அவ்வுலகிலிருந்து அவனை அநுபவிக்கப்பெற்ற நித்ய முக்தர்களும், அயர்வு மயர்வு இருள் துயக்கு மயக்கு மறப்பு முத லானவற்றையே இயற்கையாகக்கொண்ட இவ்விருள்தருமாஞாலத் துள்ளிருந்தே அனுபவிக்கப்பெற்ற எனக்கு ஈடாகார். "சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே" என்கிறபடியே. இனி, எம்பெருமான் ஒப்பாகமாட்டானோ? எனில்: (எம்பெருமான் தனக் காவான் தானே மற்றல்லால்) எம்பெருமான் தனக்குத்தான் ஒப்பா வானேயல்லது எனக்கு ஒப்பாவானோ? உலகில் ஓர் ஒப்பில்லாத தோடன்றியில் தான் தோன்றியான சேஷித்வரஸத்தையே உடைய வனாய், சேஷத்வரஸத்துக்கு இட்டுப்பிறவாத ஸர்வேச்வரனும் தானே தனக்கு உவமனாகலாமேயொழிய எனக்கு ஒப்பாகமுடியுமோ? (எம் பெருமான் தனக்காவான் தானே மற்றல்லால் எனக்காவார் ஆரொருவரே) என்னோடு ஒத்தவர் இல்லையென்றேனேயொழிய எம்பெருமானுடைய உயர்வை இல்லையென்றேனோ?

உமக்கு இவ்வுலகில் ஒப்பு ஒருவருமில்லை என்று சொல்லக் காரணமென்ன? எனில், நான் அவனையொத்த பொருள்களில் எல் லாம் அவன் திருமேனியைக் காணநின்றமையாலும், இப்படிக் காண் பார் வேறொருவரில்லாமையாலும் எனக்கு ஒப்பாவார் ஒருவருமில்லை என்கிறார். (புனக்காயாம் பூமேனி) தன் நிலத்திலே இருக்கையாலே செவ்விபெற்று விளங்குகிற காயாம்பூவினுடைய நிறமும், (காணப் பொதி அவிழும் பூவைப் பூமேனி) காணக்காண, அககாட்சியின் மோதலையும் பொறுக்கமாட்டாமல் கட்டு நெகிழ்ந்து சிறிது சிறிதாக அலர்ந்து வரும் பூவைப்பூவின் நிறமும். 'காயாம்பூமேனி' என்ற விடத்திலுள்ள 'மேனி' என்னும் பதத்தை இங்கும் கூட்டிக்கொள்வது. இங்கு இவ்விரண்டைச் சொன்னது,

னுடைய ச்லாக்யமான வடிவை அழகிதாகக் காட்டாநின்றது. வரம்—வரிஷ்டமாக—அழகிதாக என்றபடி. அன்றிக்கே, "வ்ரீயத இதி வர:" என்றாய், என்னால் ப்ரார்த்திக்கப்படுகிற வடிவை அழகிதாகக் காட்டாநிற்கும் என்னுதல்.

90. வரத்தால் வலிநினைந்து மாதவ நின்பாதம்
சிரத்தால் வணங்கானா மென்றே—உரத்தினால்
ஈரரியாய் நேர்வலியோ னாய விரணியனை
ஓரரியாய் நீயிடந்த தூன்.

பதவுரை:—ஈர் அரி ஆய்—பிளக்கத்தக்கவனான சத்துருவாய், நேர் வலியோன் ஆய—எதிர் நின்று சண்டை செய்யத் தக்க பலத்தையுடையவனான, இரணியனை—ஹிரண்யகசிபு

"கொண்டல்தான் மால்வரைதான் மாகடல்தான் கூரிருள்தான்
வண்டறாப் பூவைதான் மற்றுத்தான்—கண்டநாள்
காருருவம் காண்தோறும் நெஞ்சோடும் கண்ணனார்
பேருருவென்றெம்மைப் பிரிந்து" [பெரிய திருவ-49]

"கருவிளையொண் மலர்காள் காயா மலர்காள்" [நாச்-திரு 9-3]

"பைம்பொழில்வாழ் குயில்காள் மயில்காள் ஒண்கருவிளைகாள்
வம்பக்களங்கனிகாள் வண்ணப்பூவை நறுமலர்காள்"
[நாச்-திரு 9-4]

என்றவிடங்களில் சொல்லப்பட்ட காருருவங்கள் எல்லாவற்றுக்கும் உபலக்ஷணம். (மாமேனி வரம் காட்டும்) இக்காருருவங்களெல்லாம், அவனுடைய இருளன்ன மாமேனியைச் சிறப்பாகக் காட்டும். (வரம் மாமேனி காட்டும்) 'வரம்' 'மா' எனும் இரண்டும் சிறப்பைக்குறிக்கும். மிகச்சிறந்த மாமேனியைக் காட்டும் என்றபடி. "வ்ரீயதே இதி வர:" என்று வரசப்தவ்யுத்பத்தியாகையாலே வரிக்கப்படும் சிறந்த மேனியைக் காட்டும் என்றுமாம். (வரம்காட்டும்) தன்னிலும் தெளிவாகக் காட்டும் என்றுமாம். இவற்றைக்காணும்போது இவற்றைக் காட்டிலும், எம்பெருமானுடைய திருமேனியே எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட எனக்கு ஒப்பாவார் ஆர்? என்கை. (காட்டும்) பரமபுருஷனை ஞானத்தாலேமாத்திரம் கண்டு அநுபவித்துக் கண்ணாலே அநுபவியாத குறைதீரக் கண்ணுக்குக் காட்டும்.

வினுடைய, **ஊன்**—சரீரத்தை, **ஓர் அரி ஆய்**—ஒப்பற்ற நரஸிம்ஹரூபியாகி, **உரத்தினால்**-(உன்னுடைய) பலத்தினால், **நீ இடந்தது**–நீ கிழித்தது, **வரத்தால்**-(பிரமன் முதலிய தேவர்களால் கொடுக்கப்பட்ட) வரங்களாலுண்டான, **வலி நினைந்து**-(தன்) பலத்தைப் பெரிதாக எண்ணி, **சிரத்தால்**–தன் தலையால், **நின் பாதம்**–உன் திருவடிகளை, **வணங்கானும் என்றே**-வணங்காமலிருந்தான் என்ற காரணத்தினாலா? (அன்று: பாகவதனை ப்ரஹ்லாதன்பக்கல் அபசாரம் பொறுக்காமையினாலேயே என்றபடி.)

அவ:—போலியைக்காட்டித் தம்மை த$_4$ரிப்பித்த ப்ரஸங்க$_3$த்திலே ப்ரஹ்லாத$_3$னுக்கு விரோதி$_4$யைப்போக்கித் தன்னைக் காட்டி த$_4$ரிப்பித்தபடியை அருளிச்செய்கிறார்.

உரை:—ஸர்வர்க்கும் ஆச்ரயிக்கலாம்படியிருக்கிற ஶ்ரிய:பதியானவனே! இரண்டுகூறாகக் கிழித்துப் பொகடப்படும் ஶத்ருவாய், நேர்நிற்கவல்ல ப$_3$லத்தையுடைய ஹிரண்யனை, நாட்டில் கண்டறியாத அத்$_3$விதீயமான ந்ருஸிம்ஹமாய்க்

அவ:—தன்னையொத்த காயா, பூவை முதலானவற்றைக் காட்டித் தம்மை உயிர்தரிப்பித்தபடியைச் சொன்னவுடன், பிரஹ்லாதனுக்கு விரோதியைப்போக்கித் தன்னைக் காட்டியருளிய வண்மை நினைவுக்கு வந்தமையாலே, அதை அருளிச்செய்கிறார்.

வ்யா:—(மாதவ) வரங்கொடுத்த பிரமன், உருத்திரன் முதலானோரும் பணியும்படியிருக்கும் லக்ஷ்மீநாதனே! (ஈரரியாய்) ஈரத்தக்க-பிளக்கத்தக்க- எதிரியாய். இவன் செய்த பாகவதாபசாரத்தைக் கண்டால், இரண்டு கூறாகப்பிளந்து போடுவதே இவனுக்குத் தக்கதண்டனை என்று கருத்து. (ஈரரியாய்) பெரிய எதிரியாய் என்றுமாம். (நேர்வலியோனாய இரணியனை) நேரே பலம் பொருந்தியவனான இரணியனை. எம்பெருமானோடு போரிலே எதிரிட்டு நிற்கவல்ல மனோபலதேஹபலங்களை உடைய இரணியனை என்றுமாம். (ஓரரியாய்) உலகில் காணப்படும் பிராகிருத ஸிம்ஹமன்று. உலகில் கண்டறியாத அப்ராக்ருத நரஸிம்ஹம். (ஓரரியாய்) ஓர்தல் என்று தியானத்தைக்குறிப்பதாய், ஸாத்விகர்கள் அனைவராலும்

கொண்டு அவன் மிடுக்கும் கீழ்ப்படும்படியான மிடுக்காலே. மாம்ஸளமான பெரிய சரீரத்தை ஆஸ்ரிதவத்ஸலனுன நீ இடந்து பொகட்டது ப்3ரஹ்மாதிகள் கொடுத்த வரத்தால் வந்த தன் மிடுக்கைக் கனக்க நினைத்து ஸர்வாதி4கனுன உன்னுடைய திருவடிகளைத் தலையாலே வணங்கி ஆச்ரயியாதேயிருந்தான் என்றே? அன்றிறே. சிறுக்கனைப் பல *கறுவி நலிந்தான் என்னுமிதுகொண்டிறே என்றபடி.

தியானிக்கப்படும் நரஸிம்ஹம் என்கிறாகவுமாம். (உரத்தினல் நீ ஊனிடந்தது) இரணியனுடைய பலமும் கீழ்ப்படும்படியான உன்னுடைய பலத்தாலே நீ அவனுடைய கொழுப்புமிக்க பெரிய சரீரத்தைப் பிளந்தது. (நீ) பிரஹ்லாதன்பக்கல் வாத்ஸல்யம் மிக்க நீ. "உரத்தினல் ஈரரியாய்" என்று கூட்டி, பலத்தினலே பிளக்க வேண்டிய சத்துருவாய் என்றும் பொருள்கொள்ளலாம். (வரத்தால் வலிநினைந்து) பிரமன் முதலானுர் கொடுத்தவரத்தாலே வந்த தன் பலத்தையே பெரிதாக நினைத்து. வரத்தினலேயுண்டான தன் பலத்தை நினைத்தானேயொழிய, அந்த வரங்களைக் கொடுத்தவர்களின் வரதானசக்தி உன்னுல் வந்தது என்பதை நினைக்கவில்லை. (நின்பாதம்)தான் வணங்கி வரம்பெற்ற அப்பிரமன் முதலானுரையும் படைத்த நின் பாதத்தை. அவர்களும் வணங்கும் நின் திருவடித் தாமரையை. (மாதவ நின்பாதம்) தாயும் தந்தையுமாகச் சேர்ந்திருக்கும் உன்திருவடியை. (சிரத்தால் வணங்கானும் என்றே) தன் தலையாலே வணங்கவில்லையென்னும் கருத்தாலேயோ நீ இரணியனைப் பிளந்தாய்? இக்கருத்தாலல்ல; ஏனெனில், இரணியன் தன் சிரத்தினல் வணங்கியதால் உனக்கொரு பெருமையோ மகிழ்ச்சியோ வந்துவிடப்போவதில்லை. எதனுலெனில், "நலமாகத் தீக்கொண்ட செஞ்சடையான் சென்று, என்றும் பூக்கொண்டு வல்லவாறேத்த மகிழாத வைகுந்தச் செல்வனுர்" [நான்-திருவ-75] ஆகையாலே. பின் எதற்காக இரணியனை மார்விடந்தது? எனில்: பாகவதோத்தமனுன பிரஹ்லாதனைப் படாதபாடு படுத்தியதே இப்படிக் கடுஞ் சீற்றங்கொண்டதற்குக் காரணம் என்பதை

"யத3பராத4ஸஹஸ்ரமஜஸ்ரஜம்
த்வயி ஶரண்ய ஹிரண்ய உபாவஹத் ।
வரத3 தேந சிரம் த்வமவிக்ரிய:
விக்ருதிமர்ப்ப4கநிர்ப்ப4ஜநாத3க3ா: ॥" [68]

*(பா) கறுத்து.

91. ஊனக் குரம்பையி னுள்புக் கிருள்நீக்கி
ஞானச்சுடர் கொளீஇ நாடோறும்—ஏனத்
துருவா யுலகிடந்த வூழியான் பாதம்
மருவாதார்க் குண்டாமோ வான்.

பதவுரை:—**ஊன குரம்பையின்**—*மாம்ஸத்திலாகிய சரீரமாகிய குடிசையின்*, **உள் புக்கு**-*உள்ளே நுழைந்து(ஆராய்ந்து)* **இருள்**— *(சரீரத்தை இனிதாக நினைக்கும்) அஜ்ஞானத்தை*, **நீக்கி**—*போக்கடித்து*, **ஞானம் சுடர்**—*உண்மையறிவாகிற விளக்கை*, **கொளீஇ**—*ஏற்றி*, **ஏனத்து உரு ஆய்**—*வராஹமூர்த்தியாக அவதரித்து*, **உலகு இடந்த** *உலகத்தை(அண்டபித்தியினின்றும்) பிரித்தெடுத்தவனும்*, **ஊழியான்**—*ப்ரளய காலத்திலிருந்தவனுமான எம்பிரானுடைய*, **பாதம்**—*திருவடிகளை*, **நாள் தோறும்**-*தினந்தோறும்*, **மருவாதார்க்கு**-*வணங்காதவர்களுக்கு*, **வான்**—*பரமபதம்*, **உண்டாமோ**-*கிடைக்குமோ?*

அவ:—*ஸர்வேச்வரன் ஸர்வாபேக்ஷிதப்ரதனேயாகிலும் இதரவிஷயங்களில் ருசியற்று அவனை ஆச்ரயித்தார்க்கல்லது பரமபதப்ராப்தி அரிது என்கிறார்.*

[வரதராஜனே! இடைவிடாது செய்யப்பட்ட ஆயிரககணக்கான குற்றங்களை உன்னிடத்தில் புரிந்ததனாலும் நீண்டகாலம் கோபமடையாதிருந்த நீ, பிரஹ்லாதனைத் துன்புறுத்தியதாலே (அல்பகாலத்திலேயே) கடுங்கோபங்கொண்டாய்.] என்று வரதராஜஸ்தவத்தில் ஆழ்வான் அருளிச்செய்தார். "ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை என்று ஜீயர் அருளிச்செய்வர்" என்னும் ஆசார்யஸூக்தியும் இங்கு அநுஸந்தேயம்.

அவ:-"எம்பெம்மானை ஆரே அறிவார்" [56] முதலானவிடங்களிலே எத்தனையேனும் சிறந்த ஞானத்தையுடைய பிரமன் முதலானாராலும் தம் முயற்சியாலே காணமுடியாது என்றார். அப்படியானால் இத்தலையில் ஒன்றுமே வேண்டாவோ? கண்டபடி திரிந்தாலும் மோக்ஷம் வந்துவிடுமோ? என்னும் கேள்வியெழ, அவன் ஒரு கைம்முதலையும் எதிர்பாராமல் எல்லாப் பலன்களையுமளிப்பவனானாலும்,

உரை:—அகவாயில் தோ₃ஷம் தோற்றாதபடி மாம்ஸம் செறிந்து மேலெழமினுங்கித் தோற்றுகிற ஶரீரமாகிற குடியிலே, அதில் தோ₃ஷமுள்ள எல்லையளவும் செல்ல உள்ளூற அவகா₃ஹித்து, அத்தை போ₄க்₃யமென்றிருக்கிற அஜ்ஞாநமாகிற இருளைப்போக்கி, ஜீவபரயாதா₂த்ம்யத்தை விஷயீகரித்திருக்கும் ஜ்ஞாநமாகிற விளக்கையேற்றி, தன்னுருக்கெடுத்து நீருக்கும் சேற்றுக்கும் இளையாத வராஹரூபத்தை உடையனாய்க்கொண்டு, லோகத்தை இடந்தெடுத்துக்கொண்டு ஏறினவனாய், இவை அழிந்துகிடந்த ஸம்ஹார காலத்திலும் தன்மேலே ஏறிட்டுக்கொண்டு நோக்கும் ஸ்வ

அவனைத் தவிர்ந்த தாழ்ந்த விஷயங்களில் ருசியற்று, அவனை சரணமடைந்தவர்களுக்கல்லது பரமபதம் கிடைக்காது என்கிறார்.

வ்யா:— (ஊனக்குரம்பை) மிகத்தாழ்ந்ததாய், நிலையற்றதாய், தீயவழியில் செலுத்துவதாய் உள்ள இதினுடைய தோஷம் வெளியில் தெரியாதபடி மாம்ஸத்தையும் தோலையுமிட்டு மறைத்து வைத்து, வெளித்தோற்றத்திற்கு அழகாகத்தோற்றுகிற சரீரமாகிற குடிசையிலே. (உள்புக்கு) அதில் தோஷமுள்ள இடமெல்லாம் நன்கு ஆராய்ந்து. (இருள் நீக்கி) அந்த தேஹவிஷயமாக வரும் தேஹாத்ம ஜ்ஞானம் முதலான அஜ்ஞானங்களைப் போக்கி (ஞானச்சுடர் கொளீ இ) ஜீவனைப்பற்றியும், ஈச்வரனைப்பற்றியுமான உண்மையறிவாகிற விளக்கை ஏற்றி. (நாள்தோறும்...) எக்காலத்திலும் வராஹப்பெருமாளுடைய திருவடியை உபாயமாக புத்திபண்ணுதவர்களுக்கும் பரமபதம் கிடைக்குமோ? (ஏனத்துருவாய்) ஒளிமயமான தன் உருவை மாற்றிக்கொண்டு நீருக்கும் சேற்றுக்கும் தயங்காத மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியுருவை எடுத்துக்கொண்டு. (உலகிடந்த ஊழியான் பாதம்) உலகத்தைப் பிரளயஜலத்திலிருந்து குத்தியெடுத்து ரக்ஷித்த ஊழிமுதல்வனுடைய திருவடியிணையை. (உலகிடந்த ஊழியான்) வராஹகல்பத்தின் ஆதியில் செய்யப்பட்டது இவ்வருஞ்செயல் என உணர்த்துகிறார். (ஊழியான்) ''அசித விசேஷிதாந்'' என்கிறபடியே உலகமெல்லாம் அழிந்துகிடந்த ஸம்ஹாரகாலத்திலும் தன்மேலே ஸூக்ஷ்மநிலையில் இவற்றை வைத்துக்கொண்டு ஸம்ரக்ஷித்ததைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். (பாதம்) காணவொண்ணாத அவனுடைய ஸ்வரூபத்தைப்போலல்லாமல், கண்காணவல்ல அவனுடைய திருவடியிணையை. (நாள்

பூ₃ாவனானவனுடைய திருவடிகளை நாள்தோறும் பொருந்தி ஆச்ரயியாதார்க்குப் பரமாகாசசப்தவாச்யமான பரமபதம் உண்டாமோ?

தோறும் மருவாதார்க்குண்டாமோ வான்) எப்போதும் மநோவாக் காயங்கள் பொருந்தப்பெற்று அடையாதவர்களுக்குப் பரமபதம் உண்டாகுமோ? எப்போதும் அடைகையாவது:-எப்போதும் உபாய மென்று புத்திபண்ணுகை. (ஏனத்துருவாய் உலகிடந்த ஊழியான் பாதம்...) இவை நோவுபட்டபோது உதவினவனாய் இவை அஸத் ஸமமாய்க்கிடந்தபோது, தூங்குகிறகுழந்தையை மடியிலே வைத்து ரக்ஷிக்கும் தாயைப்போலே, தன்மேலே ஏறிட்டுக்கொண்டு ரக்ஷித்த வனை அவன் திருவடிகளில் ருசியில்லாதவர்களுக்குப் பரமபதம் கிடைக்குமோ? (நாள்தோறும் மருவதார்க்கு)அவன் கண ந்தோறும் நமக்குச்செய்கிற நன்மைகளை நினைத்தால் அவனிடம் நாமும் இடை விடாமல் அன்புசெலுத்தவேண்டாவோ? (ஏனத்துருவாய்...மருவா தார்க்கு) "அஹம் ஸ்மராமி" என்று கடைசிநிலையிலே நம்மை நினைப்பவனை. அதற்கு முன்பெல்லாம் நாம் நினைக்கவேண்டாவோ? (மருவாதார்க்கு) என்று அவனை உபாயமாக நினைத்திருக்கையைச் சொல்லுகிறது. ப்ரபத்தி ஒருதடவை செய்யவேண்டியதாயிருக்க, 'நாள்தோறும் மருவாதார்க்கு' என்னலாமோ? எனில்: ஆசார்யன் த்வயத்தைச் சொல்ல, இவன் அதைத் திருப்பிச் சொல்லுமன்று ஒரு தடவை செய்யவேண்டிய ப்ரபத்தியானது செய்யப்பட்டுவிடுகிறது. அதற்குப்பின் அந்நினைவானது இவன் ஸ்வரூபத்திலே புகுகிறது. இந்நினைவானது ஒருகால் ஏற்பட்டுவிட்டால் பின் அழியக்கூடிய தல்லவே. "பெறப்போகிற பலத்தின் சீர்மையைப் பார்த்தால், இவன் ஆயுள் முழுவதும் இந்நினைவோடிருந்தாலும், 'ஒருதடவை' என்பதற் கும் போராதபடியன்றோ இருக்கிறது' என்றும் சில ஆசார்யர்கள் நிர்வஹிப்பர்கள். (பாதம் மருவதார்க்குண்டாமோ வான்) பக்தி நிஷ்டரும் பக்திக்கு அங்கமாக ப்ரபத்தியை அனுஷ்டிக்கவேண்டி யிருக்கையாலே, ப்ரபத்தி செய்யாதவர்களுக்குப் பரமபதமில்லை என்கிறார், "ப்ரபந்நாத₃ந்யேஷாம் ந தி₃சதி முகுந்தோ₃ நிஜபத₃ம்" [ப்ர பந்நனைத்தவிர வேறு எவருக்கும் முகுந்தன் பரமபதத்தைத்தர மாட்டான்] என்றார் ஸ்ரீவேதாந்ததேசிகரும். (ஊழியான் பாதம் மரு வாதார்க்குண்டாமோ வான்) "நாந்ய: பந்தா₂ வித்₃யதேயநாய" என்ற வேதார்த்தத்தை அருளிச்செய்கிறார், "நாறு இணர்த்துழாயோன் நல்கின் அல்லதை ஏறுதல் எளிதோ வீறுபெறு துறக்கம்?" [பரிபாடல்] என்றனர் பண்டைத்தமிழரும்.

92. வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்
தேனாகிப் பாலாம் திருமாலே—ஆனாய்ச்சி
வெண்ணெய் விழுங்க நிறையுமே முன்னொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு.

பதவுரை:—**வான் ஆகி**-*ஆகாசரூபனாகவும்*, **தீ ஆய்**-*அக்நி ரூபனாகவும்*, **மறி கடலாய்**-*அலையெறிகிற ஸமுத்ரரூபனாகவும்*, **மாருதம் ஆய்**-*வாயுரூபனாகவும் (ஆகி அண்டத்திற்கு நிர்வாஹக னாயிருப்பவனாகவும்)*, **தேன் ஆகி**—*(நித்யமுக்தர்க்கு) தேன் போலே இனியவனாகவும்*, **பால் ஆம்**-*பால்போலே போக்யனா கவுமிருக்கும்*, **திருமாலே**-*லக்ஷ்மீநாதனே!* **ஆன் ஆய்ச்சி**-*பசுக் களை வளர்க்கும் ஆய்க்குலத்தில் பிறந்த இடைச்சியினுடைய*, **வெண்ணெய் விழுங்க** — *வெண்ணெயை விழுங்கியபோது*, **முன் ஒரு நாள்**-*முன்பு ஒரு காலத்திலே*, **மண்ணை**-*உலகையெல் லாம்*, **உமிழ்ந்த**-*வெளியிட்ட*, **வயிறு**-*திருவயிறு*, **நிறையுமே**-*நிறையுமா?*

அவ:— *இப்படி ஆஶ்ரிதரை ரக்ஷிக்குமளவன்றிக்கே. அவாப்தஸமஸ்தகாமனை பூர்த்திக்குப் போராதபடி ஆஶ்ரிதர் தொட்டளைந்த த்₃ரவ்யத்தைத் தனக்கு த₄ாரகமாக விரும்பியிருக்கும் என்கிறார்*.

உரை:—*ஆகாசம், அக்₃நி, அலையெறிகிற கடல், காற்று முதலான பூ₄தங்களாலே சமைந்த அண்டாந்தர்வர்த்தி பதா₃ர்த்தங்களுக்கு நிர்வாஹகனாய், பரமபத₃வாஸிகளுக்கு*

அவ:—முன் பாசுரத்திற்சொன்னபடி ஆச்ரயித்தவர்களை ரக்ஷிப்பதோடன்றியில், 'அவாப்தஸமஸ்தகாமன்' [விருப்பங்களனைத் தையும் பெற்றிருப்பவன்] என்னும் தன்னுடைய நிறைவுக்குத் தகாதபடி அடியார் தொட்டளைந்த வெண்ணெயை தனக்கு த₄ாரக மாக விரும்பியிருக்கும் வத்ஸலன் என்கிறார்.

வ்யா:-(வானாகித் தீயாய் மறிகடலாய் மாருதமாய்) நாலுபூதங் களைச் சொன்னது பிருதிவியாகிற ஐந்தாவது பூதத்திற்கும் அவற்று லான அண்டத்திற்கும், அதனுள்ளிருக்கும் சேதநாசேதநப் பொருள்

ஸர்வரஸஸமவாயமான தேன், ஸ்வாபா$_4$விகரஸமான பால் இவைபோலே நிரதிசயபோ$_4$க்$_3$யனாய்க்கொண்டு இருக்குமவனாய், இந்த உப$_4$யவிபூ$_4$தியோக$_3$த்துக்கு மேலே ஸ்ரிய:பதித்வத்தால் வந்த ஐச்வர்யத்தையுமுடையவனே! பண்டொரு நாளிலே ப்ரளயத்தில் அழியாதபடி பூ$_4$மியை அடங்க எடுத்துவிழுங்கி, உள்ளேக்கிடந்து தளராதபடி வெளிநாடு காண உமிழ்ந்த உன்னுடைய வயிறானது பசுமேய்க்கும்

களுக்கும் உபலக்ஷணம். லீலாவிபூதியிலிருக்கும் எல்லாப் பொருள்களுமாகி என்கிறது. பரம்பொருளான இவன் எப்படி அவைகளாகமுடியும்? எனில்: இவனுக்கு சரீரமாய், ப்ரகாரமாய், கார்யமான அவைகள் இவனை என்றும் விட்டுப் பிரியாமலிருக்கிறபடியாலும், லோகவேதங்களில் சரீரத்தைச் சொல்லும்சொல் சரீரியையும், ப்ரகாரத்தைச் சொல்லும்சொல் ப்ரகாரியையும், கார்யத்தைச் சொல்லும் சொல்காரணத்தையும் குறிப்பதைக் காண்கிறோமாகையாலும் இவன் அவையாகிறான் என்னக் குறையில்லை. "தே$_3$ஹோ தே$_3$ஹிநி" என்றும், "ஸ்தி$_2$த்யுத்பத்தி" என்றும் தொடங்கும் ஸ்ரீரங்கராஜஸ்தவச்லோகங்கள் இங்கு அநுஸந்திக்க உரியன. (வானாகித்...திருமாலே) இப்படி லீலாவிபூதியை சரீரமாகக்கொண்டு ஸ்ருஷ்டி முதலானவற்றைச் செய்வதும் பிராட்டியின் உகப்புக்காக என்று காட்டுக்கிறார். இத்தால் லீலாவிபூ$_4$தியோகம் சொல்லிற்று. இனி, நித்யவிபூ$_4$தியோகம் சொல்லுகிறது,-(தேனாகிப் பாலாம் திருமாலே) பரமபதத்திலிருக்கும் நித்யமுக்தர்க்கு எல்லா ரஸங்களின் கூட்டரவான தேன்போலும், இயற்கைரஸமான பால்போலும் திகழும் திருமாலே! இங்கு இரண்டு ரஸங்களைச் சொன்னது நெய், கன்னல், அமுது முதலான ரஸங்களுக்கும் உபலக்ஷணம். "ஸர்வரஸ:" என்று மறைமுடிகளிலே ஓதப்பட்ட வஸ்துவன்றோ. (திருமாலே) பரமபதத்தில் போக்யமான வஸ்து ஒரு மிதுனம் என்று காட்டப்படுகிறது. ஆக இவ்வளவால் உபய விபூதியோகம் சொல்லப்பட்டதாயிற்று. (திருமாலே) என்று உபய விபூதிச் செல்வத்துக்கு மேலே லக்ஷ்மீநாதனாயிருக்கும் பெருஞ்செல்வத்தையும் உடையவனே என்கிறதாகவுமாம்.

இனி, அவனுடைய ஆச்ரிதவ்யாமோஹத்தை வெளிப்படுத்தும்படியாக ஒரு கேள்வி கேட்கிறார்: (முன் ஒரு நாள் மண்ணை உமிழ்ந்த வயிறு) ஆதிகாலத்திலே, ப்ரளயத்தில் அழியாதபடி உன்னால் விழுங்கப்பட்ட பூமியை, வயிற்றினுள்ளேயே கிடந்து

குடியிலே பிறந்த யசோதைப் பிராட்டி கடைந்து வைத்த முடைநாற்றம் குன்றாத வெண்ணெயை அபி₄நிவேசத்தோடே அமுதுசெய்தருள, அத்தாலே நிறையுமோ? குறைக்கும் இட்டு அடைக்கவேணும் என்று கருத்து.

93. **வயிறழல வாளுருவி வந்தானை யஞ்ச**
எயிறிலக வாய்மடுத்த தென்நீ—பொறியுகிரால்
பூவடிவை யீடழித்த பொன்னாழிக் கையா நின்
சேவடிமே லீடழியச் செற்று.

பதவுரை:—பூ வடிவை—*புஷ்பங்களின் அழகை,* **ஈடு அழித்த**—*மிகவும் கீழ்ப்படுத்தியதும்,* **பொன் ஆழி கையா**—*அழ*

தளராதபடி வெளிநாடுகாண உமிழ்ந்த உன் திருவயிறானது. (ஆய்ச்சி வெண்ணெய் விழுங்க நிறையுமே) பசுமேய்க்கும் குடியிலே பிறந்த யசோதைப்பிராட்டியின் வெண்ணெயைப் பேராசையோடே விழுங்க அதனால் நிறைந்து விடுமோ? உலகெல்லாம் உண்ட வயிற்றிலே காலியிடத்திற்கும் வெண்ணெயையிட்டு அடைக்க வேணுமே! அதற்கு வெண்ணெய்க்கெங்கேபோவது? யார் அடைப்பது? (ஆய்ச்சி வெண்ணெய்) முடைநாற்றம் குறையாத வெண்ணெயையன்றோ விழுங்கிற்று! (விழுங்க) யாரேனும் காண்பதற்கு முன்னே அமுதுசெய்தருளவேணும் என்னும் ஆசையாலே வாய் வாயாக விழுங்கினாயிற்று. (வாநகி...வெண்ணெய் விழுங்க) உபய விபூதிகளை உடையவனாயிருப்பதற்குப் பொருந்துமோ ஓரிடைச்சியின் வெண்ணெயை விழுங்குவது? (மண்ணையுமிழ்ந்த வயிறு வெண்ணெய்விழுங்க நிறையுமே) உலகையெல்லாம் உண்டுமிழ்ந்த வயிறு ஓரிடைச்சி திரட்டிய வெண்ணெயால் நிறைந்துவிடுமோ? நிறையாதன்றோ! பின் ஏதுக்காக விழுங்கினாய்? பதில் தெளிவாகையாலே கேள்வியுடன் நிறுத்துகிறார். பதில் யாதெனில்: தன்னிடம் அன்புடையாரோடு ஸம்பந்தமுள்ளதொன்றை புஜித்தாலல்லது உயிர்தரிக்க மாட்டாத ஆச்ரிதவ்யாமோஹத்தாலே யசோதை தொட்டளைந்த வெண்ணெயை விழுங்கினானேயொழிய, இதனால் தன் வயிறு நிறையுமென்று விழுங்கவில்லையே. இதனால், அடியார் ஸ்பர்சம் பெற்றதொன்றை அடைந்தாலல்லது தன் நிறைவுக்குக் குறைவேற்பட்டு விட்டதாக நினைக்கும் அவனுடைய ருசி சொல்லுகிறது. உண்மையில், இம்மஹாகுணம் ஒன்றுகுறைந்தாலும் அவன் நிறைவுக்குக்குறைவேயாகவும், உபயவிபூதியோகம் பயனற்றதாகவும் ஆகுமன்றோ.

கிய திருச்சக்கரத்தை உடையதுமான கையை உடையவனே! **வயிறு அழல**—(அடியவர்கள்) வயிறெரியும்படியாக, **வாள் உருவி வந்தானை**—வாளை உருவிக்கொண்டு வந்தவனான இரணியாஸுரனை, **அஞ்ச**—(உன்னுருவைக்கண்டு) பயப்படும்படி, **நின் சேவடி மேல்**—உன் சிவந்த திருவடிகளின் மேல் (கிடத்திக்கொண்டு), **பொறி உகிரால்**—பல நிறங்களையுடையநகங்களாலே, **ஈடு அழிய செற்று**—கட்டுக்குலையும்படி அழித்தபின்பும், **எயிறு இலக**—தந்தங்கள் பிரகாசிக்கும்படியாக, **நீ வாய் மடுத்தது என்**—நீ வாயை மடித்துக்கொண்டிருந்தது எதற்காக?

அவ:—"ஓரரியாய் நீயிடந்தது" என்று நம்மை ஆஶ்ரித பக்ஷபாதியாகக் கீழே சொன்னீர். அது நீரறிந்தபடியென்? என்ன, ஹிரண்யன்மேல் பண்ணின சீற்றங்கொண்டு அறிந்தேன் என்கிறார்.

உரை:—ஸௌகுமார்யம், அழகு முதலான ஸ்வப$_4$ாவத்தாலே பூவைப்பூவினுடைய வடிவழகைத் தலையழித்திருப்பதாய், ஸ்ப்ருஹணீயமான திருவாழியை த$_4$ரித்த திருக்கையை உடையவனே! கண்ட அநுகூலர் 'என்னாகத் தேடுகிறதோ' என்று வயிறெரியும்படி வாளை உருவிப்பிடித்துக்கொண்டு வந்த ஹிரண்யனை உன் உக்$_3$ரவேஷங்கண்டு அவன் ப$_4$யப்

அவ:—' ஓரரியாய் நீயிடந்தது'' [90] என்று நம்மை ஆச்ரிதபக்ஷபாதியாக நீர் சொன்னீர். அதை எப்படியறிந்தீர்? என்று எம்பெருமானுக்குத் திருவுள்ளமாக, இரணியன்மேலே தேவரீர் கொண்ட சீற்றத்தைக்கொண்டு அறுதியிட்டேன் என்கிறார் இப்பாசுரத்தில்.

வ்யா:—(பூவடிவை ஈடழித்த பொன்னாழிக்கையா) மென்மை, அழகு, நிறம் முதலான தன்மைகளாலே பூவைப்பூவின் தன்மைகளை வெற்றிகொண்டிருப்பதாய் பொன்போலே ஆசைப்படத்தக்கதாய், ஸுதர்சனாழ்வானை தரித்திருப்பதான திருக்கையை உடையவனே! (வயிறழல வாளுருவி வந்தானை) கண்ட அன்பர்கள் அன்பினாலே அறிவுகலங்கி 'எம்பிரானுக்கு என் வருகிறதோ' என்று வயிறு பிடிக்கும்படியாக வாளை உருவிக்கொண்டு வந்த இரணியனை. (வயிறழல) "வயிறு அழலுகிறது ஆர்க்கு? என்னில்: ஆழ்வார்க்கு.

படும்படியாகப் பிராட்டிமார் பள்ளிகொண்டருளும் உன்னுடைய சிவந்த திருவடிகளின்மேல் ஏறிட்டு நாநாவர்ணமான அழகிய திருவுகிர்களாலே கட்டுக்குலைந்து சிதறிப் போம்படி முடித்து, பின்னையும் சீற்றம்மாறாமையாலே திருவெயிறுகளானவை விளங்கும்படிக்கீடாக நீ நா மடிக் கொண்டது என்? "பூவடிவை ஈடழித்த பொன்னாழிக்

முன்பொருநாள் ஹிரண்யன் செய்ததாயிராதே, தம்முடைய எதிரே வாளும் உருவிக்கொண்டு புறப்பட்டாற்போலே இருந்தபடி," என்பர் பெரியவாச்சான்பிள்ளை. (அஞ்ச) "உக்3ரம் வீரம்" [ந்ருஸிம்ஹ அநுஷ்டுப்] என்கிற உன்னுடைய உக்3ரமான உருவத்தைக்கண்டு அஞ்சாநெஞ்சினனை அவனும் அஞ்சும்படியாக. (நின் சேவடிமேல்) "பரிச்ரமாத் ப்ரஸுப்தாஹம் ராக4வாங்கேப்யஹம் சிரம்" [ரா-ஸு 38-20] [களைப்பினாலே நான் ராகவருடைய மடியில் நெடு நேரம் உறங்கினேன்] என்கிறபடியே பிராட்டிமார் பள்ளிகொண்டருளும் உன்னுடைய சிவந்த திருவடிகளின்மேல் ஏற்றியிட்டுக் கொண்டு. (பொறி உகிரால் ஈடழியச் செற்று) பல வர்ணங்களையுடைய அழகிய நகங்களாலே இரணியனவன் கட்டுக்குலைந்து சிதறிப்போகும்படி அழித்து. (எயிறு இலக வாய்மடுத்தது என்) அவனை அழித்தபின்பும் கோபம் தணியாமல் பற்கள் வெளியில் பிரகாசிக்கும்படி நாக்கை மடித்துக்கொண்டது எதற்காக? (செற்று வாய் மடுத்தது என்) பிணத்தின் முகத்திலே நாக்கை மடித்தது எதற்காக? இங்கும் பதில் தெளிவாகையாலே கேள்வியோடு நிறுத்திக்கொள்கிறார். பதிலாவது:— உன் விஷயமான அபசாரமாயிருந்தால், "கோபமாஹாரயத் தீவ்ரம் வத4ார்த்த2ம் ஸர்வரக்ஷஸாம்". [ரா-ஆர 24-34][எல்லா அரக்கர்களையும் கொல்லக்கடுங்கோபத்தை ராமன் வரவழைத்துக்கொண்டான்] என்கிறபடியே கோபத்தை ஏறிட்டுக்கொள்ளவேண்டியிருக்குமாகையாலே விரோதிகளை அழித்தவுடன் கோபம் தானே தணியும்.

"அத2ராமோ மஹாதேஜா ராவணேந க்ருதவ்ரணம்।
த்3ருஷ்ட்வா ப்லவக3ஶார்த்தூ3லம் கோபஸ்ய வஶமேயிவாந்॥"
[ரா-யு 59-136]

[பிறகு, மஹாதேஜஸ்வியான ராமன், ராவணனால் காயப்படுத்தப் பட்டவனும், வானரர்களும் சிறந்தவனுமான ஹனுமானைப் பார்த்து கோபத்திற்கு வசப்பட்டான்.] என்கிறபடியே பாகவதர்கள் விஷய

கையால்'' என்று பாடமாய்த்தாகில், ''புஷ்பத்திலுங்காட்டில் ஸுகுமாரமாய், ஸ்ப்ருஹணீயமான திருவாழியை உடைத்தான திருக்கைகளாலே (அழகிய திருவுகிராலே) அநுகூலரை வைத்துக்கொள்ளுகைக்கு யோக்யமான திருவடிகளிலே அவனை வைத்துக்கொண்டு'' என்று பொருளாகக்கடவது.

94. செற்றெழுந்து தீவிழித்துச் சென்றவிந்த வேழுலகும்
மற்றிவையா வென்று வாயங்காந்து—முற்றும்
மறையவற்குக் காட்டிய மாயவனை யல்லால்
இறையேனு மேத்தா தென்நா.

பதவுரை:— (1) எழுந்து–(உலகையெல்லாம் அழிப்பதற்காகக்) கிளர்ந்தெழுந்து, **தீ விழித்து**—நெருப்பெழும்படியாக விழித்துப்பார்த்து, **செற்று**–(எல்லாவுலகங்களையும்) அழித்து, **'சென்ற இந்த ஏழ் உலகும் மற்று இவை'**—'(என் வயிற்றினுள்ளே) சென்ற இந்த ஏழு உலகங்களும் இவையே' (என்று சொல்லி), **ஆவென்று வாய் அங்காந்து**—ஆவென்று வாயைத்திறந்து, **முற்றும்**–எல்லாவுலகையும், **மறையவற்கு**–வைதிகனான மார்க்கண்டேய முனிவனுக்கு, **காட்டிய**—காண்பித்தருளிய, **மாயவனை அல்லால்**—அகடிதகடநாசக்தியுடன் கூடிய எம்பிரானைத்தவிர (வேறொருவனை), **என் நா**–என்னுடைய நாக்கு, **இறையேனும்**—சிறிதுபோதும், **ஏத்தாது**—துதிக்காது.

மான அபசாரத்தைக் கண்டால் கோபவசப்படுவாயாகையாலே விரோதிகளை அழித்தபின்பும் கோபம் தணியாது. அதனாலேதான் இரணியனை அழித்தபின்பும் எயிறிலக வாய்மடித்தாய் என்கை. இதிலிருந்து இரணியனை ஓரரியாய் ஊனிடந்ததும் பாகவதாபசாரம் பொறுமையாலேயே என்று விளங்குகிறது என்று கருத்து. ''பொன்னாழிக் கையால் நின் சேவடியை ஈடழியச் செற்று'' என்று பாடமானபோது ''பூவடிவையீடழித்த பொன்னாழிக்கையால் நின் சேவடிமேல் பொறியுகிரால் ஈடழிய'' என்று கூட்டி, ''புஷ்பத்திலும் மென்மைமிக்கதாய் ஆசைப்படத்தக்க திருவாழியையுடையதான திருக்கையாலே அன்பர்களை வைத்துக்கொள்ளவேண்டிய திருவடிகளிலே கிடத்தி, அழகிய திருவுகிராலே அவனை அழித்தது'' என்று பொருள்கொள்வது.

அவ:—தன்னை ஆச்ரயித்தார்க்குத்தன் படிகளெல்லா வற்றையும் காட்டும் ஸ்வபா₄வனனவனையல்லது என் நாவா னது வேறு சிலரை ஏத்தாது என்கிறார்.

உரை:—அதிப்ரவ்ருத்தமான இவற்றை அழிக்கக்கடவ தாகப் பெரிய உத்₃யோக₃த்தோடே கிளர்ந்து, அகவாயில் சீற்றந்தோற்ற நெருப்பெழப்பார்த்து அழித்துப்பொகட்டு, தன் பக்கலிலே உபஸம்ஹ்ருதமாய் வந்து சேர்ந்துகிடக்கிற இந்த ஸப்த லோகங்களையும் அழித்துப்பொகட்டு, அதுக்கு மேலே, 'அழிந்துபோன வஸ்துக்கள் இவைகாண்' என்று

அவ:—தன்னை அடைந்தவர்களுக்குத் தன் பெருமைகள் எல்லா வற்றையும் காட்டும் தன்மையை உடையவனைப் புகழுமேயொழிய என் நாவானது வேறொருவரைத் துதிக்காது என்கிறார். மார்க் கண்டேயனுக்குத் தன் வயிற்றில் எல்லாப்பொருள்களையும் காட்டின தாக மஹாபாரதத்தில்(ஆரண்யபர்வத்தில்)ஒரு விருத்தாந்தமுண்டு. இப்பாசுரத்தில் அந்த விருத்தாந்தத்தைச் சொல்லுவதாக ஒரு நிர் வாஹமும், பஞ்சபாண்டவர்க்காகத் தூது நடந்தபோது பொய்யா சனமிட்ட துரியோதனனின் சபையில் விச்வருபம் காட்டிய விருத் தாந்தத்தைச் சொல்லுவதாக மற்றொரு நிர்வாஹமும் உண்டு. இரண்டையும் கிரமமாக விவரிப்போம்.

வ்யா:-மார்க்கண்டேயவிருத்தாந்த நிர்வாஹம் பின்வருமாறு:- (எழுந்து)கோலாலே கண்ணைக்கிளறிக்கொள்ள முற்பட்ட குழந்தை யிடமிருந்து கோலைப்பிடுங்கியெறியும் தாயைப்போலே, ஈச்வரன் கொடுத்த சரீரேந்திரியங்களைக் கொண்டு பொறுக்கவொண்ணாத படி தவறான வழியிலே சென்றுவிட்ட பிராணிகளைத் தமக்குத்தாமே மேன்மேலும் தீமையை விளைத்துக்கொள்ள முடியாதபடி சரீராதி வியோகத்தைச்செய்து அழிக்கத் திருவுள்ளம்பற்றிப் பெருமுயற்சி யோடே கிளர்ந்தெழுந்து. (தீ விழித்து) இவர்களுடைய தகாத செயல்களாலே தன் நெஞ்சிலேயுண்டான கோபம் வெளிப்படும்படி நெருப்பெழத் திருக்கண்களாலே பார்த்து, அப்பார்வையாலேயே இவர்களைப் பெரும்பாலும் முடித்து. (சென்ற இந்த ஏழுலகும் செற்று) ஸம்ஹரிக்கப்பட்டுத் தன்னிடம் வந்து சேர்ந்துகிடக்கும் இந்த ஏழுலகங்களையும் நாமரூபப்பிரிவு இல்லாதபடி அழித்துப் போட்டு. (ஏழுலகும்) எல்லாவுலகுக்கும் உபலக்ஷணம். (மற்று)

தன் திருப்பவளத்தைத் திறந்து, **"तदपश्यमहं सर्वं" (தத$_3$பஸ்ய மஹம் ஸர்வம்)** *என்னும்படி ஸகலஜகத்தையும் வைதி$_3$கனை மார்க்கண்டே$_3$யபகவானுக்கு முன்பிருந்த கட்டளையிலே காட்டின ஆஸ்சர்யசக்தியுக்தனையவனையொழிய ஏத்தப்பெருமல் உருவிக்கிடக்கிற என் நாவானது, பரவ்யூஹாதிகளான அவஸ்த$_2$ாந்தரங்களில் ஏகதே$_3$சமும் ஸ்தோத்ரம் பண்ணுது.*

அதற்குமேலே. (இவையாவென்று) அந்த அழிந்துபோன பொருள்கள் இவையன்றோ என்று.(வாயங்காந்து)தன் திருவாயை முழுவதும் திறந்து. (முற்றும்)

"யச்ச கிஞ்சிந்மயா லோகே த்$_3$ருஷ்டம் ஸ்த$_2$ாவரஜங்க$_3$மம்।
தத$_3$பச்யமஹம் ஸர்வம் தஸ்ய குக்ஷௌ மஹாத்மந:॥"
[பார-ஆரண்ய 191-123]

[உலகத்தில். அசைபவையும், அசையாதவையுமான எப்பதார்த்தங்கள் என்னால் பார்க்கப்பட்டனவோ, அவையெல்லாவற்றையும், அந்த மஹாபுருஷனுடைய திருவயிற்றில் நான் பார்த்தேன்.] என்கிற படியே அழிந்துகிடந்த உலகம் முழுவதையும். (மறையவற்குக் காட்டிய மாயவனை) வைதிகனை மார்க்கண்டேய பகவானுக்கு முன்பிருந்தபடியே காட்டிய ஆச்சர்யபூதனை. (மாயவனை) இதென்ன ஆச்சர்யம்! எல்லாப்பொருள்களும் அழிந்தபின்பும் மார்க்கண்டேய பகவானைக் காணும்படி விட்டுவைத்திருந்தது ஓராச்சரியம்! நாமரூப விபாகமில்லாதபடி அழிக்கப்பட்ட பொருள்களை முன்பிருந்தபடியே அவனுக்குக் காட்டியது மற்றுமோர் ஆச்சரியம்! இவ்வாச்சரியச் செயல்களையெல்லாம் அக$_4$டிதக$_4$டநாசக்தியுடைய இவனையல்லது வேறொருவரால் இயற்றமுடியாது என்று கருத்து. (மாயவனையல்லால் இறையேனும் ஏத்தாது என் நா) அந்த மாயப்பிரானை வடதளசாயியையொழியப் பரம், வியூஹம், மற்ற விபவங்கள் ஆகிய ரூபாந்தரங்களில் ஒன்றையும் என் நாவானது துதிக்காது. (என் நா) அவனைத்துதிக்கப்பெருமல் பட்டினிகிடக்கிற என் நா. (என் நா ஏத்தாது) "திருமாலையல்லது தெய்வமென்றேத்தேன்" [64] என்றவிடத்தில் தாம் தேவதாந்தரபஜனம் செய்யாதவர் என்பதை அறிவித்துவிட்டாராகையாலே இங்கு மற்ற தெய்வங்களை எடுத்துக்கழிக்க இடமில்லை. ஆகையாலே பரமபுருஷனுடைய ரூபாந்தரங்களையே இங்கு கழிக்கிறாராகக்கடவது.

பதவுரை:—(2) **செற்று எழுந்து**—கோபித்து எழுந்து, **தீ விழித்து**—(துரியோதனன் முதலியவர்களை நோக்கி) நெருப்பெழும்படியாக விழித்துப்பார்த்து, **'சென்ற இந்த ஏழ் உலகும் மற்று இவை'** — 'செல்லாநின்றனவான இந்த ஏழு லோகங்களும் இவையே' (என்று சொல்லி), **ஆவென்று வாய் அங்காந்து**—ஆவென்று வாயைத் திறந்து, **முற்றும்**—எல்லாவுலகையும், **மறையவர்க்கு**—பீஷ்மர் துரோணர் முதலிய வைதிகர்களுக்கு, **காட்டிய**-(தன் வாயில்) காண்பித்தருளிய, **மாயவனை அல்லால்**—ஆச்சர்ய சக்தியுடன் கூடிய க்ருஷ்ணனைத்தவிர (மற்றொருவனை), **என் நா**—என்னுடைய நாக்கானது, **இறையேனும்**—சிறிதும், **ஏத்தாது**—புகழாது.

அன்றிக்கே, பாரதஸமரத்திலே பீஷ்மாதிகளுக்கு வைச்வரூப்யம் காட்டினபடியை இப்பாட்டிலே சொல்லு

இனி, பாரதயுத்தத்திற்கு முன், துர்யோதன சபையிலே துரியோதனன் பொய்யாஸனமிட்டபோது பீஷ்மர் முதலானார்க்கு விச்வரூபம் காட்டியதைக் கூறுவதாக விவரித்தருளிய பெரியவாச்சான் பிள்ளையின் இரண்டாவது நிர்வாஹத்தைக் காண்போம். (செற்றெழுந்து தீவிழித்து) "நீ தூதுவந்ததும் தவறு; பாண்டவர்கள் உன்னைத் தூதுவிட்டதும் தவறு" என்று கூறியும், பொய்யாஸனமிட்டும் விதுரனைப் பழித்தும் பகவத் பாகவதாபசாரங்களைச் செய்த துர்யோதனாதியரின் மேல் கோபித்தெழுந்து, நெருப்பெழும்படியாக அவர்களை விழித்து. (சென்ற இந்த ஏழுலகும் மற்றிவை ஆ என்று வாய் அங்காந்து) வெளியிலே செல்லா நின்ற ஏழுலகங்களையும் இதோ என் வாயிலே காணுங்கள் என்று தன் வாயைத் திறந்து. (முற்றும் மறையவர்க்குக் காட்டிய மாயவனை) எல்லாவுலகையும் பீஷ்மர், துரோணர் முதலான வைதிகர்களுக்குத் தன் வாயிலேயே காட்டிய ஆச்சர்யபூதனை. (மாயவனை) வெளியிலேயுள்ள உலகங்களைத் தன்வாயிலே காட்டிய அகடிதகடநாசக்தியைச் சொல்லுகிறது. மற்றவை முன்போல்.

இனி, பாரதயுத்தத்திலே, அர்ஜுனனுக்கு விச்வரூபம் காட்டிய போது, பீஷ்மாதிகளுக்கும் அந்த விச்வரூபத்தைக் காட்டியபடியைச்

கிறதாகவுமாம். அப்போது கிளர்ந்து நெருப்பெழப் பார்த்து ஸம்ஹரித்துச் செல்லுகிற இந்த ஸகலலோகங்களையும் **“वक्त्राणि ते त्वरमाणा विशन्ति” (வக்த்ராணி தே த்வரமாணு விஶந்தி)** என்கிறபடியே தன்னுடைய கோபாக்₃னி யாலே ஜ்வலித்துக்கிளருகிற திருப்பவளத்திலே விழுந்து நசித்துப் போகிறபடியை வைதி₃கரான பீ₄ஷ்மாதி₃களுக்குக் காட்டின ஆச்சர்யபூ₄தனையொழிய என் நா ஏத்தாது என்று பொருளாகக்கடவது. பீ₄ஷ்மாதிகள் விஷயமானபோது

சொல்லுவதாக அப்பிள்ளையுரையில் விவரிக்கப்பட்ட நிர்வாஹத்தைக் காண்போம். (செற்றெழுந்து...அங்காந்து)

“அமீ ஸர்வே த்₄ருதராஷ்ட்ரஸ்ய புத்ரா:
ஸர்வைஸ் ஸஹைவாவநிபாலஸங்கை₄: ।
பீ₄ஷ்மோ த்₃ரோண: ஸூதபுத்ரஸ் தத₂ாஸௌ
ஸஹாஸ்மதீ₃யைரபி யோத₄முக்₂யை: ॥
வக்த்ராணி தே த்வரமாணு விசந்தி
த₃ம்ஷ்ட்ராகராளாநி ப₄யாநகாநி ।
கேசித்₃விலக்₃நா த₃சநாந்தரேஷு
ஸந்த்₃ருச்யந்தே சூர்ணிதைருத்தமாங்கை₃: ॥”

[கீதை 11-16, 17]

[திருதராஷ்டிரனின் புத்திரனை இவர்கள் அனைவரும், அவர்களைச் சேர்ந்த அரசர் கூட்டங்களும், பீஷ்மரும், துரோணரும், கர்ணனும் நம்மைச்சேர்ந்த வீரர் தலைவர்கள் பலரும், பற்களோடு திறந்து கொண்டிருப்பவையாய், பயங்கரமானவையான உன் வாய்களினுள் வெகுவேகமாகச் செல்கின்றனர். அவர்களில் சிலர் உன் பல்லிடுக்கு களிலே நசுக்கப்பெற்ற தலைகளோடு காணப்படுகின்றனர்.] என்று சொல்லப்பட்டபடியே அந்த விச்வரூபதரிசனத்தின்போது, எல்லா வுலகையும் கோபித்தெழுந்து நெருப்பெழப்பார்த்து, ஸம்ஹாரகாலத் தில் தன் வாயில் விழுகிற இந்த உலகங்கள் தன்னுடைய கோபத் தீயாலே ஒளிவிட்டெழுகிற திருவாயிலே விழுந்து நசித்துப்போகிற படியை வைதிகரான பீஷ்மர் துரோணர் முதலானருக்குக் காட்டிய ஆச்சர்யபூதனை என்றபடி. (மாயவனை) “பீ₄ஷ்மோத்₃ரோண:” என்று கீதையில் (11-16) சொல்லியபடியே பீஷ்மரும் துரோணரும் ஸம்

"மறையவர்க்கு" என்கிறவிது ரேபஹாந்தமாகக்கடவது. மார்க்கண்டேயவிஷயமானபோது னகரவொற்றாகக்கடவது.

95. நாவாயிலுண்டே நமோ நாரணா வென்று
ஓவா துரைக்கு முரையுண்டே—மூவாத
மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே என்னொருவர்
தீக்கதிக்கண் செல்லும் திறம்.

பதவுரை:—நா—(எம்பிரானைத் துதிப்பதற்கு உபகரண மான) நாக்கு, **வாயில் உண்டே**—(தேடிப்போகவேண்டாத படி) வாயிலேயே இருக்கிறதே; **ஓவாது**—(களைப்பில்லாமல்) பல தடவை, **உரைக்கும்**—சொல்லத்தக்க, **நமோ நாரணா என்றுஉரை**—திருமந்திரம், **உண்டே**-இருக்கிறதே; **மூவாத**—திரும்பி வருதலில்லாத, **மா கதிக்கண்**—பரம ப்ராப்யமான பரமபதத்தினுள், **செல்லும் வகை உண்டே**—செல்வதற்கு அர்ச்சிராதிமார்க்கம் (ஸித்தமாய்) இருக்கிறதே; (இப்படி

ஹரிக்கப்படுவதை அவர்கள் உயிருடனிருக்கும்போது அவர்களுக்கே காட்டிய ஆச்சரியத்தைச் சொல்லுகிறது. மற்றவை முன்போல்.

"இப்பாட்டு கீழ்ப்பாட்டில் வ்ருத்தாந்தமாகவுமாம்" என்று பெரியவாச்சான்பிள்ளை அவதாரிகையின் தொடக்கத்தில் அருளி யிருப்பதாலே, "வயிறழல வாளுருவி வந்தானை அஞ்ச எயிறிலக வாய்மடுத்ததென் நீ" என்று சென்ற பாசுரத்தில் அனுஸந்திக்கப் பட்ட நரசிங்கவிருத்தாந்தத்தையே இங்கும் அனுஸந்திப்பதாகவும் ஒரு நிர்வாஹமுண்டென்று தோற்றுகிறது. அப்போது 'மறைய வற்கு' என்று வைதிகோத்தமனான ப்ரஹ்லாதாழ்வானைச் சொல்லு கிறது. ஹிரண்யஸம்ஹாரத்திற்குப் பிறகு, எல்லாவுலகங்களும் ஸம்ஹாரகாலத்தில் தன் வாயினுள் விழுவதை ஸ்ரீப்ரஹ்லாதனுக்குக் காட்டினான் நரசிங்கன் என்று கருத்து.

மார்க்கண்டேயன் அல்லது ப்ரஹ்லாதனைக் குறிக்கும்போது ஒருமையாகையாலே "மறையவற்கு" [மறையவனுக்கு] என்று பாடம். பீஷ்மதுரோணார்களைக் குறிக்கும்போது பன்மையாகையாலே "மறையவர்க்கு" [மறையவர்களுக்கு] என்று பாடம்.

யிருக்கவும்), **தீ கதிக்கண்**—நரக மார்க்கத்தில். **ஒருவர்**—ஒரு சிலர், **செல்லும் திறம் என்**—போகின்றவழி எப்படி?

அவ:—இப்படி அவனை ஏத்துகைக்குப் பரிகரமான நாவைக் கொண்டு அவனை ஏத்தாதே சேதநர் அத்தை ஸம்ஸரிக்கைக்குப் பரிகரமாக்கிக்கொண்டபடி எங்ஙனே? என்று ஆச்சர்யப்படுகிறார்.

உரை—ஏத்துகைக்குப் பரிகரமான நாவானது புறம்பு போய்த் தேடவேண்டாதபடி தந்தாம் வாயிலே உண்டே; ஸஹஸ்ராக்ஷரீமாலாமந்த்ரம்போலே நெடுகவிருந்து சொன்னாலும் முடிவுகாணவொண்ணாதபடியிருக்கையன்றிக்கே, 'நமோ நாராயணாய' என்று ஒருகாலே சொல்லி இளைப்பாறலாம்படியான திருமந்த்ரம் உளதாயிரா நின்றதே; அபுநராவ்ருத்தி

அவ:—அவனையல்லது ஏத்தாத என் நாவைப்போலவே தாங்களும் அவனைத் துதிக்கவல்ல நாவைப்படைத்திருந்தும் அவனைத் துதிக்காமல் ஸம்ஸாரிகள், அந்த நாவை ஸம்ஸாரத்தை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ள எப்படித்தான் உபயோகிக்கின்றார்களோ! என்று ஆச்சர்யப்படுகிறார்.

வ்யா:-(நா வாயில் உண்டே) அவனைத் துதிக்க உறுப்பான நாவானது வெளியில் போய்த் தேடிக்கொண்டுவரவேண்டாதபடி அவரவர்கள் வாயிலேயே இருக்கிறதே! (நா) இது 'தாமுளரே தம்முள்ளம் உள்ளுளதே' [இர-திருவ-21] "சென்னியரே" [இர-திருவ-21] என்ற தமக்கும், தம் இந்திரியங்கள் அவயவங்கள் அனைத்துக்கும் உபலக்ஷணம். (நமோ நாரணாவென்று ஓவாதுரைக்கும் உரையுண்டே) ஸஹஸ்ராக்ஷரீமாலாமந்த்ரம் என்று ஒரு மந்திரம் உண்டு. அதை ஒருதடவை சொல்லுவதற்கும் பல மணிநேரம் மூச்சுப்பிடித்திருந்து சொல்லவேணும். அதைச் சொல்லும்போது ஏற்படும் சிரமத்தைக் காணும்போது, 'இதைச் சொல்லி சுவர்க்கம் புகுவதிலும், இதைச் சொல்லாமல் நரகம்போவதே மேலானது' என்னும் படியாயிருக்கும். அப்படியல்லாமல் சில கணங்களில் பலதடவை சொல்லி இளைப்பாறலாம்படியாய், ஒருகால் சொன்னாலும் மோக்ஷமளிக்கவல்ல எட்டே எழுத்துக்களைக்கொண்ட "ஓம் நமோ நாராயணாய" என்னும் திருவஷ்டாக்ஷரமந்திரம் ஸித்தமாயிருக்கிறதே!

லக்ஷணமாய், பரமப்ராப்யமான மோக்ஷத்திலே செல்லுகைக் கிடான உபாயமுண்டே; இப்படி உஜ்ஜீவனத்துக்குடலான நல்வழிபோகாமல் விநாஶத்துக்கிடான துர்மார்க்கங்களிலே சென்று ஒருவர் விழுகிற ப்ரகாரம் என்னுயிருக்கிறதோ என்று விஸ்மயப்படுகிருர்.

96. திறம்பாதென் நெஞ்சமே செங்கண்மால் கண்டாய்
அறம்பாவ மென்றிரண்டு மாவான்—புறந்தானிம்
மண்தான் மறிகடல்தான் மாருதந்தான் வான்தானே
கண்டாய் கடைக்கட் பிடி.

பதவுரை:—என் நெஞ்சமே—என் மனமே! **அறம் பாவம் என்று இரண்டும் ஆவான்**–புண்யம், பாபம் என்னும்இரண்டு வகைக் கருமங்களுக்கும் நிர்வாஹகன், **செம் கண் மால்**

(உரையுண்டே) இது "தாமரையின் பூவுளதே ஏத்தும் பொழுதுண்டே" [இர-திருவ 21] என்று கூறப்பட்ட மற்ற ஆச்ரயணோபகரணங்களுக்கும் உபலக்ஷணம். (மூவாத மாக்கதிக்கண் செல்லும் வகையுண்டே) திரும்பிவருதலில்லாத மஹாகதி (மேலான ப்ராப்யம்) ஆன மோக்ஷத்திற்குச் செல்ல அவரவர் நிலைக்கேற்றவாறு பக்தி ப்ரபத்தி முதலான வழிகள் ஸுலபமாயிருக்கின்றனவே. மூவாத-மூப்படையாத; அழியாத என்றபடி. (வகை) அர்ச்சிராதிகதியாகவுமாம். (என்னொருவர் தீக்கதிக்கண் செல்லும் திறம்) இப்படி உய்வுபெறலாம்படியான நல்வழியிற் செல்லாமல், அழிவிலே மூட்டும் தீயவழிகளிலே நா முதலான இந்திரியங்களை ஈடுபடுத்தி நரகங்களிலே விழுகிறவழி எப்படித்தான் பலருக்கு ஏற்படுகிறதோ என்று ஆச்சர்யப்படுகிருர். இவரோடு தோள்தீண்டியானவரும் "செவ்வே அருநரகம்சேர்வது அரிது" [இர-திருவ 21] என்ருர்.

"நாராயணேதி ஶப்₃தோ₃ऽஸ்தி வாக₃ஸ்தி வஶவர்த்திநீ|
ததா₂பி நரகே கோ₄ரே பதந்தீத்யேதத₃த்₃பு₄தம்||"

[நாராயண என்னும் சப்தம் உள்ளது; வாக்கு வசப்பட்டிருக்கிறது; அப்படியிருந்தும் கோரமான நரகத்தில் விழுகிருர்கள் என்பது மிகவாச்சரியம்.] என்னும் ப்ரமாணச்லோகமும் இவ்வர்த்தத்தையே அறிவிப்பது உணரத்தக்கது.

கண்டாய்— *செந்தாமரைக் கண்ணனை பெருமானே கிடாய்;* **இம் மண்தான்**—*இப்பூவுலகும்,* **மறி கடல் தான்**–*அலையெறியும் கடலும்,* **மாருதம் தான்**—*வாயுவும்,* **வான்**—*ஆகாயமும்,* **புறந்தான்**—*(இவற்றைக் காட்டிலும் வேறான) ஜீவனும், மஹாந் அஹங்காரம் முதலியவையும்,* **தானே கண்டாய்**—*அப்பெருமானே கிடாய்; (இவ்வர்த்தத்தை),* **திறம்பாது**—*தவறாமல்,* **கடைக்கண் பிடி**—*கடைசி வரையில் அறிவாயாக.*

அவ:—*லௌகிகர் செய்தபடி செய்ய; நெஞ்சே! நீ முந்துற முன்னம் நான் சொல்லுகிற இத்தை அழகிதாக புத்தி பண்ணு என்கிறார்.*

உரை:—*எனக்கு பவ்யமான நெஞ்சே! புண்யம் பாபமென்று சொல்லப்படுகிற இரண்டுக்கும் நிர்வாகனாய்ப்போருகிறவன் புண்டரீகாக்ஷனான ஸர்வேச்வரன்தானே கிடாய்.*

அவ:—உலகிலுள்ள ஸம்ஸாரிகள் தம் சரீரேந்த்ரியங்களைக் கொண்டு தீக்கதிக்கண் சென்றுகொண்டேயிருக்கட்டும். நெஞ்சே! நீ முதன்முதலில் நான் சொல்லுகிற பகவத்விஷயப்பெருமையை அறிவாயாக என்கிறார்.

வ்யா:–(என் நெஞ்சமே) எனக்கு வசப்பட்டிருக்கும் நெஞ்சே! (செங்கண்மால் கண்டாய் அறம்பாவம் என்றிரண்டும் ஆவான்) செந்தாமரைக் கண்ணனாகிற ஸர்வேச்வரனே புண்ணியம் பாவம் என்னும் இரண்டுக்கும் நிர்வாஹகனாவான். (செங்கண்மால்—அறம் பாவமாவான்) ஒருவனைநோக்கி வாத்ஸல்யத்தாலே கண்கள் சிவந்தானாகில் அவனுக்குப் புண்ணியத்தை வளரச்செய்கிறான்; மற்றொருவனைநோக்கிக் கோபத்தாலே கண்கள் சிவந்தானாகில் அவனுக்குப் பாபத்தை வளரச்செய்கிறான்.

ஏஷ ஹ்யேவைநம் ஸாது$_4$ கர்ம காரயதி
தம் யமேப்$_4$யோ லோகேப்$_4$ய உந்நிநீஷதி।
ஏஷ ஹ்யேவைநமஸாது$_4$ கர்ம காரயதி யமதே$_4$ா நிநீஷதி॥
[கௌஷீதகீ 2-64&65]

[எந்த ஜீவனை (அண்டத்தினுள்ளிருக்கும்) இந்த லோகங்களிருந்து மேலே (பரமபதத்திற்கு) அழைத்துச்செல்ல விரும்புகிறானோ,

இந்த பூமியும் அலேயெறிகிற கடலும் வாயுவும், ஆகாசமும், இவற்றுக்குப் புறம்பான மஹதாதிகளுமான இவற்றுக்கெல்லாம் நிர்வாஹகனுயிருக்கின்றுன் அந்தப்புண்டரீகாக்ஷன் தானேகிடாய்! முடிவில் வந்தால், இதுவே அர்த்ததத்வமென்று இத்தைத்தவருதபடி மனஸ்ஸிலே பிடித்துக்கொள்.

அவனே இந்தப் பரமாத்மாவே நல்ல கர்மங்களைப் பண்ணும்படி செய்கிருன்; எவனைக் கீழே தள்ள விரும்புகிருனே, அவனே இப் பரமபுருஷனே கெட்டகர்மங்களைப் பண்ணும்படி செய்கிருன்.] என்று மறைமுடியில் ஓதப்படுகிறதன்றே. (செங்கண்மால் கண்டாய்) ''தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ'' [சாந்1-7] [அவனுக்கு ஸூர்யனல் மலரும் தாமரைபோன்ற இருகண்கள் உள] என்று வேதாந்தங்களிலே பரம்பொருளுக்குச் சொல்லப்பட்ட அடையாளத்தை உடையவன் கிடாய்! (அறம்பாவம் என்றிரண்டுமாவான்) புண்ணியத்தைச் செய்தும், பாவத்தைத் தவிர்த்தும் போகும் நாம் எப்படி அவனுக்கு வசப்பட்டவர்களோ, அப்படியே அப்புண்ணிய பாவங்களும் அவனிட்ட வழக்காயிருப்பவை. அவனுக்கு வசப்பட்டவை வேறு ஏதேனுமுண்டோ எனில், இவனுக்குப் பரதந்திரமாயில்லாதிருப்பது ஒன்றுமில்லை என்கிருர் மேலே: (இம்மண்தான் மறிகடல்தான் மாருதம்தான் வான்தானே கண்டாய்) நாம் காண நிற்கும் பிருதிவியும், அலேயெறிகிற கடலாலே உபலக்ஷிதமான ஜலதத்வமும், வாயுதத்வமும், ஆகாசதத்வமும் இவற்றுலே உபலக்ஷிக்கப்பட்ட தேஜஸ்தத்வமும், இப்பஞ்சபூதங்களாலான அண்டமும், அதனுள்ளிருக்கும் எல்லா அதேனப்பொருள்களும் அவனிட்ட வழக்கே. (புறந்தான்) இவ்வண்டத்திற்கு வெளியேயுள்ள ப்ரக்ருதிமஹதஹங்காரங்களும் ஜீவனும் அவனிட்ட வழக்கே. (தானே கண்டாய்) அப்புண்டரீகாக்ஷன் ஒருவனேயன்றே இவையெல்லாவற்றுக்கும் ப்ரகாரியாய், சரீரியாய், சேஷியாய், நியாமகனாய், ஸ்வாமியாயிருக்கிருன். (திறம்பாதுகடைக்கண் பிடி) இவ்வர்த்தத்தைத் தவருமல் கடைசிவரையில் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிரு. (திறம்பாதென் நெஞ்சமே) பகவத் விஷயத்தில் அசையாமல் நிலைநிற்கும் என் நெஞ்சமே என்றுமாம். (திறம்பாது அறம்பாவம் என்றிரண்டும் ஆவான்) புண்யபாபங்களிரண்டும் அவனிட்ட வழக்கு என்பது ஒருபோதும் தப்பாது என்றுமாம். 'புண்யாபுண்யாவீச்வரப்ரீதிகோபௌ' [புண்ணியம் என்பது ஈச்வரனின் உகப்பேயாகும்; பாபம் என்பது' ஈச்வரனின் கோபமேயாகும்] என்று இவை அவனுடைய நிக்ர

97. பிடிசேர் களிறளித்த பேராளா உன்றன்
அடிசேர்ந் தருள்பெற்ற ளன்றே—பொடிசேர்
அனற்கங்கை யேற்ற னவிர்சடைமேல் பாய்ந்த
புனற்கங்கை யென்னும் பெயர்ப் பொன்.

பதவுரை:—பிடி சேர்—*பெண் யானையுடன் சேர்ந்து (விஷய ப்ரவணனாய்த்) திரிந்த,* **களிறு**—*கஜேந்திராழ்வானை,* **அளித்த**—*ரக்ஷித்த,* **பேராளா**—*மஹாநுபாவனே!* **பொடி சேர்**—*பஸ்மத்தை தரித்தவனாய்,* **அனற்கு**—*நெருப்புக்கு,* **அம் கை ஏற்றன்**—*அழகிய கையை ஏந்திய ருத்ரனுடைய,* **அவிர் சடை மேல்**—*ப்ரகாசிக்கிற ஜடையின் மேலே,* **பாய்ந்த**—*விழுந்த,* **புனல்**—*ஜலத்தையுடைத்தான,* **கங்கை என்னும் பெயர்**—*கங்கை என்னும் பேரையுடைய,* **பொன்**—*சிறந்த பெண்,* **உன்தன் அடி சேர்ந்து**—*உன் திருவடிகளைக் கிட்டி,* **அருள்பெற்றாள் அன்றே** *திருவருளை அடைந்தாளல்லவா.*

அவ:—*'அறமும் அவனே' என்று பாவனமாகச் சொல்லா நின்றீர்; கங்கை தொடக்கமானவையும் பாவனமன்றோ? என்ன, அதினுடைய பாவநத்வமும் தச்சரணகமலஸம்ப$_3$ந்த$_4$ாயத்தம் என்கிறார்.*

ஹாநுக்ரஹங்களேயாயிருக்க, இவை அவனிட்ட வழக்கென்னச் சொல்ல வேணுமோ என்று கருத்து. (அறம்பாவம்) புண்யா புண்ய கர்மங்கள் என்றும், அவற்றால் ஏற்படும் நிக்ரஹாநுக்ரஹங்கள் என்றும், பாவனம் (பிறரைப் பரிசுத்தப்படுத்துவது), அபாவனம் (பிறரைப் தோஷமடைவிப்பது) என்றும் பொருள்கொள்ளலாம். எல்லாம் அவனிட்ட வழக்கு என்றபடி.

அவதாரிகை:—அறமும் அவனே என்று பாவனப்பொருள் அவன் ஒருவனேயென்றீர்; கங்கை முதலான மற்றும் சில பொருள்களும் பாவனமாயுள்ளனவே? என்ன, அவற்றின் பாவனத்தன்மையும் அவனோடு ஸம்பந்தம் பெற்றிருப்பதாலேயே ஏற்பட்டது என்கிறார். "அறம் பாவம் என்றிரண்டுமாவான்" என்றதுக்கு வ்யாக்யானம் இப்பாட்டு என்பர் பெரியவாச்சான்பிள்ளை.

உரை:— ஸ்வஹிதமறியாதே பிடியின் பக்கலிலே ப்ரவணமாய், அத்தை விட்டு நீங்கமாட்டாமல் கூடி வர்த்திக்கிற ஆனையை, அதின் வ்ருத்த தோஷம் பார்த்து இகழாதே தண்ணளி பண்ணி ரக்ஷித்த மஹாப்ரப$_4$ாவனானவனே! "भस्मशय्या-

---

வ்யா:-(பிடி சேர் களிறளித்த) பெண்யானையோடு சேர்ந்திருப்பதையே இயல்வாகக்கொண்ட ஆண்யானையை ரக்ஷித்தமையைச் சொல்லுகிறது. வேதாந்தங்களிலே, "சாந்தோ த$_3$ாந்த உபரதஸ் திதிக்ஷுஸ் ஸமாஹிதோ பூ$_4$த்வா ஆத்மந்யேவாத்மாநம் பச்யேத்" [ப்ருஹ 6-4-23] [உள்ளும் புறமுமிருக்கும் இந்திரியங்களை அடக்கினவனாகவும், (காம்யகர்மம் முதலியவற்றில்) ஆசையற்றவனாகவும், பொறுமையுடன் கூடியவனாகவும், கலங்காத மனத்தையுடையவனாகவுமிருந்துகொண்டு (தன்னுடைய) ஆத்மாவில் (அந்தர்யாமியாயிருக்கும்) பரமாத்மாவைக் காணக்கடவன்] என்று மோக்ஷமடைய விரும்புகிறவன் இந்திரியங்களை அடக்கியிருக்கவேணும் என்றது. இந்த கஜேந்திராழ்வானோ பிடிசேர்களிறாயிருந்தான். நற்குடிப்பிறப்பும், நல்லறிவும், நல்லொழுக்கமும் மோக்ஷமடையக் காரணம் என்று சாஸ்திரங்களில் கேள்விப்படுகிறோம். இவனோ தன் நன்மையைக் குறித்து அறிவற்ற யானையாயிருந்தான். அதிலும் பிடிசேர்களிறாகையாலே நல்லொழுக்கமும் அற்றவனாயிருந்தான். இப்படியிருந்தும் இவனை ரக்ஷித்தபடியென்! என்று கொண்டாடுகிறார். (அளித்த பேராளா) விஷயங்களில் மண்டித்திரிந்த கஜேந்திரனை அவனுடைய ஜந்மஜ்ஞாநவ்ருத்தங்களின் தாழ்வைப்பாராமல் ரக்ஷித்த பெருமையையுடையவனே! (பேராளா) பிடிசேர் களிற்றை வேறொருவரால் ரக்ஷிக்கமுடியாது; இவன் செய்தானாகில் முடியும் என்று கருத்து. அப்படியாகில், முன் எடுத்த சாஸ்திரவசனங்கள் என்னவது? எனில்: (அளித்த பேராளா) அவை ஒரு ஸாதனத்தைப் பற்றிநின்று அதனாலே அவனைப் பெறவேணுமென்றிருப்பார்க்கு அவசியமானவை. இந்த கஜேந்திராழ்வான் தன் முயற்சியினின்றும் மீண்டு அவனையே உபாயமாகக் கூப்பிட்டானாகையாலே அவை தேவையில்லை. அவனை உபாயமாகப் பற்றினார்க்கு, இல்லாத ஜந்மஜ்ஞாநவ்ருத்தங்களை ஸம்பாதித்துக்கொள்ளவோ, இருக்கின்றவைகளைக் குலைத்துக்கொள்ளவோ வேண்டியதில்லை. இருந்தபடியே அவனை உபாயமாகப்பற்றினால் போதுமானது என்னும் சாஸ்திரார்த்தத்தைக் காட்டுகிறார். விஷயங்களில் ஈடுபாடாகிற பாபத்தை

ஶயாந:" (ப₄ஸ்மஶய்யாஶ்பாந:) என்கிறபடியே பண்ணின தோஷத்துக்கு ப்ராயச்சித்தமாக எப்போதும் ப₄ஸ்மத்திலே சாயுமவனுய். அக்னிக்கு அழகிய கையை ஏற்ற பாதகியான

யுடைய இவனையும் ரக்ஷித்தமையாலே பாபம் இவனிட்ட வழக்கு என்பது தெளிவாகிறது. (உன் தன் அடிசேர்ந்தருள் பெற்ருள்ன்றே) "த்₃ரவீபூ₄தஸ் தத₃ா த₄ர்ம:" [ஈச்வரஸம்ஹிதை] என்கிறபடியே நான் முகன் திருவுலகளந்த திருவடியைக் குண்டிகை நீராலே விளக்க நினைத்தபோது தர்மமே அவனுடைய கமண்டலத்திலே கங்காஜல மாயிற்று. இப்படி புண்யஸ்வரூபமான கங்கையும் உன் திருவடியில் சேர்ந்த பின்பன்ரே அனைவரையும் பரிசுத்தப்படுத்தும் பெருமையை உடையதாயிற்று என்கிருர். இத்தால் புண்ணியமும் இவனிட்ட வழக்கு என்றதாயிற்று. இவ்வண்ணமாக இப்பாசுரம் "அறம்பாவம் என்றிரண்டும் ஆவான்" என்று சென்ற பாசுரத்தில் அருளியதற்கு வியாக்கியானமாயிருக்கிறது. (உன் தன் அடி சேர்ந்து அருள்பெற்ருளன்றே) பெரும்பாவம் செய்தவர்களையும் பரிசுத்தராக்க வல்லதாம்படி இயற்கையிலே சுத்தியையுடைய உன் திருவடிகளைச் சேர்ந்ததாலன்ரே கங்கையானவள் அனைவரையும் பரிசுத்தராக்கும் பெருமையைப் பெற்ருள். இப்பெருமை எம்பெருமானின் அருளாலே வந்ததாகையால் இதை அருள் என்கிருர். இதை எங்கே கண்டோம்? எனில்: (பொடி சேர் அனற்கு அங்கை ஏற்ருன் அவிர்சடைமேல் பாய்ந்த)

> மத்₃யம் பீத்வா கு₃ருத₃ாராம்ச்ச க₃த்வா
> ஸ்தேயம் க்ருத்வா ப்₃ரஹ்மஹத்யாச்ச க்ருத்வா।
> ப₄ஸ்மச்ச₂ந்தோ ப₄ஸ்மஶய்யாஶயாநோ
> ருத்₃ரத்₄யாயீ முச்யதே ஸர்வபாபை:॥
>
> [சாதாதபஸ்ம்ருதி]

[கள்ளைக் குடித்தாலும், குருதாரகமனம் பண்ணினுலும், திருடினுலும், ப்ரஹ்மஹத்தி செய்தாலும், சாம்பலைப் பூசிக்கொண்டு, சாம்பலாலான படுக்கையில் படுத்துக்கொண்டு. ருத்ரனை நினைத்துக் கொண்டிருப்பானுகில் (முன் சொல்லப்பட்ட) எல்லா பாபங்களினின்றும் நீங்கப் பெறுகிருன்.] என்கிறபடியே தந்தையின் தலையைக் கிள்ளியது ரிஷி பத்னிகளைக் கற்பழித்தது முதலிய மஹாபாதகங்களுக்குப் பிராயச்சித்தமாக சாம்பற் பொடியை உடம்பு முழுவதும் பூசிக்கொண்டு

ருத்ரனுடைய ஒளியையுடைத்தான ஜடையின் மேலே தச்சுத்த்யர்த்தமாக வந்து குதித்த நீரையுடையளாய் கங்கையென்னும் பேரையுடைய ச்லாக்யையான ஸ்த்ரீயானவள், பாதகிகளையும் பரிசுத்தராக்கும் ஸ்வத:ஶுத்தியை உடையனான உன் திருவடிகளைக் கிட்டியன்றோ அவள் அந்த ப்ரஸாதமெல்லாம் பெற்றது. விஷயப்ரவணமான களிற்றை ரக்ஷிக்கையாலே பாபம் இவனிட்ட வழக்கென்றும், கங்கையி னுடைய பாவநத்வம் தத்ஸம்பந்தாயத்தம் என்கையாலே புண்யம் அவனிட்ட வழக்கென்றும் சொல்லிற்றாய்த்து.

அதிலேயே என்றும் புரண்டு கொண்டிருப்பவனாய், தன் பாபங்களை எரிப்பதற்காக அக்னியை தரிப்பதற்காக அழகிய கையை ஏந்திய வனுமாய் இப்படி இரண்டு காரணங்களாலும் மஹாபாபங்கள் செய்தவன் என்று விளங்க நிற்கும் உருத்திரனுடைய ஒளியை உடையதான ஜடையிலே, ''பாவனார்த்தம் ஜடாமத்யே தூதார சிரஸா ஹர:'' [ஈச்வர ஸம்ஹிதை] [தன்னைப் பரிசுத்தப்படுத்திக்கொள்வ தற்காக ஜடையின் நடுவிலே தலையாலே ஸ்ரீபாததீர்த்தத்தைத் தாங்கினான் அரன்] என்கிறபடியே அவனைப் பரிசுத்தப்படுத்து வதற்காக வந்து குதித்ததைச் சொல்லுகிறார். (சடை) பொடி சேர்ந்திருப்பதும், அனற்கங்கையேற்றிருப்பதும் மாத்திரமன்றிக்கே சடையை தரித்துத் தவம்புரிவதும் பாபம் போவதற்காக என்று தோற்றுகிறது. இவற்றாலெல்லாம் பாபம் போயிற்றோ?' எனில், போகவில்லையென்றும், ஸ்ரீபாததீர்த்தத்தை தரித்தனாலேயே போயிற்று என்றும் காட்டுகிறார்; (பொடிசேர்...சடைமேல் பாய்ந்த புனற்கங்கை) என்னும் பதங்களாலே. தர்ம ஸ்வரூபமான இந்த கங்கைக்கு இப்படிப் பரிசுத்தப்படுத்தும் தன்மை இயற்கையிலேயே அமைந்ததோ? எனில்; இல்லையென்றும் ஸ்ரீபாதஸம்பந்தத்தாலேயே இப்பெருமையை இவள் அடைந்தாள் என்றும் காட்டுகிறார்,-(சடை மேற்பாய்ந்த புனற்கங்கை என்னும் பெயர்ப்பொன் உன்றன் அடி சேர்ந்து அருள் பெற்றாளன்றே) சங்கரன் சடையினில் பாய்ந்த நீரையுடைய கங்கை என்னும் பெயரையுடைய ஸ்திரீயானவள், பரம்பாவனமான உன்னுடைய திருவடியில் சேர்ந்ததனாலன்றோ பொடி சேர்ந்தும், அனற்கங்கையேற்றும், சடைதரித்தும் தீராத மஹாபாபங்களைச் செய்த உருத்திரனின் பாபங்களையும் போக்க வல்ல பெருமையைப் பெற்றாள் என்கிறார்.

98. பொன்திகழு மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத்தால் திரிவ ரேலும் ஒருவன்
ஒருவனங்கத் தென்று முளன்.

பதவுரை:—**பொன் திகழும் மேனி**– *பொன்போலே பிரகாசிக்கும் வடிவையும்*, **புரி சடை**—*பின்னின சடையையும்*, **அம் புண்ணியனும்**— *அழகிய புண்யத்தையும் உடையனான ருத்ரனும்*, **நின்று உலகம் தாய நெடுமாலும்**—*நின்று உலகங்களையெல்லாம் அளந்த ஸர்வேச்வரனும்*, **என்றும்**-*எப்பொழுதும்*, **இருவர் அங்கத்தால் திரிவரேலும்**—*இருவடிவுடன் திரிந்தார்களேயாகிலும்*, **ஒருவன்**—*(ஸாதக வேஷம் பூண்ட) சிவன்*, **ஒ ரு வ ன் அங்கத்து**—*நெடுமாலின் சரீரத்தைப்பற்றி*, **என்றும்**—*எக்காலத்திலும்*, **உளன்**—*ஸத்தையுடையனாயிருப்பன்*.

அவதாரிகை:— *"அவன் திருவடியில் பிறந்த கங்கையை ஜடையிலே தரித்தான் என்று ருத்ரனுக்குக் குறை சொல்லுகிறதென்? அவனும் ஒரு கார்யத்திலே அதி$_4$கரித்து ஈச்வரனுமாயன்றோ போருகிறது?" என்ன, அவனுடைய ஈச்வரத்வம் இவனுக்கு சரீர$_4$பூதனாகையால் வந்ததித்தனைபோக்கி ஸ்வத: இல்லை என்கிறார்*.

அவ:— "ஸர்வேச்வரனுடைய திருவடியிலே பிறந்த கங்கையை தரித்துப் பரிசுத்தனானன் என்று உருத்திரனுக்குக் குறை சொல்லலாமோ? அவனும் ஜகத்ஸம்ஹாரமாகிற ஒரு பெரிய காரியத்துக்கு அதிகாரியாய், 'ஈச்வரன்' என்று பிரஸித்திபெற்றவனுமாய், தன் பக்தர்கள் பலருக்குப் பல பலன்களைக் கொடுப்பவனாய், தனக்கேயுரிய லோகம், வாஹனம், கணங்கள் முதலானவற்றை உடையவனாயன்றோ இருக்கிறான்; அவனுடைய இப்பெருமைகளெல்லாம் பொய்யானவையோ?" என்று சிலர் கேட்க, "அவனுடைய பெருமைகளைப் பொய்யென்று சொல்லவில்லை; அவையெல்லாம் அவன் பரமபுருஷனுக்கு சரீரமாயிருப்பதால் வந்தவையேயொழிய இயற்கையில் ஏற்பட்டவையல்ல" என்கிறார்.

உரை:—பொன்போலே ஒளிவிடுகிற வடிவையும், பின்னின ஜடையையும் உடையனாய், இப்படி ஜடைகட்டி அனுஷ்டித்த அழகிய புண்யத்தையுடைய ருத்₃ரனும் ஸ்வைரமாக நின்று ருத்₃ரனோடு அல்லாதாரோடு வாசியற ஸகலலோகங்களையும் அநாயாஸேந அளந்துகொண்ட ஸர்வாதி₄கனான

வ்யா:—(பொன் திகழும் மேனி) பொன்னைப்போல் சிவந்து விளங்கும் இவனுடைய மேனியைப் பார்த்தாலே இவன் ஸர்வேச்வரனல்லன் என்று தோற்றுமே! "நீலதோயத₃மத்₄யஸ்த₂ா" [தை-நா 11] என்று வேதங்கள் நீலமேகத் திருமேனியையுடையவனையன்றோ பரம்பொருளாகப் பறைசாற்றின. இதுமட்டுமோ? (புரிசடை) பின்னின சடைமுடியைப் பார்த்தாலும் இவன் ஒருவனைக் குறித்துத் தவம்புரிகிறான் என்று தோற்றுமே! இவனா பரம்பொருளாகமுடியும்? தாழ்சடையானுக்கும் நீண்முடியானுக்கும் உள்ள வித்தியாசம் தன்னடையே தோற்றுமே! (அம் புண்ணியனும்) இப்படிச் சடைகட்டி அனுஷ்டித்த அழகிய புண்ணியத்தையுடைய இவன் பரம்பொருளாகமுடியுமோ? "ந மாம் கர்மாணி லிம்பந்தி" [கீதை] [என்னைப் புண்யபாபகர்மங்கள் தொடமாட்டா] என்றவனன்றோ பரம்பொருளாகமுடியும்? (அம்புண்ணியனும்) அழகிய புண்ணியத்தை அனுஷ்டித்தவனும்.

மஹாதே₃வஸ் ஸர்வமேதே₄ மஹாத்மா
ஹுத்வாத்மாநம் தே₃வதே₃வோ ப₃பூ₄வ ।
ஸர்வாந் லோகாந் வ்யாப்ய விஷ்டப்₄ய கீர்த்யா
விராஜதே த்₃யுதிமாந் க்ருத்திவாஸா: ॥

[பார-சாந்தி 20-12]

[மஹாத்மாவான மஹாதேவர் ஸர்வமேதமென்னும் யாகத்தில் தன்னுடைய ஆத்மாவை ஹோமம் செய்து தேவர்களுள் தலைவரானார்; யானைத்தோலை உடுத்திய அவர் எல்லா உலகங்களையும் கீர்த்தியினால் வியாபித்து, (எட்டு ரூபங்களை) தரித்து, மிகுந்த காந்தியுள்ளவராய் விளங்குகிறார்.] என்கிறபடியே தன் ஈச்வரத்வமும் ஸாதனானுஷ்டானத்தாலேயன்றோ இவனுக்கு உண்டாயிற்று என்று கருத்து. (நின்றுலகம் தாய நெடுமாலும்) உருத்திரன் முதலான எல்லா தேவர்களின் தலையிலும் அவர்களை வணங்குகிறவர்கள் தலையிலும் ஒருபடியாகத் திருவடியை வைத்து நின்று உலகளந்த

ஸர்வேச்வரனுமாகிற இவர்கள் இருவரும், ஸர்வகாலத்தி லும் இரண்டு சரீரத்தை உடையவராய் அறிவுகேடர்க்கு ஒக்க நினைக்கலாம்படி திரிந்தார்களேயாகிலும், புண்ணிய னை ஒருவன், நெடுமாலான ஒருவனுக்கு ஶரீரபூ₄தனுய்க்

மிகப்பெரியவனன்றோ இவன். (நெடுமாலும்) திருவடியிலே துகை யுண்டவன் பரம்பொருளோ? திருவடியாலே துகைத்தவன் பரம் பொருளோ? என்பதை ஆராயக்கூடாதா? (நின்று) நமுசி முதலான எவராலும் தடை செய்யமுடியாதபடி நின்று. (உலகம் தாய) உல கனைத்தையும் அநாயாஸமாகத் தாவி அளந்துகொண்ட. (நெடு மாலும்) தாய் தன்குழந்தையை அணைப்பதுபோலே, இச்செயலைச் செய்ததும் சேதனரிடம் இவனுக்குள்ள பேரன்பாலேயன்றோ என்று மாம். இப்படித் தாயன்பையுடைய இவன் பரம்பொருளோ? தன் பக்த னிடம் "உன் பிள்ளையை அறுத்துத்தா" என்று கூறும் கொடுமையை உடையவன் பரம்பொருளோ? என்று கருத்து. (என்றும் இரு அரங் கத்தால் திரிவரேலும்) அரங்கம்–நாமரூபலோக பரிகராதிகள், என் றும் இருவரும் இருவிதமான நாமரூப வாஹனலோக க்ருத்ய பரி கராதிகளை உடையவர்களாய் ஸஞ்சரித்தார்களேயானாலும். ஒருவன் நாராயணன் முதலான பெயர் கொண்டிருந்தால் ஒருவன் அரன் முதலான பெயர் பூண்டு திரிகிறான். ஒருவன் கொண்டல் வண்ண னாய்த் திகழ்ந்தால் ஒருவன் பொன்திகழும் மேனியனாய் விளங்கு கிறான். ஒருவன் வேதாத்மாவான கருடனை வாஹனமாகக்கொண்டு ஸஞ்சரித்தால், ஒருவன் எருதின்மேல் ஏறித்திரிகிறான். ஒருவன் ஸ்ரீவைகுண்டலோகத்திலிருந்தால் ஒருவன் கைலாஸவாஸியாய் விளங்குகிறான். ஒருவன் ரக்ஷணத்தைச் செய்தால், ஒருவன் ஸம் ஹாரத்தைச் செய்கிறான். ஒருவன் நித்யஸூரிகணங்களால் சூழப் பெற்றிருந்தால், ஒருவன் பூதப்ரேதபிசாசகணங்களால் சூழப்பெற் றிருக்கிறான். ஒருவன் ஸாத்விகாசாரமுள்ள நூறு கோயில்களைப் பெற்றிருந்தால், ஒருவன் தாமஸாசாரமுள்ள ஆயிரங்கோயில்களைப் பெற்றிருக்கிறான். ஒருவன் ஸாத்விகர் சிலரை பக்தர்களாகப் பெற் றிருந்தால், ஒருவன் தாமஸர் பலரை பக்தர்களாகப் பெற்றிருக் கிறான். ஒருவன் வேதத்தாலும் ஸாத்விகசாஸ்திரத்தாலும் கோஷிக் கப்பட்டால், ஒருவன் சைவாகமத்தாலும் தாமஸசாஸ்திரத்தாலும் கோஷிக்கப்படுகிறான். இவற்றையெல்லாம் காணும் அறிவிலிகளுக்கு இருவரும் ஸமமானவரோ என்னும் ஐயம் விளையும்படியிருக்கிறது. (என்றும் திரிவரேலும்) இப்படி ஐயம் விளையும்படியாக என்றுமே

கொண்டு ஸர்வகாலத்திலும் லப்$_3$த$_4$ ஸத்தாகனாயிருக்கும். அன்றிக்கே ஒருவன், ஒருவன் திருமேனியில் ஏகதேசத்தைப் பற்றி லப்$_3$த$_4$ ஸத்தாகனாயிருக்கும் என்னவுமாம். இத்தால் 'பரன் திறமன்றிப் பல்லுலகீர் தெய்வம் மற்றில்லை' என்கிறார்.

விளங்கினார்களானாலும். ருத்ரபதவியும் ப்ரவாஹதோநித்யமாகை யாலே 'என்றும்' என்னக் குறையில்லை. (ஒருவன் ஒருவனங்கத்து என்றும் உளன்) பொன்திகழும் மேனிப் புரிசடையம்புண்ணியன் நின்றுலகம் தாய நெடுமாலின் சரீரமாயிருந்துகொண்டு என்றுமே ஸத்தைபெறுவான். அங்கத்து—அங்கமாக; சரீரமாக. (அங்கத்து என்றுமுளன்) "ஸ ப்$_3$ரஹ்மா ஸ சிவ:" [தை-நா-11] [அவனே பிரமனுக்கும் சிவனுக்கும் அந்தர்யாமி] "ப்$_3$ரஹ்மா நாராயண: சிவச்ச நாராயண: சக்ரச்ச நாராயண: திசச்ச நாராயண:" [பிரமனுக்கும், சிவனுக்கும், இந்திரனுக்கும், திக்கு களுக்கும் அந்தர்யாமி நாராயணனே.] "யஸ்யாத்மா சரீரம்" [எவனுக்கு எல்லா ஆத்மாக்களும் சரீரமோ] முதலான வேத வாக்கியங்கள் நாராயணனை சிவனுக்கு அந்தர்யாமியாகவும், சிவனை நாராயணனுக்கு சரீரமாகவும் கோஷிக்கையாலே சிவபதவி யிலிருப்பவன் என்றுமே நாராயணனின் சரீரமாயிருப்பவன் என்பதே வேதங்களின் ஒருமிடறான முடிவு என்று கருத்து. இப் படியல்லாமல் (இருவர் அங்கத்தால் திரிவரேலும்) என்று பிரித் தும் பொருள்கொள்ளலாம். இருவரும் ஸமானமானவரோ என்று அறிவிலிகள் ஐயமுறும்படி இருவரும் இரண்டு வடிவுகளை உடைய வர்களாய் ஸஞ்சரித்தார்களானாலும். (ஒருவன் ஒருவனங்கத்து என்றும் உளன்) சிவன் நெடுமாலின் திருமேனியிலே என்றுமே ஒருபுறம் அடங்கிநின்று ஸத்தைபெறுவான். "பச்யைகாத$_3$ச மே ருத்$_3$ராந் த$_3$க்ஷிணம் பார்ச்வமாச்ரிதாந்" [என்னுடைய உடம்பில் வலது புறத்தைப் பற்றியிருக்கும் பதினொரு உருத்திரர்களையும் காண்பா யாக.] என்று பாரதம் மோக்ஷதர்மத்தில் கூறப்பட்டது. "ப்$_3$ரஹ்மாண மீசம்" என்றான் கீதையில் அர்ஜுனனும். "வலத்தனன் திரிபுரமெரித் தவன்" [திருவாய் 1-3-3] என்றார் ஆழ்வாரும். (என்றும் உளன்) ஒவ்வொரு காலத்திலே எம்பெருமான் தன் ஸௌசீல்யத்தாலே தாமஸப்ரக்ருதியான சிவனுக்குப் பரமஸத்வமயமான தன் திரு மேனியில் இடங்கொடுத்த மஹாகுணத்தை நினைத்து ஆழ்வார்கள் எப்போதுமே இடங்கொடுப்பதுபோலே அருளிச்செய்வர்கள். சிவன் பிரமன் முதலானாரும் எம்பெருமான் திருமேனியில் ஒருகால் தமக்கு

99. உளன்கண்டாய் நன்னெஞ்சே உத்தம னென்றும்
உளன்கண்டாய் உள்ளுவா ருள்ளத்—துளன் கண்டாய்
வெள்ளத்தி னுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தினுள்ளானென் றோர்.

பதவுரை:— நல் நெஞ்சே—*அநுகூலமான மனமே!* **உத்தமன்**—*புருஷோத்தமன்,* **என்றும்**—*எல்லாக்காலங்களிலும்,* **உளன் கண்டாய்**—*(நம்மை ரக்ஷிப்பதற்காகவே) இருக்கிறான்;* **உள்ளுவார் உள்ளத்து**—*தன்னை நினைப்பவர்கள் மனத்திலே,* **உளன் கண்டாய்**—*நித்யவாஸம் செய்கிறான்;* **வெள்ளத்தில் உள்ளானும்**—*திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளுபவனும்,* **வேங்கடத்து மேயானும்**—*திருமலையிலே நிற்கிறவனும்,* **உள்ளத்தில் உள்ளான் என்று**—*(என்) ஹ்ருதயத்தில் நித்யவாஸம் பண்ணுகிறவன் என,* **ஓர்**—*அறிவாயாக.*

இடம்கொடுத்த பெருமையை என்றுமே நினைத்திருப்பராகையாலே "என்றுமுளன்" என்கிறாராகவுமாம். "வலத்தனன்" என்ற பாசுரத்தின் ஈட்டிலே "இப்படி பின்னை ஸர்வகாலமும் இவர்கள் இருப்பர்களோ? என்னில்: ஆபத்துக்களில் திருமேனியிலே இடம் கொடுக்கும். அது மஹாகுணமாகையாலே, ஆழ்வார்கள் எப்போதும் ஒக்க அருளிச்செய்து கொண்டு போருவர்கள். ஸாமந்தர்க்கு (சிற்றரசர்க்கு) புறம்பே நாடுகள் கனக்க உண்டானாலும், மாளிகைக்குள்ளே (அரண்மனைக்குள்ளே) செம்பாலே நாழியரிசியைத் தங்களுக்கு வரிசையாக நினைத்திருப்பார்களிறே. அப்படியே இவர்களும் திருமேனியிலே பண்ணிவைக்கும் ப்ராப்தி விடார்களிறே. ஒரு கலஹங்களிலே அடையவளைந்தானுக்குள்ளே குடிவாங்கியிருந்து, காலம் தெளிந்தவாறே புறம்பே புறப்பட்டாலும் இவ்விடம் இன்னார் பற்று; இவ்விடம் இன்னார் பற்று என்று பின்னும் ப்ராப்தி சொல்லிவைக்குமாபோலே" என்று அருளியிருப்பது இங்கு அனுஸந்திக்கத்தக்கது. ஒன்றும் தேவிலே "பரன் திறமன்றிப் பல்லுலகீர் தெய்வம் மற்றில்லை" [திருவாய் 4-10-3] என்றும், "பேச நின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே" [திருவாய் 4-10-4] என்றும் நம்மாழ்வார் அருளிச்செய்ததற்கு மூலமாயிருப்பது இப்பாசுரமாகும்.

அவதாரிகை:— இப்படி ஸர்வரக்ஷகனை ஸர்வேச்வரன் க்ஷீராப்$_3$தி$_4$ முதலான இடங்களிலே வந்து ஸந்நிஹிதனாய்த்து விலக்காதார் நெஞ்சு பெறுமளவுங்கிடாய்! நெஞ்சே! இத்தை பு$_3$த்$_3$தி பண்ணு என்கிறார்.

வ்யா:— 'அவன் ஒருவன் உளன்' என்று சொன்னால் உகக்கும் நல்ல நெஞ்சே! "பிறர்க்கு நன்மைவேணும்" என்று எப்போதும் சிந்தித்தபடியே இருக்கும் உத்தமபுருஷன், நம்

அவதாரிகை:-உலகில் ஜ்ஞாநசக்திமுதலானவற்றில் பெரியவர்களாயிருக்கும் உருத்திரன் முதலானோரும், தங்கள் நெஞ்சாறத் தாங்கள் ஜீவர்களே என்று அறிந்திருந்தும், தங்களையே ஈச்வரராகத் தாங்களும் மயங்கிப் பிறரையும் மயக்குவதைக்கண்டு, ஆழ்வாருடைய திருவுள்ளம் 'நாமும் இப்படி ஆகிவிடுவோமோ' என்று பயப்பட, 'தம் முயற்சியாலே அவனைக்கண்ட அவர்களுக்கு அப்படியாக இடமுண்டு; நம் விலக்காமையையே பற்றாகக்கொண்டு அவன் தானே முயன்று பெற்ற நாம் அப்படியாகமாட்டோம்; அப்படியொருகால் நாமே நம் கழுத்தில் கயிறிட்டுக்கொண்டாலும், அக்கயிற்றை அறுத்து விட்டு நம்மைக் காப்பாற்ற அவனுளன்; இதை அறிவாயாக' என்கிறார்.

வ்யா:-(உளன் கண்டாய்) பல பாசுரங்களில் பகவத் ஸ்வரூபரூப குண விபூதிப் பெருமைகளையெல்லாம் பிறருக்கு உபதேசித்தவர், இப்பாசுரத்தில் ஈச்வரஸத்$_3$பா$_4$வத்தை நெஞ்சுக்குச் சொல்லுகிறார் என்பது பொருந்தாது. நம்மை ரக்ஷிப்பதால் தன் உண்மை (ஸத்தை-இருப்பு) ஏற்படுகிறது என்று சொல்லலாம்படி நம்முடைய ரக்ஷணத்திலே ஊன்றியிருக்கிறானன்றோ ஸர்வேச்வரன் என்கிறார். (உளன் கண்டாய்) நம்மை நம்மிடமே காட்டிக்கொடுத்து அழியச் செய்யாமல் ரக்ஷிப்பதற்கு ஸர்வேச்வரன் இருக்கிறானே! பிறரால் நமக்கு வரும் தீங்கைக் காட்டிலும், நம்மால் நமக்கு வரும் தீங்கன்றோ அதிகமாயிருக்கிறது. பிறரைக் கண்டு அஞ்சுவதைவிட நம்மைக்கண்டன்றோ நாம் அஞ்சவேண்டியிருக்கிறது. நம்மிடம் நம்மைக் காட்டிக் கொடுக்காமலிருப்பதற்காகவன்றோ அவனையே உபாயமாகப் பற்றவேண்டியிருக்கிறது. (கண்டாய்) நான் ஒருகால் ஆத்மநாசத்தை விளைத்துக்கொள்ள முற்பட்டாலும், நம்மை ரக்ஷித்து ஸத்தைபெறும் அவனை நீ நினைப்பாயாக என்கிறார். "பித்தத்தாலே

முடைய ரக்ஷணத்தாலே தன் ஸத்தையாம்படி உளனுமவன் கிடாய்! நாம் உளரானவன்றேடு இலரானவன்றேடு வாசி யற ஸர்வகாலத்திலும் நம்மை ரக்ஷிக்கையிலே தீக்ஷித்து

மோஹித்துக் கழுத்திலே கயிறிட்டுக்கொண்டேனுகில், அறுத்துவிழ விடுகிடாய் என்று அறிவுடையார்க்குச் சொல்லிவைக்குமாப்போலே'' என்பர் பெரியவாச்சான்பிள்ளை. நீர்மயங்கியபோதிலும் தெளிவா யிருக்கும் சிறப்பு எனக்குண்டோ? என்று திருவுள்ளத்துக்குக் கருத்தாக, (நன்னெஞ்சே) அவனே நமக்கு ரக்ஷகன் என்னும் அர்த் தத்தை எனக்கும் உபதேசிக்க வல்லமைபெற்றிருக்கிருயன்றே நீ! 'முந்துற்ற நெஞ்சே' [பெரியதிருவ-1] என்கிறபடியே பகவத்விஷ யத்தில் என்னிலும் முற்பட்டு நிற்பாயன்றே நீ! (நன்னெஞ்சே!) 'நம்மை ரக்ஷித்து ஸத்தைபெறுவான் அவன்' என்று கூறினல், இது எப்படிக்கூடும் என்று ஆக்ஷேபிக்காமல், இசைந்து உகக்கும் நன்மையை உடைய நெஞ்சே! என்கிருராகவுமாம். ஸர்வேச்வரனை அவன் பிறரை ரக்ஷித்து ஸத்தைபெறுவதென்பது கூடுமோ? எனில்: (உத்தமன்) அவன் புருஷோத்தமனுகையாலே கூடும் என்கிருர். பிறரை ஹிம்ஸிப்பதே யாத்ரையாயிருப்பவன் அத$_4$மாத$_4$மன். சுய நலத்திற்காகப் பிறரை ஹிம்ஸிப்பவன் அதமன். சுயநலத்தையும் விட்டுப் பிறரை ரக்ஷிப்பவன் மத்யமன். பிறரை ரக்ஷித்தாலொழிய உயிர்தரிக்கமாட்டாமையாலே என்றும் பிறர்க்கு நன்மையை நிணைத்தவண்ணமேயிருப்பவன் உத்தமன். நம்மை ரக்ஷித்துத் தான் உளனுயிருக்கும் தன்மை, நாம் அனுகூலராயிருக்கும் இன்று தானே? எனில்: (என்றும் உளன் கண்டாய்) **"அஸந்நேவ ஸ ப$_4$வதி அஸத்$_3$ ப்$_3$ரஹ்மேதி வேத$_3$ சேத்''** [தை-ஆந-6] என்கிறபடியே ப்ரஹ்ம ஜ்ஞானமில்லாமையாலே நாம் இல்லாதவராயிருந்தவன்றேடு, **''அஸ்தி ப்$_3$ரஹ்மேதி சேத்$_3$வேத$_3$ ஸந்தமேநம் ததோ விது$_3$:''** [தை-ஆந6] என்கிறபடியே ப்ரஹ்மஜ்ஞாநமிருந்தமையாலே நாம் உள்ராயிருந்த வன்றேடு வாசியற என்றுமே நம்மை ரக்ஷிக்க உறுதிபூண்டு, அதனலே உளனுயிருக்குமவன்கிடாய்! இந்நீர்மையுடையவன் எட் டாக் கனியாய், துர்லப$_4$னுயிருப்பானே? எனில்: (உள்ளத்து உளன் கண்டாய்) நம் நெஞ்சிலேயே அதிஸுலபனுய் எழுந்தருளியிருக் கிருன் கிடாய்! **"அனந்தன்பாலும் கருடன்பாலும் ஐதுநொய்தாக வைத்து என் மனந்தன்னுள்ளே வந்து வைகி''** [பெரியாழ்திரு 5-4-8] **''பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்தென் மனக் கடலில் வாழவல்ல மாயமணாள நம்பீ''** [பெரியாழ்திரு 5-4-9] ''வட

உளனாயிக்குமவன்கிடாய்! தான் புகுரப்புக்கால் ஆணையிட்டு விலக்காதே, அத்தைப் பொருந்தி அநுஸந்தி₄க்குமவர்களு டைய நெஞ்சிலே ஸாதரமாக நித்யவாஸம் பண்ணுமவன் கிடாய்! திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவனும், திரு மலையிலே நின்றருளினவனும், கிடப்பது நிற்பதாய் அங்கு பண்ணின க்ருஷியின் ப₂லமாக நம்முடைய ஹ்ருதயத்திலே வந்து புகுந்து "இடவகைகள் இகழ்ந்திட்டு" என்கிறபடியே

தடமும் வைகுந்தமும் மதிள் துவராபதியும் இடவகைகள் இகழ்ந் திட்டு என்பால் இடவகை கொண்டனையே" [பெரியாழ்திரு 5-4-10] என்கிறபடியே பரவ்யூஹவிப₄வார்ச்சாநிலைகளெல்லாம் நம்மைப் பெறுகைக்கு அவன் ஸாதநாநுஷ்டானம் செய்யுமிடங்களாகையாலே நம்மைப் பெற்றபின்பு இளங்கோயில்களான அவற்றைக் கைவிட்டு, "விச்வஸ்யாயதநம் மஹத்" [தை-நா] "நெஞ்சமே நீள்நகர்" [திருவாய் 3-8-2] என்கிறபடியே பெருங்கோயிலான நம் உள்ளத்திலே உகப் போடு புகுந்து நித்யவாஸம்செய்து நித்யஸத்தை பெற்றிருக்கிறான். இப்படி அவனை உள்ளத்திருத்துவதற்கு நாம் அநுஷ்டித்த ஸாதாநுஷ்டானமென்ன? எனில்: (உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்) தன்னை நெஞ்சிலே இருத்த இசைவார் உள்ளத்திலே இனிப்பிடித்துத் தள்ளினாலும் போகேன் என்று வாழ்கிறான்கிடாய்! தான் புகப்புககால் 'புகாதே!' என்று ஆணையிட்டுத் தடுக்காதவர் களுடைய நெஞ்சைவிட்டுப்போக அறியான்! இத்தால் ஜீவன்பககல் உள்ளது அத்வேஷமும் ஆபிமுக்யமுமே என்கிறது. நம் கைம்முதல் சிறியதாயிருக்க, நம்மைப் பெறுகைக்கு அவன் பெருமுயற்சி யெடுத்துக் கொள்ளுகிறான் என்கைக்கு ப்ரமாணமென்ன? எனில்: (வெள்ளத்தினுள்ளானும் வேங்கடத்துமேயானும் உள்ளத்தினுள் ளான் என்று ஓர்) அவனுடைய ஸாதநாநுஷ்டானத்துக்கு ப்ரத்யக்ஷ ப்ரமாணமிருந்தபடி கண்டாயே! என்கிறார். (வெள்ளத்தினுள்ளா னும்) திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவனும். இது பரம பதத்தில் இருந்தமையையும் காட்டும். (வேங்கடத்துமேயானும்) திருவேங்கடத்திலே பொருந்தி நின்றவனும். இது விப₄வாவதாரங் களில் நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் செய்த செயல்க ளனைத்தையும் காட்டும். இப்படிப் படாதனபட்டது எதற்காகவெனில்: (உள்ளத்தில் உள்ளான்) ஒரு சேதனனின் நெஞ்சிலே நித்யவாஸம் செய்வதற்காகவன்றோ என்கிறார். (உள்ளான்) இதைப்பெற்ற பின்பு, "இடவகைகள் இகழ்ந்திட்டு" [பெரியாழ்திரு 5-4-10] என்

அவ்விடங்களை அநாதரித்து, ஸாதரமாக நித்யவாஸம் பண்ணுமவன் என்று பு$_3$த்$_3$தி$_4$பண்ணு.

100. **ஓரடியும் சாடுதைத்த வொண்மலர்ச் சேவடியும்**
ஈரடியும் காணலா மென்னெஞ்சே—ஓரடியில்
தாயவனைக் கேசவனைத் தண்டுழாய் மாலைசேர்
மாயவனையே மனத்து வை.

முதல்திருவந்தாதி முற்றிற்று.
பொய்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதவுரை:—என் நெஞ்சே—என்னுடைய மனமே! **ஓர் அடியில் தாயவனை**—ஒரு திருவடியால் உலகம் முழுவதும் அளந்தவனை, **கேசவனை**—கேசி என்னும் அஸுரனை அழித்தவனை, **தண் துழாய்மாலை சேர்**—குளிர்ந்த திருத்துழாய் மாலையால் அலங்கரிக்கப்பட்டுள்ள, **மாயவனையே**—ஆச்சர்ய சேஷ்டிதங்களையுடைய எம்பெருமானையே, **மனத்து வை**—ஹ்ருதயத்திலே வைப்பாயாக; (இப்படி அவனைப்பற்றினால்) **ஓர் அடியும்**—திருவுலகளந்த திருவடியையும், **சாடு உதைத்த**—சகடம் முறிந்துபோம்படி உதைத்த, **ஒண்மலர் சே அடியும்**—அழகிய புஷ்பம்போல் சிவந்த திருப்பாதமுமான, **ஈரடியும்**—இரண்டு திருவடிகளையும், **காணலாம்**—ஸாக்ஷாத்கரிக்கலாம்.

அவதாரிகை:—இப்படி மேல்விழுந்து நம்மை ஆதரிக்கிறவனைப் பெறுகைக்கு உபாயமேதென்ன, அவனே ப்ராப்யம்; அவனைப்பெறுகைக்கு ப்ராபகமும் அவனே என்று அத்$_4$யவஸி என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

கிறபடியே பரவ்யூஹார்ச்சாவிபவநிலைகளையும் உபேக்ஷித்து இந்நெஞ்சில்லையேல் தனக்கு வாழ்வில்லை என்னும்படி பேருகப்போடே என்றும் இருந்தான். (வெள்ளத்தினுள்ளான்...உள்ளான்) என்றும் அவன் நம்மை ரக்ஷித்து உளனாயிருக்கிறபடிகளைக் காட்டுகிறாராகவுமாம். (ஓர்) இப்படி நம்மை ரக்ஷித்தே அவன் ஸத்தைபெறுகிறபடியை அநுஸந்தித்தாயாகில், நம்மையோ, பிறரையோ நினைத்து அஞ்சவேண்டா என்று கருத்து.

அவதாரிகை:- இப்படி மேல் விழுந்து நம்மை விரும்புகிறவனைப் பெறுவதற்கு உபாயம் என்ன? என்று திருவுள்ளம் கேட்க, அடையத்தக்க உபேயமும் அவனே; ப்ராப்யமாகிற அவனைப் பெறு

உரை:— காணவேணுமென்று அபி₄நிவேஶிக்கிற என்னுடைய நெஞ்சே! ஒரு திருவடியாலே ஜகத்தையெல்லாம் அளந்துகொண்ட ஶீலஸௌலப்₄யாதி₃கு₃ணங்களையுடையனாய், கேஶிஹந்தாவாகையாலே விரோதி₄களை வேரறுக்கைக்

கைக்கு உபாயமும் அவனே; நீ செய்யவேண்டியது இவ்வர்த்தத்தில் உறுதியுடன் இருப்பதேயாகும் என்று திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிறார்.

வ்யா:-வ்யுத்பத்திவேளையில் பராப்யத்தின் சிறப்பை அறிந்தவனே உபாயத்தில் இழிவானாகையாலே, பாசுரத்தில் ப்ராப்யத்தை முதலிற்சொல்லி ப்ராபகத்தைப் பின்னடிகளாலே அருளினார். அநுஷ்டானவேளையில் உபாயாநுஷ்டானத்துக்குப் பிறகே ப்ராப்யாநுபவமாகையாலே பின்னடிகள் முதலில் விவரிக்கப்படுகின்றன. (என் நெஞ்சே!) அவனைக் காணவேணுமென்று ஆசைப்படுகிற நெஞ்சே! அவனைப் பெறுகைக்கு உபாயம் ஏதென்னில்: அவனே என்கிறார். (ஓரடியில் தாயவனை) ஓரடியில் ப்ரஹ்மலோகம்வரையிலுள்ள மேல் உலகங்களையெல்லாம் தாவி அளந்துகொண்டவனை. (தாயவனை) தோஷத்தையே போக்யமாகக்கொண்டு குழந்தைகளை அணைக்கும் தாய்போலே உலகினரைத் தடவிக்கொடுக்கையாலே ஸௌலப்யம் (ஸுலபனாயிருக்கை), ஸௌசீல்யம் (உயர்ந்தவன் தாழ்ந்தாரோடு ஒரு நீராகக்கலந்து பரிமாறுகை), வாத்ஸல்யம் (உறவுடையாரின் குற்றத்தையும் நற்றமாகக்கொள்ளுகை) முதலான நீர்மைக்குணங்களும், ப்ரஹ்மருத்ராதிகள் தலையிலும் திருவடியை வைக்கையாலே ஜ்ஞாநசக்தி முதலான மேன்மைக்குணங்களும் இவ்வொரு செயலிலே தோற்றுகின்றன. ஸர்வேச்வரன் உபாயமாம்போது ஆச்ரயண ஸௌகர்யத்தைச் செய்துதரும் ஸௌசீல்யாதிகளும், ஆச்ரிதரின் கார்யத்தைச் செய்துதரும் ஜ்ஞாநசக்தி முதலான குணங்களும் இவனிடமே உண்டு என்கிறார், குணமிருந்தால் போதுமோ? விரோதிகள் இவனை அடையவொண்ணாதபடி தடை செய்கின்றனவே எனில்: (கேசவனை) கண்ணனாயவதரித்தபோது குதிரையுருவாகி ஆயர்களை நலிந்த கேசியென்னும் அசுரனைக் கொன்றவனை. அப்படியே நம்விரோதிகளையும் அழிக்கவல்லவன் என்று கருத்து "ஓரடியில் தாயவனை" என்று ஆச்ரயணஸௌகர்யாபாத₃கமான ஸௌசீல்யாதிகளையும், "கேசவனை" என்று விரோதியை வேரறுத்தமையைச் சொல்லுகையாலே அதற்கு வேண்

குறுப்பான ஜ்ஞாநஶக்த்யாதிகுணங்களை உடையனாய், ஶால பூ₄னுமன்றிக்கே விரோதி₄யை வளர்க்கிலும் விடவொண்ணாதபடி கிளிர்ந்த திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதனாய்க் கொண்டு நிரதிஶயபோ₄க்₃யனாய், ரக்ஷிக்குமிடத்தில் ஸஹாயாந்தரங்களை அபேக்ஷியாத ஆச்சர்யபூதனுமாயிருக்கிற ஸர்வேச்வரனே உபாயமென்று மனஸ்ஸிலே அத்₄யவஸாய புரஸ்ஸரமாக வைத்துக்கொள்ளு. இப்படி அவனே உபாய

டிய ஜ்ஞாநம், சக்தி முதலான ஆச்ரிதகார்யாபாத₃கருணங்களையும் கூறுவதாகவும் கொள்ளலாம். இவ்விரண்டுமிருந்தாலும் காணிலும் உருப்பொலாரைப்போலே காணக் கண் கூசும்படியிருப்பானோ? எனில்: (தன் துழாய் மாலைசேர்) காணக் கண் குளிரும் துழாய் மாலையை அணிந்திருக்கும் அதிஸுந்தரனன்றோ என்கிறார். முற் கூறியபடி ஜ்ஞாநசக்தி ஸௌலப்யாதி குணங்களுமில்லாமல், விரோதிகளை வளர்ப்பவனேயானாலும் விடவொண்ணாதபடி குளிர்ந்த திருத்துழாய்மாலையாலே அலங்கரிக்கப்பட்டிருக்கையாலே மிகவினியவனாயன்றோ இருக்கிறான் என்கிறார். (மாயவனையே) உலகில் ஒரு ப்ராப்யத்தைப் பெறுகைக்கு உபாயங்கள் பல துணைக்காரணங்களை அபேக்ஷிப்பதைக் காணாநின்றோம். மிகச்சிறந்த பயனான மோக்ஷத்திற்கு உபாயமான இவனோவென்னில் ஒரு துணைக்காரணத்தையும் எதிர்பாராத ஆச்சரிய பூதனாயிருக்கிறான் என்று கருத்து. மாயா சப்தம் ஆச்சரியத்தைக் குறிக்கும். மாயவன்-ஆச்சரியமாயிருப்பவன். அப்படியானால், நாம் செய்யவேண்டியது ஒன்றுமில்லையோ? எனில்: (மனத்து வை) அவனை மனத்தில் உபாயமாக இருத்துவதே நாம் செய்யவேண்டியது. உபாயமாக உறுதிகொள்வதாகிற இச்செயலும் உபாயமாகாதோ? எனில்: (மாயவனையே மனத்துவை) இதையும் உபாயமாகக்கொள்ளாதே என்று ஏகாரம் காட்டுகிறது, "த்வமேவ உபாயபூ₄தோ ப₄வ" "மாமேகம் சரணம் வ்ரஜ' 'நாராயணனே நமக்கே பறை தருவான்' "சரணே சரண் நமக்கு' முதலான விடங்களிற் போலே. பசித்தவர்க்குச் சோறுபோடுகிறேன் என்று ஒரு தார்மிகன் ஸங்கல்பித்து வைத்தால், பசி சோற்றுக்கு உபாயமாகாமல், அதி₄காரிவிசேஷணமேயாவதுபோலே, 'என்னையே உபாயமாக நினைப்பார்க்கு மோக்ஷமளிப்பேன்' என்று பகவான் ஸங்கல்பித்திருக்குமிடத்தில் உபாயாத்₄யவஸாயம் அதி₄காரி விசேஷணமாகுமேயொழிய உபாயமாகாது என்று கருத்து.

மென்று அத்₄யவஸித்தால், லோகத்தை அளந்துகொண்ட ஒரு திருவடியும், சகடம் முறிந்து விழும்படி உதைத்துத் தள்ளிப்பொகட்டதாய், அழகிய பூப்போலே அதிஸுகுமாரமான சிவந்த ஒரு திருவடியுமான இரண்டு திருவடிகளையும் ஸாக்ஷாத்கரித்து அனுபவிக்கலாம்.

அப்பிள்ளை அருளிச்செய்த முதல்திருவந்தாதியுரை முற்றிற்று.
சீயர் திருவடிகளே சரணம்.
அப்பிள்ளை திருவடிகளே சரணம்.

இத்தகைய உபாயாத்₄யவஸாயத்தை (அவனே உபாயமென்னும் உறுதியை) உடையவனுக்குக் கிடைக்கும் மிகச்சிறந்த பலனைச் சொல்லுகின்றன முன்னடிகள்: (ஓரடியும்) “ஓரடியில் தாயவனை” என்றவிடத்தில் அனுஸந்திக்கப்பட்டதாய், திருவுலகளந்தருளி உலகனைத்தையும் தன்னதாக்கின ஒரு திருவடியையும். (சாடுதைத்த ஓண் மலர்ச்சேவடியும்) சாடுசகடம். சகடாஸுரன் முறிந்து விழும்படி உதைத்துத் தள்ளியதாய், அழகிய பூப்போலே மென்மைமிக்க சிவந்த மற்றைத் திருவடியையும். (ஓண்மலர்ச் சேவடியும்) பூவிலும் மெல்லிய திருவடிகளைக்கொண்டு முரட்டுச்சகடாசுரனை உதைப்பதே! என்று வயிறு பிடிக்கிறார். “சாடுதைத்த ஓரடியும் ஓண்மலர்ச் சேவடியும்” என்று கூட்டியும் பொருள்கொள்ளலாம். (ஓண்மலர்ச் சேவடியும்) மலரிலும் மெல்லிய திருவடிகளைக்கொண்டு காடுமேடெல்லாம் அளப்பதே! என்று வயிறெரிகிறார். (ஓண்மலர்ச் சேவடியும்) மென்மை, குளிர்த்தி நாற்றம், செம்மை, “விஷ்ணோ: பதே₃ பரமே மத்₄வ உத்ஸ:” [ருக்வேதம்] “தேனேமலரும் திருப்பாதம்” [திருவாய் 1-5] என்கிறபடியே மதுவொழுகும் தன்மைஆகியவற்றில்ஒளிபொருந்திய (வாடாத) தாமரை மலரை ஒத்திருக்கையாலே ஓண்மலர்ச்சேவடி என்கிறார். (ஈரடியும்) சேர்த்தியழகிருந்தபடி. (ஈரடியும் காணலாம்) மிகவினியவையான இத்திருவடிகளைக்கண்டு அனுபவிக்கலாம். (காணலாம்) அநுபவத்தைச்சொன்னது கைங்கர்யத்துக்கும் உபலக்ஷணம். அவனே உபாயமென்றும், அவனுடைய திருவடிகளில் கைங்கர்யமே உபேயமென்றும் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தத்தின் பரமஸாரார்த்தத்தை அருளிச்செய்து பிரபந்தத்தைத் தலைக்கட்டினாராயிற்று.

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சன பத்ராதிபனான
ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமிதாஸன் இயற்றிய முதல் திருவந்தாதி
வியாக்கியானம் நிறைவு பெற்றது.

ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு முதலானவற்றோடு கூடிய பெரியவாச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்களின் க்ரந்தங்கள்.

க்ரந்தங்கள்	விலை—	தபால்
1. பரந்த ரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள்	1-50	-18
2. ஸ்தோத்ரரத்ந சது:ச்லோகீ ஜிதந்தே வ்யாக்யானங்கள்	3-00	-38
3. திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1-50	-18
4. முதல் திருவந்தாதி வ்யாக்யானம்	1-88	-25
5. பெருமாள் திருமொழி வ்யாக்யானம்	1-88	-25
6. திருமாலை வ்யாக்யானம்	2-75	-31
7. திருவாசிரியம் பெரியதிருவந்தாதி வ்யாக்யானம்	1-63	-25
8. சது:ச்லோகீ வ்யாக்யானம் (நாயனாராச்சான்பிள்ளை)	1-50	-18
9. கத்ய வ்யாக்யானங்கள்	2-00	-25
10. நாச்சியார்திருமொழி வ்யாக்யானம்	4-00	-50
11. திருச்சந்தவிருத்த வ்யாக்யானம்	3-00	-38
12. நான்முகன்திருவந்தாதி வ்யாக்யானம் (விவரணத்துடன்)	2-50	-38
ஷை மலிவுப்பதிப்பு	2-00	-38
13. ஸ்ரீராமாயண தனிச்லோகம்(விவரணத்துடன்) I Part.	3-50	-38
ஷை இரண்டாம்பாகம் (விவரணத்துடன்)	7-00	-75
14. திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம்	0-50	-80
15. பாசுரப்படி ராமாயணம் (விலையில்லை தபால்கூலி 0-08)		
16. அமலனாதிபிரான் வ்யாக்யானங்கள்	1-88	-25
17. கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யானம்	2-75	-38
18. சிறியதிருமடல் வ்யாக்யானம் (விவரணத்துடன்)	1-38	-25
19. முமுக்ஷுப்படி வ்யாக்யானம்	2-50	-37
20. பெரியதிருமடல் வ்யாக்யானம் (விவரணத்துடன்)	1-50	-25

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடுகள்

1. திருப்பாவை வ்யாக்யானம்	3-00	-37
2. ஸந்த்யாவந்தந பாஷ்யம்	2-25	-25
3. புருஷஸூக்த வ்யாக்யானம்	0-75	-25
4. நாராயணஸூக்த வ்யாக்யானம் (அச்சில்)	0-75	-25
5. ஸ்ரீஸூக்த வ்யாக்யானம்	1-50	-38
6. பூ நீளா விஷ்ணுஸூக்த வ்யாக்யானங்கள்	1-75	-25
7. தேஹளீச ஸுப்ரபாதம்	0-25	-8
8. கம்பராமாயணம் (கையடைப்படலம் முடிய)	2-50	-38
9. ராமாநுஜதேசிக ஸ்தோத்ரங்கள்	1-00	-18
10. ஸாத்விகவிஜயஸர்வஸ்வம்	0-25	
11. பாகவத தசமஸ்கந்த கீர்த்தனை பூர்வபாகம்	4-00	1-00
ஷை உத்தரபாகம்	4-00	1-00
12. ஸ்ரீகேசவ மணிமாலை	0-50	-08
13. ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹஸ்தவம்	0-37	-08
14. யதிராஜவிம்சதி வ்யாக்யானம்	0-88	-12
1௫. ஸந்மதசாரிகாவளீ	1-75	-25
16. விஷ்ணுசித்தவிஜயம் முதல் பாகம் (அச்சில்)	5-00	-75
ஷை இரண்டாம்பாகம்	7-00	1-00

கிடைக்குமிடம்:— S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
5	30	பாடம்	பதம்
12	3	தி$_4$ப	தி$_3$ப
27	19	திருவுலகளிந்த	திருவுலகளந்த
36	5	சரு	கரு
36	19	சமரசத்தையும், ஐக்	ஸாம்யத்தையும், ஐக்
40	21	இம்படியே	இப்படியே
42	18	மயா	மாயா
43	8	ப்ரீத்	பீ$_4$த்
50	5	ஸமார்	ஸாமர்
50	30	சைலேந்த்$_4$ரோ	சேலேந்த்$_3$ரோ
51	19	மஹாத்மாநாம்	மஹாத்மாநம்
56	11	ப்ரளாயாபத்தில்	ப்ரளயாபத்தில்
57	21	உதவுமனை	உதவுமவனை
65	27	ரில்லையெல்லை	ரில்லை
67	35	மூம்மூர்த்தி	மும்மூர்த்தி
68	14	அந்தர்யாமியாக	சரீரமாக
78	20	பண் ணினான்	பண்ணினான்
78	29	என்று என்று	என்று
78	32	மாறவது	மாறுவது
91	2, 9	அழுது	அமுது
92	1	நினைத்துக	நினைத்துக்
96	1	வர்யர்	வர்யார்
105	7	யானக்கே	யானடிக்கே
105	21	காரமென்ன?	காரணமென்ன?
106	5	ப்ரணவ	ப்ரவண
111	24	நமக்குள்ள	நமக்குமுள்ள
114	3	பேரமர்க்கன்	பேரமர்க்கண்
114	13	யசோதை, முலை	யசோதை,நின்உருகி-உன்னிடம் ஈடுபட்டு, முலை
118	22	நொடியோ	நெடியோ
119	27	நினைத்ததன்றோ	நினைத்தன்றோ
120	21	ஆளாக்கி	ஆளாக்கிக்
130	10	திருத்திரு	திரு
131	11	பொழுது	பொழுதும்
146	15	ப்$_3$ரமாவினுடைய	ப்$_3$ரஹ்மாவினுடைய

பிழைதிருத்தம்

152	8	சுழற்றி, சுழலும்	சுழற்றி, ஓர் கைமேல்-மற்ெறாரு திருக்கையின்மேல், சுழலும்,
153	21	ஒரு	ஓர்
155	32	முகில்	முகிழ்
157	12	ப்ரமாதி$_4$...த்$_3$ருட$_2$ம்	ப்ரமாதி$_2$...த்$_3$ருட$_4$ம்
158	19	நமக்குத்	நமக்கு
159	33	பொருந்தாவனே	பொருந்தாதவனே
175	18	சொல்ல	செல்ல
181	22	பரிக்ஷிப்ப	பரீக்ஷிப்ப
182	29	உடைவர்கள்	உடையவர்கள்
185	22	தேசிகக்கும்ரு	தேசிகருக்கும்
187	7	சாய்ந்து	சாய்த்து
190	5	தோழா	தொழா
194	13	‘பிறர்’ ன்கிருர்	‘பிறர்’ என்கிருர்
194	18	வேறெவரிடம்	வேறெவரிடமும்
195	17	பத$_3$	பத$_2$
197	5	கண்வளாந்தருளும்	கண்வளர்ந்தருளும்
209	16	புருஷார்த்ததை	புருஷார்த்தத்தை
219	8	குனிர்ந்திருண்ட	குளிர்ந்திருண்ட
219	13	அஸேய்யசாநா	அஸ்யேசாநா
219	27	நீன்கழலான்	நீள்கழலான்
225	4	வாதி$_4$	வாதி$_3$
231	16	ஸபரிச	ஸ்பரிச
231	19	பளளி	பள்ளி
269	32	வானரர்களும்	வானரர்களுள்
279	23	அதேன	அசேதன
281	4	ப்ரப$_4$ாவனுனனே!	ப்ரப$_4$ாவனுனவனே!
282	7	குணடிகை	குண்டிகை
283	22	தரித்தனுலேயே	தரித்ததனுலேயே
291	1	உளனுயிக்கு	உளனுயிருக்கு
291	20	ஆணேபிட்டு	ஆணேயிட்டு
293	8	பராப்ய	ப்ராப்ய